உழவு, நெசவு கலைச்சொற்கள்

செங்கற்பட்டு.எம்.ஜி.ஆர். மாவட்டம்

முனைவர் சிவ. சண்முகசுந்தரம்

உழவு, நெசவு
கலைச் சொற்கள்

(செங்கற்பட்டு - எம். ஜி. ஆர்.
மாவட்டம்)

முனைவர்

சிவ. சண்முகசுந்தரம்
எம். ஏ., எம். எட்., பிஎச்.டி.

திலகவதி பதிப்பகம்
9 ஏ பி, விளக்கடிக் கோவில் தோப்புத் தெரு,
காஞ்சிபுரம்-631501

முதல் பதிப்பு : செப்டம்பர், 1993

நூல் பக். 472 + படங்கள் பக். 32 = 504 பக்.

விலை ரூ. 100.00

அச்சும் அமைப்பும்

அமுதன் அச்சகம்
66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர்.நகர்,
சென்னை - 600 078 போன்: 4834325

'செங்கை - அண்ணா மாவட்டத் தொழில்களுள் உழவு, நெசவு சார்ந்த சொற்கள்' என்னும் தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு முனைவர் பட்டத்திற்காக டிசம்பர், 1989 இல் அளிக்கப்பட்ட ஆய்வேடு இப்பொழுது அப் பல்கலைக் கழக அனுமதியுடன் நூலாக்கம் பெற்றுள்ளது.

சென்னைப் பல்கலைக் கழக அனுமதிக் கடிதம் எண் பிஎச். டி | 1456 நாள் 4- 4- 1991

தமிழ் வளர்ச்சிக்கான சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் தமிழ்நாடு அரசின் திட்டத்தின்கீழ் இந் நூல் நிதியுதவி பெற்றுள்ளது.

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறை அரசாணை எண் 7, நாள் 26 - 3 - 93.

அணிந்துரை

டாக்டர் ர. விஜயலட்சுமி டி. ஃபில் (ஆக்ஸ்போர்ட்)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

தமிழில் ஆய்வுப் பொருள்கள், ஆய்வு முறைகள், ஆய்வுக் களங்கள், கடந்த இருபது ஆண்டுகளுக்குள் பெருமளவில் மாற்றமும் வளர்ச்சியும் பெற்றுள்ளன. இலக்கியத்துடன் மட்டும் ஆய்வுகள் என்ற நிலைமாறி, இலக்கியத்தின் பின்னணியாகிய சமூகச் சூழ்நிலைகள், தொழில் வளர்ச்சிகள், தொழில் முறைகள் வளர்வதற்குப் பயன்படுத்தப்படும் தொழில் நுட்ப முறைகள், மக்கள் பேச்சு வழக்குகள், நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், நாட்டுப்புறக்கலைகள் போன்ற பல பொருள்கள் குறித்து இப்போது ஆய்வுகள் பெருகி வருகின்றன.

ஆய்வுக்கான தரவுகளை நேரில் களங்களில் சென்று திரட்டி அவற்றை நுண்ணியதாய் நோக்கித் தேர்ந்தெடுத்துத் தகுந்த ஆய்வு நெறிகளைத் துணை கொண்டு முடிவுகளுக்கு வரும் ஆய்வு நூல்கள் காலத்தால் அழிவதில்லை. அத்தகைய ஒரு ஆய்வுநூலே 'செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்ட உழவும் நெசவும் சார்ந்த கலைச் சொற்கள்' எனும் இந்த நூலாகும்.

அயராத உழைப்பும் ஆற்றலும் மிக்க இந்நூலின் ஆசிரியர் முன்னரே இத்தகைய சொற்களுக்குப் பழக்கமானவர். அன்றாடம் மக்களிடம் பயின்று வரும் இத்தகைய சொற்களின் அறிவு எல்லோர்க்கும் இருப்பதில்லை. பல சொற்கள் மக்கள் பேச்சு வழக்கில் கேட்கும்போது பொருள் புரியாதிருக்கும். காரணம் அவர்கள் உச்சரிப்பு அச்சொல்லின் முதல் நிலையிலிருந்து வேறுபட்டு விளங்குகின்றன உச்சரிப்பு எளிமைக்காக, நாக்கில் கரடுமுரடாக உருளும் எழுத்துகள் தவிர்க்கப்பட்டிருக்

கும். அன்றேல் அத்தகைய எழுத்துகள் நாவில் எளிதில் புரளும் படியான இன்னொரு எழுத்தாக மாறியிருக்கும். எடுத்துக் காட்டாக, 'நெட்டைக் கேழ்வரகு', 'நெட்டக் கெவுரு' (ப.160) ஆகவும், 'பட்டறைக்காய்', 'பட்றகா' ஆகவும், 'மணிலாக் கொட்டை', 'மல்லா கொட்ட', 'மள்ளா கொட்ட', 'மள்ளாட்ட', 'மளா கொட்ட', 'மளாட்ட' (ப. 162) ஆகவும் மாறி ஒலிக்கப்படுவதைக் காட்டலாம்.

இத்தகைய மாற்றங்கள் ஒரு மொழியின் வளர்ச்சியைச் சுட்டுவன. இந்நூலின் ஆசிரியர் இவ்வளர்ச்சி நிலையின் ஒரு பகுதியை எடுத்து ஆழமாகவும் கூர்மையாகவும் ஆய்வு செய்துள்ளார். உழவு, நெசவு சார்ந்த சொற்களை ஆய்வுக்குட் படுத்திய ஆசிரியர், அச் சொற்களை பல முறைகளைக்கொண்டு பிரித்துத் தெளிவுடனும் விளக்கத்துடனும் ஆய்வு செய் துள்ளார்.

நூலின் தொடக்கத்தில் செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்துள் அடங்கும் ஊர்களையும் ஆங்கு ஒவ்வொரு ஊரிலும், மக்கள் சிறப்பாகக் கையாளும் தொழில் சார்ந்த சொற்களைக் கூறிச் செல்வதுடன், அத்தொழில்களின் விளை வாக வரும் பயன்களையும் புள்ளிவிவரத்துடன் எடுத்துக் காட்டுவது படிப்போர்க்குப் பயன் தருவதாகும். அத்துடன் இம் மாவட்டத்தின் வரலாற்றுப் பின்னணியையும் ஒவ்வொரு காலப் பகுதியாகத் தந்திருப்பது, மொழிவளர்ச்சியினுடைய சமுதாயப் பின்னணியைப் புரிந்து கொள்ள உதவுகிறது. இம் மாவட்டத்தின் புள்ளிவிவரங்களுடன் கூடிய தரவுகள், விவசாயம், நெசவு போன்ற பல்வேறு தொழில்களும் இதுவரை எவ்வாறு வளர்ச்சி பெற்றுள்ளன என்பதை எடுத்துக் காட்டு கின்றன. இத்தகைய பின்னணியுடன் செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தைப் பற்றிய செய்திகள் படிப்போர் மனதில் நிறுத்த, அங்குள்ள உழவு, நெசவுச் சொற்களை ஆய்வு செய்ய முயல்கிறார். உழவு என்ற சொல்லால் வேளாண்மைத் தொழிலில் மக்கள் பயன்படுத்தும் சொற்கள் அனைத்தையும் உள்ளடக்கி விடுகின்றார் ஆசிரியர். வேளாண்மையுடன் தொடர்பான மண், நீர்ப்பாசன முறைகள் அதில் பயன்படுத்தப்படும் கருவிகளாக, உழவுக்கருவிகள், களை யெடுக்கும் கருவிகள், அறுவடைக் கருவிகள் ஆகியவற்றையும் பூச்சிகள் அழிக்க உதவும் கிருமி நாசினிகள் முதலியவற்றுடன் இவை தொடர்பான எல்லாச் சொற்களும் ஆய்வுக்குள்ளடக்கப் பட்டிருப்பதுடன் மிக அருமையாகக் கிடைக்கும் கருவிகளின்

படங்களும் நூலில் சேர்க்கப்பட்டிருப்பது, படிப்போர்க்கு ஆவலையும் சுவையையும் ஊட்டுகிறது.

மொழியியல் ஆய்வாக மட்டுமின்றி இத்தகைய சொற்கள் பழைய தமிழ் இலக்கியங்களில் எவ்வாறு கையாளப்பட்டிருக்கின்றன என்பதனையும் ஒப்பிட்டு எடுத்துக்காட்டுவது சிறப்பாக அமைந்துள்ளது. இவ்வாறு எடுத்துக் காட்டுவதனால் மொழியின் வளர்ச்சி நிலையினையும், இடையிடை ஏற்பட்ட மாற்றங்களையும் சேர்க்கைகளையும் தனிப்படுத்திக் காட்ட முடிகிறது. வேளாண்மை, நெசவுசெய்யும் மக்களிடை வழக்கில் உள்ள சொற்கள் பல இலக்கிய ஆசிரியர்களுக்கோ பொது மக்களுக்கோ தெரிய வாய்ப்பு அதிகம் இல்லை.

குறிப்பாக வேளாண்மையுடன் தொடர்புடைய மாடுகள் பற்றிய விரிவான சுவையான ஆய்வு சிறப்புடையது. மாட்டின் சுழி, கொம்பு, நிறம், குளம்பு, பல், கால், வால்பற்றிய விவரங்களை விளக்குவதுடன் மாட்டின் பல்வேறு பயன்பாடுகள் குறிக்கும் வெவ்வேறு பெயர்களும் தரப்பட்டுள்ளன. இன்னும் சுவையான ஒரு பகுதி மாட்டுத் தரகரின் பேச்சுமொழி. ஆசிரியரின் இடைவிடா முயற்சியால் இப்பேச்சு மொழியின் விளக்கங்கள், அங்குப் பயன்படுத்தப்படும் குறியீடுகள் முதலியன தெளிவாகின்றன. இதுவரை மறைபொருள் போல் கொள்ளப்பட்ட சில குறிப்புகள் விளக்கம் பெற்றுள்ளமை, குறிப்பிட்ட தரகர் மொழியினை ஏனையோரும் அறிய வாய்ப்பளித்துள்ளது. தரகர்கள் வாய்திறந்து பேசுவது கிடையாது. ஒரு மேலாடையை இருவர் கைகளுக்கும் மேலாகப் போட்டுவிட்டு கைகளைப் பிடிப்பதனாலேயே விலையைப் பேசிவிடுவர். காட்டாக, நான்காயிரத்து ஐந்நூறு என்றால் கட்டைவிரல் தவிர்ந்த நான்கு விரல்களையும் ஒரு முறை பிடித்துவிட்டுப் பின்னர் ஐந்து விரல்களையும் ஒரு தடவை பிடிப்பர். இதேபோல் ஒரு விரலுக்கு மேல் ஒரு விரலை வைத்துப் பிடித்தால் விற்போர், வாங்குவோர் கேட்கும் தொகைக்கு மேற்பட்ட தொகையைத் தரகர் எடுத்துக் கொள்வர் என்பது பொருள். இத்தகைய குழூஉக் குறிகளை டாக்டர் சண்முகசுந்தரம் விளக்கி எழுதியிருப்பது தமிழார்வமிக்கவர்களுக்குச் சுவை பயப்பதாகும்.

எந்த ஒரு மொழியும் வளர்ச்சி பெறும்போது வேறு மொழிகளின் தாக்கமும் ஏற்படுவது வழக்கம். அவ்வாறே தமிழ்நாட்டு மக்களிடையேயும் அந்நிய மொழிகளின் கலப்புள்ள பேச்சு

மொழிகளைக் காணமுடிகிறது. உழவு, நெசவு ஆகிய தொழில் செய்வோரிடையே நவீன அறிவியல் வளர்ச்சியால் செயல் முறைகள் மாறியுள்ளன. அது போன்றே பயன் படுத்தப்படும் கருவிகளும் புதிது புதிதாக வரவழைக்கப்பட்டுப் பயன்படுத்தப் படுகின்றன. கருவிகளின் புது அறிமுகம், தமிழுக்குப் புதுச் சொற்களையும் அறிமுகம் செய்துள்ளது. இச்சொற்களை எல்லாம் திரட்டி அவற்றைச் சிறந்த முறையில் பிறமொழி வழக்குச் சொற்களாக ஆசிரியர் இந்நூலிற் கொடுத்துள்ளார். தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் பிறமொழிச் சொற்களுக்குப் பதிலாகத் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்த முயலவில்லை. பதிலாக, அவற்றைத் தமிழ் ஒலிப்படுத்த முயன்றுள்ளனர். காட்டாக, 'Single box' என்ற பெட்டிப்பலகை உடைய விசைத்தறியை சிங்கல் பாக்ஸ்' என்றே வழங்குகின்றனர். Drop box என்ற வீழ்வைப் பெட்டியை 'டிராப் பாக்ஸ்' என்றே தொழிலாளி மக்கள் வழங்குகின்றனர். மக்கள் மொழியில் இத்தகைய பண்புகள் எல்லாவற்றையும் அழகுறத் திரட்டித் தமிழ்மொழி மரபுகட்கேற்ப பகுத்துத் தந்த ஆசிரியரின் முயற்சி பாராட்டுதற்குரியதாகும்.

இந்நூல் மொழியியலாளருக்கும் இலக்கிய ஆசிரியர்களுக் கும் தமிழ் நாட்டு வரலாற்றாசிரியர்களுக்கும் ஏனைய கல்வி யாளருக்கும் படித்துச் சுவைக்க உதவும் ஓர் அரிய நூல்.

குறிப்பாக, தமிழ்வழி அறிவு பயிலும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வேளாண் துறை, நெசவுத் தொழில் நுட்பத் துறைக் கல்வியாளர்களுக்கும் இந்நூல் பெரும் வரப்பிரசாத மாகும். இதிலுள்ள கலைச் சொற்கள், இத்துறைகளி லுள்ளோருக்குப் பெரிதும் துணையாக அமையும்.

இத்தகைய ஆய்வுகள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மேற் கொள்ளப்பட்டால் தமிழ் மொழியின் வளம், தொழிற்துறை முன்னேற்றங்கள் போன்றவை குறித்த விவரங்களை முழுமை யாகப் பெறமுடியும். ஆசிரியரின் முயற்சி தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளது.

⊙

சிறப்புரை

டாக்டர் பொற்கோ

பேராசிரியர், தலைவர், தமிழிலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்.

முனைவர் சிவ. சண்முகசுந்தரம் அவர்கள் 'உழவு, நெசவு கலைச் சொற்கள்' என்ற தலைப்பில் பெரிதும் முயன்று உருவாக்கியுள்ள இந்த ஆய்வு நூல் இன்றைய சூழலில் பெரிதும் போற்றி வரவேற்கத்தக்க பயனுள்ள நூல்.

இந்த நூலில் முன்னுரை, முடிவுரை நீங்கலாக எட்டு இயல்கள் அமைந்துள்ளன. முன்னுரையில் ஆய்வுப் பொருள், ஆய்வு நோக்கம், ஆய்வுக்குரிய தகவல்களைத் திரட்டிய முறை, ஆய்வேட்டு அமைப்பு முதலான செய்திகள் பேசப்படுகின்றன.

முதலாவது இயலில் ஆய்வுக்குரிய மாவட்ட எல்லை, இயற்கைச் சூழல், மக்கள் வாழ்க்கை முறை, இன்றியமையாத சில வரலாற்றுக் குறிப்புகள் முதலான செய்திகள் விளக்கப்படுகின்றன. அடுத்து வரும் இரண்டு இயல்களும் உழவுத் தொழில் சார்ந்த சொற்களை முறையாகப் பொருள்வழிப் பாகுபாடு செய்கின்றன.

இயல்கள் நான்கு, ஐந்து ஆகிய இரண்டும் நெசவுத் தொழில் சார்ந்த சொற்களை முறையாகப் பொருள்வழிப் பாகுபாடு செய்துள்ளன. ஆறாவது இயல் உழவு, நெசவு ஆகிய தொழில்களைச் சார்ந்த எல்லாச் சொற்களையும் முழுமையாக ஆராய்ந்து சொல்வழிப் பாகுபாடு செய்துள்ளது.

ஏழாவது இயல் சொற்பொருள் ஆய்வாக அமைகிறது. எட்டாவது இயல் இலக்கியத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கும் இடையேயுள்ள உறவை ஆராய்ந்து விளக்குகிறது. இறுதியாக நிறைவுரை இடம் பெற்றுள்ளது.

உழவு, நெசவு தொடர்பான இன்றியமையாத பல படங்களை இந்த நூலில் உரிய இடங்களில் இணைத்திருப்பது ஆய்வுக்குச் சிறப்பூட்டுவதாக அமைந்துள்ளது.

பின்னிணைப்புகள், தகவலாளிகள் பட்டியல் முதலானவை நூலின் இறுதியில் இடம் பெறுகின்றன. விரிவான துணைநூற் பட்டியல் ஒன்று நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஏராளமான கலைச்சொற்களை உருவாக்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கின்ற நாம் இத்தகைய நூல்களை மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்க வேண்டும் சிவ. சண்முக சுந்தரம் அவர்கள் ஆய்வில் மிகுந்த ஈடுபாடு உடையவர். ஆய்வுக்காக எவ்வளவு வேண்டுமானாலும் விருப்பத்தோடு பாடுபடும் இயல்பினர். இவருடைய ஆர்வம், உழைப்பு, அறிவுத்திறம் ஆகியவற்றோடு இவரது மேறபார்வையாளரின் அன்பும் ஆதரவும் இந்த நல்ல ஆய்வு நூலை உருவாக்கி வழங்கியிருக்கின்றன.

டாக்டர் சிவ. சண்முகசுந்தரம் அவர்கள் மேலும் மேலும் இத்தகைய பயனுள்ள பணிகளை நிறைவேற்றத் தக்க வகையில் தமிழ்கூறும் நல்லுலகம் இவருக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்க வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறேன்.

உயர்திரு. P. S. வெங்கடேசன்
எம். ஏ., பிஎஸ். ஸி., எம். எட்.,
முதல்வர்
மாவட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்வி நிலையம்,
இராணிப்பேட்டை - 632401.
வ. ஆ. அ. மாவட்டம்

பாராட்டுரை

இந்த நிறுவனத்தின் விரிவுரையாளர் திரு. டாக்டர் சிவ. சண்முகசுந்தரம் எம். ஏ., எம். எட்., பிஎச். டி., அவர்கள் தங்களது பெருமுயற்சியினால் (செங்கற்பட்டு எம் ஜி. ஆர். மாவட்டம்) உழவு நெசவு— கலைச் சொற்கள்என்னும் அருமையான ஆய்வு நூலினைப் புத்தக வடிவில் கொணர்ந்துள்ளார்கள்.

ஆயிரக்கணக்கான பேச்சு வழக்கில் உள்ள தொழில் சார்ந்த சொற்களைச் சேகரித்து அவைகளுக்கு உரிய பொருள்களைக் கூறியுள்ளதுடன் சீரிய முறையில் அவற்றைப் பாகுபடுத்தி விளக்கியுள்ளமை மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.

இவர் மேன்மேலும் இன்னும் இதுபோன்ற அரிய படைப்புகளைப் படைக்க இறைவன் இவருக்குத் துணை புரிய வேண்டுகிறேன்.

நன்றியுரை

1989ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குப் பிஎச். டி. பட்டத்திற்காக அளிக்கப்பட்ட ஆய்வேடு இப்பொழுது நூலாகப் வெளியிடப்படுகிறது. இந்நூல் செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்திலுள்ள உழவு, நெசவு சார்ந்த கலைச் சொற்களைத் தொகுத்துப் பகுத்து ஆய்ந்து கூறுகிறது.

செங்கற்பட்டு மாவட்டம் என ஆய்வைத் தொடங்குங்காலும் (1984) செங்கை - அண்ணா மாவட்டம் என ஆய்வு நிறைவு பெறுங்காலும், செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டம் என நூல் வெளியிடுங்காலும் செங்கற்பட்டு மாவட்டத்திற்குப் பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளமை அறியத் தக்கது.

மாவட்டப் பெயர் மாற்றம் போலவும், 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்னும் நன்னூல் பாடலின் அடிப்படையிலும் தொழில் சார்ந்த சொற்களிலும் சில காலத்திற்கேற்ப இடத்திற்கேற்ப பெயர் மாற்றம் பெற்றும் புதுச்சொற்கள் உருவாகியும் வருகின்றன.

உழவு,நெசவு சார்ந்த சொற்கள் சேகரித்தலின் பொருட்டு, செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்திலுள்ள பதின்மூன்று வட்டங்களுக்கும் களப்பணிக்காகச் சென்றபொழுது தகவலாளியாய் அமைந்த தொழிலாளர்களுக்கும் தகவலாளியைச் சந்திக்க உடனிருந்து உதவிய ஆசிரிய நண்பர்கள், உறவினர்கள் ஆகியோர்க்கும் என் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றுள்ள நிலையில் அவர்கட்கு நூல் வெளிவரும் இத்தருணத்திலும் என் நன்றியை முதலாவதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வு செய்ய அனுமதியளித்து அவ்வப்பொழுது சீரிய கருத்துகள் வழங்கிய **இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்** அவர்கட்கு என்றும் மறவா நன்றியுடையேன்.

இந்நூல் சிறந்த ஆய்வேடாக விளங்க அரிய கருத்துகளை அறிவித்தருளியதுடன் சிறப்புரையும் வழங்கியருளிய என்

உள்ளங் கவர்ந்த சான்றோர் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழிலக்கியத் துறைத் தலைவர் பேராசிரியர் **டாக்டர் பொற்கோ** அவர்களுக்கும், ஆய்வுநூல் மிக்க மேம்பாட்டுடன் திகழவேண்டும் என்பதில் ஆழ்ந்த பற்றுள்ளம் கொண்டவராய் ஆய்வுமுறையில் ஊக்கம் ஊட்டியதுடன் அரியதொரு அணிந் துரையும் அளித்தருளிய என் நெறியாளர் பேராசிரியர் **முனைவர் திருமதி ர. விஜயலட்சுமி** அவர்கட்கும் என் நெஞ்சு நிறைந்த நன்றியினை உரித்தாக்குகிறேன்.

நான் பணி புரியும் மா. ஆ. ப. க. நிலையத்தின் முதல்வர் **உயர்திரு பி. எஸ். வெங்கடேசன்** அவர்கள் இந்த ஆய்வு நூலைப் படித்தபொழுது உள்ளத்தில் எழுந்த உவகையினால் இனியதொரு பாராட்டுரை வழங்கியருளினார். அப்பெருந் தகையாளருக்கும் என் மனமுவந்த நன்றியை அறிவிக் கின்றேன்.

இந்நூல் வெளியிட உடன் அனுமதியளித்த சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும், தமிழ் வளர்ச்சிக்கான சிறந்த நூல் களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் நிதியுதவி அளித்த தமிழ் நாடு அரசு - தமிழ்வளர்ச்சி, பண்பாட்டுத் துறைக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வு நூல் அச்சிடுதலில் பேருதவி புரிந்த பெரியோர் கள் திரு எம். எம். தணிகைமலை அவர்கட்கும் சேகர் பதிப்பக உரிமையாளர் திரு வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்கட்கும் சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கிய அமுதன் அச்சகத்தார்க் கும் மற்றும் பல்வகையில் உதவிய அனைவர்க்கும் என் அன் பார்ந்த நன்றி என்றும் உரியது.

இந்நூல் வெளியிடுதலில் அன்பும் ஆதரவும் காட்டும் என் சகோதரர்களுக்கும் மைத்துனர்களுக்கும் என் அன்பார்ந்த நன்றி உரியது.

சமுதாய வரலாற்று வளர்ச்சியில் கல்வியுலகம் ஈடு பாட்டுடன் செயல்பட்டு வருகிறது. ஆய்வுலக அறிஞர்க்கும் கல்வியாளர்க்கும் துணையாக இந்நூல் உதவும் என்று நம்பு கிறேன் இதுபோன்று பிற துறைகளிலும் ஆய்வுப் பயன் வளர்க்க இந்நூல் தூண்டுகோலாக அமையும் என்பதும் உறுதி. எனவே, கல்விச் சாலைகளும் பொதுநூலகங்களும் இந்நூலின் தரமும் பயனும் கருதி வாங்கிப் பயன் வளர்க்க வேண்டும் என்பதே என் விழைவாகும். இதனால் இனி வரும் ஆய்வாளர் ஊக்கமும் நம்பிக்கையும் கொள்ள வாய்ப்பேற்படும்.

தமிழ்க் கல்வியுலகம் நன்கு ஆதரிக்கும் என நம்பி இந் நூலை மகிழ்வோடு படைத்து வணங்குகின்றேன்.

காஞ்சிபுரம் **சிவ. சண்முகசுந்தரம்**

பிழை - திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
31	அடிக்குறிப்பு எண் 3 ஐ நான்காகவும் அடிக்குறிப்பு எண் 4 ஐ மூன்றாகவும் கொள்க.		
39	29	அணுமின் நிலையமும்	மின்பகிர்மான நிலையமும்
59	14	வ்யாசாய	வ்யவசாய
		அடிக்குறிப்பு எண் 1	அடிக்குறிப்பு எண் 3.
77	1	போச்சு'	போச்சு'[1]
82	19	நீர்த்தோப்பை	நீர்த்தொப்பை
102	16	சேடைக்கும்	சேடைக்குக்
128	24	வேப்பப் பிண்ணாக்கு	வேப்பம் பிண்ணாக்கு
159	19	கரும்பை	குரும்பை
204	29	பாமிணி	பாமினி
256	24	காக்காடு	ஜாக்காடு
	19	ஜட் நூல்	கட் நூல்
338	8	Drawboy doby	Drawboy dobby
365	12	ஒட்டிக்	கட்டிக்
377	27	ச கரம்	சக்கரம்
384	31	பத்தல்	பந்தல்
436	16	சாந்த	சார்ந்த

ஆசிரியரின் படைப்புகள்

1. இலக்கிய இன்பம்
2. இலக்கியக் கட்டுரைகள்
3. சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் செல்வர் குறிப்பு (தொகுப்பு)
4. அறிவொளி விளக்கு என்னும் விவேகசிந்தாமணி (உரை)
5. பாரதிதாசனாரும் பைந்தமிழும்
6. உழவு, நெசவு கலைச்சொற்கள்

பொருளடக்கம்



அன்புக் காணிக்கை

என் பெற்றோர்

திரு. ர. சிவந்தபாத முதலியார்

திருமதி உண்ணாமுலை அம்மாள்

ஆகியோர்க்கு

முன்னுரை

ஆய்வுப் பொருள்

'செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத் தொழில்களுள் உழவும் நெசவும் சார்ந்த கலைச் சொற்கள்' இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பொருளாகும்.

தொழில்களுள் மனிதனின் உயிர் வாழ்க்கைக்கு உயிர் நாடியாகக் கருதப்படுவன உழவும் நெசவுமாம். ஓரிடத்திலும் நிலையாக வாழாமல் அலைந்து திரிந்து வாழ்ந்து வந்த மனிதன், நிலைத்து ஓரிடத்தில் வாழத்தொடங்கிய காலத்தி லிருந்து மேற்கொண்ட தொழில்களுள் முதன்மையாகக் கருதத் தக்கனவும் உழவும் நெசவுமேயாம்.

எனவே, பல்வேறு தொழில் சார்ந்த சொற்கள் இருப்பினும் விரிவு குறித்து இவ்விரு தொழில்களைச் சார்ந்த சொற்கள் மட்டுமே இவற்றின் இன்றியமையாத் தன்மை கொண்டு இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

ஆய்வின் நோக்கம்

வளர்ச்சியடைந்த ஒரு மொழியில் அறிவியல் சொற்கள், தொழில் நுட்பத் துறைச் சொற்கள், இலக்கியச் சொற்கள், இழிவழக்குச் சொற்கள், பேச்சுவழக்குச் சொற்கள் ஆகிய யாவும் இருக்கும். அம்மொழியிலுள்ள அகராதியிலும் அச் சொற்கள் யாவும் இடம் பெற்றிருக்கும். அவற்றுடன் வளர்ந்து வரும் அறிவியல் உலகில் பெருகும் அறிவியல் சொற்களும் தொழில் நுட்பச் சொற்களும் அவ்வப்பொழுது காலத்தே

உருவாக்கப்படும் அகராதியில் இடம் பெற்றிருக்கும். இல்லையேல் இடம் பெறச் செய்தல் வேண்டும்.

அப்பொழுதுதான் ஒரு மொழியின் அகராதி முழுமை பெற்று விளங்குவதாய் அமையும்; அம்மொழியின் சொற்களஞ்சிய வளப்பத்தைக் காண இயலும். இக்கருத்து அறிஞர் சிலரின் பின்வரும் கருத்துகளால் வலுப்படுகின்றது. அக்கருத்துகளாவன:

'சென்னைப் பல்கலைக் கழகம் சில ஆண்டுகளுக்கு முன் வெளியிட்ட பெரிய தமிழ் அகராதி மிகவும் நன்றாயுள்ளது. ஆனால் இம்முயற்சியில் அந்நூல் பல்வேறு கைத்தொழில் மற்றும் வாழ்க்கைத் தொழில் செய்யும் மக்களிடை வழங்கும் தொழில் சார்புடைய சொற்களின் சேர்ப்பு இன்றித் தொகுக்கப்பட்டிருத்தலால் பேச்சுத் தமிழ் சார்ந்த அனைத்துச் சொற்களுமுடையதாய் விளங்கி முழுமை பெற்றுள்ளது என்று சொல்லவியலாது' என்கிறார் சுனிதி குமார் சட்டர்ஜி.[1]

'தற்காலப் பேச்சு வழக்கின் குணவியல்புகளை வெளிப்படுத்தவும் குறிப்பிட்ட பண்டைய சொற்களைப் பாதுகாத்து வரவும் ஆக இரண்டு வகையில் தற்காலக் கிளைமொழிக் கல்வி அவசியமாக உள்ளது' என்கிறார் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்.[2]

---

1. The great Tamil Lexicon published by the University of Madras some years ago is quite good. But inspite of efforts to include words belonging to the people in the various crafts and professions, it cannot be said to be fully representative of all the aspects of the Tamil Speech', - Krishnamurti. Bh., A Telugu Dialect Dictionary of occupational vocabularies, Volume-I, Agriculture, Second Edition (Hydrabad, Andhrapradesh Sahitya Akademi, 1974) Forward by Suniti Kumar chatterji, page-2.

2. 'The study of the modern dialects is important as not only showing the characteristic features of the modern colloquial language, but also preserving certain old usages.' - Meenakshi Sundaranar. T.P., A History of Tamil Language' (Poona, Linguistic Society of India, 1965) P.11.

நாகரிகமடைந்த மொழியிலுள்ள சொற்களில் விஞ்ஞானச் சொற்களும் தொழில் நுட்பச் சொற்களும் பெரும்பான்மை யாக இருக்கும். இந்நிலை தமிழுக்கு எந்த அளவில் பொருந்தும் என்பது ஆய்ந்து பார்க்க வேண்டிய ஒன்றாய் உள்ளது.

மேற்கூறிய கருத்துகளுடன் ச. வே. சுப்பிரமணியன்[1] தமிழண்ணல்,[2] இரா. மதிவாணன்[3] உள்ளிட்ட பலர் கூற்று களையும் நினைந்து ஆய்வுப் படிப்பு படிக்கத் தொடங்குங் காலத்தில், சொந்த மாவட்டமாகிய செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டத்தில் வழங்கும் சொற்களைத் தொகுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு தொகுக்கப்பட்ட சொற் களுள் பெரும்பான்மையானவை தொழில் சார்புடைய சொற்களாக இருந்தன.

அதனால் முனைவர் பட்டத்திற்குரிய ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தொழில் சார்புடைய சொற்களை மட்டும் தொகுக்கத் தெரிவித்தக்கருத்தின்படி, செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டத்திலுள்ள தொழில் சார்புடைய சொற்கள் அனைத் தையும் தொகுக்கும் முயற்சி முதலில் இருந்தது. ஆனால் அஃது ஒரு பெரும்பணி என்பதையும் குறிப்பிட்ட கால அளவில் ஒருவரால் முழுமையாகத் தொகுக்க இயலாததென்பதையும் அறிந்து, இம்மாவட்டத்தில் உழவு, நெசவு ஆகிய இரு தொழில்கள் சார்ந்த வழக்குச் சொற்களை மட்டும் தொகுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

---

1. 'தமிழகத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்தின் சொற் களஞ்சியத்தினை(Lexemes) ச்சேகரிப்பதனைஇந்நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது' — 2-6-84 அன்று சுப்பிர மணியன். ச. வே. அவர்கள் நேரில் ஆய்வாளரிடம் கூறிய கூற்று.

2. 'முதலில் நம் கைவினைஞர்கள் பயன்படுத்தும் கலைச் சொற்களைத் தொகுத்தலே அது ஒரு பெரும் பணியாக முடியும்' - தமிழண்ணல், மொழிவழிச் சிந்தனைகள்- இரண்டாம் பதிப்பு (மதுரை) சோலை நூலகம், அக்டோபர், 1980) பக்கம். 116.

3. 'மதிவாணன். இரா., சொல்லாய்வுக் கட்டுரைகள்- (சென்னை, சேகர் பதிப்பகம் ஏப்ரல், 1982)ப. 246.

தமிழ்மொழி அகராதியில் இல்லாத தொழில் சார்புடைய சொற்களைச் சேர்ப்பதற்குரிய அளவில் அச்சொற்கள் வழங்கும் முறையும் அவற்றின் எழுத்து வழக்கும் சொல் குறிக்கும் பொருளும் ஆய்வில் கூறப்படுவதுடன் ஒரு மொழியிலுள்ள சொற்களின் அகமாற்றத்திற்குக் காரணமாகிய ஒலியியல், சொல்லியல், பொருளியல் அடிப்படையிலும் அச்சொற்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. தமிழ் மொழி அகராதியில் இல்லாத சொற்கள் என்பதற்கு ஆதாரமாக 1982ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

சொற்கள் திரட்டிய முறை

ஆய்வில் எடுத்துக் கொள்ளப்பட்ட இரு தொழில்களுக்கும் உரிய கலைச்சொற்கள் யாவும் கள ஆய்வு முறையில் தொகுக்கப் பட்டவை. செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தின் தலை நகராகிய காஞ்சிபுரம்,ஆய்வாளரின் இருப்பிடம் ஆகும்; உத்தர மேரூர் பணியாற்றிய இடம் ஆகும். ஆகையினால் இவ்விரு அறிமுகமான வட்டங்களில் முதலில் உழவும் நெசவும் சார்ந்த வழக்குச் சொற்கள் தொகுக்கப்பட்டன.

'காலம் பொன் போன்றது, கடமை கண்போன்றது' என்பதைத் தொழிலாளர்கள் நன்கு அறிந்துள்ளனர். இதனை அவர்களிடையே வழங்கும் 'காலத்துப் பயிர் கரம்பிலும் விளையும்'[1], 'எட்டிப் பார்த்தால் எட்டிழை குறையும்'[2] முதலிய பழமொழிகளின் வாயிலாக அறியலாம்.

அவர்கள் தம் தொழிலில் நிலத்திலோ வீட்டிலோ ஈடு பட்டிருக்கும்போதுதான் அவர்களுடைய தொழில் நுட்பத் திறனை நேரடியாகக் காண முடிகின்றது. தொழிலில் ஈடு பட்டிருக்குங்கால் அவர்கள் நம்மிடம் பேசத் தொடங்கினால் அவர்களுடைய வேலை பாதிக்கப்படுகின்றது. அதிலும் முன் பின் தெரியாதவர்களுடன் காரணம் இன்றித் தொழிலை விட்டுப் பேச்சுக் கொடுக்க மாட்டார்கள். எனவேதான் அறிமுகமான இடங்களில் முதலில் சொற்கள் தொகுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

---

1. 'உழவு' பற்றிய பழமொழிகளும் நம்பிக்கைகளும். பின்னிணைப்பு - 1 (அ)
2. 'நெசவு' பற்றிய பழமொழிகளும் நம்பிக்கைகளும். பின்னிணைப்பு - 1 (ஆ)

ஒருதொழிலின் ஒவ்வொரு சிறு பிரிவுக்கும் தொழில் செய்பவ ரிடையே நேர் காணல் முறையில்,

இத என்ன சொல்லுவீங்க?
இதும் பேரு என்ன?
இதும் பேரு ?
இப்ப நீங்க என்ன செய்றீங்க?
இப்படி நீங்க செய்யறத என்னன்னு சொல்லுவீங்க?
இது எதுக்குப் பயன்படுது?

என்பன போன்று கேள்விகள் கேட்டு அவர்கள் வாயிலாகவே அவர்கள் செய்யும் தொழில், உபயோகப்படுத்தும் கருவிகள், அவற்றின் பயன்கள் ஆகியன வரவழைக்கப்பட்டுக் குறித்துக் கொள்ளப்பட்டன. அத்துடன் சிறிய வினாநிரல் பட்டியல் ஒன்றின் துணையோடும் கேள்விகள் கேட்கப்பட்டுச் சொல்லும் விடைகள் குறித்துக் கொள்ளப்பட்டன. மாட்டுத் தரகர் பேச்சு வழக்கும், பட்டு நெசவு செய்வோர் பேச்சு வழக்கில் சிலவும் பதிவு நாடாவில் பதிவு செய்யப்பட்டன.

மேற்சொல்லப்பட்ட இருவட்டங்களில் தொகுக்கப்பட்டசொற் களை அடிப்படையாகக் கொண்டு செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள பிற வட்டங்களாகிய மதுராந்தகம், செய்யூர், செங்கற்பட்டு, திருப்பெரும்புதூர், சைதாப்பேட்டை, திருவள்ளூர், திருத்தணி, பள்ளிப்பட்டு, ஊத்துக்கோட்டை, பொன்னேரி, கும்முடிப்பூண்டி ஆகிய இடங்களுக்குச் சென்று சொற்கள் சேகரிக்கப்பட்டன. ஒரு வட்டத்திற்கு ஒரு தொழி லுக்கு இரு தகவலாளிக்குக் குறையாமலும் அத்தகவலாளிகளின் இருப்பிடங்களுக்கு இடையேயுள்ள தூரம் குறைந்தது பதினைந்து கிலோ மீட்டருக்கு அப்பாற்பட்டதாகவும் உள்ள வாறு இடங்களைத் தேர்ந்தெடுத்துச் சென்று சொற்கள் சேகரிக்கப்பட்டன.

ஒரு வட்டத்தில் ஒரு குறிப்பிட்ட தொழிலில் திறன் பெற்றவராகவும் ஐம்பது வயதிற்கு மேற்பட்டவராகவும் அவ் வட்டத்திலேயே நிரந்தரமாக வாழ்பவராகவும் தமிழ்மொழி பேசுபவராகவும் உள்ளவர் தகவலாளியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். சில நேரங்களில் வயதானவர்கள் நினைவாற்றல் குறைவு உடையவராகவும் மொழியறிவில் குறையுடையவர் களாய்த் தெளிவாக விளக்கும் ஆற்றலில்லாதவர்களாகவும்

இருந்தபொழுது அவருடன் வாழ்பவரில் வயதில் குறைந்த வரும் தகவலாளியாயினர்.[1]

தகவலாளியிடம் உங்கள் பகுதியில்,
இச்சொல் வழங்குகிறதா?
அதன் பொருள் என்ன?
சொல்லும் ஒலிப்பு முறை சரிதானா?
(அச்சொல் வழங்கப்படவில்லையானால்)
அதற்குப் பதில் வழங்கப்படும் மாற்றுச் சொல் என்ன?
இன்னும் சொல்ல வேண்டிய புதுச் சொற்கள்
எவையேனும் உண்டா?

என்பன போன்ற வினாக்கள் கேட்கப்பட்டு முதலிரு வட்டங்களில் தொகுக்கப்பட்ட சொற்கள் சரிபார்க்கப்பட்டதுடன் மாற்றங்கள் இருப்பினும் புதுச்சொற்கள் இருப்பினும் அவை குறித்துக் கொள்ளப்பட்டன. இவ்வாறு இயன்ற வரையில் செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்.மாவட்டத்தில்வழங்கப்படும் உழவு, நெசவுத் தொழில் சார்ந்த சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன. களவாய்வில் தகவல் தந்தவர்கள், உதவிபுரிந்தவர்கள் ஆகியவர்களின் பட்டியல் பின்னிணைப்பு இரண்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

களவாய்வுக் குறிப்பு

பிற வட்டங்களில் தகவலாளியைக் கண்டு சொற்கள் சேகரிக்கச் சென்றபொழுது நண்பர்கள், உறவினர்கள் எனப் பல்லோருடைய ஒத்துழைப்பு தேவைப்பட்டது.

களவாய்வில் தகவல் தந்தவர்கள், இன்முகத்துடன் தாங்கள் உபயோகப்படுத்தும் கருவிகள் ஒவ்வொன்றையும் காட்டிப் பொருள் விளக்கம் கூறி உபசரித்தவர்களுமுண்டு; தங்கள் தொழிற்றிறத்தில் நூற்றுக்கணக்கான சொற்கள் உண்டெனக் கூற, அவற்றைச் சொல்லச் செய்யுங்கால் வரிசையாக முறைப்படி கேட்டறிந்த பொழுது சில சொற்களைக் கூறியவுடன் இவைதான், 'இவற்றிற்கு மேல் ஒன்றுமில்லை'யென்று கூறியவர்களுமுண்டு.

---

1. "Older people generally have more trouble in mastering Pronunciation of new sounds than do young people"- Julia s. Falk, Linguistics and Language, Second Edition (New york, John wiley & Sons, 1978), P. 371

ஆய்வாளர் தகவலாளிகளிடம் அவர்கள் அறியாத சொற்கள் சிலவற்றின் பொருள் விளக்கம் கேட்க, அஃதெல்லாம் எங்களுக்குத் தெரியாது, நாங்கள் எங்கள் பகுதியில் இவ்வாறு தான் சொல்வோம். 'தேசங்கள்தோறும் பாஷைகள் வேறு' என்று கூறியவர்களுமுண்டு. இதனால் ஒரு மாவட்டத்திற் குள்ளேயே பல்வேறிடங்களில் ஒரு கருவிக்கோ ஒரு செயலுக்கோ வெவ்வேறு பெயர் உண்டு என்பதைத் தகவலாளிகளே சொல்லக் கேட்க நேரிட்டது.

மாட்டுத் தரகர்கள், சாயம் போடுபவர்கள் முதலிய தொழில் வல்லுநர்கள் தங்கள் தொழில் நுட்பத்தைப் பிறர் அறிந்து கொள்வார்களோ என்றதொரு தயக்கம் மனதில் கொள்வதனால் தகவல் அளிக்கத் தக்கவருக்கு அறிமுகமானவர் களோடு அவர்களை அணுக வேண்டியிருந்தது.

இவ்வாறு களப்பணியினை மேற்கொண்டு சென்ற பொழுது தகவலாளிகளிடமும் பொது மக்களுடனும் ஏற்பட்ட பயண அனுபவங்கள் விவரிப்பின் பெருகும்.

பொதுவாகத் தொழிலில் ஈடுபட்டிருக்குங்கால் தொழிலாளர்கள் தங்கள் வேலையை விட்டு, வந்தவர்களுடன் பேசுத லால் நேரம் வீணாகிறது என்று எண்ணுதலுடன் தொழில் செய்யும் முறை, நுட்பம் ஆகியவற்றைச் சொல்ல தயக்கம் காட்டுகின்றனர். ஆய்வாளர், தங்கள் தொழிலின் சிறப்பினை வெளிப்படுத்தவும் தாங்கள் செய்யும் தொழில் சார்ந்த சொற் களைச் சேகரிக்கவுமே வந்துள்ளார் என்று நோக்கத்தை வெளிப் படையாகச் சொன்ன பிறகு ஆய்வாளரின் சொற்கள் திரட்டும் பணிக்கு அவர்கள் ஒத்துழைப்பு நல்கினார்கள்.

நெசவுத் தொழிலின் துணைத் தொழில்களாகச் சொல்லப் படுவன யாவும் அந்தந்தத் தொழில்களில் தனித்திறன் பெற்ற வர்களால் செய்யப்படுவன. ஒரு தொழில் செய்பவருக்கு இன்னொரு தொழிலின் நுட்பம் முழுமையாக அறிய வேண்டிய அவசியமில்லை என்று அறிந்தமையினால் ஆய்வாளர் களவாய் வில் ஒரு வட்டத்தில் நெசவுத்தொழிலின் ஒவ்வொரு துணைத் தொழில் செய்பவரையும் காண நேரிட்டது. இந்நிலை உழவுத் தொழிலில் இல்லை. ஏனெனில், உழவுத் தொழிலின் பல்வேறு தொழில் நுட்பங்களும் ஒன்றிற்கொன்று தொடர்புடையன வாதலால் ஒருவரே அவற்றை அறிந்திருக்க வாய்ப்பு உள்ளது.

களவாய்வினை முதலில் தொடங்கிய பொழுது முதலில் பெரும்பான்மையான சொற்கள் கிடைத்தன. அடுத்தடுத்துப் பிற வட்டங்களுக்குச் சென்றபொழுது சில புதிய சொற்களே கிடைத்தன. எனினும், ஒவ்வொரு வட்டத்திலும் தொழிற்றிறம் மிக்கவர்களுடன் அவர்கள் செய்யும் தொழில் சார்ந்து உரையாடுங்கால் நவில்தொறும் நூனயம் போலும் தொட்டனைத் தூறு மணற்கேணி போலும் புத்தம்புதிய அரிய சிறந்த சொற்கள் நாளும் அறிய வருகின்றன என்பதையும் இங்குச் சொல்ல வேண்டியது ஆய்வாளரின் கடமையாகிறது.

களவாய்வில் பெறப்பட்ட சொற்களில் சில, ஒரு வட்டத்திற்கே உரிய சொற்களாக உள்ளன.

விதைப்பாடு செய்யப்பட்ட நிலத்தில் நாற்று ஓரிடத்தில் குவிந்தும் சில இடங்களில் பரவலாகவும் முளைத்திருந்தால் குவிந்துள்ள இடங்களிலிருந்து அந்நிலத்திலேயே பரவலாக முளைத்துள்ள இடத்தில் நாற்றினைப் பிடுங்கி நடும் கிளைப்பு நாற்றினைப் பொதுவாகக் களப்பு நாத்து என்பர். இதனை ஊத்துக் கோட்டை வட்டத்தில் 'சல்ப்நாத்து' (செல்ஃ நாற்று) என்பதும் சைதாப்பேட்டை வட்டத்தின் வடபகுதியில் 'உண்ட (உள்ளதை) வெட்டிப் போடுதல்' என்பதும் முறையே அவ்வட்டங்களுக்கே உரிய சொற்களாகக் கருதலாம்.

சைதாப்பேட்டை வட்டத்தின் தென்பகுதியில் வாழ்பவர்கள் தென்மேற்குத் திசையில் மின்னல் மின்னினால் அதிகமழை பொழியாது; புல் பூண்டுகள் காடுபோல் வளரும்; இவற்றை மாடுகள் மகிழ்ச்சியுடன் மேயும் என்று கருதுதலால் அவர்கள் இத்திசையை 'எருதுசிரிச்சான் மூலை' என்கின்றனர். இச்சொல் அவ்வட்டத்திற்கே உரியது எனலாம்.

சவுக்குக் கன்றுகளைக் குழி தோண்டி நடாமல் ஏரினைக் குறுக்கு நெடுக்காக ஓட்டுதலில் ஏற்படும் சந்திப்புகளில் கன்றினை இடும் முறையை மற்ற வட்டங்களில் ஏருங்காலில் போடுதல் என்று வழங்கப்பட, செங்கற்பட்டு வட்டத்தில் சொக்கட்டான் ஓட்டிப் போடுதல் என்பர். இஃதும் இவ் வட்டத்தின் ஒரு பகுதியில் வழங்கும் ஒரு ஏர்த் தண்ணீர் என்பதும் அவ்வட்டத்திற்கே உரிய சொற்களாகக் கருதலாம். ஓர் ஏர்த் தண்ணீர் என்பது 9 காணி நிலத்தில் 72 நிமிடத்தில் பாயும்ஆற்றுக் கால்வாய்ப்பாசன நீரைக் குறிக்கும். அஃதாவது இக்குறிப்பிட்ட கால அளவில் 9 காணி நிலமும் இப்

பாசனத்தின் மூலம் நீர் பாய்ந்து நிரப்பும் தன்மை உடையதாம்.

திருத்தணி, பள்ளிப்பட்டு வட்டங்களில் கோடைப் பட்டத்தில் புழுதிகால் பயிராக நெல் பயிரிடாமல் பிற புன் செய்ப் பயிர்களே விளைவிக்கப்படும். இப்பட்டத்தைப் 'பூவாசிப்பட்டம்' என்பது அவ்வட்டங்களுக்கே உரிய சொல் எனலாம்.

செய்யூர் வட்டத்தில் இழைகளை நீட்டிக் கட்டும் தறியில் பயன்படுத்தப்படும் மாதறிக்காலை நின்னச்சிக் கொம்பு (நின்றச்சுக் கொம்பு) என்பதும், நீட்டுப்பாவின் கரைப் பகு தியினைச் சமலங்கி என்பதும் அவ்வட்டத்திற்கே உரிய சொற்கள் எனலாம்.

உத்தரமேரூர் வட்டத்தில் ஒரு குளிகையில் வரும் இரண்டு இழைகளில் புணி மாறிவரும் இடத்திலுள்ள மேலிழையை ஆணிழை என்பதும் கீழிழையைப் பெண்ணிழை என்பதும் அவ்வட்டத்திற்கே உரிய சொற்கள் எனலாம்.

பட்டு நெசவுக்குப் பெயர் பெற்ற காஞ்சிபுரத்தில் பட்டு நெசவில் தேங்காய்த் திருகு பல்போல, அரை அம்பட்டன் முடிவெட்டல் போல, துலுக்கச்சி காதுபோல, மஞ்சள் நீர் கால்வாய் போல என்ற உவமைகள் வழங்கப்படுகின்றன.

உடல் பாவும் கரைப்பாவும் இரு வண்ணங்களில் இருக்க இரண்டிற்கும் இடையே தனித்தனியே நாடாக்கள் சொருகப் பட்டு பாவுக்குள் செலுத்தப்படும். அவ்வாறு செய்யும் செயலில் ஒரே சீராக நாடாக்கள் சொருகப்பட்டு நெசவு செய் யப்படவில்லையாயின் இரண்டையும் பிரித்து நெசவு செய்யப் பட்ட பகுதி முன்பின்னாக அமையும். இதனைத் 'தேங்காய்த் திருகுபல் போல்' உள்ளது என்பர்.

பாவில் ஆங்காங்கு இழைகள் அறுபட்டிருக்க அவ்விழை களைக் கட்டியேற்றாமல் இருந்தால் இழைகள் பல்வேறு நிலைகளில் தொங்கியிருக்கும். இதனை 'அரை அம்பட்டன் முடிவெட்டியது போல்' உள்ளது என்பர்.

பாவுக்குள் நாடாவை ஊடுருவிச் செலுத்துகையில் இழைகள் ஓரப்பகுதிகளில் வளையமாகத் தொங்கியிருக்கும்.

இதனை நெசவு செய்து வருங்கால் அவ்வப்பொழுது அறுத்து எடுத்து விடல் வேண்டும். அவ்வாறு அறுத்து எடுக்காமல் இழைகள் தொங்கிய வண்ணமிருத்தலைத் 'துலுக்கச்சி காது போல்' உள்ளது என்பர்.

அச்சுக்குள் இழைகள் வாராமல் இருக்க, அஃதாவது இழைப்போக்கு இருக்க பாராமுகமாக நெசவுசெய்யப்பட்டால் குறிப்பிட்ட இடத்தில் கால்வாய் போல் நெசவு காணப்படும். இக்குறையுடைய நெசவினைக் காஞ்சிபுரத்திலுள்ள மஞ்சள் நீர் கால்வாயின் பெயரால் குறிப்பர்.

இவ்வாறு தொழில் சார்புடைய சொற்களில் ஒரு வட்டத்திற்கே தொழிலுக்கே உரிய அரிய சிறந்த கலைச்சொற்கள் பல உள்ளன. அவற்றை ஆய்வேட்டின் உடற்பகுதியில் காணலாம்.

தொழில் சார்ந்த சொற்களைத் தொகுத்து வகைப்படுத்த பேராசிரியர்களின் வழிகாட்டுதல் பேருதவியாய் இருந்தது. அத்துடன் தஞ்சை மாவட்டத்தில் ஒரு வட்டத்தின் வழக்காக, பா. சீத்தாராமன் சென்னைப்பல்கலைக் கழகத்திற்கு 1984 ஆம் ஆண்டு அளித்த எம் ஃபில் ஆய்வேடு முன்னோடியாக விளங்கியது.

இயல் விளக்கம்

இந்த ஆய்வேடு எட்டு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. 'செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உழவும் நெசவும்' என்றமுதல் இயலில் இலக்கியத்தாலும் தொல்பொருள் ஆய்வாலும்அறியப்படும்இம்மாவட்டத்தின் பழைமையும்பெருமையும், மாவட்டப் பெயர்க்காரணம், மாவட்டத்தின் பரப்பு, எல்லை, மக்கள் தொகை, மாவட்டத்தின் நிர்வாகப் பிரிவுகள், மாவட்டத்தின் தற்பொழுதைய சிறப்புகள், வரலாறு காட்டும் செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தின் சிறப்புகள், மாவட்டத்தின் இயற்கை அமைப்பு, இம்மாவட்டத்தில் காணப்படும் உழவுத்தொழிலின் தன்மை, உழவுத்தொழில் பற்றிய சில புள்ளி விவரங்கள், நெசவுத் தொழிலின் தொன்மை, இம் மாவட்டத்தில் நெசவுத் தொழில் அடையும் முக்கியத்துவம், நெசவு சார்ந்த சில புள்ளி விவரங்கள் முதலானவை விளக்கப் பட்டுள்ளன.

உழவு, நெசவுத் தொழில் சார்ந்து சேகரிக்கப்பட்ட சொற்களின் அதிக அளவு கருதி அவை தனித்தனியே இரண்டிரண்டு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் இயலும் மூன்றாம் இயலும்உழவுத் தொழில் சார்ந்த சொற்களின் பொருள்வழிப் பாகுபாடு பற்றிக் கூறுகின்றன.

இரண்டாம் இயலில் உழவுத் தொழில் சார்ந்த சொற்கள் பொருள்வழிப் பாகுபாட்டின் அடிப்படையில் 1. மண்ணும் நிலப்பிரிவுகளும், 2. நீர்ப்பாசன முறைகளும் கருவிகளும், 3. உழவும் உழவுக் கருவிகளும், 4. பயிர்ப் பருவங்களும் பயிரிடுதலும், 5. களையெடுத்தலும் கருவிகளும், 6. உரமும் உரமிடுதலும், 7. அறுவடையும் உருப்படி செய்தலும், 8. உழவர் பயன்படுத்தும் பிற கருவிகள், 9. விளைபொருள் பற்றிய பிறசொற்கள், 10. பயிரைத் தாக்கும் பூச்சிகளும் நோய்களும் என்னும் பத்துத் தலைப்புகளில் பிரித்துப் பொருள் விளக்கம் காணப்படுகின்றன.

மூன்றாம் இயலில், உழவுத் தொழிலோடு தொடர்புடைய சொற்களில் இரண்டாம் இயலில் சொல்லப்பட்டவை போக எஞ்சிய சொற்கள், 1. கிராமத் தொழிலாளர்கள், 2. அளவைப் பெயர்கள், 3. வண்டியின் பாகங்கள், 4. மாட்டின் நிறம், சுழி, கொம்பு முதலியன, 5. மாட்டுத் தரகர் பேச்சு மொழி, 6. ஆட்டின் நிறங்களும் நோய்களும் ஆகிய ஆறு தலைப்புகளில் பொருள்வழிப் பாகுபாட்டின் அடிப்படையில் பிரித்துப் பொருள் விளக்கம் காணப்படுகின்றன.

நெசவுத்தொழில் சார்ந்து தொகுக்கப்பட்ட சொற்களுள் நெசவாளர்களே செய்யும் தொழில் சார்ந்த சொற்களை நான்காம் இயலில், 1. பட்டு நெசவுத் தொடர்பானவை, 2. நூல் நெசவுத் தொடர்பானவை, 3. இருவகை நெசவுக்கும் பொதுவானவை, 4. கோரா ஆலைத் தொடர்பானவை: (அ) கைவடுக்கு (ஆ) எந்திர வடுக்கு, 5. நூல் ஆலைத் தொடர்பானவை, 6. விசைத்தறித் தொடர்பானவை ஆகிய ஆறு தலைப்புகளாகப் பொருள்வழிப் பாகுபாட்டின் அடிப்படையில் பிரித்துப் பொருள்விளக்கம்காணப்படுகின்றன.

ஐந்தாம் இயலில் நெசவுத்தொழில் செய்வதற்கு முந்தியன வாகவும் அத்தொழிலின் துணைத் தொழில்களாகவும் கருதப் படும் தொழில்கள் சார்ந்து தொகுக்கப்பட்ட சொற்களை 1. கோரா உற்பத்தித் தொடர்பானவை, 2. சாயம் போடுதல் தொடர்பானவை: (அ) பட்டுச் சாயம், (ஆ) நூல் சாயம், 3. அச்சுக் கட்டுதல் தொடர்பானவை, 4. விழுது கட்டுதல் தொடர்பானவை, 5. அடைகட்டுதல் தொடர்பானவை, 6. தோய்ச்சடி அல்லது பாவடித் தொடர்பானவை, 7. அளவைப் பெயர்கள் ஆகிய ஏழு தலைப்புகளில் பொருள் வழிப் பாகுபாட்டின் அடிப்படையில் பிரித்துப் பொருள் விளக்கம் காணப்படுகின்றன.

ஆறாம் இயலில் உழவு, நெசவு சார்புடைய சொற்கள் சொல்வழிப் பாகுபாட்டின் அடிப்படையில் தனிச் சொற்கள், தொகைச் சொற்கள், கூட்டுச் சொற்கள், சொல்லாக்கச் சொற்கள், பிறமொழித் தொடர்பால் உண்டாகும் சொற்கள் ஆகியன பற்றி விளக்கம் அளிக்கப்படுகின்றன.

'சொற்பொருளாய்வு' என்னும் ஏழாம் இயலில், ஒரு சொல் பெயராகவும் வினையாகவும் அமைந்து பொருள் வேறுபடுதல், இடத்திற்கேற்பச் சொல்லின் பொருள் மாறு படுதல், சொற்களுக்கிடையேயுள்ள பொருண்மை உறவுகள், கிளைமொழிகளை வகைப்படுத்திக் காணும் ஒலி, சொல், பொருள் பாகுபாடுகள் பற்றிய விளக்கம், சில இலக்கணக் கூறுகள் ஆகியவற்றுடன் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதியில் உள்ள சில சொற்களுக்கு, ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட தொழில் சார்ந்த சொற்களின் அடிப்படையில் புதிய பொருளும் கூறப்படுகின்றன.

'இலக்கியத் தமிழும் பேச்சுத் தமிழும்' என்னும் எட்டாம் இயலில் ஓர் ஒலி இன்னொரு ஒலியாக மாறுதல், பேச்சு வழக்குச் சொற்கள் எழுத்து வழக்குச் சொற்களினின்றும் மாறு பட்டு ஒலிப்பதைக் கூறும் விதிகளுக்குரிய எடுத்துக்காட்டுகள், ஒரு சமுதாயத்தில் காணப்படும் இரட்டை வழக்கு, பேச்சு வழக்கில் மொழிக்கு முதலாக வரும் ஒலியன்களில் எழுத்து

வழக்கினின்றும் மாறுபடுதல் காரணமாக ஒலியன் விளக்கம்; உயிர், மெய் ஒலியன்கள், மொழிமுதல் ஒலியன்கள், மொழியிடையில் மெய்மயக்கம் ஆகியவற்றுடன் சென்னைப் பலகலைக் கழகப் பேரகராதியில் இல்லாத உழவு, நெசவு சார்ந்த சொற்களின் தொகுப்பும் தரப்பட்டுள்ளன.

நிறைவுரையில் மேற்கண்ட எட்டு இயல்களிலும் கூறப்பட்டுள்ள சிறப்புக் கருத்துகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

இயல் - 1

புவியியல் வரலாற்றுப் பின்னணியில் செங்கற்பட்டு–எம்.ஜி.ஆர்.மாவட்டத்தில் உழவும் நெசவும்

செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டத்தின் பழைமையும்பெருமையும்

அ. இலக்கியத்தில்

செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தின் தலைநகரம் காஞ்சிபுரம். காஞ்சியும் காஞ்சி சூழ்ந்த தொண்டை நாடும்,

'தொன்மை மேன்மையில் நிகழ்பெருந்
தொண்டை நன்னாடு'[1]

என்று சேக்கிழாராலும்,

'தெண்ணீர் வயற்றொண்டை நன்னாடு
சான்றோர் உடைத்து'[2]

என்று ஔவையாராலும்,

---

1. சேக்கிழார், திருத்தொண்டர்புராணம் (மூலம்), ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள், 1982), ப. 130.

2. புலியூர்க்கேசிகன் (உரையாசிரியர்), ஔவையார் பாடல்கள், இரண்டாம் பதிப்பு (சென்னை-மல்லிகைப்பதிப்பகம் ஜுன் 1965), ப. 148.

'வையக மெல்லாங் கழனியாய் - வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் தேயங்கள் - செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு - வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள் - சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாம் - கட்டியுள்
தானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சி யகம்'[1]

என்று யாப்பதிகாரம் மேற்கோள் பாடலிலும் சிறப்பித்துச் செல்லப்படுகின்றன.

ஆ. தொல்பொருளாய்வில்

செங்கற்பட்டு-எம் ஜி. ஆர் மாவட்டம் வரலாற்றுச்சிறப்பு மிக்க தொன்மை வாய்ந்தது என்றுதொல்பொருள் ஆராய்ச்சியறிஞர் களால் சொல்லப்பட்டுள்ளது. தமிழகத்திலேயே தொண்டை மண்டலத்தில்தான் ஆதிகால மனிதர்கள் வாழ்ந்த இடங்களும் அவர்கள் பயன்படுத்திய கற்கருவிகளும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. சென்னையை ஒட்டிய பல்லாவரத்தில் 1863 இல் இராபர்ட் புருஸ்பட் என்ற நில அமைப்பியல் அறிஞரால் பழங்கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டன.

இதனையொட்டித் திருவள்ளூர் வட்டத்திலுள்ள பூண்டி நீர்த்தேக்கத்துக்கு அண்மையில் அத்திரம்பாக்கம் என்னும் ஊருக்கருகில் *கொற்றலையாற்றுப் பகுதியில், பழைய கற்கால மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு ஆதார மாகப் பல கற்கருவிகளை இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் ஒரு நூற்றாண்டிற்கு முன்பேயே கண்டெடுத் திருக்கின்றனர்.[2]

மேலும் அரப்பா நாகரிகத்தை ஒத்த நாகரிகத்தைக் கொண்ட மக்களின் குடியிருப்புகள் பாலாறு, பெண்ணாறு ஆகிய ஆறுகளின் படுக்கைககளில் இருந்தமையை 1968 இல்

---

1. புலவர் குழந்தை, யாப்பதிகாரம் (சென்னை-1, பாரி நிலையம், 1959), ப. 53.

* கொற்றலையாற்றுக்குக் குடத்தலையாறு, குசஸ் தலையாறு என்ற பெயர்களுமுண்டு.

2. நாகசாமி. இரா., (பதிப்பாசிரியர்), செங்கற்பட்டு மாவட்ட வரலாற்றுக்கருத்தரங்கு(சென்னை, வரலாற்றுப் பேரவை, டிசம்பர் 1978), ப. 85.

தொல்பொருள் ஆய்வாளர்கள் காட்டினர். அரிக்கமேட்டிலும் பாலாற்றின் கழிமுகத்திலும் வாசுதேவ நல்லூரிலும் கிட்டிய சான்றுகள் யவனர் தொடர்பையும் விளக்குகின்றன.[1]

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர் தாழிகளைப் போன்ற பழமை வாய்ந்த தாழிகள் ஜமீன் பல்லாவரத்தைச் சேர்ந்த குன்றுகளின் அடிவாரப் பகுதிகளில் கிடைத்துள்ளன. இவ்வாராய்ச்சியால் 4000 ஆண்டுகளுக்கு முன்னரே இப்பகுதிகளில் நாகரிக மக்கள் வாழ்ந்தனர் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். வரலாறு தொடங்கிய காலத்தில் ரோமாபுரியுடன் வாணிகத் தொடர்பு இப்பகுதிக்கு இருந்தது. மாமல்லபுரத்தில் கண்டெடுக்கப் பெற்றுள்ள நாணயங்களிலிருந்து புலனாகிறது.[2] சுடுமண்ணால் செய்யப்பெற்ற விளக்கு ஒன்று காஞ்சி அகழ்வாயிவில் கண்டுபிடிக்கப்பட்டது. காஞ்சிபுரம், உயர்ந்த கற்களும் அழகிய முத்துகளும் சங்க காலத்திலேயே பெற்றிருந்தது என்பதனைக் கி. பி. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த 'பாஸ்கோ' என்ற சீன நாட்டவர் குறிப்பிலிருந்து தெரிய வருகிறது.[3]

இத்தகு தொன்மை வாய்ந்த செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் இற்றை நாளில் தரிசெல்லாம், வயலெல்லாம் வீடாக்கப்படுவதுபோல் அற்றைநாளில், 'காடு கொன்று நாடாக்கி'[4] என்னும் பட்டினப்பாலைத் தொடரால் காடுகள் அழித்து நாடாக்கப்பட்டன என்பதனை அறியலாம். இதனை இம்மாவட்டத்திலுள்ள ஈக்காடு (ஈச்சங்காடு), பழவேற்காடு, வேற்காடு, ஆலங்காடு, செங்காடு, ஊற்றுக்காடு, மாங்காடு, இளங்காடு முதலிய ஊர்ப்பெயர்களின் வாயிலாக உணரலாம்.

---

1. செல்வம். வி. டி., தமிழகம் வரலாறும் பண்பாடும் (மதுரை, மதுரை பப்ளிஷிங் அவுஸ், ஆகஸ்டு 1976,) பக். 8 & 60.

2. சோமலெ, செங்கற்பட்டு மாவட்டம் (சென்னை, பாரி நிலையம், மே 1963) ப. 10.

3. சாமிநாதையர் உ. வே. (பதி) பட்டினப்பாலை, பத்துப் பட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும்ஐந்தாம் பதிப்பு (சென்னை, ஸ்ரீதியாகராச விலாச வெளியீடு, 1956) அடி. 283, ப. 528.

4. நீலகண்ட சாஸ்திரி கே.ஏ. தென்னிந்தியா பற்றிய மேனாட்டாரின் குறிப்பு: மெகஸ்தனிஸ்- ஹுமாயூன்(ஆங்) (சென்னைப் பல்கலைக் கழகம், 1939) ப. 44.

காஞ்சிபுரம் தலைநகராகப் பண்டைக்காலத்தில் பல்வேறு ஆட்சிகளில் இருந்துள்ளதால் இந்நகரில் ஆனைக்கட்டித் தெரு, பட்டாளத்தெரு, காவலான் தெரு முதலிய தெருக்கள் ஏற்பட்டுள்ளன, பல்வகைத் தொழிலாளர்கள் வாழ்ந்த பகுதிகள் சாலியர் தெரு, நிமந்தக்காரர் (கொத்தனார்) தெரு, வணிகர் வீதி, கொசத்தெரு (குயவர் தெரு) முதலிய பெயர்களைப் பெற்றுள்ளன. [1]இவற்றால் செங்கற்பட்டு-எம் ஜி.ஆர்.மாவட்டமும் அதன் தலைநகரமாகிய காஞ்சிபுரமும் பழைமையும் பெருமையுமுடையதென அறியலாம்.

மாவட்டப் பெயர்க் காரணம்

இம்மாவட்டத்தின் பெயர் செங்கற்பட்டு நகரத்திலிருந்து ஏற்பட்டது. அந்நகரேயன்றி மாவட்டத்தின் பெருப்பகுதியில் தாமரை, அல்லி முதலியன போல் நீர் வாழ் கொடியாக-கழனிகளில் செங்கழுநீர்ப் பூக்கள் மிகுந்திருந்தது இதற்குக் காரணம்.[2]

பற்று என்பது நன்செய் நிலமாகும். செங்கல்பட்டு என்பது செங்கழுநீர்ப் பற்று என்னும் அழகிய சொல்லின் சிதைவே யாகும்.[3] செங்கழுநீர்ப்பட்டு என்பதுவே காலப்போக்கில் குறுகிச் செங்கற்பட்டு என்றாகியது என்று கூறப்படுகிறது.[4]

செங்கல் அறுத்தெடுக்கும் தொழிலினாலோ செங்கல்வராயன் என்னும் விசயநகர மன்னன் ஆட்சி புரிந்ததனாலோ இப்பெயர் ஏற்பட்டது என்பதைவிட, பண்டைக் காலத்தில் இயற்கையோடு இயைந்து வாழ்ந்து வந்த மனிதரால் நவிலப்பட்ட இயற்கையோடு இயைந்த பெயராகிய செங்கழுநீர்ப் பற்று இன்று செங்கற்பட்டு ஆயிற்று என்பதே பொருத்தமான பெயர்க் காரணமாகக் கருதலாம்.

---

1. சோமலெ, செங்கற்பட்டு மாவட்டம் (முன்னர்க் காட்டிய நூல்) பக். 139, 140.
2. மேற்படி, ப. 11.
3. சேதுப்பிள்ளை. ரா. பி., தமிழகம் ஊரும் பேரும் ஐந்தாம் பதிப்பு (சென்னை பழனியப்பா பிரதர்ஸ், 1976) ப. 27.
4. நாகராசன். கரு., செங்கைமாவட்ட ஊர்பெயர்களும் (சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1985), ப. 32.

இம்மாவட்டம் இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை செங்கழுநீர்ப்பட்டு என்ற பெயர் வழங்கி வந்தது என்பது பிரெஞ்சுக் கம்பெனியில் அதிகாரியாக இருந்த ஆனந்தரங்கரது நாட்குறிப் பேட்டினின்றும் உறுதிப் படுகின்றது.[1]

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாட்டைப்'[2] போல் அண்ணாதுரை பிறந்து வாழ்ந்த காஞ்சிமாநகரம் தன் சிறப்பில் மேலும் ஒரு முத்தாய்ப் பான சிறப்பினைப் பெற்றதால் தமிழக அரசு 1. 6. 1989இல் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு, 'செங்கை—அண்ணா மாவட்டம்' என்று பெயர் சூட்டியது. அன்று முதல் செங்கற் பட்டு மாவட்டம், செங்கை அண்ணாமாவட்டம் என்ற பெய ருடன் அழைக்கப்பட்டு வந்தது. 1. 8. 91முதல் செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டம் என அழைக்கப்பட்டு வருகிறது.

ஒரு நாட்டு வாழ்வின் வளர்ச்சியும் தளர்ச்சியும், அந்நாட் டின் புவியியல் அமைப்பையும் வரலாற்றுப் பின்னணியையும் சார்ந்து விளங்குகிறது. எனவே, செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில் உழவு, நெசவு ஆகிய இரு தொழில் சார்புடைய சொற்களைப்பற்றி ஆயும் இவ்வாய்வேட்டில் அவையும் ஈண்டு விளக்கப்படுகின்றன.

மாவட்டத்தின் எல்லை

செங்கற்பட்டு எம்.ஜி.ஆர்.மாவட்டம் 12-12' மற்றும்13-42' வட நிலநேர்க்கோடுகளுக்கும் 79—32' மற்றும் 80—22' கிழக்கு நிலநிரைக் கோடுகளுக்கும் இடையே அமைந்துள்ளது. அந்தா வது இம்மாவட்டத்தின் வடக்கு, வடமேற்குத் திசைகளில் ஆந்திர மாநிலமும் மேற்றிசையின் வடக்கிலும் தெற்கிலும்

---

1. சேதுப்பிள்ளை, ரா. பி., தமிழகம் அலையும் கலையும் மூன்றாம் பதிப்பு (சென்னை, பழனியப்பா பிரதர்ஸ், நவம்பர் 1961), ப. 59.

2. சுப்பிரமணிய பாரதி. சி. ,பாரதியார் கவிதைகள், இரண் டாம் பதிப்பு (சென்னை, வானதி பதிப்பகம், செப்டம்பர் 1975), ப. 39.

முறையே வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டமும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டமும் தெற்கில் தென்னாற்காடு மாவட்டமும் கிழக்கே சென்னையும் வங்காள விரிகுடாவும் உடையஎல்லைக்குள் உள்ளது. கிழக்கேநீர் எல்லையையும் மற்ற மூன்று திசைகளில் நில எல்லையைப் பெற்றுள்ளதும் சென்னை மாவட்டத்தைச் சூழ்ந்துள்ளதாக செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டம் அமைந்துள்ளதும் சிறப்பாகக்குறிப்பிடத்தக்கதாம்.

நிலப்பரப்பும் மக்கள் தொகையும்


செங்கற்பட்டு எம்.ஜி.ஆர்.மாவட்டத்தின் பரப்பளவு 7,902 சதுர கிலோ மீட்டர். இதன் கடற்கரையின் நீளம் 142 கி. மீ. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி செங்கற்பட்டு எம்.ஜி.ஆர்.மாவட்ட மக்கள்தொகை36,16,508. இவர்களில் ஆண்கள் 18, 48, 124 பேர்; பெண்கள் 17, 68, 384 பேர். 1971 ஆம் ஆண்டு கணக்கெடுப்புக்குப் பின் மக்கள் தொகை 29. 1 என்ற விழுக்காட்டின் அடிப்படையில் உயர்ந்துள்ளது. ஒரு கிலோமீட்டருக்கு 460 பேராக மக்கள் தொகை அடர்த்தி உள்ளது.

நிர்வாகப் பிரிவுகள்

செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் நான்கு வருவாய்க் கோட்டங்களை உடையது. 1971ஆம் ஆண்டில் எட்டு வட்டங்களையும் நான்கு துணை வட்டங்களையும் உடையதாயிருந்தது. துணை வட்டங்களுள் கும்முடிப்பூண்டி 1975 இலும் உத்தரமேரூர் 1977இலும் ஊத்துக்கோட்டை 1981இலும் பள்ளிப்பட்டு 1982இலும் வட்டங்களாக மாற்றப்பட்டன. 1. 7. 1986 இல் மதுராந்தகம் வட்டத்திலிருந்து செய்யூர் தனி வட்டமாகப் பிரிக்கப்பட்டது.

இவ்வகையில் தற்பொழுது செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில் பதின்மூன்று வட்டங்களும் இருபத்தேழு ஊராட்சி ஒன்றியங்களும் உள்ளன. அவைகளாவன:

வருவாய்க் கோட்டம்	வட்டம்	ஊராட்சி ஒன்றியம்
1 காஞ்சிபுரம்	1 காஞ்சிபுரம்	1 காஞ்சிபுரம்
		2 வாலாசாபாத்
	2 உத்தரமேரூர்	3 உத்தரமேரூர்
	3 திருப்பெரும்புதூர்	4 திருப்பெரும்புதூர்


செங்கை அண்ணா
மாவட்டம்
ஆந்திரப்பிரதேசம்
கும்மிடிப்பூண்டி
பள்ளிப்பட்டு
திருத்தணி
ஊத்துக்கோட்டை
பொன்னேரி
திருவள்ளூர்
சைதாப்பேட்டை
வேலூர் அம்பேத்கர்
மாவட்டம்
திருப்பெரும்புதூர்
காஞ்சிபுரம்
செங்கல்பட்டு
உத்தர மேரூர்
திருவண்ணாமலை
சம்புவராயர் மாவட்டம்
மதுராந்தகம்
செய்யூர்
தென் ஆற்காடு மாவட்டம்
வங்காள விரிகுடா

வருவாய்க் கோட்டம்	வட்டம்	ஊராட்சி ஒன்றியம்
		5 குன்றத்தூர் @ படப்பை
		6 பூவிருந்தவல்லி
2 செங்கற்பட்டு	4 செங்கற்பட்டு	7 காட்டாங்குளத்தூர்
		8 திருக்கழுக்குன்றம்
		9 திருப்போரூர்
	5 மதுராந்தகம்	10 மதுராந்தகம்
		11 அச்சிறுபாக்கம்
	6 செய்யூர்	12 சித்தாமூர்
		13 இலத்தூர் @ பவுஞ்சூர்
3 சைதாப்பேட்டை	7 சைதாப்பேட்டை	14 செயிண்ட் தாமஸ் மவுண்ட் @ சிட்லபாக்கம்
		15 வில்லிவாக்கம்
		16 மாதவரம்
	8 பொன்னேரி	17 மீஞ்சூர்
		18 சோழவரம்
	9 கும்முடிப்பூண்டி	19 கும்முடிப்பூண்டி
4 திருவள்ளூர்	10 திருவள்ளூர்	20 திருவள்ளூர்@ஈக்காடு
		21 கடம்பத்தூர்
		22 பூண்டி
	11 திருத்தணி	23 திருத்தணி
		24 திருவாலங்காடு
	12 ஊத்துக்கோட்டை	25 எல்லாபுரம்
	13 பள்ளிப்பட்டு	26 பள்ளிப்பட்டு
		27 இராமகிருஷ்ண ராசப்பேட்டை

மற்றும் இம்மாவட்டத்தில் 2, 227 கிராமங்களும், 101 வருவாய் வட்டங்களும், 8 நகராட்சிகளும், 4 நகர அமைப்பு களும், 4 பஞ்சாயத்து அமைப்புகளும், 1, 211 ஊராட்சிகளும், 39 நகரப் பஞ்சாயத்துக்களும் 17 சட்டமன்றத் தொகுதிகளும், 2 பாராளுமன்றத் தொகுதிகளும் 3 பகுதி பாராளுமன்றத் தொகுதிகளும் உள்ளன.

வரலாற்றுச் சிறப்புடைய ஊர்கள் நிறைந்த பூமி

செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தின் தலைநகராய் விளங்கும் காஞ்சிபுரம் பல அரசர்களின் தலைநகராய் இருந்துள்ளது. காஞ்சிபுரம் வட்டத்தில் காஞ்சிபுரம், ஐம்பூதங்களுள் மண்தலமாகவும் புனிதத்தலங்கள்என்று கருதப்படும் ஏழுநகரங்களுள் * ஒன்றாகவும் உள்ளது; இங்கு வாழ்ந்தாலே முத்தி தரும் தலம் என்றும் சொல்லப்படுகிறது.

இவ்வூரில் 108 சிவ ஆலயங்களும் 18 விட்ணு ஆலயங்களும் உள்ளன. புகழ்பெற்ற காமாட்சி அம்மன் ஆலயம், ஏகாம்பர நாதர்கோவில், கைலாசநாதர் கோவில், குமரகோட்டம், கச்சபேசுவரர் கோவில், வைகுண்ட பெருமாள் கோவில்,வரதராசப் பெருமாள் கோவில் முதலியன உள்ளன. அவற்றுடன் தேவாரப் பாடல் பெற்ற திருமாகறல் உள்ளிட்ட பல தலங்கள் உண்டு.

இவ்வாறு மூர்த்தி, தலம், தீர்த்தத்தில் இவ்வட்டம் சிறப்புடையதாக உள்ளது; பல சமய, அரசியல், கல்வி வல்லுநர்களின் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் விளங்குகிறது.

உத்தரமேரூர் வட்டத்தில் உத்தரமேரூர், முதலாம் பராந்தகச் சோழனின் ஆட்சிக் காலத்தில் கி. பி. 921 இல் பொறிக்கப் பட்ட கல்வெட்டு குடவோலை முறையில் ஊரவையினரைத் தேர்ந்தெடுக்கும் முறையினைத் தெரிவிக்கின்றது. இவ்வூரில் உள்ள சுந்தரவரதப் பெருமாள் கோவில், அட்டாங்க விமான வடிவத்தில் அமைந்து சிறப்புடையதாய்க் காணப்படுகிறது.

---

* 1 அயோத்தி, 2 வடமதுரை, 3 மாயா, 4 காசி, 5 காஞ்சி, 6 அவந்தி, 7 துவாரகை.

நதிகள் ஒன்றுகூடும் துறைகளைப் புனிதமான இடங்களாகக் கருதிப் போற்றுதல் பாரத நாட்டுப் பண்பு. தமிழ் நாட்டில் புண்ணிய நதிகள் கூடுமிடங்கள் பல உண்டு. நதிகள் கூடும் இடங்களைக் கூடல் என்று வழங்குவர் தமிழக மக்கள். அவற்றுள் ஒன்று, பழையசீவர மலைக்கு அருகே பாலாறும் செய்யாறும் வேகவதியாறும் ஒன்று சேரும் இடம் திருமுக்கூடல். அவ்விடம் இவ்வட்டத்தில்தான் உள்ளது.

செங்கற்பட்டு வட்டத்தில் மாமல்லபுரம், பல்லவர் காலத் தியப் புகழ்பெற்ற ஒற்றைக்கல் கோவில்களும் இரதங்களும் சிற்பங்களும் நிறைந்த இடமாக உள்ளது. டச்சுக்காரர்களின் முக்கிய துறைமுகங்களுள் ஒன்றான சதுரங்கப்பட்டினம் இன்று பாழடைந்த நிலையில் உள்ளது. இவ்வட்டத்தில் பட்சி தீர்த்தத்தலம் எனப்படும் திருக்கழுக்குன்றமும் திருப்புகழ் பாடல் பெற்ற கந்தசாமி கோவில் உள்ள திருப்போரூரும் அடங்கியுள்ளன.

மதுராந்தகம் வட்டத்தில் 75 ஏக்கர் பரப்பில் பறவைகள் சரணாலயம் அமைந்த வேடந்தாங்கல் உள்ளது. மேலும், இவ்வட்டத்தில் ஆதிபராசக்தி ஆலயமுள்ள மேல்மருவத்தூரும் ஏரிகாத்த ராமர் கோயிலுள்ள மதுராந்தகமும் உள்ளன. செய்யூர் வட்டத்தில் செய்யூர் சிறப்புடைய ஊராக உள்ளது.

திருப்பெரும்புதூர் வட்டத்தில் இராமானுசர் அவதரித்த திருப்பெரும்புதூரும் தேவி கருமாரியம்மன் உள்ள திருவேற் காடும் சேக்கிழார் அவதரித்த குன்றத்தூரும் ஊசி முனையில் நின்று தவம் செய்யும் காமாட்சியுள்ள மாங்காடும் கோடைநகர் எனப்படும் வல்லக் கோட்டையும் பூசலார் பிறந்த திருநின்றவூரும் திருமழிசை ஆழ்வார் அவதரித்த திரு மழிசையும் மிகச் சிறப்புடைய இடங்களாய் உள்ளன.

திருவள்ளூர் வட்டத்தில் பூண்டி நீர்த்தேக்கம் உள்ளது. இவ்வட்டத்தில் திருப்பாச்சூர், திருவள்ளூர், கூவம் முதலியன வும், திருத்தணி வட்டத்தில் முருகனின் அறுபடை வீடுகளுள் ஒன்றான திருத்தணியும் திருவாலங்காடு, எல்லாபுரம், வெள்ளி கரம் முதலியனவும், கும்முடிப்பூண்டி வட்டத்தில் ஆண்டார் குப்பம், திருக்கண்டலமும், சைதாப்பேட்டை வட்டத்தில் திருநீர்மலை, திருவொற்றியூர், திருமுல்லைவாயில் முதலியன வும் சிறப்புடைய தலங்களாக உள்ளன.

பொன்னேரி வட்டத்தில் உள்ள பழவேற்காடு, டச்சுக் காரர்கள் இந்தியாவில் வந்திறங்கிய முதலிடமாகும். இங்குள்ள மசூதியில் சரித்திரப் புகழ்பெற்ற நிழற்கடிகாரம் உள்ளது. பொன்னேரியில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிற்கு[1] முன் கட்டப்பட்டதெனக் கருதப்படும் அகத்தீசுவரர் ஆலயத்தின் கருவறை வெளிச்சுவரில், பண்டைக் காலத்தில் உழவர் பொன் னேர் பூட்டுதலின் இன்றியமையாமையைக் கருதி, கலப்பை வடிவம் மட்டும் செதுக்கப்பட்டுள்ள காட்சி சிறப்புடையதாய் விளங்குகிறது.

தொழிற் சிறப்பு

செங்கற்பட்டு எம்.ஜி.ஆர்.மாவட்டத்தில் உழவும் நெசவும் தவிர்த்த பிற தொழிற்சிறப்புகள் இங்குச் சொல்லப்படுகின்றன. இம்மாவட்டத்தில் அம்பத்தூர், காஞ்சிபுரம், காக்கலூர், கும்முடிப்பூண்டி ஆகிய நான்கு இடங்களில் தொழிற் பண்ணை கள் உள்ளன. பாய் முடைதல், கல்லுடைத்தல், கூடை முடைதல் முதலியன முக்கிய குடிசைத்தொழில்களாய்உள்ளன.

கடற்கரைப் பகுதியில் உள்ள எழுபது கிராமங்களில் வாழும் மக்கள் மீன் பிடித்தலைத் தொழிலாகக் கொண்டுள்ள னர். இவர்கள் 1986— 87 இல் 1400 டன் மீன் பிடித்துள்ளனர்.

பன்னிரண்டு ஏக்கர் பரப்பில் வண்டலூரில் உள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை ஆண்டொன்றிற்கு 3000 சிறு கார்கள் உற்பத்திச் செய்கிறது.

ஆண்டுக்கு சுமார் மூன்று இலட்சம் சைக்கிள் உற்பத்திச் செய்யும் டி. ஐ. சைக்கிள் ஆஃப் இந்தியா என்ற தொழிற் சாலை அம்பத்தூரில் உள்ளது.

பட்டாளம், திருவாலங்காடு ஆகிய இடங்களில் சருக்கரை ஆலையும், திருவொற்றியூரில் தீப்பெட்டித் தொழிற்சாலையும், கிண்டியில் தோல் உற்பத்தி நிலையமும் கல்பாக்கத்தில் அணு மின் நிலையமும், திருப்பெரும்புதூரில் புதியதாக உருவாக்கப் பட்டு வரும் அணுமின் நிலையமும் எண்ணூரில் மீன் ஆராய்ச்சி நிலையம், உந்து வண்டிகள் செய்யும் அசோக்லேலாண்ட்

1 தினமணி, நாளிதழ், நாள். 8. 11. 88. ப. 15.

தொழிற்சாலை, அனல் மின்சார நிலையம், சூப்பர் பாஸ்பேட் உரத் தொழிற்சாலை, டிராக்டர் தொழிற்சாலை ஆகியவைகளும், ஆவடியில் போர் ஊர்தி தொழிற்சாலை, சூப்பர் பாஸ்பேட் தொழிற்சாலை, எஃகுக் குழாய் செய்யும் தொழிற்சாலை முதலியவைகளும், மணலியில் எண்ணெய் தூய்மைப்படுத்தும் தொழிற்சாலையும், குரோம்பேட்டையில் தோல் பதனிடும் தொழிற்சாலையும், மாதவரத்தில் பால் பண்ணையும், மீனம்பாக்கத்தில் வானிலையாராய்ச்சி நிலையமும், எண்ணூர், கோவளம், செய்யூர் ஆகிய இடங்களில் பெரிய உப்பளங்களும் உள்ளன.

இவ்வாறு செங்கற்பட்டு எம்.ஜி. ஆர். மாவட்டம், இம்மாவட்டத்தில் நடைபெறாத தொழிலே இல்லையென்று சொல்லத்தக்க அளவுக்குத் தொழில் துறையில் முன்னேறியுள்ளது. இவற்றுடன் இம்மாவட்டத்திலுள்ள எல்லா கிராமங்களும் மின்வசதி பெற்றுள்ளதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

நீர்வழியும் நிலவழியும்

செங்கற்பட்டு எம்.ஜி.ஆர்.மாவட்டத்தின் வழியாகச்செல்லும் 160 கி. மீ. நீளமுள்ள பக்கிங்காம் கால்வாய் ஆங்கிலேயர் காலத்தில் போக்குவரத்திற்கும் வாணிகத்திற்கும் மிக்க பயன் அளித்து வந்தது. இக்கால்வாய் தற்பொழுது பயனற்ற நிலையில் உள்ளது.

இம் மாவட்டத்தின் வழியாகச் சென்னையிலிருந்து வடக்கே செல்ல அகன்ற இருப்புப்பாதையும், தெற்கே செல்ல மீட்டர் இருப்புப் பாதையும் உள்ளன. இம்மாவட்டத்தில், அறுபது இரயில் நிலையங்கள் உள்ளன; நீண்ட தொலைவுக்குச் செல்லும் தேசிய நெடுஞ்சாலைகளும் மாநில நெடுஞ்சாலைகளும் உள்ளன.

வாணிபத் தலங்கள்

காஞ்சிபுரம், திருப்பெரும்புதூர், குன்றத்தூர், திருக்கழுக்குன்றம், கோவளம், மாமல்லபுரம், தாம்பரம், பல்லாவரம், அம்பத்தூர், ஆவடி, எண்ணூர், செங்கற்பட்டு, மதுராந்தகம், திருப்போரூர், வாலாசாபாத், பூவிருந்தவல்லி, திருவள்ளூர், பொன்னேரி, திருத்தணி முதலியன இம்மாவட்டத்திலிருந்து உற்பத்தியாகும் பொருள்களை ஏற்றுமதிச் செய்யும் வாணிபத் தலங்களாக உள்ளன.

மொழியறிவு

செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில் தமிழ் பேசும் பெரும்பான்மை மக்களுடன் தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, மராட்டி, உருது போன்ற பிற மொழிகளைப் பேசும் மக்களும் உள்ளனர்.

1971 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் இம்மாவட்டத்தில் 29 இலட்சம் மக்கள் இருந்தனர். அதன் அடிப்படையில் தமிழ் 24. 7 இலட்சம், தெலுங்கு 3. 3. இலட்சம், கன்னடம் 0. 03 இலட்சம், மலையாளம் 0. 03 இலட்சம், மற்ற மொழிகள் பேசுவோர் ஒரு இலட்சம் என்ற எண்ணிக்கையில் இருந்தனர்.

இம்மாவட்டத்தில் கற்றவர்கள் 48 விழுக்காடாகும். இதில் ஆண்கள் 59. 72 விழுக்காடாகவும் பெண்கள் 35. 76 விழுக்காடாகவும் உள்ளனர். இம்மாவட்டத்தில் வாழும் 947789 பழங்குடியினரில் 26. 27 விழுக்காட்டினரும், 46050 மலைச்சாதியினரில் 1. 27 விழுக்காட்டினரும் கற்றவராயுள்ளனர்.

இம்மாவட்டத்தில் 1986 — 87 ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி, 2029 ஆரம்பப் பள்ளிகளும், 450 நடுநிலைப் பள்ளிகளும், 148 உயர் நிலைப்பள்ளிகளும், 71 மேல்நிலைப் பள்ளிகளும், 12 கலைக்கல்லூரிகளும், 2 மருத்துவக் கல்லூரிகளும், 7 பொறியியல் கல்லூரிகளும், 5 ஆய்வு மையங்களும், 2 ஓரியண்டல் கல்வி நிலையங்களும், 2 தொழிற்கல்வி நிலையங்களும், 16 பல்தொழில் நுட்பப் பள்ளிகளும், 2 ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளும், குருடர் பள்ளி, செவிடர் பள்ளி, சீனியர் அப்ருவ்டு பள்ளி ஆகியன முறையே ஒன்றுமாகவும், 120 நூலகங்களும் உள்ளன.

வரலாற்றடிப்படையில்
செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டம்

பல்லவர் காலம்

சங்க காலத்திற்குப் பிறகு கி. பி. 4ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காஞ்சியில் பல்லவ அரசு ஏற்பட்டது. பல்லவர் ஏறத்தாழக் கி. பி. 300 முதல் கி. பி. 850 வரையில் தமிழகத்தில் பேரரசராய் இருந்தனர் என்பது வரலாறு கூறும் உண்மை. பல்லவர்களின் காலம் கலைகளின் பொற்காலமாக விளங்கியது. பல்லவ அரசர்களுள் மிகச் சிறந்தவனான மகேந்திரவர்மனின்

மகனாகிய முதலாம் நரசிம்ம வர்மனின் (கி. பி. 630 முதல் கி.பி. 668 வரை)ஆட்சிக் காலத்தில் சீன யாத்திரிகரான யுவான் சுவாங் காஞ்சிக்கு வருகை தந்துள்ளார்.

அவர் குறிப்பின்படி காஞ்சி மாநகரம் அன்று ஆறு கல் சுற்றளவைக் கொண்டிருந்தது. 'நாடு வெப்பமானதும் நிலம் செழிப்புடையதும் நல்ல விளைவு தருவதுமாகும். திராவிடத்து மக்கள் வீரமுடையவர்; உண்மைக்கு உறைவிடமானவர்; கல்வியில் ஆர்வமும் மதிப்பும் உடையவர். திராவிடத்தில் (காஞ்சியில்) 10, 000 தேரவாதி துறவிகளைக் கொண்ட நூற்றுக்கு மேற்பட்ட புத்த சங்கிராமங்களிருந்தன; சமண, வைணவ, சைவக் கோவில்கள் இருந்தன. திகம்பர சமணர்கள் இருந்தனர். புத்தர் காஞ்சிக்கு வந்து பலரைப் பௌத்தராக்கிய தாக இங்கே இயம்பப்படுகிறது. அசோகன் அமைத்த தூபிகள் சில பழுதுற்ற நிலையில் இருக்கின்றன. புத்தசமய அறிஞரும் நாலந்தா பல்கலைக் கழகத்தின் பேராசிரியருமாகிய தரும பாலர் காஞ்சியைச் சேர்ந்தவர்' என்றும் குறிப்பிட்டுள்ளார். காஞ்சி ஒரு துறைமுகமென அவர் குறிப்பிட்டது மாமல்ல புரத்தைக் குறிக்கும் என்பர்.

பிற்காலச் சோழர்கள்

குறுநில மன்னர்களாயிருந்த சங்க காலச் சோழர்கள் ஆதிக்கம் 9 ஆம் நூற்றாண்டில் மீண்டும் ஏற்பட்டதால் இவர்கள் பிற்காலச் சோழர்களாயினர். இச்சோழர்கள் கி. பி. 850 முதல் கி. பி. 1250 வரையில் தமிழகத்தை ஆட்சி செய்துள்ளனர். இவர்கள் ஆண்ட காலம் தமிழ்ப் பண் பாட்டின் பொற்காலமாகும்.

முதலாம் ஆதித்த சோழன் ஆட்சிக் காலத்தில் தொண்டை மண்டலம்சோழநாட்டுடன் இணைந்தது. இவன்மைந்தனாகிய பராந்தகன் (கி. பி. 907 முதல் கி. பி. 955 வரை) உள்ளாட்சி முறையைச் சீர்படுத்தியதை உத்தரமேரூர்க் கல்வெட்டு உணர்த்துகிறது.

பிற்காலப் பாண்டியர்கள்

மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியின் இறுதியில் சோழப் பேரரசின் வடக்கில் புதிய தக்கண அரசுகள் தோன்றின.

தமிழகத்தின் வடக்கேயுள்ள காகாரிய அரசன் கணபதி என்பான் தமிழகத்தின் வடக்கில் படையெடுத்து கி. பி. 1250 இல் காஞ்சியைக் கைப்பற்றிக் கொண்டது சோழர் களுக்குப் பெரும் அடியாகவும் பாண்டியர்களுக்கு வாய்ப் பாகவும் அமைந்தது. அப்பொழுது வடவிந்தியாவை ஆண்ட அலாவுதீன் கில்ஜியின் படைத்தளபதி மாலிக்காபூர் கி. பி. 1311 இல் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தான். இவனை எதிர்த்த விக்கிரம பாண்டியன் போரில் மடிய அவன் மருமகன் இரவிவர்ம குலசேகரன் மாலிக்காபூரை விரட்டி யடித்துவிட்டு வேகவதியாற்றின் கரையில் தென்னாட்டு மன்னனாகக் கி. பி. 1313 இல் முடிசூட்டிக் கொண்டான். பின்னர் பாண்டியர்களுக்குள் நடைபெற்ற அரசுரிமைப் போட்டிகளால் தென்னகத்தில் விசயநகரத்தின் ஈடுபாடும் நாயக்கர் ஆட்சியும் ஏற்பட்டன.

நாயக்கர் காலம்

கி. பி. 1350 முதல் கி. பி. 1750 வரை நாயக்கர் ஆட்சிக் காலமாகும். தமிழகம் முழுவதும் விசயநகர ஆட்சியின் கீழ் வந்தது. விசயநகர அரசனின் ஆளுநனான சாளுவ நரசிம்மன் (கி. பி. 1452 முதல் கி. பி. 1485 வரை) காலத்தில் பாமினி சுல்தான் மூன்றாம் முகம்மது கர்நாடகப் பகுதியைத்தாக்கிக் காஞ்சி வரை முன்னேறினான். காஞ்சி தரைமட்டமாக்கப் பட்டது. பெருஞ்செல்வங்களுடன் திரும்பிய முஸ்லீம் படையை நரசிம்மனின் படை மறித்து பொருட்களை மீட்டது. மீண்டும் தமிழகம் முழுவதும் விசய நகர ஆட்சியின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. இவர்களின் ஆட்சி ஒரு தெலுங்கு நாட்டார் ஆட்சியாக விளங்கியது.

விசயநகர ஆட்சிக் காலத்தில் கிராம அளவில் ஆயகர் முறை இருந்தது. அதன்படி 12 பணியாட்கள் கிராம நிர்வாகத்தை நிர்வகித்தனர். அவர்களுள் போட்டையில் (Potail)* கர்ணம், தலையாரி, தோட்டி, நீர்க்கட்டி ஆகிய வர்கள் முக்கியமானவர்கள். போட்டையில் கர்ணம், பதிவாள னாகவும் தலையாரி, கிராமப் பாதுகாவலனாகவும் தோட்டி, பயிர்க் காவலனாகவும் நீர்க்கட்டி, பாசனப் பொறுப்பிலும்

---

* இச்சொல் ஊராட்சி மன்றத்தைக் குறிக்கும் 'கௌடா' என்ற சொல்லாலும் வழங்கப்படும்.

இருந்தனர். அவர்களுக்கு ஊதியம் நிலமானியமாகக் கிட்டியது. இவர்கள் கிராமத்தின் காப்பாளர்களாக விளங்கினர். பல கிராமங்களுக்குப் பொதுவாகச் சாவடி என்ற அரசு அலுவலகம் இருந்தது.

வாணிகம் செய்வதற்கெனத் தமிழகத்தில் தனி இனங்கள் இருந்தன. இசுலாமியர்களின் வருகைக்குப் பின்னர் இசுலாமியர்களும் வாணிபத்தில் ஈடுபட்டனர். கோயில் ஏவலாட்களாக இருந்த கைக்கோளர்கள், படையில் பணி யாற்றும் உரிமை உடையவர்களாயினர். சாதாரணமாக நெசவில் ஈடுபட்டிருந்த அவர்களுக்குத் தனியாகத் தெருக்கள் இருந்தன. அரசுடனானத் தொடர்பு அவர்களுடைய உரிமை கள் பெருகத் துணை செய்தது.

விசய நகரத்தினுடைய நிர்வாக அமைப்பின் வழி தமிழகத் தில் நாயக்கர் ஆட்சி தோன்றியது. விசய நகரத்தில் இடை விடாமல் ஏற்பட்ட அரசுரிமைப் போட்டி நாயக்கர்களின் சுயாட்சிக்குத் துணை புரிந்தது. செஞ்சியில் கிருட்டினப்ப நாயக்கனும் தஞ்சையில் அச்சுதப்ப நாயக்கனும் மதுரையில் விசுவநாதனின் புதல்வன் கிருட்டினப்பனும் அதிகாரத்தைப் பெருக்கிக் கொண்டனர். பாலாற்றுக்கும் கொள்ளிடத்துக்கும் இடைப்பட்ட பகுதியைச் செஞ்சி நாயக்கர்கள் ஆண்டனர். கி. பி. 1677 இல் காஞ்சி, செஞ்சி, வேலூர் பகுதிகள் மராட்டிய அரசன் சிவாஜியின் ஆட்சிக்கு உட்பட்டன. செஞ்சியில் சிவாஜியின் ஆளுநர் ஆட்சி கி. பி. 1798இல் மொகலாயத் தளபதி பறித்துக் கொள்ளும் வரை இருந்தது.

முகம்மதியர் ஆட்சியின் விளைவால் தமிழகத்தில் முகம்மதிய சமயம் பரவியது. அதுபோல் அதற்கடுத்து வந்த ஐரோப்பியர் வருகையால் கிறித்துவ சமயம் பரவியது. இவற்றால் தமிழகத்தில் சமய மாற்றங்கள் நிகழ்வதற்கு வாய்ப்பேற்பட்டன.

ஐரோப்பியர் காலம்

ஐரோப்பியர்களை நீண்ட காலமாகக் கவர்ந்து கொண் டிருந்தது இந்தியா. இதனால் போர்ச்சுகீசியர்களும் டச்சுக் காரர்களும் பிரெஞ்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் தங்கள் வாணிப வளத்தைப் பெருக்கவும் சமயத்தைப் பரப்பவும் இந்தியாவுக்கு வந்த பொழுது அவர்களுக்குள் நடந்த

போட்டியுள் இந்தியா இறுதியில் ஆங்கில அரசாட்சியின் கைப்பிடியில் அகப்பட்டது.

இந்தியத் துணைக் கண்டத்தில் நிலவியல் எல்லைகளைத் தொட்ட அரசியல் ஒருமைப் பாட்டினை வகுத்தவர்களாக ஆங்கிலேயர் விளங்கினர். அதன் விளைவாக இந்திய அரசியல், நிர்வாகம், சட்டம், நீதி, சமூகம், சமயம், கல்வி, பண்பாடு, வாணிகம், தொழில் என்று இந்தியர்களின் வாழ்வில் அது தொடாவிடமில்லை. அதனால் நன்மைகளும் தீமைகளும் ஏற்பட்டன. ஆங்கிலேயர் வழி பெற்ற நன்மைகளை வேறு எந்த அயலாரிடமிருந்தும் பெற்றிருக்க முடியாது என்று 1892 இலேயே பி. ஜி. திலகர் எழுதியது குறிப்பிடத்தக்கது.

இந்திய நாடு விடுதலையடைந்த பின் மொழிவாரி மாநில மாகப் பிரிக்கப்பட்டபொழுது, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் வாழும் பகுதி சென்னை மாநிலமாக்கப் பட்டது. சென்னை மாநிலத்திலுள்ள மாவட்டங்களுள் ஒன்றாகச் செங்கற்பட்டாயிற்று. செங்கற்பட்டு மாவட்டத் திலுள்ள நகரங்களுள் சிறந்ததாகிய காஞ்சிபுரத்தில் தோன்றிய பேரறிஞர் அண்ணாதுரையவர்கள் தமிழக முதலமைச்சரான பின் காஞ்சிபுரத்தைச் செங்கற்பட்டு மாவட்டத்தின் தலை நகராக 1968* இல் மாற்றியதுடன் சென்னை மாநிலத்தின் பெயரையும் தமிழ்நாடு என்று 1969இல் மாற்றியமைத்துப் பாராட்டுக்குரியவரானார்.

செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டமும் உழவும்

ஒரு நாட்டின் தட்பவெப்பநிலை, சமவெளி, பீடபூமி, மலைகள், ஆறுகள் முதலியவை அனைத்தும் அந்நாட்டின் 'இயற்கை அமைப்பு' எனப்படும். இவையே அந்நாட்டின் நிலவளத்தைப் பற்றியறிய பெரிதும் உதவுகின்றன.

---

* செங்கற்பட்டு எம். ஜி.ஆர். மாவட்டத்தின் தலைநகராக 1859 ஆம் ஆண்டிலிருந்து சைதாப்பேட்டையாயிருந்தது.

தட்பவெப்பநிலை

1986-87 ஆம் ஆண்டில் மிகக் குறைந்த அளவு வெப்பம 20. 6⁰ செ. ஆகவும் அதிக அளவு வெப்பம் 37. 9⁰ செ. ஆகவும் இருந்துள்ளது. 1986-87இல் ஆண்டுச் சராசரி மழையளவு 806 5 மி. மீ. ஆகவும் 1985-86 இல் 1840 9 மி. மீ. ஆகவும் இருந்துள்ளது. இவ்வாண்டிற்குப் பின் தொடர்ந்து மழையின் அளவு மிகவும் குறைந்து கொண்டே வந்துள்ளது. 1986 ஆம் ஆண்டில் மாதவாரியாகப் பின்வரும் அளவில் மழை பொழிந்துள்ளது.

மாதம்	மழையளவு [மில்லி மீட்டரில்]
சனவரி	173. 6
பிப்ரவரி	45. 3
மார்ச்	0. 0
ஏப்ரல்	5. 6
மே	30 0
சூன்	29. 6
சூலை	19. 8
ஆகச்டு	82. 8
செப்டம்பர்	78. 1
அக்டோபர்	166. 4
நவம்பர்	143. 0
டிசம்பர்	60. 7
மொத்த மழையளவு	834 . 9 மி. மீ.

1986 ஆம் ஆண்டு அக்டோபரில் வட்ட வாரியாகப் பின்வரும் மழையளவு இருந்துள்ளது.

வட்டம்	மழையளவு [மி. மீ.]
காஞ்சிபுரம்	4. 3
உத்தரமேரூர்	13. 6
திருப்பெரும்புதூர்	13. 18
செங்கற்பட்டு	4. 68
மதுராந்தகம்	3. 1
சைதாப்பேட்டை	42. 9
பொன்னேரி	44. 3
கும்முடிப்பூண்டி	...
திருவள்ளூர்	19 27
திருத்தணி	14. 65
பள்ளிப்பட்டு	6. 48
ஊத்துக்கோட்டை	...
செய்யூர்	...

மழையளவு குறிக்கப்படாத வட்டங்களில் மழைமானி இல்லை.

மண்ணமைப்பு

இம்மாவட்டத்தில் நிலம், மணல், களிப்பு மண், உப்பு மண் எனப் பலவகையான மண்ணின் தன்மைகளைப் பெற்றுள்ளது. மதுராந்தகம், காஞ்சிபுரம் வட்டங்களில் பயிர் நன்றாக வளரும் உழமண்ணுடன் களிப்பு மண்ணும் உள்ளன. பூண்டி, உத்தரமேரூர், திருத்தணி, திருப்போரூர் முதலிய இடங்களில் உப்பு மண்ணும் உள்ளன. செங்கற்பட்டு, திருவள்ளூர், பொன்னேரி ஆகிய இடங்களில் செம்மண்ணும் உள்ளன.

மலைகள்

செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில் பெரும்பாலும் சமவெளியும் சிற்சில இடங்களில் குன்றுகளும் உள்ளன. இம் மாவட்டத்தில் நாகலாபுரம், சத்தியவேடு, காம்பாக்கம் ஆகிய இடங்களில் மலைகளும், செங்கற்பட்டு, மாமல்லபுரம், திருநீர்மலை, சீவரம், திருப்போரூர், திருத்தணி, திருக்கழுக் குன்றம், வண்டலூர், குன்றத்தூர், மலைவையாவூர், பல்லாவரம் ஆகிய இடங்களில் சிறு சிறு குன்றுகளும் உள்ளன. இவை கிழக்கு மலைத்தொடரின் பிரிவுகளாகும். இவற்றில் செடி, கொடி, மரங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன.

ஆறுகள்

இம்மாவட்டம் மேற்குப் பகுதி உயர்ந்தும் கிழக்குப் பகுதி தாழ்ந்தும் உள்ளதால் ஆறுகள் மேற்கிலிருந்து கிழக்காகப் பாய்ந்து சென்று கடலில் கலக்கின்றன. இம்மாவட்டத்தில் பாயும் முக்கிய ஆறுகள் பாலாறு, செய்யாறு, வேகவதி,[1] கூவம் ஆறு, அடையாறு, கொற்றலையாறு, ஆரணி ஆறு என்பன. இம்மாவட்டத்தில் பாயும் ஆறுகளுள் பெரியதும் கர்நாடக மாநிலத்தில் நந்தி துர்க்கம் என்னும் மலையில் தோன்றுவதுமான பாலாற்றின் நீளம் இம்மாவட்ட எல்லையில் 45 கி. மீ. ஆகும்.

---

1 சங்க காலத்திலும் பல்லவர் காலத்திலும் வெஃகா எனப் பெயர் பெற்றிருந்தது. -இராசமாணிக்கனார் மா., பத்துப்பாட்டு ஆராய்ச்சி, [சென்னைப் பல்கலைக் கழகம். 1970] ப. 146.

ஏரிகள்

செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள ஏரிகளுள் முக்கியமானவை மதுராந்தகம் ஏரி, செங்கற்பட்டு ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி, உத்தரமேரூர் ஏரி, தென்னேரி [1], புழலேரி, வேடந்தாங்கல் ஏரி, கூவம் ஏரி, பழவேற்காடு ஏரி, சோழவரம் ஏரி முதலியன. இவற்றுள் சில குடி நீருக்கும் பெரும்பான்மையானவை பாசன வசதிக்கும் பயன்படுகின்றன. இவற்றுடன் ஒவ்வொரு கிராமத்திற்கு என்றும் ஏரிகள் உள்ளன. இவ்வாறு எண்ணற்ற ஏரிகள் உடைமையால் இம் மாவட்டம், 'ஏரி மாவட்டம்' என்றே அழைக்கப்படுகிறது.

மலையைச் சூழ்ந்த பகுதிகளில் பெரும்பாலும் புன்செய்ப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. திருத்தணி வட்டத்தில், 'தும்மல செறு கண்டிகை' என்னும் பகுதியில் மூன்று பக்கங்களிலும் மலைகள் சூழ்ந்த பகுதிக்கு மத்தியில் நெல் பயிரிடப் படுகிறது. மலையைச் சார்ந்த பகுதிகளில் உள்ள ஏரிகளுக்கு நீர் வருகால் மிகவும் குறைவு. அதனால் அப்பகுதிகளில் ஆண்டிற்கு அதிகமாக ஒரு போகத்திற்கு மேல் பயிரிடப்படுவ தில்லை.

இம்மாவட்டத்தில் தென்பகுதிகளைவிட வட பகுதியில் சற்றுமழை அதிகமாக இருத்தலால் ஆரணி ஆற்றிலும் கொற்றலை ஆற்றிலும் மழைக் காலத்திலாவது சில நாட்கள் நீர் செல்கின்றது. அதனால், பொன்னேரி, கும்முடிப்பூண்டி வட்டங்களில் பெரும்பான்மையோர் ஆண்டுக்கு மூன்று போகம் பயிர் செய்கின்றனர்.

ஆற்றில் செல்லும் நீர், நேரடியாக நிலத்திற்குப் பாய்ச்சப் படுவதில்லை. அஃதாவது ஆற்றுப் பாசனம் என்பது இம் மாவட்டத்தில் இல்லை. ஆற்றிலிருந்து செல்லும் கால்வாய்கள் ஏரியில் நீரைச் சேமிக்க உதவும். ஏரியிலிருந்து கால்வாய்கள் மூலம் நிலத்திற்குப் பாய்ச்சும் முறையே அதிகமாக வழக் கிலுள்ளது

---

1. திரையன் என்னும் குறுநில மன்னனால் உண்டாக்கப் பட்ட திரையனேரி என்பது சிதைந்து தென்னேரி ஆயிற்று - சேதுப்பிள்ளை. ரா. பி., தமிழகம் ஊரும் பேரும். (மு. கா. நூ.), ப. 20.

ஒரு சில ஆண்டுகளாகச் செங்கற்பட்டு - எம். ஜி. ஆர். மாவட்டத்திலுள்ள ஏரிகளில் நீரே இல்லையென்று சொல்லு மளவிற்கு உள்ளது. மழையின்மையினாலும் கிணற்றில் நீர் மட்டம் குறைந்து கொண்டே சென்று விட்டமையினாலும் மின்வசதி எல்லா கிராமங்களுக்கும் கிடைக்கின்றமையினாலும் கவலை, ஏற்றம் ஆகிய முறைகளில் நீர்ப்பாசனம் செய்யும் முறை சில வட்டங்களில் பல கிராமங்களுள் வழக்கற்று விட்டது என்ற நிலை உள்ளது. கிணற்றில் நீர் சற்று இருந்தால் ஆயில் என்ஜின் மூலமும் இல்லையெனில் ஆழ்துளைக் கிணறு கள் தோண்டி மின்மோட்டார் மூலமும் நீர் இறைத்துப் பயிரிடு கின்றனர்.

பழம்பெருமை வாய்ந்த, செங்கற்பட்டு - எம். ஜி. ஆர். மாவட்ட எல்லைப் பாலாற்றில் தற்காலத்தில் மழைக் காலத் தில் கூட நீர் செல்வதில்லை. இதில் தண்ணீர் சுரக்குமேயன்றிப் பெரும்பாலும் பெருக்கெடுத்து ஓடுவதில்லை இந்நிலை பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே இருந்தது என்பதையும் பாலாற்றை அம்மக்கள் பயன்படுத்திய முறையையும்,

**'பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்போல்
மன்னர் வேனிலின் மணல்திடர் பிசைந்துகை வருட
வெள்ள நீரிரு மருங்குகால் வழிமிதந் தேறிப்
பள்ள நீள்வயல் பருமடை உடைப்பது பாலி [1]**

என்னும் பாடலில் சேக்கிழார் தெள்ளிதின் புலப்படுத் தியுள்ளார். இம்முறையைப் பின்பற்றியே இன்றும் பாலாற்றில் மக்கள் மண்டைக்கிணறு[2] தோண்டி அதன்மூலம் பெருகும் நீரை வாய்க்கால்மூலம் கொண்டு சென்று நிலத்திற்குப் பாய்ச்சு கின்றனர்.

உழவே தலையாகக் கொண்டு பலரும் இத்தொழில் செய் பவராயினும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் தமிழ்மொழி பேசும் வேளாளர், வன்னியர் முதலிய சாதியினரும், ஆதி திராவிட இனத்தவரும், தெலுங்கு மொழி பேசும் நாயுடு, ரெட்டியார் சாதியினரும் ஆவர். பழுதிலா இவ்வுழு தொழில் பொதுவாக எல்லா கிராமம், நகரம் சார்ந்த பகுதிகளிலும் நடைபெறுகிறது.

1 சேக்கிழார், திருத்தொண்டர் புராணம், (மு. கா. நூ.) ப. 132

2 சோமலெ, செங்கற்பட்டு மாவட்டம், (மு. கா. நூ.) ப. 16

இத்தகைய நிலையில் செங்கற்பட்டு-எம்.ஜி. ஆர். மாவட்டத்தில், வேளாண்மையே தலையாய தொழிலாக இருக்கிறது. சுமார் 85 விழுக்காடு மக்கள் உழுதுண்டு வாழ்கிறார்கள். இத்தொழில், பருவமழை தவறிப்போகும் காலங்களில் சீரான முறையில் நடத்தப்படாமல் விளைச்சல் குன்றுகிறது.[1] இருப்பினும் வேளாண்மைத் துறையினர் முனைப்பான முறையிலும் முன்னேற்றமான புதிய வழிமுறைகளிலும் சாகுபடி செய்ய பல நல்ல வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளனர்.

இம்மாவட்டத்தில் நெல், கம்பு, கேழ்வரகு, தினை முதலிய தானியப் பயிர்களும் துவரை, உளுந்து, பச்சைப் பயறு, காராமணி, அவரை, கொள்ளு முதலிய பயறுகளும் நிலக் கடலை, எள், ஆமணக்கு, தென்னை முதலிய எண்ணெய் வித்துப் பயிர்களும் பணப்பயிர்களில் கரும்பு அதிகமாகவும் பருத்தி, வெற்றிலை முதலியன சிறிதளவிலும் கிழங்கு வகைகள் தவிர்ந்த காய்கறிப் பயிர்களும் பயிரிடப்படுகின்றன.

1981 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி பல்வேறு தொழில் செய்பவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

தொழில்	மொத்தம்	விழுக்காடு
விவசாயம்	2, 86, 786	20. 72
விவசாயக்கூலி	4, 09, 789	29. 60
குடிசைத்தொழில்	78, 722	5. 68
பிறதொழில் செய்வோர்	4, 89, 315	35. 34
இவை சார்ந்த தொழில் செய்வோர்	1, 19, 863	8. 66
மொத்தம்	13, 84, 475	100. 00

1. 'செங்கற்பட்டு — பத்தாண்டு சாதனைகள்', (தமிழ்நாடு அரசு செய்தித்துறை வெளியீடு, 1961) ப. 28.

குறிப்பு: மேலே குறிப்பிடப்பட்ட உழவு சார்ந்த புள்ளி விவரங்கள், புள்ளி இயல் உதவி இயக்குநர் அலுவலகம், காஞ்சிபுரத்தினின்று பெறப்பட்டவை.

	விவசாயம்	விவசாயக்கூலி
மொத்தம்	2, 86, 786	4, 09, 789
ஆண்	2, 41, 149	2, 27, 729
பெண்	45, 637	1, 82, 060
மொத்தம்		
கிராமப்புறம்	2, 68, 590	3, 72, 266
நகர்ப்புறம்	18 196	37, 523
ஆண்கள்		
கிராமப்புறம்	2, 25, 894	2, 04, 562
நகர்ப்புறம்	15, 255	23, 167
பெண்கள்		
கிராமப்புறம்	42, 696	1, 67, 704
நகர்ப்புறம்	2, 941	14, 356

1971 ஆம் ஆண்டில் நகர்ப்புறம் 641. 09 சதுர கிலோ மீட்டராயிருந்துள்ளது. இவ்வாண்டின் கணக்கெடுப்பைவிட நகர்ப்புறத்தின் பரப்பு இப்பொழுது கூடியுள்ளது. அஃதாவது மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் நகர்ப்புறம் 39. 9 விழுக்காடாக உள்ளது.

பயிரிடப்படும் நிலப்பரப்பு	— 3, 27, 036	ஹெக்டேர்
பயிரிடா நிலப்பரப்பு	— 4, 75, 329	ஹெக்டேர்
நன்செய் நிலப்பகுதி	— 2, 38, 946	ஹெக்டேர்
மானாவரி நிலப்பகுதி	— 89, 090	ஹெக்டேர்
மாவட்டத்திலுள்ள மொத்த ஏரிகள்	— 3, 628	
மாவட்டத்திலுள்ள மொத்த கிணறுகள்	— 89. 427	
கிணற்று நீர்ப்பாசனப் பரப்பு	— 1, 17, 871	ஹெக்டேர்
ஏரி நீர்ப்பாசனப் பரப்பு	— 1, 56, 242	ஹெக்டேர்

நாஞ்சிலும் இராட்டையும் நாட்டின் ஈரல் என்பதை அறிந்து செங்கற்பட்டு . எம். ஜி.ஆர். மாவட்டம் உழவுக்குரிய முதலிடம் அளித்ததுடன் நெசவுத் தொழிலிலும் நிகரற்று விளங்குகிறது.

நெசவின் தொன்மையும் சிறப்பும்

நெசவுத்தொழில் புதிய கற்காலத்தில் ஆரம்பமாயிற்று என்று தொல்பொருள் வரலாற்றறிஞர் எச். டி. சங்காலியா [1] கூறுகின்றார். 'உடைபெயர்த்து உடுத்தல்' [2] என்ற தொடர் தொல்காப்பியத்தில் வருதல் மூலம் நெசவுத் தொழிலிலிருந்து உண்டாக்கப்படும் ஆடை உடுத்தலின் தொன்மையை அறியலாம். 'ஆவியன்ன வவிர்நூற் கலிங்கம்' [3] என்னும் பெரும்பாணாற்றுப்படைத் தொடராலும் பிற பண்டைய இலக்கியச் சான்றுகளாலும் மென்மையான ஆடைகளும், 'கோபத்தன்ன தோயாப் பூந்துகில்' [4] என்னும் திருமுருகாற்றுப் படை அடியாலும், 'பல்கலைச் சில்பூங்கலிங்கத்தள்' [5] என்னும் கலித்தொகை அடியாலும் பூந்தொழிலடைய ஆடைகள் அக் காலத்திலேயே பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் 'பட்டு நீக்கித் துகிலுடுத்து' [6] என்னும் பட்டினப்பாலைத் தொடரால் பட்டாடையும் பண்டைக்காலத்திலேயே பயன்படுத்தப்

---

1. நாகசாமி, இரா. [பதி.], [மு. கா. நூ.] ப. 67
2. தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியம், மெய்ப் பாட்டியல், [சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், ஆகச்டு 1951] நூற்பா 262. ப. 262. ப. 24
3. சாமிநாதையர் உ. வே. [பதி] பெரும்பாணாற்றுப்படை அடி 469, ப. 208
4. சாமிநாதையர் உ. வே. [பதி] திருமுருகாற்றுப்படை, [மு. கா. நூ.] அடி 15, ப. 4
5. கலித்தொகை நச்சினார்க்கினியர் உரை நான்காம் பதிப்பு [சென்னை கழக வெளியீடு, மே 1955], பா. 56: 11, ப. 163
6. சாமிநாதையர் உ. வே. [பதி] பட்டினப்பாலை [மு. கா. நூ.] அடி 107, ப. 519

பட்டிருந்தது என்பதும் 'இழையணி வாரா ஒண்பூங்கலிங்கம்[1]' என்னும் புறநானூற்றுத் தொடராலும்,

> **'நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கணிந்**
> **தரவுரி யன்ன வறுவை'[2]**

என்னும் பொருநராற்றுப்படை அடிகளாலும்,

> **'கண்ணுழை கல்லா நுண்ணூற் கைவினை**
> **வண்ண வறுவையர்'[3]**

என்னும் மணிமேகலை அடிகளாலும் பன்னூற்றாண்டுகளுக்கு முன்பே நுண்மையான நூலைக் கொண்டு நெய்யப்பட்ட ஆடையினையுடைய இழைகள் வரிசை காண்பதற்கு இயலாத வகையில்அமைந்திருந்தன என்பதும் தெரிய வருகின்றன.

செங்கற்பட்டு–எம்.ஜி. ஆர். மாவட்டமும் நெசவும்

'காஞ்சிபுரத்திற்குப் போனால் காலாட்டிப் பிழைக்கலாம்' என்னும் முதுமொழி காஞ்சியில் நடைபெறும் நெசவுத் தொழிலின் சிறப்பையே உணர்த்துகிறது.

காஞ்சிபுரத்தில் பல மக்கள் நெசவுத் தொழிலையே நம்பி வாழ்கின்றனர். சில குறிப்பிட்ட சமூகத்தினரே இத்தொழிலில் தொன்மையாக ஈடுபட்டு வந்துள்ளனர். தமிழ் பேசும் செங்குந்தர், சௌராஷ்டிரம் பேசும் பட்டுநூல்காரர், கன்னடம் பேசும் சேணியர், தெலுங்கு பேசும் சாலியர், உருது பேசும் முசுலீம்களும்[4] குறிப்பிடத் தக்கவர்களாவர். நெசவுத் தொழிலைச் செய்து வந்த கைக்கோளர்களும் பட்ட சாலியர் களும் காஞ்சிபுரத்திலும் அதனைச் சுற்றியிருந்த ஊர்களிலும் குறிப்பாகச் செங்கற்பட்டு மாவட்டத்தின் பெரும் பகுதிகளில் வாழ்ந்திருந்தனர் என்பதனை இம்மாவட்டத்திலுள்ள களத்தூர், திருக்கச்சூர், திருக்கழுக்குன்றம், திருவிடந்தை,

---

1. சாமிநாதையர் உ. வே. [பதி] புறநானூறு மூலமும் உரையும் ஐந்தாம் பதிப்பு [சென்னை கழக வெளியீடு 1956] பா. 383. 10-11, ப. 573
2. சாமிநாதையர் உ. வே. [பதி] பொருநராற்றுப்படை [மு. கா. நூ] அடி 82 & 83, ப. 89
3. சாமிநாதையர் உ. வே. (பதி) மணிமேகலை மூலமும் அரும்பத உரையும் ஐந்தாம் பதிப்பு (சென்னை கபீர் அச்சுக்கூடம் 1956) காதை28: 53-54, ப. 331
4. செங்கற்பட்டு மாவட்டம் தொழில் வளர்ச்சி, (மற்றவை இல்லை.) ப. 47

காஞ்சிபுரம்முதலிய ஊர்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம்.[1]

காஞ்சிபுரம் நகரமும் காஞ்சிபுரம் வட்டத்தைச் சார்ந்த பகுதிகளும் பட்டு நெசவுக்கு இம்மாவட்டத்தில் பெயர் பெற்றவை. காஞ்சிபுரம் வட்டத்தில் காஞ்சிபுரம், பேட்டைப் பகுதிகள், ஐயங்கார்குளத்திலும், உத்தரமேரூர் வட்டத்தில் பெருநகர், மானாம்பதி, ஒரக்காட்டுப் பேட்டையிலும், மதுராந்தகம் வட்டத்தில் எலப்பாக்கம், கருங்குழியிலும், செய்யூர் வட்டத்தில் பொலம்பாக்கம், கயப்பாக்கத்திலும், ஊத்துக்கோட்டை வட்டத்தில் போந்தவாக்கம், பாலவாக்கத்தில் மிகச் சிறிதளவிலும், கும்முடிப்பூண்டி வட்டத்தில் பாதிர்வேடு, மாதர்பாக்கம், புதுக்கும்முடிப் பூண்டியிலும், பொன்னேரி வட்டத்தில் கொசவன் பேட்டை, ஆரணியிலும், திருவள்ளூர் வட்டத்தில் ஈக்காடு, நரசிங்கபுரத்திலும், திருப்பெரும்புதூர் வட்டத்தில் குன்றத்தூர், படப்பை, திருமழிசையிலும், சைதாப் பேட்டை வட்டத்தில் சைதாப்பேட்டை, அனகாபுத்தூர், பெருங்களத்தூரிலும், செங்கற்பட்டு வட்டத்தில் திருக்கழுக்குன்றம், மானாம்பதி, கூடுவாஞ்சேரியிலும், திருத்தணி வட்டத்தில் மத்தூர், புச்சிரெட்டிபள்ளியிலும், பள்ளிப்பட்டு வட்டத்தில்பொதட்டூர்ப்பேட்டை, அத்திமாஞ்சேரிப்பேட்டை, சுரைக்காய்ப்பேட்டை, அம்மையார் குப்பம் பகுதியிலும் மிகுதியாக நூல் நெசவு செய்யப்படுகிறது.

இவற்றுள் உத்தரமேரூர் வட்டம் மானாம்பதியிலும் மதுராந்தகம் வட்டம் எலப்பாக்கத்திலும் காஞ்சிபுரம் வட்டத்தில் காஞ்சிபுரம், ஐயன்பேட்டையிலும் நீட்டுப்பாவில் நூல் சேலையும் வேட்டியும் நெசவு செய்கின்றனர். திருத்தணி வட்டத்தில் மத்தூரிலும் பொன்னேரி வட்டத்தில் கொசவன் பேட்டையிலும் பள்ளிப்பட்டுவட்டத்தில் பொதட்டூர்ப் பேட்டையிலும் பெரும்பான்மையளவிலும் காஞ்சிபுரம், ஐயன் பேட்டையில் சிறுபான்மையளவிலும் விசைத்தறிகள் உள்ளன. மற்ற இடங்களில் பொரப்பாவு நெசவு செய்யப்படுகின்றன. பொரப்பாவு என்பது புரைப்பாவு ஆகும்; இது நீட்டுப்பாவைவிட குறைந்த நீளமுடைய பாவு ஆகும்.

நீட்டுப் பாவு மிக நீளமுடையதாதலால் இப்பாவு தோய்வதற்கென்றே இத்தொழில் செய்பவர்கள் வாழும் பகுதியில்

1. நாகசாமி. இரா., செங்கற்பட்டு மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு [மு. கா. நூ] ப. 69

தோப்பு உண்டு. தோப்பில் நிழலில் நாலைந்து மணி நேரம் இடையூறின்றித் தொடர்ந்து வேலை செய்ய இயலுகிறது. இத்தொழிலில் பாவுதோய்வதற்கு ஒரு தலாவுக்கு 2 பேர் ஆக 10 தலாவுக்கு 20 பேர் ஆகவும் மற்ற தொழில்களுக்காக மொத்தத்தில் 30 பேர் தேவைப்படுகின்றனர். ஒரு குடும்பத்தினர் இத்தனை பேரை ஒரே நேரத்தில் அழைத்து வேலை வாங்கிக் கொள்வது இக்காலத்தில் சற்றுக் கடினமாக இருத்தலால் தற்காலத்தில் நீட்டுப்பாவு நெசவு குறைந்து வருகிறது.

நெசவுத் தொழிலில் குடும்பத் தலைவர் நெசவு செய்பவராகவும் தார் சுற்றுதல், நூலிழைத்தல் போன்ற வேலைகளை அவருடைய துணைவியாரும் இழைகள் நீட்டிக் கட்டுதல், பலகை பாசுதல் போன்ற நேரங்களில் பிள்ளைகளும் உதவி செய்கின்றனர். பொதுவாகக் குடும்பத்தில் உள்ளவர் அனைவரும் சேர்ந்து தொழில் செய்வதாகவே இத்தொழில் உள்ளது. மழைக் காலத்தில் தறியில் உபயோகப்படுத்தும் மரச்சாமான்கள் ஈரத்தன்மை பெறுதலாலும் இழைகளிடையே பிணிப்பு ஏற்படுதலாலும் நெசவு செய்ய இயலாமல் போகிறது. ஒரு நெசவாளியினுடைய வருமானம் என்பது தனிநபர் வருவாய் அல்ல. குடும்பத்தின் ஒட்டுமொத்த வருமானமாகக் கருதப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள 106 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுள் காஞ்சிபுரத்தில் மட்டும் 20 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றின் மூலம் 8551 பட்டுத் தறிகள் இயங்குகின்றன. காஞ்சிபுரத்திலுள்ள மொத்தப் பட்டுத்தறிகள் 12,006. இதனால் 25,653 பேர் பட்டு நெசவுத் தொழில் மூலம் வேலை வாய்ப்பு பெறுகின்றனர். பட்டு நெசவு செய்யும் ஒருவர் ஒரு மாதத்திற்கு ரூ. 450 முதல் ரூ. 650 வரை ஊதியம் பெறுகின்றார்.

காஞ்சிபுரத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு திங்களுக்கு 11.400 கிலோகிராம் கோராவும் (நிறம் தோய்க்கப்படாத பட்டு)8000 மார்க் சரிகையும் தேவைப்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்களில் சாதா கோர்வை, டிஷ்யூ. ஜாக்கார்டு, பாவாடை ஆகிய வகைகளில் பட்டுச் சேலைகள் உற்பத்திச் செய்யப்படுகின்றன.

செங்கற்பட்டு-எம்.ஜி. ஆர். மாவட்டத்தில் பட்டு நெசவாளர்கள் மாதம் ஒன்றிற்கு 0.57 இலட்சம் மீட்டர் நெசவு செய்கின்றனர். இதன் மதிப்பு ரூ. 178.14 இலட்சமாகும்.

இம்மாவட்டத்தில் 145 கைத்தறி (நூல்) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றின் மூலம் 31, 041 நூல் தறிகள் இயங்குகின்றன. இம்மாவட்டத்திலுள்ள மொத்த நூல் தறிகள் 33, 600 நூல் நெசவு செய்யும் ஒருவர் ஒரு திங்களுக்கு ரூ. 350 முதல் ரூ. 400 வரை ஊதியம் பெறுகின்றார். இக் கைத்தறி நெசவாளர்கள் திங்கள் ஒன்றிற்கு 12. 89 இலட்சம் மீட்டர் நெசவு செய்கின்றனர். இதன் மதிப்பு ரூ. 173.42 இலட்சமாகும்.

வேலை வாய்ப்பு அற்ற நெசவாளர்களுக்கு இம்மாவட்டத்தில் ஏழு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தொழிற் சாலைகள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன. அவற்றின் வாயிலாக 258 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் 60 க்கு 40, 80 க்கு 80, 100 க்கு 80, 40 க்கு 40 எண்ணுள்ள லுங்கிஆடைகளையும் 60 க்கு 60, 40க்கு 40 எண்ணுள்ள சேலைகளையும் 40 க்கு 40, 60 க்கு 60, 80க்கு80 எண்ணுள்ள வேட்டிகளையும் 60 க்கு 40 எண்ணுள்ள சட்டைகளையும் 26 க்கு 26, 40 க்கு 40 எண்ணுள்ள காடா துணி வகைகளையும் 40 க்கு 40 எண்ணுள்ள ஜனதா சேலைகளையும் 26 க்கு 26 எண்ணுள்ள ஜனதா காடா துணிகளையும் உற்பத்திச் செய்கின்றன.

விசைத்தறியில் சாதா, தானே இயங்குபவை என இருவகை உண்டு. விசைத்தறி மின்சக்தியினால் இயக்கப்படுவது. விசைத்தறியில் நெய்வதற்கு எனவும் கைத்தறியில் நெய்வதற்கு எனவும் அரசு சில வகைகளை வரையறுத்துக் கொடுத்துள்ளது. கைத்தறியில் உற்பத்திச் செய்யப்படும் ஆடைகள் விசைத்தறி மூலம் உற்பத்திச் செய்யப்படும் ஆடைகளால் அதிகம் பாதிக்கப்படாமல் தடுக்க இத்தறியை உபயோகப்படுத்த அங்கீகாரம் பெற வேண்டும் என அரசு ஆணை பிறப்பித்து நடைமுறையில் இருந்து வருகிறது. விசைத்தறிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

	அங்கீகாரம் பெற்றவை	அங்கீகாரம் பெறாதவை	புதியவை	மொத்தம்
சாதா	65	481	893	1439
தானே இயங்குபவை	267	815	2614	3696

பட்டு நெசவுக்கு வேண்டிய பட்டுப் பூச்சிகளையும் நூல் நெசவுக்கு வேண்டிய பஞ்சையும்உற்பத்திச்செய்து தருபவர்கள் விவசாயிகளாவர். எனவே உழவும் நெசவும் சேர்க்கைத் தொழில்களாகும். இச்சேர்க்கைத் தொழில்களில் மேற்கண்ட முறையில் செங்கற்பட்டு எம்.ஜி. ஆர். - மாவட்டம் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

குறிப்பு: மேலே குறிப்பிடப்பட்ட நெசவு சார்ந்த புள்ளி விவரங்கள் ஏப்ரல் 1988 ஆம் ஆண்டு நிலவரப்படி, உதவி இயக்குநர் அலுவலகம் கைத்தறி மற்றும் துணிநூல், காஞ்சிபுரத்தினின்று பெறப்பட்டவை.

இயல் — 2

உழவுத் தொழில் சார்ந்த சொற்கள் பொருள்வழிப் பாகுபாடு – 1

உழவு, உழவர் பெயர்க்காரணங்கள்

நிலத்தை உழுது பயிர்செய்யும் தொழில் உழவுத் தொழில் எனப்படுகிறது. இத்தொழிலினை மேற்கொண்டவர்கள் உழவர் ஆவர். உழவுத்தொழிலைப் பயிர்த்தொழில், வேளாண்மை, விவசாயம் என்றும் உழவரை வேளாளர், விவசாயி, குடியானவர் என்றும் தமிழில் அழைக்கின்றனர். நிலத்தை உழுது பயிர் விளைவித்தலினால் பயிர்த்தொழில் என்கின்றனர்.

'வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி'[1]

என்னும் தொல்காப்பிய நூற்பாவினால் உழவர் 'வேளாண் மாந்தர்' என்று அழைக்கப்பட்டனர் என்பதறியலாம். 'வேள்'[2] என்னும் சொல்லுக்குத் தமிழ்ப் பேரகராதி 'மண்' என்றும் பொருள் கூறுகிறது. உழவுத் தொழிலில்,

'ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபி
னீரினு நன்றதன் காப்பு'[3]

என்னும் குறட்பாவில் கூறப்பட்டுள்ளபடி உழுதல், எருவிடுதல், களைகட்டல், நீர் பாய்ச்சுதல், காத்தல் ஆகிய பல்வேறு செயல்களைச் செய்ய உழவர்க்கு உடல் வலிமை — ஆண்மை

---

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியம், மரபியல், (மு. கா. பதிப்பு) நூற்பா 635. ப. 469
2. தமிழ்ப் பேரகராதி. தொகுதி 6, (சென்னைப் பல்கலைக் கழகம் 1982) ப. 3842
3. பரிமேலழகர் (உரையாசிரியர்) திருக்குறள் (ஶ்ரீ காசிமடம், திருப்பனந்தாள், 1968) குறள் - 1038, ப. 428

தேவைப்படுகிறது. மண்ணில் மேற்கொள்ள வேண்டிய உடல் வலிமைத் தொழிலின் காரணமாக அத்தொழில் 'வேளாண்மை' என்றும் அத்தொழில் செய்பவர் 'வேளாண் மாந்தர்' என்றும் 'வேளாளர்' என்றும் அழைக்கப்படுகின்றனர் எனலாம்.

வேளாண்மைத் தொழிலைச் செய்பவர்கள் தங்கள் தொழிலை, 'விவசாயம்' எனக் கூறத் தொடங்கி இன்று 'வெவசாயம்' என்கின்றனர். விவசாயத் தொழிலைச் செய்பவர்கள் 'விவசாயி' களாகிறார்கள். விவசாயம் என்னும் சொல், 'வ்யவசாய' என்ற வடமொழிச் சொல்லினின்றும் உண்டாகியுள்ளது. அஃதாவது, 'வ்யவசாய'[1] என்னும் வட சொல், தமிழ் ஒலிப்பு முறைக்கேற்ப 'வியவசாயம்' என்னும் சொல்லாகி இன்று 'விவசாயம்'[2] என்று வழங்கப்படுகிறது. எனலாம்.

வ்யாசாய > வியவசாயம் > விவசாயம்

விவசாயத் தொழிலின் உள் நுணுக்கத் தொழில்களுள் நாற்று நடுதல், களையெடுத்தல் முதலியன பெண்டிர் செய்வர். ஏர் உழுதல், நாற்று எடுத்தல், நீர் பாய்ச்சுதல், தாள் அடித்தல்' கரும்பு வெட்டல் முதலியன ஆடவர் செய்வர். அறுவடை செய்தல், அரி சுமத்தல், ஒப்படி செய்தல் முதலியவற்றுள் இருபாலாரும் ஈடுபடுவர். இவ்வாறு குடும்பத்தில் இருப்பவர் அனைவரும் உழவுத் தொழிலில் ஈடுபாடு உடையவராயிருப்பர். தனித்தொழில் மட்டும் தெரிந்தவர் என்று ஒருவரைச் சொல்ல இயலாது. ஆகையால் குடும்பமாக இருந்து விவசாயம் செய்பவர்களைக் 'குடியானவர்' என்கின்றனர் எனலாம்.

உழவுத் தொழிலின் சிறப்பை உணர்ந்த ஔவையார், அவ்வுழவுத் தொழில் செய்து வந்த மக்கள் அடைந்த தொல்லைகளைக் கண்டு, அத்தொழில் இனிதாயிருக்க,

'ஏரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுமாய் — ஊருக்குச்
சென்று வரவணித்தாய்ச் செய்வாரும் சொற்கேட்டால்
என்றும் உழவே இனிது'[3]

என்று பாடிய பாடலின் கருத்து இங்கறியத் தக்கது.

---

1. புலியூர்க்கேசிகன் (உரை) ஔவையார் பாடல்கள் —(மு. கா. நூ.) ப. 169

இவ்வுழவுத் தொழில் நாகரிகமாக வாழத் தொடங்கிய மனிதரின் முதற்கண்டுபிடிப்பாகும். இத்தொழில் மனிதருக்குரிய உணவை அளித்து நிலைத்து வாழச் செய்துள்ளது. மேலும், இத்தொழிலால் வளர்ச்சியும்மானிடரின் உண்மையான கலை, கைத் தொழில் வளர்ச்சியும் சமுதாய அமைப்பும்ஏற்பட்டுள்ளது. இத்தகு சிறப்புடைய உழுதொழில் சார்ந்து சேகரிக்கப்பட்ட சொற்களின் அதிக அளவு கருதி அவற்றை இரண்டு இயல்களாகப் பிரித்துத் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டாம் இயலில் உழவுத் தொழில்,

1. மண்ணும் நிலப் பிரிவுகளும்
2. நீர்ப்பாசன முறைகளும் கருவிகளும்
3. உழவும் உழவுக் கருவிகளும்
4. பயிர்ப் பருவங்களும் பயிரிடுதலும்
5. களையெடுத்தலும் கருவிகளும்
6. உரமும் உரமிடுதலும்
7. அறுவடையும் உருப்படி செய்தலும்
8. உழவர் பயன்படுத்தும் பிறகருவிகள்
9. விளைபொருள் பற்றிய பிறசொற்கள்
10. பயிரைத் தாக்கும் பூச்சிகளும் நோய்களும்

என்னும் பத்துத் தலைப்புகளுள் பொருள்வழிப் பாகுபாட்டின் அடிப்படையில் பிரித்துப் பொருள் விளக்கம் காணப்படுகின்றன.

1. மண்ணும் நிலப்பிரிவுகளும்

மண்ணும் நிலமும்

ஒரு நிலத்திலுள்ள மண்ணின் தன்மைக்கேற்ப அந்நிலம் பெயர் பெறும். நிலம், மணல் நிறைந்திருப்பின் மணல் நிலம் அல்லது மணமேறி என்றும் கருமையான மண் நிறைந்திருப்பின் கருப்பு நிலம் என்றும் செந்நிறமான மண் மிக்கிருப்பின் செம்மண் நிலம் என்றும் களிப்புத் தன்மை உடையதாயின் களிமண் நிலம் அல்லது சேற்றுக்கழனி என்றும் உப்புத்தன்மை மிகுந்திருப்பின் களர்மண் நிலம் என்றும் பெயர் பெறும். உப்பு

மண்ணைச் சவுர்மண், சவுரல் மண், நாகட மண் என்பது முண்டு. இத்தன்மையுடைய நிலத்தைக் களர்நிலம் என்பதுடன் சவுடு நிலம் என்றும் சவுட்டு நிலம் என்றும் வழங்குவர்.

நிலத்தின் பிரிவுகள்

நிலத்தைப் பயன்படுத்தும் முறையை ஒட்டிப் பிரிக்கப்படும் வகைகளைப் பின்வரும் படத்தின் வாயிலாக அறியலாம்.

- நிலம்
  - பட்டா நிலம்
    - பயிரிடா நிலம்
      - கரம்பு
      - தரிசு
    - பயிரிடும் நிலம்
      - நன்செய் (ஏரிப்பாசனம் உடையது)
      - புன்செய்
        - கிணற்றுப் பாசனம் உடையது
        - பாசன வசதி அற்றது— (கொல்லை மேடு)
  - புறம்போக்கு நிலம்

பயிரிடப்படும் நிலம் நீர்ப்பாசன வசதியை முன்னிட்டு நன்செய் நிலம், புன்செய் நிலம் எனப் பிரிக்கப்படுகிறது. செங்கற்பட்டு - எம். ஜி. ஆர். மாவட்டத்தைப் பொருத்த வரையில் நன்செய் நிலம் என்பது நன்கு பயிரிடக்கூடிய ஏரிப் பாசனம் உள்ள நிலமாகும் புன்செய் நிலம் என்பது ஏரிநீர் பாயும் தன்மை அற்றது. அது கிணற்றுப் பாசனம் மூலம் பயிரிடப்படக் கூடியது. மழை நீரையே நம்பி மானாவாரி பயிர் செய்யக்கூடிய இந்நிலத்தின் ஒரு பிரிவையே கொல்லைமேடு என்பர்.

நன்செய் நிலத்தில் நெல், கரும்பு, தக்காளி, கத்தரி, வெண்டை, மிளகாய், கொத்தவரை, முள்ளங்கி, கிழங்கு வகைகள், கீரைகள், வெங்காயம், கடுகு, வாழை, வெற்றிலை,

தனியா, பூண்டு முதலியன பயிர் செய்யப்படுதலால் இவை நன் செய்ப் பயிர்கள் எனப்படுகின்றன. புன்செய் நிலத்தில் வேர்க்கடலை, உளுந்து, பச்சைப்பயறு, எள், கொள், கம்பு, கேழ்வரகு, காராமணி, துவரை, சோளம், வரகு, தினை முதலியன பயிரிடப்படுகின்றன. எனவே இவை புன்செய்ப் பயிர்களாகின்றன. நன்செய்ப் பயிர்கள் புன்செய் நிலத்தில் கிணற்றுப்பாசன வசதியுடன் பயிரிடப்படுதலும் உண்டு. ஆனால் புன்செய்ப் பயிர்கள் நன்செய் நிலத்தில் பயிரிடப் படுதலில்லை.

நிலமிருக்கும் அமைப்பையும் இடத்தையும் ஒட்டி அதனைக் குட்டைக் கழனி, மேட்டுக் கழனி, பள்ளக் கழனி, ஓடைக் கழனி, கீழ்க் கழனி, மேல் கழனி, நடுக் கழனி, பனைஞ்சாலை நிலம், கிடங்கு நிலம், துண்டு, தகடி, முனைக் கழனி, மூலைக் கழனி, கோணக் கழனி, கோரைக் கழனி, புறடை, ஊர் ஒர நிலம் என்றெல்லாம் கூறுவர். இதில் நடுக்கழனி என்பது ஒரு கழனியின் மத்திய பகுதியையும் சில நிலங்களுக்கு இடையில் மத்தியிலுள்ள கழனியையும் குறிக்கும்.

நிலத்திற்கும் அந்நிலத்தில் பயிரிடுபவருக்கும் இடையே யுள்ள உரிமையைக் குறித்து பட்டா நிலம், வார நிலம், போக்கிய நிலம், ஒத்தி (சுத்த போக்கியம்) நிலம், குத்தகை நிலம் (லீஸ் நிலம்), மானிய நிலம், புறம்போக்கு நிலம் என்றும் கூறுவர்.

பண்டைய இலக்கியங்களில் பண்படுத்தப்பட்ட நன்செய் நிலம் செய் [1], செறு [2] என்று வழங்கப்பட்டுள்ளன. மேலும்

---

1 'வளஞ்செய் வினைஞர் வல்சி நல்க' சாமிநாதையர் உ. வே. (பதி) மலைபடுகடாம், பத்துப் பாட்டு (மு. கா. நூ.) அடி 462. ப. 595

'செய்யிற் பொலம்பரப்புஞ் செய்வினை யோயற்க' சாமி நாதையர் உ. வே.(பதி) பரிபாடல் மூலமும் பரிமேலழக ருரையும் 1956. பாடல் 10:128, ப. 113

2 'நூறுசெறு வாயினுந் தமித்துப் புக்குணினே' — புறநானூறு 184:3, ப. 340
'நீருறு செறுவில் நாறுமுடி யழுத்த' - நற்றிணை 60:7, ப. 70

பழனம்,[1] வயல்[2], கழனி[3], புலம்[4] ஆகிய சொற்களில் குறிப்பிடப்படுகிறது. இவற்றில் இன்று கழனி, வயல், நிலம் ஆகிய சொற்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. அவருக்கு நிலபுலம் ஏதேனும் உள்ளதா? என்று கேட்கப்படு வதனின்றும் புலம் என்ற சொல் வழக்கிலுள்ளதைஅறியலாம். மானாவாரி பயிர் செய்யும் இடங்களைக் கழனி, வயல் என்று சொல்லமாட்டார்கள்; கொல்லை மேடு என்பர்.

பயிரிடா நிலங்கள் தற்காலத்தில் கரம்பு, தரிசு என்று சொல்லப்படுகின்றன. கரம்பு, தரிசு நிலங்கள் ஒருவருக்குச் சொந்தமானவை. புன்செய் நிலங்களையே பெரும்பாலும் தரிசாக வைத்திருப்பர். நன்செய் நிலங்களை அவ்வாறு அதிக காலம் வைத்திருப்பதில்லை. தரிசையும் சிலர் கரம்பென்றே கூறிவிடுவதுண்டு.

---

1 'பழனத் தாமரைப் பனிமலர் முணைஇ' நாராயணசாமி ஐயர் அ. (உரையாசிரியர்)நற்றிணை (சென்னை, கழக வெளியீடு, மறுபதிப்பு (ஆகச்டு 1956) பா. 260:2, ப. 293.

'பகடென்றேன் உழுமென்றாள் பழனந்தன்னை' இராமசாமிப்புலவர் சு. ஆ., 'தனிப்பாடல் திரட்டு' முதற்பகுதி (கழக வெளியீடு, மறுபதிப்பு, மே-1969) பா. 621:3. ப. 228.

2. 'இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த' சாமிநாதையர். உ. வே. (பதி) திருமுருகாற்றுப்படை, பத்துப்பாட்டு, (மு. கா. நூ.) அடி 72. ப. 10.

'போன நிலமெல்லாம் போரரார் வயல்புகுத' சாமி நாதையர். உ. வே. (பதி) பரிபாடல் (மு. கா. நூ.) பா. 22:11. ப. 221.

3. 'பகன்றை விளைந்த கழனி' சாமிநாதையர். உ. வே. (பதி), மதுரைக் காஞ்சி, பத்துப்பாட்டு, அடி 261, ப. 306.

'விளைவறா வியன் கழனி' சாமிநாதையர். உ.வே. (பதி) பட்டினப்பாலை, பத்துப்பாட்டு (மு. கா. நூ.) அடி 8, ப. 514.

4. 'பூச்சாம்பும் புலத்தாங்கண்' —பட்டினப்பாலை அடி 12, ப. 514.

பயிரிடும் நிலமாயினும் பயிரிடா நிலமாயினும் ஒருவருக்குச் சொந்தமாயிருப்பின் பட்டா நிலமென்றும் ஒருவருக்கும் சொந்தமில்லாது அரசுக்குச் சொந்தமான நிலங்கள் புறம் போக்கு நிலமென்றும் வழங்கப்படும். கால்நடைகள் மேய்வதற் கென அரசனால் இடப்பட்ட மேய்க்கால் புறம்போக்கு நிலங்கள் 'விடுநிலம்' [1] (கோஸஞ்சார பூமி) என்று சொல்லப் படுகிறது.

நாற்று நடுவதற்கென்று பயன்படுத்தப்படும் நிலத்தை நாற்றங்கால் நிலம் என்பர். நிலத்தின் சிறு பிரிவுகளைத் தளை, துண்டு என்பர். இருசாராருக்குரிய நிலங்களுக்கிடையே அவர்களது நில எல்லையைக் குறிக்க நடப்பட்டுள்ள கருங்கல் 'காணிக்கல்' எனப்படும். நீர்ப்பாசன வசதிக்கேற்ப நிலத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட எல்லையை மேட்டை 'வரப்பு' என்பர். 'செய்வரம்பு திருத்தாரேற் றிசைவரம்பு திருந்தாதே' [2] என்ற பாடலடியின் மூலம் 'வரம்பு' என்பதே வலித்தல் விகாரமாய் 'வரப்பு' ஆயிற்று எனலாம். அவ்வரப்பிலும் நீர்ப்பாசன வசதி குறைந்த காலங்களில் இடையில் சிறிது மண் கோலி விட்டுப் பயிரிடும் நிலத்தைக் 'கட்டுத்தளை' என்பர்.

கிராமத் தொழிலாளர்கள் அவரவர்களுடைய தொழில் செய்வதற்கென அரசனால் இனாமாக அளிக்கப்பட்டு வரியில்லாமல் அனுபவித்து வந்த நிலங்கள் மானிய நிலங்களாகும். பின்னர் அந்நிலங்கள் அவர்களுக்குப் பட்டாவாக அளிக்கப்பட்டன. இன்றும் கிராமங்களில் ஊரின் நிலைக்கேற்ப இத்தகைய மானிய நிலங்கள் உள்ளன. இவற்றிற்கு இவர்கள் இப்பொழுது வரி செலுத்து கின்றனர்.

நீர்வற்றாத இளகிய கழனியை, ஈளகெயினி (ஈளைக் கழனி) ஈளபூமி (ஈளைப் பூமி), ஈளதள (ஈளைத் தளை),

---

1. சாமிநாதையர். உ. வே. [பதி] மணிமேகலை [மு. கா. நூ.] கா. 13:51, ப. 146.
2. கம்பர், 'ஏரெழுபது' (காஞ்சிபுரம் ஞானபீடம் சிலஸ்ரீ ஞானப் பிரகாசதேசிக சுவாமிகள் ஆதீன வெளியீடு, 1966) பா. 23:4, ப. 8.

ஈளபெலம் (ஈளைப் புலம்) என்றெல்லாம் கூறுவர். இவற்றில் செங்கற்பட்டு - எம். ஜி. ஆர். மாவட்டத்தில் வடக்கு வட்டப் பகுதிகளில் வழங்கப்படும் சொல் ஈளபெலம் ஆகும். பொலமு என்பது தெலுங்கு மொழியில் நிலத்தைக் குறிக்கும் சொல். நிலத்தைக் குறிக்கும் தமிழ்ச் சொல் **புலம்** என்பதாகும். எனவே, புலம் →பொலமு→ பெலம் எனவாகி வழங்கப்படுகிறது எனலாம்.

இனி, மண், நிலப்பிரிவுகள் பற்றிய **சொற்களின்** பொருள் விளக்கம் காணலாம்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
ஆனாத நெலம்	அனாதை நிலம்	ஒரு காலத்தில் ஒருவருக்கு உரிமையாயிருந்து தற்பொழுது யாருக்குரியது என்று சொல்ல இயலாததும் உரிமையுடையவர் களால் அறிய இயலாததுமாகிய ஆதரவு அற்ற நிலம்.
இறங்காடு	இளங்காடு	
கெயினி	கழனி	ஈளைக் கழனி
ஈள கெயினி	ஈளைக் கழனி	இளகிய கழனி, நீர் வற்றாத நிலம். ஒரே சாலில் சேறாகும் தன்மையுடையது; கோரைப் புற்கள் மிகுதியாக இருக்கும்; பயிர் சரியாக வளராது.
ஈள தள	ஈளைத் தளை	
ஈள பூமி	ஈளைப் பூமி	
ஈள பெலம்	ஈளைப் புலம்	
ஊரண்மநெலம்.	ஊரண்மை நிலம்	குடியிருக்கும் ஊருக்கு அருகிலுள்ள நிலம்.
ஊரோர நெலம்	ஊரோர நிலம்	
எல்ல கல்லு	எல்லைக் கல்	காணிக்கல்
எலும்பு மாட்டு நெலம்	எலும்பு மாட்டு நிலம்	இறந்த மாடுகளைப் புதைக்கும்நிலம்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
எறப் பட்ற எறப்பு பட்ற	இறைப்புப் பட்டறை	நீரிறைக்க மின் மோட்டாருடன் கூடிய நிலப்பகுதி.
எறவ நஞ்ச	இறைவை நன்செய்	நீரிறைத்துப் பயிரிடப் படும் மேட்டுக்கழனி.
ஒட்டு வரப்பு	ஒட்டு வரப்பு	வரப்பை ஒட்டிச் சேற்றால் அமைக்கப் பட்ட சிறிய மேடு.
ஒல கெயனி	உலைக் கழனி	கால் மிகுதியாகப்புதையும் நிலம்; பயிர் நன்றாக வளரும்.
ஒழ மண்ணு	உழை மண்	உப்பு மண்.
ஒட கெழனி	ஓடைக் கழனி	பள்ளக் கழனி.
கட்ட	கட்டை	விளை நிலத்திலுள்ள சிறுமேடு அல்லது வரப்பு
கட்டு தள	கட்டுத் தளை	நீர்க் கட்டுப்பாட்டுடன் பயிரிடப்படும் நிலம்.
கட்ள நெலம்	கட்டளை நிலம்	நாட்டாண்மைக்காரர் பயிர் செய்து அதிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு ஊர்ப் பொதுக் காரியத்துக்குப் பயன் படுத்தும் நிலம்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கயனி, கயினி	கழனி	நன்செய்ப் பயிர்கள் பயிரிடப்படுமிடம்.
கரம்பு	கரம்பு	குறுகிய காலம் பயிரிடப் படாமலுள்ள நிலம்.
கள்த்து மோடு	களத்து மேடு	தானியக் கதிர்கள் ஒப்படி செய்வதற்குரிய சமதரைப் பகுதியினின்றும் சிறிது மேடான நிலப்பகுதி.
களம்	களம்	தானியக் கதிர்கள் ஒப்படி செய்யப்படும் தரைமட்ட நிலப்பகுதி.
களர் பூமி	களர் பூமி	களர் நிலம்.
களர் மண்ணு	களர் மண்	உப்பு மண்.
களரு	களர் நிலம்	காண்க. களர் நிலம்.
களிப்பு கயினி	களிப்புக் கழனி	களிப்பு நிலம்.
களிப் மண்ணு	களிப்பு மண்	பசைத் தன்மையுள்ள மண்
களிவா பூமி	களிப்புப் பூமி	களிமண் நிலம்
காடு	காடு	நிலம்
காணி கல்லு	காணிக்கல்	நில எல்லையைக் குறிக்கப் பயன்படுத்தும் கருங்கல்
கீழண்ட கயனி	கீழண்டைக் கழனி	கீழ்க் கழனி
குட்ட கெயினி	குட்டைக் கழனி	மழை பொழியும் பொழுதெல்லாம் நீர் தேங்கிவிடும் நிலம். அல்லது குட்டையை விளைநிலமாக மாற்றப் பட்ட கழனி.

பேச்சு வழக்கு	**எழுத்து வழக்கு**	**பொருள்**
குளிம கொல்லி	குளிர்மைக் கொல்லை	ஈரம் தாக்குப்பிடிக்கும் மண்ணுள்ள கொல்லை.
கெயனி, கெயினி, கெழனி, கெழினி,	கழனி	காண்க. கழனி.
களர் நெலம்	களர் நிலம்	உப்பு மண் உள்ள நிலம்.
கொல்ல மோடு	கொல்லை மேடு	நீர்ப்பாசன வசதியற்ற வறண்ட புன்செய் நிலப் பகுதி.
கொல்ல, கொல்லி	கொல்லை	கொல்லை மேடு.
கோண துண்டு	கோணல் துண்டு	கோணல் வரப்பினை யுடைய நிலம்.
கோர கெழனி	கோரைக்கழனி	கோரைப் புற்கள் வளர் கழனி.
சவுட்டு நெலம் சவுர் நெலம் சவுரல் மண்ணு	சவுர் நிலம்	களர் நிலம்.
சாத்து வரப்பு	சாத்து வரப்பு	ஒட்டு வரப்பு.
சுண்ணாம்பு செட்டு கயினி	சுண்ணாம்பு செட்டுக் கழனி	களர் கழனி
சூனா வரப்பு	சூனா வரப்பு	பெரிய வரப்பு
செங்கட்டு மண்ணு	செங்காட்டு மண்	செம்மண்
செங்கந்தத்தி	செங்கந்தத்தி	செம்மண் நிலம்
செம்மண் கொல்லி	செம்மண் கொல்லை	செம்மண் கொல்லை
சேத்து கயினி	சேற்றுக் கழனி	களிமண் அதிக முடைய நிலம்.
தகிடி	தகடி	நீர் தேங்கும் பள்ளமான நிலப்பகுதி.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
தண்டுகர	தண்டுக்கரை	பெரிய வரப்பு.
தர்சு	தரிசு	நீண்டகாலம் பயிரிடப்படாமல் உள்ள நிலம்.
தள	தளை	பயிர் செய்யப்படும் நிலத்தின் ஒரு பிரிவு.
துண்டு	துண்டு	பயிர் செய்யப்படும் சிறிய நிலப்பகுதி.
தெள்ளு புழுதி	தெள்ளுப்புழுதி	மிகச் சன்னமான/ நுண்மையான மண்.
நஞ்ச நஞ்செ நஞ்சை	நன்செய்	ஏரி நீர் பாயும் நிலம்
நத்தம்	நத்தம்	மக்கள் குடியிருக்கும் பகுதி.
நமட்டு மண்ணு	நமட்டு மண்	குளிர்மைக் கொல்லை.
நாத்தங்காலு	நாற்றங்கால்	நாற்று விளைவிக்கப்படும் நிலம்.
நாவட மண்ணு	நாகட மண்	உவர் மண்.
நெலம்	நிலம்	பயிர் செய்யுமிடம்.
பட்டா	பட்டா	உரிமைப் பத்திரம்.
பட்டா நெலம்	பட்டா நிலம்	உரிமையுடன் அனுபவித்து வரும் நிலம்.
பட்ற	பட்டறை	களத்துமேடு, மின் மோட்டாருடன் கூடிய விளை நிலம்.
பள்ள கெழனி	பள்ளக் கழனி	தாழ்வான பகுதியிலுள்ள கழனி.
பள்ளகை	பள்ளக்கை	பள்ளப்பகுதி.
பாத்தி	பாத்தி	நிலத்தில் நீர் நிற்கும் பொருட்டு அமைக்கப் பட்ட சிறுவரப்புள்ள பகுதி.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பால் கெளர்	பால் களர்	பாதி களர்மண் நிலம்; விரைவில் நீர் காயும்; பயிர் ஓரளவு வளரும்.
பிஞ்சுகட்டு மண்ணு	பிஞ்சுகாட்டு மண்	மேல் பகுதி மணலாகவும் கீழ்ப்பகுதி களிப்பாகவும் இருக்கும் நிலம்.
புஞ்ச புஞ்செ புஞ்சை	புன்செய்	நீர் அதிகம் தேவைப் படாத தினைப் பயிர்கள் பயிரிடப் படும் நிலம்.
புறட	புறவடை	நீர்மின் மோட்டாருடன் கூடிய வீட்டுக் கருகிலுள்ள நிலம்.
பெருஞ்சேத்துக் கயினி	பெருஞ் சேற்றுக் கழனி	உலைக் கழனி.
பொறட	புறவடை	காண்க. புறவடை.
பொறம் போக்கு நிலம்	புறம் போக்கு நிலம்	அரசுக்குச் சொந்தமான பயிரிடப் படாத நிலம்.
	ஏரிப் புறம்போக்கு	ஏரிசார்ந்த நிலப்பகுதி.
	கிணற்றுப் புறம்போக்கு	கிணறு சார்ந்த நிலப்பகுதி.
	குளத்துப் புறம்போாக்கு	குளம்சார்ந்த நிலப்பகுதி.
	கோயில் புறம்போக்கு	கோயில் சார்ந்த நிலப் பகுதி.
	நத்தம் புறம்போக்கு	ஊர் ஓரத்துள்ள நிலப் பகுதி.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
	நன்செய்ப் புறம்போக்கு	நன்செய் நிலப்பகுதி.
	புன்செய்ப் புறம்போக்கு	புன்செய் நிலப்பகுதி.
	மேய்க்கால் புறம்போக்கு	மேய்த்தல் நிலப்பகுதி.
	வாய்க்கால் புறம்போக்கு	நீர்செல்லும் நிலப்பகுதி.
போதகர	போதகரை	மேடான வரப்பு.
மணல் கயினி	மணல் கழனி	மணல் அதிகமாயுள்ள நிலம்.
மணல் பூமி	மணல் பூமி	பார்க்க. மணல் கழனி.
மண மேறி	மணமேறி	பார்க்க. மணல் கழனி,
மணல் கொல்லி	மணல் கொல்லை	மணல் கொல்லை.
மந்தவெளி	மந்தைவெளி	மாடுகளை மந்தையாக மடக்கும் இடம்.
மானம் பாத்த பூமி	வானம் பார்த்த பூமி	மழையை நம்பிப் பயிரிடும் நிலப்பகுதி.
மானாவாரி நெலம்	வானமாரி நிலம்	வானம் பார்த்த பூமி.
மான்ய நெலம்	மானிய நிலம்	அரசனால் இனாமாக அளிக்கப்பட்ட நிலம்

அமட்டன்(அம்பட்டன்)மானியம்

ஊராமாட்டு மானியம் ஐயர் மானியம் கருமான் மானியம் குயவர் மானியம் கோவில் மானியம் தட்டான் மானியம் தச்சன் மானியம்	அவரவர்தொழிலைச் செய்து கொண்டு வருவதற்கென இனாமாக அளிக்கப்பட்ட நிலம்.

பேச்சு வழக்கு	**எழுத்து வழக்கு**	**பொருள்**
தலையாரி மானியம் தெவிடியா (தேவரடியாள்) மானியம் நாவிதன் மானியம் பஞ்சவன் மானியம் ராயர் மானியம் வண்ணான் மானியம்		அவரவர் தொழிலைச் செய்து கொண்டு வடுவதற்கென இனாமாக அளிக்கப்பட்ட நிலம்.
பட்டா மானியம்		உரிமைப் பத்திரமுடைய மானிய நிலம்.
மூல கயினி	மூலைக் கழனி	தோப்பு அல்லது சாலையின் மூலையில் உள்ள கழனி.
மேலண்ட கயினி	மேலண்டைக் கழனி	மேல் கழனி.
மொன கயனி	முனைக் கழனி	ஓரிடத்தின் முதலில் உள்ள கழனி.
மொத மடக் கயினி	முதல் மடைக் கழனி	முதல் வாய்க்காலில் முதலில் நீர் பாயும் நிலம்.
மோட்டு கயினி	மேட்டுக் கழனி	மேட்டுப் பகுதியிலுள்ள கழனி.
வண்டி தட வண்டி தடை	வண்டித்தடம்	வண்டிச் சக்கரம் சென்ற
வண்டி ஜாட வண்டி பாட்ட	வண்டிப்பாதை	தேய்ந்த நிலவழி.
வயலு	வயல்	கழனி.

வரப்பு	வரப்பு	நிலவெல்லை.
வரப்மோடு	வரப்பு மேடு	மேடான வரப்பு.
வால் வீச்சு நெலம்	வால் வீச்சு நிலம்	நீளமான வரப்பினை உடைய நிலம்.
பீடு நெலம்	பீடு நிலம் (தெ. + த)	பயிரிடாமல் கரம்பாயுள்ள நிலம்.
புட்ட வரப்பு	புட்ட வரப்பு (தெ. + த.)	பெரிய வரப்பு.
லீஸ் நெலம்	லீஸ் நிலம் (ஆ. + த.)	குத்தகைக்கு விடப்பட்ட நிலப்பகுதி.

2. நீர்ப்பாசன முறைகளும் கருவிகளும்

நிலத்திற்கு நீர் பாய்ச்சும் முறையை ஏரிப்பாசனம், கிணற்றுப் பாசனம் என இருவகையாகப் பிரிக்கலாம்.

ஏரிப்பாசனம்

ஏர்த்தொழிலாகிய பயிர்த்தொழிலே முன்னாளில் ஏற்றமான தொழிலாகக் கருதப்பட்டது. ஏர்த்தொழிலுக்காக ஏற்பட்ட நீர்நிலை 'ஏரி' என்று பெயர் பெற்றுள்ளது.[1] ஏரியினின்றும் இரண்டு, மூன்று கால்வாய்கள் மூலம் நீர் பாய்ச்சப்படுகிறது. தலைக்கால்வாய், நடுக்கால்வாய், மேட்டுக் கால்வாய் என அவை சொல்லப்படும். தலைக் கால்வாயைப் பள்ளக் கால்வாய் என்பதுமுண்டு. ஏரியிலுள்ள மதகின் மூலம் நீர் இக்கால்வாய்களுள் செலுத்தப்படுகின்றன. மதகில் இரு துளைகள் உண்டு. மேலுள்ள முதல் துளையை நாவாய்ப்படி என்பர். இத்துளையில் சொருகப்படும் மரக்கட்டையைப் பொதுவாகச் சொருகுக்கட்டை எனவும், சிறப்பாக மேல் மதகுக் கட்டை, குஞ்சலம் என்றும் கூறுவர். கீழுள்ள இரண்டாம் துளையைச் சேறுவாய்ப்படி என்பர். இத்துளையில் சொருகப்படும் கட்டையைக் கீழ் மதகுக் கட்டை, சேற்றடிக்கட்டை, சேற்றடி எனவும் கூறுவர்.

தாங்கல்

ஏரி, நீர் நிரம்பினால் கலங்கலின் வழியாக அதிகப்படியான நீர் வெளியனுப்பப்படும். இந்நீர் ஏரிக்கு அருகிலுள்ள பள்ளப்

---

1. சேதுப்பிள்ளை. ரா. பி., தமிழ் விருந்து, எட்டாம் பதிப்பு (சென்னை, பழனியப்பா பிரதர்ஸ், 1956) ப. 87.

பகுதியில் தங்கும்: இவ்வாறு சேரும் நீர் மிகக் குறைவாதலால் இந்நீர் சில மாதங்களுக்கே பாசன வசதிக்குப் பயன்படும். இம்முறையில் ஓர் ஏரி நிரம்பி வெளியேறும் நீர் தவிர வேறு வருகால் இல்லாது வந்து தங்கிய நீருள்ள இடத்தைத் தாங்கல் என்பர்.

கிணற்றுப் பாசனம்

கிணற்றிலிருந்து நீரை நிலத்திற்குப் பாய்ச்சும் முறையைக் கிணற்றுப் பாசனம் என்பர். கிணற்றுப் பாசனம், கவலை, ஏற்றம், ஆயில் என்ஜின், மின் மோட்டார் ஆகிய நான்கு முறைகளில் நடைபெறுகிறது. இவற்றைப் பின்வரும் படத்தின் வாயிலாக அறியலாம்.

நீர்ப்பாசனம்

- ஏரிப்பாசனம்
- கிணற்றுப் பாசனம்
  - கவலை
  - ஏற்றம்
    - கையேற்றம்
    - ஏற்றம்
    - தொட்டி
  - ஆயில் என்ஜின்
  - மின்மோட்டார்

கிணற்றிலிருந்து நீர் இறைக்கப் பயன்படுத்தும் கருவி களைக் கொண்டு மனிதரே இறைத்தலை, 'ஏற்றம் இறைத்தல்' என்பர்; எருதுகளின் துணையால் நீர் இறைத்தலைக் 'கவலை ஓட்டல்' என்பர்; டீசல் எண்ணெயின் உதவியால் எந்திரத்தை இயக்கி நீர் பாய்ச்சுவதை 'ஆயில் என்ஜின் மூலம் இறைத்தல்' என்பர்; மின்சாரத்தின் உதவியால் எந்திரத்தை இயக்கி நீர் பாய்ச்சுவதைப் 'பம்ப்பு செட்டு (மின் மோட்டார்) மூலம் பாசனம் செய்தல்' என்பர்.

கிணற்றுள் நீர் வற்றிவிடுங்கால் அதனுள் உறைகளை இறக்கிச் சிறுகிணறு உண்டாக்குவர். இதனைக் குள்ளக்கிணறு என்றும் பிள்ளைக் கிணறு என்றும் கூறுவர். சில கிணறுகளில் நீர் இன்மையால் மண்ணில் துளையிட்டு இரும்புக் குழாய்களை

அதனுள் செலுத்தி மின்விசையின் மூலம் நீரை வெளிக் கொணர்வர். இம்மாதிரியான கிணறுகளை 'ஆழ்துளைக் கிணறுகள்' என்பர்.

கவலை ஓட்டுதல்

கவலை ஓட்டுதலைக் 'கவலை அடித்தல்' என்பர். கவலை ஓட்டுதலில் அச்சு (கவலைச் சக்கரம்), ஆப்பு, கீழ் உருளை, மேல் உருளை (பிளேச் கட்டை) என்ற இரு உருளைகள், கவலைக்கால், கவலைச்சால், தொண்டான், தொண்டான் கயிறு, தோரணப் பலகை (பார்), தோணி, பணி முதலிய கருவிகள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

ஏற்றம்

ஏற்றத்தில் இறைக்கூடை [இறைச்சால்], ஊசிக்கல் ஏற்றக்கோல் [சால்கோல்], துலான், துலான் வடம், தோணி, சால்வளையம், துலாமரம், பளு [மண்ணுருண்டை], முக்காரக்கல், முக்காணிக் கொம்பு, படல் (மடல்), பட்டம், புட்சாணிக் கொம்பு [புள்சாட்டிக் கொம்பு] முதலிய கருவிகள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

கையேற்றத்தில் ஒருவர் அல்லது இருவரும் தொட்டியில் இருவரும் ஏற்றத்தில் இருவர் அல்லது மூவரும் செயல்படுவர்.

ஏற்றத்தின் தொன்மையும் சிறப்பும்

கவலையின் மூலம் நீர் இறைத்தலைக் காட்டிலும் ஏற்றத்தின் மூலம் நீர் இறைத்தலே தொன்மையானதாக உள்ளது.

'ஏரியு மேற்றத்தி னாலும்'[1]
என்னும் தொடரலும்,

'பாடுசிலம்பு மிசையேற்றத்
தோடு வழங்கும்'[2] என்னும் தொடராலும் ஏற்றத்தின் தொன்மையினையும் சிறப்பினையுமறியலாம்.

---

1 தொல்காப்பியம், பொருள், புறத்திணையியல், இரண்டாம் பதிப்பு. (சென்னை, கழகவெளியீடு, மார்ச் 1955) நூ. 31, நச்சினார்க்கினியர் உரை, மேற்கோள்பாடல், ப. 263

2 சாமிநாதையர். உ. வே., (பதி.) மதுரைக்காஞ்சி, பத்துப்பாட்டு, (மு. கா. நூ.) அடிகள் 90 & 91, ப. 294

நாற்றங்காலில் நாற்று விதைப்பதற்கு விதையிடும் முன் கட்டப்பட்டுள்ள நீரைத் தெளிவுத் தண்ணீர் என்றும் சீர்த் தண்ணீர் என்றும் கூறுவர். விதை சிறிது முளைத்தபின் எல்லா விதைகளும் முளைக்க மீண்டும் பாய்ச்சப்படும் நீரை முளைத் தண்ணீர் என்றும் செலத்தண்ணீர் என்றும் குளுந் தண்ணீர் என்றும் கூறுவர்.

கால்வாயிலிருந்தும் வரப்பைக் கடந்தும் நீர் மேற் கொண்டு செல்லாமல் தடைப்படுத்துதலை 'மடை கட்டல்' என்பர். நிலம் கால்வாயை விட மேடாக இருந்தால் கால் வாயில் மடைகட்டி மேட்டு நிலத்திற்கு நீர் பாய்ச்சுதலைக் 'கொண்டங்கட்டிப் பாய்ச்சுதல்' என்பர்.

மோழை

வரப்புகளின் கீழ்ப்புறம் நண்டினால் வளையுண்டாக்கப் பட்டு நீர் ஒரு நிலத்திலிருந்து மற்றொரு நிலத்திற்குச் சென்று விடும். அவ்வளையினால் நீர் வெளியேறுவதை 'மோழை' என்பர். முழைக்குக் [1] 'குகை' என்றும் முழைத்தலுக்கு[2] 'துளைத்தல்' என்றும், முழைதலுக்கு [3], நுழைத்தல்' என்றும், மோழைக்குக் [4] 'கீழாறு, மடு' என்றும் தமிழ்ப் பேரகராதி பொருள் கூறுகிறது. இவற்றால் பேச்சு வழக்கில் முழையே மோழை ஆயிற்று எனலாம். அம்மோழை, பேடு என்றும் சொல்லப்படுகிறது. [5].

1 தமிழ்ப்பேரகராதி தொ. 6, (மு. கா. நூ.), ப. 3287

2 மேற்படி, ப. 3287.

3 மேற்படி,

4 தமிழ்ப்பேரகராதி, தொ. 6, (மு. கா. நூ.), ப. 3388.

5 இரத்தினசாமி. பொ. சில வழக்குச் சொற்கள், ஆறாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை (இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், பாண்டிச்சேரி தாகூர் அரசினர் கலைக் கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு, 1972) ப. 604.

வயலில், 'மோட்டை போனால் கோட்டை போச்சு' என்பது பழமொழி. . இங்கு, மோழையே பேச்சு மொழியில் மோட்டை எனப்படுகிறது. எனவே, மோழையை அடைக்க வேண்டுவது அவசியமாகிறது. 'ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்'[2] என்னும் பழமொழியும் இங்கு அறியத் தக்கது. வரப்பை மிதித்து மோழை அடைப்பதும் மண் வெட்டியால் மண் வெட்டிப் போட்டு அடைப்பதும் உண்டு. ஒரு மண் வெட்டி கெட், மண்ணைக் 'கழு' என்பர்.

இனி, நீர்ப்பாசனம் செய்யப்படும் முறைகள், அதற்குப் பயன்படும் கருவிகள் பற்றிய சொற்களின் பொருள் விளக்கம் காணலாம்.

பேச்சு வழக்கு	**எழுத்து வழக்கு**	**பொருள்**
அச்சி	அச்சு	தோரணப் பலகையின் மையப் பகுதியில் சக்கரம் சுழல்வதற்காகப் பொருத்தப்பட்டுள்ள இரு மரக் கால்களுடன் கூடிய அமைப்பு.
அடிகாலு	அடிக்கால்	தலைக்கால்வாய்.
ஆப்பு	ஆப்பு	உருளையின் இருபுறத்திலுமுள்ள மரத்தாலோ இரும்பாலோவான முளை.
உருள	உருளை	கவலையில் பயன்படுத்தப்படும் இருவகை உருளைகள்.
நீருரள	நீருருளை	கிணற்றோரமுள்ள உருளை. கவலைபாடி கல்லில் உள்ள துளையில் பொருத்தப்பட்டுள்ள மரத்தாலான உருளை.
மேலுரள	மேலுருளை	கவலைப் பாதையின் மத்தியிலுள்ள உருளை. தொண்டான் இழுத்து வரும் கயிற்றைத் தேயாமல் பாதுகாக்கவும் இழுப்பதற்கு எளிதாகவும் இருக்கப் பயன்படுவது.

---


1 சேதுப்பிள்ளை. ரா. பி., தமிழ் இன்பம், பன்னிரண்டாம் பதிப்பு, (சென்னை, பழனியப்பா பிரதர்ஸ், 1972) ப. 25.

2 உழவுபற்றிய பழமொழிகள் பின்னிணைப்பு, 1 (அ).

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
ஊசிக்கல்லு	ஊசிக்கல்	கிணற்றின் மேற்பக்கத்தில் ஓரடிக்குள் பொருத்தப்பட்டுள்ள இரு நீண்ட கருங்கற்கள்.
ஊத்துவா	ஊற்றுவாய்	நீர் ஊறிவரும் வழி.
ஊத்து காவா	ஊற்றுக் கால்வாய்	ஆற்றில் மண்டைக் கிணற்றிலிருந்து தோண்டப்படும் கால்வாய்.
ஊற்காவா	ஊற்றுக் கால்வாய்	விதை விதைத்த பிறகு நீர் வயலில் தேங்கியிருக்காமல் நீரைவெளியேற்ற அமைக்கப்படும் சிறிய வாய்க்கால்.
ஊற்வாகா, ஊறுகால்	ஊற்று வாய்க்கால்	
எதிரண	எதிரணை	ஆற்றுக் காலிலிருந்து ஏரிக்கு நீர் செல்லும் கால்வாயில் ஏரிநீர் ஆற்றில் செல்ல விடாமல் அமைக்கப்படும் தடுப்பு.
ஏறக்கூட	இறைக்கூடை	இறைச்சால்
ஏறப்பு நீர்	இறைப்பு நீர்	நீர் நிலைகளினின்று கவலை, ஏற்றம், மின்மோட்டார், ஆயில் என்ஜின் முதலிய வற்றால் இறைக்கப்படும் நீர்.
ஏத்தம்	ஏற்றம்	கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் கருவிகளுள் ஒன்று.
ஏத்தம் எறைத்தல்	ஏற்றம் இறைத்தல்	நீர் இறைக்கும் முறைகளுள் ஒன்று. மனிதர் ஏற்றக் கோலின் முன்பின் சென்று கிணற்றிலிருந்து நீர் முகந்து வயலுக்குப் பாய்ச்சும் முறை.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
ஏத்த கெட	ஏற்றக் கெடை	புள்சாட்டிக் கொம்பு
ஏத்த கோலு	ஏற்றக் கோல்	சாலில் நீர் முகக்க சாலுடனும் துலானின் முன் முனையுடனும் இணைக்கப்பட்டுள்ள மரக்கொம்பு.
ஏத்த சால்	ஏற்றச் சால்	ஏற்றத்தின் மூலம் நீர் இறைக்கப் பயன்படும் கருவி.
ஏத்தசால்கெட	ஏற்றச் சால் கெடை	ஏற்றக்கோல்.
ஏரி	ஏரி	பரந்த நிலையில் நீர் தேங்கியிருக்குமிடம்.
ஒதமான காலு	ஒதமானக் கால்	கட்டைக்கால்
ஒரு ஏர் தண்ணி	ஓர் ஏர்த் தண்ணீர்	9 காணி நிலமும் 72 நிமிடத்திற்குள் பாய்ந்து நிரப்பும் நீரின் அளவு.
கட்டகாலு	கட்டைக் கால்	கவலையில் குத்துக்காலுடன் சாய்வாக நடப்பட்டுக் கட்டப்பட்டுள்ள மரம்.
கடப்ப	கடப்பை	ஏரியில் நீர் நிரம்பிய பின் ஆற்றுநீர் ஏரிக்கு வாராமலிருக்க ஆற்றின் ஓரத்தில் தடுக்கும் தடுப்பமைப்பு.
கடமட	கடைமடை	வாய்க்காலின் இறுதிப் பகுதியில் நீர் செல்ல விடும் வழி.
கண்மாயி	கண்வாய்	கம்வாய்.
கணறு	கிணறு	நிலத்தை வட்டமாக ஆழத் தோண்டிக் கட்டப்பட்டு நீரினைச் சேமித்து வைக்கும் நீர் நிலை.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கம்மாயி	கம்வாய்	பெரிய ஏரிகளில் மரப்பலகை உள்ள மதகினின்று நீர்வரும் வழி.
கல்லேரி	கல்லேரி	கற்கள் மிகுதியாயுள்ள ஏரி.
கலங்கலு	கலங்கல்	ஏரி நிரம்பி அதிகப்பட்ட நீர் ஏரியின் கடைப்பகுதியில் வெளியேறும் வழி
கலங்கல் விழுதல்	கலங்கல் விழுதல்	கலங்கலின் வழியாக நீர் வெளியேறுதல்.
கவல	கவலை	கவலையேற்றம்.
கவல ஓட்டல்	கவலை ஓட்டல்	கவலையேற்றத்தில் எருதுகளைப் பிணைத்து ஓட்டுதல்.
கவலகால்	கவலைக்கால்	கிணற்றுப் புறமாகச் சாய்ந்தாற் போன்று அமைந்த இரு மரக் கால்கள்.
கவல சக்கரம்	கவலைச் சக்கரம்	கவலையேற்றத்தில் பயன் படுத்தப்படும் இராட்டினம்.
கவல சாலு	கவலைச்சால்	கவலையேற்றத்தில் பயன்படுத்தும் இரும்புத் தகடு அல்லது தோலால் ஆன பாத்திரம்.
கவலசால் பட்டம்	கவலைச்சால் பட்டம்	முன்பக்கம் இணைந்த கவலைச் சாலின் பட்டையானகம்பிகள்.
கவலடிப்பவர்	கவலையடிப்பர்	கவலை ஓட்டுபவர்.
கவலபள்ள	கவலைப்பள்ளை	கவலைச் சக்கரம்.



சால் (நீர் இறைக்க உதவும் கருவி) பக். 75



தொட்டி ஏற்றம் பக். 75

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கவலபாடி	கவலைப்பாதை	கிணற்றருகில் மாடுகள் சென்றுவர உள்ள சாய்வான பாதை.
கவலபாடி கல்லு	கவலைப் பாதைக்கல்	கிணற்றின் மேற் புறத்திலுள்ள கல்பாறை.
கவலபாரி	கவலைப்பாரி	கவலைப் பாதை.
கவலபிள்ள	கவலைப் பள்ளை	பார்க்க. கவலைப் பள்ளை.
கவலயேத்தம்	கவலையேற்றம்	நீர் இறைக்கும் முறைகளுள் ஒன்று. இருமாடுகளைப் பிணைத்து ஓட்டி கிணற்றிலிருந்து நீரினை வெளிக் கொணர்ந்து நிலத்திற்குப் பாய்ச்சுதல்
கழு,] கழுவு] கயிவு]	கழு	மடைகட்ட வெட்டியெடுக்கப்பட்ட புல்லுடன் கூடிய ஒரு மண்வெட்டி கெட்டி மண்.
காத்துணை வளயம்	காதுத் துணை வளையம்	சாலின் காதுத் துணை வளையம்.
காதுகட்டு	காதுக்கட்டு	இறைக்கூடையில் பக்கக் கட்டுகளுக்குரிய பெயர்.
காது வளயம்	காது வளையம்	சாலின் காது வளையம்
காவா	கால்வாய்	வாய்க்கால்.
காவா வெட்டுதல்	கால்வாய் வெட்டுதல்	கால்வாய் வெட்டுதல்| தோண்டுதல்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கிளிகாலு	கிளிக்கால்	கிளிமூக்குப்போல் செதுக்கப்பட்ட அச்சில் உள்ள கால்,
கீரசால்	கீரச்சால்	கைச்சால்.
குஞ்சலம்	குஞ்சலம்	மேல்மதகுக்கட்டை.
குத்தாப்பு	குத்தாப்பு	குத்துக்கல் அல்லது குத்துக்காலில் மடவை இணைக்கும் ஆப்பு.
குத்துகல்லு	குத்துக்கல்	கிணற்றின் மேற்புறத்தில் நடப்பட்டிருக்கும் கருங்கல்.
குத்துகாலு	குத்துக்கால்	கிணற்றின் மேற்புறத்தில் நடப்பட்டிருக்கும் மரம்.
குத்துகொம்பு	குத்துக்கொம்பு	புள்சாட்டிக் கொம்பு.
குள்ள கெணறு	குள்ளக் கிணறு	கிணற்றின் உட்சிறு கிணறு.
குளுந்தண்ணி	குளுந்தண்ணீர்	முளைத்தண்ணீர்.
கூட்டுகாலு	கூட்டுக்கால்	நீர்த்தோப்பை.
கெணறு	கிணறு	பார்க்க. கிணறு.
கைசாலு	கைச்சால்	நீரைக் கையால் இறைக்கப் பயன் படுத்தும் கருவி.
கையேத்தம்	கையேற்றம்	நீர்நிலையினின்று கையால் நீர் இறைக்கும் முறை.
கொண்டங் கட்டல்	கொண்டங் கட்டுதல்	மேட்டு நிலத்திற்கு நீர் பாய்ச்ச வாய்க்காலில் அணை கட்டுதல்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கொண்டங் கட்டிப் பாசல்	கொண்டங் கட்டிப் பாய்ச்சல்	கொண்டங் கட்டி நீர் பாய்ச்சுதல்.
கொண்டான் போடுதல்	கொண்டான் போடுதல்	கொண்டங் கட்டுதல்.
கோடிமட	கோடி மடை	கடைமடை
சாலு	சால்	ஏற்றத்தில்நீர் இறைக்கும் பாத்திரம்.
சால்கோலு	சால்கோல்	ஏற்றக்கோல்.
சால்வடம்	சால்வடம்	துலான் வடம்,
சால் வளயம்	சால் வளையம்	சாலின் நான்கு இரும்புப் பட்டைகள் சேர்ந்த மேல் பகுதியில் உள்ள வளையம்.
சாலகம்	சாலகம்	நீர் செல்லும் மூடிய வழி.
சித்தேரி	சிற்றேரி	சிறிய ஏரி.
சீமாட்டுகல்லு	சுமைபடைக்கல்	முக்காரக் கல்லின் கீழ் உள்ளகற்கள்.
சீர்தண்ணி	சீர்த்தண்ணீர்	விதைப்புக்கு முன் பாய்ச்சப்படும் நீர்.
செலதண்ணி	செலத்தண்ணீர்	முளைத் தண்ணீர்.
சேத்தடி] சேறடி]	சேற்றடி.	சேற்றடிக் கட்டை.
சேறடிகட்ட	சேற்றடிக்கட்டை	கீழ் மதகுக் கட்டை
சொருக்கட்ட	சொருகுக்கட்டை	சொருகுக்கட்டை.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
சொருகு பலக	சொருகுப்பலகை	மதகில் பயன்படுத் தப்படும் பலகை.
டோணி	தோணி	தோணி.
தண்ணி ஊத்து	தண்ணீர் ஊற்று	நீர் ஊற்று வருதல்.
தண்ணி கசிவு	தண்ணீர்க்கசிவு	நீர் ஊறி வெளி வருதல்.
தண்ணிகட்டு	தண்ணீர்கட்டு	வயலில் பாய்ச்சிய நீர் வெளியேறாமல் மடைகளை அடைத்துவைத்தல்.
தண்ணி பாய்ச்சல்	தண்ணீர் பாய்ச்சுதல்	நிலத்திற்கு நீரைப் பாய்ச்சுதல்.
தலக்கட	தலைக்கடை	கால்வாயின் ஆரம் பப்பகுதி.
தலகட்டு	தலைக்கட்டு	காதுகட்டு.
தலகடகல்லு	தலைக்கடைக்கல்	குத்துக்கல்லின் கீழ்க்கல்
தலகாவா	தலைக்கால்வாய்	தலைக்கடை.
தலமட	தலைமடை	வாய்மடை, முதல் மடை.
தாங்கலு	தாங்கல்	குட்டை ஏரி, இயற்கையில் அமைந்த வருவாய் குறைந்த ஒருசில மாதங்களுக்குப் பாசனம் செய்ய உதவும் மிகச் சிறிய ஏரி.
தாய் கணறு	தாய்க்கிணறு	பிள்ளைக் கிணறு உள்ள கிணறு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
தூருஎடுத்தல்	தூர்எடுத்தல்	கிணற்றிலிருந்து தேவையற்ற சேற்றுமண் எடுத்தல்.
தெளி கட்டடல்	தெளிவு கட்டுதல்	சீர்த்தண்ணீர் கட்டுதல்.
தெளிவு தண்ணி	தெளிவுத் தண்ணீர்	சீர்த்தண்ணீர்.
தொக்கிடிசாலு	தொக்கடிச்சால்	கைச்சால்
தொட்டி	தொட்டி	கால்வாய், ஏரி, குட்டை, குளம் ஆகியவற்றிலிருந்து மேட்டுப் பகுதியில் நீர் இறைக்கும் முறை.
தொட்டிகட்ட	தொட்டிக் கட்டை	இறைச்சாலின் குறுக்காகச் செல்லும் கொம்பு.
தொண்டா (ன்)	தொண்டான்	தோலால் செய்யப்பட்டு கவலைச் சாலின் கீழ்ப் புறம் நீர் வெளியேறும் பகுதியில் கட்டப்பட்டிருப்பது.
தொண்டா (ன்) கவுறு	தொண்டாங் கயிறு	தொண்டானுடன் பிணைக்கப்பட்டு நுகத்தடியில் கட்டப்பட்ட கயிறு.
தொண்டா (ன்) குச்சி	தொண்டாங் குச்சி	தொண்டானையும் தொண்டாங் கயிற்றையும் இணைக்கும் பகுதியில் உள்ள குச்சி.



தொட்டி ஏற்றம் பக். 75

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
தொரவு	துரவு	பெருங்கிணறு.
தொலான்	துலான்	அடிப்பக்கம் பருத்தும் மேற் பக்கம் சிறுத்தும் உள்ள மரம் அடிப்பக்கத்தில் ஏற இறங்க மிதிப்படி இருக்கும். படலில் பொருத்தப்பட்டிருப்பது; ஏற்றத்தில் முன்பின்சென்று வர உதவுவது.
தொலாமரம்	துலாமரம்	ஏற்றுச் சாலிலிருந்து நீர் வாய்க்காலில் செல்லப் பயன்படுத்தப்படும் மரம்.
தொலான்வடம்	துலான்வடம்	ஏற்றக்கோலின் மேல் துலானின் முன் முனையில் முட்டுக் கொம்பு வைத்துக் கட்டப்படும் கயிறு அல்லது தோல்.
தோணி	தோணி	ஏற்றம் அல்லது கவலையில் நீர் இறைத்தலில் மரத்தாலோ கல் கட்டடத் தாலோ அமைக்கப்பட்ட ஒரு கால்வாய்.
தோர்ணபலவ	தோரணப் பலகை	குத்துக்கல்லில் அல்லது குத்துக் காலில் பொருத்தப் பட்டிருக்கும் மரப்பலகை.
டுகாவா	நடுக்கால்வாய்	கால்வாய்களுள் மத்தியில் இருப்பது.
நாவடகல்லு	நாவடைக்கல்	தண்ணீர் பாயும் கல்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பார்	பார்	தோரணப் பலகை.
பாலமட	பாலமடை	முதல்மடை.
பாலிதண்ணி	பாலித்தண்ணீர்	முளைத் தண்ணீர்.
பில்லுகழுவு	புல்லுக்கழு	கழு.
பில்லுபற	புல்லுப் பற்றை	கழு.
பிளேச் கட்ட	பிளாச்சுக் கட்டை	கவலைப் பாதையின் மத்தியில் உள்ள உருளைக் கட்டை/ மேலுருளை.
	புட்சாட்டிக் கொம்பு	குத்துக் கல்லுடன் இணைக்கப் பட்டிருக்கும் கொம்பு.
புட்சாணிக் கொம்பு	புள்சாட்டிக் கொம்பு	இதன் உதவியால் துலானில் முன்னோக்கியும் பின்னோக்கியும் ஏற்றம் மிதிப்பவர் செல்ல உதவும்.
புள்ளகணறு	பிள்ளைக் கிணறு	கிணற்றின் உட்சிறு கிணறு.
மட	மடை	வாய்க்காலில் நீர் மேலும் செல்லாமல் தடுக்கும் மண் தடுப்பு.
மடகட்டல்	மடைகட்டுதல்	நீர்புகும் அல்லது வெளியேறும் வழியை அடைத்தல்.
மடவபோட்டு	மடை கட்டித்	கொண்டங்கட்டிப் பாய்ச்சுதல்.
தண்ணி ஏத்தல்	தண்ணீர் ஏற்றுதல்	

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
மடமாத்துதல்	மடைமாற்றுதல்	ஒரு நிலத்திற்குப் பாய்ந்த நீரைத் தடுத்து இன்னொரு நிலத்திற்குப் பாய்ச்ச மடையினை மாற்றி அமைத்தல்.
மடல்	மடல்	படல்.
மடுவு மடு	மடு	நீர் நிலையில் உள்ள பள்ளம்.
மண்ணுர்ண்ட	மண்ணுருண்டை	துலானின் அடிப்பக்கத்திலிருக்கும் மிதியாளின் சுமையைக் குறைக்க அதன் மேல் பக்கத்தில் வைக்கோல் புரியினால் கட்டப்பட்டு வைக்கப்பட்டுள்ள பளு.
மதவு, மதுவு	மதகு	ஏரிநீர் கால்வாயில் செல்லா வண்ணம் தடுத்து நிறுத்தக் கல்லால் கட்டப்பட்ட அமைப்பு.
முக்கரகல்லு	முக்காரக்கல்	குத்துக்கல்லின் கீழுள்ளகல்.
முக்காணி முக்காணிகொம்பு	முக்காணி	ஏற்றக்கோலின் அடிப்பகுதியில் உள்ள துளையில் பொருத்தப் பட்டிருக்கும் கொம்பு.
முட்டுகாலு	முட்டுக்கால்	கட்டைக்கால்.
முட்டுகுச்சி	முட்டுக்குச்சி	தொண்டான் குச்சி.
முட்டு கொம்பு	முட்டுக்கொம்பு	சால்கோல் கயிறு துலானில் கீழ் இறங்காமல் இருக்கப் பயன்படுத்தும் கொம்பு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
மூட்டு தண்ணி	மூட்டுத் தண்ணீர்	வடிதண்ணீர்
மூணாந்தண்ணி	மூன்றாந்தண்ணீர்	செலத் தண்ணீர்.
மெரிகல்லு	மிதிகல்	ஏற்றத்தில் நீர் இறைப்பவர் நிற்பதற்குரிய நீண்ட இரு கருங் கற்கள் கிணற்றின் மேற்பக்கத்தில் மூன்றடியில் பொருத்தப்படுவன.
மேல்மதுவுகட்ட	மேல்மதகுக் கட்டை	மேல் மதகில் சொருகப் பயன் படுத்தும் கட்டை.
மொதமட	முதல்மடை	தலை மடை, வாய்மடை.
மொளதண்ணி	முளைத்தண்ணீர்	விதைகள் முளைத்தபின் மேலும் முளைக்கா விதைகள் முளைக்கப் பாய்ச்சப் படும் சிறிதளவு நீர்.
மோட்டு காவா	மேட்டுக்கால்வாய்	மேட்டுப் பகுதியில் உள்ள கால்வாய்.
மோய, மோழ	மோழை	வரப்புகளின் கீழ்ப்புறம் நீர் ஒரு நிலத்திலிருந்து அடுத்த நிலத்திற்குச் செல்லும் நண்டால் உண்டாக்கப்பட்ட வழி.
மோழ போது	மோழை போதல்	மோழை வழியாக நீர் வெளியேறுதல்.
மோழட	மோழையடை	மோழையை அடைக்கச் சொல்லல்.
மோழமெரி	மோழைமிதி	மோழையை மிதிக்கச் சொல்லல்.
வடகவுறு	வடக்கயிறு	மாடுகளைப் பிணைத்து கவலை ஓட்டுபவர் பயன் படுத்தும் கயிறு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
வடிகால்)) வடிகாவா)	வடிகால்வாய்	நீரை வடியவிடும்கால்வாய்
வடிதண்ணி	வடித்தண்ணீர்	நாற்றங்காலில் நீர்கட்டிப் பின் வடிக்கப்பட்ட தண்ணீர்.
வடிய எடு	வடிய எடு	வடிகால்வாய் வழியாக நீர் வடிக்கச் சொல்லல்.
வாமட	வாய்மடை	தலைமடை. வயலுக்குள் வருவதற்கு வரப்பை வெட்டி விடும் வழி.
வாய்க்காலு	வாய்க்கால்	ஆறு, ஏரி அல்லது கிணற்றி லிருந்து நீர் செல்ல அமைக் கும் வழி.
ஆயில் என்ஜின்	ஆயில் என்ஜின் (ஆ. + ஆ.)	எண்ணெய் இயந்திரம். நீர்நிலையினின்று நீரைக் கால்வாயில் செலுத்த டீசல் எண்ணெயின் உதவியால் இயக்கப்படும் எந்திரம்.
உத்திகட்டடல்	உத்திகட்டடல்(தெ.)	கொண்டங் கட்டுதல்.
பமப்புசெட்டு	பம்ப்செட்(ஆ.)	நீர் இழு மின் இயந்திரம்.
பொகடபோதல்	பொகட போதல் (தெ.+த.)	மோழை போதல்.
போர்கெணறு	போர்க் கிணறு (ஆ. +த.)	ஆழ்துளைக் கிணறு.

3. உழவும் உழவுக் கருவிகளும்

உழுதல்:

நீரின்றி நிலத்தை - மண்ணை உழுதலைப் 'புழுதி ஓட்டல்' என்பர். நீர் நிறைந்த சேற்று நிலத்தை உழுதலைச், 'சேடை ஓட்டல்' அல்லது 'சேடை கலக்கல்' என்பர். சேடை - சேறு + ஐ

சேடு - திரட்சி; ஐ - நுண்மை. திரட்சி கொண்ட மண்ணினை நுண்மையாக மிருது வாக்கலே சேடை கலக்குதலாம். ஓர் ஆண்டில் முதலில் உழத் தொடங்குதலைப் 'பொன்னேர் கட்டல்' அல்லது 'பொன்னேர் பூட்டல்' என்பர். பொன்னேர் பூட்டல் பற்றி,

'களமர்கள் பொன்னேர் பூட்டித் தாயர்வாய்க் கனிந்த பாடல்' [1]

என்று திருவிளையாடற் புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது.

சால்:

ஓர் ஏர் கொண்டோ பல ஏர்கள் கொண்டோ நிலத்தை

ஒரு முறை உழுதலை 'ஒருசால்' என்பர். ஒரு முறை உழுதலுக்குக் குறுக்காக மீண்டும் உழுதலை 'இரண்டாம் சால்' என்பர். உழவு செய்தலில் ஓர் ஏர் கொண்டு ஒருமுறை நீள் வட்டமாக உழுதலை 'வலப்பு' என்பர். வலப்பினுள் வரும் ஒவ்வொரு உழவும் 'ஒரு படைச்சால்' ஆகும்.

ஏர்:

ஏரைக் கலப்பை என்று சொல்வதும் உண்டு. ஏர், இலக்கியத்தல் 'மேழி' [2] என தழங்கப்படுகிறது. ஏரில் மரக்கலப்பை போசுக்கலப்பை, இரும்புக் கலப்பை என்று மூன்று வகை உண்டு. மரக்கலப்பை என்பது காறு பொருத்தப்பட்டிருப்பது. இதனைக் காறு கலப்பை அல்லது கொம்புக் கலப்பை என்பர். காறு, இலக்கியத்தில் 'கொழு' [3] எனக் குறிப்பிடப்படுகிறது. காறின் நீளம் குறைந்தால் மட்டக்கலப்பை என்பர். கொம்புக் கலப்யை புழுதியிலும் சேற்றிலும் உழ உதவும். மட்டக்கலப்பை சேற்றில் மட்டும் உழ உதவும். போசுக்கலப்பை என்பது

1 கணேச முதலியார் ப. மற்றும் அமிர்தம் சுந்தரநாதம் பிள்ளை [குறிப்புரை], திருவிளையாடற் புராணம், பாண்டித் திருநாட்டுப் படலம். [சென்னை, பூமகள் விலாச அச்சுக்கூடம், 1931] பா. 18. ப. 15.

2 'மேழியால் விளைவதல்லால் வேறொன்றால் விளையாவே' கம்பர், ஏரெழுபது, (மு. கா. நூ.) பா. 4: 4. ப. 4.

3 மன்னவர்தங் குடைவளமுங் கொழுவளமே' மேற்படி பா. 11: 3. ப. 5.

இரும்புத் தகட்டாலான படை பொருத்தப் பட்டிருப்பது. இஃது ஒரு பக்கப் போசுக்கலப்பை இரு பக்கப் போசுக் கலப்பை என இருவகைப்படும். ஒரு பக்கப் போசுக்கலப்பையாவது மண்ணை ஒரு பக்கமாகவே தள்ளுவது. இருபக்கப் போசுக்கலப்பை என்பது இருபுறமும் மண்ணைத் தள்ளுவது. மரக் கலப்பையால் நிலத்தை ஒரு முறை உழுத பின் அடுத்த சால்கள் உழ போசுக்கலப்பை பயன்படுத்தப்படும் இரும்புக் கலப்பை என்பது ஏர்க்கால் தவிர ஏரின் மற்ற எல்லா பாகங்களும் இரும்பாலானவை. இவ்வகையான ஏர், கரும்பு விளைவிப்பவருக்குத் தேவைப் படுகிறது. போசுக்கலப்பையில் உள்ள கண்ணாடிக் கட்டை நிலுவைமணை, மேல்கட்டை என்றெல்லாம் சொல்லப்படும் எதிர்க்கட்டை மரக்கலப்பையில் இல்லை.

மிளகாய், வெங்காயம் முதலிய பயிர்களுக்குப் பாத்தி கட்டுதலை 'மஞ்சி' (சிறுவரம்பு) கட்டுதல்' என்பர். கரும்புக்குப் பாத்தி கட்டுதலில் மண்வெட்டியைக் கொண்டு செய்யும் செயலைப் 'பாணி இழுத்தல்', 'கிடங்கு வெட்டுதல்,, கிடங்கு மடித்தல் என்றெல்லாங் கூறுவர். கிடங்கு வெட்டுதல் வாழை, வெற்றிலை பயிரிடு வோரிடையேயும் காணப்படுகின்றது. கிடங்கு - பள்ளம் வெட்டுதலை உண்மையில் வெற்றிலை விளை விப்போரிடத்தில் காண முடிகிறது. நிலத்திலிருந்து $2\frac{1}{2}$ அடி அல்லது 3 அடி ஆழம் மண்ணைத் தோண்டி மேட்டில் இடு தலால் 5 அல்லது 6 அடி ஆழம் உடையதாக வெற்றிலைக் கிடங்கு உள்ளது. கிடங்கின் ஆழம் கரும்பைவிட வாழைக்கு அதிகம். வாழையை விட வெற்றிலைக்கு அதிகம். மாடுகட்டி உழுது கிடங்கைஅமைத்தலை 'ஏயு ஓட்டுதல்' (ஏழிலோட்டுதல்) அல்லது ஏழிசித்தல் (ஏழிலிசித்தல்) என்பர்.


இனி, உழுதலும் உழுவதற்குரிய கருவிகளும் பற்றிய சொற் களின் பொருள் விளக்கம் காணலாம்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
அடிகட்ட	அடிக்கட்டை	அடிமணை.
அடிதிண்டு	அடித்திண்டு	ஏரின் அடிமணை.
அடிமண	அடிமணை	ஏரில் காறு பொருத்தப் பட்டுள்ள மரம்.


பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
அண்டகெழித்தல்	அண்டை கழித்தல்	அண்டை வெட்டுதல்.
அண்டவெட்டல்	அண்டைவெட்டுதல்	வரப்பினைச் சரி செய்தல்.
இரும்பு கலப்ப	இரும்புக் கலப்பை	ஏர்க்கால் தவிர மற்றெல்லா பாகங்களும் இரும்பாலான கலப்பை.
உழகவுறு	உழவுக்கயிறு	உழவுக் கயிறு.
எதிர்கட்ட	எதிர்க்கட்டை	நிலுவை மணை.
ஏயு ஓட்டுதல்	ஏழிலோட்டுதல்	மாடு கட்டி கட்டை இழுத்தல்
ஏயுசித்தல்	ஏழிலிசித்தல்	ஏரிலுள்ள மாட்டு இணைப்புச் சட்டம்.
ஏர்கூலி	ஏர்க்கூலி	உழுதலுக்குக் கொடுக்கப்படும் பணம்.
ஏர் நவுத்தடி	ஏர் நுகத்தடி	வண்டி நுகத்தடியை விடச் சிறிது பருமன் குறைந்த மரத்தாலான கருவி.
ஏர் நாழி	ஏர் நாழி	சிறிய மூங்கில் குழாய், 6 அங்குலம் முதல் 4 அங்குலம் வரைஉள்ளது. மட்டமான ஏரை உயரமான மாட்டுக்குப் பொருத்தப்பயன்படுவது.
ஏரடித்தல்	ஏரடித்தல்	ஏர் ஓட்டுதல், உழவு செய்தல்.
ஏரு	ஏர்	கலப்பை, நிலம் உழுகருவி. ஏர்க்கால், மேழி, காறு அல்லது படைஎல்லாம்சேர்ந்தது.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
ஏருகட்டல்	ஏர்கட்டல்	ஏரில் இருமாடுகளைப் பிணைத்தல்.
ஏரு பூட்டு	ஏர் பூட்டு	ஏர் கட்டச் சொல்லல்.
ஏரோட்டுதல்	ஏரோட்டுதல்	ஏரில் இரு மாடுகளைப் பிணைத்து ஓட்டுதல்.
ஒட்தள வைத்தல்) ஒடுதள வைத்தல்)	ஒட்டுத்தளை வைத்தல்	வரப்பை ஒட்டிச் சேற்றால் சிறிய மேடு அமைத்தல்.
ஒண்டி	ஒன்றி	அடித்திண்டில் காறு பொருத்தப்பட்ட இடத்திலுள்ள வளைவுக்கம்பி. ஒன்றச் செய்வதற்குரிய கருவி.
ஒரு சால்	ஒரு சால்	ஒரு நில எல்லை முழுவதையும் ஒருமுறை உழுதல்.
ஒரு மட்ட	ஒரு மட்டம்	ஒரு படைச்சால்.
ஒழ கவுறு	உழவுக் கயிறு	ஏர் நுகத்தடியிலிருந்து மேழிக் கைப்பிடியில் கட்டப்பட்டுள்ள கயிறு.
ஓரங்கெழித்தல்	ஓரங்கழித்தல்	அண்டை வெட்டுதல்.
ஓரம்புடிச்சுஓட்டு	ஓரம் பிடித்தோட்டு	ஏரை வரப்பு ஓரம் பிடித்தோட்டச் சொல்லல்.
கட்சு	கடிசு	மாட்டைப் பூட்டுவதற்குப் பொருத்தமில்லாத ஏர்.
கட்சுகலப்ப	கடிசுக்கலப்பை	கலப்பையில் காறு நிலத்தில் ஊன்றாமல் குத்தும் தன்மைஉடையதாயிருப்பது.


பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கட்ட இழுத்தல்	கட்டையிழுத்தல்	விதைக் கரும்பு நடுவதற்கும் முள்ளங்கி, வெண்டை முதலியவற்றின் விதைகள் நடுதலுக்கும் சிறிய மேடு அமைத்தல்.
கட்ட கலப்ப	கட்டைக் கலப்பை	மரக் கலப்பையில் காறு நீளத்தில் தேய்ந்திருப்பது.
கட்டி மரம்	கட்டி மரம்	புழுதியில் மண்ணை உடைக்க உதவும் மரம். கொடிஞ்சில்.
கண்ணாடிகட்ட	கண்ணாடிக் கட்டை	நிலுவைமணை
கருஞ்சேட	கருஞ்சேடை	கரம்பு நிலத்தில் நீர் பாய்த்து உழுதலைக் குறிப்பது.
கலப்ப	கலப்பை	உழவு செய்ய உதவும் கருவி.
களங்க ஒட்டுதல்	களங்க ஒட்டுதல்	சேடையில் மண் இறுது வாக்க ஒட்டுதல்,
காறு	காறு	ஏரின் அடிமனையில் பொருத்தப்பட்ட பருமனான இரும்பாணி. கொழு.
காறு கலப்ப	காறு கலப்பை	மரக் கலப்பை. ஏரின் அடித் திண்டும் காறும் நீண்டிருப்பது
காறுதிண்டு	காறு திண்டு	ஏரில் காறு பொருத்தப் பட்டுள்ள
கிழகட்ட	கீழ்க்கட்டை	மேழியைக்கலப்பையுடன் இணைக்கும் கட்டை.




காறு கலப்பை   பக். 92



இரட்டைக் காறு கலப்பை   பக். 92



இரு பக்கப் போசுக் கலப்பை பக். 93



பரம்புப் பலகை பக். 100

பேச்சு வழக்கு	எழுந்து வழக்கு	பொருள்
குழிவெட்டுதல்	குழிவெட்டுதல்	சவுக்கு, தென்னையில் கன்றுநட தனித்தனியாகப் பள்ளம் தோண்டுதல்.
குறுக்கு சால்	குறுக்குச் சால்	முதலில் உழவு செய்யப் பட்டதிசைக்குக் குறுக்காக மறு உழவு செய்தல்.
கூலிஏரு	கூலிஏர்	கூலிக்கு உழும் ஏர்
கெடங்கு	கிடங்கு	சிறிய மண்மேடுகளுக்கு இடையேயுள்ள பள்ளம்.
கெடக்குஇழுத்தல்	கிடங்கிழுத்தல்	கிடங்கு அமைத்தல்.
கெடங்கு கொத்தல்	கிடங்கு கொத்தல்	
கெடங்கு மடித்தல்	கிடங்கு மடித்தல்	
கெடங்கு வெட்டுதல்	கிடங்கு வெட்டுதல்	
கைகவுறு	கைக்கயிறு	தும்பு.
கொடிஞில் கொடிஞ்ஞில்	கொடிஞ்சில்	புழுதியில் விதை விதைத்த மண்ணை நிரப்பவும் களையகற்றவும் ஆற்றுக் கால் தோண்டவும் உதவும் இரும்புத் தகடு; 3 அடி நீளம் $1\frac{1}{2}$ அடி அகலமுடையது.
கொம்பு கலப்ப	கொம்புக் கலப்பை	மரக்கலப்பை.
கோலிவுடுதல்	கோலிவிடுதல்	நிலத்திற்குள் வாய்க்கால் கரை போல் சிறுமேடு அமைத்தல்.
சக்கர கலப்ப	சக்கரக் கலப்பை	பட்லர்.
சதுரம் ஓட்டுதல்	சதுரம் ஓட்டுதல்	பரம்புஓட்டுதல். இப்பரம்பு 9 அடி நீளமும் $1\frac{1}{2}$ அடி அகலமும் உடையது.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
சாலு	சால்	நிலத்தை உழுதல்.
சிறுங் கலப்ப	சிறுங் கலப்பை	கட்டைக் கலப்பை.
சுள்ளாணி	சுள்ளாணி	ஏரில் மேழியை அடித் திண்டுடன் இணைக்கு மிடத்தில் உள்ள ஆப்பு.
சுள்ளாப்பு	சுள்ளாப்பு	சுள்ளாணி.
செக்கமரம்	சக்கைமரம்	கொடிஞ்சில்.
செத்தஆளமா உழு	சற்று ஆழமாகஉழு	சிறுது ஆழமாக உழச் சொல்லுதல்.
சேட	சேடை	உழவுக்கு நீர் கட்டப்பட்ட வயல்.
சேடஒட்டடல்	சேடைஒட்டடல்)	நிலத்தில் நீர்கட்டி
சேட கலக்கல்	சேடைகலக்கல்)	மண்ணைச் சேறாக்க உழுதல்.
சேட பாய்தல்	சேடை பாய்தல்	வயலில் நீர் பாய்தல்.
சேத்துமரம்	சேற்று மரம்	பரம்புப் பலகை.
சொக்கட்டான் ஓட்டுதல்	சொக்கட்டான் ஓட்டுதல்	சொக்கட்டான் விளையாட்டில் கிழிக்கப் படும் கோடு போல் உழுதல்.
தண்டுசு	தண்டுசு	ஏர்க்கால் தாழ்வாக இருப்பது; சிறிய மாடு களுக்கு உரியது.
தும்பு	தும்பு	மாடு கட்டுங் கயிறு.
தெள்ளுபுழுதியா ஓட்டடல்	தெள்ளுப் புழுதியாக ஓட்டுதல்	மேல் ஈரம் காய / உலர உழுதல்.
தொடக் கவுறு	தொடக் கயிறு	ஏரின் வாரணக் கயிற்றி லிருந்து கைப்பிடியுடன் சேர்த்துக் கட்டப்பட்டுள்ள கயிறு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
நாட்டு கலப்ப	நாட்டுக் கலப்பை	மரக் கலப்பை அல்லது காறு கலப்பை.
நிலுவமண	நிலுவை மணை	மேழிக்கு எதிரில் அடி மணையில் பொருத்தப் பட்டுள்ள கட்டை.
நெரவு	நிரவு	சமன் செய்தல்.
பட்டம்	பட்டம்	வெற்றிலைத் தோட்டத்தில் கிடங்கருகில் உள்ள மேட்டின் அகலப் பரப்பு.
பட்லர்	பட்லர்	சேறைக் கூழாக்கும் கருவி.
பட	படை	காறு. பட்டையான கெட்டி இரும்புத் தகட்டால் ஆனது.
படசால்	படைச்சால்	வலப்பினுள் வரும் ஓர் உழவு.
படபாத்தி	படைப்பாத்தி	ஏரின் அடிமணை.
படலோட்டுதல்	படலோட்டுதல்	கொடிஞ்சில் போல் மிலாறினால் செய்து ஓட்டுதல்.
பாணி இழுத்தல்	பாணியிழுத்தல்	மண்வெட்டியால் கரை மடித்தல்.
பார் அணைத்தல்	பார் அணைத்தல்	கட்டை / மேட்டை அணைத்தல்.
பின்னேர்	பின்னேர்	ஓர் ஏரின் பின் செல்லும் ஏர்.
புடியாப்பு	பிடியாப்பு	மேழியிலுள்ள கைப்பிடி.
புயுதி ஓட்டல்	புழுதிஓட்டல்	நீர் இல்லாமல் நிலத்தை உழுதல்.
புறமோழி	புறமேழி	பொத்தாறு இல்லாமல் பயன்படுத்தப்படும் மேழி. தற்காலத்தில் அதிகம் பயன்படுத்துவது.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பெரம்பு	பரம்பு	உழுத கழனியைச் சமப் படுத்தும் பரப்பான 7 அடி நீளமுள்ள பலகை.
பெரம்பு கொல்சு	பரம்புக் கொலுசு	பரம்புப் பலகையுடன் பொருத்தப்பட்டுள்ள இரும்புச் சங்கிலி.
பெரம்புச் சங்லி	பரம்புச் சங்கிலி	
பெரம்பு சட்டம்	பரம்புச் சட்டம்	பரம்புப் பலகையுடன் பொருத்தப்பட்டுள்ள இரும்புச் சட்டம்.
பெரம்ப்பலக	பரம்புப் பலகை	ஏரில் இணைக்கப்பட்ட மரப்பலகை.
பெரம்பு புள்ளு	பரம்புப் புள்	பரம்பின் கைப்பிடி.
பெரம்பு மோயி	பரம்பு மேழி	பரம்பின் கைப்பிடி.
பெரம்போட்டல்	பரம்போட்டல்	உழவு செய்யப்பட்ட நிலத்தைச் சமப்படுத்தும் செயல்.
பெருங் கலப்ப	பெருங் கலப்பை	மரக் கலப்பை.
பொட்லர்	பட்லர்	பார்க்க. பட்லர்.
பொத்தாறு கலப்ப	பொத்தாறு கலப்பை	கலப்பையையும் மேழியையும் இணைக்கும் மரத் துண்டு. தற் காலத்தில் இவ்வகை அதிகம் இல்லை.
பொன்னேர் கட்டல்	பொன்னேர் கட்டல்	நிலத்தை முதன் முதலாக ஓர் ஆண்டில் உழத் தொடங்குதல்.
போத கட்டுதல்	போதி கட்டுதல்	சதுரப்பாத்தி அமைத்தல்.
போஸ் கலப்ப	போசுக் கலப்பை	சேற்றிலும் புழுதியிலும் அதிகமாக ஓட்டப் பயன் படும் ஏர்; காறு பட்டையாயிருக்கும்.
ஒரு பக்கப் போசுக் கலப்பை		ஒரு பக்கமாக மண்ணைத் தள்ளும் போசுக் கலப்பை.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
	இருபக்கப் போசுக் கலப்பை	இருபுறமும் மண்ணைத் தள்ளும் போசுக் கலப்பை,
மஞ்சி ஒட்டுதல்	மஞ்சி ஒட்டுதல்	பயிர்களுக்கிடையேயுள்ள கால்வாய்களுள் ஏர் ஒட்டுதல்.
மஞ்சி கட்டுதல்	மஞ்சி கட்டுதல்	பாத்தி அமைத்தல்.
மஞ்சிகலப்ப	மஞ்சிக்கலப்பை	மஞ்சி ஒட்டலுக்குப் பயன் படும்கலப்பை. காறுசிறிது பட்டையாகவும் படை பருமனாகவும் அகல மாகவும் இருக்கும்.
மஞ்சி நுவத்தடி	மஞ்சி நுகத்தடி	மற்ற நுகத்தடிகளை விட நீளத்தில் பெரியது. கரும்பு, மிளகாய், கத்தரி, வெண்டை பயிரிடப்படுவதில் பயன் படுத்தும் கருவி.
மடக்கி உழு	மடக்கி உழு	குறுக்குச் சால் ஒட்டுதல்.
மண்ண கசக்கு	மண்ணைக்கசக்கு	சேடையில் நன்கு உழுதலைக் குறிப்பது.
மரக்கலப்ப	மரக்கலப்பை	காறு தவிர மற்றவை மரத்தாலான ஏர்.
முன்னேர்	முன்னேர்	பல ஏர்களில் முன் செல்லும் ஏர்.
மேல்கட்ட	மேல்கட்டை	நிலுவை மணை.
மொதசாலு	முதல்சால்	முதலாகச் செய்யப்படும் உழவு.
மோயி, மோழி	மேழி	கலப்பையில் கைப்பிடி பொருத்தப்பட்டுள்ள மரத் தாலான பகுதி.
மோயிகைப்புடி	மேழிக் கைப்பிடி	ஏர் உழுதலில் பிடிப்புக்காக மேழியில் பொருத்தப் பட்டுள்ள கைப்பிடி.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
ரெட்டகாறு கலப்ப	இரட்டைக்காறு கலப்பை	உழுதலுக்குப் பயன் படுத்தும் கருவிகளில் ஒன்று.
ரெண்டாஞ்சாலு	இரண்டாம் சால்	ஒரு நிலத்தை இரண்டாம் முறையாக உழுதல்.
வரப்புகெழித்தல்	வரப்பு கழித்தல்	வரப்பினைச் சரி செய்தல்.
வலப்பு	வலப்பு	ஏர் கொண்டு உழவு செய் தலில் ஒரு முறை நீள் வட்டமாக வருதல்.
வார்ணகவுறு	வாரணக்கயிறு	உழவுக் கயிறு.
வேளாண்ம	வேளாண்மை	உழவுத் தொழில். பயிர்த் தொழில்.
றெக்க கலப்ப	இறக்கைக் கலப்பை	இருபக்கப்போகுக் கலப்பை
ட்ரேக்டர்	டிரேக்டர் (அ)	நிலம் உழு இயந்திரம். சேடைக்கும் கேஜ் வீல் மாட்டியும் புழுதியில் அது இல்லாமலும் உழவு செய்ய உதவும். புணையுங்கால் ஓட்டலில் கலப்பையைக் கழற்றிவிட்டு உபயோகிக்க உதவுவது.
பவர்டில்லர்	பவர் டில்லர் [ஆ]	சிறிய டிரேக்டர். நிலம்உழு சிறு இயந்திரம். சேடை ஓட்ட அதிகம் பயன் படுவது.

4 பயிர்ப் பருவங்களும் பயிரிடுதலும்

பட்டம்

விவசாயம் செய்யப்படும் காலம், சம்பாப்பட்டம், நவரைப்பட்டம், சொர்ணவாரிப் பட்டம் எனப்படுகிறது, இவை நெல்லின் பெயரால் வழங்கும் பட்டங்களாகும். இப் பட்டங்களில் சம்பா, நவரை, சொர்ணவாரி என்பன நெல்லின் பெயர்களாகும். பட்டங்களை முதல் கார், நவரை,

கோடை என்றும், சம்பா, மடிப்பு, சொர்ணவாரி என்றும் பிரிக்கின்றனர். இன்னும் சிலர் காலங்களின் பெயரால், ஆடிப் பட்டம், தைப்பட்டம், சித்திரைப்பட்டம் எனவும் பிரித்து வழங்குகின்றனர். இங்கு பட்டம் என்பது நெல் பயிரிடும் பருவமாகும். தமிழக மக்களின் முக்கிய உணவுநெல்லினின்றும் உற்பத்தியாகும் அரிசியாதலால் நெல் விதைத்து நாற்று நட்டுப் பயிரிடுதல், அதற்குரிய காலம் ஆகியவற்றை ஒட்டிப் பெரும் பாலும் நெல்லின் பெயரினால் அல்லது அந்நெல் சிறப்பாகப் பயிராகும் காலத்தையொட்டி காலத்தின் பெயரால் பட்டங்கள் வழங்கப்படுகின்றன. சம்பா, பொன்னி, கிச்சலிச் சம்பா முதலிய நெற்கள் பயிரிடப்படும் ஆடிப்பட்டத்தைக் 'காலா வதிப்பட்டம்' என்று சொல்வதுமுண்டு. திருத்தணி வட்டத் தில் கோடைப்பட்டத்தில் பயிரிடப்படும் புன்செய்ப் பயிர் களையொட்டி அதனைப் 'பூவாசிப்பட்டம்' என்கின்றனர். இவ்வாறு குறிப்பிட்ட பருவத்தில் குறிப்பிட்ட பயிர்களே பயிரிடப்படுகின்றன.

'பருவத்தே பயிர் செய்' என்னும் ஔவையின் செவ்வை வாக்கு இதனைத் தெளிவுறுத்தும். பண்டைக் காலத்தில் பலவகையான நெற்களின் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்காலத்தில் பல புதிய இரக நெற்களின் பெயர்கள் வழக் கிலுள்ளன.

போகம்

ஓர் ஆண்டில் மூன்று முறைகளே ஒரு நிலத்தில் பயிர் செய்கின்றனர். ஒரு முறை பயிர் செய்தலைப் போகம் என்றும் சில வட்டங்களில் கந்தாயம் என்றும் வழங்கக் காணலாம். பயிரிட்டு அறுவடை செய்து பயன் பெறுவதால் ஏற்படும் மகிழ்ச்சியால் போகமென்றும் கந்தாய மென்றும் வழங்குகின்ற னர். எந்த நெற்பயிரும் மூன்று மாதத்திற்குள் விளைவதில்லை ஒரு முறை பயிர் செய்து அடுத்த முறை பயிர் செய்வற்குரிய செயல்கள் செய்ய வேண்டிய காலத்தையும் சேர்த்துக் கணக் கிட்டுப் பார்த்தால் ஓர் ஆண்டில் மூன்று முறைக்கு மேல் பயிரிட இயலாது எனவறியலாம். நீண்ட நாள் (ஐந்து மாதப் பயிர்) பயிராயின் இரு போகமே விளைவிக்க இயலும். மழை நீரையே நம்பிப் பயிர் செய்யும் நிலமாயின் ஒரு போகமே விளைவிக்க இயலும். மழை பொழியா விட்டால் அதுவும் செய்ய இயலாது என்பது யாவரும் அறிந்ததே.

தாளடி

ஒரு போகம் செய்தபின் கால இடைவெளியின்றி இரண்டாம் முறையாக அந்நிலத்தில் பயிர் விளைத்தலைத் 'தாளடி' என்பர். அஃதாவது அறுவடை செய்யப்பட்ட நெல்தாள்களின் அடி மச்கி போவதற்கு முன், அறுத்து உடனே உழுது பயிர் செய்தலைத் 'தாளடிப்பயிர்' அல்லது 'தாளடி' என்பர்.

விதைப்பாடு

அறுவடை செய்யப்பட்ட நிலத்தை உழுது சிறிது காலம் மண்ணை உலர வைக்க வேண்டும். அவ்வாறு உலரவைக்க வேண்டுதலின் அவசியத்தை, 'தொடிப்புழுதி கஃசாவுணக்கிற் பிடித்தெருவும் வேண்டாது சாலப்படும்' [1] என்னும் குறளில் வள்ளுவர் தெளிவு படுத்தியுள்ளார்.

புழுதியிலோ சேற்றிலோ மூன்று முதல் ஐந்து சால் ஓட்டி நிலத்தில் விதைகளை விதைப்பார்கள். நீர்ப்பாசனம் செய்து விதைத்தபடியே பயிர் விளைத்தலை 'வெரப்பாடு' [விதைப்பாடு] எனவும், நாற்று நட்டு பயிர் விளைத்தலை 'நடுவு' எனவும் கூறுவர். நீரின்றிப் புழுதி நிலத்தில் விதைத்துப் பயிரிடுதலைப் 'புழுதிக்கால் பயிர்' என்பர். சேற்று நிலத்தில் விதைத்துப் பயிரிடுதலைச் 'சேத்துப் பயிர்' [சேற்றுப் பயிர்] எனவும் கூறுவர். புழுதியில் கையாலோ கொரு கலப்பையாலோ விதைப்பர் கழனியில் கையால் மட்டும் விதைப்பர். விதைத்துப் பதினைந்து நாளில் பயிர் பச்சை கட்டியிருக்கும்.

கைப்பாங்கு

நாற்றங்காலிலிருந்து நாற்றினைப் பிடுங்கி எடுத்தலை 'நாத்தெடுத்தல்' என்பர். நாற்று நடுதலை 'நடுவு' எனவும் 'நடவு' எனவும் கூறுவர். நாற்றுகளை இரு கையாலும் பிடுங்குவர். ஒரு கையால் பிடுங்கப்பட்டது ஒரு கைப்பங்கு, இஃது இலக்கியத்தில் 'கைப்பாங்கு' [2] எனப்படுகிறது.

---

1 பரிமலேழகர் [உரை], திருக்குறள், [மு. கா. நூ] குறள். 1037 ப 428.

2 '.......................... செழுஞ்சாலி நன்னாற்றைக் கைப்பாங்கு பகுந்து நடக் கற்றாரே கற்றாரே'-கம்பர். ஏரெழுபது' [மு, கா. நூ.], பா. 34. ப. 10.

இதனைச்செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்.மாவட்டத்தில் 'கப்பாங்கு' என்கின்றனர். எனவே கைப்பங்கு, கைப்பாங்காகி மேலும் கப்பாங்கு என ஆயிற்று எனலாம். வட்டத்தின் வழக்காற்றிற் கிணங்க மூன்று அல்லது நான்கு கப்பாங்குகள் ஒன்று சேர்த்துக் கட்டப்பட்டதை 'ஒரு முடிச்சு' என்பர். ஓர் ஏக்கருக்கு 600 முடிச்சுத் தேவைப்படும் என்பர். தொளும்ப என்று சேறொடு வரும் நாற்றைக் கூறுவர். தொளி[1] என்பது சேற்றைக் குறிக்கும். இதனால் தொளியொடு வரும் நாற்று தொளிம்பை ஆகிறது. தொளிம்பை, தொளும்ப என வழங்கப்படுகிறது எனலாம்.

விதைகளைப் பதப்படுத்தல்

நிலத்தில் விதைகளை விதைப்பதற்கு ஐந்து காய்ச்சல் போடுவர். அஃதாவது ஐந்து முறை விதைகளை வெயிலில் காய - உலர வைப்பர். புழுதியில் விதைக்க விதைகளை ஊற வைக்கமாட்டார்கள். புழுதியில் ஓர் ஏக்கருக்கு ஐந்து மரக்கால் விதைகளை விதைப்பர். சேற்றுப் பயிருக்கு ஓர் ஏக்கருக்கு எட்டு மரக்கால் அளவு நாற்று விடுவார்கள். விதைகளை மூன்று நாள்கள்மூட்டைகட்டி [இரண்டு இரவும் மூன்றுபகலும்] ஊறவைப்பர். இரவில் நீரினை வடித்தும் பகலில் நீரில் இருக்குமாறும் ஊறவைப்பர். ஒரு நாள் ஊறியதற்கு ஒரு கோப்பு என்பர். இவ்வாறு மூன்றாங்கோப்பு முடிந்ததும் நிலத்தில் நாற்றுவிட கையால் மட்டும் விதைப்பார்கள்.

கரும்பு

விதைக் கரும்பைக் கரணை என்பர். விதைக் கரும்பு விளை விக்கப்படும் நிலம், 'விதை நாற்றங்கால்' எனப்படும். விதைக் கரும்பு என்பது ஐந்தாறு மாதம் வளர்ந்த கரும்பாகும். அதனை இரண்டு அல்லது மூன்று கணுக்கள் உள்ளவாறு துண்டித்துக் கிடங்கினுள் வைத்து மண்மூடி நீர்பாய்ச்சி வளர்ப் பார்கள். விதைக் கரும்பு இரண்டு கணுக்கள் உடையதாயின் முப்பதாயிரமும் மூன்று கணுக்கள் உடையதாயின் இருபதாயிர மிம் ஓர் ஏக்கருக்குத் தேவைப்படும் என்பர். மூன்று மாதம்

---

1 மதுரைத் தமிழ்ப் பேரகராதி, முதல் பாகம், இரண்டாம் பதிப்பு, [சென்னை, இ. மா. கோபால கிருஷ்ணக்கோன் வெளியிட்டது, 1056], ப. 1224.

ஆனதும் கிடங்கினருகிலுள்ள மண்ணைக் கிடங்கினுள் தள்ளி உரமிட்டு கரும்பின் வேர்ப்பகுதியை அணைப்பர். கிடங்கினுள்ளிருந்து பயிர் முளைத்து வருவதாயின் விதைக் கரும்பிலிருந்து கரும்பு விளைவிக்கப்படுகின்றது எனவறியலாம். இது கரும்பு விளைத்தலில் முதல் முறையாகும். இரண்டாம் முறையாகக் கரும்பு விளைத்தலாயின் வெட்டப்பட்ட கரும்பு நிலத்தின் கட்டை - மேட்டுப் பகுதியினின்றே கரும்பு முளைத்து வருவதினின்றறியலாம். இதனை மறுதாம்பு என்பர். மூன்றாம் முறையாகவும் சிலர் அங்கீகாரம் இன்றி முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்ட விதைக் கரும்பைக் கொண்டே விளைத்தலுண்டு. அதில் சருக்கரை அதிகம் இருக்காது. இதனாலேயே மூன்றாம் முறையாக ஒரே விதைக்கரும்பைக் கொண்டு விளைத்தல் தவிர்க்கப்படுகிறது.

சனி மூலை

ஏர் உழுதல், நாற்று நடுதல், அறுவடை செய்தல் முதலான முக்கிய தொழிகள் அனைத்தும் செய்யும் திசை வடகிழக்காகும். இதனைச் சனிமூலை அல்லது ஈசான மூலை என்பர்.

நிலத்தைப் பயிரிடும் முறை

- நிலம் பயிரிடுதல்
  - விளைத்தல் [சொந்தபாடு]
  - விளைவித்தல்
    - வாரம்
      - நிலம்
      - தண்ணீர்
      - சத்துவம்
      - பயிர்
    - குத்தகை

நிலத்துக்குரியவர் பயிர் விளைத்தலுக்காகக் கூலிக்கு ஆட்களை வைத்து வேலை வாங்கிக்கொண்டு உழவுத் தொடர்பான எல்லா வேலைகளையும் தாமே முன்னின்று செய்வது சொந்த பாடாம்.

வாரம்

வாரத்தில் மூன்றுவகை உண்டு. நிலத்திற்குரியவரும் பயிரிடுபவரும் பயிர் செய்தலுக்குரிய செலவைச் சமமாக ஏற்று சமவிளைவு பெறுதல் ஒரு வகை. இவ்வகையில் நிலத்துக் குரியவர் பெறும் விளைவு நிலத்து வாரம்; பயிரிட்டவர் பெறும் விளைவு பயிர்வாரம். புயலென்னும் வாரி வளம் குன்றியக்கால் உழவர் உழவு செய்ய இயலாதாகையால் தண்ணீர் கொடுப்பவருக்கு ஒரு பாகமாக விளைவை மூன்று பங்காக்கிப் பெறுவது இன்னொரு வகை. இவ்வகையில் தண்ணீர் கொடுத்தவர் பெறும் விளைவு தண்ணீர் வாரம். நிலத்துக்காரர், பயிரிடுபவர் ஆகிய இருவரில் யார் உரத்திற் காக முன்பணம் அளித்தார்களோ அவர்களுக்கு ஒரு பங்காகத் தண்ணீர்ப்பங்குடன் விளைவை நான்கு பங்காக்கிப் பெறுவது பிறிதொரு வகை. இவ்வகை வாரம் சத்துவ(உரம்) வாரமாகும். வாரம் பயிரிடும் முறையில் நிலத்துக்குரியவர் ஒரு குறிப்பிட்ட நிலத்தைப் பயிரிட்டுத் தருமாறு பயிர் செய்பவரிடம் ஒப்பந்தம் எழுதிப் பெறுவது வாரமுச்சலிக்கை ஆகும்.

நிலத்திற்குரியவர் பயிரிடப்படும் தன்நிலத்தில் பிறர் செய்யும் வேலைகளை மேற்பார்வை செய்தலை மராமத்து என்பர். ஆனால் புதுவை மாவட்டத்தில் மராமத்து[1] என்பது நிலத்தில் பயிரிடப்படாத நாட்களில் செய்யப்படும் வேலையைக் குறிக்கிறது.

நிலத்தில் பயிர் செய்தலில் பிறிதொரு முறை குத்தகை யாகும். குத்தகை என்பது நிலத்திற்குரியவர் பயிரிடுபவரிடம் குறிப்பிட்ட காலத்திற்கு ஆண்டொன்றுக்கு ஏக்கருக்கு இத்தனை மூட்டை நெல் அல்லது அவற்றிற்குரிய ரூபாய் அளித்தல் வேண்டும் என்ற முறையில் எழுதிப் பெறுவதாம். வாரம், குத்தகை ஆகிய இவ்விரண்டும் நிலத்திற்குரியவர் பயிரிடும் உரிமையைப் பயிரிடுபவருக்களிப்பன.

அடைமானம் அல்லது போக்கியம் என்பது விவசாயி, செல்வம் படைத்தவனுக்குத் தன் நிலத்துரிமையை அளிப்பது.

---

1. முருகேசன். மு. விவசாயத்தொழில் கலைச்சொற்கள்-ஓர் ஒப்பாய்வு. மொழியியல், அகத்தியலிங்கம் மற்றும் பலர் (பதிப்பாசிரியர்கள்) (அனைத்திந்தியத் தமிழ் மொழி யியல் கழகத்தின் காலாண்டு இதழ் 1985).

அஃதாவது பயிர்த் தொழிலையே நம்பியுள்ள விவசாயி குறிப்பிட்ட ஒரு நிலப்பகுதியைப் பணம் கொடுத்தவருக்கு அடகு வைத்து ஆண்டுக்கு இவ்வளவு நெல் அல்லது ரூபாய் தருவதாக எழுதிக் கொடுத்து விட்டுத் தானே நிலத்தைப் பயிரிடுதலைப் போக்கியம் அல்லது ஈடுகாட்டி அடைமானம் என்பர். இதனை, 'ஒத்திநிலம்' என்றும் சிறுபான்மையினர் கூறுவர். நிலத்தைப் பயிரிட்டுக் கொள்ளும் உரிமையைப் பணம் கொடுத்தவருக்கே எழுதிக் கொடுப்பது சுத்தபோக்கியம் அல்லது சுவாதீன அடைமானம் எனப்படும்,

நெல்லும் கரும்புமே ஒரு நிலத்தின் அழகையும் வளப்பத்தையும் தெரிவிப்பன வாகையால் அவ்விரு பயிர்கள் பற்றிய சொற்களே பயிர்ப்பருவங்களும் பயிரிடுதலும் என்ற இத் தலைப்பில்சொல்லப்பட்டுள்ளன. அவற்றை இனிக்காண்போம்.


பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
அக்னி மூல	அக்கினி மூலை	தென்கிழக்குத் திசை.
அஞ்சி காசலு) அஞ்சி காச்சலு)	ஐந்து காய்ச்சல்	விதைநெல் ஐந்து காய்ச்சல் போடப்படுதல்.
அடமானம்	அடைமானம்	ஈடுகாட்டி அடைமானம்
அடிச்சி கூட்டு	அடித்துக் கட்டு	அலைத்துக்கட்டு.
அணிக்காலு	அணிக்கால்	நாற்றின் வேர்.
அமானிய நடவு	அமானிய நடுவு	நாற்றுகள் அதிக இடைவெளியுடன் நடப்பட்டிருத்தல்.
அமிஞ்சி நடவு	அமிஞ்சி நடுவு	ஒழுங்கில்லாத நடுவு.
அலச்சி கட்டு	அலைத்துக்கட்டு	பிடுங்கிய நாற்றில்சேறு இல்லாமலிருக்கச் செய்யச்சொல்லும்சொல்.
அவரகாணி	அவரக்காணி	புழுதி ஓட்டி வைத்திருந்து மழை பெய்தால் உடனே விதைத்து மேல் படுபரம்பு ஓட்டிப் பயிரிடுதல்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
அன்னம் புடித்தல்	அன்னம் பிடித்தல்	கதிரில் பால் பிடித்தல்.
ஆடிபட்டம்	ஆடிப்பட்டம்	சம்பாப்பட்டம், ஆண்டில் முதல் பட்டம்.
இஞக்கு நடவு	இணுக்கு நடுவு	நடுவு செய்யப்படும் முறைகளுள் ஒன்று. நாற்றுமுடிச்சியிலிருந்து நாற்றுகளை இரண்டு மூன்றாகப் பிரித்தெடுத்து நடுதல்.
ஈசான மூல	ஈசானிய மூலை	சனிமூலை. உழவு, நாற்று நடுதல், அறுவடை முதலியன நிலத்தில் செய்யத் தொடங்கும் திசை.
ஈடுகாட்டி அடமானம்	ஈடுகாட்டி அடைமானம்	நிலத்தை அடகு வைத்துவிட்டு நிலத்திற்குரியவரே பயிரிட்டு வட்டியோ விளை பொருளோ கொடுத்துவிட்டு அனுபவித்து வருதல்.
உண்ட வெட்டி போடுதல்	உள்ளதை வெட்டிப் போடுதல்	கிளைத்து நடுதல்.
ஊணி நடு	ஊன்றி நடு	நாற்றுகளை நிலத்தில் ஊன்றி நடுதல்.
எடையபோடு	எடைய போடு	நாற்றுகளை எட்ட எட்ட நடும்படி கூறுதல்.


பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
எருது சிரிச்சான் மூல	எருது சிரித்தான் மூலை	தென் மேற்குத் திசை. இப் பக்கம் மின்னல் மின்னினால் அதிக மழை பொழியாது. காடு வளரும்; அதிலுள்ள புல் பூண்டு களை மாடு மகிழ்ச்சி யுடன் மேய்தலால் இப்பெயர் வழங்கு கிறது.
எறப்பு பயிரு	இறைப்புப் பயிர்	நீர் இறைத்துப் பயிரிடும் பயிர்.
ஏருங்காலில் போடுதல்	ஏருங்காலில் போடுதல்	உழுது கொண்டே செல்லும் ஏரின் பின்னால் விதை யையோ நாற்றையோ இட்டு விளைத்தலைக் குறிப்பது.
ஒத்தி நெலம்	ஒற்றி நிலம்	போக்கிய நிலம்.
ஒத்து நடவு	ஒத்து நடுவு	சீரான இடைவெளி யுடன் நடப்பட்ட நடுவு.
கஞ்சி காச்சல்	கஞ்சி காய்ச்சல்	உணவு சமைத்தலுக்கு வழங்கும் சொல்.
கட்டகால்	கட்டைக்கால்	கரும்பில் இரண்டாம் முறையாகப் பயிரிடப் படும் இடம்.
கதிரெடுக்குது	கதிரெடுக்குது	பயிரில் கதிர் தோன்று தலைக் கூறுதல்.
கதிர்பயிறு	கதிர்ப்பயிர்	கதிர் வந்த நிலையில் உள்ள பயிர்.
கத்த எட்த்து போற்றவங்க	கட்டு எடுத்துப் போடுகிறவர்கள்	கரும்புக் கட்டுகளை எடுத்துக் கொண்டு வந்துபோடுகிறவர்கள்

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கந்தாயம்	கந்தாயம்	போகம்.
கப்பாங்கு	கைப்பாங்கு	பறிக்கப்பட்ட நாற்றின் ஒரு கைப் பிடியளவு
கரண	கரணை	விதைக் கரும்பு.
கரும்பு பின்னுதல்	கரும்பு பின்னுதல்	கரும்பு சாயாமலிருக்க ஒரு கரும்பின் சோணையுடன் அடுத்த கரும்பின் சோணையைப் பின்னுதல்.
கரும்பு மோவு	கரும்பு மோவு	கரும்பின் கணு.
கலப்பு கதிரு	கலப்புக் கதிர்	ஒருவகை நெல்லுடன் கலந்துவிட்ட வேறு வகை நெல்லின் கதிர்கள்.
கலப்பநாத்து	கலப்பை நாற்று	ஏர்க்கால் நாற்று.
கலப்பு பயிரு	கலப்புப் பயிர்	முதன்மைப்பயிருடன் வேறுவகைப் பயிர் வளர்தல்.
களச்சிபோடுதல்	கிளைத்துப் போடுதல்	கிளைத்து நடுதல்.
காசலு } சூச்சலு	காய்ச்சல்	காய வைத்தல், உலர வைத்தல்.
காலாவதி பட்டம்	காலாவதிப்பட்டம்	ஆடிப்பட்டம்.
காவாயில் போடுதல்	கால்வாயில் போடுதல்	விதைக் கரும்பைக் கால்வாயில் இட்டு மூடுதல்.
கிரயம் செய்தல்	கிரயம் செய்தல்	விற்பனை செய்தல்.
கிள்ளி நடு	கிள்ளி நடு	நடுவு முறைகளில் ஒன்றைக் கூறுவது.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கீறபுடிச்சி நடு	கீறிப் பிடித்து நடு	நாற்றைக் குறைவாக நடச் சொல்லுதல்.
கீறி நடவு	கீறி நடுவு	இணுக்கு நடுவு.
குடுமி	குடுமி	கொரு கலப்பையின் கைப்பிடி.
குண்டி	குண்டி	நிலத்தைச் சமதள மாக்க உதவும் கருவி.
குண்டிவோட்டல்	குண்டியோட்டல்	புழுதியில் கலப்பையால் எருவிட்டபின் நிலம் சமதளமாக்க ஓட்டுதல்.
குண்டுருள்து	குண்டுருளுதல்	தொண்டைப் பயிராதல்.
குபேந்திர மூல	குபேந்திர மூலை	வடமேற்குத் திசை.
கெடங்கில வெச்சியமுத்து	கிடங்கில் வைத்தமுத்து	கரணையைப்பள்ளத்தில் வைத்து மூடுதல்.
கொக்கான் போடுதல்	கொக்கான் போடுதல்	நாற்றுநட, அறுவடை செய்ய மனை போடுதல்.
கொடிக்கா மூல	கொடிக்கால் மூலை	வாயுமூலை.
கொரு கலப்ப	கொரு கலப்பை	புழுதியில் வரிசையாக விதை விதைக்கஉபயோக மான கருவி.
கொல்ல மோட்டு பயிரு	கொல்லை மேட்டுப்பயிர்	நீர்ப்பாசன வசதியின்றி மழைநீர்மட்டும் நம்பிப் பயிரிடப்படும் பயிர்கள்.
கொழ	குழல்	ஜட்டகத்திலுள்ள குழல்கள்.
கோட பட்டம்	கோடைப்பட்டம்	சித்திரைப் பட்டம்.
சம்பாபட்டம்	சம்பாப்பட்டம்	ஆடிப்பட்டம்.
சல்ப் நாத்து	செல்ஃப்நாற்று	கிளைப்பு நாற்று
சனி மூலை	சனிமூலை	வடகிழக்குத் திசை.
சாகுபடி	சாகுபடி	பயிர்விளைத்தல்.
சால்விதைப்பு	சால்விதைப்பு	கொருகலப்பையால் விதைத்தல்.



குண்டி பக். 112



கொரு கலப்பை பக். 112

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
சித்தரபட்டம்	சித்திரைப் பட்டம்	கோடைப்பட்டம், சொர்ணவாரிப் பட்டம், ஓர் ஆண்டின் மூன்றாம் பட்டம்.
சிறுக புடிச்சி நடு	சிறுகப் பிடித்துநடு	இணுக்கு நடுவு நடச் சொல்லுதல்.
சுத்த போகம்	சுத்த போக்கியம்	நிலம் அடகு வைக்கப்பட்டு சாகுபடி உரிமையைக் கடன் கொடுத்தவர் பெயருக்கு மாற்றி எழுதிக் கொடுத்தல்.
சுவாதீன அடமானம்	சுவாதீன அடைமானம்	சுத்த போக்கியம்.
சேத்து பயிரு	சேற்றுப் பயிர்	சேற்று நிலத்தில் விளையும் பயிர்.
சேர நடு சேர போடு	சேர நடு	நாற்றுகளுக்கிடையே அதிக இடைவெளி இல்லாமல் நடுவு செய்தல்.
சேறு அடிச்சி கட்டு	சேறு அடித்துக் கட்டு	நாற்றிலுள்ள சேறை அலைத்து நீக்கிக் கட்டு.
சொக்கட்டான் ஒட்டிப் போடுதல்	சொக்கட்டான் ஒட்டிப் போடுதல்	சவுக்குக் கன்று நடும் முறைகளுள் ஒன்று.
சொந்தபாடு	சொந்த பாடு	நிலத்திற்குரியவரே பயிரிடுவதற்குரிய செலவை ஏற்றுச் செய்தல்.
சொர்ணவாரி நெல்லு	சொர்ணவாரிநெல்	கோடைப்பட்டத்தில் விளையும் ஒருவகை நெல்.
சொர்ணவாரி பட்டம்	சொர்ணவாரிப் பட்டம்	கோடைப்பட்டம், சித்திரைப் பட்டம்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
தண்ணி பங்கு	தண்ணீர்ப் பங்கு	தண்ணீர் வாரம்.
தண்ணி பயிரு	தண்ணீர்ப் பயிர்	நீர்ப்பாசனம் செய்து பயிரிடப் படும் பயிர்.
தாளு	தாள்	பயிரின் தண்டுப் பகுதி.
தாளடி	தாளடி	நெல் தாளின் அடிப்பகுதி.
தாளடி பயிரு	தாளடிப் பயிர்	தாளடி மக்குவதற்கு முன் உழு பயிரிடப்பட்ட பயிர்.
தீஞ்சி போதல்	தீய்ந்து போதல்	வெப்பத்தால் பயிர் உலர்ந்து போதல்.
தீர்வ	தீர்வை	நிலவரி.
தேர்னவெத	தேறியவிதை	முற்றிய விதை.
தைபட்டம்	தைப்பட்டம்	நவரைப்பட்டம். ஓர் ஆண்டின் இரண்டாம் பட்டம்.
தொண்ட கதிரு	தொண்டைக் கதிர்	பயிரினின்றும் கதிர் வெளிவரும் நிலை.
தொண்டபயிரு	தொண்டைப் பயிர்	தொண்டைக் கதிராக உள்ள பயிர்.
தொளும்ப	தொளிம்பை	சேறொடு உள்ள நாற்று.
நஞ்ச பயிரு	நன்செய்ப் பயிர்	நீர் அதிகம் தேவைப்படும் பயிர்.
நடவு	நடுவு	நாற்று நடுதல்.
நடவு கூலி	நடுவுக் கூலி	நாற்று நடுதலுக்குக் கொடுக்கப் படும் கூலி.
நடு	நடு	நடுவு செய்.
நவரபட்டம்	நவரைப் பட்டம்	தைப்பட்டம்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
நாத்து	நாற்று	தானியப் பயிர்களாக நடுவதற்குரிய இளம் பயிர்கள்.
நாத்தங்கால் பயிரு	நாற்றங்கால் பயிர்	நாற்று நடுவதற்குப் பயிரிடும் இளம்பயிர்.
நாத்து கத்த	நாற்றுக் கற்றை	நாற்று முடிச்சு.
நாத்து கரையேத்தல்	நாற்று கரை யேற்றுதல்	நாற்று முடிச்சுகளைக் கரையில் எடுத்து வைத்தல்.
நாத்துபறித்தல்	நாற்று பறித்தல்	நாற்றெடுத்தல்.
நாத்து நடவு	நாற்றுநடுவு	நாற்டு நடுதல்.
நாத்து வளாவு	நாற்று வளாவு	நாற்று முடிச்சுகளைப் பரவலாக இடச் சொல்லுதல்.
நாத்தெடுத்தல்	நாற்று எடுத்தல்	நாற்றங்காலிலிருந்து நாற்றினைப் பெயர்த் தெடுத்தல்.
நாரு	நார்	கயிறு.
நாளான நாத்து	நாளான நாற்று	நடுங்காலம் கடந்த முற்றிய நாற்று.
நுண்ணுயிர் கலத்தல்	நுண்ணுயிர் கலத்தல்	விதை முளை கட்டும்பொழுது பூச்சி மருந்து கலத்தல்.
நீக்கல்போடுதல்	நீக்கல் போடுதல்	தொண்டைப் பயிரைக் காற்றோட்டம் ஏற்பட நீக்கி விடுதல்.
நெலவரி	நிலவரி	நிலத்தைப் பயன்படுத்தலுக்காக அரசுக்குக் கொடுக்கப்படும் வரி.
பச்ச கட்டுதல்	பச்சை கட்டுதல்	பயிர் முளைத்து வருதல்.
பட்ட நடவு	பட்டை நடுவு	பளிச்சு நடுவு.
பட்டம்	பட்டம்	பருவம்.
பத்தி நடவு	பத்தி நடுவு	பாத்தி நடுவு.

பேச்சு வழக்கு,	எழுத்து வழக்கு	பொருள்
பத்தி விதைப்பு	பத்தி விதைப்பு	பாத்தி கட்டி விதைத்தல்.
பயிரு	பயிர்	பயிர்.
பயிருபுடித்தல்	பயிர் பிடித்தல்	பயிர் செழுமையாக வளர்தல்
பளிச்சி நடவு	பளிச்சு நடுவு	அதிக இடைவெளி விட்டு நடப்பட்ட நடுவு.
பாரு மாத்துதல்	பார் மாற்றுதல்	மண்ணணைத்தல்.
பால் ஒதுங்கல்	பாலொதுங்—கல்	முளை ஒதுங்கல்.
பால் கட்டுதல்	பால் கட்டுதல்	பால் பிடித்தல்.
பால் புடித்தல்	பால் பிடித்தல்	கதிர்கள் மணிகளைப் பிடிக்கத் தொடங்கிய நிலை.
புஞ்ச பயிரு	புன்செய்ப் பயிர்	நீர் சிறிதளவே தேவைப்படும் பயிர்.
புள்ளு	புள்ளு	விதைக்கரும்பு, கரணை.
புள்ளு வளாவுதல்	புள்ளு வளாவுதல்	கரணையைப் பரப்புதல்.
புய்திகாலு பயிரு	புழுதிக்கால் பயிர்	புழுதியில் விதைத்துப் பயிரிடும் பயிர்.
புழுதிகாலு	புழுதிக்கால்	புழுதிக்கால் பயிர்.
பூவாசிபட்டம்	பூவாசிப் பட்டம்	பயிரிடப்படும் பட்ட வகையுள் ஒன்று. புன்செய் நிலத்தில் பயிரிடும் கோடைப்பட்டத்தைக் குறிப்பது.
பெருவெர	பெருவிதை	நல்ல நாள் பார்த்து ஆடித்திங்களில் முதலில் விதைக்கப்படும் விதை.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பொளந்து போடு	பிளந்து போடு	கிள்ளி நடு.
பொறுக்கு வெர	பொறுக்கு விதை	தேர்ந்தெடுத்த விதை.
போகம்	போகம்	நிலத்தில் பயிர் விளைத்தலின் காலத்தைக் குறிப்பது.
போக்கியம்	போக்கியம்	ஈடுகாட்டி அடைமானம்.
மடங்கலு	மடங்கல்	சித்திரைப்பட்டத்தில் பயிரிடுதலைக் கூறுதல்.
மடிஞ்சிபோதல்	மடிந்து போதல்	பயிர் உயரமாக வளர்ந்து தானாகச் சாய்ந்துபோதல்.
மண்ணணைத் தல்	மண் அணைத் தல்	ஒவ்வொன்றாக விதைக்கப்பட்ட விதைகள் முளைத்தபின் வேர் நிலத்தின் மேற்புறம் தெரியாமலிருக்க மண் அணைத்தல்.
மறுதாம்பு	மறுதாம்பு	விதைக்கரும்பு நடவாமல் இரண்டாம் போகமாகக் கரும்பு விளைவிக்கப்படுதலைக் குறிப்பது.
	முதல் மறுதாம்பு	இரண்டாம் முறையாக விளைவிக்கும் கரும்பு.
	இரண்டாம் மறுதாம்பு	மூன்றாம் முறையாக விளைவிக்கும் கரும்பு.
மாத்துநாத்து	மாற்றுநாற்று	கலப்பு நாற்று.
மாவுகூடிப் போதல்	மாவுகூடிப் போதல்	விதை ஒதுங்கல்.
மானாவாரி பயிரு	மான வாரிப் பயிர்	மழைநீரைநம்பிப் பயிரிடப் படும் பயிர்.
முக்கோட்டான் நடவு	முக்கோட்டான் நடுவு	வரிசையில்லாமல் நடுதல்.
முடிச்சி	முடிச்சு	நாற்று முடிச்சு.
மூனாங் கொம்பு	மூன்றாங் கொம்பு	மூன்றாங்கோப்பு
மூனாங்கோப்பு	மூன்றாம் கோப்பு	விதைப்புக்காக ஊற வைத்த நெல்லின் மூன்றாம் நாள்.

பேச்சு வழக்கு	**எழுத்து வழக்கு**	**பொருள்**
மென	மனை	நாற்றுநடுபவர் நடுதலுக்கும் அறுவடை செய்பவர்
		அறுவடைக்கும் தங்களுக்குள் தத்தம் செயலுக்கு நிலத்தைப் பங்கிட்டுக் கொள்ளும் நான்கு அல்லது ஐந்து தப்படி அளவு.
மொதகாரு	முதல் கார்	முதல் கார்ப்பட்டம்.
மொள	முளை	விதையின் முளை.
மொள ஒதுங்கல்	முளை ஒதுங்கல்	விதைஒதுங்கல்.
மொளகட்டல்	முளை கட்டல்	நெல்விதைப்பதற்கு முன் நெல் மூட்டையை மூன்று நாட்கள் நீரிலும் நிலத்திலும் மாற்றி மாற்றி வைத்தல்.
மொளச் சிடுச்சி	முளைத்துள்ளது	நிலத்தில் விதைத்த விதை முளைத்த நிலை.
மொள விட்டுச்சி	முளைத்து விட்டது	மூட்டையிலுள்ள விதை முளைத்த நிலை.
மோட்ட போது	மோழைபோது	மோழை போதல்.
ரெண்டாங் கோப்பு	இரண்டாம் கோப்பு	விதைப்புக்காக ஊறவைக்கப் பட்ட நெல்லின் இரண்டாம் நாள்.
வவ்வடி படுதல்	வவ்வடி படுதல்	தொளிம்பை உடைய நாற்று.
வாய்தா	வாய்தா	நிலவரி.
வாயுமூல	வாயுமூலை	வடமேற்குத் திசை.
வாரம்	வாரம்	பங்கு. நிலத்திற்குரியவரும் பயிரிடுபவரும் பெறும் விளைச்சலின் பங்கு.
	சத்துவ வாரம்	உரத்திற்காகச் செலவிட்டவர் பெறும் பங்கு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
	தண்ணீர் வாரம்	பயிர் விளைத்தலுக்குத் தண்ணீர் மட்டும் அளித்து விளைச்சலில் பெறும் மூன்றில் ஒரு பங்கு.
	நிலத்து வாரம்	நிலவுரிமையாளர் விளைச்சலில் பெறும் பங்கு.
	பயிர் வாரம்	நிலத்தைப் பயிரிடுபவர் விளைச்சலில் பெறும் பங்கு.
வாரம் பிரிச்சல்	வாரம் பிரித்தல்	விளைவுப் பொருளைப் பங்கிடுதல்.
வார முச்சலிகை	வாரமுச்சலிக்கை	நிலத்திற்குரியவர் பயிரிடுபவரிடம் எழுதி வாங்கிக்கொள்ளும் உடன்படிக்கை.
விட்டங் கட்டல்	விட்டங்கட்டல்	கரும்பு, வெற்றிலை, உயரமாக வளரும் பொழுது சாயாமலிருக்க அதன் அடிப்பக்கம் சிலவற்றைச் சேர்த்துக் கட்டுதல்.
வெடிச்சி வருதல்	வெடித்து வருதல்	நிலத்திலிடப்பட்ட விதைகள் முளைத்துவரும் பொழுது நிலத்திலுண்டாகும் வெடிப்பு.
வெத, வெர, வெரை	விதை	விதை
வெத ஒதுங்கல்	விதை ஒதுங்கல்	உலர்ந்த விதையை ஒடித்துச் சோதித்துப் பார்த்தல்.
வெத கரும்பு	விதைக் கரும்பு	ஐந்து அல்லது ஆறு மாதம் வளர்ந்த கரும்பின் பகுதி. கரணை.
வெதநாத்தங் கால்	விதை நாற்றங்கால்	விதைக்கரும்பு விளைக்கும் நாற்றங்கால்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
வெதநெல்லு	விதை நெல்	விதைப்பதற்குரிய அளவில் உலர்த்திப் பக்குவப்படுத்தப் பட்ட நெல்.
வெத பயிறு	விதைப்பயிறு	விதைப்பதற்குரிய அளவில் முற்றிய வேர்க்கடலை, துவரை முதலிய புன்செய்ப் பயிர்களின் வித்து.
வெதப்பாடு வெரப்பாடு	விதைப்பாடு	விதை விதைத்து நீர்ப்பாசனம் செய்து நெற்பயிர் விளை விக்கும் முறை.
வெரகாலு	விதைக்கால்	சேற்று நிலத்தில் விதைத்த படியே பயிர் செய்தலைக் குறிப்பது,
வெரவெரைத்—தல்	விதை விதைத்தல்	விதைகளைக் கையாலிடுதல்.
வேரறாம எடு	வேரறாமல்எடு	நாற்றின்வேர் அறுபடாமல் எடுக்கச் சொல்லல்.
வேர்களைதல்	வேர்களைதல்	கரும்பு வெட்டியெடுக்கப்பட்ட நிலத்தில் அதன் வேரினை நீக்குதல்
வெவசாயம்	விவசாயம்	பயிர்த்தொழில்.
ஜட்டுவம்	ஜட்டகம்	கொரு கலப்பையில் மொத்த மாக விதைகள் இடுவதற்குரிய மூன்றுஅல்லது நான்கு துளைகள் உடைய உடுக்கை வடிவமுள்ள பகுதி.
ஜப்பான்நடவு	ஜப்பான்நடுவு	ஜப்பானியமுறையில் நடுவு செய் தல். பயிர்களை மிதிக்காமல் உரமிடுவதற்கு வசதியாகவும் பயிர்களுக்கிடையே காற்றோட் டம் ஏற்படவும் ஐந்தாறடிக்குச் சிறிது இடைவெளி விட்டு, கயிறு கட்டி வரிசையாகநாற்றுநடுதல். இதனால் மகசூல் அதிகரிக்கும்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கிஸ்தி	கிஸ்தி (உ)	நிலவரி.
குத்தவை	குத்தகை	நிலத்தை அனுபவிக்கும் முறைகளுள் ஒன்று.
கொருசெரா	கொருசெரா	கொருகலப்பையிலுள்ள படை, இஃதுஇரும்பினாலோ மரத்தினாலோ ஆனது.
பொடபயிரு	பொடப்பயிர் (தெ. + த)	தொண்டைக்கதிர்.
மவுத்தா	மகுத்தா (தெ.)	குத்தகை.

5. களையெடுத்தலும் கருவிகளும்

'களையெடுக்காத பயிர் கால்பயிர்' என்பது முதுமொழி. பைங்கூழில் களையெடுத்தலின் அவசியத்தை வள்ளுவரும் விளக்கியுள்ளார். நற்றிணையில்,

> **'நீருறு செறுவில் நாறுமுடி யழுத்தநின்**
> **நடுநரோடு சேறி யாயின்**
> **சாயும் நெய்தலும் ஓம்புமதி'**[1]

என்று சொல்லப்பட்டுள்ளது. இதில் நடுநர்கள் வயலில் சென்று நாற்று நடும் பொழுது களையப்படும் சாய், நெய்தல் ஆகிய களைகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

சேற்று நிலத்தில் களை நீக்கலைக் 'களையெடுத்தல்' அல்லது 'களை பறித்தல்' என்றோ 'புல்லெடுத்தல்' என்றோ கூறுவர். சேற்று நிலத்தில் களைகள் கையால் அகற்றப்படும். புழுதி நிலத்தில் களை நீக்கலைக் 'களைவெட்டல்' அல்லது 'களை கொத்தல்' என்பர். இதற்குப் பயன்படுத்தும் கருவியைக் 'களைக்கொத்து' என்பர். இக்கருவியைக் கொண்டு கரும்புள்ள நிலத்திலும் பாத்திகளிலும் உள்ள மேட்டில் களை

---

1. நாராயணசாமி ஐயர். அ. (உரை.), நற்றிணை [மு. கா. நூ.] பா. 60:7-9, ப. 70.

நீக்கும் செயலைக் 'கட்டை கொத்தல்' என்பர். கரும்பில் களை வெட்ட 'பிக்காசு' pick axe என்னும் கருவியைப் பயன்படுத்துகின்றனர்.

மான வாரி நெற்பயிரில் களையெடுக்கப் 'பாசு கலப்பை' அல்லது 'பாவட்டம்' என்னும் கருவியினையும் வேர்க்கடலையில் புல்லெடுக்க, 'குச்சுப்பலுகு' என்னும் கருவியினையும் கேழ்வரகில் களையெடுக்க, 'காறுமரம்' அல்லது 'பலுகு மரத்தையும், பயன்படுத்துகின்றனர். காறுமரத்தைக் கர்ண மரம் என்றும் கர்லமரம் என்றும் கூறுவர்.

புன்செய்ப் பயிர்களில் எளிதாகக் களையெடுக்கப் 'பலுகு' என்னும் கருவியைக் கொண்டு செய்யும் செயலுக்குப் 'பலுகு ஓட்டல்' என்பர். இத்தொடர் தமிழ்ப் பேரகராதியில் 'தாளியடித்தல்'[1] என்று சொல்லப்பட்டுள்ளது. புறநானூற்றின் நூற்று இருபதாம் பாடலின் குறிப்பிலும் இத்தொடர்[2] குறிப்பிடப்பட்டுள்ளது. கரம்பு நிலத்தில் கோரை பற்றி வளர்தலை மோரை பற்றுதல் என்பதுமுண்டு. பலுகு மரத்தில் காறு, மரத்தால் செய்யப்பட்டிருப்பது நெற்பயிரிலும் இரும்பால் காறு செய்யப்பட்டிருப்பது கேழ்வரகுப் பயிரிலும் பயன் படுத்தப்படும்.

இனி, களையெடுத்தலும் அதற்குரிய கருவிகளும் பற்றிய சொற்களின் பொருள் விளக்கம் காணலாம்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
இரும்புபலுகு	இரும்புப் பலுகு	காறு மரம்.
கட்ட கொத்தல்	கட்டை கொத்தல்	களைகொத்தல்.
கர்ணமரம் / கர்ல மரம்	காறுமரம்	பார்க்க. காறுமரம்.
கர்ண மரம் ஓட்டுதல்	காறு மரம் ஓட்டுதல்	காறு மரத்தைச் செலுத்துதல்.

1 தமிழ்ப் பேரகராதி தொ. 6. ப. 1857.
2 சாமிநாதையர். உ. வே. (பதி), புறநானூறு, (மு.கா.நூ.) ப. 236.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
களகட்டு களக் கட்டி களக்கட்டு களுகட்டு	களைக் கொத்தி	களைகளைஅகற்றஉபயோகப் படும் மண்வெட்டியைப் போன்ற சிறிய அமைப் புடைய கருவி.
களகொத்தல்	களைகொத்தல்	புழுதிப் பயிரில் களை நீக்குதல்.
கள தள்ளல்	களை தள்ளல்	களையெடுத்தல்.
களபறித்தல்	களையெடுத்தல்	சேற்றுப் பயிரில் விளைந்துள்ள களைகளைப் பிடுங்கி எடுத்து நீக்குதல்.
களவெட்டல்	களைவெட்டல்	களைகொத்தல், புழுதியில் விளைந்துள்ள களைகளை வெட்டிக் கொத்தி நீக்குதல்
கார்மரம்	காறுமரம்	கேழ்வரகுப் பயிரில் களை யெடுக்க உதவும் மூன்றடி உயரமுள்ள கருவி.
குச்சி பலுவு	குச்சுப் பலுகு	வேர்க்கடலையில் புல்லைக் களையப் பயன்படுத்தும் கருவி.
கொந்திலி	கொந்தரிவாள்	கரும்புவேர் களைய, வரப்பின் ஓரம் சரிசெய்ய உதவும் பெரிய களைக் கொத்தி.
கோர	கோரை	ஒருவகைப் புல்.
தொளர்	துளர்	களைவெட்டும் கருவி.
நெல்மணி	நெல்மணி	நெல்லின் சகக்களத்திப் பயிர்விதை. நெல்பயிரைவிடச் சற்று உயரமாக வளரும்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பலு வோட்டல்	பலுகுவோட்டல்	பலுகு மரத்தைச்செலுத்துதல்.
பல்லுமரம்	பலுகுமரம்	களைநீக்கப் பயன்படுத்தும் கருவி; காறு மரத்தைவிடப் பெரியது; எட்டடி உயரமுடையது.
பாசுகலப்ப	பாசுகலப்பை	பாவட்டம்.
பாவட்டம்	பாவட்டம்	மான வாரி நெற்பயிரில் களையெடுக்கப் பயன்படுத்தும் கருவி
பில் லெடுத்தல்	புல்லெடுத்தல்	சேற்றுப்பயிரில் விளைந்துள்ள புல்லைப் பிடுங்கி அகற்றுதல்.
பில்லருவா	புல்லரிவாள்	புல் அரிவதற்குப் பயன் படுத்தும் அரிவாள்.
பில்லரிசி	புல்லரிசி	ஒருவகைப் புல்லின் விதை.
மரப்பலுவு	மரப்பலுகு	குச்சுப் பலுகு.
வருங்குறு மாம்பில்	வருங்குறுமாம் புல்	நெற்பயிரில் காணப்படும் களைப் பயிர்.
பிக்காஸ்	பிக்காசு (ஆ.)	கரும்பில் களைவெட்ட உதவும் கருவி.

6. உரமும் உரமிடுதலும்

எரு, உரம் ஆகிய இரு சொற்களும் இன்று ஒரே பொருளில் வழங்கப்பட்டாலும் இரண்டிற்கும் சிறிது வேறு பாடு உண்டு. இவற்றுள் தொன்மையானசொல் எரு என்பதை எருவிற்கு இணையாக இன்று வழங்கப்படும் சொல்லாகிய உரம் என்னும் சொல் இப்பொருளில் சங்க இலக்கியங்களில் வழங்கப்படவில்லை என்பதாலும் எரு [1] என்ற சொல்

1 சுந்தரமூர்த்தி. கு., (பதி), தொல்காப்பியம்,எழுத்ததிகாரம் உயிர் மயங்கியல், இரண்டாம் பதிப்பு (அண்ணாமலைப் பல்கலைக் கழகம், ஆண்டு 1979) நூ. 261, ப. 279.

தொல்காப்பியத்திலேயே சொல்லப்பட்டுள்ளமையாலும் அறியலாம். எரு, ஒன்றை வளர்க்குந் தன்மையது என்பதனை 'ஊரவர் கௌவை எருவாக'[1] என்னும் குறளால் தெளிவுறுகிறது.

எரு என்பது இயற்கையில் கிடைக்கும் நாட்டெருவாகச் சொல்லப்படுகிறது. உரம் என்பது நிலத்திற்கு வலிமை ஊட்டுவதற்குச் செயற்கையில் தயாரிக்கப்படுவதாகும். இதனை இரசாயன உரம் என்பர். இயற்கை உரத்தை நுண்ணூட்டச் சத்து என்றும் இராசயன உரத்தைப் பேரூட்டச்சத்து என்றும் வழங்குவர்.

நிலத்திற்கு உரம் ஊட்ட ஆட்டு மந்தையினை ஓரிரவு குறிப்பிட்ட நிலத்தில் மடக்கி வைப்பர். இதனைக் 'கிடை மடக்குதல்' என்பர். இவ்வாறு ஆடு, மாடு ஆகியவற்றினின்றும் பெறப்படும் சாணம் தொழு உரம் ஆகும். இத்தகைய உரம் பண்டைக் காலத்திலேயே பயன் படுத்தப்பட்டுள்ளது என்பதனை,

'கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கு
மிடுமுள் வேலி யெருப்படு வரைப்பின்'[2]

என்னும் பெரும்பாணாற்றுப்படை அடிகளால் அறியலாம்.

'......................................மன்றத்
தெருவினுண் டாது குடைவன வாடி'[3]

என்னும் குறுந்தொகைப் பாடலடிகளால் எருவின் நுண்மைத் தன்மை புலனாகிறது.

தழைகளை நீர் நிறைந்த நிலத்தில் ஊற வைத்து மிதித்தலைத் தழை மிதித்தல் என்பர். இதற்குப் பயன்படுத்தும் கருவியை 'ரோலர்' என்பர்.

---

1 பரிமேழகர் (உரை) திருக்குறள், (மு.கா.நா) குறள், 1147, ப. 474

2 சாமிநாதையர்.உ.வே. , (பதி) , பத்துப்பாட்டு, (மு. கா. நா.) பெரும்பாணாற்றுப்படை. 153-154. ப. 189

3 சாமிநாதையர். உ.வே. , (பதி). குறுந்தொகை, மூன்றாம் பதிப்பு (சென்னை, கபீர் அச்சுக்கூடம், 1955) பா. 46:3-4. ப.114.

இயற்கையில் கிடைக்கும் சாணம், சாம்பல், குப்பை, மக்கிய தழை ஆகியவற்றை 'நாட்டெரு' என்பர். இதனை வண்டியில்கொணர்ந்து நிலத்தில் கொட்டுதலை 'எரு வடித்தல்' என்பர். இச் செயல் நிலத்தில் நீர்கட்டி உழுவதற்கு முன் செய்யும் செயலாகும்.

சேற்று நிலத்தில் நாற்று நடுதலுக்கு முன்னும் புழுதியில் விதைத்தலுக்கு முன்னும் இடப்படும் எரு, அடியெரு அல்லது அடியுரம் எனப்படுகிறது. அடியுரமாக இடப்படுவன காம்ப்ளக்ஸ், டி. ஏ. பி. என்பன.


நாற்றுநட்டு பதினைந்து நாட்களிலும் முப்பது நாட்களிலும் இடப்படுவது மேல் உரமாகும். வேப்பம் பிண்ணாக்கு, சிங்க் சல்பேட் முதலியன மேலுரமாக இடப்படுகின்றன. மிக்சர் அடியுரமாகவும் மேலுரமாகவும் இடப்படுகிறது. சல்பேட்டா, கதிர்வரும் தருணத்தில் மேலுரமாக இடப்படுகிறது.

நாட்டெரு நிலத்திற்கு எவ்வளவு இட்டாலும் கேடில்லை. செயற்கை உரங்கள் அதிகமாக நிலத்திற்கிடுதலால் நிலம் புகைந்து போதலும் உண்டு. இதுகாறும் உரமிடுதல் பற்றி அறிந்த நாம் இனி உரமிடுதல் பற்றிய சொற்களின் பொருள் விளக்கம் காணலாம்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
அடிஎரு	அடியெரு	நிலத்தில் பயிர்செய்ய நாற்று நடுதலுக்கு /விதைத்தலுக்கு முன்னதாக இடப்படும் எரு.
அடிஒரம்	அடியுரம்	அடியெரு.
அடிமருந்து	அடிமருந்து	அடியுரம்.
உருள	உருளை	ரோலர்.
ஊட்டங் கொறவு	ஊட்டங் குறைவு	உரம் அல்லது சத்து குறைவு.
எரு	எரு	இயற்கையில் கிடைக்கும் நாட்டெரு.


பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
எரு களறுதல்	எரு கிளைத்தல்	குவியலாகக் கொட்டப்பட்ட எருவைப் பரப்புதல்.
எருகுழி	எருக்குழி	நாட்டெரு சேகரித்து வைக்குமிடம்.
எருவடித்தல்	எருவடித்தல்	நாட்டெருவை நிலத்திற்கு வண்டிகளில் கொண்டு வந்து சேர்த்தல்.
ஓரம்	உரம்	செயற்கை எரு.
ஓரம் போடுதல்	உரம் போடுதல்	உரத்தை நிலத்தில் தூவுதல்.
ஓரம்வைத்தல்	உரம்வைத்தல்	ஒவ்வொரு பயிரின் வேரிலும் உரம் வைத்து மண் அணைத்தல்.
கடமடக்குதல்	கிடை மடக்குதல்	ஆட்டுமந்தையை நிலத்தில் ஓரிரவு இருக்கச் செய்தல்.
குப்ப	குப்பை	வீட்டினின்றும் அப்புறப்படுத்தப் பட்ட வேண்டாத பொருட்கள்.
குப்ப எரு	குப்பையெரு	நாட்டெரு
கும்பிஎரு சாணி	கும்பியெரு சாணி	எரிக்கப்பட்ட உமியின் சாம்பல் மாட்டுச் சாணம்.
சாம்பல் எரு	சாம்பலெரு	வறட்டி, விறகு, உமி முதலியவை முற்றிலும் எரிந்தபின் கிடைப்பது
தயமெரி தழமொழி	தழைமிதி	தழையை மிதிக்கச் சொல்லுதல்.
தயவெட்டல் தழவெட்டல்	தழைவெட்டல்	எருவிற்காகத் தழையை மரங்களினின்றும் கழித்தல்.
தழஎரு	தழையெரு	பசுந்தாள் எரு
தீனி	தீனி	நிலத்திற்கு இடும் எரு/உரம்.
தொழுஓரம்	தொழுஎரு	ஆடு,மாடு ஆகியவற்றின் சாணம்
நாட்டெரு	நாட்டெரு	இயற்கையில் கிடைக்கும்சாணம், சாம்பல், குப்பை, தழை முதலியவை.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
நுண்ணூட்ட சத்து	நுண்ணூட்டச் சத்து	இயற்கை உரம்.
பேருட்டசத்து	பேருட்டச்சத்து	இரசாயன உரம்.
பொகிந்து போச்சி பொவிந்து போச்சி பொழிஞ்சி போச்சி	புகைந்து போதல்.	உரம் அதிகமாதலால் / வெப்பத்தால் பயிர் பழுத்து உலர்ந்து போதல்.
மந்தசாணி	மந்தை சாணம்	கூட்டமாக உள்ள ஆடு, மாடுகளினின்றும் பெறப்பட்ட சாணம்.
மந்த மடக்குதல்	மந்தை மடக்குதல்	ஆடு மாடுகளை ஓரிடத்தில் தங்கச் செய்தல்.
மருந்து தூவுதல்	மருந்து தூவுதல்	செயற்கை உரங்களைத் தூவுதல்
மருந்து வைத்தல்	மருந்து வைத்தல்	கரும்பில் செடியின் வேர்ப்பகுதியில் மருந்து வைத்தல்.
மேல் ஒரம்	மேலுரம்	நாற்று நட்டுப் பதினைந்து, முப்பது நாட்களிலோ விதைத்த ஒரு மாதம் கழித்தோ தூவும் உரம்.
வேப்பம் புண்ணாக்கு	வேப்பப் பிண்ணாக்கு	வேப்பங் கொட்டையினின்றும் எண்ணெய் எடுத்த பின்னுள்ள சக்கை. மேலுரங்களுள் ஒன்று.
காம்ப்ளஸ்	காம்ப்ளக்ஸ் (ஆ.)	நிலத்திற்கிடப்படும் செயற்கை அடியுரங்களுள் ஒன்று. இதில் நைட்டிரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் ஆகிய தனிமங்கள் ஒரே விகிதத்தில் கலந்துள்ளன.



ரோலர் பக். 129

உழவு, நெசவு கலைச் சொற்கள்
செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்



பலுகு மரம் பக். 122

டாக்டர் சிவ. சண்முகசுந்தரம்

☐ திலகவதி பதிப்பகம் ☐ காஞ்சிபுரம் ☐

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
சல்பேட்டா	சல்பேட்(ஆ.)	கதிர்வரும் தருணத்தில் இடப் படும் மருந்து. (அம்மோனியம் சல்பேட், அம்மோனியம் குளோரைடு).
சிங்க் சல்பேட்டு	சிங்க்சல்பேட் (ஆ.)	மேலுர வகையுள் ஒன்று.
டி. ஏ.பி.	டி. ஏ. பி. (ஆ.)	நிலத்திற்கிடப்படும் அடியுரங் களுள் ஒன்று. (டைஅம்மோனியம் பாஸ்பேட்.)
மிக்சர்	மிக்சர்	கலப்பு உரம், நிலத்திற்கு அடியுரமாகவும் மேலுரமாகவும் இடப்படுவது.
யூரியா	யூரியா(ஆ.)	மேலுரங்களுள் ஒன்று.
ரோலர் லோரல் லோலர்	ரோலர் (ஆ.)	தழைமிதி கருவி.
பாமாபாஸ்	பாரம்பாஸ்	செயற்கை உரங்கள் தயாரிக்கும் கம்பெனியின் பெயரால் வழங்கப்படும் பெயர்கள்.
யானைமார்க்	பாக்டம்பாஸ்	
விஜயா	விஜய்	
ஸ்பிக்	ஸ்பிக்	
ஷட்டரு	ஷட்சக்கரம்	ரோலர்

7. அறுவடையும் உருப்படி செய்தலும்

பயிர் நன்றாக விளைந்திருந்தால் நல்ல விளைச்சல் என்பர். முற்றிய நெல்லாக இல்லாமல் உள்ள நெல்லைக் 'கருக்காய்' என்றும் நெல்மணிகளே இல்லாததைப் 'பதர்' என்றும் கூறுவர். நிலம் முழுவதும் நன்றாக விளைச்சல் இல்லாமல் போனால் 'சாவியா போச்சு' (சாதலாகப் போயிற்று) என்பர்.

அறுவடை செய்ய உதவும் கருவியை 'அரிவாள்' என்பர். அரிவாள், இலக்கியத்தில் 'கொய்வாள்'[1] எனப்படுகிறது அரிவாளைக் கூர்மை செய்ய வேண்டும் என்பதைக் கருக்கு அறுக்கணும், கருக்கு பிடிக்கணும், கருக்கு வைக்கணும் என்னும் சொற்களால் கூறுவர். இதனைத் 'தொகையல்' (துகையல்) போடணும் என்றுகூறுவது மதுராந்தகம் வட்ட வழக்கமாகும்

அறுவடை செய்யப்பட்ட நெல்தாள்களின் சிறு தொகுப்பினை 'அரி' என்பர். அறுவடை செய்யும் அறுவடையாட்களை 'அரிநர்'[2] என்று சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. ஓரிடத்தில் அறுத்து வைக்கப்பட்ட தாள்களின் குவியலை 'அரிகெடை' என்பர். பல அரிகெடைகள் சேர்த்துக் கட்டப்படும் கட்டைச் 'சுமைக்கட்டு' என்பர். இஃது 'அரிக்கட்டு' என்றும், இலக்கியத்தில் 'சூடு'[3] என்றும் சொல்லப்படுகிறது கட்டில் முதலில் மடித்து வைக்கப்படும் முதல் அரியைத் 'தலைமடிப்பு' என்றும் 'கோட்டரி' என்றும் கூறுவர். கட்டைச் சுமப்பவரின் தலைகட்டினுள் ஊடுருவாமல் தடுக்கத் தலைமடிப்புச் செய்யப்படுகிறது. சுமைக்கட்டைக் கட்ட உதவும் கயிறு வைக்கோலால் ஆனது. அதனை வைக்கோல் புரி என்பர். அரிகெடைகளைச் சேர்த்துக் கட்டப் பயன்படுத்தும் முறுக்கப்பட்ட இவ்வைக்கோல் புரியினை 'ஆக்கை'[4] என்பது தஞ்சை மாவட்ட வழக்கமாகிறது. கட்டடிக்கப் பயன்படுத்தும் வைக்கோல் தாளால் ஆன கயிறு 'கோட்டுக் கயிறு' என வழங்கப்படுகிறது.

---

1 சாமிநாதையர். உ. வே., (பதி), பதிற்றுப்பத்து, ஐந்தாம் பதிப்பு (சென்னை, லிபரேட்டர் அச்சுக்கூடம், 1949) பா. 19 : 22, ப. 28.

2 வெண்ணெ லரிநர் தண்ணுமை வெரிஇ — சாமிநாதையர். உ. வே. (பதி) பத்துப்பாட்டு, (மு. கா. நூ.), மலைபடுகடாம், 471. ப. 595.

3 'அகவய விளநெல் லரிகாற் சூடு' — சாமிநாதையர். உ வே.,(பதி),பரிபாடல், (மு கா. நூ.), பா. 7: 27, ப. 70. கம்பர், ஏரெழுபது, [மு. கா. நூ.], பா. 54, ப. 14.

4 சீதாராமன். பா. , 'உழவியல் கலைச் சொற்கள்' — ஒரு கள ஆய்வு, [எம். ஃபில்., பட்டத்திற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு 1983 இல் அளிக்கப் பெற்ற ஆய்வேடு.]

நெல் நீக்கப்பட்ட நெல்கதிர்த்தாள்களை 'வைக்கோல்' என்பர். சங்க இலக்கியங்கள் வைக்கோலை 'வை' [1] என்றே கூறுகின்றன. நெல் அடிக்கப்படும் இடங்களில் சிதறும் வைக்கோல் எடுத்தலை 'வைக்கோல் வாங்கு' என்பர். அடுக்கான வைக்கோல் குவியலை 'வைக்கோல் போர்' என்பர். அடிக்கப்பட்ட நெல்தாள்களை நிலத்தில்பரப்பி அதன்மேல் பல மாடுகளைப்பிணைத்து ஓட்டுதலைப் 'பிணையடித்தல்' என்பர். இதில் மாடுகளைப் பிணைத்துப் படைபோல் ஓட்டுதலினால் 'படைவுடுதல்' என்றும் கூறுவர். அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்களை இவ்வாறெல்லாம் செய்தலுடன் நெல்லைத் தூற்றிப் புடைத்து எடுத்துத் தூய்மையாக்கி உருப்படுத்துதலை ஒப்படியாக்கல் என்பர். விளைச்சலின் மொத்த அளவினை ஒடவாரம் [உடைமைவாரம்] என்பர். இங்கு,

உடைமை > ஒடைமை > ஒடமை > ஒட என மருவிற்று எனலாம்.

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் வேளாண்மைத் தொழிலில் கிடைத்த பலனைக் கேட்டலில், இந்த ஆண்டு வேளாண்மை எப்படி என்று கேட்பதானது, இந்த ஆண்டு வெள்ளாமை எப்படி என ஆயிற்று. இதில் வெள்ளாமை என்னும் சொல் வேளாண்மையில் கிடைத்த மகசூலை — விளைச்சலைக் குறிப்பதாகக் கொள்ளலாம்[2] என்பர். இதனால் வேளாண்மையும் வெள்ளாமையும் இரு வேறு சொற்களாகக் கருதப்படினும் பேச்சு வழக்கில் வேளாண்மையை வெள்ளாமை எனத் திரிந்தது எனலாம்.

இனி, பயிரிடப்பட்ட பயிர் விளைந்து அறுவடை செய்யப் படுதலும், விளைபொருள் உருப்படுத்தப் படுதலும் பற்றிய சொற்களின் பொருள் விளக்கம் காணலாம்.

---

1 'வையுந் துரும்பும் நீக்கி' — சாமிநாதையர். உ. வே. [பதி], பத்துப்பாட்டு, [மு. கா. நூ.] பெரும்பாணாற்றுப் படை 239, ப. 195.

2 சீதாராமன். பா. 'உழவியல் கலைச் சொற்கள்' — ஒரு கள ஆய்வு, [மு. கா. நூ.]

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
அடிகல்லு	அடிகல்	நெற்களத்தில் நெல்தாளை அடித்து நெல்லைப் பிரிக்கப் பயன்படுத்தும் கல்.
அடிச்சி ஓட்டு	அடித்து ஓட்டு	மாட்டை அடித்து ஓட்டு.
அடிச்சிபோடு	அடித்துப் போடு	நெல்தாளை நன்கு அடித்துப் போடச் சொல்லல்.
அம்பாரம்	அம்பாரம்	அடித்துத் தூய்மை செய்யப் பட்ட நெற்குவியல்.
அம்பாரமா சேரு	அம்பாரமாய்ச் சேர்	நெல்லை குவியலாகச் சேர்க்கச் சொல்லல்.
அரி	அரி	அறுவடை செய்யப்பட்ட நெல் தாள்களின் சிறு தொகுப்பு.
அரிகட்டு	அரிக்கட்டு	சுமைக்கட்டு.
அரிகெட	அரிக்கெடை	ஓரிடத்தில் அரிவாளால் அறுத்து வைக்கப்பட்ட நெல்தாள்களின் குவியல்.
அரிசேர போடு	அரிசேரப் போடு	அரிகளை வரிசையாகப் போடச் சொல்லல்.
அரியெடுத்தல்	அரியெடுத்தல்	சுமை கட்ட அரிக் கெடைகளை எடுத்தல்.
அரியெடுத்து கொடுத்தல்	அரியெடுத்துக் கொடுத்தல்	சுமைக் கட்டிலிருந்து கட்டடிக்க அரிகளைப் பிரித்தெடுத்துக் கொடுத்தல்.
அரிபின்னல்	அரிபின்னல்	கட்டுப்போரில் நெற்கட்டு களவாடப் படாமலிருக்க நெல்தாள் அரிகளைப் பின்னுதல்
அரிமெரி நெல் / அருமுந்தி நெல்	அரிமுந்திநெல்	கட்டடித்தவுடன் பெறப்படும் நெல்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
அரியடிக்கிற கவுறு	அரியடிக்குங் கயிறு	கட்டடிக்குங் கயிறு.
அருமுந்தி அடிக்கிற கவுறு	அரிமுந்தி அடிக்குங் கயிறு	
அருவா	அரிவாள்	அறுவடை செய்ய உதவும் கருவி.
அறப்பரிவா	அறுப்பரிவாள்	கதிர் அறுக்கும் அரிவாள்.
அறப் பறுத்தல்	அறுப்பறுத்தல்	அறுவடை செய்தல்
அறப்பு கூலி	அறுப்புக் கூலி	அறுவடை செய்தலுக்குக் கொடுக்கப்படும் கூலி.
எள்ளுக்கா மூட்டம்	எள்ளுக்காய் மூட்டம்	எள்ளுக்காய்கள் எளிதில் பழுப்பாகி உலரச் செய்வதன் பொருட்டு எள்ளுக்காய்க் குவியலின் மேல் அதன் தழை களைப் போட்டு மண்ணால் மூடுதல்.
ஒக்க தட்டு	ஒருங்கு தட்டு	தாள்களை ஒருங்கு செய்தல்.
ஒடவாரம்	உடைமைவாரம்	விளைச்சலின் மொத்த பங்கு அளவு.
ஒட்ட அறு	ஒட்டி அறு	நெற்கதிரின் தாள்களை நிலத்தில் அதிக நீளம் விடாமல் அறுத்தல்,
ஒட்ட தள்ளு	ஒட்டித் தள்ளு	தூற்றப்பட்ட அரிமுந்திநெல்லில் பதர் இல்லாமலிருக்க அவற்றைத் துடைப்பத்தால் நெல்லைஒட்டித் தள்ளல்.
ஒதறு	உதறு	வைக்கோலைத் தனித்தனியாக உதறுதல்
ஒப்படி செய்தல்	உருப்படி செய்தல்	நெல்தாள்களை அடித்துத் தூற்றிப் புடைத்து எடுத்து நெல்லாக உருப்படுத்துதல்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
ஒப்படி நெல்லு	உருப்படி நெல்	தாள்போர் நெல்.
ஒப்படி பண்ணுதல்	உருப்படி பண்ணுதல்	உருப்படி செய்தல்.
ஒப்படியாதல்	உருப்படி யாதல்	உருப்படியாக்குதல்.
ஒலந்து போதல்	உலர்ந்து போதல்	நீரில்லாமல் நிலமும் பயிரும் உலர்தல்
கங்காணம்	கங்காணம்	நிலவுரிமையாளருக்கு இனாமாகக் கொடுக்கப்படும் விளை பொருள்.
கட்டடித்தல்	கட்டடித்தல்	முற்றிய நெற்கதிர்களினின்று நெல்லை அடித்து நீக்குதல்.
கட்டடிக்கும் கவுறு	கட்டடிக்குங் கயிறு	கோட்டுக் கயிறு.
கட்ட தொடப்பம்	கட்டைத் துடைப்பம்	களததைத் தூய்மை செய்ய உதவும் முனை தேய்ந்த துடைப்பம்.
கட்டு ஒதறல்	கட்டு உதறல்	நெல்தாளினின்று நெல்லைப் பிரித்தெடுக்க டிரேக்டர் பயன் படுத்தலில் நெல்தாள் கட்டுகள் உதறப்படுதல்.
கட்டு கட்டு	கட்டு கட்டு	அரிகெடைகள் பலவற்றை ஒன்று சேர்த்துக் கட்டச் சொல்லுதல்,
கட்டுசெம	கட்டுச்சுமை	சுமைக்கட்டு.
கட்டுபோரு	கட்டுப்போர்	நெல்தாள் கட்டுகளின் குவியல்.
கத்தகட்டு	கற்றைக் கட்டு	தொகுதியாகக் கட்டுதல்.
கதிர்காய வைத்தல்	கதிர் காய வைத்தல்	கதிர்களுள் உள்ள தானியம் நன்கு உலரும் பொருட்டு வெயிலில் உலர வைத்தல்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கதிரறுத்தல்	கதிரறுத்தல்	கேழ்வரகு, கம்பு, சோளம் முதலிய பயிர்கள் முற்றிய பின் அவற்றின் கதிர்களை மட்டும் அறுத்தல்.
கரிக்கா } கருக்கா	கருக்காய்	முற்றாத நெல்.
கருக்கரிவா	கருக்கரிவாள்	கூர் அரிவாள்.
கருக் கறுத்தல்	கருக்கறுத்தல்	கூர்செய்தல்.
கருக்கு புடித்தல்	கருக்குப் பிடித்தல்	கூர் செய்தல்.
கருக்கு வைத்தல்	கருக்கு வைத்தல்	கூர் செய்தல்.
கரும்பு வெட்டல்	கரும்புவெட்டல்	முற்றிய கரும்பை வெட்டுதல்.
கழிச்ச சோண	கழித்தசோணை	கழிக்கப்பட்ட கரும்பின் தாள்கள்.
களக்கா அடித்தல்	கடலைக்காய் அடித்தல்	வேர்க்கடலைச் செடியிலிருந்து வேர்க்கடலையைப் பிரிக்கக் குழிதோண்டி அதில் காய்கள் விழுமாறு அடித்தல்.
களக்கா எடுத்தல்	கடலைக்காய் எடுத்தல்	கடலைக்காய்ச் செடியை நிலத்திலிருந்து பிடுங்கி எடுத்தல்.
களக்கா பறித்தல்	கடலைக்காய் பறித்தல்	அம்பாரமாக உள்ள வேர்க் கடலைச் செடிகளினின்று காய்களைப் பறித்தல்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
களக்கா புடுங்குதல்	கடலைக்காய் பிடுங்குதல்	கடலைக்காய் எடுத்தல்.
களங்காடு	களங்காடு	பயிரிடுபவர், எடுத்துக்கொள்ளும் களத்தில் சிதறுண்டவனாகச் சேகரிக்கப்பட்ட விளைபொருள்.
களங் கொட்டுதல்	களங் கொட்டுதல்	பறிக்கப்பட்ட கடலைக் காய் களைக் கூடையினின்றும் நிலத்தில் / களத்தில் கொட்டுதல்.
காத்து ஓடல	காற்று ஓடலை	காற்று வீசவில்லை.
காத்து வர்து	காற்று வருகிறது	காற்று வீசுகிறது.
காத்து வாட்டம்	காற்று வாட்டம்	காற்றடிக்கும் திசை.
காய்பறித்தல்	காய் பறித்தல்	காராமணி, துவரை. உளுந்து முதலியவற்றின் உலர்ந்த காய் களைப் பறித்தல்.
குத்துபோடு	குத்துப்போடு	கோணிகளைத் தைத்துப் போடச் சொல்லுதல்.
கும்பலா கொட்டு	கும்பலாகக் கொட்டு	ஒன்றாகக் கொட்டுதல்.
குழி தோண்டல்	குழிதோண்டல்	செடியினின்றும் அடித்து நீக்கப் பட்ட வேர்க்கடலைகள் ஒருங்கு விழ குழிதோண்டுதல்.
கொட்டும்	கொட்டும்	சிந்தும், சிதறும்.
கோட்டரி	கோட்டரி	அரியின் தலைமடிப்பு.
கோட்டி கவுறு	கோட்டுக் கயிறு	கட்டடிக்குங்கயிறு.
கோட்டி மடிப்பு	கோட்டு மடிப்பு	தலைமடிப்பு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
சாணிப்பால்	சாணிப்பால்	நீர்கலந்த சாணம்.
சாய்வை	சாய்வு	தண்ணீர் இல்லாமல் உலர்ந்து போன பயிர்.
சாவி	சாவி	பயிரின் கதிர்கள் மணிபிடிக்கா மல் போதலைக் குறிப்பது.
சூடடித்தல்	சூடடித்தல்	கட்டடித்தல்.
செத்த அடித்தல்	செத்தையடித்தல்	கட்டடிக்கப்பட்ட தாள்களைப் பிணையுங்காலோ டிரேக்டரோ கொண்டு ஒட்டுதல்.
செமகட்டு	சுமைக்கட்டு	தலையில் சுமக்கக்கூடிய அளவுக்கு அரிகெடைகளைச் சேர்த்துக் கட்டப்பட்ட கட்டு.
சோணகட்டு	சோணைக்கட்டு	கழிக்கப்பட்ட கரும்பின் சோணைகளைச் சேர்த்துக் கட்டிய கட்டு.
சோண கழித்தல்	சோணை கழித்தல்	கரும்பின் உலர்ந்த தழைகளைக் கழித்தல்.
சோணய கொள்த்தல்	சோணையைக் கொளுத்துதல்	கரும்பு வெட்டப்பட்ட நிலத்தில் உள்ள சோணைகளை எருவிற் காகக் கொளுத்தி விடுதல்.
டோரபோடு	டோரைபோடு	கட்டுநெல்சுமைகளை வரிசை யாகப் போடச் சொல்லுதல்.
தச்சிபோடு	தைத்துப்போடு	நெல்முதலிய தானியங்கள் நிரப்பப்பட்ட கோணிகளைத் தைத்து வைக்கச் சொல்லல்.
தண்டகட்டு	தண்டுக்கட்டு	தூற்றப்பட்ட நெல் குவியல்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
தண்டுகவுறு	தண்டுக் கயிறு	கட்டடிக்குங்கயிறு.
தண்டு வுடுதல்	தண்டுவிடுதல்	கட்டடிக்கப்பட்ட நெல்லில் கருக்காய், பதர் நீங்கத் தூற்றுதலில் மேற்கொள்ளும் செயல்.
தலமடிப்பு	தலைமடிப்பு	சுமைக்கட்டுக்குள் மடித்து வைக்கப்படும் முதல் அரி.
தார்ல (தேற்ல)	தேறில	முற்றாத நெல்.
தாரிபோது	தாரிப்போது	குறிப்பிட்ட காலத்திற்குமேலான பயிரில் நெல் பழுத்து கதிர் தானாகத் தரித்து / துண்டித்துப் போதலைச் சொல்லல்.
தாள்கத்த	தாள்கற்றை	சிறுதொகுப்பாகக் கட்டப்பட்ட தாள்களின் கட்டு.
தாள் தள்ளுதல்	தாள்தள்ளுதல்	கட்டடிக்கப்பட்ட தாள்களில் எஞ்சியுள்ள நெல்லை நீக்கப் பிணையுங்காலோட்டத் தாளைப் பரப்புதல்.
தாள்பட	தாள்படை	தாள் தள்ளுதலில் பயன்படுத்தப் படும் பிணைக்கப்பட்டமாடுகள்.
தாள்போரு	தாள்போர்	கையால் அடித்து நெல் நீக்கப் பட்ட நெல்தாள்களின் குவியல்.
தாள்போர் நெல்லு	தாள்போர் நெல்	பிணையடித்து உருப்படி செய்து எடுக்கப்பட்ட நெல்.
துடத்தால தள்ளு / தொடப் தால தள்ளு	துடைப்பத்தால் தள்ளு	களத்தைத் தூய்மை செய்ய துடைப்பத்தால் தள்ளச் சொல்லல்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
துண்டு கரும்பு	துண்டுக் கரும்பு	துண்டிக்கப்பட்ட கரும்பு.
தூத்துவா	தூற்றுவாய்	நெல் தூற்றுகின்றவர்கள் உள்ள பகுதி.
தொகையல் போடுதல்	துகையல் போடுதல்	[கத்தி- அரிவாள்] கூர்செய்தல்.
நெல்லுசெம	நெல்சுமை	நெல்லுடைய தாள்களின் சுமைக்கட்டு.
நெல்ல தூத்து	நெல்லைத்தூற்று	கட்டடிக்கப்பட்ட நெல்லைத் தூய்மைசெய்தலின் பொருட்டுத் தூற்றுதல்.
நோம்புதல்	நோம்புதல்	தானியங்களை முறத்தில் கொட்டி கையால் முறத்தைப் புடைத்து கல், மணல், சருகு இல்லாமல் பிரித்தெடுக்கும் செயல்.
பதிரு பதுரு	பதர்	நெல்மணிகளைப் பிடிக்காத நெல்
பட்றபோடு	பட்டறைபோடு	நெல்லைக் குவிக்கச் சொல்லல்.
படியபுடி	படியபிடி	ஒட்டி அறுத்தல்.
பயித்தகவுறு	பழுதைக் கயிறு	கோட்டுக் கயிறு.
பழுத்த கவுறு	பழுதைக் கயிறு	கோட்டுக் கயிறு.
பாடு	பாடு	உழைப்பு.
பாடு எடுத்தல்	பாடு எடுத்தல்	உழைத்தல்.
பாய்ச்சிஅள	பாய்த்துஅள	தானியக் குவியல்களில்அளக்கும் கருவியைச் செருகி அளக்கச் சொல்லல்.
பால்கருக்கா	பால்கருக்காய்	பதர்வகை.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பிரி	புரி	வைக்கோல்புரி.
பிரிஉடு புரிவுடு	புரிஇடு	வைக்கோல் தாள்களை முறுக்குதல்
பின்வா	பின்வாய்	தூற்றுவாய்.
புடிச்சிஅறு	பிடித்து அறு	படியபிடி.
புடைத்தல்	புடைத்தல்	தானியங்களைத் தூய்மை செய்யும் செயல்களில் ஒன்று.
பொண காணி	பிணைகாணி	பிணையோட்டுதலில் பயன்படுத்தும் கயிறு.
பொண யடித்தல்	பிணையடித் தல்	
பொணயுங் கால் ஓட்டடல்	பிணையுங் கால் ஓட்டடல்	கட்டடித்து நெல் நீக்கப்பட்ட தாள்களை நிலத்தில் பரப்பி அதன்மேல் மாடுகளைப்
பொண வோட்டடல்	பிணை யோட்டடல்	பிணைத்து ஓட்டுதல்.
பொலி	பொலி	தூற்றாத நெல்குவியல்.
போர்உடு போர் போடு	போர் இடு	கட்டுப்போர், தாள்போர், வைக்கோல்போர் ஆகியன அமைக்கச் சொல்லல்.
மகசூல்	மகசூல்	வேளாண்மை செய்யப்பட்ட பொருளின் உற்பத்தி.
மடிஞ்சி போச்சி	மடிந்துபோதல்	பயிர் உயரமாக வளருதலால் வளைந்து போதல்.
மாசூல்	மாசூல்.	மகசூல்.
மின்வா	முன்வாய்	தூற்றுவாயின் எதிர்ப்புறம்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
முத்தரபலக	முத்திரைப் பலகை	கட்டுப்போரில் முத்திரைவைக்க நிலத்திற்குரியவர் பயன்படுத்தும் அடையாளப் பலகை.
முத்தர வைத்தல்	முத்திரை வைத்தல்	அரிபின்னலில் ஈரமண் வைத்து அதன்மேல் முத்திரைப் பலகையை ஊன்றி எடுத்தல்.
முன்வா தள்ளு	முன்வாய்த் தள்ளு	தண்டாக விடப்பட்ட நெல்லின் முன்வாயில் உள்ள பதர். கருக்காய்களைத் தள்ளல்.
மூட்ட	மூட்டை	தானியம் அல்லது உரம் உள்ள பை.
மூணு தட்டு தட்டு மூணு தாட்டி தட்டு மூணு வாட்டி தட்டு	மூன்று முறை தட்டு	நெல்லரி தாள்களை நிலத்தில் மூன்று முறை அடிக்கச் சொல்லல்.
வளைவு	விளைவு	விளைச்சலின் அளவு/பயன்.
வளச்சல் வளைச்சல்	விளைச்சல்	பயிரிடப்பட்ட பொருளின் உற்பத்தி.
விசிறு	விசிறு	நெல் தூற்றும்பொழுது காற்று வீசவில்லையானால் முறத்தைச் சுழற்றச் சொல்லல்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
வெக்கல் / வெக்கலு	வைக்கோல்	நெல்நீக்கப்பட்ட நெல்தாள்கள்.
வெக்க ஒதறு	வைக்கோல் உதறு	வைக்கோல் உலர்த்துதலின் பொருட்டு உதறுதல்.
வெக்ககார	வைக்கோல் காரை	ஒருவைக்கோல் தாள்.
வெக்கசெம	வைக்கோல் சுமை	வைக்கோல் சுமைக்கட்டு.
வெக்கபிரி	வைக்கோல் புரி	முறுக்கப்பட்ட வைக்கோல்.
வெக்ககூலம்	வைக்கோல் கூலம்	வைக்கோல் துகள்.
வெக்க போரு	வைக்கோல் போர்	வைக்கோலின் குவியல்.
வெக்க வாங்கு	வைக்கோல் வாங்கு	வைக்கோல் எடு.
வெக்கால எடு	வைக்கோல் எடு	கட்டடிக்கும்பொழுது சிதறும் வைக்கோல் தாள்களை எடுக்கச் சொல்லல்.
வெக்கால திருப்பு	வைக்கோலைத் திருப்பு	பிணையடித்தலில் வைக்கோலை மேல்கீழாகத் திருப்பிப் போடச் சொல்லல்.
வெட்டுகூலி	வெட்டுக்கூலி	கரும்பு,சவுக்கு முதலியன வெட்டு தலுக்குக் கொடுக்கப்படும் கூலி.
கட்டிங் ஆர்டர்	வெட்டாணை	கரும்பை வெட்டுதற்குக் கொடுக்கப்படும் அணை.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கட்டடிக்கும் மிஷின்	கட்டடிக்கும் மிஷின் (த.+ஆ)	நெல்தாள்களினின்று நெல்லைப் பிரித்தெடுக்கப் பயன்படும் இயந்திரம்
கதிரடிக்கும் மிஷின்	கதிரடிக்கும் மிஷின் (த.+ஆ.)	
போட்டு	போட்டு(தெ.)	நெல்லரிதாளின் தலைமடிப்பு
போட்டிகவுறு	போட்டி கயிறு(தெ.+த.)	கட்டடிக்குங்கயிறு
போட்டுதிரி	போட்டுத்திரி	போட்டுக்கயிறு.
ஜெலித்தல்	ஜெலித்தல்	நெல்லையும் மண்ணையும் பிரித்தெடுக்கும் செயல்; அரிசியையும் நொய்யையும் பிரித்தெடுக்கும் செயல்.

8. உழவர் பயன்படுத்தும் பிறகருவிகள்

தானியங்கள் சேமித்து வைக்கப் பயன்படுத்தப்படும் அடுக்காக ஆளுயரத்திற்கு மண்ணால் செய்யப்பட்ட அமைப்பை உறை என்பர். கொம்புகளையும் லைக்கோல் தாளையும் கொண்டு எளிதில் உருவாக்கப்படும் தானிய சேமிப்பு அமைப்பினைக் ‘குதிர்’ என்பர். ‘இப்பெண் குதிராட்டம் வளர்ந்து விட்டாள்’ என்று கூறுவது ஒரு பெண்ணின் விரைவான வளர்ச்சியைக் குறிக்கும் தொடரா கிறது. அதுபோல் திடீரென எளிதில் உருவாக்கப்படும் தானிய சேமிப்பு அமைப்பே குதிராகிறது. நெல் சேமித்து வைக்கப்படும் அமைப்பினை நற்றிணை, ‘நெற்கூடு’[1] என்று கூறுகிறது. இன்று தானியங்கள், உறை, குதிர் ஆகியவற்றுள் சேமித்து வைத்தல் குறைவாகவும் தானியப் பெட்டிகளிலும் மச்சுகளிலும் சேமித்து வைத்தல் மிகுதியாகவும் காணப்படு

1. நாராயணசாமி ஐயர். அ. , (உரை), நற்றிணை, (மு.கா. நா.) பா. 60:2, ப. 70.

கின்றன. ஒரு மூட்டை அளவுக்குச் சேமித்து வைக்கப்படும் மட்பாண்டத்தைச் 'சால்' என்பர். அதனை ஊத்துக்கோட்டை வட்டத்தில் 'ஜாடி' என்பர்.

தானியங்கள் குற்ற, நிலத்தில் பதிக்கப்பட்ட கருங்கல்லில் குழி இருந்தால் 'உரக்குழி' அல்லது 'நிலக்குழி' என்பர். குழி இல்லாத கருங்கல் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டு அதன்பால் உடுக்கை வடிவில் அமைந்த கல்லாலான உரல் ஒன்று வைத்துக் குற்றுதலும் உண்டு. குற்றும் பொழுது தானியங்கள் சிதறாமல் இருக்க கலவடை, குந்தாணி என்றெல்லாம் சொல்லப்படும் சிறிது வட்டவடிவிலமைந்த கருங்கல் பயன்படுத்தப் படுதலு முண்டு.

தலையில் பளுவான பொருட்களைச் சுமக்கப் பயன்படுத்தும் வட்டமாகச் சுற்றப்பட்ட துணியைச் 'சிம்மாடு, சீமாடு, சும்மாடு' என்றெல்லாம் கூறுவர். இஃது இலக்கியத்தில் 'சுமையடை' [1] என்று சொல்லப்படுகின்றது.

காய்கனிகளைப் பறிக்கக் கொக்கி பொருத்தப்பட்ட நீண்ட தடியைத் 'தொரடு' (துறடு) என்பர். இதனைச் 'சொரடு, டோட்டி' (தோட்டி) என்றும் கூறுவர். நீண்ட தடியில் அரிவாள் போல் சிறிது வளைந்த கத்தி பொருத்தப்பட்டிருக்குமாயின் அதனை 'ஆக்கரிவாள்' என்பர். இதனைக் கொடைக் கத்தி என்றும், பாஸ்கரா கத்தி என்றும் கூறுவர். 'பாசு' [2] என்பது மூங்கிலைக் குறிக்கும். மூங்கில் கழியில் கட்டப்பட்ட கத்தி 'பாசரிவாள் கத்தி' ஆகிறது. இது வழக்கில் பாசுகரா கத்தி என வழங்கப்படுகிறது.

ஆடு, மாடு, கன்றுகளுக்கு மருந்து, கஞ்சி ஊற்ற 'கொட்டான்' (கொட்டம்) என்ற கருவியைப் பயன்படுத்துகின்றனர். இது 'போல் முழுங்கிலால்' ஆனது என்பர். இங்கு,

---

1 'சுமையடைமேல் கூடை கவிழ்த்து'
- திருவிளையாடற் புராணம், (மு. கா. நூ.), மண்சுமந்த படலம் 16: 2, ப. 572.

2 மதுரைத் தமிழ்ப் பேரகராதி. இரண்டாம் பாகம். (மு. கா. நூ.) ப. 170.



உறை பக். 146



சால் (தானிய சேமிப்பு மட்பாண்டம்) பக். 148

'போல்' என்பது உள்ளீடு அற்ற அல்லது கெட்டியில்லாத என்று பொருள் தருகிறது. முழுங்கில் என்பது மூங்கிலைக் குறிக்கிறது. தற்பொழுது மூங்கிலைக் குறிக்கும் பொழுது தமிழ்மொழியின் சிறப்பு எழுத்தாகிய 'ழ' கரம் உச்சரிக்கப் படுவதில்லை.

ஆனால் சில பாமரர்கள் இன்றும் ழகரத்தைச் சரியாக உச்சரிக்கின்றனர். மழுங்குதல் இல்லாது - தானே மழுங்கிய நிலையில் வழவழப்பாக உள்ள மரமே இன்று மூங்கிலாகிறது. முழுங்கில், மூங்கில் ஆனதை ஆய்ந்தறிய வேண்டியதொன்று என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

மாட்டை முன்னே வேகமாகச் செலுத்தத் தூண்டும் கோல் 'தாற்றுக்கோல்' ஆகும். அதில் கயிறு கட்டியிருந்தால் சாட்டையாகிறது. முள் சொருகப்பட்டிருந்தால் முள்ளு கொம்பாகிறது.

கட்டுத்தளையில் கட்டப்பட்டுள்ள மாட்டின் கயிறு முறுக்கிக் கொள்ளாமலிருக்கப் பயன்படுத்தப்படும் இரும்பு வளையம் 'மூக்கு வளையம்' எனப்படுகிறது. இங்கு முறுக்கா வளையம், முறுக்கு வளையமாகிப் பின்னர் மூக்கு வளையமாகிறது எனலாம்.

இம்முறையில் இனி, உழவர் உழவுத் தொழிலில் பயன்படுத்தும் உழுகருவிகள் தவிர்த்து உபயோகிக்கும் பிறகருவிகள் பற்றிய சொற்களின் பொருள் விளக்கம் காணலாம். இறுதியில் உழவர் பயன்படுத்தும் கருவிகள் வைக்குமிடங்களாக உள்ள இறவாணம், கெஜ்ஜை, பரண் ஆகிய சொற்களின் பொருள் விளக்கமும் கூறப்படுகின்றன.

பேச்சு வழக்கு	**எழுத்து வழக்கு**	**பொருள்**
அர தட்டு கூடை	அரைத் தட்டுக் கூடை	2 மரக்கால் அளவு பிடிக்கும் கூடை; சிறு கூடை.
ஆக்கரிவா | ஆக்கருவா |	ஆக்கரிவாள்	தழையைக் கழிக்க உதவும் கத்தித் துறடு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
ஆக்கருவா கத்தி	ஆக்கரிவாள் கத்தி	துறட்டில் அரிவாள் போன்ற பகுதி
ஆக்கருவா கொம்பு	ஆக்கரிவாள் கொம்பு	ஆக்கரிவாள் கத்தி கட்டப் பட்டுள்ள நீண்ட தடி.
இரும்புநகம்	இரும்பு நகம்	வெற்றிலை பறிப்போர் வெற்றிலை கிள்ள கட்டை விரலில் சொருகிக் கொள்ளும் மோதிர வடிவமுள்ள கருவி.
ஈசங்கத்தி	ஈச்சங்கத்தி	ஆக்கரிவாள்.
ஏந்தரம்	ஏந்திரம்	உளுந்து, துவரை முதலிய பயிர்களை உடைக்கவும் அரிசியை மாவாக்கவும் உதவும் கருவி.
ஏந்தரஅச்சி	ஏந்திர அச்சு	ஏந்திரம் சுழற்ற உதவும் குச்சி.
ஏந்தர கீழச்சி	ஏந்திர கீழச்சு	ஏந்திரத்தின் கீழ்க்கல்.
ஏந்தர மேலச்சி	ஏந்திரமேலச்சு	ஏந்திரத்தின் மேல்கல்.
ஒரல், ஒரலு	உரல்	பொருள்களிட்டு குற்ற உதவும் உடுக்கை வடிவிலமைந்த கல்.
ஒலக்க	உலக்கை	தானியங்களை உரலில் இட்டுக் குற்ற உதவும் கருவி.
ஒற, ஒறை	உறை	தானியங்கள் சேமிக்க மண்ணால் நீள் உருளை வடிவில் அடுக்கு அடுக்காகக் கட்டியிருப்பது.
ஒரக்குழி, ஒலக்குழி	உரக்குழி	உரலில் உள்ள குழி.
கதிர்கூட	கதிர்க்கூடை	கலம் அளவு பிடிக்கக்கூடிய தானியக் கதிர்கள் சேகரிக்கக் கூடிய கூடை.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கலவட கலவோடு	கலவடை	உரலில் தானியங்கள் குற்றும் பொழுது சிதறாமலிருக்கப் பயன்படுத்தப்படும் சிறிது வட்டமான கல்.
கவட்ட	கவட்டை	கிட்டி.
கிட்டி	கிட்டி	வரப்பில் போக்குவரத்தைத் தடுக்க இரு கொம்புகளுக்கு இடையே சிறுவழி அமைக்கப் பட்ட அமைப்பு.
கிட்டி கட்டுதல்	கிட்டி கட்டுதல்	பாதுகாப்புச் சாதனம் அமைத்தல்.
குதிரு	குதிர்	தானியங்கள் சேமிக்க கொம்புகளையும் வைக்கோல் தாளையும் கொண்டு எளிதில் உருவாக்கப்படும் அமைப்பு.
குந்தாணி	குந்தாணி	பெரியகலவடை.
கூட	கூடை	மண், எரு, தானியம் எடுத்துச் செல்ல உதவும் கருவி.
கூண்டு	கூண்டு	ஈச்சங்கசங்கால் உறைபோல் செய்யப்பட்டு அதன்மேல் சாணம் மெழுகப்பட்டுத் தானியங்கள் சேமிக்கப் பயன்படுத்துவது.
கெடகத்தி	கெடைக்கத்தி	ஆக்கரிவாள்.
கொட்டான்	கொட்டம்	மாடு, கன்றுகளுக்கு மருந்து, கஞ்சி ஊற்ற உதவும் மூங்கில் குழாய்.
கோடாலி	கோடரி	மரத்தைப் பிளக்க உதவும்கருவி.
கோணி	கோணி	சணல் நாரினாலான பை.
சட்டி மரக்கால்	சட்டி மரக்கால்	அகலம் மிகுதியாகவும் உயரம் குறைந்துமுள்ள மரக்கால்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
சாலு	சால்	தானியம் சேமித்து வைக்கப் படும் பெரிய மட்பாண்டம்.
சிம்மாடு சீமாடு சும்மாடு	சுமையடை	தலையில் பளுவான பொருட் களைச் சுமக்கப் பயன்படுத்தும் வட்டமாகச் சுற்றப்பட்ட துணி.
சீந்துகம்பு	சீந்துகம்பு	தூண்டுகோல்.
சொரடு	சொரடு	துறடு.
டோட்டி	தோட்டி	துறடு.
தட்டுகூட	தட்டுக்கூடை	மூன்று மரக்கால் அளவு தானியம் பிடிக்கும் கூடை.
தாத்து கொம்பு	தாற்றுக்கொம்பு	இரும்பு முள்ளுள்ள கொம்பு.
தானிய பொட்டி	தானியப் பெட்டி	தானியம் சேமிக்க மரத்தால் செய்யப்பட்ட பெட்டி போன்ற அமைப்பு.
தூண்டு கோலு	தூண்டுகோல்	கயிறில்லாச் சாட்டை.
தொம்ம கூண்டு	தொம்பைக்கூடு	கசங்கு அல்லது மூங்கிலால் செய்யப்பட்டு தானியங்கள் சேமித்து வைக்கப்பயன்படும் குதிர்.
தொரடு	துறடு, துறட்டி	காய், கனிகளைப் பறிக்க உதவும் கொக்கி பொருத்தப் பட்ட நீண்ட தடி.
தொர்ட்டு கொம்பு தொர்ட்டு கோலு	துறட்டுக் கொம்பு துறட்டுக் கோல்	துறட்டில் உள்ள நீண்ட தடி.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
தொர்ட்டு கொக்கி	துறட்டுக் கொக்கி	துறட்டில் உள்ள கொக்கி.
நிலக்குழி	நிலக்குழி	உரக்குழி.
பாஸ்கரா கத்தி	பாசரிவாள் கத்தி	ஆக்கரிவாள்.
பிரமண பிரம்ண பிரிம்ண	புரிமணை	வைக்கோல் புரியால் செய்யப்பட்ட மணை.
புட்டு கூட புல்லாங்கூட	புட்டுக்கூடை புல்லாங்கூடை	மிகச் சிறிய கூடை.
பொளுவா போடுதல்	பொள்ளுவாய்ப் போடுதல்	உரலின் குழிப்பகுதி வழவழப் பாகி விட்டால் உளியால் அதனை இலேசாகத் துளைத்தல்.
மச்சி	மச்சு	வீட்டின் மேற்கூரைக்குக் கீழே மேல்தளத்தில் உள்ள அறையில் நெல் சேமிக்கப்படும் பகுதி.
மமட்டி மமுட்டி மம்மட்டி மம்ட்டி	மண்வெட்டி	மண்ணைத் தோண்ட உதவும் கருவி வகை.
மம்ட்டி எல	மண்வெட்டி இலை	மண்வெட்டித் தகடு.
மம்ட்டி காம்பு	மண்வெட்டிக் காம்பு	மண்வெட்டியிலுள்ள கொம்பு.
மம்ட்டி கொழ	மண்வெட்டிக் குழை	மண்வெட்டித் தகட்டில் பொருத்தப்படும் இரும்புக் குழை.
மம்ட்டி தகடு	மண்வெட்டித் தகடு	மண்வெட்டியிலுள்ள இரும்புத் தகடு.
மம்ட்டி ரேக்கு	மண்வெட்டி ரேக்கு	மண்வெட்டித் தகடு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
மூழுங்க கொழ	மூங்கில் குழல்	மூங்கிலாலான கொட்டம்.
முள்ளு கொம்பு	முள்ளுக்கொம்பு	தாற்றுக்கோல்.
முள்ளு கோலு	முள்ளுக்கோல்	தாற்றுக்கோல்.
மூக்குவளயம்	முறுக்கா வளையம்	கட்டுத்தளையில் கட்டப்பட்ட மாட்டின் தலைக்கயிறு முறுக்கிக் கொள்ளாமலிருக்கப் பயன் படுத்தும் இருப்பு வளையம்.
மொந்த	மொந்தை	சிறிய மட்பாண்டம்.
மொறம்	முறம்	மூங்கில் பத்தையால் செய்யப்பட்டு தானியங்களைத் தூய்மை செய்வதற்குப் பயன் படுத்தும் கருவி.
யேந்தரம்	இயந்திரம்	பார்க்க. ஏந்திரம்.
வால் மரக்கால்	வால் மரக்கால்	நீண்டு உயரமான அளவில் உள்ள பெரிய மரக்கால்.
இரும்பு ஜல்லட	இரும்புச் சல்லடை	இரும்புத் தகட்டினாலான சல்லடை.
கசங்கு ஜல்லட	கசங்குச்சல்லடை	மூங்கில் பத்தையினாலான சல்லடை.
சாக்குபை	சாக்குப்பை	கோணி.
ஜல்ல	ஜல்லா	எருக்கூண்டு.
ஜல்லட	ஜல்லடை	கலந்துள்ள தானியங்களுள் வேண்டிய பொருளைப் பிரித் -தெடுத்துத் கொள்ள உதவும் கருவி.
ஜாடி	சாடி	சால். ஒரு மூட்டை அளவுக்கு மிகைப்படாமல், தானியம் சேமித்து வைக்கப்படும் மட்பாண்டம்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
ஜாட்டி	சாட்டி சாட்டை	சிறுகழியில் கயிறு கட்டி மாட்டை முன்னே செலுத்தப் பயன்படுவது.
எறவாணம்	இறவாணம்	தாழ்வாரத்தில் உள்ள மேற் கூரையின் முன்பாகம். சிறு கருவிகள் வைக்குமிடம்.
கெஜ்ஜ	கெஜ்ஜை	வீட்டில் தெருத்திண்ணைக்கு அருகில் அமைக்கப்பட்ட அறை; விவசாயக் கருவிகள் வைத்துப் பாதுகாக்குமிடம்.
பரண்டு பெரண்ட	பரண்	வீட்டின் மேற்புறத்தில் கூரைக்குக் கீழ் அமைக்கப்படும் பந்தல். விவசாயக்கருவிகள் வைக்கும் இடம்.

9. விளைபொருள் பற்றிய பிறசொற்கள்

நெல், கரும்பு ஆகியவற்றின் அறுவடைக்குப் பின் அப்பாற் பட்ட சில சொற்களும் பிற விளைபொருள் பற்றியசொற்களும் இத்தலைப்பில் விளக்கப்படுகின்றன.

நெல்லுக்கடுத்தபடியாகச் செங்கற்பட்டு மாவட்டத்தில் பயிரிடப்படுவது வேர்க்கடலையாகும். இது நிலக்கடலை, கடலைக்காய், மணிலாக் கொட்டை என்று பலவிதமாகச் சொல்லப்படுகிறது. இதில் கொத்துக்காய், கொடிக்காய் என்று இருவகை உண்டு. கொடிக்காய் 120 நாள் பயிர். இது தரை யில் படர்ந்து வேர் ஊன்றும் இடங்களில் எல்லாம் காய்க்கும் தன்மை உடையது. மண்வெட்டியால் செடியின் வேரைக் களைந்தெடுத்து காய் பறிக்க வேண்டும். இப்பொழுது இஃது அதிகமாகப் பயிரிடப்படுவதில்லை. இவ்வகை நிலக்கடலையை விட அதிக அளவு விளைவு தரக்கூடியதாக இன்று அதிக மாகப் பயிரிடப்படுவது கொத்துக்காய் வகையாகும். இது 100

நாள் பயிராகும். நிலம் ஈரமாக இருக்கும் தருணத்தில் பிடுங்கி எடுக்கப்பட்டு காய் பறிக்கப்படும். வேர்க்கடலையைச் செடியி லிருந்து அடித்து எடுத்தால் விதைக்குப் பயன்படாது. அதனால் விதைக்கு வேண்டுவோர் செடியிலிருந்து காய்களைப் பறிப்பர்.

மானவாரி வேர்க்கடலையை விட நீர் இறைத்து விளை விக்கப்படும் இறைப்புக்காயில் பருப்பு பருமனாகவும் விளைவு மிகுதியாகவும் கிடைக்கும். இவ்வகை நிலக்கடலையில் சின்ன கொத்து, சிவப்பு கொத்து, ஜே. எல். கொத்து என மூவகை உண்டு. சின்ன கொத்து என்பது பருப்பு சிறியதாயும் வெண்ணிறமுடையதாயும், சிவப்பு கொத்து என்பது பருப்பு சின்ன கொத்து பருப்பளவும் சிவப்பு நிறமுடையதாயும், ஜே. எல். கொத்து என்பது பருப்பு பெரியதாயும் விளைச்சல் சற்று அதிகம் காண்பதாயும் இருக்கும்.

மானவாரி பயிராகக் கொல்லைமேட்டில் ஆண்டுக்கு இருமுறை வேர்க்கடலை பயிரிடுவர். இத்துடன் துவரை, உளுந்து, காராமணி எள், பச்சைப்பயறு, கம்பு முதலியனவும் சேர்த்துப் பயிரிடுவர். இப்பயிர்களை 'ஊடுபயிர்' என்பர். இவற்றில் துவரை ஆறுமாதப் பயிராதலால் ஆண்டுக்கு ஒரு முறை வேர்க்கடலையைப் பயிரிடுபவர்களே துவரையைச் சேர்த்துப் பயிரிடுவர்.

நெல்பயிரின் அடிப்பகுதி 'தாள்' என்று சொல்லப்படுவது போல் கேழ்வரகு, கம்பு, சோளம் ஆகிய பயிர்களின் அடிப் பகுதி, 'தட்டு' என்று சொல்லப்படுகிறது. கேழ்வரகில் சிவந்த நிறமுடைய கேழ்வரகை 'வெள்ளைச் சுருட்டை' எனவும் கருஞ்சிவப்பு நிறமுடைய கேழ்வரகைக் 'கருஞ்சுருட்டை' எனவும் கூறுவர். கேழ்வரகின் மேலுள்ள மெல்லிய தோல், 'ஆடை' என்வும் ஆடைக்கு மேலுள்ள தோலைக் 'கொங்கை' எனவும் கூறுவர் வெள்ளைக் கேழ்வரகை நடவும் விதைக்கவும் செய்வர். சிவப்புக் கேழ்வரகை கலப்பையில் அதிகம் விதைப்பர்.

கம்பில் கம்பு நீக்கப்பட்ட கதிரைக் 'கங்க்கி' (கங்கு) என்பர். இதனைக் 'குங்கு' என்பதும் உண்டு. கம்புக்கு மேலுள்ள தோலை 'மூனை' என்பர்.

சவுக்கு, துவரை முதலியவற்றின் கிளைப்பகுதிகளை 'மிலாறு' என்பர். கரும்பின் இலைகள் சுணையுடையதாயிருக் கும். சுணையுடைய இவ்விலைகளைச் 'சோணை' என்பர்.

சோணைகள் யாவும் மயிலின் தோகைபோல் கரும்பின் நுனிப்பகுதியில் தொகுக்கப்பட்டு விரிந்து காணப்படுதலால் சோணையைத் 'தோகை' [1] என்பாரும் உண்டு. சோணை, தோகை ஆகிய சொற்களின் சேர்க்கையால் மக்கள் தங்கள் பழக்கத்திற்கேற்பச் சோணையைச், சோகை, சோலை, சோழை என்றும் வழங்குவர்.

மிளகாயில் கார்மிளகாய், சம்பா மிளகாய், நாட்டு மிளகாய் மூன்று வகை உண்டு. கார்மிளகாயை மழை மிளகாய், நீட்டு மிளகாய் என்றும் கூறுவர். இது காரம் உடையது; மழைக்காலத்தில் பயிரிடப்படுவது. சம்பா மிளகாயைக் குண்டு மிளகாய் என்பர். இது காரம் உடையது; மழை தாங்காது; விலை அதிகம் உடையது. நாட்டு மிளகாய் என்பது நீ மா யிருக்கும்; காரம் குறைவு. மழைக்காலம் கழித்துப் பயிரிடப் படுவது. கப்பல் மிளகாய் என்று மரம்போல் வளரக் கூடிய பிறிதொரு வகையும் உண்டு. இதுமிகுதியான காரம் உடையது. இவ்வகை மிளகாய் மதுராந்தகம் வட்டத்தில் விளைவிக்கப் படுகிறது.

தென்னைமரம் செய்யூர் வட்டத்தில் கடப்பாக்கத்தில் அதிகமாகவும் பிற வட்டங்களில் பரவலாகத் தோப்பாகவும் வீட்டின் பின்புறத்திலும் வளர்க்கப்படுகிறது. பலவட்டங்களில் தென்னம் பூவினின்றும் காய்க்கும் தேங்காயின் ஆரம்பப் பகுதி யான 'குரும்பை' என்ற பெயர் அறியாதவர்களாக உள்ளனர். தென்னம்பிஞ்சி அல்லது தேங்காய்ப் பிஞ்சி என்றால் தான் தெரிகிறது.

வெற்றிலை செங்கற்பட்டு - எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் மதுராந்தகம் வட்டத்தில் மதுராந்தகம், கருங்குழி, கத்தரிச்சேரி ஆகிய இடங்களில் பயிரிடப்படுகிறது. வெற்றிலைக் கிடங்கின் ஆழம் 5 முதல் 6 அடியாகும். வெற்றிலைக்கு, அதன் கொடியில் மூன்று நான்கு கணுக்களே விதையாகிறது. வெற்றிலைக்கு நிழல் அவசியமாதலால் விதையாகக் கொடி நடுவதற்கு முன்னால் அகத்திக்கால், பேய்க்கரும்பு, ஜவுண்டில் மரம், பப்பாளி முதலியன ஓரிரு மாதங்கள் முன்னதாக வளர்க்கப்படு

---

1 இலக்குவனார். சி. 'பழந்தமிழ்' மூன்றாம் பதிப்பு (புதுக் கோட்டை, வள்ளுவர் பதிப்பகம், ஆகஸ்டு 1970), ப. 145.

கின்றன. ஏழு அல்லது பத்து நாட்களுக்கு ஒரு முறை வெற்றிலை பறிப்பர். ஒரு நாளைக்கு 72 கவுளி பறிப்பர். வெற்றிலை மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை பயிரிடப்படும். வெற்றிலை பறிப்பவரைக் கிள்ளுக்காரர் என்பர். இவர்கள் வெற்றிலையைப் பறிக்க விரலில் இரும்பு நகம் ஒன்றை அணிகின்றனர்.

இனி, நெல், கரும்பு தவிர்ந்த பிற விளைபொருள் பற்றிய சொற்களின் பொருள் விளக்கம் காணலாம்.

பேச்சு வழக்கு	**எழுத்து வழக்கு**	**பொருள்**
ஆட	ஆடை	கேழ்வரகின் மேலுள்ள மெல்லிய தோல்.
இலாபக்காய்	இலாபக்காய்	அதிகப்படியாகக் கொடுக்கப் படும் காய்.
உமி	உமி	நெல்லின் மேல்தோல்.
ஊடுபயிரு	ஊடுபயிர்	புன்செய்நிலத்தில் முதன்மை யாகப் பயிரிடப்படும் பயிர்களுக் கிடையே பயிரிடப்படும் வேறு பயிர்கள்.
எள்நீரு எளநீரு	இளநீர்	தேங்காயில் பருப்பு பிடிக்காது நீர் நிரம்பியிருக்கும் நிலை.
எறப்புகா	இறைப்புக்காய்	நீர் இறைத்து விளைவிக்கப்பட்ட வேர்க்கடலை.
ஏடு	ஏடு	வாழைஇலையில் பாதி.
ஒட்டுரகம்	ஒட்டுரகம்	புதியவகை.
ஓல	ஓலை	தென்னை ஓலை, பனை ஓலை.
கங்க்கி	கங்கு	கம்பு நீக்கிய கதிர்.
கடனக்காய்	கடனக்காய்	இலாபக்காய்.
கண்ணாடி எல	கண்ணாடி இலை	வாழைமரத்தில் குலை தள்ளுவ தற்கு முன்பு வரும் இறுதிச் சிறு இலை.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கணு	கணு	கரும்பு, மூங்கில், வெற்றிலை மற்றும் மரங்களில் மேலும் கிளைத்து வரும் பகுதி.
கத்திரி நாத்து	கத்தரி நாற்று	கத்தரிச் செடியின் இளம் பருவம்.
கத்திரி மண்ட	கத்தரிமண்டை	வேருடன் கூடிப் பிடுங்கப்பட்ட உலர்ந்த கத்தரிச் செடி.
கப்ப மொளகா	கப்பல்மிளகாய்	மரம்போல் வளரும் மிளகாய்ச் செடியினின்றும் காய்க்கும் காய்; காரம் மிகுதியாய் உடையது.
கம்பந்தட்டு	கம்பந்தட்டு	கம்புக்கதிர் நீக்கிய கம்புப் பயிரின் அடிப்பகுதி.
கருஞ் சுருட்டு	கருஞ்சுருட்டு	சிவப்புக் கேழ்வரகு.
களக்கா	கடலைக்காய்	வேர்க்கடலை.
காக்கா மொளக்கா	காக்கை மிளகாய்	சிறியதும் அதிக காரமும் உடைய மிளகாய்.
கார் மொளக்கா	கார் மிளகாய்	மழைமிளகாய்.
காஞ்ச சோண	காய்ந்தசோணை	உலர்ந்த சோணை.
கீத்து	கீற்று	தென்னையின் நடுமட்டை இரண்டாகக் கிழிக்கப்பட்டு ஓலையை விரித்து முடையப்படுவது.
கீத்து முடைதல்	கீற்றுமுடைதல்	தென்னை ஓலையால் கீற்று பின்னுதல்.
குங்கு	குங்கு	கங்கு.
குண்டுகதிர்	குண்டுக்கதிர்	கேழ்வரகில் கதிர் குண்டாக உள்ள பழைய வகை.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
குண்டு மொளக்கா	குண்டு மிளகாய்	மிளகாயில் ஒரு வகை.
குருத்தோல	குருத்தோலை	இளம் ஓலை.
குரும்பி	குரும்பை	தென்னம்பூவினின்றும் காய்க்கும் தேங்காயின் ஆரம்பநிலை.
குள்ளகெவுரு	குள்ளக் கேழ்வரகு	மூன்று மாதத்தில் விளையும் கேழ்வரகுப் பயிரில் ஒரு வகை.
கூராம்பாள	கூராம்பாளை	தேங்காய்க்குலையைத் தாங்கியிருக்கும் மட்டை,
கூராமட்ட	கூராம்மட்டை	கூராம் பாளை.
கூளம்	கூளம்	வைக்கோல் தூள், பதர்களின் குவியல்.
கெவ்ரு, கெவுரு, கேவ்ரு, கேவுரு	கேழ்வரகு	தானிய வகையுள் ஒன்று.
கெவுரு தட்டு, கேவுரு தட்டு	கேழ்வரகுத் தட்டு	கதிர் நீக்கப்பட்ட கேழ்வரகுப் பயிரின் அடிப்பகுதி.
கொங்க	கொங்கை	கேழ்வரகுக் கதிரில் கேழ்வரகின் ஆடைக்கும் மேலுள்ள தோல்.
கொசுறு	கொசுறு	அளவுக்குமேல் சிறிதளவு கொடுத்தல்.
கொட மொளக்கா	குடமிளகாய்	காரமில்லா பெரிய மிளகாய்; சாம்பார் மிளகாய்.
கொடிக்கா	கொடிக்காய்	வேர்க்கடலையில் ஒருவகை.
கொத்துக்கா	கொத்துக்காய்	வேர்க்கடலையில் ஒரு வகை.
	சின்னக்கொத்து	வெள்ளைப் பருப்பு; சிறியது.
	சிவப்புக் கொத்து	சிவப்புப் பருப்பு; ஐ. ஆர். 8.
	ஜே. எல். கொத்து	பருப்பு பெரியது; விளைச்சல் அதிகம் காணும்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
சுவுக்கு மலார் கழித்தல்	சவுக்கு மிலாறு கழித்தல்	சவுக்கின் கிளைகளை ஆண்டிற்கு இருமுறை கழித்தல்.
சாம்பார் மொளக்கா	சாம்பார் மிளகாய்	குடமிளகாய்
செக்க மட்ட	சக்கை மட்டை	முற்றிய வாழை இலை; கரும்பச்சை நிறமுறையது; விலை குறைவு.
செங்காய்	செங்காய்	காயும் பழமும் இல்லாத நிலையுடைய காய்.
செடி அம்பாரம்	செடி அம்பாரம்	பிடுங்கி எடுத்த வேர்க்கடலைச் செடிகளின் குவியல்
செரவு கெழித்தல்	சருகு கழித்தல்	மிலாறு கழித்தல்.
செவப்பு கேவுரு	சிவப்புக் கேழ்வரகு	நான்குமாதப் பயிராக உள்ள கேழ்வரகுப் பயிரின் வகை.
சேதாரம்	சேதாரம்	வீணானவை.
சோக	தோகை	கரும்பின் இலைகள்.
சோண	சோணை	இலை, காய் முதலியவற்றின் மேலுள்ள சிறுமுள்; சுணை யுடைய தழை.
சோணகட்டு	சோணைக்கட்டு	கழிக்கப்பட்ட சுணையுடைய தழைகளைச் சேர்த்துக் கட்டிய கட்டு.
சோண கழித்தல்	சோணை கழித்தல்	கரும்பின் உலர்ந்த தழைகளைக் கழித்தல்.
சோணய அறுத்தல்	சோணையை அறுத்தல்	கேழ்வரகுப் பயிரில் தாள் நீளமாதலைக் குறைக்க அதனை அறுத்தல்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
சோணய கொள்த்தல்	சோணையைக் கொளுத்துதல்	கரும்பு வெட்டிய நிலத்தில் உள்ள சோணைகளை எருவிற்காகக் கொளுத்தி விடுதல்.
சோல	சோலை	கரும்பு, கம்பு, சோளம் முதலியவற்றின் தழைகள்.
சோழ	சோழை	சோலை.
கொப்பர	கொப்பரை	எண்ணெய் ஆட்டியெடுப்பதற்குரிய அளவில் முற்றிய தேங்காய்.
கொய்லரிசி	கொழியலரிசி	நெல்லினின்றும் உமியை மட்டும் நீக்கப்பட்ட அரிசி.
கொல்ல கேவுரு	கொல்லைக் கேழ்வரகு	கொல்லையில் விதைத்துப் பயிரிட்ட கேழ்வரகு.
சக்க	சக்கை	சாறு எடுக்கப்பட்ட கரும்பு; கேழ்வரகு, சோளம் நீக்கப்பட்ட கதிர்.
சம்பா மொளகா	சம்பாமிளகாய்	மிளகாய் வகையுள் ஒன்று.
சருகு	சருகு	உலர்ந்த இலை.
சவுக்கு கம்பம்	சவுக்குக் கம்பம்	சவுக்கு மிலாறு நீக்கப்பட்ட சவுக்கு மரத்துண்டு.
சவுக்கு நாத்து	சவுக்குநாற்று	சவுக்கு மரம் வளர்ப்பதற்குரிய நாற்று.
சவுக்குமலார்	சவுக்கு மிலாறு	சவுக்கு மரத்தின் கிளைப்பகுதி
சோள தட்டு	சோளத்தட்டு	சோளக் கதிர் நீக்கிய சோளப் பயிரின் அடிப்பாகம்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
தடுக்கு	தடுக்கு	தென்னையில் நடுமட்டை கிழிக்கப்படாமல் முடைதல்; நடுமட்டை இரண்டாகக் கிழிக்கப்பட்டு அவ்விரு மட்டைகளையும் இணைத்து முடையப்பட்டது.
தலவிரிச்சா(ன்) கதிர்	தலைவிரித்த கதிர்	கேழ்வரகின் கதிர்ப் பிரிவுகள் விரிந்திருத்தல். கேழ்வரகில் புதிய வகை; பனி ஈரத்திலேயே வளரக்கூடியது.
தவுடு	தவிடு	உமியின் துகள்.
தூறு கெழித்தல்	தூறு கழித்தல்	மிலாறு கழித்தல்.
தென்ன அலவு	தென்னை அலகு	தென்னை ஓலையின் நடுவிலுள்ள நரம்பு.
தென்ன ஈர்க்கு	தென்னை ஈர்க்கு	தென்னை அலகு.
தென்னம் பிஞ்சி	தென்னம்பிஞ்சு	குரும்பை.
தென்ன மட்ட	தென்னை மட்டை	தென்னை ஓலைகளையுடைய மட்டை.
தேங்கா பிஞ்சி	தேங்காய்ப் பிஞ்சு	கரும்பை.
தொவர மலார்	துவரை மிலாறு	உலர்ந்த துவரைச் செடி.
நாட்டு மொளக்கா	நாட்டு மிளகாய்	நீளமான மிளகாய், மழைக் காலம்கழித்துப்பயிரிடப்படுவது. காரம் குறைவு.
நிலக்கடல	நிலக்கடலை	வேர்க்கடலை.
நீட்டு மொளக்கா	நீட்டுமிளகாய்	மழை மிளகாய்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
நுமுட்டி பார்த்தல்	நிமிட்டிப் பார்த்தல்	நெல், கேழ்வரகு முதலிய தானியங்கள் குற்றுவதற்குப் பக்குவமான நிலையில் உள்ளதா என்பதறியக் கையால் தேய்த்துப் பார்த்தல்.
நூக்கு	நூக்கு	நெல்லின் முளைப் பகுதி.
நெட்ட கெவுரு	நெட்டைக் கேழ்வரகு	ஐந்து மாதத்தில் விளையும் கேழ்வரகுப் பயிரில் ஒருவகை.
நெத்து	நெற்று	மீண்டும் முளைப்பதற்குரிய அளவில் முற்றிய காய்.
நெல்லு	நெல்	உணவாக அமையும் முக்கிய விளைபொருள்களில் ஒன்று.
நெல்லொழித்தல்	நெல்லொழித்தல்	நெல்லை அவித்தல்.
நொய்யி	நொய்	அரிசித்துகள்.
நோம்புதல்	நோம்புதல்	தானியங்களைக் கொழித்தல்.
பச்சசோண	பச்சைசோணை	பசுமையான சோணை.
பசுங்கா	பசுங்காய்	முற்றாத பச்சையான நெல், கேழ்வரகு முதவியன.
பட்றகா	பட்டறைக்காய்	இறைப்புக்காய்.
படவிட்டம்	படவிட்டம்	விட்டங்கட்டுதலில் பாதியமைப்பில் கட்டப்பட்ட கட்டமைப்பு. வெற்றிலைக் கொடிகளுக்காகக் கட்டப்படுவது.
பணப்பயிரு	பணப்பயிர்	வாணிகப்பயிர். அதிக வருவாய் தரும் புகையிலை, கரும்பு, வாழை, வெற்றிலை முதலிய பயிர்கள்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பதியங் கன்னு	பதியங் கன்று	சவுக்கு விதை நாற்றங்காலிலிருந்து பிடுங்கிய நாற்று. சவுக்கு நாற்றாக வளர்ப்பதற்குரியது.
பதியந் நாத்து	பதியந்நாற்று	பதியங்கன்று.
பறிக்கா	பறிக்காய்	செடியினின்றோ மரத்தினின்றோ பறிக்கப்பட்ட காய்.
பாள	பாளை	தென்னம் பூவினையுடைய மட்டை.
பிஞ்சி	பிஞ்சு	காயின் தொடக்க நிலை.
புதியரகம்	புதியரகம்	ஒட்டுரகம். புதுவகைக் கேழ்வரகு; காய்ச்சல் தாங்கும்.
பூரி அரிசி	பூரியரிசி	கொழியலரிசி.
பென்னாட	பன்னாடை	பன்னாத ஆடை. தென்னை, பனை மட்டைகளை மரத்துடன் சேர்த்துப் பிடித்திருக்கும் நார்ப்பகுதி.
பொட்டு	பொட்டு	உளுந்து, துவரை முதலிய தானியங்களின் சிறுதுகளுடன் கூடிய தோல்.
போத்து	போர்த்து	இலுப்பங்கொட்டையில் மிகப்பெரியதாயிருப்பது.
போத்து வருதல்	போர்த்து வருதல்	கிளைத்து வருதல்.
மச்ச கொட்ட	மொச்சைக் கொட்டை	தானியப் பயறு வகையுள் ஒன்று.
மணிலா கொட்ட	மணிலாக் கொட்டை	வேர்க்கடலை.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
மரக்கா பிரி	மரக்கால் புரி	விற்பனை செய்வதற்காக மரக்கால் போல் பருமனாகத் திரைக்கப்பட்ட வைக்கோல்
மல்லா கொட்ட மள்ளா கொட்ட மள்ளாட்ட மளா கொட்ட மளாட்ட	மணிலாக் கொட்டை	நிலக்கடலை.
மழ மொளக்கா	மழைமிளகாய்	மழைக்காலத்தில் பயிரிடும் நீட்டுமிளகாய்; காரம்உடையது.
மறக்கா	மறக்காய்	உபயோகமற்ற புளியங்காய்.
மறுதாம்புக் கா	மறுதாம்புக்காய்	அறுவடை செய்யவிருக்கும் தருணத்தில் தோன்றும் புதிய கதிர்கள். இவை பயனற்றவை.
மூங்கல் மோவு	மூங்கில் மோவு	மூங்கில் கணு
மூன்	மூனை	கம்புமணிக்கு மேலுள்ளதோல்.
மெள்ளாட்ட	மணிலாக் கொட்டை	வேர்க்கடலை.
மோவு வருதல்	மோவுவருதல்	பூவில் மொட்டுஆரம்பித்தல்.
வங்காயம்	வெங்காயம்	உணவுப்பொருட்களாக விளை-விக்கப் படுவனவற்றுள் ஒன்று.
வாழகன்னு	வாழைக்கன்று	வாழைமரத்தின் ஆரம்பநிலை.
வெக்கதர	வைக்கோல் திரை	ஓர் ஆள் தூக்குவதற்குரிய அளவில் திரைக்கப்பட்ட வைக்கோல் கட்டு.
வெள்ள கேவுரு	வெள்ளைக் கேழ்வரகு	மூன்று மாதத்தில் வளரக் கூடிய கேழ்வரகுப் பயிரின் ஒரு வகை.

வெள்ள சுருட்ட	வெள்ளைச் சுருட்டை	வெள்ளைக் கேழ்வரகு.
வேர்க்கல்ல	வேர்க்கடலை	நிலக்கடலை.
ஜோட்டான்	ஜோட்டான்	நீண்ட புளியம்பழம்.

10. பயிரைத் தாக்கும் பூச்சிகளும் நோய்களும்

பயிர் உற்பத்திச் செய்தலில் பயிரைத் தாக்கும் பூச்சிகளையும் அவற்றுக்கு உண்டாகும் நோய்களையும் பற்றிய சொற்களின் பொருள் விளக்கம் இத்தலைப்பில் காணலாம்.

பயிர்களின் இலைகளைத் தாக்கும் பூச்சிகளாக அசறு, அவறைச் சீடை, இலை சுருட்டுப் பூச்சி, ஊரப்பூச்சி, குருத்துப் பூச்சி அல்லது புழு (சொண்டைப் பூச்சி,) நவுத்தடிப் பூச்சி, மஞ்சா பூச்சி எனப் பல்வேறு வகைகள் சொல்லப்படுகின்றன. வட்டத்தின் பழக்கத்திற்கேற்ப பூச்சிகளின் பெயர்கள் வழங்கப் படுகின்றன. பூச்சிகளால் இலை அழிக்கப் படுதலினால் பயிரின் வளர்ச்சி குன்றிப் பாழாகிறது.

பயிரின் தண்டைத் தாக்கும் பூச்சியினைத் தண்டுத் துளைப் பான் என்கின்றனர். வேரைத் தாக்கும் பூச்சிகளைப் பிள்ளைப் பூச்சி, வேர்ச்செதிள், வேர்த்துளைப்பான் என்றெல்லாம் கூறு கின்றனர்.

பயிரின் கதிரை அழிப்பனவாக அன்னப்பூச்சி,பால்உறிஞ்சி, கதிர்ப்பூச்சி, அக்கினிரோகம், வயலெலி முதலியன சொல்லப் படுகின்றன.

நெல் சேமிப்புக் களங்களில் நெல்லை உள்ளீடற்றதாக்கும் பூச்சியினை ‘அந்து’ என்பர் மற்ற தானியங்களைத் துளைக்கும் பூச்சிகளை ‘வண்டு’ என்பர்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
அக்னி ரோகம்	அக்கினி ரோகம்	திடீரென்று பசுமை நீங்கிய நிலையில் காணப்படும்; கதிர் வந்தும் மகசூல் கிடைக்காது.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
அந்து	அந்து	நெல் சேமிப்புக் களங்களில் நெல்லைத் தாக்கும் சாம்பல் நிறமான பூச்சி. இதனால் நெல் உள்ளீடற்றதாகி விடும்.
அசற	அசறு	அவரைக்கொடியைத் தாக்கும் பூச்சி.
அவறசீட	அவறைச்சீடை	மிளகாய், கத்தரி இலைகளை அழிக்கும் பூச்சி.
அன்னபூச்சி	அன்னப்பூச்சி	பால்உறிஞ்சி.
உளுத்தல்	உளுத்தல்	பூச்சி, புழு அரித்துக் கெட்டுப் போதல்.
ஊர பூச்சி	ஊரப்பூச்சி	பயிரைத் தாக்கும் பூச்சி வகையுள் ஒன்று.
எலசுருட்டு பூச்சி / புழு	இலை சுருட்டுப் பூச்சி / புழு	பயிரைத் தாக்கும் பூச்சி வகையுள் ஒன்று.
கணுப்புழு	கணுப்புழு	தண்டுத் துளைப்பான்.
கதிர்பூச்சி	கதிர்ப்பூச்சி	குருத்துப்பூச்சி.
குருத்துபுழு	குருத்துப்புழு	பயிர்பச்சையாக இருக்க குருத்துப் பகுதி மட்டும் உலரச் செய்யும் புழு.
குருத்து பூச்சி	குருத்துப்பூச்சி	
கொக்கு நோவு	கொக்கு நோய்	நெல்லுக்கும் கால்நடைகட்கும் உண்டாகும் பெரியநோய்.
கொக்கு மெரித்தல்	கொக்குமிதித்தல்	நாற்று நட்டவுடன் நிலத்தில் உள்ள புழு, பூச்சிகளைத் தின்ன வரும் கொக்கின் காலால் இடறி, பயிர் பாழாதல்.
கொண்ட பூச்சி	கொண்டைப் பூச்சி	குருத்துப் பூச்சி.
சீடு அடித்தல்	சீடடித்தல்	பூச்சியடித்தல்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
சொத்த	சொத்தை	காய்களில் உருண்டைப் புழுவின் தாக்குதலால் ஏற்படும் குடைவு.
தண்டு தொளப் பான்	தண்டுத் துளைப்பான்	செடியின் தண்டுப் பகுதியைத் துளைத்து உலரச் செய்துவிடும் பூச்சி.
நவுத்தடி பூச்சி	நவுத்தடிப்பூச்சி	பயிரை வெண்மையாக்கும் பூச்சி.
நோய்பரவல்	நோய் பரவல்	பூச்சிகளால்பயிர் தாக்கப்படுதல்.
பச்ச பூச்சி புழு/	பச்சைப்பூச்சி/புழு	கத்தரியின் இலை, காயில் துளையிடும் பூச்சி.
பால் உறிஞ்சி	பாலுறிஞ்சி	கொசுவின் வடிவத்திலிருந்து கதிரில் பால் பிடிக்கும் பொழுது பாலைமட்டும் அருந்தும் பூச்சி.
புகையான்	புகையான்	பாலுறிஞ்சி.
புள்ளபூச்சி	பிள்ளைப்பூச்சி	மணிலாக் கொட்டையின் வேரைத் தாக்கும் பூச்சி.
பூச்சி யடித்தல்	பூச்சியடித்தல்	பயிருக்கு நோய் உண்டாதல்.
பூச்சி மருந்து	பூச்சி மருந்து	பயிர், பூச்சிகளால் தாக்குண்ட பொழுது இடப்படும் மருந்து.
போலு	போலு	பூச்சியால் தாக்குண்ட உள்ளீடில்லாத காய்.
மஞ்சா பூச்சி	மஞ்சள் பூச்சி	பயிரைத் தாக்கும் ஒருவகைப் பூச்சி.
ரோகம்	ரோகம்	மிளகாய் பிடிப்பு இல்லாமல் வெளுக்கச் செய்யும் நோய்.
வதங்கி போதல்	வதங்கிப்போதல்	வாடிப்போதல்.
வயலெலி	வயலெலி	கதிர்களையும் குருத்தையும் தின்று அழித்து வயலில் வாழும் எலி.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
வாடிப் போதல்	வாடிப்போதல்	உலர்ந்துபோதல்.
வெம்பல்	வெம்பல்	காய் பழுக்காமல் கெடுவது.
வேர் செதிளு	வேர்ச்செதிள்	கரும்பு, சவுக்கு ஆகியவற்றின் வேரைத் தாக்கும் கறையான்.
வேர் தொளப் -பான்	வேர்த் துளைப்பான்	வேர் துண்டிக்கப் படுதலினால் செடி உலர்ந்து போகச் செய்யும் பூச்சி.
என்ட்ரின்	என்டிரின் (ஆ.)	திரவ வடிவத்திலுள்ள பூச்சிக் கொல்லி மருந்து.
பூச்சிபவுடர்	பூச்சிப் பவுடர் (த. + ஆ.)	மாவு நிலையிலுள்ள பூச்சிக் கொல்லி மருந்து.

இயல் — 5

உழவுத் தொழில் சார்புடைய சொற்கள் பொருள்வழிப் பாகுபாடு – 2

கள ஆய்வில் சேகரிக்கப்பட்ட சொற்களுள் உழவுத் தொழிலோடு தொடர்புடையனவற்றை இரண்டாம் இயலில் கூறியவை போக எஞ்சிய சொற்கள்,

1. கிராமத் தொழிலாளர்கள்
2. அளவைப் பெயர்கள்
3. வண்டியின் பாகங்கள்
4. மாட்டின் நிறம், சுழி, கொம்பு முதலியன
5. மாட்டுத் தரகர் பேச்சு மொழி
6. ஆட்டின் நிறங்களும் நோய்களும்

ஆகிய ஆறு தலைப்புகளில் பொருள்வழிப் பாகுபாட்டின் அடிப்படையில் பிரித்துப் பொருள் விளக்கம் காணப்படுகின்றன.

1. கிராமத் தொழிலாளர்கள்.

உழுதொழிலை மேற்கொண்டு வாழும் 'கிராமத் தொழிலாளர்கள்' பற்றிய சொற்கள் இவ்வியலின் முதலில் விளக்கப்படுகின்றன.

உழவுத் தொழிலில் ஆண்கள், பெண்கள் ஆகிய இருபாலாரும் ஈடுபட்டாலும் உழவின் உட்பிரிவுத் தொழில்களில் இந்தந்த தொழில்களை இவர்தாம் செய்ய வேண்டும் என்ற நியதி உள்ளது.

'தாசியவள் நாற்றெடுத்தால் - எங்க
தர்மமெல்லாம் பாழாகும்.'

'ஆண் பிள்ளையா நாற்றெடுத்தால்-நாங்க
அணை அணையா நெல்லறுப்போம்' [1]

என்ற செங்கற்பட்டுஎம்.ஜி.ஆர்.மாவட்ட நாட்டுப்புறப்பாடல் வாயிலாக நாற்றெடுத்தல் ஆண்களே செய்ய வேண்டும் என்பது புலப்படுகிறது.

கூலிக்கு வேலை செய்யும் ஆண்களை ஆணாளு என்றும் பெண்களைப் பொண்ணாளு என்றும் கூறுவர். ஒரு கிராமத்தில் மிகுதியான நிலம் வைத்துக் கொண்டு பயிரிடுபவரை நிலக் கிழார் என்பது பொதுவான வழக்கு. அவரைக் 'கம்பத்தாள்' என்பது செங்கற்பட்டு வட்ட வழக்காக உள்ளது. நிரந்தர மாக ஒருவருக்கு நிலத்தில் வேலை செய்யும் கூலியாளைப் படி யாள் என்பர். பத்துப் படியாளுக்குத் தலைவராய் உள்ளவரை 'ஆராசி ஆளு' (ஆராய்ச்சியாள்) என்பர்,

ஏரிநீரை நிலங்களுக்குப் பங்கிட்டுத் தருபவரை இன்று பொதுவாக 'நீர்க்கட்டி' என்கின்றனர். அவரைக் 'கம்முக் கட்டி' என்று இன்றும் வழங்குவது தொன்மையான பெயராக உள்ளது என்பதனைக் 'கம்'[2] என்ற சொல் தொல்காப்பியத்தில் நீர் என்ற பொருளில் வந்துள்ளமையால் அறியவருகிறது. இச் சொல் தமிழ்ப் பேரகராதியில் 'கம்புகட்டி'[3] என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

பயிர்க் காவலாளியைப் 'பந்தல்காரன்' என்பது ஊத்துக் கோட்டை வட்ட வழக்காக உள்ளது. கிராமத்தில் தோட்டி என்பவர் மக்களின் பொது நலன்களுக்காக உள்ளவர். தலை யாரி, வெட்டியான் ஆகிய இருவரும் அரசாங்கத்தால் நியமிக்கப்படும் கிராம ஊழியர்கள் ஆவர்.

கிராம நிர்வாகத்திற்கென அரசாங்கத்தால் கிராம நிர்வாக அலுவலர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். கிராமத்தில் மக்களின் நலனுக்காகப் பாடுபடும் ஒருவரைப் 'பெருத்தனக்

---

1. வளவன். சா. செங்கற்பட்டு மாவட்டம், தமிழ் நாட்டுப் புற இயல் ஆய்வு, சா. வே. சுப்பிரமணியன் (பதி.), (சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், செப்டம்பர் 1979) ப. 200.
2. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (மு. கா. நூ.) நூ. 329. பக்கம். 332.
3. தமிழ்ப் பேரகராதி. தொ.2 (மு. கா. நூ) ப. 728.

காரர்' அல்லது 'நாட்டாண்மைகாரர்' என்பர். கரும்பு வெட்டுபவர்களைப் பதிற்றுப்பத்து, 'அறைநர்'[1] என்கிறது.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
ஆணாளு	ஆணாள்	கூலிவேலை செய்யும் ஆண் ஆள்.
ஆண்ட	ஆண்டை	முதலாளி
ஆராசிஆளு	ஆராய்ச்சியாள்	பத்துப்படியாளுக்குத் தலைவர்.
ஆளுங்க	ஆட்கள்	கூலி வேலை செய்பவர்கள்.
கம்பத்தாள்	கம்பத்தாள்	நிலக்கிழார்.
கம்பு குட்டி, கம்பு வெட்டி, கம்மு குட்டி, கம்முட்டி	கம்முக்கட்டி	ஏரி நீரை வயல்களுக்குப் பங்கிட்டுத் தருபவர்.
கிள்ளுகாரர்	கிள்ளுக்காரர்	வெற்றிலை பறிப்பவர்
கூலி ஆளு	கூலி ஆள்	கூலிக்கு வேலை செய்பவர்.
சம்சாரி	சம்சாரி	குடும்பததுடன் வாழும் குடியானவர்கள்.
தலயாரி	தலையாரி	அரசாங்கப் பணியாள்
தோட்டி	தோட்டி	கம்முக்கட்டி.
நடவாளு	நடவாள்	நடுவுத் தொழில் செய்யும் பெண் தொழிலாளி.
நாட்டாம	நாட்டாண்மை	கிராமத் தலைவர்.
நீர்கட்டி	நீர்க்கட்டி	கம்முக்கட்டி.
படியாளு	படியாள்	கூலியாள், வேலையாள்.

1. சாமிநாதையர். உ.வே.(பதி)பதிற்றுப் பத்து,(மு.கா.நூ.) பா. 19:22 ப. 28.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பந்தல் காரன்	பந்தல்காரன்	பயிர்க்காவலாளி
பெருத்தனக் காரர்	பெருத்தனக் காரர்	நாட்டாண்மை
பெருவிவ சாயி	பெருவிவசாயி	நாட்டாண்மை
பொண் ணாளு	பெண்ணாள்	கூலி வேலை செய்யும் பெண்ணாள்
வெட்டியா (ன்) வெட்யா (ன்)	வெட்டியான்	அரசாங்கத்தால் நியமிக்கப்படும் கிராம ஊழியர்.
வெட்றவங்க	வெட்டாள்	கரும்பு வெட்டும் கூலியாள்.

2. அளவைப் பெயர்கள்

உழு தொழில் மேற்கொள்ளும் உழவர்கள், வேளாண்மைத் தொழிலில் பயன்படுத்தும் 'அளவைப் பெயர்கள்' பற்றிய சொற்கள் இத்தலைப்பில் விளக்கப்படுகின்றன.

நெல் அளத்தலில் முதல் மரக்காலை 'இலாபம்' என்றும் இரண்டாம் மரக்காலை 'ரெண்டு' என்றும் எண்ணிக் கொண்டே சென்று பத்தாம் மரக்கால் அளவை 'ஒருவது, என் கின்றனர். பத்தின் மடங்கில் சொல்லும் முறையில் முதல் பத்தை 'ஒருவது' (ஒருபது) என்கின்றனர் போலும்.

நான்குபடி அளவை மரக்கால் என்று பொதுவாக எல்லா வட்டங்களிலும் சொல்ல, ஊத்துக்கோட்டை வட்டப் பகுதியில் மட்டும் 'ஜோடு' என்று கூறுகின்றனர். மரக்காலில் இடத்திற் கேற்ப சின்ன மரக்கால், பெரிய மரக்கால், சட்டி மரக்கால், வால் மரக்கால் என்று வழங்கி வருதலுடன் அவற்றினிடையே அளவும் சற்று வேறுபடுகிறது. எடுத்துக்காட்டாக, பொன்னேரி, கும்முடிப்பூண்டி வட்டங்களில் எட்டுப்படி

என்பது ஒரு ஜோடு அளவு என்று கூறுகின்றனர். அஃது இரண்டு மரக்காலுக்குச் சமம் ஆகிறது.

ஊத்துக்கோட்டை, திருத்தணி, பள்ளிப்பட்டு வட்டங்களில் குழிக் கணக்கில் நில அளவு வழங்கப்படுகிறது. ஏக்கர் கணக்கில் வழங்குவதில்லை. ஊத்துக்கோட்டையில் 10 செண்ட்டு ஒரு குழி என்ற அளவில் ஓர் ஏக்கருக்குப் பத்துக் குழி என்று கணக்கிடுகின்றனர். திருத்தணி, பள்ளிப்பட்டு பகுதிகளில் 15 குழி ஓர் ஏக்கர் என்கின்றனர். இவ்வாறு சில வட்டங்களில் தவிர மற்ற வட்டங்களில் நிலம் ஏக்கர், காணி கணக்கில் அளவிட்டுச் சொல்லப்படுகிறது. 'தடி' (தடியம்) என்ற அளவு பள்ளிப்பட்டு வழக்கில் இருந்ததாகவும் தற்பொழுது வழக்கில் இல்லை என்றும் கூறுகின்றனர்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
ஆழாக்கு	ஆழாக்கு	அரைக்காற்படி, 1 | 8 படி $\frac{1}{2}$ உழக்கு.
இலாபம்	இலாபம்	விளைபொருளை அளத்தலில் வழங்கப்படும் முதல் அளவு எண்.
8 எள்ளு	8 எள்	1 பொட்டு எண்ணெய்
ஏக்ரா	ஏக்கர்	நில அளவு. 100 செண்ட்டு. 10 குழி; 15 குழி
ஒருவது	பத்து	பத்தாவது எண்ணிக்கை
ஒழக்கு	உழக்கு	2 ஆழாக்கு, $\frac{1}{4}$ படி
கட்டு	கட்டு	400 வெற்றிலை
கலம்	கலம்	12 மரக்கால்
கவுளி	கவுளி	100 வெற்றிலை
காணி	காணி	133 செண்ட்டு.
குழி	குழி	$20 \times 10 \times 2 = 400$ க. அடி. பள்ள அளவு.
குறுணி	குறுணி	1 மரக்கால் அல்லது 8 படி.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
8 கேவுரு	8 கேழ்வரகு	1 குண்டு மணி கூழ்.
சின்ன மரக்கால்	சிறிய மரக்கால்	½ மரக்கால் அல்லது 3 படி.
செண்ட்	செண்ட்டு	436 சதுர அடி
சேரு	சேர்	படி, 5 ஆழாக்கு
சேருபடி	சேர்ப்படி	1படி அல்லது 8 ஆழாக்கு
தடி	தடியம்	2 வீசை
தாக்கு	தாக்கு	குழிக்கணக்கில் நீள அளவு
தூக்கு	தூக்கு	50 பலம், 1¼ வீசை.
பதக்கு	பதக்கு	2 மரக்கால் அல்லது 2 குறுணி
பள்ள	பள்ளை	2 படி
மரக்கா	மரக்கால்	2 பள்ளை, 4 படி
முக்குறுணி	முக்குறுணி	6 பள்ளை
மூட்ட	மூட்டை	16 மரக்கால்; 25 பள்ளை
மொந்த	மொந்தை	2 படி
ரெண்டு	இரண்டு	இரண்டாம் அளவு எண்.
வண்டி	வண்டி	8 மூட்டை
வால் மரக்கா	வால் மரக்கால்	மரக்கால்; 4 படி
வீச	வீசை	40 பலம்
கிரவுண்டு	கிரவுண்டு (ஆ.)	5½ செண்ட்டு, 60 '×40' = 2400 சதுர அடி
கிலோ	கிலோ [ஆ)	1000கிராம்
குவிண்டால்	குவிண்டால்	100 கிலோ கிராம்
யூணிட்	யூணிட் (ஆ)	1000 சதுர அடி அல்லது 2½ தாக்கு
லிட்டர் படி	லிட்டர் படி (ஆ+த.)	1 சேர் அல்லது 5 ஆழாக்கு
ஜோடு	ஜோடு	4 படி; மரக்கால் 2 மரக்கால் (வட்டார வழக்கு)

3. வண்டியின் பாகங்கள்

உழவர்கள் விவசாயத்தில் பயன்படுத்துவனவற்றுள் வண்டி முக்கிய இடம் பெறுதலால் 'வண்டியின் பாகங்கள்' பற்றிய சொற்கள் இங்கு விளக்கப்படுகின்றன.

வண்டியில் டயர் வண்டி, மாட்டு வண்டி, பெட்டி வண்டி, ரேக்கலா வண்டி என்று சில வகைகள் உண்டு. டயர் வண்டி என்பது வண்டிச் சக்கரத்தில் பயன்படுத்தப்படும் கருவியின் பெயரால் வழங்கப்படுவது. இதனை ட்ரக் வண்டி என்றும் கூறுவர். பெட்டி வண்டி, ரேக்கலா வண்டி என்பன வண்டியின் அமைப்பாலும் மாட்டு வண்டி என்பது வண்டியை ஒட்ட உதவும் விலங்கின் பெயராலும் வழங்கப்படுகின்றன.

மாட்டு வண்டியில் ஒற்றை மாட்டு வண்டி, இரட்டை மாட்டு வண்டி என்றிரு வகை உண்டு ஒற்றை மாட்டு வண்டி அதிக எடை இல்லாமல் பொருள்களை ஏற்றிச் செல்ல உதவும். இதன் நுகத்தடி சிறியது. இவ்வகை வண்டிகளிலுள்ள பார் நீளமுடையதாய் நுகத்தடியுடன் சேர்க்கப்பட்டிருக்கும். மாட்டு வண்டிகளில் இரட்டை மாட்டு வண்டியே விவசாயத்திற்கு அதிகமாகப் பயன்படுகிறது. எனவே அவ்வண்டியின் பாகங்களே இங்குச் சொல்லப்படுகின்றன. வண்டியிலுள்ள நுகத்தாணியை இலக்கியங்கள் 'பகலாணி' என்கின்றன.

பேச்சு வழக்கு	**எழுத்து வழக்கு**	**பொருள்**
அச்சாணி	அச்சாணி	கடையாணி.
அச்சி	அச்சு	வண்டியின் மையக்கட்டையையும் சக்கரத்தையும் இணைக்கும் இரும்புக் கம்பி.
அடபலவ	அடைபலகை	பக்கப் பலகை.
அள்ளு கம்பி	அள்ளுக்கம்பி	வண்டியச்சு.
ஆரக்கால்	ஆரக்காலு	வண்டி இலை.
இர்சு	இருசு	அச்சு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
உள்வா	உள்வாய்	குடத்தின் வாயுட் பகுதி.
எதிர்கட்ட	எதிர்க்கட்டை	வண்டி ஏர்க்காலை நிலத்தில் ஊன்ற உதவும் கட்டை.
எதிர்மண	எதிர்மணை	எதிர்க்கட்டை.
எதிர்முட்டு	எதிர்முட்டு	எதிர்மணை.
கட்டு	கட்டு	வண்டிச் சக்கரத்தைச் சுற்றியுள்ள இரும்புச் சட்டம்
கட்குச்சி	கடைக்குச்சு	அச்சாணி.
கடயாணி கடவாணி	கடையாணி	அச்சின் இரு கடைப்பகுதியிலும் இருக்கும் வண்டியின் சுழற்சிக்கு இன்றியமையாத கம்பி.
கூசி	கூச்சு	எருக்கூண்டுக்கு ஆதரவாக வண்டியின் இருபுறமும் பாரில் உள்ள துளையில் பொருத்தப் படும் கூர்மையாகச் சீவப்பட்ட கொம்பு.
கூசி கொம்பு தொள	கூச்சுக்கொம்புத் துளை	கூச்சுக் கொம்பு பொருத்தும் வண்டிப் பாரிலுள்ள துளை. ஒரு பாரில் ஏழு துளைகள் இருக்கும்.
கூண்டு	கூண்டு	வண்டிக் கூண்டு.
கூட்டா(ண்)	கூட்டாண்	கூச்சு
கொட கட்டு	குடக்கட்டு	குடம் முறியாமலிருக்க கட்டப் பட்டுள்ள இரும்பு வளையம்.
கொட பூணு	குடப்பூண்	கடையாணி.
கொடம்	குடம்	அச்சில் சுழலும் சக்கரத்தின் மையப் பகுதி; பன்னிரண்டு வண்டி இலைகள் பொருந்தும் பகுதி.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கோணா வட்டம்	கோணா விட்டம்	வண்டி ஏர்க்காலுக்கு இருபுறமும் பக்கத் துணையாகப் பாரின் கீழுள்ள இரு நீண்ட கோணலான மரக்கட்டைகள்.
சக்கரம்	சக்கரம்	ஆறு வட்டைகள் சேர்த்து உருவாக்கப்படும் சக்கரம்.
தடகுச்சி	தடைக்குச்சி	நுகத்தடித் துளைகளில் உள்ள குச்சிகள்.
தொட்டில் பத்த	தொட்டில் பத்தை	வண்டியின் முன் பகுதியில் ஏர்க்காலைத் தொடுமாறு பொருத்தப் பட்டுள்ள மூங்கில் பத்தைகள்.
தொப்ப கட்டு	தொப்பைக் கட்டு	குடக்கட்டு.
நவுத்தடி / நுவத்தடி	நுகத்தடி	மையத்தில் பருத்தும் ஓரத்தில் சிறுத்தும் உடைய நீண்ட உருளை வடிவ மரம். இரு ஓரங்களிலும் மாடுகளைப் பிணைத்து ஓட்ட உதவுவது.
நவுத்தடி கவுறு	நுகத்தடி கயிறு	நுகத்தடியை ஏர்க்காலுடன் இணைத்துள்ள கயிறு.
நவுத்தடி சங்கலி/ சங்லி	நுகத்தடிச் சங்கிலி சங்கிலி	நுகத்தடியையும் வண்டி ஏர்க்காலையும் இணைத்துள்ள இரும்புச் சங்கிலி.
நவுத்தடி தொள	நுகத்தடித் துளை	நுகத்தடியில் உள்ள இரு துளைகள்.
நவுத்தடி புள்ளார்	நுகத்தடிப் பிள்ளையார்	நுகத்தடியில் மத்தியிலுள்ள கொண்டை போன்ற கட்டை,
நவுத்தாணி	நுகத்தாணி	நுகத்தடியையும் ஏர்க்காலையும் இணைக்கும் ஆணி.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
நெம்பாணி	நெம்பாணி	பழுவில் தைக்கப்பட்ட ஆணிகள்.
நொயித்தடி	நுகத்தடி	நுகத்தடி.
பக்கபலவ	பக்கப் பலகை	பாருக்கும் ஏர்க்காலுக்கும் இடையில் பொருத்தப்படும் பலகை.
படல்சட்டம்	படல் சட்டம்.	கோணாவிட்டம்.
பழு	பழு	பார், படல் சட்டம், பக்கப் பலகை, ஏர்க்கால் ஆகிய நான்கையும் இணைக்கும் படியான நான்கு இரும்புப் பட்டைகள்.
பார்	பார்	வண்டியின் இருபுறமும் வண்டிச் சக்கரத்திற்கு அடுத்தும் கூச்சுத் துளைகள் உடையதுமான இரு மரக் கட்டைகள் அல்லது மையக் கட்டை.
பார் சட்டம்	பார்ச் சட்டம்	மையக் கட்டையுடன் இணைக்கப்பட்ட சட்டம்.
பார் மய்யத் தாணி	பார் மையத் தாணி	மையக் கட்டை, இருசு, வண்டி ஏர்க்கால் ஆகிய மூன்றையும் இணைத்துள்ள கம்பியாணி.
பாராணி	பாராணி	பார் மையத்தாணி.
மய்ய கட்ட	மையக் கட்டை	வண்டிச் சக்கரங்களுக்கிடையில் ஏர்க்காலின் கீழுள்ள பெரிய வலிமையான மரத்திம்மை.
மய்யத்தாணி	மையத்தாணி	நுகத்தாணி; பாராணி.
மேல் கட்ட	மேல் கட்டை	வண்டி ஏர்க்காலின் மேல் ஏர்க்காலின் முன் பக்கத்தில் சேர்த்திணைக்கப்பட்ட சிறு கட்டை.

வண்டி எல	வண்டி இலை	சக்கரத்தின் வட்டையையும் குடத்தையும் இணைக்கும் பன்னிரண்டு மரக்கட்டைகள்.
வண்டி ஏர்காலு	வண்டி ஏர்க்கால்	வண்டியின் மத்தியில் மையக் கட்டையின் மேல் நுகத்தடியுடன் பொருத்தப்பட்ட நீண்ட வலுவான மரக்கட்டை.
வண்டி வட்ட	வண்டி வட்டை	வண்டிச் சக்கரம் உருவாக்கப் பயன்படும் ஆறு வளைவான மரச்சட்டங்கள்.
வல்லி கவுறு, வலி கவுறு	வலிக் கயிறு	வண்டியில் வைக்கோல், மூட்டைகள் ஏற்றிச் செல்லும் பொழுது அவை கீழே விழாமல் இழுத்துக் கட்ட உதவும் கயிறு.

4. மாட்டின் நிறம், சுழி, கொம்பு முதலியன

மாடு உழவர்களின் பெருஞ்செல்வம் ஆனமையினால் மாடு பற்றிய சொற்களும் இவ்வாய்வில் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன. மாட்டில் பசு, எருமை என்று இருவகை உண்டு. பசு வகையுள் ஆண், எருது என்றும் பெண், பசு என்றும் அழைக்கப்படுகின்றன. எருமையில் ஆண், எருமைக்கடா என்றும் பெண், எருமை என்றும் சொல்லப்படுகின்றன. எருதின் இளமையினைச் சேங்கன்று என்றும் பசுவின் இளமையினைக் கிடேரி என்றும் வழங்குகின்றனர். எருமையின் இளமையினை நாவு (நாகு) கன்று என்றும் எருமைக் கடாவின் இளமையினை கடாக்கன்று என்றும் கூறுகின்றனர். ஒரு மாடு மொத்தம் பத்து முறை கன்று ஈனும் என்பர்.

எருதையோ எருமைக் கடாவையோ வண்டியிலும் ஏரிலும் பூட்டிப் பயன்படுத்தாமல் இனவிருத்திக்காகச் சில பயன் படுத்தப்படுகின்றன. அவற்றைப் பொதுவாகப் 'பொலி மாடு' என்பர். சிறப்பாக எருதில், பொலி எருது என்றும் எருமையில்

பொலிக்கடா என்றும் கூறுவர். வண்டியிலும் ஏரிலும் பயன் படுத்தப்படும் மாடுகளின் சிறுநீரகப் பையிலுள்ள விதைகள் செயற்பாடு அற்றுப் போகும்படி செய்து விடுவர். இதனைக் 'காயடித்தல்' என்பர்.

பால் கறக்கும் ஒரு குறிப்பிட்ட இனத்தவரைக் 'கிலேரி' (கீலாரி) என்பர்.

மாட்டின் சுழி, கொம்பு, நிறம், குளம்பு, பல், கால், வால் ஆகியவற்றின் தன்மைபற்றியும் மாட்டிற்கணியப்படும் மணிகள் பற்றியும் சுழியில் நல்லது தீயது ஆகியவையும் இங்கு விளக்கப்படுகின்றன. எருமைக்குச் சுழி இருக்காது. இருப்பது போல் காணப்படினும் அவை கணக்கில் எடுத்துக் கொள்ளப் படமாட்டா. பசுவுக்கும் எருதுக்கும் சுழி உண்டு. சுழியைக் கொண்டே அவற்றின் சிறப்பு அம்சத்தைக் கூறுவர்.

மாட்டின் உதட்டுப் பகுதியில் தண்ணீர் இல்லாமல் இருந்தால் மாட்டுக்கு நோய் வந்துவிட்டது என்பது பொருள். உதட்டில் பிறந்தது முதல் இறப்பு வரையில் நீர் இருந்து கொண்டே இருக்கும் என்பர்.

மாடுகளுள் கன்று இல்லாது பால் கறப்பதனைக் (கன்று ஈன்ற பின் கன்றினை இழந்தவை) கமலம் என்பர். இன்று கறவை மாடுகளுள் ஐம்பது விழுக்காடு இவ்வகை மாடுகளே ஊசி போடப்படுவதன் மூலம் கறக்கப்படுகின்றன. 'கன்று இருக்கும் பொழுதே கறக்கவில்லை, கமலம் கறக்குமா?' என்ற நாட்டுப்புறப் பழமொழி மூலம் கமலம் என்ற சொல்லின் பழைமையினை அறியலாம். இனி, மாடு பற்றிய சொற்களின் பொருள் விளக்கம் காணலாம்.

பேச்சு வழக்கு	**எழுத்து வழக்கு**	**பொருள்**
அஞ்சிகால் மாடு	ஐந்து கால் மாடு	வடக்கத்தியான் மாட்டுக்குரிய வேறு பெயர்.
அடி கண்ட மாடு	அடி கண்ட மாடு	கன்று ஈன்றவுடன் இளைக்கும் மாடு.
அடிமாடு	அடிமாடு	அறுப்புக்குக் கொடுக்கப்படும் மாடு
அடிபோடும் மாடு	அடிப் போடும் மாடு	ஆனை அடி.

பேச்சு வழக்கு	**எழுத்து வழக்கு**	**பொருள்**
அர்தல	அர்த்தலை	அல்தாரி.
அரைவால் மாடு	அரைவால் மாடு	வாலில் முடி குறைந்து முட்டிக்குக் கீழ்வாலுள்ள மாடு,
அல்தாரி	அலைதாடி	கழுத்தில் தசை தொங்கும் பகுதி
அழுகண்ணு மாடு	அழுகண் மாடு	கண்ணில் நீர் வடிந்து கொண்டிருக்கும் மாடு.
அள்ளு	அள்ளு	மாட்டின் மார்பெலும்புக் கூட்டுக்குப் பின் முதுகிலுள்ள குழிப்பாகம்.
அற	அறை	மாட்டின் மலவாய்ப் பகுதி.
ஆட்டு காம் (பு) மாடு	ஆட்டுக் காம்பு மாடு	ஆடு போல் மடியில் இரு காம்புகளே உடைய மாடு.
ஆண்டிப்பனூர் மாடு	ஆண்டியப்ப நல்லூர் மாடு	ஆண்டியப்ப நல்லூர் மாடு.
ஆர	ஆரை	அலைதாடி.
ஆறுகட்டு	ஆறுகட்டு	ஆறு பற்களுள்ள மாடு; கூடாதது. 'ஆறு கட்டு பாடை கட்டு' — பழமொழி.
ஆன அடி	ஆனையடி	கட்டுத்தளையில் அசைந்து கொண்டிருக்கும் இயல்புடையது,
இடிகொம்பு	இடிகொம்பு	கொம்பு மொக்கையாய்ப் பூ பட்டாற்போல் வெளுப்பாய் இருக்கும்; கூடாதது.
இடுப்பு	இடுப்பு	உறுப்பு.
ஈத்து	ஈத்து	கன்று ஈனுதல்.
ஈன சுழி	ஈனைச் சுழி	நடுமுதுகிற்கும் பின் முட்டிக்கும் இடையில் சற்று ஒதுங்கியிருக்கும் சுழி; கூடாதது

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
ஈனமாடு	ஈனமாடு	அண்மையில் கன்று ஈன்றுள்ள மாடு.
உடுப்பு	உடுப்பு	உறுப்பு.
உத்த வெள்ள	உத்த வெள்ளை	சீலத்தோல் மாடு; கூடாதது.
உள்பத்த	உள்பத்தை	குளம்பின் உள்பகுதி.
உள்மடி	உள்மடி	மடி பார்ப்பதற்குச் சிறியதாய் இருந்து பால் நிறைய தருவது.
உறுப்பு	உறுப்பு	கன்று ஈன்ற பின் வெளியாகும் குடற்பகுதி.
எறங்குபுற சுழி	இறங்குபுறச்சுழி	வாலின் பின் பக்கத்தில் மேற்புறத்திலிருந்து இறங்கு புறமாக உள்ள சுழி; கூடாதது.
ஏழுகட்டு	ஏழுகட்டு	ஏழு பற்களுள்ள மாடு 'ஏழுகட்டு தேடி கட்டு' என்பது பழமொழி.
ஏற்புறஞ் சுழி	ஏறுபுறஞ்சுழி	வாலின் பின்பக்கத்தில் மேற்புறம் ஏறமுகமாக உள்ள சுழி; இருக்கலாம்.
ஏற்வால் மாடு	ஏறுவால் மாடு	முட்டிக்குக் கீழ், வால் நீண்டிருப்பது. பசுவுக்கு ஏறுவாலும் எருதுக்குக் கூழை வாலும் இருத்தல் நன்று.
ஒத்தகவான்	ஒற்றைக் கவான்	அலை தாடியின் ஒரு பக்கத்தில் உள்ள சுழி; ஐதை சேர்க்காது.
கடம்பு	கடும்பு	சீழுப்பாலினைக் காய்ச்சிய பின் சொல்வது.
கட கூடுதல்	கடை கூடுதல்	ஆறாம் பல்லிற்குப் பின் முளைப்பன.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கட மொளப்பு	கடை முளைப்பு	ஏழாவது எட்டாவது பற்கள் முளைத்தல்.
கடா கன்னு	கடாக் கன்று	ஆண் எருமைக் கன்று.
கடைக்கண் புள்ளி	கடைக்கண் புள்ளி	கண்ணில் வெண்மயிர் இருப்பது; கூடாதது. உடல் முழுவதும் வெண்மயிர் இருத்தலுடன் கடைக்கண் புள்ளி இருக்கலாம்.
கடையா மாடு	கடையான் மாடு	தெற்கத்தியான் மாடு.
கத்திரி செலங்கு	கத்தரிச் சலங்கை	மணித்தகட்டில் இடைவெளி விட்டுள்ள மணிகளாலான பட்டை.
கத்திரி பட்ட	கத்தரிப் பட்டை	செவ்வுளியில் வெண்மை சிறிது கலந்த நிறமுடையது.
கமலம்	கமலம்	கன்று ஈன்றபின் கன்றினை இழந்த மாடு.
கருந்தார் வெள்ள	கருந்தார் வெள்ளை	வெண்ணிறத்தில் கருமை கலந்திருப்பது; தோல் அழுத்தமாயிருக்கும்.
கல்லுமாரு	கல் மார்பு	பால் நன்கு சுரக்காத மடி.
கல்லுரி நோவு	கல்லுருவி நோய்	கல் உருகுவது போல் மாடு உருகும் நிலையில் உள்ள நோய்
கவான்	கவான்	அலைதாடியிலுள்ள சுழி.
கவுத்துகவுறு	கழுத்துக் கயிறு	கழுத்தில் கட்டப்படும் கயிறு.
களும்பு	களும்பு	படைபோல் கழுத்தில் உருவாகி உடல் முழுவதும் பரவும் நோய்.
கறுப்புமாடு	கறுப்பு மாடு	கருமை நிறமுடைய மாடு. 'கறுப்பு மாடு கால் மாடு' -பழமொழி.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கன்னுகுட்டி	கன்றுக் குட்டி	பசு, எருமைகளின் இளமை.
காத்தம்மா	கால் கோமாரி	கால் கோமாரி.
காம்பு	காம்பு	மடியில் உள்ள ஒரு சிறு உறுப்பு. மடியில் பெரும்பாலும் நான்கு காம்புகள் இருக்கும்.
காமடி	காய்மடி	மடி பெரியதாயிருக்கும்; பால் அதிகம் சுரக்காது.
காயடித்தல்	காயடித்தல்	மாடுகளின் சிறுநீரகப் பையிலுள்ள விதைகளைப் பயனற்றவையாக்குதல்.
கார்லு	கார்லு	மாட்டின் நிறவகையுள் ஒன்று. உடல் முழுவதும் வெள்ளையாயும் தலை, முசுப்பு கருமையாயும் இருப்பது.
காராம் பசு	காராம் பசு	நாக்கும் முலைக்காம்பும் கருநிறமாக உள்ள பசு அல்லது மாடு.
காரான்மாடு	காரான் மாடு	(மேலே உள்ளதே)
கால் கோமாரி	கால் கோமாரி	கால்நடைகளின் குளம்பின் மேற் பகுதியில் உண்டாகும் காற்புண்.
கால்சீய்க்கும் மாடு	கால் சீய்க்கும் மாடு	காலால் நிலத்தைக் கிளறும் தன்மையுடையது; குடும்பத்துக்கு ஆகாது.
கிடேரிகன்னு	கிடேரிக் கன்று	பசுவின் இளமை.
கீலேரி	கீலாரி	மாட்டில் பால் கறக்கும் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்தவரைக் குறிக்கும் சொல்.
குண்டு கொம்பு	குண்டுக் கொம்பு	கூடு கொம்பு

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
குண்ணோவு	குண்ணோய்	மயக்கத்தைக் கொடுக்கும் நோய். சிலுசிலுத்து வயிறு உப்பசமாய் இருக்கும்.
குதிர வலி	குதிரை வலி	மாட்டுக்கு உண்டாகும் கடின நோய்களில் ஒன்று; கால் இழுத்து வலிக்கும்.
குளம்ப கழிச்சிகட்டு	குளம்பைக் கழித்துக் கட்டு	இலாடம் அடிக்கும் பொழுது அதிகப்படியாக நீண்டிருக்கும் குளம்பை வெட்டிவிடக் கூறுதல்.
குளம்ப வெட்டி கட்டு	குளம்பை வெட்டிக் கட்டு	குளம்பைக் கழித்துக் கட்டு.
கூட்டாண் சுழி	கூட்டாண் சுழி	துடைப்பக் கட்டைச் சுழி. கொம்பின் மேல் பக்கம்
கூடு கொம்பு	கூடு கொம்பன்	கூடுவது போலிருப்பது; நல்லது.
கூழைவாலு	கூழைவால்	நீளம் குறைந்த வால்.
கை கவுறு	கைக்கயிறு	தும்பு,
கொக்கி பல்லு	கொக்கிப் பல்	கடைவாய்ப் பற்கள் நீண்டிருத்தலைக் கூறுவது. இவ்வாறிருந்தால் மாடு அதிக வைக்கோல் தின்னாது.
கொட மேல கொட	குடை மேல் குடை	நெற்றியில் தாச்சுழியின் கீழிருக்கும் தீயசுழி; இருந்தால் இடி வரும்.
கொடி நாவரி	கொடி நாவுரி	நாக்கின் கீழ்ப்பக்கம் கருப்பு கருப்பாக இரத்தம் செல்வதைக் குறிப்பது.
கொண்ட சுழி	கொண்டைச் சுழி	மாட்டின் கொண்டையில் உள்ள தீய சுழி.
கொப்பி குப்பி	கொம்புக்குப்பி	மாட்டின் கொம்பில் சொருகும் பூண்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கொம்பின் கொன	கொம்பின் கொனை	கொம்பின் முனை.
கொம்பு தட்டும் மாடு (எருமை)	கொம்பு தட்டும் மாடு	கொம்பைத் தட்டிக் கொண்டே யுள்ள மாடு; கூடாதது.
கொள்ளி கொம்பு	கொள்ளிக் கொம்பு	இடி கொம்பு
கோட்டா மூஞ்சி	கோட்டான் முகம்	முகத்தில் வெண்மயிர் பட்டையாக இருப்பது; கூடாதது.
கோடாலி பல்லு	கோடரிப்பல்	கொக்கிப்பல்
கோபு	கோபு	பசுவினைத் தரகர் தம்பேச்சு மொழியில் கூறும் சொல். கோபு இருத்தல் வீட்டிற்கு நல்லது.
கோபுர சுழி	கோபுரச் சுழி	கொண்டையின் கீழ், முதுகில் இருக்கும் சுழி. அதிருஷ்டம் தருவது.
சந்திர கிரியா(ன்)	சந்திரகிரியான்	சந்தன நிறமுடைய மாடு.
சலங்கமணி	சலங்கை மணி	தோல் பட்டையில் சிறுமணிகள் நிறைய கட்டி கால்நடைகளின் கழுத்தில் கட்டப்படுவது.
சிட்டிவாதம்	சிட்டிவாதம்	சில அடிகள் காலை இழுத்து நடக்கும்; பிறகு சரியாகிவிடும்.
சித்தூரா(ன்)	சித்தூரான்	மாட்டு இனத்துள் ஒன்று; அழகுடையது.
சிந்துபசு	சிந்துப்பசு	தலை சிறியதாய் முகம் கூசாய் கொம்பு முன்பக்கம் சிறிது சாய்ந்துள்ள பசு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
சிவம்பால்	சீழுப்பால்	கன்று ஈன்றவுடன் கறக்கும்பால்; நான்கு நாட்களுக்குள் கறக்கும் பாலைக் குறிப்பது.
சீதமடி	சீதமடி	சீழும் இரத்தமும் கலந்து வரும் மாட்டின் மடி
சீம மாடு	சீமை மாடு	அயல்நாட்டு மாடு. இதற்குக் கொண்டை கிடையாது.
சீலத்தோல் மாடு	சீலத்தோல் மாடு	தோல் அதிக அழுத்தமில்லாதது; வெண்ணிறமுடையது; கூடாதது.
சீழுப்பால் சீழும்பால்	சீழுப்பால்	சீழுப்பால்
சுத்துமாடு	சுற்று மாடு	கட்டுத் தளையில் சுற்றி வந்து கொண்டேயிருக்கும் மாடு.
சுழி	சுழி	மாட்டின் நெற்றி, கழுத்து, முதுகு, வால், கால் ஆகிய பகுதிகளில் உள்ள மயிர்க்கால் சுழன்று இருக்கும் சுழற்சி அல்லது மயிர்க்கால்களின் தன்மை.
செங்கல் மட்டு	செங்கல்மட்டு	காலில் முசுப்பு ஆரம்பமாகும் இடத்தில் இருக்கும் தீயசுழி. இரு பக்கமும் இருந்தால் நல்லது.
செங் கொளம்பு	செங்குளம்பு	மாட்டின் நிறமும் குளம்பும் ஒரே நிறமுடையது.
செம்போத்து மாடு	செம்போத்து மாடு	கருமையும் சிவப்பும் கலந்த நிறமுடைய மாடு.
செவந்த மாடு	சிவந்த மாடு	சிவப்பு நிறமுள்ள மாடு
செவுளி பசு	செவ்வுளிப் பசு	சிவந்த நிறமுடைய பசு
செவுள் பட்ட	செவ்வுள் பட்டை	சிவப்பும் வெண்மையும் கலந்த நிறமுடைய மாடு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
செவுள் மாடு	செவ்வுள் மாடு	சிவப்பு நிறமுடையது. நாட்டு மாடும் மேற்கத்தியான் மாடும் இந்நிறமுடையன
சென	சினை	மாடு கருவுற்ற நிலை
சேலத்து மாடு	சேலத்து மாடு	சேலம் நாட்டு வகையைச் சார்ந்த கொம்பில்லா மாடு.
டங்குடோலு	அலைதாடி	அலைதாடி
டமார சுழி	டமாரச் சுழி	முதுகில் பின்முட்டியின் இரு புறமும் நான்கு அங்குலம் தள்ளி இருக்கும் நல்ல சுழி.
தட்டு	தட்டு	மாட்டின் முதுகில் அள்ளுக்குப் பின்னுள்ள பகுதி.
தட்டு ஓடஞ்சி போயிட்டு	தட்டு உடைந்து போயிற்று	தட்டு உடைந்தால் கன்று ஈனும் நேரம் நெருங்கி விட்டதென்பது பொருள். உடைந்த 6 மணி முதல் 10 மணிக்குள் கன்று ஈனும்
தல கவுறு	தலைக் கயிறு	கழுத்துக் கயிறு, மூக்கணாங் கயிறு ஆகியவற்றுடன்சேர்த்துக் கட்டப்பட்ட தலைப்புக் கயிறு.
தலச்சங் கன்னு, தலசங் கன்னு	தலைச்சன் கன்று	முதல் கன்று.
தலச்சன் நாவு	தலைச்சன் நாகு	மூன்று வருடம் கழித்தவுடன் முதல் கன்று ஈன்ற எருமை.
தள்ளுமாடு	தள்ளுமாடு	அடிமாடு.
தாசுழி	தாச்சுழி.	நெற்றியிலும் நடுமுதுகிலும் எல்லா மாடுகளுக்கும் இருக்கும் நல்ல சுழி.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
தாலி கொத்துசுழி	தாலிக்கொத்துச் சுழி	கழுத்து நரம்பின் மேல் இருபக்கமும் உள்ள நல்ல சுழி.
திருகுபத்த	திருகுபத்தை	விரிந்த குளம்பினைக் கூறுவது.
துண்டெலும்பு	துண்டெலும்பு	அள்ளுக்கு அருகில் இரண்டு அங்குலம் நீளமுள்ள எலும்பு. மார்புக் கூட்டில் இவ்வெலும்பு இருபக்கமும் இருந்தால் நல்லது. ஒரு பக்கமிருத்தல் தீயது.
தும்பு தும்புகயிறு	தும்பு	கால்நடைகளைக் கட்டுத் தளையில் கட்ட உதவும் கயிறு. மாட்டின் கழுத்தில்கட்ட உதவும் நுகத்தடியில் உள்ள கயிறு.
தெற்கத்தியா(ன்)	தெற்கத்தியான்	தென்திசையினின்றும் வரவழைக்கப்பட்ட மாடுகள்.
தொடப்ப கட்ட சுழி	துடைப்பக் கட்டைச் சுழி	வால் ஆரம்பத்தில் கீழ்ப் பக்கத்தில் ஒரு புறம் அல்லது இருபுறமும் உள்ள தீய சுழி.
தொண்ட அடப்பான்	தொண்டை அடைப்பான்	மாட்டுக்கு உண்டாகும் கடின மான நோய்களுள் ஒன்று; தொண்டை வீக்கமாகும்.
தொம்ப	தொம்பை	எருமைக்கு வரும் நோய்களுள் ஒன்று.
தொலும்பு	தொலும்பு	மயிர் நிறத்தின் வகையைக் குறிக்க வழங்கும் தரகர் பேச்சு மொழி.
தொவர பட்ட	துவரைப் பட்டை	செவ்வுளி நிறத்தில் வெண்சிறு புள்ளிகள் இருத்தல்.
தோல் கொம்பு	தோல் கொம்பு	போட கொம்பு; ஆடும்படியிருப்பது.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
நடசிட்டி	நடைச்சிட்டி	மாட்டிற்குண்டாகும் நோய்களுள் ஒன்று. மூன்று நான்கு முறை படுத்து எழுந்தபின் நன்கு நடக்கும்.
நாக பாசம்	நாக பாசம்	இரு தொடைக்கு மத்தியில் கையகலம் கரிய நிறமாகப் பட்டையாயிருக்கும் தீய சுழி.
நாசி	நாசி	இருக்கக் கூடாத சுழிகள் உடைய மாடு என்பதைத் தரகர் தம் பேச்சு மொழியில் குறிக்கும் சொல்.
நாட்டுஎரும	நாட்டெருமை	எருமை இனத்துள் ஒன்று.
நாட்டு மாடு	நாட்டு மாடு	மாட்டின் வகைகளுள் ஒன்று. கொம்பு முழத்திற்கு மேலில்லாதது.
நாவு கன்னு	நாகுக் கன்று	பெண் எருமைக் கன்று.
நீர் குத்து	நீர்க் குத்து	தொப்புள்.
நீர் குத்து சுழி	நீர்க் குத்துச் சுழி	நீர்க் குத்துக்கு நேராக முதுகில் உள்ள தீய தாச்சுழி. இச்சுழி நீர்க்குத்துக்குநேராய் இல்லாமல் நான்கு விரற்கிடை முன்பின் தள்ளியிருத்தல் நல்லது.
நீர்கொடம்	நீர்க்குடம்	பனிக்குடம்.
நீர்வெக்க	நீர்வெக்கை	கால்நடைகளுக்கு வரும் நோய். வாயெல்லாம் ஜொல்லொழுகும்; பேதியாகும்.
நெத்தி கவுறு	நெற்றிக் கயிறு	மண்டைக் கயிறு
நெத்தி சிட்டி	நெற்றிச்சிட்டி	நெற்றியில் வெள்ளை மயிர் புள்ளியாய் இருப்பது.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
		இவ்வெள்ளை மயிர் பட்டையாக நெற்றிக்குப் பின்னால் செல்லக் கூடாது.
நெத்தி செலங்கு	நெற்றிச் சலங்கை	நெற்றியில் கட்டப்படும் சிறு மணிகளின் தொகுப்பு.
நெலவ கொம்பு	நிலைக் கொம் பான்	கொம்பு நேராய் நிமிர்ந்திருக்கும் மாடு.
நேர் கொம்பு	நேர்க்கொம் பான்	கொம்பு நேராயிருக்கும் மேற்கத்தியான் மாடு.
நொள்ள கண்ணுமாடு	நொள்ளைக் கண்மாடு	கண்ணில் பூப்பட்டிருக்கும்; கண் தெரியாத மாடு.
பஞ்ச கல்யாணி	பஞ்ச கல்யாணி	நெற்றியில் வெள்ளை, நான்கு கால்களில் வெள்ளை, வாலில் வெள்ளையாகவும் உடல் கறுப்பாகவோ சிவப்பாகவோ இருப்பது.
படுக்குசிட்டி	படுக்கைச் சிட்டி	மாட்டிற்கு உண்டாகும் நோய் களுள் ஒன்று: படுப்பதும் எழுந் திருப்பதுமாயிருப்பது.
பரப்பு கொளம்பு	பரப்புக் குளம்பு	விரிகுளம்பு.
பல்லு	பல்	மாட்டுக்குக் கீழ்த்தாடையில் மட்டும் பல்லிருக்கும்; மேல் தாடையில் தடித்த ஈறுதான் இருக்கும்.
பல்லு பட்டு போச்சு	பல்பட்டுப் போயிற்று	பல் விழுந்து முளைத்தல்.
பல்லுபடாத கன்னு	பல் படாத கன்னு.	பல் விழாத கன்று.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பனங்காய் கறுப்பு	பனங்காய்க் கறுப்பு	கறுப்பும் சிவப்பும் கலந்த நிறம்.
பனிகொடம்	பனிக்குடம்	கன்று ஈனுமுன் கால்நடைகளின் அறைப்பகுதியிலிருந்து வெளிவரும் நீர்க்குடம்.
பாசல் மாடு	பாய்ச்சல் மாடு	ஒன்றை ஒன்று ஜதை சேர்க்காத மாடு.
பாட கொம்ப	பாடைக் கொம்பு	கொம்பு கொண்டைக்கு நேராகச் சாய்ந்திருப்பது, கூடாதது.
பாடசுழி	பாடைச் சுழி	நடுமுதுகில் ஒரு பக்கம் மட்டுமுள்ள தீய சுழி.
பாப்பார வெள்ள	பாப்பார வெள்ளை	தூய வெண்ணிறமுடைய மாடு; கூடாதது.
பாம்பு சுழி	பாம்புச்சுழி	முகப்பில் ஒரு வலப்புமாகவும் காதில் ஒரு வலப்புமாகவும் ஆக இரண்டும் சேர்ந்திருக்கும் தீய சுழி.
பால் களும்பு	பால் களும்பு	படைபோல் கழுத்தில் உருவாகும் புண்.
பால்பல்லு	பால்பல்	பிறக்கும் பொழுதே உள்ள எட்டுப் பற்கள். இவை மூன்றாண்டுக்கு மேல் ஐந்தாண்டுக்குள் விழுந்து முளைக்கும்.
பிள்ள பசு	பிள்ளைப்பசு	சந்தனம் அல்லது துவரை நிறமுடைய மாடு.
புளியாம்பூ தொவர மாடு	புளியாம்பூத் துவரை மாடு	சிவப்பும் சிறு வெள்ளைப் புள்ளிகளும் அல்லது வெண்மை மயிரும் கலந்தது; நல்லது; அதிக விலையுடையது.
பூச்சி கடிப்பா(ன்)	பூச்சிக் கடிப்பான்	பூச்சிக்கடி. மந்திரம் போட்டு, கயிறு கட்டச் சரியாகும்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பூட்டாங் கவுறு	பூட்டாங் கயிறு	கால் நடைகளை நுகத்தடியில் பூட்ட உதவும் கயிறு,
பூரணியா [ன்]கொம்பு	பூரணியான் கொம்பு	கொம்பு அழகாகப் பளபளப் பாய் இருக்கும் நல்ல மாடு.
பூரணியா [ன்]	பூரணியான்	நற்குணமான அழகுடைய மாடு.
பூவால்மாடு	பூவால் மாடு	வால் முனையில் வெள்ளை மயிர் இருப்பது.
பொரமடி	புரைமடி	மடியில் ஒரு பக்கக்காம்பு பெரிய தாகவோ சிறியதாகவோ இருந் தால் அது விரைப்பாயிருக்கும். அதில் பால் குறைவாய் வரும்.
பொலிஎருது	பொலி எருது	இனவிருத்திக்காகப் பயன்படுத் தும் எருது.
பொலிகடா	பொலிக்கடா	இனவிருத்திக்காகவளர்க்கப்படும் எருமை.
போட கொம்பு	போடக் கொம்பு	கொம்பு பின்னால் வளைந்தோ காதைத் தொடும்படியோ உள்ள மாடு; கூடாதது.
மடி	மடி	மாடு பால் தரும் தகுதி,
மடிவுடுதல்	மடிவிடுதல்	கன்று ஈனுவதற்கு ஒரு மாதம் இருக்கும் பொழுதே மடி இறங்கு தலைக் குறிப்பது.
மண்ட கவுறு	மண்டைக்கயிறு	இரு கொம்பையும் சுற்றிக் கட்டப்பட்டுள்ள கயிறு.
மண்ண அடித்தல்	மண்ணை அடித்தல்	மண்ணைச் சீய்த்தல்.
மண்ண சீய்த்தல்	மண்ணைச் சீய்த்தல்	காலால் மண்ணைக் கிளறும் தன்மையுடைய மாடு.
மணப்பாற மாடு	மணப்பாறை மாடு	கொம்பு பருமனாய் உள்ள மாடுகள்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
மணி	மணி	கால்நடைகளின் கழுத்தில் கயிற்றிலோ தோல் பட்டையிலோ கட்டி கட்டப்படும் மணி.
மணி செலங்கு	மணிச் சலங்கை	வெண்கலச் சலங்கை.
மந்தப்படுதல்	மந்தப்படுதல்	தீனி தின்னாமல் அஜீரணம் உண்டாதல்.
மயக்குண்ணோவு	மயக்குண்ணோய்	மாட்டுக்கு வரும் நோய்களுள் ஒன்று. குண்டுமணித் தழையைக் கழுத்தில் கட்டினால் மயக்கம் தெளியும்.
மயில நிறம்	மயிலை நிறம்	கறுப்பில் செவ்வுளி நிறம் கலந்திருப்பது அல்லது கறுப்பில் வெண்மை நிறம் கலந்திருப்பது.
மாட்டு சொரப்பு மருந்து	மாட்டுச் சுரப்பு மருந்து	கன்றிழந்த மாடு பால் சுரக்க ஊசி போட உதவும் மருந்து.
மாசி	மாசி	உறுப்பு
மாயி	மாசி	உறுப்பு
மால	மாலி	அலைதாடி
மீச கொம்பு	மீசைக் கொம்பு	கொம்பு விரிந்தாற் போல் இருப்பது: நல்லது.
முக்கண்சுழி	முக்கண்சுழி	நெற்றியில் தாச்சுழிக்கும் குடைமேல் குடைக்கும் கீழுள்ள தீயசுழி.
முசுப்பு	முசுப்பு	மாட்டின் கொண்டை அல்லது திமில்.
முட்டி சுழி	முட்டிச் சுழி	முதுகில் பின்முட்டியின் இருபுறமும் நான்கு அங்குலத்திற்குள்ளிருக்கும் தீயசுழி.
முள் நாவரி	முள் நாவுரி	நாக்கின் மேல்புறம் முள் முள்ளாக இருப்பது.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
முன்கொம்பு வளவு	முன்கொம்பு வளைவு	கொம்பு முன் பக்கம் வளைந்திருப்பது,
மூக்காங் கவுறு	மூக்கணாங் கயிறு	மூக்கு அணைவு கயிறு. மாட்டின் மூக்கில் துளை செய்து கட்டப் பட்ட கயிற்றைக் கழுத்துக் கயிற்றுடன் இணைத்துக் கட்டப் படுவது.
மூணு தூல மாடு	மூன்று தூல மாடு	மடியில் மூன்று காம்புகளே உள்ளனவும் நான்கில் மூன்றே கறப்பதாகவும் உள்ள மாடு.
மூணுவூடு	மூன்று வீடு	மூன்று தூல மாட்டைத் தரகர் குறிக்கும் சொல்.
மூல காட்டு மாடு	மூலக்காட்டு மாடு	பசுமாட்டின் இனத்தில் ஒன்று.
மூலகாலு	மூலக்கால்	குளம்பு விரிந்து போன மாடு.
மேற்கத் தியா[ன்]	மேற்கத்தியான்	மேற்றிசையினின்று வரவழைக் கப்பட்ட மாடுகள்.
மைக்கண்ணு மாடு	மைக்கண் மாடு	கண்ணைச் சுற்றி கறுப்பு மயிர் இருப்பது; கூடாதது.
மொறா எரும	மொறா எருமை	எருமை இனத்துள் ஒன்று; டில்லி இனத்தைச் சார்ந்தது; உயர்ந்த இரக எருமை; ஒரு சாண் கொம்புடையது.
ரெட்ட கவான்	இரட்டைக் கவான்	அலைதாடியின் இருபுறமும் உள்ள சுழி; இருக்கலாம்.
ரெண்டு காம்பு மாடு	இரண்டு காம்பு மாடு	ஆட்டுக் காம்பு மாடு.
வடக்கத் தியா	வடக்கத்தியான்	தொப்புள் நீண்டிருக்கும். இதனால் 'அஞ்சு கால் மாடு' எனவும் அழைக்கப்படும்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
வரட்டுமாடு	வரட்டுமாடு	கன்று ஈனாத, பால் கறவாத மாடு.
வாதம்	வாதம்	சிறு தொலைவு காலை இழுத்து நடக்கும். பிறகு சரியாகிவிடும்.
வாமாரி யாத்தா	வாய் மாரியாத் தாள்	வாய்க் கோமாரி.
வாய் கோமாரி	வாய்க் கோமாரி	கால்நடைகளுக்கு வாயில் உண்டாகும் புண்; இதனால் சில நாட்கள் உணவு உட் கொள்ளாது.
விரி கொளம்பு	விரி குளம்பு	குளம்பு விரிந்திருப்பது; நடை சாயாது.
வெங்கல செலங்கு	வெண்கலச் சலங்கை	கோயில் மணி போன்று ஒரு நாக்குடைய மணி.
வெங்கால் மாடு	வெங்கால் மாடு	காலின் குளம்புக்கு மேல் வெண் மயிர் இருக்கும்; கூடாதது.
வெங்கோல் எருமெ	வெங்கோல் எருமை	எருமை இனத்துள் ஒன்று.
வெண்டயம்	வெண்டையம்	கொம்பையும் குப்பியையும் இணைக்கும் வளையம்.
வெலங்கு சுழி	விலங்குச் சுழி	முன்னங்காலில் கணுக்காலுக் கும் முட்டிக்கும் இடையிலுள்ள தீயசுழி [இருந்தால் எப்படியா வது விலங்கு மாட்டிவிடும்; பின்னங்காலில் இச்சுழி கிடையாது.]
வெள்ளஎருமெ	வெள்ளை எருமை	சாம்பல் நிறமுடைய எருமை.
வெளி பத்த	வெளிப் பத்தை	குளம்பின் வெளிப்பகுதி.
ஜாரிபட்ட	ஜாரிப்பட்டை	செவ்வுளியும் வெள்ளையும் சம பங்கு உடையதாயிருத்தல்,
ஜெர்சி பசு	ஜெர்சிப் பசு	நெற்றி சிறியதாயும் கொம்பு சிறியதாயும் முகமெல்லாம் முடி யிருப்பதாயும் இருப்பது.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
ஜென்னி நோவு	ஜென்னி நோய்	மாட்டுக்கு வரும் நோய்களுள ஒன்று. இதைக் குணமாக்கக் கண்டங்கத்தரியின் சாறு கண்ணில்விட வேண்டும். இல்லையேல் நெற்றியில் சாணம் கட்டி வேப்பெண்ணெய் காய்ச்சி ஊற்ற வேண்டும்.
ஜோடு அடித்தல்	ஜோடு அடித்தல்	முன் கால்களின் முட்டி இடிப்பது; கூடாதது.
கிராஸ் மாடு	கிராஸ் மாடு	பெல்கான் எருமை. டில்லி எருமை வகையைச் சார்ந்தது. கறுநிறமாகவும் கொம்பு முன்பக்கம் வளைவாகவும் இருப்பது.

5. மாட்டுத் தரகரின் பேச்சுமொழி.

உழவர்களின் பெருஞ்செல்வமான மாட்டை வாங்குதலில் தரகர் முக்கிய இடம் பெறுதலால் தரகர் பேச்சு மொழியும் இவ்வாய்வில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. மாடு பற்றித் தரகர் வழங்கும் சொற்கள் சில, முந்திய தலைப்பிலேயே சொல்லப்பட்டுள்ளன. எனவே, மாடு விற்றல் வாங்கலில் அதன் பண மதிப்பைக் கூறுதல் சம்பந்தமான சொற்களே இத் தலைப்பில் கூறப்படுகின்றன.

மாட்டுத் தரகர்கள் வாணிகத் தொழில் மேற்கொண்டோரில் ஒரு பிரிவினராவர். தரகர்கள் ஒரு குறிப்பிட்ட சமயத்தையோ சாதியையோ இனத்தையோ சார்ந்தவர்களல்லர். பல்வேறு சமயத்தினரும் பல்வேறு சாதியினரும் பல்வேறு இனத்தவரும் தரகராயுள்ளனர். அவர்கள், தங்களுக்கேற்ப விருப்பமுடைய தொழிலில் தரகராய்ப் பணியாற்றுகின்றனர். பொருள் கொடுப்போர், பொருள் வாங்குவோர்

ஆகிய இருவருக்கும் இடைப்பட்டு நின்று முதலின்றி ஊதியம் பெறும் வாழ்க்கையினை உடையவர். தரகர், மற்றொருவரின் சார்பில் பேரல் பேசுதல், ஒப்பந்தம் செய்தல், சரக்குகளை விற்றல் அல்லது வாங்குதல் போன்ற செயல்களைச் செய்பவர். இவர் தம் சேவைக்காக ஊதியம் பெறுகின்றார். அவ்வூதியத் திற்குத் தரகு என்று பெயர். தரகர், தம் சொந்த செயலுக் காகச் செயலாற்றுவதில்லை; மற்றொருவருக்காகவே செயலாற்றுகின்றார். இவர் விற்கும் சரக்கு இவர் பொறுப்பில் இராது. இவர் வெறும் நடுவரே. இவர் செய்யும் ஒப்பந்தங் களில் இவருக்குத் தனிப் பொறுப்புக் கிடையாது. தரகர்கள் குறிப்பிட்ட துறைகளில் ஈடுபடுகின்றனர். அதனால் இவர்களுக்கு அந்தந்தத் துறைகளில் பயிற்சியும் அனுபவமும் ஏற்படுகின்றன.[1]

தரகர் பற்றிய செய்திகள் பண்டைக்கால இலக்கியங் களிலும் சொல்லப்படுகின்றன. தமிழகம் தொன்றுதொட்டே உலகில் வாணிகத் துறையில் பெயர் பெற்றொளிர்வது. உள் நாட்டு வாணிகத்திலும் வெளிநாட்டு வாணிகத்திலும் தமிழகம் பெறுமிடத்தைச் சங்க இலக்கியங்களில் காணலாம். மதுரை மாநகரின் உள்நாட்டு வாணிகத்தைப் பற்றிச் சொல்லுகின்ற பொழுது இளங்கோவடிகள், 'அம்பண அளவையர் எங்கணும் திரிதர,[2] என்று கூறுகின்றார். இத் தொடரில் அம்பணம் என்பதற்கு மரக்கால்[3] என்றும் தரகர் அளக்கும் மரக்கால்[4] என்றும் பொருள் சொல்லப்படுகின்றன. தரகர், மரக்கால்[5] என்னும் அளவு கருவியினைக் கொண்டு நெல் முதலிய தானியங் களை அளந்து கொடுப்பதற்காக ஒரு குறிப்பிட்ட அளவு நெல்லினைப் பெறும் நிலைமை இன்றும் நடைமுறையில் உள்ள

---

1. கலைக் களஞ்சியம், தொ.5, (சென்னை, தமிழ் வளர்ச்சிக் கழகம், 1958) ப. 521.
2. சிலப்பதிகாரம் 14:209, ப. 365.
3. தமிழ்ப் பேரகராதி, தொகுதி 1, (மு. கா. நூ.), ப. 95
4. சாமிநாதையர், உ. வே (தொகுப்பாசிரியர்), சிலப்பதி காரம் பத்தாம் பதிப்பு (தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு, நவம்பர் 1985) ப. 385..
5. பறை என்பது மதுரை மாவட்ட வழக்கு.

தொரு வழக்கமாகும். வீடு, விற்போர், வாங்குவோர், பெண் கொடுப்போர், கொள்வோர் இடையேயும் தரகர் உள்ளதை உலகியலில் காணலாம். இவ்வாறு பலவகைப்பட்ட தரகர் உள்ளனர். 'வாணிகத் துறையிலும் மற்றவர்களுக்காகப் பொருள்களை வாங்கித் தருவோர், விற்போர், பங்கு நிலையத் தரகர், (Stock Broker)பங்குகள், கடன் பத்திரங்கள் முதலிய வைகளை விற்பதற்கும் வாங்குவதற்கும் எனத் தரகர்கள் இருக்கின்றனர். இன்ஷீரன்சு தரகர், கடன், இன்ஷீரன்சு ஒப்பந்தங்களை நிறைவேற்றி வைக்கின்றார். உண்டியல் தரகர் உண்டியல்களையும் புரோ நோட்டுகளையும் வாங்கி விற்பார். கப்பல் தரகர் கப்பல்களுக்குச் சரக்குகள் கொண்டு வந்து சேர்ப்பதற்கும் கப்பல்களை வாடகைக்கு விடுவதற்கும் தரகராயிருப்பர்.'[1] இம்முறையில் மாட்டுத் தரகர் மாடுகள் விற்பதற்கும் வாங்குவதற்கும் தரகராக இருக்கின்றார்.

தரகரைத் தரகுக்காரன்[2] என்றும் அவர் பெறும் ஊதியத்தைத் தரகு[3], தரகுக்கூலி,[4] தரகுக் காசு,[5] என்றும் அவர் செலுத்தும் வரியினைத் 'தரகுப்பாட்டம்'[6] என்றும் கூறுவர். 'மன்று பாடும் தரகும் தறிக் கூறையும், [7] என்றும், 'கூலமும் தரகு பாட்டம்,[8] என்றும் கல்வெட்டில் சொல்லப்படுதலினால் தரகர் பற்றிய குறிப்புகள் பண்டைக் காலத்திலேயே இருக்கக் காணலாம்.

வாதி, பிரதிவாதி ஆகிய இருவரும் தங்கள் கருத்தை நீதி மன்ற நடுவருக்குத் தெரிவிக்க இடையில் வழக்கறிஞர் ஒருவரை இருவரும் தனித்தனியே நியமிப்பது போல் பொருள் விற்போர் வாங்குவோர் ஆகிய இவ்விருவரும் தத்தமக்கென ஒரு தரகரை நியமித்துக் கொள்வர் இம்முறை, பெரிய வாணிகத்துள் காணக்கூடிய தொன்றாகும். அத்தரகர்கள் தங்களுக்குள்

---

1. கலைக் களஞ்சியம். (மு. கா. நூ.) ப. 521
2. தமிழ்ப் பேரகராதி, தொகுதி 3, ப. 1762.
3. மேற்படி.
4. மேற்படி.
5. மேற்படி.
6. மேற்படி.
7. South Indian Inscriptions, Volume-II , p.509.
8. மேற்படி ப. 521.

பேசிக் கொள்ளும் பொழுது ஒருவகைப் பேச்சு மொழியினை யும் பொது மக்களிடத்தில் பேசும்பொழுது இயல்பான பேச்சு மொழியினையும் உடையவராயிருப்பர். தரகர்கள் தங்களுக்குள் பேசும் மொழியினைக் குழூஉக்குறி என்று இலக்கண நூல்கள் கூறுகின்றன. இக்குழூஉக்குறி, தகுதி வழக்குள் அடங்கும் என்பதனைத்

'தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே'[1]

என்று தொல்காப்பியமும்,

'இடக்கர் அடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோ டாறாம் வழக்கியல்'[2].

என்று நன்னூலிலும் கூறப்படுவதால் அறிய வருகிறது.

பொற்கொல்லர்கள் தங்களுக்குள் பொன்னைப் 'பறி' என்றும், கள்குடியர்கள் கள்ளைச் 'சொல்விளம்பி' என்றும் கூறுவது போன்று தரகர்களும் தாம் கூறுவன பிறர் அறியா திருக்கும் பொருட்டுத் தங்களிடையே ஒருவகைப் பேச்சு மொழியினைக் கையாளுகின்றனர். அம்முறையில் மாட்டுத் தரகர்கள் பயன்படுத்தும் சொற்கள் பற்றி இத்தலைப்பில் விளக்கப்படுகின்றன.

குறிப்பிட்ட ஊர்களில் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட காலத்தில் சந்தை கூடும். அது வாரச் சந்தையாகவோ மாதச் சந்தையாகவோ ஆண்டுச் சந்தையாகவோ இருக்கும். அச் சந்தைக்கு மாடு விற்பனை செய்வோர் ஒரு குறிப்பிட்ட வரியினைச் செலுத்தி நுழைவுச் சீட்டைப் பெற்றுக் கொண்டு சந்தைக்குள் செல்வர். தரகர்களும் குறிப்பிட்ட தொகையினைச் செலுத்தி நுழைவுச் சீட்டைப் பெற்றுச் சந்தைக்குச் செல்வர். இந்த நுழைவுச் சீட்டைப் பெற்றவரே சந்தை மேட்டுக்குள் அங்கீகாரம் பெற்ற தரகராவர். மாடுகளை விற்க வந்தவரும் வாங்க வந்தவரும் அவரவர்க்குப் பழக்கமான தெரிந்த

---

1. சுந்தரமூர்த்தி, கு.,(பதி), தொல்காப்பியம்,சொல்லதிகாரம் சேனாவரையம், (அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1981), கிளவியாக்கம், நூ. 17, ப. 87

2. நன்னூல் விருத்தியுரை [சென்னை, கழக வெளியீடு, மார்ச்சு 1956], நூ. 267, ப. 208.

ஒருவரைத் தரகராகக் கொள்வர். இத்தரகர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்ளும்பொழுது மாட்டின் விலை மதிப்பைக் கூற,

வாய்தா, அசரா, காலன், கேவு, கோதும;
ராயம், இத்னா;
உத்ரம், தலாத;
அற்பா, பணம்;
மூலம், நெசுவு, பஞ்சா, கம்சா, தட்ட;
சித்தா;
சபா;
தாமம், ஆனா;
தீசம், தீபரம்[1]

என்று முறையே ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது ஆகிய எண்ணுப் பெயர்களை வழங்குவர்.

ஒரு பொருளைக் குறித்து அதன் விலையினை ஒரு நோட்டு என்றால் நாற்காலி, மேசை போன்ற பொருள்களாயின் நூறு என்றும், மிதிவண்டி முதலிய பொருள்களாயின் ஆயிரம் என்றும் பேருந்து முதலியவையாயின் ஓர் இலட்சம் என்றும் பொருள் மதிப்பினை அறிவது போல் தரகர்களும் மாட்டின் தரத்திற்கேற்ப பத்து, நூறு, ஆயிரம் ஆகியவற்றில் விலை மதிப்பினை உணர்த்த இவ்வெண்ணுப் பெயர்களைப் பயன் படுத்துகின்றனர். முந்நூற்று ஒன்று, ஆயிரத்தொன்று என்று விலை மதிப்பிடாது ஐந்தின் மடங்கிலேயே அஃதாவது முந்நூற்று ஐந்து, ஆயிரத்துப் பத்து என்ற அளவிலேயே விலையினைக் கூறுவர். ஐந்தைக் குறிக்க மூலம், நெசுவு, பஞ்சா என்று பல சொற்களிருப்பினும் மூலம் என்ற சொல்லையே மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர். நூறு, ஆயிரம் ஆகியவற்றினைக் கூற வாய்தா என்ற சொல்லைப் பெரும்பான்மையாகக் கையாளுகின்றனர்.

இவ்வெண்ணுப் பெயர்களின் பொருளினை அருகிலிருப் போர் உணர்ந்து கொள்ளாமலிருக்கும் பொருட்டு மேலாடைக் குள் விரல்களைப் பிடிப்பதன் பொருட்டும் மாட்டின் விலை

---

1. கள ஆய்வில் பெறப்பட்ட சொற்கள்.

மதிப்பினை உணர்த்துவர். ஆயிரம் ரூபாய் மதிப்பளவில் தரகர் முதலில் பிடிப்பது கட்டை விரலேயாம். ஒரு மாட்டின் மதிப்பு ஆயிரத்து நூறு என்பதைக் கூற கட்டை விரலை ஒரு முறை பிடித்து விட்டு மீண்டும் அவ்விரலை ஒருமுறை பிடிப்பர். ஒரு மாட்டின் மதிப்பு நான்காயிரத்து ஐந்நூறு என்றால் கட்டை விரல் தவிர்த்த நான்கு விரல்களையும் ஒரு முறை சேரப் பிடித்து விட்டு மீண்டும் ஐந்து விரல்களையும் ஒருங்கே பிடிப்பர். எழுபத்தைந்து என்பதைக் கூற ஐந்து விரல்களைப் பிடித்துவிட்டு அடுத்து இரண்டு விரல்களைப் பிடித்துவிட்டு மீண்டும் ஐந்து விரல்களைப் பிடிப்பர். ஒரு விரலுக்கு மேல் ஒரு விரல் வைத்துப் பிடித்தால் விற்போர், வாங்குவோர் கூறும் தொகைக்கு மேல் பெறும் தொகையைத் தரகர் எடுத்துக் கொள்வார் என்பது பொருள். இம் முறையில் தரகர்கள் விரல் பிடித்தல் மூலம் மாட்டின் மதிப்பினை அறிவித்துக் கொள்கிறார்கள்.

மாட்டு வாணிபத்துள் எருது, பசு என்று இரண்டிற்கும் சேர்ந்தும் தனித்தனியேயும் தரகர்கள் உள்ளனர். அவர்கள் பேசும் மொழியுள்ளும் எருதின் மதிப்பைக் கூறுவதற்கும் பசுவின் மதிப்பினைக் கூறுவதற்கும் என இவற்றிலேயே குறிப்பிட்ட எண்ணுப் பெயர்கள் உள்ளன. அவர்கள் பழக்கத்திற்கேற்ப மாற்றி மாற்றிக் கூறுதலும் உண்டு. எதிர்த்தரகரின் நிலையினை இயல்பினை அறிந்து அத்தரகர் அவர் கூறும் பொருள் மதிப்பினை அறிந்து கொள்வார். பசு இனத்துள் நாட்டு மாடு, மூலக்காட்டு மாடு, மேற்கத்தியான் (சிந்து, சீமை, காங்கேயன், ரெட்டின், ஜெர்சி) என்று மூவினங்கள் உள்ளன. இவ்வாறு மாட்டின் பல்வகை இனங்களும் வகைகளும் சந்தைக்குக் கொண்டு வரப்படும் பொழுது அவற்றின் தரத்திற்கேற்ப விலைமதிப்பு செய்யப்படும்.

மாட்டுத் தரகர் பேசும் மொழி பிறர்க்குப் புரியாது தங்களுக்குள் பேசிக் கொள்ளும் மொழியாக இருப்பது உண்மை.மேலேகுறிப்பிட்டசெங்கற்பட்டுளம் ஜி.ஆர். மாவட்ட மாட்டுத் தரகர் பேச்சு வழக்குச் சொற்கள் தமிழ் மொழியாய் இல்லாமல் பிற மொழியிலுள்ள எண்ணுப் பெயர்களாயுள்ளன. மாட்டுத் தரகர்கள் தொன்றுதொட்டு இச் சொற்களை''ா தம் வழக்குச் சொற்களாகப் பயன்படுத்திவருகின்றனர் எனில் இல்லை என்பது மட்டும் தமிழர் வரலாற்றினையும் பண்பாட்டினையும் அறிந்த யாவரும் உணரக்கூடிய செய்தியாகும். இச்சொற்கள் யாவும் பிறமொழிச் சொற்களாகவே உள்ளன.

'வாய்தா' என்பது வாஹித்[1] (Wahidh) என்று அரபு மொழிச் சொல்லில் ஒன்றைக் கூற வழங்கும் சொல்லினின்று உருவாகி இருக்கலாம். வாய்தா என்னும் சொல் தமிழ்ச் சொல் அன்று எனினும் தமிழ்மொழி பேசுவோரிடையே வழங்கிவரும் சொல்லாகும். இச் சொல்லுக்கு 'நிலவிறைப்பணம்' தவணை, கெடு, வரி'[2] ஆகிய பொருள்கள் உண்டு.

'துக்னா' (Dugna)என்று பாரசீக மொழியிலும்இஸ்னான்[3] (Isnan) என்று அரபு மொழியிலும் இரண்டினைக் கூறுவர். இம்மொழிகளினின்றும் 'இத்னா' என்ற சொல் உருவாகியிருக்கலாம்.

'ஸலாஸ'[4] (salasa)என்று அரபு மொழியில் மூன்றினைக் கூறுவர். இது 'தலாத' என்று மாறி வழங்கப்படலாம்,

'அற்பா'[5](Arba) அன்று அரபு மொழியில் நான்கினைக் கூறுவர். இதையே மாட்டுத் தரகர்களும் நான்கினைக் குறிக்கப் பயன் படுத்துகின்றனர் எனலாம்.

'பஞ்ச'[6] pancha)என்றுவட மொழியில் ஐந்தினைக் கூறுவர். இதுவே பஞ்சா என்று வழங்கப்படலாம்.

'ஹம்சா'[7](khamsa)என்று அரபு மொழியில் ஐந்தினைக் கூறுவர். இது 'கம்சா' என்று ஐந்தினைக் குறிக்க வழங்கப் பட்டிருக்கலாம்.

'தட்டல்'[8] என்ற சொல்லுக்கு 'ஐந்து' என்றும், தட்டற்புலு'[9] என்ற சொல்லுக்கு 'ஐம்பது. ஐம்பான், என்றும் பொருள் கூறுகிறது மதுரைத் தமிழ்ப் பேரகராதி. இவற்றிலிருந்து 'தட்ட' என்னும் சொல் தரகர் பேச்சு மொழியில் ஐந்தைக் குறிக்க வழங்கும் முறை தோன்றியிருக்கலாம்.

---

1 Cowan, J. M, Arabic English Dictionary, Third Edition (Newyork, spoken languages services 1976) p. ら.

2 மதுரைத் தமிழ்ப்பேரகராதி பாகம் 2.(மு.கா.நூ.)ப. 557.

3 Cowan J. M., Arabic English Dictinary, (op. cit.) p. 108.

4 மேற்படி ப. 105.

5 மேற்படி ப. 323.

6 Turner. R. L., A. Comparative Dictionary of the Indo Aryan languages, (london. oxford university press, second impression 1973) p. 431

7 Cowan. J. M., Arabic English Dictionary, (op. cit.) p. 262

8 மதுரைத் தமிழ்ப்பேரகராதி,பாகம்1 (மு.கா.நூ.),ப. 1065.

9 மேற்படி.

'சித்தா' [1] (Siththa) என்று அரபு மொழியில் ஆறினைக் கூறுவர். இது மாட்டுத் தரகர் மொழியிலும் ஆறைக் குறிப்பதாய் அமைந்திருக்கலாம்.

'சப் ஆ'[2] (Sab-a) என்று அரபு பொழியில் ஏழினைக் கூறுவர். இது சபா என்று வழங்கப்படலாம்.

'அனுஷ்டுக்' 'அனுஷ்டுப்' [3] ஆகிய சொற்களுக்கு 'எட்டாவது சந்தஸ்ஸு' என்று பொருள் சொல்லப்பட்டுள்ளது, இதிலிருந்து எட்டைக் குறிக்க 'ஆனா' என்னும் சொல்உருவாகியிருக்கலாம்,

'தாமனியா[4] (Thamaniya) என்று அரபு மொழியில் எட்டைக் கூறுவர் இதனின்றும் 'தாமம்' என்ற சொல்எட்டைக் குறிக்க தரகர் மொழியில் வழங்கப்படலாம்.

'திஸ் அ' [5] (This-A) என்று அரபு மொழியில் ஒன்பதைக் கூறுவர். இது தீசம் என்று வழங்கப்படலாம்.

'ராபி' [6] [Rabi] என்று அரபு மொழியில் கால் பங்கினைக் கூறுவர் இது'தாபி, என்றுமாறி வழங்கப்பட்டிருக்கலாம். தாபி என்பது தரகர் மொழியில் இருபத்தைத்தைக் குறிக்கும். தரகர் மொழியில், தாபியின் மூன்று மடங்கான முத்தாபி,எழுபத்தைந்தைக்குறிக்கும்.

'நிஸ்புன்' [7] [Nisfun] என்று அரபு மொழியில் அரையினைக் கூறுவர், இது நெசுவு என்று மாறியிருக்கலாம்.

'அஷ்ர' [8] (Ashra) என்று அரபு மொழியில் பத்தினைக் கூறுவர். அஃது அசரா என்று வழங்கப்படலாம். தரகர்கள் பெரும்பாலும் பத்தினை 'அசரா' என்றே வழங்குகின்றனர்.

---

1. Cowan. J. M Arabic English Dictionary, (op. cit) p. 397
2. மேற்படி ப. 394
3. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, பாகம். 1 (மு. கா. நா.) ப. 181.
4. Cowan, J. M. Arabic English Dictionary, (op cit) p. 107
5. மேற்படி. ப. 94.
6. மேற்படி. ப. 332.
7. மேற்படி. ப. 971.
8. மேற்படி. ப. 614

ஆயிரத்தினை வடமொழியில் 'சகஸ்ர' என்று வழங்குவர். இது அசரா என மாறி வழங்கப்பட்டு நூறு, ஆயிரம் ஆகியவற்றையும் குறிக்க உபயோகப்படுத்தப்பட்டிருக்கலாம்.

பணம் தமிழ்ச்சொல். ஆனால் இது நான்கினைக் குறிக்கும் வழி அறியப்படவில்லை. அம்முறையிலேயே காலன், கேவு, கோதுமராயம், உத்ரம், மூலம், தீபரம் ஆகிய எண்ணுப்பெயர்களும் அவற்றின் பொருளும் எம்மொழியினின்றும் தோன்றி மருவி வழங்கப்படுகின்றன என்பது அறியப்படவில்லை.

செங்கற்பட்டு, எம். ஜி. ஆர் மாவட்டத்தில் வழங்கும் சொற்கள் போலவே நானூற்றைக் குறிக்க 'பணயம்' என்ற சொல்லும், ஐந்நூற்றைக் குறிக்க 'தட்ட' என்ற சொல்லும், ஆயிரத்தைக்குறிக்க 'வாச்சி' என்ற சொல்லும் நிலக்கோட்டை வட்டார வழக்கிலும் [1] வழங்கப்படுகிறது.

மாட்டுத் தரகரின் பேச்சு வழக்குச் சொற்கள் பெரும் பான்மையாக அரபு மொழியினின்றும் வந்தவனாக உள்ளன. இதற்கு முஸ்லீம்களின் படையெடுப்பே காரணமாகும். பல்லவர்களின் ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அராபியர்கள் சிந்துப் பகுதியைக் கைப்பற்றினர். அது தோல்வியில் முடிந்தது. தமிழகத்தில் பிற்காலச் சோழர்களின் ஆட்சி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது வடவிந்தியாவில் முஸ்லீம்களின் ஆட்சியும் ஆதிக்கமும் ஏற்பட்டது. அவர்கள் பாண்டியர்களின் ஆட்சியின்போது தமிழகத்தில் படையெடுத்தனர். கால்ஜி சுல்தான்கள் காலத்தில் முஸ்லீம்கள் தக்கணத்தைத் தாக்கினர். [2]

அலாவுதீன் கில்ஜியின் தளபதியான மாலிக்காபூர் கி. பி. 1311இல் மதுரையைத் தாக்கினான். மாலிக்காபூர் மதுரையில்

---

1. கருப்பாயி. ஆ, நிலக்கோட்டை வட்டார தொழிற்களப் பாடல்கள், (மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு எம்ஃபில் பட்டத்திற்காக அளிக்கப்பட்ட ஆய்வேடு. 1985)

2. செல்வம். வி. டி. 'தமிழக வரலாறும் பண்பாடும்' (மதுரை, மதுரை பப்ளிஷிங் அவுஸ், 1976) ப. 206.

தோற்கடிக்கப்பட்டு காஞ்சிபுரம் வரை இரவிவர்ம குலசேகரனால் விரட்டியடிக்கப்பட்டான் என்று கருதப்படுகின்றது. 'மாலிக்காபூர் மதுரையில் வெற்றி பெற்ற பின்னர் இராமேசுவரத்தையும் வென்று மசூதியும் நிறுவி விட்டுச் சென்றான் என்று பெரிஸ்தா கூறுகின்றார்."[1]

ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து அரபுப் பயணிகளும் நிலநூல் வல்லுநர்களும் எழுதி வைத்த குறிப்புகள் நமக்கு மிகவும் உதவுகின்றன. மிகப் பழங்காலத்திலிருந்தே இந்தியப் பெருங்கடலில் நடைபெற்ற வாணிகத்தின் பெரும்பகுதி அராபியர் கையில்தான் இருந்தது. இஸ்லாத்தின் தோற்றத்திற்குப் பின் சமயம், அரசியல் ஆகிய துறைகளில் மட்டுமின்றி வாணிகத் துறையிலும் அறிவியல் துறையிலும் அரபு மக்களின் முயற்சிகள் வேகமாக விரிவடைந்தன. முகமது நபியே ஒரு வணிகராக இருந்ததால் முஸ்லீம் வணிகர்களுக்கு மக்கள் அதிக மதிப்புக் கொடுத்தார்கள். ஏழாம் நூற்றாண்டின் இறுதிக்குள் அரபு வாணிகர்கள் இலங்கையில் தங்களுடைய குடியிருப்பு ஒன்றை நிறுவி விட்டார்கள். கான்டன் நகரில் 758இல் ஆர்ப்பாரவாரம் ஒன்றைக் கிளப்பி அதனால் தோன்றிய குழப்பத்தின் மூலம் பயனடையக் கூடிய அளவுக்கு அங்குக் குடியிருந்த அரபு வாணிகர்கள், பாரசீக வாணிகர்கள் ஆகியவர்களுடைய எண்ணிக்கை பெரியதாயிருந்தது. பாரசீக முஸ்லீமான இபின் சூர்தாத்பே என்பவர்தாம் இக்குறிப்பை எழுதி வைத்தார்.[2]

1324-க்கும் 1335க்கும் இடைப்பட்ட காலத்தில் தக்காணமும் தென்னிந்தியாவும் சேர்ந்த தென்னாடு முழுவதும் டில்லிப் பேரரசின் ஆட்சியிலிருந்தது என்று முஸ்லீம் வரலாற்றாசிரியர்கள் பொறுத்துக்கொள்ளத்தக்க உயர்வு நவிற்சியோடு எழுதி வைத்திருக்கின்றார்கள்.[3] மேற்குறிப்பிட்ட காலத்தில் டில்லியில் சுல்தான்கள் ஆட்சி புரிந்து வந்துள்ளனர்.

பாமிணி இராஜ்யத்தில் சிவில் அலுவலகங்களிலும் இராணுவப் பதவிகளிலும் முறையாக நியமிக்கப்பட்ட

1. மேற்படி ப. 207.
2. நீலகண்ட சாஸ்திரி. கே. ஏ., தென்னிந்திய வரலாறு, தமிழாக்கம் மு. ரா. பெருமாள் முதலியார், (தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியீடு, 1973) ப. 46.
3. மேற்படி. ப. 366.

துருக்கியர், அரேபியர், பாரசீகர், முகலாயர் ஆகிய வெளி நாட்டினர் பலர் இருந்தனர்.[1]

சில சமயங்களில் நூற்றுக்கணக்கான இந்துக்கள் இஸ்லாம் மதத்துக்கு மாற்றப்பட்டனர் ஏராளமான வெளிநாட்டினர் - பாரசீகர், துருக்கியர், அரேபியர். முகலாயர் வாணிகம் செய்வதற்கும் அரசு அலுவலில் சேர்வதற்கும் தக்காணத்துக்கு வந்து அங்கேயே குடியேறி உள்ளூர்ப்பெண்களோடு வாழ்ந் தார்கள்.[2]

இத்தகைய செய்திகளினால் இடைக்காலத்தில் முஸ்லீம்கள் ஆதிக்கம் தமிழகத்தில் அதிகமானது என்பது அறியப்படு கின்றது. அவர்களுடன் தமிழர்களுக்கேற்பட்ட தொடர்பி னால் பல துறைகளிலும் குறிப்பாக வாணிகத் துறையில் முஸ்லீம்களின் மூலக் குடியிருப்பு இடமான அரபு நாட்டின் அரபு மொழிச் சொற்கள் பல தமிழரிடையே வழங்கப் படலாயின.

17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயர்கள் தமிழகத்தில் வாணிகம் செய்ய வந்தனர். வளர்ச்சி பெற்றனர்; ஆட்சிப் பொறுப்பினையும் ஏற்றனர். நிலையற்ற முறையில் ஆட்சி ஆதிக்கம் பெற்றவர்கள் தங்கள் ஆட்சிப் பகுதியில் பரதேசிகளான பிற நாட்டினரையே நம்பினா. அவர்களையே பெரும்பாலும் நம்பிப் பணியில் அமர்த்திக் கொண்டனர். அவர்கள் பேசும் மொழியினையே ஆட்சித் துறையிலும் வாணிகத் துறையிலும் பெரும்பாலும் பயன்படுத்தியுள்ளனர். எந்த நாட்டிலுமே ஆதிக்கம் செலுத்தப்புகும் பரதேசிகள் அந்த நாட்டில் உள்ள சுதேசிகளை நம்புவதில்லை. தங்களைப் போன்ற பரதேசிகளையே நம்புவர். பிரிட்டிஷார் புகுந்த எல்லா நாடுகளிலும் இப்படித்தான் அவர்கள் நடந்து கொண்டுள்ளனர்[3]

இவ்வாறு மேனாட்டாரின் வருகையினால் அவர்களுடன் தமிழர்களுக்கேற்பட்ட தொடர்பினால் அரேபிய, பாரசீக, உருதுச் சொற்கள் தமிழரிடையே வழங்கப்படலாயின. 289

1. மேற்படி.ப. 392.
2. மேற்படி. ப. 409.
3. சிவஞானம். ம. பொ. தமிழகத்தில் பிறமொழியினர், (சென்னை-4, பூங்கொடி பதிப்பகம், 1976) ப. 40.

அர்புமொழிச் சொற்களும் 119 பாரசீக மொழிச் சொற்களும் தமிழ் மொழியில் கலந்துள்ளனதாகத் தமிழ்ப் பேரகராதியில் குறிக்கப்பட்டுள்ளது எனத் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் கூறியுள்ளார்.

தமிழகம் தொன்றுதொட்டே மேலை கீழை நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டு விளங்குவது. பண்டைக்கால வாணிகம், வாணிகத்தையே நோக்கமாகக் கொண்டிருந்தது. இடைக்காலத்து வாணிகம், அரசியல் ஆதாயம் கருதியும் அரசியலோடும் கலந்து பரவி நடைபெறலாயிற்று. பண்டைத் தமிழர் வாணிகம் தம் பண்பாட்டினையே நாகரிகத்தினையே பிறநாடுகளில் பரவச் செய்யும் பாங்குடையதாயிருந்தது. தற்காலத்தில் தமிழகம் மேனாட்டுப் பண்பாட்டினையும் நாகரிகத்தையும் பின்பற்றும் நிலையினைத் தமிழகச் சமுதாய அமைப்பில் காணலாம் காலந்தோறும் சொற்களும் சொற்களின் பொருளும் பழக்க வழக்கங்களும் நாகரிகமும் மாறுபடுவ தியல்பு. அம்முறையில் பொருள்களின் மதிப்பைக் குறிப்பாக மாட்டுத் தரகர் மாட்டின் விலை மதிப்பைச் சில நூற்றாண்டுகளுக்கு முன் வராகன்[1] என்ற நாணய மதிப்பில் வழங்கி வந்துள்ளனர். தற்பொழுது மாட்டுத் தரகர்கள் மாடு வியாபாரத்தில் மேற்கண்ட பிறமொழிச் சொற்களையே பயன்படுத்தி வருகின்றனர். அச்சொற்களின் பொருள் விளக்கம் இனிக் காணலாம்.

மாட்டுத் தரகர் பேச்சு மொழி அவர்கள் வழங்கும் பொருளில் அகராதியல் குறிப்பிடப்படவில்லை. எனவே, இத்தலைப்பில் எழுத்து வழக்கு, பேச்சு வழக்கு என்ற பாகுபாடு குறிப்பிடப்படவில்லை; மாட்டுத் தரகரின் பேச்சு வழக்குச் சொற்களுக்குரிய பொருள் விளக்கம் மட்டும் கூறப்படுகிறது.

அசரா	— பத்து ரூபாய் நாணயத்தைக்குறிப்பது.
அற்பா	— நான்கு, நாற்பது, நானூறு, நான்காயிரம் ஆகிய ரூபாய்களைக் குறிப்பது. பெரும்பாலும் கறவல்மாடு வியாபாரத்தில் வழங்கப்படுவது.

---

1. சம்பந்தன், மா. சு., சென்னை மாநகர், இரண்டாம் பதிப்பு (சென்னை-1, தமிழர் பதிப்பகம், 1978)
கி. பி. 1687 இல் வராகன் - 32 பணம்; ப. 57.
கி. பி 1814 இல் வராகன் - $3\frac{1}{2}$ ரூ. ப. 90.

அற்பா ஆயிரம்	— நான்காயிரம் ரூபாயைக் குறிப்பது.
அற்பா கம்சா அற்பினி கம்சா	— நாற்பத்தைந்தைக் குறிப்பது
அற்பா தாபி	— நானூற்றிருபத்தைந்தைக் குறிப்பது.
அற்பா நெசுவு	— நானூற்றைம்பதைக் குறிப்பது.
அற்பா முத்தாபி	— நானூற்றெழுபத்தைந்தைக் குறிப்பது.
ஆனா	— எட்டு, எண்பது, எண்ணூறு, எட்டாயிரம் ரூபாய்களைக் குறிக்கும் சொல்.
இத்னா இதினா இசினி	— இரண்டு, இருபது, இருநூறு, — இரண்டாயிரம் ரூபாய்களைக் — குறிப்பது.
உத்ரம்	— மூன்று, முப்பது, முந்நூறு, மூவாயிரம் ரூபாய்களைக் குறிப்பது.
ஐந்து விரல் பிடித்தல்	— ஐந்து, ஐம்பது, ஐந்நூறு, ஐயாயிரம் ரூபாய்களைக் குறிப்பது.
ஒரு விரல் பிடித்தல்	— பத்து, நூறு, ஆயிரம் ரூபாய்களைக் குறிப்பது.
கட்டை விரல் பிடித்தல்	— நூறு, ஆயிரம் ரூபாய்களைக் — குறிப்பது.
கம்சா	— பெரும்பாலும் +ஐந்தைக் குறிப்பது. ஐந்து, ஐம்பது, ஐந்நூறு, ஐயாயிரம் ரூபாய்களைக் குறிக்க, கறவல் வியாபாரத்தில் வழங்கப்படுவது.
கறவல்	— பால் கொடுக்கும் மாடு.
கால	— இரண்டாயிரத்தைக் குறிக்கச் சிறப்பாக வழங்கும் சொல்,
கேவு	— நூற்றைக் குறிக்கச் சிறப்பாக வழங்கும் சொல்.
கேவு நெசுவு	— நூற்று ஐம்பதைக் குறிப்பது.
கொல்சு	— நூறு ரூபாய் (தரகர் பேச்சு மொழியில் தரகர் கூலியைக் குறிப்பது)
அரைக் கொல்சு	— ஐம்பது ரூபாய்.

கால் கொல்சு	— இருபத்தைந்து ரூபாய்.
கொல்சு ரூபாய்	— $\frac{1}{4}$ ரூபாய் (4 அணா)
முக்கொல்சு ரூபாய்	— 3 / 4 ரூபாய்.
கோதும	— நூற்றைக் குறிக்க வழங்கும் சிறப்பான சொல்.
சபா	— ஏழு, எழுபது, எழுநூறு, எழாயிரம் ரூபாய்களைக் குறிக்க கறவல் வியாபாரத்தில் வழங்கும் சொல்.
சபா தாபி	— எழுநூற்றிருபத்தைந்தைக் குறிப்பது.
சபா நெசுவு	— எழுநூற்றைம்பதைக் குறிப்பது,
சபா முத்தாபி	— எழுநூற்றெழுபத்தைந்தைக்குறிப்பது.
சபா மூலம்	— எழுபத்தைந்தைக் குறிக்கும் சொல். பெரும்பாலும் எருது வியாபாரத்தில் வழங்குவது.
சபீன்	— ஏழு ரூபாயைக் குறிப்பது.
சப்பினி கம்சா	— எழுபத்தைந்தைக் குறிப்பது.
சம்மூலம்	— பெரும்பாலும் பதினைந்தையும் சிலர் நூற்றைம்பதையும் குறிக்க வழங்கும் சொல்,
சவராயம்	— ஐம்பதைக் குறிக்க சிறப்பாக வழங்கும் சொல்.
சித்தா	— ஆறு. அறுபது, அறுநூறு, ஆறாயிரம் ரூபாய்களைக் குறிக்கும் சொல்.
சித்தினி கம்சா	— அறுபத்தைந்தைக் குறிப்பது.
சித்தா தட்ட	— அறுநூற்றைம்பதைக் குறிப்பது.
சித்தா தாபி	— அறுநூற்றிருபத்தைந்தைக் குறிப்பது.
சித்தா நெசுவு	— அறுநூற்றைம்பதைக் குறிப்பது.
சித்தா முத்தாபி	— அறுநூற்றெழுபத்தைந்தைக் குறிப்பது
டிரிபுள் கொல்சு	— மூவாயிரம் ரூபாயைக் குறிக்க எருமை வியாபாரத்தில் வழங்கும் சொல்
தட்ட	— ஐந்து, ஐம்பது, ஐந்நூறு, ஐயாயிரம் ரூபாய்களைக் குறிக்க எருது வியாபாரத்தில் வழங்கும் சொல்.

தட்ட தட்ட	— ஐம்பத்தைந்தையும் ஐந்நூற்றைம்பதையும் குறிப்பது.
தட்ட தாபி	— ஐந்நூற்றிருபத்தைந்தைக் குறிப்பது.
தட்ட முத்தாபி	— ஐந்நூற்றெழுபத்தைந்தைக் குறிப்பது.
தலாத	மூன்று, முப்பது, முந்நூறு, மூவாயிரம் ரூபாய்களைக் குறிக்க அதிக அளவில் வழங்கும் சொல்.
தலாதி கம்சா	— முப்பத்தைந்தைக் குறிப்பது.
தலாத தாபி	— முந்நூற்றிருபத்தைந்தைக் குறிப்பது.
தலாத நெசுவு	— முந்நூற்றைம்பதைக் குறிப்பது.
தலாத முத்தாபி	— முற்நூற்றெழுபத்தைந்தைக் குறிப்பது.
தாபி	— இருபத்தைந்தைக் குறிப்பது.
தாமம்	— எட்டு, எண்பது, எண்ணூறு, எட்டாயிரம் ரூபாய்களைக் குறிப்பது.
தாம மூலம்	— எண்பத்தைந்தையும், எண்ணூற்றைம்பதையும் குறிப்பது.
தாமந்தாபி	— எண்ணூற்றிருபத்தைந்தைக் குறிப்பது.
தாம நெசுவு	— எண்ணூற்றைம்பதைக் குறிப்பது.
தாம முத்தாபி	— எண்ணூற்றெழுபத்தைந்தைக் குறிப்பது.
தாமங்கால் மூலம்	— எண்பத்தைந்தையும் எண்ணூற்றைந்தையும் சிறப்பாகக் குறிக்க வழங்குவது.
தாமு	— ஒன்பது.
தாமு வாய்தா	— தொள்ளாயிரம்
தீசம்	— ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம், ஒன்பதாயிரம் ரூபாய்களைக் குறிப்பது.
தீசந்தாபி	— தொள்ளாயிரத்து இருபத்தைந்தைக் குறிப்பது.
தீசபஞ்சா	— தொண்ணூற்றைந்தையும் தொள்ளாயிரத்தைம்பதையும் குறிப்பது.

தீச முத்தாபி	— தொள்ளாயிரத்தெழுபத்தைந்தைக் குறிப்பது.
தீசங்கால் மூலம்	— தொள்ளாயிரத்தெண்பத்தைந்தைச் சிறப்பாகச் சொல்ல வழங்குவது.
துட்டு	— பணம்.
நிசு, நெசு, நெசுவு	ஐந்து, ஐம்பது, ஐந்நூறு, ஐயாயிரம் ரூபாய்களைக் குறிக்கக் கறவலில் பெரும்பாலும் வழங்குவது (பெரும்பாலும் வாச்சிக்கு மேல் அஃதாவது நூற்றுக்கு மேற்பட்டு நெசுவையே ஐம்பதைக் குறிக்க வழங்குவர்).
நெசவு தட்ட	— ஐம்பத்தைந்தைக் குறிப்பது.
நெசுவு மூலம்	— ஐம்பத்தைந்தைக் குறிப்பது.
பஞ்சா	— ஐத்து, ஐம்பது, ஐந்நூறு, ஐயாயிரம் ரூபாய்களைக் குறிக்க எருது வியாபாரத்தில் வழங்குவது.
பணம்	— நான்கு, நாறபது, நானூறு, நான்காயிரம் ரூபாய்களைக் குறிக்க எருது வியாபாரத்தில் வழங்கும் சொல்.
முத்தாபி	— நூற்றுக்கு மேல் வரும் எழுபத்தைந்தைக் குறிக்க, கறவலில் வழங்குவது.
மூலம்	— ஐந்து, ஐம்பது, ஐந்நூறு, ஐயாயிரம் ரூபாய்களைக் குறிக்கக் கறவலில் வழங்குவது.
மூலம் மூலம்	— ஐம்பத்தைந்தைக் குறிப்பது.
ராயம்	— இரண்டு, இருபது, இருநூறு, இரண்டாயிரம் ரூபாய்களைக் குறிக்கக் கறவலில் வழங்குவது.
ராயந்தாபி	— இருநூற்றிருபத்தைந்தைக் குறிப்பது.
ராயம் நெசுவு	— இருநூற்றைம்பதைக் குறிப்பது.
ராயம் முத்தாபி	— இருநூற்றெழுபத்தைந்தைக் குறிப்பது.
வரப்பு	— ஆயிரம் ரூபாய்.
வாச்சி	— நூறு, ஆயிரம் ரூபாய்களைக் குறிப்பது.

வாச்சி கேவு நெசுவு	— ஆயிரத்து நூற்று ஐம்பது ரூபாயைக் குறிப்பது.
வாச்சி வாச்சி	— ஆயிரத்து நூறு ரூபாயைக் குறிப்பது.
வாய்தா	— ஒன்று, நூறு, ஆயிரம்ரூபாய் களைக் குறிப்பது.
வாய்தா தாபி	— நூற்றிருபத்தைந்தைக் குறிப்பது.
வாய்தா நெசுவு	— நூற்றைம்பது ரூபாயைக் குறிப்பது.
வாய்தா முத்தாபி	— நூற்றெழுபத்தைந்து ரூபாயைக் குறிப்பது.

6. ஆட்டின் நிறங்களும் நோய்களும்

விவசாயிகள் வளர்க்கும் கால்நடைச் செல்வங்களுள் ஆடும் முக்கிய இடம் பெறுதலால் ஆடுகளிடையே காணப்படும் நிறவேறுபாடுகள், அவற்றுக் குண்டாகும் நோய்கள் பற்றியும் இங்கு விளக்கப்படுகின்றன.

ஆடு, வெள்ளாடு, செம்மறியாடு என இருவகைப்படும். வெள்ளாடு என்பது வெண்மை நிறமுடையதன்று; பெரும் பாலும் கருமையிலும் சிவப்பு நிறத்திலும் தான் இருக்கின்றன. எங்கேயோ ஒரு சிலவே மற்ற நிறத்துடன் சற்று வெண்மை நிறமும் உடையதாய் செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத் தில் உள்ள ஆடுகள் காணப்படுகின்றன. செம்மறியாடு பெரும் பாலும் சிவந்த நிறமுடையதாயிருக்கும்.

ஆடுகளில் ஆணின் இளமையினைக் கடாக் குட்டி என்றும் பெண் இளமையினைப் பொட்ட குட்டி [பெட்டைக் குட்டி] என்றும் கூறுவர் ஆடுகள் $1\frac{1}{2}$ ஆண்டுக்கு மேல் குட்டி ஈனும், செம்மறியாடு வருடத்துக்கு ஒரு முறையே 6 மாத கர்ப்பத்தில் குட்டி ஈனும்; ஒரு முறையில் ஒரு குட்டிக்கு மேல் ஈனாது; ஈனவும் கூடாது என்பர். வெள்ளாடு வருடத்திற்கு இருமுறை குட்டி ஈனும். ஒரு முறையில் ஒன்று முதல் நான்கு குட்டிகள் வரையில் ஈனும் இவ்வாறு ஓர் ஆடு நாலைந்து முறை குட்டி ஈனும். ஓர் ஆண்டு முடிந்த ஆண் ஆட்டினைப் 'பொலிகடா' என்பர்.

வெள்ளாட்டிற்கு நோய் வந்தால் பிழைப்பது கடினம். செம்மறியாட்டுக்கு நோய் வந்தால் மருத்துவம் செய்து பிழைக்க வைக்க முடியும் என்பர். இனி, 'ஆடு' பற்றிய சொற்களின் பொருள் விளக்கம் காணலாம்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
அதிர் நோவு	அதிர் நோய்	செம்மறியாட்டுக்கு உண்டாகும் நோய்களுள் ஒன்று. துள்ளி விழுந்து உடன் இறக்கும்.
அரண கடி	அரணைக் கடி	அரணை கடித்து விடுவதால் உண்டாகும் நோய்.
அள்ளு மர	அள்ளு மரை	அள்ளுப் பக்கத்தில் வெண்மை நிறமுடையது.
ஆடு	ஆடு	3 ஈத்து போட்ட செம்மறியாடு.
ஆரம்	ஆரை	தொங்குதசை.
ஈத்து	ஈத்து	குட்டி ஈனுதல்.
கட்டு மர	கட்டு மரை	வயிற்றிலிருந்து முதுகு வரை வட்டமாக வெண்மை நிறமுடையது.
கடாகுட்டி	கடாக்குட்டி	ஆண் ஆட்டின் இளமை.
கரிநெத்தி ஆடு	கரி நெற்றி ஆடு	வயிறெல்லாம் கருப்பு, நெற்றியில் நீண்ட வெள்ளை, மேல் பாகம் சிவப்பு அல்லது மற்ற நிறமுடையது,
கரிசெரளி ஆடு	கரி செரளி ஆடு	அடி வயிற்றில் கருப்பும் வெள்ளையும் கலந்திருக்கும். மேற்புறம் மற்ற நிறமுடையது.
கரி வெங் கால ஆடு	கரி வெங்கால ஆடு	வயிறு கருப்பு நிறம், பின்கால் இரண்டுடன் நடுமுட்டிக்கும் கீழ் வெள்ளை நிறமுடையது.
கருப்பு வெள்ளாடு	கருப்பு வெள்ளாடு	கருப்பு நிறமுடைய வெள்ளாடு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கறி ஆடு கறிலி ஆடு	கறி ஆடு கறிலி ஆடு	உடல் சிவப்பு அல்லது மற்ற நிற மாகவும் வயிறுதாடையெல்லாம் கறுப்பு நிறமுடையது.
கன்னி வெள்ளாடு	கன்னி வெள்ளாடு	வயிறெல்லாம் கறுப்பு, மேற் புறம் சிவப்பாயிருப்பது.
காக்கா வலி	காக்கை வலி	ஆட்டிற்கு உண்டாகும் நோய் களுள் ஒன்று. ஆடு வலியினால் ஆடும்.
காரு கடா	காறு கடா	1½ வருடமுள்ள செம்மறி யாட்டுக் கடா.
கர்ண கீடு	கிரகண கீணம்	கிரகண காலத்தில் பிறந்த ஆடு. எப்பொழுதும் தலையாட்டிக் கொண்டேயிருப்பது.
கீறு நெத்தி	கீறு நெற்றி	நெற்றியில் வெண்ணிற மயிர் பிறை போல் வளர்ந்திருக்கும்.
குட்டி	குட்டி	மூன்று மாத வயதிற்குள் உள்ள ஆடு. பல் கிடையாது.
குதிர வலி	குதிரை வலி	ஆடு வலி வருதலினால் முறைக்கும்.
கொடு ஆடு	கொட்டாடு	மற்ற ஆடுகளினின்றும் தனித்துச் செல்லும் தன்மையுடைய ஆடு.
கொப்பாடு	கொப்பாடு	செம்மறியாட்டில் கொம்புடைய பெண் ஆடுகள். 10 விழுக்காடு ஆடுகள் இத்தகையவை.
கோமாரி	கோமாரி	கால்நடைகளுக்கு உண்டாகும் நோய்களுள் ஒன்று.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
	வாய்க் கோமாரி	வாயில் நீர் வடியும்; தீனி தின்னாது.
	கால் கோமாரி	காலில் குளம்பு கழலும்; நொண்டும்; குளம்பில் வெடிப்பு ஏற்படும்.
சந்நியாசி வெள்ளாடு	சந்நியாசி வெள்ளாடு	எல்லா நிறமும் கலந்திருக்கும் வெள்ளாடு.
சருக்குநோவு	சருக்கு நோய்	சாணம் பீசிக் கொண்டே இருக்கும்; நீர் அதிகமாகக் குடிக்கும்;மேய்ப்பு இல்லாமல் இளைத்துவிடும்; இரத்தமாகக் கழிந்தால் பிழைக்காத தொற்று நோய்.
சார வெள்ளாடு	சாரை வெள்ளாடு	வெள்ளை வெள்ளாடு.
சிகப்பு கொப்பாடு	சிவப்பு கொப்பாடு	சிவந்த நிறமுடைய கொம்புள்ள பெண் செம்மறியாடு.
சில்ல வெள்ளாடு	சில்ல வெள்ளாடு	காது கூசாக நீண்டிருக்கும் வெள்ளாடு.
சில்லியாடு	சில்லியாடு	காது சிறியதாய் உள்ள செம்மறியாடு.
சுழல் நோவு	சுழல் நோய்	கருங்குருவி, காகம் முதலிய பறவைகள் முட்டைமேல் உட்கார்ந்து நேரே ஆடு, மாடுகள் மேல் உட்கார்ந்தால் அவை சுழன்று விழும்; பிழைப்பது கடினம்;சுற்றும் திசைக்கு எதிர்த் திசையில் முடி இலேசாக அறுத்துக் கொண்டு வந்தால் பிழைக்கும் என்பர்.
செம்மலியாடு, செம்மிலியாடு	செம்மறியாடு	ஆட்டின் வகையுள் ஒன்று.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
செம்மிலி யாட்டுக் கடா	செம்மறி யாட்டுக் கடா.	ஆண் செம்மறியாடு.
செரக்கயிசல்	செரக் கழிசல்	சருக்கு நோய்.
செரளி ஆடு	செரளி ஆடு	உடல் வெள்ளையும் மேல் புறம் சிவப்பு அல்லது வேறு நிறமுமுடையது,
செவப்பாடு	சிவப்பாடு	உடல் முழுவதும் சிவப்பு நிறமுடைய வெள்ளாடு.
செவப்பு நெத்தியாடு	சிவப்பு நெற்றியாடு	உடலெல்லாம் சிவப்பு நிறமும் நெற்றியில் வெள்ளையும் உடையது.
செனமரக்க	சினை மரக்கை	முதல் குட்டி போடவுள்ள ஆடு.
சோந்தர வெள்ளாடு	சோந்தர வெள்ளாடு	காதில் வெள்ளை அல்லது இரு கொம்புகளுக்கிடையில் வெண் புள்ளி இருக்கும். உடல் கறுப்பு அல்லது பழுப்பு நிறமாயிருக்கும்.
	நெத்தி சோந்தர ஆடு	நெற்றியில் வெள்ளையிருப்பதுடன் சோந்தர ஆட்டின் நிறமுடையது.
	நாமதாரி சோந்தர ஆடு	நெற்றியில் நாம வடிவில் வெண்ணிறமிருப்பதுடன் சோந்தர ஆட்டின் நிறமுடையது.
டப்பா கண் ஆடு	டப்பாக் கண் ஆடு	பல்லியாடு
தரக்கயிசல்	தரக் கழிசல்	சருக்கு நோய்.
தல கட்டு	தலைக்கட்டு	ஆட்டிற்கு உண்டாகும் நோய்களுள் ஒன்று. தலைப் பக்கத்தில் கழுத்துக்கு மேல் வீக்கம் அடைவது.
தலசன் ஆடு	தலைச்சன் ஆடு	ஒரு ஈத்து போட்ட ஆடு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
தவள நோவு	தவளை நோய்	தலைக்கட்டு.
தாலி ஆடு	தாலி ஆடு	மாலி ஆடு.
தொட மர	தொடை மரை	தொடைப் பகுதியில் வெண்மை நிறமுடையது.
தொண்ட நோவு	தொண்டை நோய்	ஆட்டிற்குண்டாகும் நோய்களுள் ஒன்று.
தொவர ஆடு	துவரை ஆடு	உடல் முழுவதும் இலேசான சந்தன நிறம் உடையது.
தொவர நெத்தி ஆடு	துவரை நெற்றி ஆடு	உடல் முழுவதும் இலேசான சந்தன நிறமும் நெற்றியில் வெள்ளை நிறமும் உடையது.
நா பள்ள ஆடு	நாய் பள்ளாடு	வெள்ளாட்டில் அடிக்கடி குட்டி போடும் ஆடு; மடி சிறியது; பால் அதிகம் இல்லாதது.
நாமதாரி வெள்ளாடு	நாமதாரி வெள்ளாடு.	முகத்திலிருந்து வயிறு வரை அல்லது முகம் மட்டும் வேறு நிறமுடையது.
நீர் வெக்க	நீர் வெக்கை	தரக்கழிசல்.
பக்கமர	பக்கமரை	பக்கப்பகுதியில் வெள்ளை நிறமுடையது.
படுகடா	படுகடா	ஒரு வருடமுள்ள செம்மறியாட்டுக் கடா,
பட்ட ஆடு	பட்டை ஆடு	வெள்ளாட்டில் பல நிறங்கள் கலந்து பட்டை பட்டையா யிருக்கும்.
பட்டநெத்தி	பட்டை நெற்றி	மூக்கிலிருந்து பிடரி வரை வெண் பட்டையாயிருப்பது.
பல்லியாடு	பல்லியாடு	கண் உட்குழிந்த ஆடு,
பழுப்பு வெள்ளாடு	பழுப்பு வெள்ளாடு	பழுப்பு நிறமுடைய வெள்ளாடு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பள்ள ஆடு	பள்ளாடு பள்ளையாடு	குள்ளமான ஆடு.
பனவெறி	பனைவாரி	ஆட்டிற்குரிய அம்மை நோய், உடலெல்லாம் கண்டு கண்டாயிருக்கும்.
பாம்புகடி	பாம்புக்கடி	வாயிலிருந்து நுரை வருதலுடன் மந்தமாகி மேயாது; வயிறு உப்பும், பாம்புப் பண்ணைக்குக் கொண்டு சென்று மந்தரித்தால் சரியாகும்.
பால செரளி ஆடு	பால செரளிஆடு	உடலெல்லாம் துவரை நிறம்; வயிறெல்லாம் வெண்மை நிறமானது.
பிருவு	புருவை	சினைபடும் பக்குவமுள்ள ஆடு.
பில்லு நோவு	புல்லு நோய்	புல் மேய்தலால் வரும் நோய்.
புருவகன்னு	புருவைக் கன்று	$1\frac{1}{2}$ ஆண்டுடைய ஆடு.
பூச்சி கடி	பூச்சிக்கடி	ஆட்டுக்கு வரும் நோய்களுள் ஒன்று, தண்டம் போடுதல் அல்லது மருந்து ஊற்றுதலால் சரியாகும். தும்பை இலைச் சாற்றைக் கொடுத்தபின் இலையை வாயில் கொடுத்தால் தும்பிக் கொண்டே அசை போடத் தொடங்கும்.
பூ நெத்தி ஆடு	பூ நெற்றி ஆடு	நெற்றியில் மட்டும் நட்சத்திரம் போல் வெள்ளையும் உடலெல்லாம் சிவப்பு நிறமுமுடையது.
	சிவப்பு பூ நெற்றியாடு	உடல் சிவப்பும் நெற்றியில் மட்டும் நட்சத்திரம் மாதிரி வெள்ளையும் உடையது.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
	மாலி பூ நெற்றியாடு	உடல் சிவப்பு தவிர வேறு நிறமும் நெற்றியில் மட்டும் நட்சத்திரம் மாதிரி வெள்ளை யும் உடையது.
பொட்ட குட்டி	பெட்டைக் குட்டி	பெண் ஆட்டின் இளமை.
பொலிகடா	பொலிக்கடா	$2\frac{1}{2}$ வருடத்திற்கு மேற்பட்ட செம்மறியாட்டுக் கடா,
பொலிமரக் கன்னு	பொலிமரக் கன்று	ஒரு வருடம் நிறைந்த ஆடு; 2 பல் உண்டாகிய நிலை.
மணி ஆடு	மணியாடு	மாலி ஆடு.
மரவாடு	மரையாடு	தொடையிலிருந்து வயிறு உட்பட வெள்ளையும் மற்ற பாகம் சிவப்புமுடையது.
மாந்தொவர ஆடு	மாந்துவரை ஆடு	உடல் முழுவதும் வெண்மையும் சந்தன நிறமும் கலந்தது.
மாலி ஆடு	மாலியாடு	தாலி உடைய செம்மறியாடு. இலேசான கறுப்பு நிறமுடையது.
மாலி கொப்பாடு	மாலிகொப்பாடு	இலேசான கறுப்பு நிறமுடைய கொம்புள்ள பெண் செம்மறி யாடு.
மாலிசெரளி ஆடு	மாலிசெரளி ஆடு	வயிறு, தாடையெல்லாம் வெள்ளையும் மேற்புறம் இலேசான கறுப்பும் உடையது.
மாலிமர வாடு	மாலிமரையாடு	உடலெல்லாம் இலேசான கறுப்பும் பின்பாகம் தொடை யிலிருந்து கீழ்ப்பாகம் வெள்ளையுமுடையது.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
முச்சல் ஆடு	முச்சில ஆடு	மொச்சியாடு
முசர	முசரை	வெள்ளாட்டுக்கு உண்டாகும் தொற்று நோய்.
மூக்கடப்பு	மூக்கடைப்பு	நீரினால் பாதிக்கப்பட்ட ஆடு.
மொச்சியாடு	மொச்சியாடு	காதுமிகச் சிறியதாய்உள்ள செம்மறியாடு.
மொசவலி	முசல்வலி	ஆடுவலிவருதலினால் துள்ளும்,
மொட்ட வெள்ளாடு	மொட்டை வெள்ளாடு	தலையில் கொம்பில்லாத ஆடு. மற்ற ஆண்பெண் ஆடுகளுக்கு ½ முதல் ¾ அடி அளவு கொம்பிருக்கும்.
மோத்த கடா	மோத்தைக்கடா	வெள்ளாட்டுக்கடா.
ரத்தபாள	இரத்தப்பாளை	ஆட்டிற்குண்டாகும் நோய்களுள் ஒன்று. மூக்கில் திடீரென்று இரத்தம் வரும்.
ரெண்டாம் ஈத்துஆடு	இரண்டாம் ஈத்துஆடு	இரண்டாம் குட்டி போட்ட ஆடு.
லிங்காலு ஆடு	லிங்காலு ஆடு	மாலி ஆடு.
வாண்ட கன்னு	வாண்டைக் கன்று	மூன்று மாத வயதிற்கு மேற்படாத ஆடு; பல் கிடையாது.
வெங்கால ஆடு	வெங்கால் ஆடு	உடல் சிவப்பும் பின்கால் முட்டியின் கீழ் வெள்ளை நிறமுமுடையது.
வெள்ள கொப்பாடு	வெள்ளைக் கொப்பாடு	வெண்ணிறமுடைய கொம்புள்ள பெண் செம்மறியாடு.
வெள்ள வெள்ளாடு	வெள்ளை வெள்ளாடு	உடல் முழுவதும் வெண்மை நிறமுடையது.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
வெள்ளாடு	வெள்ளாடு	ஆட்டின் வகையுள் ஒன்று
வெள்ளாட்டுக் கடா	வெள்ளாட்டுக் கடா	ஆண் வெள்ளாடு.
வைசூரி	வைசூரி	ஆட்டிற்கு வருகின்ற அம்மை நோய்.
குவ்வாலுடு [தெ.]	குவ்வாலுடு	சுழல் நோய்.
கொர்ர(தெ)	கொர்ர	செம்மறியாடு
மெடதீப்பு (தெ.)	மெடதீப்பு	தலைமட்டும் மாறிமாறிசுற்றும்; கத்திக் கொண்டேயிருக்கும். தலைமுதல் நெற்றிவரை பழுத்த கம்பியால் சுடு போட நிற்கும்.
ஜார வெள்ளாடு	ஜாரை வெள்ளாடு	கரும்பழுப்பு நிறமும் வெள்ளைப் புள்ளிகளும் கலந்த ஆடு.

இவ்வாறு இரண்டு, மூன்றாம் இயல்களில் உழவுத்தொழில் சார்ந்து தொகுக்கப்பட்ட சொற்கள் பொருள்வழிப் பாகுபாட்டின் அடிப்படையில் பிரித்துப் பொருள் விளக்கம் காணப் பட்டன அடுத்து வரும் நான்கு, ஐந்தாம் இயல்களில் நெசவு சார்ந்து தொகுக்கப்பட்ட சொற்களைப் பொருள்வழிப் பாகு பாட்டின் அடிப்படையில் பிரித்துப் பொருள் விளக்கம் காண் போம்.

இயல். 4

நெசவுத் தொழில் சார்புடைய சொற்கள் -பொருள்வழிப் பாகுபாடு -1

நெசவின் தோற்றம்

விவசாயிகள் உற்பத்திச் செய்து தரும் பருத்திக்காய், பட்டுக்கூடு ஆகியவற்றினின்றே நெசவுத் தொழில் ஆரம்பமாகின்றது. நெசவுத் தொழில் விவசாயத்திற்கு அடுத்து வீட்டுத் தொழில்களுள் முக்கிய இடம் பெறுகின்றது. நெசவில் உரோம நெசவு, சணல் நெசவு, கயிறு நெசவு, கோரை நெசவு, நூல் நெசவு, பட்டு நெசவு முதலிய பல நெசவுகள் இருப்பினும் நெசவு என்பது பொதுவாக முதலில் நூல் நெசவையும் இரண்டாவதாகப் பட்டு நெசவையும் குறிக்கின்றது. நெசவுக்கு வேண்டிய நூல்களெல்லாம் முற்காலத்தில் கையினாலேயே பஞ்சிலிருந்து நூற்கப்பட்டன. இப்போது எந்திரங்கள் மூலமே பஞ்சிலிருந்து நூலும் பட்டுக் கூட்டிலிருந்து கோராவும் உற்பத்தி செய்யப்படுகின்றன. கூடை பின்னுதலிலிருந்து நெய்யுந் தொழில் தெரிந்தது[1] என்றும் பஞ்சாடை நெசவு இந்தியாவிலேயே தோன்றியது[2] என்றும் கூறுவர்.

நெசவு - நெசவாளர்

நெய்தல் தொழிலை நெசவு என்பர். இங்கு நெய் என்ற சொல் 'நெச்' (நெசவு) என்று மாற்று வடிவம் பெற்றிருக்கிறது [3] நெசவுத் தொழிலைச் செய்பவர் நெசவாளர் அல்லது


---

1. கலைக்களஞ்சியம், தொ. 1. , (மு. கா. நூ.) ப. 353.
2. மேற்படி. தொ. 4, ப. 210.
3. சண்முகம். செ. வை., எழுத்திலக்கணக் கோட்பாடு, (அண்ணாமலை நகர், அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், 1980) ப. 92.

நெசவாளி எனப்படுவார். ஆனந்தவிகடன் அகராதியில் ஆடை நெய்வோரைக் 'கோடிகர்' என்று கூறப்பட்டுள்ளது. நெசவாளர்கள் தங்கள் தொழிலைத் 'தறி நெய்தல்' என்பர். தறி நெய்பவரைத் தறிக்காரர் என்பர். தறிக்குச் சொந்தக் காரராய் உள்ளவரிடத்தில் கூலி நெசவு செய்பவர், அவரை முதலாளி என்றோ பணிக்கர் என்றோ கூறுவர். நெசவு செய்வதற்குரிய நூலையோ பட்டையோ கொடுத்து வாங்கு பவரைப் பேரக்காரர் என்பர்.

தறியின் வகைகள்

தறி என்பது நெசவாளரின் நெய்தற் கருவியாகும். தறியின் அமைப்பையொட்டி அதன் வகைகளைப் பின்வரும் விளக்கப் படத்தின் வாயிலாகப் பிரித்தறியப்படுகிறது.



தறியில் பயன்படுத்தப்படும் இழைகளைக் கொண்டு தறியைப் பட்டுத் தறி, நூல்தறி என இரு வகையாகப் பிரிப்பர். பட்டிழையைக் கொண்டு நெசவு செய்வது பட்டுத் தறியாம் நூல் இழையைக் கொண்டு நெசவு செய்வது நூல் தறியாம்.

தறியை இயக்கும் முறையைக் கொண்டு நூல் தறியைக் கைத் தறி, விசைத்தறி, பெடல்தறி என மூவகையாகப் பிரிப்பர். கையால் நெசவு செய்யப்படும் பட்டுத்தறியிலும் கைத்தறியிலும் தறியமைப்பில் இழைகள் சுற்றப்படும் முறையையொட்டி எயட்டுத் தறி (இழைகள் நீட்டிக் கட்டும் தறி), ரோல் தறி (உருளைத் தறி) என இருவகையாகப பிரிப்பர். உருளைத் தறியில் பயன்படுத்தப்படும் பாவினையொட்டி தோய்ச்சல் பாவு, பொரப்பாவு என இருவகையாகப் பிரிப்பர். மின்விசையால் இயங்கும் விசைத்தறியை ஒரு பெட்டிப் பலகையுடையது, பல பெட்டிப் பலகைகள் உடையது என இரு வகையாகப் பிரிப்பர். ஒரு பெட்டிப் பலகை உடைய தறியில் நாடாக்கள் கையால் மாற்றம் செய்யப்படும். பல பெட்டிப் பலகைகள் உடைய தறியில் நாடாக்கள் தானே மாறும் தன்மையுடையன. பெடல் தறி (கால் விசைத்தறி) என்பது விசைத்தறி அமைப்புடையதாய் காலால் மிதித்து நெசவு செய்யப்படும் முறையில் அமைந்தது. ஒரு சில கால்விசைத் தறிகள், சில ஆண்டுகளுக்கு முன் செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில் இருந்தன. அவ்விசைத்தறிகள் தற்பொழுது இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

கைத்தறி, விசைத்தறி வேறுபாடு

கைத்தறி தொன்றுதொட்டு இருந்து வருவது. விசைத்தறி தமிழகத்தில் இந்நூற்றாண்டில் பரவியது. கையால் நெசவு செய்யப்படும் பட்டுத்தறியும் நூல்தறியும் அவரவர் வசதிக்கேற்ப எத்தனை தறிகள் வேண்டுமானாலும் போட்டுக் கொண்டு நெசவு செய்யலாம். விசைத்தறியை மாவட்டக் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரிடமிருந்து அனுமதி பெற்றே நெய்ய இயலும். கைத்தறியில் ஓர் அங்குலத்தில் எண்பது இழைக்கு மேல் நெசவு செய்ய இயலாது, விசைத்தறியில் ஓர் அங்குலத்தில் இருநூற்று நாற்பது இழைகள் வரை நெய்ய இயலும். கைத்தறியில் நெசவு அழுத்தம் குறைவாக இருக்கும். விசைத்தறியில் நெசவு அழுத்தம் அதிகமாக இருக்கும். கைத்தறியைக் காட்டிலும் விசைத்தறியில் ஒரு நாளைக்கு மூன்று மடங்கு அளவு துணி உற்பத்திச் செய்யப் படும் என்பர்.

மாந்தரின் மனக்கோட்டத்தினை நீக்கும் நூல்போல் மரத்தின் கோணலைப் போக்க உதவும் நூலின் மென்மையான இழைகளை, நக்கி நெருடும் நெசவாளரின் நெசவுத் தொழில்

சார்ந்து சேகரிக்கப்பட்ட சொற்களின் அளவு கருதி அவற்றை இரண்டு இயல்களாகப் பிரித்துத் தொகுத்துக் கொடுக்கப் பட்டுள்ளன. இந்நான்காம் இயலில்,

1. பட்டு நெசவுத் தொடர்பானவை
2. நூல் நெசவுத் தொடர்பானவை
3. இருவகை நெசவுக்கும் பொதுவானவை
4. கோரா ஆலைத் தொடர்பானவை
   (அ) கைவடுக்கு (2) எந்திரவடுக்கு
5. நூல் ஆலைத் தொடர்பானவை
6. விசைத்தறித் தொடர்பானவை

ஆகிய ஆறு தலைப்புகளில் நெசவுத் தொழில் சார்ந்த சொற்கள் பிரிக்கப்பட்டு பொருள் விளக்கம் காணப்படுகின்றன.

1. பட்டு நெசவுத் தொடர்பானவை

பட்டு

பட்டுக் கூட்டினின்றும் எடுக்கப்படும் இழை கோரா **(Raw silk)** எனப்படுகிறது. நிறமேற்றப்பட்ட கோரா 'பட்டு' எனப் பெயர் பெறுகிறது. பட்டினைப் பட்டாடை உற்பத்தியாளர்களிடமிருந்து நெசவகளர் வாங்கி வந்து நெசவு செய்வர். பட்டு நூல் பற்றிய குறிப்பு,

'பாசிழைப் பட்டு நூற்கழி பரப்பிய
கிளைவாய்க் கிடைத்த விளைவாய்க் கிளியே'[1]

என்று கல்லாடத்தில் சொல்லப்பட்டுள்ளது.

பாவு நீட்டுதல்

பாவுப் பட்டினை வீட்டிற்கு வெளியே இருப்பாணி, ஊன்த்தி, கயிறு, பட்டு கீறும் கரணைக்கோல் ஆகியகருவிகளின் துணை கொண்டு நீட்டுவர். இப்பட்டினிடையேயுள்ள புணிக் கருகில் கோல் பாய்த்துப் பட்டைப் பரவ விடுவார்கள். இவ்வாறு பட்டினை நீளமாக நீட்டிப் பரவ விடப்படும் இழைகள்

---

1. கல்லாடர் 'கல்லாடம்' (திருநெல்வேலி, கழக வெளியீடு, 1963) பா. 81: 36-37, ப. 574.

பாவு ஆகிறது. நெசவில் பாவுக்குக் குறுக்காக ஊடுருவிச் செல்லும் இழைகளுக்கு உண்ட நூல் அல்லது சப்புரி என்று பெயர். இழைகளின் சிறு தொகுப்பு பாவுக்குரியதாயின் கெண்ணி (கண்ணி) என்றும், சப்புரிக்குரியதாயின் கெயட்டு (கிழட்டு) என்றும் கூறுவர். பாவின் கரைப்பகுதி மூன்றிழைகள் சேர்ந்து முறுக்குடையதாய் ஓரிழையாய் இருக்கும். இதனை 'ஒண்டிப் பாவு' என்பர். பாவின் உடற்பகுதி நான்கிழைகள் சேர்ந்த ஈரிழைகளாய் இருக்கும். இதனை 'ஜரிப்பாவு' என்பர்.

தெருவில் அல்லது திறந்த வெளியில் நீட்டப்பட்ட பாவு செம்மைப் படுத்தப்படும். பாவினைச் செப்மைப்படுத்து தலைப் 'பாவுகீறல்' என்பர். பாவிலுள்ள பிணிப்புகளுக் கிடையே புணியெடுத்து கோல் பாய்த்து கயிறு கட்டுதலைப் 'புணி கட்டல்' என்பர். இப்பாவினை அரிசியைச் சோறாக்கி வடித்த கஞ்சியில் தோய்த்தெடுப்பர். இதனைக் கஞ்சிபோடுதல் என்பர். கஞ்சி போடப்பட்ட பட்டினைப் பிழிந்து வெளியில் மீண்டும் நீட்டிப் பக்குவமாக உலர வைப்பர். இப்பொழுது இழைகள் ஒன்று சேர்ந்திருத்தலை நீக்குவர். இழைகளில் பிடிப்பு இருப்பினும் அறுபட்டிருப்பினும் அவற்றைச் சீர் செய்தலைப் 'புரையெடுத்தல்' என்பர். நீட்டிச் சுத்தம் செய்யப் பட்ட பாவினைக் கையிலோ தடியிலோ சுற்றுதலைப் 'பாவு சுற்றுதல்' என்பர். பாவு சுற்றுதலுக்கு முன்னதாகச் சில குளிகைகள் ஒன்று சேர்த்து சிறு நூலால் கட்டப்படும் கட்டைக் 'குள்ளக்கட்டு' என்பர். தறியில் பாவு நீட்டும் பொழுது வேறொரு கயிற்றால் எயட்டு கட்டும் கர்ணகோலில் [இழைகள் நீட்டிக் கட்டும் கரணைக்கோல்) சேர்த்துக் கட்டப்படும் கட்டும் 'குள்ளக்கட்டு' எனப்படும்.

பன்னையில் போடுதல்

சுற்றப்பட்ட பாவின் இழைகளை பன்னையிலுள்ள இழை களுடன் முதலில் விழுதிலும் அடுத்து அச்சிலும் ஏற்றுதலைப் 'பிட்னி ஏத்துதல்' (பிடிப்புக்கு ஏற்றுதல்) என்பர். இச்செயல் முன் தானையை இணைக்கும் செயலிலும் நடைபெறுகிறது. இழைகளை விழுதிலேற்றிய பின் இரண்டாவதாக அச்சில் ஏற்றுதலைப் 'பன்னையில் போடுதல்' என்பர். விழுதும் அச்சும் சேர்ந்ததே தறியில் பன்னையாகும். பாவின் ஓரப் பகுதியைக் கரையென்றும் மத்தியப் பகுதியை உடல் அல்லது

சவுத் என்றும் கூறுவர். முன் தானையும் கரையும் ஒன்றிய நிறமுள்ள கரைப்பாவுப் பட்டினை, 'டாணா பாவு' [தானைப் பாவு] என்பர்.

சிற்றாளின் பங்கு

ஒரே பக்கம் கரையினை [ஒன்சைடு பார்டர்] உடைய சேலையை ஒருவரே நெய்தலும் உண்டு. கரைப் பகுதியில் உள்ள பேட்டினை இழுத்து நெய்தலுக்கு நெசவாளரும் உடல் பகுதியில் நாடா என்னும் கருவியினை மட்டும் செலுத்து வதற்கு ஒரு சிற்றாளையும் பயன்படுத்தி நெய்வதுண்டு. அச் சிற்றாளைச் 'சாதாவாட்டு' போடுகிறவன் அல்லது போடுகிற வள் என்பர். இரு பக்கமும் கரையில் பேட்டு (டபுள் சைடு பார்டர்) இருக்குமாயின் பேட்டினையும் வாங்கிக் கொண்டு தன் பக்கத்தின் உடற் பகுதியில் நாடாவினைச் செலுத்தும் சிற்றாளுக்குக் 'கோத்து' வாங்குகிறவன் அல்லது வாங்குகிறவள் என்பது பெயர்.

பேட்டு

சேலையின் இருபுறமும் கரையில் சரிகையில் வேலைப்பாடு செய்யப்படும். இதற்காகக் கரைப் பகுதியில் பயன்படுத்தப் படும் சரிகை, விழுது, கயிறு, கம்பி ஆகியவற்றைச் சேர்த்துப் 'பேட்டு' என்பர். சரிகையினைப் பன்னையில் ஏற்றுதலைப் 'பேட்டு ஏற்றுதல்' என்றும் அடை கயிற்றின் முன்பகுதியில் உள்ள கயிறுகளை இழுத்தலைப் 'பேட்டிழுத்தல்' என்றும் கூறுவர். பேட்டு விழுதுகளின் தொகுதியைப் 'பேட்டடை' என்பர். பேட்டில் பயன்படுத்துவது சிறு கம்பியாயிருப்பின் அரை குளிகைக்கு ஒரு கம்பியும் கனத்த கம்பி அல்லது தகடா யிருப்பின் (பேட்டுத் தகடு) ஒரு குளிகைக்கு ஒரு கம்பி அல்லது தகடும் பயன்படுத்தப்படும்.

புட்டா

உடற்பகுதியில் பூ வேலைப்பாடுகள் பட்டினாலும் சரிகை யினாலும் செய்யப்படும். பட்டால் செய்வதற்குப் 'பட்டுப் புட்டா' என்றும் சரிகையினால் செய்வதற்குச் 'சரிகைப் புட்டா' என்றும் கூறுவர். புட்டா வாங்க 'மூங்கில் திரி' அல்லது 'சரிகைத்திரி' பயன்படுத்துவர். புட்டா போடுதலுக் கெனப் 'புட்டா ஏணி' உண்டு. அதில் கட்டப்பட்ட விழுது

களின் தொகுதியைப் 'புட்டா அடை' எனவும், புட்டா வாங்கப் பயன்படும் பலகையைப் 'புட்டாப் பலகை' எனவும் வழங்குவர்.

செலுப்பு

ஒரு பாவு முப்பத்தாறு முழம் (16½ மீட்டர்) உடையது. உடற்பகுதி முப்பத்து மூன்று முழமாகவும் கரைப்பகுதி முப்பத்தாறு முழம் உடையதாகவும் இருக்கும். ஒரு சேலை பன்னிரண்டு முழம் (5½ மீட்டர்) உடையதாக இருக்கும். ஜாக் கட்டும் சேலையும் ஒரே நிறமாக உடைய பாவு நாற்பதரை முழமாகவும் (18. 60 மீட்டர்) சேலை 6. 20 மீட்டர் உடைய தாகவும் இருக்கும். ஒவ்வொரு சேலையின் மேற்புறமும் முந்தாணி (முன்தானை) எனச் சொல்லப்படும். உயர்ந்த தரத்தினை உடைய சேலைகளின் முன்தானையில் கரைநிறமும் முன்தானை நிறமும் ஒரே நிறமாக இருக்குமாறு உடல் பாவுடன் கரைப்பாவுப் பட்டினை இணைப்பர். இதனை, 'முந்தி பிட்னி ஏற்றுதல்' அல்லது 'செலுப்பேற்றுதல்' என்பர். கரையிலுள்ள நிற இழையே (செல்ஃப் இழையே) உடலுடன் இணைக்கப்படுதலினால் இச்செயல் 'செலுப்பேற்றுதல்' எனப்படுகிறது என்பர். கரையிலுள்ள பூ வேலைப்பாடுகளை இம்முந்தானைப் பகுதியிலும் உண்டாக்குதலைச் 'செலுப்பு போடுதல்' என்பர். செலுப்பு போடுதலில் செலுப்பு பாசுதலுக்கென செலுப் பேணியும் செலுப்புப் பலகை, இறக்கைப் பலகை, பக்கப் பலகை என மூன்று பலகைகளும் பயன்படுத்துகின்றனர். விலை குறைந்த சேலைகளில் கரைப்பட்டினை உடலில் ஆங்காங்கே குறிப்பிட்ட இடைவெளிகளில் ஒரு குளிகை கீழாகவும் மூன்று குளிகை மேலாகவும் விழுதினுள் நுழைத்துப் பன்னையில் செலுத்தி நெய்தலுக்கு 'முத்துக்கம்பி' அல்லது 'முத்துச்சீர் போடுதல்' என்பர்.

கீழ்த்தறியும் மேல்தறியும்

ஓர் அறையில் தரையின் கீழ்க் குழி தோண்டி, தரைப் பகுதியில் தறி அமைக்கப்படுவதாயின் அது கீழ்த்தறி என்றும் அத்தறியின் எதிரில் மேடாகத் தரை ஒன்று கட்டி அமைக்கப்படும் தறியை "மேல்தறி' என்றும் கூறுவர். தறியில் நெசவாளர் அமரும் பகுதியை மேத்தார (மேல்தரை) என்பர். கீழ்த்தறிக்கு இடையூறு இல்லாமல் மேல்தறிக்கு உரியதாக அமைக்கப்படும்

மாதறாங்காலை (மாதறிக் காலை) 'அட்ட தூலம்' (அட்டி தூலம்) என்பர்.

சரிகை

கோரா, சிவப்பு நிறம் தோய்த்த பட்டிழையாக்கப்படுகின்றது. முறுக்கில்லாத அந்த மெல்லிய பட்டிழையின் மேல் துத்தநாகப் பூச்சுக்குப்பின் தட்டையான மெல்லிய வெள்ளிழை சுற்றப்படுகின்றது அதனைக் 'கசபு' என்பர். வெள்ளிழை சுற்றப்பட்ட பட்டு பொன்முலாம் கொடுக்கப்படுவதன் மூலம் சரிகையாகிறது. காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள ஓரிக்கை என்னும் பகுதியில் உள்ள சரிகை உற்பத்தி ஆலையில், இம் முறையில் காஞ்சிபுரத்திலுள்ள பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய சரிகையில் பத்து விழுக்காடு கொடுக்குமளவுக்கு உற்பத்திச் செய்யப்படுகின்றது. கூட்டுறவுச் சங்கங்கள் மீதம் வேண்டிய சரிகையினைக் குசராத் மாநிலத்திலுள்ள சூரத் என்னும் நகரத்திலிருந்து வரவழைத்துக் கொள்கின்றன.

ஆசு

தமிழில் 'ஆசு' என்பது பொதுவில் அச்சைக் குறிக்கும் என்பர். வண்டியிலுள்ள அச்சு, வண்டியின் மையக்கட்டையையும் சக்கரத்தையும் இணைப்பது. நெசவிலுள்ள அச்சு, பாவின் இழைகளைத் தறியின் மத்தியில் வரிசையாகப் பற்றியிருப்பது. பட்டு நெசவாளர் பயன்படுத்தும் ஆசுமணை இழைகளைப் பாவாக்குதலில் இடையில் பற்றியிருப்பதற்குப் பயன்படுகிறது. ஆசுகுழல், ஆசுமணையில் இழைகளைப் பற்ற வைப்பதற்குரியது. எனவே, ஆசு' என்னும் சொல்லுக்கு இணைப்பது, பற்றியிருப்பது,பற்றுக்கோடு ஆகிய பொருள்கள் உண்டு எனலாம்.


இனி, பட்டு நெசவுத் தொடர்பான சொற்களின் பொருள் விளக்கம் காணலாம்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
அட்ட தூலம்	அட்டி தூலம்	கீழ்த்தறிக்குத் தடையில்லாமல் மேல்தறிக்குப் பயன்படுத்தும் கொம்பு.
அடயார் முந்தி	அடையார் முந்தி	தலைப்பு முந்தி அல்லது மேல் முந்தி.
அடிமுந்தி	அடிமுந்தி	சேலையின் உள்பக்கத்திலுள்ள முன்தானை. அதிக பூ வேலைப்பாடுகள் உடையதாயிராது.
அணி பொறுக்கல்	அணிபொறுக்கல்	வேண்டிய முறையில் இழைகளை எடுத்தமைத்தல்.
ஆசு கொழல்	ஆசுகுழல்	ஆசுமணையில் பட்டு, சரிகை நூற்பதற்குப் பயன்படும்குழல்.
ஆசுமண	ஆசுமணை	சரிகை, குறிப்பிட்ட நீளத்திற்கு ஓடுவதற்குரிய கருவி.
செலுப்ப ஆசுமணை		படுக்கை நிலையில் உள்ள ஆசுமணை. சேலையின் செலுப்புக்குத் தேவையான சரிகை ஓடப் பயன்படுவது.
பேட்டு ஆசுமணை		நின்ற நிலையில் உள்ள ஆசுமணை, பாவின் நீளத்திற்குத் தேவையான குறிப்பிட்ட குளிகையளவு சரிகை ஓடுவதற்குரியது.
ஆறால பருட்டம்	ஆறிலைப் பரிவட்டம்	பட்டு நெசவாளர் பயன் படுத்தும் நூற்புக் கருவி. மூங்கில் பத்தையாலான ஆறு நீட்டிலைகள் உடையது.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
ஈரெட்டா குடுத்தல்	ஈரொட்டாய்க் கொடுத்தல்	விற்றதாகவும் விற்காததாகவும் உறுதிப்படுத்த இயலாத நிலையில் உற்பத்திப் பொருளைக் கொடுத்தல்.
உண்ட ஆசுமண	ஊடை ஆசுமணை	செலுப்பு ஆசுமணை.
உண்ட பட்டு	ஊடைப் பட்டு	குறுக்கிழை நெய்வதற்குரிய பட்டு.
உள் முந்தாணி	உள் முன்தானை	அடிமுந்தி.
எழ கரஞ்சி போதல்	இழை கரைந்து போதல்	இழையின் வலுத்தன்மை குறைந்து போய் அறுதல்.
எழ முடி போடல்	இழை முடி போடுதல்	அறுபட்ட இழைகளை இணைத்தல்.
ஒடல்பாவு	உடல்பாவு	கரை நீங்கிய பாவின் மத்தியப் பகுதி.
ஒண்டி பாவு	ஒண்டிப் பாவு	மூன்று கோரா இழைகள் சேர்ந்து ஒற்றை முறுக்குடைய கரைக்குரிய பட்டு.
ஒரு பொர	ஒரு புரை	மூன்று சேலைகள் சேர்ந்த ஒரு பாவு.
கசபு	கசபு	வெள்ளிழை சுற்றப்பட்ட பட்டு.
கஞ்சி போடுதல்	கஞ்சி போடுதல்	பாவுப் பட்டுக்குத் தெருவில் பாவு நீட்டும்பொழுது சோற்றுக் கஞ்சி போடுதல்.
கர்ணகோலு	கரணைக் கோல்	பட்டு நெசவில் பயன்படுத்தப்படும் உறுதியான மரக் கோல்கள். நூல் கரணைக் கோலை விடச் சிறிது உருவில் பெரியதாகவும் மிருதுவாக இழைக்கப்பட்டதாகவும் இருக்கும்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
எயட்டு கட்டும் கர்ணகோலு	இழைகள்நீட்டிக் கட்டும் கரணைக் கோல்	தறியில் இழைகளை நீட்டிக் கட்டுவதற்குப் பயன்படும் கரணைக்கோல் இதில் கட்டப் படும் வலிக்கயிறு அசையாம லிருக்க மூன்று இடங்களில் சிறு பள்ளம் எடுக்கப்பட்டிருக்கும்.
பட்டு கீறும் கர்ணகோலு	பட்டு கீறும் கரணைக்கோல்	பட்டினைத் தெருவில் நீட்டிக் கீறும்பொழுது பயன்படுத்தப் படும் கரணைக் கோல். இது வழவழப்பாகவும் கனமாயும் இருக்கும்.
கரபட்டு	கரைப்பட்டு	ஆடையின் கரைக்குரிய பட்டு.
கீய்த்தறி	கீழ்த்தறி	தரையை ஒட்டி அமைந்த தறி.
குள்ளகட்டு	குளிகைக் கட்டு	குளிகைக் கட்டு. இதில் இருவகை உண்டு. அவை. 1. பாவு கீறிச் சுற்றப்படும் முன் சிறு நூலால் சில குளிகைகள் சேர்த்துக் கட்டடப்படுவது. 2. தறியில் சில குளிகைகள் சேர்த்து இழைகள் நீட்டிக் கட்டும் கரணைக் கோலுடன் சேர்த்துக் கட்டப்படும் கட்டு.
குள்ள கட்டு கவுறு	குளிகைக் கட்டுக் கயிறு.	குளிகைக் கட்டு, கட்டும் இடங்களில் பயன்படுத்தப் படும் இருவகையான கயிறுகள்.
குளிக	குளிகை	அணிமாறி வரும் இரு இழைகள் சேர்ந்தது ஒரு குளிகை.
கெட்டி சீர்	கெட்டிச்சீர்	பேட்டில் சரிகை அடர்த்தியாக உள்ள முறையில் இருத்தல்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கோத்து வாங்குதல்	**கோத்து** வாங்குதல்	பாவின் உடற்பகுதியுடன் ஒரு பக்கக் கரையிலும் வாட்டு போடுதல்.
கோர்வ	**கோர்**வை	கரையும் உடலும் சேருமிடத்தைக் குறிப்பது.
கோர்வ ரகம்	**கோர்**வை ரகம்	இருபக்கமும் கரையுடைய சேலை.
கோலு	கோல்	மூங்கிலாலோ அலுமினியத்தாலோ ஆன உருளை வடிவமான கோல்.
சட	சடை	சிலுப்பை.
சப்புரிபட்டு	சப்புரிப்பட்டு	பாவில் ஊடிழையாகப் பயன் படுத்துவதற்குரிய பட்டு.
சம்பளக் காரர்	சம்பளக்காரர்	கூலி நெசவு செய்கின்ற பணியாள்.
சவுத்	**சவுத்**	உடலில் வண்ணம் இரண்டும் இரண்டிற்கும் மேற்பட்டது.
சாதா நெசவு	சாதா நெசவு	பார்வை நெசவுக்கு முந்திய 9 முழம் ஈரிழையால் நெசவு செய்யப்படுவது.
சாதா ரகம்	சாதா ரகம்	உடலில் ஒரே வண்ணம் பயன் படுத்தப்பட்ட சேலை. (கோர்வை ரகமல்லாதது)
சாதா வாட்டு போடுதல்	சாதா வாட்டு போடுதல்	பாவின் உடற்பகுதியில் மட்டும் வாட்டு போடுதல்.
சிகுரு கட்டுதல்	சிகரி கட்டுதல்	சீர் கட்டுதல் - உடலில் சரிகை ஏற்றுதல்.
சிட்ட	சிட்டை	சரிகை முக்கிக் கட்டம்.




ஊடை ஆசுமணை (செலுப்பு ஆசுமணை) பக். 229




பாவு ஆசுமணை (பேட்டு ஆசுமணை) பக். 229

புதிய கருவிகள்



பாவு ஜரிகை ஓடும் ஆலை [பேட்டு]



ஊடை ஜரிகை ஓடும் ஆலை (புட்டா, செலுப்பு)

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
சித்தாள்	சிற்றாள்	நெசவு செய்பவருக்கு உற்ற துணையாயுள்ள சிறுவர்.
சீர்மூந்தி	சீர்முந்தி	முந்தி, கோடு கோடாயிருப்பது.
செலுப்பட	செலுப்படை	செலுப்பு போடுவதற்குப் பயன்படும் கயிறுகளின் தொகுதி.
செலுப் படயில் கோத்தல்	செலுப்படையில் கோத்தல்	அட்டை விழுதுகளைப் பச்சை டுவைன் விழுதினுடன் கோத்தல்.
செலுப்பலக	செலுப்புப்பலகை	செலுப்பு போடுவதற்குரிய மரப்பலகை (6 அடி நீளம், 4 அங். அகலமுடையது)
செலுப் பாசுதல்	செலுப்பு பாய்ச்சுதல்	செலுப்புப் பலகையினைப் பாய்ச்சுதல்.
செலுப்பு	செலுப்பு	மேல் முன்தானையில் செய்யப் படும் பூவேலைப்பாடு.
செலுப் பேணி	செலுப்பேணி	செலுப்பு போடுவதற்குப் பயன் படுத்தப்படும் ஏணி.
செலுப் போடுதல்	செலுப்பு போடுதல்	மேல் முன்தானையில் பூவேலைப் பாடு அமைய செய்தலுக்குரிய செயல்.
செலுப்பு முந்தி	செலுப்பு முந்தி	மேல்முன்தானை.
செலுப்பு விழுதுமுடி போடல்	செலுப்பு விழுது முடி போடல்	$1\frac{1}{2}$ குளிகை பட்டிழைக்கு ஓர் அட்டை விழுது முறையில் இரு முடிச்சுகள் போடுதல்.
டாணா பாவு	தானைப் பாவு	முன்தானைக்குரிய கரை நிற முடைய பட்டுப் பாவு.
தகடுசேல	தகடுச் சேலை	பாவு பட்டாகவும் ஊடையில் ஒரு குளிகை பட்டும் ஒரு குளிகை சரிகையும் ஆக நெய்யப்பட்ட சேலை.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
தகதல	தகதலை	செலையின் உள்நெசவுப் பகுதி.
துடுப்பு	துடுப்பு	செலுப்புப் பலகையுடன் பயன்படுத்தும் 4 அடி நீளம், 3 அங். அகலம் உடைய பலகை.
தொங்கலு	தொங்கல்	அடிமுந்தி.
தொப்ப கவுறு	தொப்பைக் கயிறு	சேலையுடன் முன்தானையை இணைக்கும் செயலில் பயன்படுத்தும் கயிறு.
நடுத்தறி ஆளு	நடுத்தறி ஆள்	தனியாகத் தறி நெய்யும் திறன் பெற்றவர்.
நுமுட்டு தள்ளுதல்	நிமிட்டு தள்ளுதல்	இணைக்கப்பட்ட இழைகளை அச்சினுள் தள்ளுதல்.
பக்க பலக	பக்கப் பலகை	துடுப்பு போன்ற சிறிய பலகை (2 அடி நீளம் உடையது).
பட்டு	பட்டு	நிறமேற்றப்பட்ட கோரா.
பட்டு எயத்தல்	பட்டுஇழைத்தல்	பட்டைத் தாபரக் கட்டைகளிலோ உருண்டைக் கட்டைகளிலோ போட்டு இழைத்தல்.
பட்டு கொயல்	பட்டுக் குழல்	பட்டு சுற்றுவதற்குரிய குழல்; மூங்கில் அல்லது பிளாஸ்டிக்கால் ஆனது.
பட்டு சோத்தல்	பட்டு சோத்தல்	பட்டின் தனி இழையை இரண்டாகவோ மூன்றாகவோ வேண்டிய அளவில் சேர்த்துச் சுற்றுதல்.
பட்டு தறி, பட் தறி	பட்டுத்தறி	பட்டு நெசவுத் தொழிலுக்குரிய கருவி.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பட்டு பருட்டம்	பட்டுப் பரிவட்டம்	பட்டு இழைப்பதற்குரிய கருவி. பரிவட்டங்களுள் உள்ள ஆறு நீட்டிலைகள் மெல்லிய மூங்கில் பத்தையால் செய்யப்பட்டவை.
பலவ பாசுதல்	பலகை பாய்ச் சுதல்	பேட்டு, புட்டா, செலுப்பு ஆகியவற்றுக்குரிய பலகை யினைப் பாய்ச்சுதல்.
பன்னயில் போடல்	பன்னையில் போடல்	புதிய பாவினை அச்சிலேற்றுதல்.
பனாரஸ் ரகம்	பனாரஸ் ரகம்	மேல் முந்திக்குக் கீழுள்ள 11 முழம் சரிகை வேலைப்பாடு மிகுதியாக உடைய சேலை.
பாசுதல்	பாய்ச்சுதல்	பாவினிடையே கோலையோ பலகையையோ செலுத்துதல்.
பார்வ நெசவு	பார்வை நெசவு	முன்தானைக்கு முன்பு மூவிழை யால் நெசவு செய்யப்படும் இரண்டு முழப் பகுதி.
பார்வமுந்தி	பார்வை முந்தி	மேல் முந்தி
பாவாட	பாவாடை	பட்டுத்தறி நெய்யப் பழகுபவரும் வயதானவரும் நெய்யும் சிறுவர்க்கான பட்டாடை.
	$1\frac{1}{2}$ பாவாடை	இதில் எண் முழத்தைக்குறிக்கும். $1\frac{1}{2}$ முழம் அகலமும் 2 மீட்டர் நீளமும் உடையது.
	$1\frac{3}{4}$பாவாடை	$1\frac{3}{4}$ முழம் அகலமும் $2\frac{1}{2}$ மீட்டர் நீளமும் உடையது.
	2 பாவாடை	2 முழம் அகலமும் $2\frac{1}{2}$ (அ) 3 மீ. நீளமும் உடையது.
	$2\frac{1}{4}$ பாவாடை	$2\frac{1}{4}$ முழம் அகலமும் 3 மீட்டர் நீளமும் உடையது.


பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பாவுபட்டு	பாவுப்பட்டு	பாவாக நீட்டுவதற்குரிய பட்டு.
பாவு முரிஞ்சி போதல்	பாவு முரிந்து போதல்.	பாவு பட்டுக்குக் கஞ்சி போடும்பொழுது பட்டில் ஏற்பட்ட மாற்றத்தைக் குறித்தல்.
பிட்னி எடுத்தல்	பிட்னி எடுத்தல்	இழைகளை எடுத்துத் தருதல்.
பிட்னி ஏத்தல்	பிட்னி ஏற்றல்	இழைகளை விழுதிலும் அச்சிலும் செலுத்திப் பாவுடன் இணைத்தல்.
பில்ல கம்பி	பில்லக் கம்பி	அடிமுந்தி
புகுடி	புகுடி	பட்டு நெசவில் கரைப்பேட்டு வகையுள் ஒன்று.
புட்டா	புட்டா	பாவின் உடற்பகுதியில் செய்யப்படும் பூவேலைப்பாடு.
	உடல் புட்டா	சிற்றாள் செய்யும் பூவேலைப்பாடு.
	சரிகைப் புட்டா	சரிகையால் புட்டா வாங்குதல்.
	பட்டுப் புட்டா	பட்டால் புட்டா வாங்குதல்.
புட்டா ஏணி	புட்டா ஏணி	புட்டா போடப் பயன்படுத்தப்படும் ஏணி.
புட்டாட	புட்டா அடை	புட்டா விழுதுகளின் தொகுதி
புட்டா பலவ	புட்டாப் பலகை	புட்டா போடப் பயன்படுதப்படும் பலகை (2 அங். அகலமும் 1 அடி நீளமும் உடையது).

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
புட்டா போடுதல்	புட்டா போடுதல்	பாவின் உடற்பகுதியில் பூவேலைப்பாடு செய்தல்,
புட்டா வாங்குதல்	புட்டா வாங்குதல்	புட்டா போடுதலில் சிற்றாளின் செயல்.
புழிதல்	பிழிதல்	கஞ்சி போடப்பட்ட பட்டைப் பிழிதல்.
பூவேலைப் பாடு	பூவேலைப்பாடு	அழகிய வடிவங்கள் உண்டாக்குதல்.
பேட்டட	பேட்டடை	பேட்டு விழுதுகளின் தொகுதி.
பேட்டிசுத்தல்	பேட்டிழுத்தல்	பேட்டுக் கயிற்றின் முனைப் பகுதியை இழுத்தல்.
பேட்டு	பேட்டு	கரையில் செய்யப்படும் பூவேலைப்பாடு.
	உடல் பேட்டு	நெசவாளர் செய்யும் பூவேலைப் பாடு.
பேட்டு உண்ட / பேட்உண்ட	பேட்டு ஊடை	கரையில் குறுக்கிழையாகப் பயன்படுத்தப்படும் இழைகளின் தொகுதி.
பேட்டு கட்டுதல்	பேட்டு கட்டுதல்	விழுதுகளைப் பங்கிட்டு அடை கயிற்றில் கட்டுதல்.
பேட்டு கம்பி / பேட் கம்பி	பேட்டுக் கம்பி	பேட்டு விழுதுகளைத் தாங்கும் கம்பிகள்.
பேட்டு கவுறு	பேட்டுக் கயிறு	பேட்டு அமையப் பயன்படுத்தும் கயிறுகள்.
பேட்டு குச்சி	பேட்டுக் குச்சி	பேட்டுக்கேற்ப சில பேட்டுக் கயிறுகள் சேர்த்துக் கட்டப்பட்ட பேட்டடைக் கயிற்றின் முனைப் பகுதி.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பேட்டு சட்டம்	பேட்டுச் சட்டம்	குச்சிக் கயிற்றை இழுத்து மாட்டும் சட்டம்.
பேட்டு தகடு / பேட் தகடு	பேட்டுத் தகடு	பேட்டு விழுதுகளைத் தாங்கும் தகடுகள்.
பேட்டு தடி / பேட் தடி	பேட்டுத்தடி	பேட்டடைக் கயிற்றைத் தாங்கும் தடி.
பேட்டு பெட்டி	பேட்டுப் பெட்டி	கரைக்கோ உடலுக்கோ பேட்டுப் போட உதவும் ஒருவகை இயந்திரம்.
பேட்டு மூட்ட	பேட்டு மூட்டை	பேட்டடையினைத் தாங்கிப் பிடிக்கும் மண் அல்லது கல் மூட்டை.
பேட்டு வடி	பேட்டு வடி	பேட்டேற்றுதலுக்குப் பயன் படும் நைலான் விழுதுகளின் தொகுதி.
பேட்டு வாங்குதல்	பேட்டு வாங்குதல்	கரையில் செய்யும் பூ வேலைப் பாடுகளில்இழைகளைக் கோத்து வாங்குதல்.
பேட்டேணி	பேட்டேணி	பேட்டு வாங்கப் பயன்படும் ஏணி.
பேட்டேத்து தல்	பேட்டேற்றுதல்	பேட்டுச் சரிகையினைப் பன்னையிலேற்றுதல்.
பேல்தாரி	பேல்தாரி	பாவின் உடற்பகுதியில் சரிகைக் கோடு வருதல்.
பொரை யெடுத்தல்	பொரையெடுத் தல்	பாவு ரகத்தை ஊடை ரகமாக மாற்றுதல்.
முத்து கட்டம்	முத்துக் கட்டம்	சரிகை முக்கிக் கட்டம், பெரிய சதுரமாக இருத்தல்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
முத்து கம்பி	முத்துக் கம்பி	முன்தானையில் செய்யப்படும் நெசவு முறை.
முத்து சீர்	முத்துச் சீர்	முத்துக் கம்பி.
முந்தாணி	முன்தானை	சேலையின் மேற்பகுதி.
மூங்கில்திரி	மூங்கில் திரி	புட்டா வாங்கப் பயன்படும் திரி.
மூவெழ	மூவிழை	பார்வை நெசவில் பயன் படுத்தப்படும் ஊடிழை
மேல்தறி	மேல்தறி	தரைக்கு மேல் திண்ணை போல் தரை அமைத்து நெசவு செய்யப்படும் அமைப்பு
மேல்முந்தி	மேல்முந்தி	பார்வை முந்தி.
மொக்கு	மொக்கு	கரைப் பகுதியில் அமையும் பேட்டின் வகையுள் ஒன்று (எ. கா.) மல்லிகை மொக்கு.
மோதல	மோதலை	பார்வை நெசவு
ரகம் வரையறுத் தல்	ரகம் வரையறுத் தல்	பட்டாடையின் நிறம், பூ வேலைப்பாடு ஆகிய-வற்றைக் குறித்தல்
ரெட்டெழ	இரட்டைஇழை	ஈரிழை கொண்டு சேலையின் உடற்பகுதி நெசவு செய்யப் படுதல்.
ரேக்கு	ரேக்கு	கரைப் பகுதியில் கோபுர வடிவில் பெரியதாய் அமையும் பேட்டின் தன்மையுள் ஒன்று. பனாரஸ் ரேக்கு, மீரா ரேக்கு, தாழம்பூ ரேக்கு, ஏழுகிளை மீரா ரேக்கு முதலியன.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
வங்க்கி	வங்க்கி	கரைப்பேட்டு வகையுள் ஒன்று. கோடு போன்று வளைந்து செல்லும் முறையில் கரையில் செய்யப்படும் வேலைப்பாடு.
வளயல்	வளையல்	கரைப்பேட்டு வகையுள் ஒன்று.
வைரவூசி	வைரவூசி	பட்டுச்சேலையின் உடற் பகுதியில் இரண்டிழை பட்டும் ஓர் இழை சரிகையுமாக நெய்தல்.
றெக்க பலவ	இறக்கைப் பலகை	துடுப்பு.
உஸ்னா ஏத்தல்	உஸ்னா ஏற்றல்	சில சமயங்களில் தறியில் அச்சில் ஏற்றமுடியாத நிலையில் உள்ள ஒரு பாவினை அச்சில் ஏற்றும் முறையைக் குறிப்பது.
காலி ஜரிக கட்ட	காலி ஜரிகைக் கட்டை	சரிகை இல்லாத சக்கரம்.
காலி ஜரிக சக்கரம்	காலி ஜரிகைச் சக்கரம்.	சரிகை இல்லாத சக்கரம்.
சாதா டிஷ்யூ	சாதா டிஷ்யூ (த. + ஆ.)	உடலில் பட்டுக்குப் பதில் சரிகை நெய்யப்பட்டசேலை.
டிஷ்யூ சேல	டிஷ்யூ சேலை (ஆ.+த.)	உடல் பாவுப்பட்டு, மூன்றிழையாகவும் ஊடை சரிகையாலும் நெய்யப்பட்ட சேலை.
பார்டர் ரகம்	பார்டர் ரகம் (ஆ.+த.)	உடலில் முத்துச்சீர், முத்துக் கட்டம் அமைந்த சேலை.
அப்ரசைர்	அப்ரைசர் (ஆ.)	இரகப் பார்வையாளர்.
ஈவனிங் மார்னிங் பேட்டு	ஈவனிங் மார்னிங் பேட்டு (ஆ.+த)	இருகரையும் அளவிலோ நிறத்திலோ வித்தியாசம் உடைய பேட்டு.
ஒன்சைடு பார்டர்	ஒன்சைடு பார்டர் (ஆ.)	ஒரு பக்கம் மட்டும் கரையுடைய சேலை.



ஜாக்கார்டு பக். 242
(சேலை முழுவதும் வடிவம் அமைந்த கருவி)



ஜாக்கார்டு பக். 242
(கரையில் மட்டும் வடிவம் அமைந்த கருவி)

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
டபுள் சைடு பார்டர்	டபுள் சைடு பார்டர் (ஆ.)	இரு பக்கமும் கரையுடைய சேலை.
டிசைன்	டிசைன் (ஆ.)	பூவேலைப்பாடு - வடிவம்.
டிசைனர்	டிசைனர் (ஆ.)	வடிவ அமைப்பாளர்.
பிளைன்	பிளைன் (ஆ.)	சாதா ரகம்.
சிகடா (சௌ.)	சிகடா	கோத்து வாங்கும் சிற்றாள்.
சிமிட்டி (சௌ.)	சிமிட்டி	கண்ணி (பாவுக்குரிய சிறு பகுதி)
சோட்டா (சௌ.)	சோட்டா	பட்டு நெசவில் பயன்படுத்தப்படும் சிற்றாள்.
ஜரிக்கட்ட	ஜரிகைக் கட்டை	சரிகை சுற்றப்பட்ட கட்டை
ஜரிக்கொழல்	ஜரிகைக் குழல்	ஆசுகுழல்.
ஜரிக	ஜரிகை	ஆடையில் சேர்த்து நெய்யப்படும் பொன், வெள்ளி இழைகள்.
ஜரிக ஆல	ஜரிகை ஆலை	பாவு ஜரிகை ஓடுவதற்குரிய ஆலை.
ஜரிக ஓடுதல்	ஜரிகை ஓடுதல்	சரிகைக் கட்டையிலிருந்து வேண்டிய அளவிற்குச் சரிகையினை ஆசுமணையில்/ஆலையில் ஒட்டி எடுத்துக் கொள்ளுதல்.
ஜரிகசக்கரம்	ஜரிகைச் சக்கரம்	சரிகை சுற்றப்பட்டுள்ள சக்கரம்.
ஜரிக திரி	ஜரிகைத் திரி	பேட்டு வாங்கப் பயன்படும் திரி.
ஜரிக முக்கி கட்டம்	ஜரிகை முக்கிக் கட்டம்	சேலையின் உடற்பகுதியில் சரிகை சிறுகட்டமாக வருதல்.
ஜரி கோரா	ஜரிக்கோரா	உடல் பாவு ரகத்திற்குரிய கோரா.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
ஜரி பாவு	ஜரிப் பாவு	உடற்பகுதிக்குரிய ஈரிழையாலான பட்டு.
ஜாக்காட் சேல	ஜாக்கார்டு சேலை	ஜாக்கார்டு இயந்திரத்தில் நெய்யப்பட்ட சேலை ரகம்.
ஜாக்காடு தறி	ஜாக்கார்டு தறி	உயர்ந்த ரக பட்டுச் சேலைகள் நெய்வதற்குரிய தறியமைப்பு.
ஜாக்காடு பலவ	ஜாக்கார்டு பலகை	ஜாக்கார்டு எந்திரத்தில் உள்ள பலகை.
ஜாக்காடு புள்ளி	ஜாக்கார்டு புள்ளி	ஜாக்கார்டு எந்திரத்தில் இழைகள் செலுத்தப்படும் முறைக்குக் குறிக்கப்பட்ட புள்ளிகள்.
ஜாக்காடு புள்ளிஅட்ட	ஜாக்கார்டு புள்ளி அட்டை	ஜாக்கார்டு புள்ளிகள் குறிக்கப் பட்ட அட்டை.
ஜாக்காட் மிஷின்	ஜாக்கார்டு மிஷின்	பட்டுச் சேலை ரகத்தைப் புதுமை முறையில் உற்பத்தியாக்கும் கருவி.
ஜாக்காட் ஜரிக	ஜாக்கார்டு ஜரிகை	பட்டுச் சேலை ரகம்.
ஜோடு புரி	ஜோடு புரி	மூன்றிழைகள் சேர்ந்து ஒண்டியாக்கப்பட்ட கரைக்குரியபட்டு.

2. நூல் நெசவுத் தொடர்பானவை

நூல் நெசவு செய்தலில் நீட்டுப்பாவு நெய்தல் ஒரு வகைத் தறி அமைப்பும் பொரப்பாவு நெய்தல் பிறிதொரு வகைத் தறியமைப்பும் உடைமையினால் இப்பிரிவில் நீட்டுப்பாவு, பொரப்பாவு ஆகிய இரு பிரிவுகளின் கீழ், நூல் நெசவு பற்றி விளக்கப்படுகிறது.

நீட்டுப்பாவு

நீட்டுப்பாவு ஆலையில் ஓடிவந்த நூல் 110 மீட்டர் நீளம் உடையது. இதில் 15 மடி முதல் 20 மடி வரையில் துணி நெசவு செய்யப்படும். இப்பாவு தெருவில் அல்லது தோப்பில் பாவின் இரு முனைகளில் ஊணியில் கட்டப்பட்டுள்ள கயிற்றில் நுழைக் கப்பட்ட கோலின் மூலம் நீட்டப்படுகிறது. இப்பாவினை இடையில் தாங்குவனவற்றைக் குதிரை என்பர். பாவினிடையே வரும் சுமார் 225 புணையல்களில் ஒரு புணிக்கு இரு அளவு வீதம் 450 அளவுகள் பாய்ச்சப்படும். அளவுகளில் பாவினை அகலப்படுத்தி விரித்து இழைப் போக்குகள் பார்த்துச் சரி செய்யப்படும். பச்சரிசியில் கூழ் தயாரித்து எண்ணெய் விட்டு நன்றாகக் கலக்கிய அப்பசைக் கூழினை உறைபோல் தைக்கப் பட்ட துணியில் ஊற்றிப் பாவு முழுவதும் தீற்றுவர். இத்துணி யைக் 'கஞ்சிப்பை' என்பர். பாவைத் திருப்பியும் கஞ்சி போடப் படும். கஞ்சி தீற்றிய பின் இழைகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து கொள்ளாமலிருக்கும் பொருட்டு, 'பில்லூரு' அல்லது, 'பில்லு' என்னும் கருவியைக் கொண்டு தீற்றுவர். பில்லூரைத் தாங்கி வரும் தடியைப் 'பில்லுவர தடி' என்பர். மேலும் பாவினைத் தெளிவு செய்தலின் பொருட்டுப் பயன்படுத்தும் கம்பி அல்லது மூங்கில் குச்சியைக் 'கீறுசுப்பல்' என்பர். இப்பாவினை நெச வாளரே நீட்டிக் கஞ்சி போட்டுப் பாவினைச் செப்பனிடுவதால் இதனைத் 'தோய்ச்சல் பாவு' என்கின்றனர். இவ்வாறு செய்யப்படும் செயலைப் 'பாவு தோய்தல்' என்பர்.

இப்பாவில் 10 புணையல்களுக்கிடையே ஒரு குதிரை போடப்படும். மூங்கிலால் தயாரிக்கப்பட்ட தாங்கியே இங்குக் குதிரையாகிறது. இரு குதிரைகளுக்கு இடையேயுள்ள பாவு ஒரு பங்கு எனப்படும். ஒரு பங்குக்கு இரு பெண்டிர் என்ற முறையில் 20 பெண்களும், கஞ்சி போட பாவின் இருபாதி பிரிவுக்கும் நான்கு ஆடவரும், ஒரு பில்லூரைத் தாங்கி வர ஓர் ஆடவர், ஒரு பெண்டிர் வீதம் இரு பிரிவுகளுக்கும் 2 ஆடவரும் 2 பெண்டிரும் மற்ற வேலைக்கு இருவருமாகப் பாவு தோய் தலுக்கு 30 பேர் தேவைப்படுவர்.

தோயப்பட்ட பாவு நெசவு செய்யப்பட வேண்டிய அளவுக்கு ஏற்ப ஆங்காங்கு குறியிடப்படும். இதற்குப் பயன் படுத்தப்படும் கோல் குறிகோல் எனப்படும். தோய்ந்து குறிவைக்கப்பட்ட பாவு நீண்ட மூங்கில் கழியில் சுற்றப்படும். இதனைப் பாவு சுற்றுதல் என்பர். பாவு சுற்றப் பயன்படுத்தும்

தடியைப் 'பாவு சுற்றும் தடி' அல்லது 'பாவு சுருட்டி' என்பர். இப்பாவினை அச்சிலுள்ள இழைகளுடன் தறியிலேயே பிணைப்பர். இதனைப் 'பாவு பிணைத்தல்' என்பர். அச்சை வெளியில் கொண்டு வந்த பாவு இழைகளை அச்சில் உள்ள இழைகளுடன் பிணைத்தலை 'அச்சுப் பிணைத்தல்' என்பர். நீட்டுப்பாவில் 'பாவு பிணைத்தலே' பெரும்பாலும் செய்வர்

பாவுச் சுருட்டியினின்றும் இழைகள், இழைகள் நீட்டிக் கட்டும் கரணைக் கோல் வழியாகப் பாவு, நெசவுக்கு வந்து கொண்டேயிருக்கும். இக்கரணைக் கோலில் மத்தியில் கட்டப்பட்ட கயிறு தறிக்கு எதிரிலுள்ள மாதறாங்கால் வழியாகச் சுற்றி வந்து தறிக்கு வலப்பக்கத்திலுள்ள வலிமுளைக் கொம்பில் கட்டப்பட்டிருக்கும். பாவு அருகில் வர வர வலி முளைக் கொம்பில் சுற்றப்பட்ட கயிற்றைத் தளர்த்திக் கயிறு விட்டு மீண்டும் மிக்க வலிவாகக் கயிற்றை இழுத்துக் கட்டுவர். இக்கொம்பே நீட்டுப் பாவுத் தறிக்கு முக்கியமாகக் கருதப்படுகிறது. கரணைக்கோல் நெசவுக்கு அருகில் வர மீண்டும் பாவு சுருட்டியினின்று நூலை விட்டு நீட்டிக் கட்டப்படும். இம்முறை நீட்டுப் பாவில், 'எயட்டுத் தறி' (இழைகள் நீட்டிக் கட்டப்படும் தறி) எனப்படும்

வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கமாக நாடா ஒரு முறை செல்லுமாயின் அதனை ஒரு வாட்டு என்பர். நெசவு செய்யப்படும் பாவு வேட்டியாயின் குறியிடப்பட்ட 4 முழம் அல்லது 8 முழம் அளவிலும், சேலையாயின் 6 கஜம் அல்லது 8 கஜமாகவோ நெசவு செய்து அறுத்தெடுக்கப்படும் இப்பாவு நெசவு செய்தலுக்கு 12 அடி நீளம் அல்லது 3. 75 மீட்டருக்குக் குறையாமல் இடம் தேவைப்படுகிறது. இடச் சிக்கனத்தின் பொருட்டு நீட்டுப் பாவும் பொரப்பாவு போல் உருளையில் சுற்றப்பட்டு நெசவு செய்யப்படுதலுமுண்டு. எனவே, இவ்வமைப்புத் தறியில் அவ்வப்பொழுது இழைகள் நீட்டிக் கட்டுதல் என்ற வேலை இல்லை. பாவு தோய்ந்து பாவுச் சுருட்டியில் சுற்றப்பட்ட பின்பு மீண்டும் வெட்ட வெளியில் மூன்று அல்லது ஐந்து பேர் துணையுடன் நீட்டப்பட்டு உருளையில் சுற்றப்படும்.

நெசவில் ஊடாக — குறுக்காக நெய்யப்படும் காரிக நூல் அறுபடாமலிருக்க பன்னிரண்டு மணி நேரம் தண்ணீரில் ஊற வைக்கப்படும். பஞ்சியினின்றும் உண்டாக்கப்பட்ட நூல்

அறுபடாமல் கெட்டிப்பட இவ்வாறு செய்யப்படுகிறது. நீண்ட நேரம் இந் நூல் தண்ணீரில் இருந்து விட்டால் நூலின் நிறம் மாறும்; பழுப்பகி விடும். இந்நூலுக்குக் கஞ்சி போடப்படுவதில்லை.

பொரப்பாவு

பொரப்பாவு ஆலையில் ஓடிவந்த பாவு 16 மீட்டர்நீளம் உடையது. இதில் 2 பீஸ் அளவு துணி நெசவு செய்யப்படும். இப்பாவு தோய்ச்சடியிலேயே கஞ்சி போடப்பட்டு நெசவாளருக்குக் கொடுக்கப் படுகிறது இப்பாவு நீட்டுப் பாவுடன் ஒப்பிடுங்கால் நீளத்தில் குறைந்திருத்தலாலும் கஞ்சி போடப்பட்டு பொரபொரன்னு உள்ளதாலும் இப்பாவு பொரப்பாவு எனப்படுகிறது. இதனைப் பாவில் கஞ்சி குறைந்திருக்குமாயின் பொசபொசன்னு உள்ளதாகச் சொல்லப்படுவதினின்றும் அறியலாம். இப்பாவு ஆலையில் மடங்கி வருதலால் மடக்குப் பாவு எனவும், லுங்கி ஆடையாக நெய்தலுக்கு உதவுதலால், 'லுங்கிப் பாவு' எனவும், ஆடை 'பீஸ்' அளவில் நெய்து அறுத்து எடுக்கப்படுவதால் 'பீஸ்' என்றும் சொல்லப்படுகிறது. லுங்கியும் தோய்ச்சல் பாவில் நெய்யப்படுகிறது. இத்தோய்ச்சல் பாவு 100 மீட்டர் நீளமுடையது. இதில் 48 லுங்கிகள் நெய்யப்படும். இப்பாவு, தறிப் பன்னையிலுள்ள இழைகளுடன் 'அச்சுப் பிணைத்தல்' செய்யப்படும்.

பொரப்பாவு தெருவில் நீட்டி செம்மைப்படுத்தும் செயலைப் 'பாவு அணுவாக்கல்' என்பர். பாவின் மேல்தலாப் பகுதியினின்றும் சுத்தம்செய்து கொண்டு வந்து கருதலாப் பகுதியில் ஒவ்வொரு குளிகைக்குள்ளும் சிக்கல் இல்லாமல் செம்மைப்படுத்தப்படுதலால் இதனைப் 'பாவு அணுவாக்கல்' என்கின்றனர் போலும். அணுவாக்கப்பட்ட இபாவில் ரண்டு மீட்டருக்கு ஒரு முறை குறியிடப்படும். பாவினிடையில் பெந்து மாட்டி பெந்தணிக்குள் வரும் இழைகள் விரிவாக-பரப்பாக வருதலை உருளையில் பக்கத்திற்கொருவராக இருவர் நின்று கையால் சுற்றுவர். பாவு அணுவாக்கப்பட்ட பின்பு உருளையில் சுற்றுமுன் அச்சில் பிணைக்கப்பட்ட இடத்தில் தெருவிலேயே கையால் சில முறைகள் வாட்டு போடப்படும். இதனை 'ஓசை வாட்டு' என்பர். இப்பாவு தறியில் மாட்டி நெசவு செய்யப்படும். உருளையில் சுற்றப்பட்ட கயிறு நெசவு

செய்பவரின் இடப்பக்கத்திலுள்ள பல் சக்கரத்தில் சிறுகச் சிறுக சுற்றப்படும். நெசவு செய்யப்பட்ட துணி பட மரத்தில் சுற்றப்படும். இப்பட மரம் 4''×4'' அளவில் 6 அடி நீளமுள்ள மரத்தால் செய்யப்பட்டது. குறிப்பிட்ட அளவு நெசவு செய்யப்பட்டவுடன் துணிக்குத் துணி இடைவெளி விட்டு நெய் தலைத் **'திண்டடித்தல்'** அல்லது 'பத்தை ஒதுக்கல்' என்பர். இப்பாவு நெய்தலுக்கு ஐந்தடி நீளமுடைய இடம் போது மானது.


பொன்னேரி வட்டத்தில் நூல் பாவிலேயே, ஜாக்கார்டு எந்திரம் பயன்படுத்தி மெட்டீரியல்ஸ், மல்லீஸ் என்னும் துணி வகைகள் அதிகமாக நெசவு செய்யப்படுகின்றன.

இனி, நூல் நெசவுத் தொடர்பான சொற்களின் பொருள் விளக்கம் காணலாம்.


பேச்சு வழக்கு	**எழுத்து வழக்கு**	**பொருள்**
அம்பு வெச	அம்பு விசை	மூங்கில் பத்தையால் (சிம்பல்) செய்யப்படுவது. சிம்பலின் இருபுறத்திலும் விசைமுள், கயிற்றால் சுற்றிக் கட்டப்-பட்டிருக்கும்; மேல் நோக்கித் துணியை இழுத்துப் பிடிக்கும். நெசவு அதிக அழுத்தம் இல்லாத நீட்டுப்பாவில் அம்புவிசை பயன்படுத்தப்படும்.
அளகு அளுவு	அளவு	தட்டையாகவும் கெட்டியாகவும் உள்ள மூங்கில் பத்தை.
அளகு கட்டு அளகு செம அளு கட்டு	அளவுக் கட்டு	ஒரு பாவு தோய்தலுக்குரிய அளவுகள் ஒன்று சேர்த்துக் கட்டப்பட்டுள்ள கட்டு.
அன்ஸ்	அன்ஸு	வேட்டி, சேலைகளில் கரைக்கு வெளியிலிருக்கும் பகுதி.
ஆல	ஆலை	பூட்டுத்தலை

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
உருள	உருளை	பொரப்பாவு சுற்றப்படும் உருளை.
ஊசிகண்டு	ஊசிக்கண்டு	1. தார் திரிக்க உதவும் ஊசியில் மால்சரடு செல்லுதற்குரியபகுதி. 2. நூலிழைத்தலில் டப்பா நுழைக்கும் கருவி.
ஊடுத	ஊடுதி	பட்டுப்பாவினை, பொரப் பாவினை முறையே இரு முனையிலும் ஒரு முனையிலும் இழுத்துப் பிடிக்கப் பயன் படுத்தும் கருவி.
ஊணி	ஊணி	நீட்டுப்பாவில் பாவினை இரு புறமும் இழுத்துப் பிடிக்கப் பயன்படுத்தும் கருவி.
ஊர்த ஊர்தி	ஊர்தி	ஊடுதி.
ஊன்த்தி	ஊன்றி	ஊடுதி.
எண்ண குச்சி	எண்ணெய்க் குச்சி	நெசவாளர் தறியில் பயன்படுத்தும் சிறிய எண்ணெய்ப் புட்டியிலுள்ள குச்சி.
எண்ண புட்டி	எண்ணெய்ப் புட்டி	நெசவாளர் தறியில் பயன்படுத்தும் சிறிய எண்ணெய்ப் புட்டி.
ஓசவாட்டு	ஓசைவாட்டு	பத்தைவாட்டு, பாவு அணுவாக்கிய பின் தெருவிலேயே நிமிட்டு கிழளாமல் இருக்கப் புணிதள்ளி ஓசையின்றிக் கையால் போடப்படும் சில வாட்டுகள்.


பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
ஒத்தி குளிக	ஒத்திக் குளிகை	கண்ணாடிப் பில்லை.
கஞ்சி பை	கஞ்சிப்பை	நீட்டுப்பாவில் கஞ்சி போடுவதற்குப் பயன் படுத்தப் படும் 1 மீட்டர் நீளமுள்ள துணிப்பை.
கட்டாரி பாவு	கட்டாரிப் பாவு	அரை வெண்மை அல்லது காரிகத்தில் ஆலையில் ஓடப் பட்ட பாவில் இடைவெளி விட்டுவிட்டு சாயம் தோய்த் தெடுக்கப்பட்ட வெவ்வேறு நிற முடைய பாவு.
கட்டி சரிகை சேல	கட்டிச் சரிகை சேலை	கரையில் இரண்டாம் தர சரிகை உடைய நூல் சேலை.
கண்ட சுத்ற ராட்னம்	கண்டு சுற்றும் இராட்டினம்	தார் திரிக்கும் இராட்டினம். இது நூலிழைக்கும் இராட்டினத்தைவிடப் பெரியது; இதன் ஊசி சிறியது.
கண்டி	கண்டி	தோய்ச்சடிக்காரர் கொடுக்கும் நூலுக்குரிய பெயர்.
கண்ணாடி / கண்ணாடி பட்ட / கண்ணாடி பில்ல	கண்ணாடிப் பட்டை / கண்ணாடிப் பில்லை	பொரப்பாவின் கரைப் பகுதி,
கதிர்	கதிர்	நூலிழைத்தலில் டப்பா நுழைக்கும் கருவி.
கதிர் திண்டு	கதிர்த்திண்டு	ஊசிக்கண்டு.
கதிராமண	கதிர்மணை	இராட்டினத் துரப்பணக்கால்.
கப்பர	கப்பரை	மண்ணாலான தார்மடக்கு,
கம்பம்	கம்பம்	லுங்கித் துணியில் நெய்யப்படும் நெசவு அமைப்பு.
கரகோலு	கரக்கோல்	கரணைக்கோல்.
கர்லு	கறளை	குஞ்சம்.



ஊணி (நீட்டுப்பாவு) பக். 247



ஊடுதி (பொரப்பாவு) பக். 247



குதிரைமரம் பக். 249

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கண்ணி கவுறு	கண்ணிக் கயிறு	கொத்து அறுப்பதற்குரிய இடத்தில் பயன்படுத்தும் சரடு- கயிறு.
கஸ்தூரி பாவு	கஸ்தூ ரிப் பாவு	பொரப்பாவில் சிறுகட்டம் போட்ட ரகமாக நெய்யப்படும் நெசவு வகை.
கஜ கொத்து	கஜ கொத்து	எட்டு முழவேட்டிகள் இரண்டு கொண்டது; நான்கு முழ வேட்டிகள் நான்கு கொண்டது.
காக்கா சரிக	காக்காய்ச் சரிகை	நூல் நெசவில் பயன்படுத்தும் சரிகைபோல் தோற்றமளிக்கும் இழை.
கீறுசுப்பலு	கீறு சுப்பல்	பாவைத் தெளிவு செய்தல் பொருட்டு பாவைக் கீற உபயோகப்படுத்தும் கம்பி அல்லது மூங்கில் குச்சி,
குச்சி	குச்சு	குழல்.
குச்சி கவுறு	குச்சுக் கயிறு.	நெய்தற்குரிய கைப்பிடி.
குச்சி ராட்னம்	குச்சு ராட்டினம்	பூட்டுத்தலை.
குஞ்சம்	குஞ்சம்	சிலுப்பையின் உட்பிரிவு. (எட்டுக்குளிகை சேர்ந்தது)
குட்ட	குட்டை	ஆடை வகையுள் ஒன்று.
குதர	குதிரை மரம்	நீட்டுப்பாவில் பாவினை இடையில் தாங்கி நிற்கும் மூங்கிலாலான கருவி.
குதர கட்டு	குதிரைக்கட்டு	குதிரை மரங்களின் தொகுப்புக் கட்டு.
குதில் கவுறு	குதில் கயிறு	ஊடுதியின் இருபுறங்களிலும் உள்ள வளையமிட்ட கயிறு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கைத்தறி	கைத்தறி	கையால் நெசவு செய்யப்படும் தறி.
கைப் பில்லூரு	கைப்பில்லு	நெசவாளர் கைத்தறியில் பயன் படுத்தும் தூரிகை.
கைலி	கயிலி	லுங்கி
கொத்து	கொத்து	நெய்யப்பட்ட மடி அளவு ஆடை
கொத்து பாவு	கொத்துப்பாவு	ஆலையில் ஓடிவந்த பாவு.
சமலங்கி	சமலங்கி	நீட்டுப்பாவில் சேலையின் கரைப்பகுதி.
சிம்புல்வெச	சிம்பல் விசை	அம்பு விசை.
சிலுப்ப	சிலுப்பை	பொந்தில் ஒரு பிரிவு.
சீடு	சீடு	2 சிலுப்பைகள் சேர்ந்தது.
சீடு தோன்ற ராட்னம்	சீடிழைக்கும் இராட்டினம்	நூ லிழைக்கும் இராட்டினம். இது தாம் திரிக்கும் இராட்டி னத்தை விடச் சிறியது. இதன் ஊசி பெரியது.
சுங்கு கவுறு	சுங்குக் கயிறு	குச்சிக் கயிறு.
சொர	சுரை	டப்பா நுழைக்கக்கூடிய ஊசி யுடன் கூடிய கருவி.
சொழல்	சுழல்	பூட்டுத்தலை.
டப்பா ராட்னம்	டப்பா இராட்டினம்	நூ லிழைக்கும் இராட்டினம்.
தக்கட்ட	தக்கைக் கைட்டை	தோல் கட்டை.
தத்திகவுறு	தத்திக் கயிறு	விழுதுகோலில் உள்ள எட்டுக் கயிறுகள்.
திண்டு	திண்டு	பில்லூரு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
திஷ்ட்டி குளுக்க	திருஷ்ட்டி குளிகை	விசைமுள் குத்தும் பகுதி. ஒரு குளிகை கருப்பிழையும் ஒரு குளிகை வெள்ளை இழையு முடைய கரைப் பகுதி.
துக்கு	துக்கு	கழிவு நூல் அல்லது பட்டு.
தும்பு	நும்பு	குதில் கயிறு.
துண்டு	துண்டு	ஆடை வகையுள் ஒன்று.
தொக்கு	துக்கு	துக்கு
தோம்பு	தோம்பு	ஊடையும் பாவும் ஒரே நிற முடைய லுங்கித் துணி.
தோய்ச்சல் பாவு	தோய்ச்சல் பாவு	நீட்டுப்பாவு, நெசவாளரே பாவினை நீட்டிக் கஞ்சி போட்டு நூலைச் செப்பனிட்டு நெசவுக் குக் கொணரப்படும் பாவு.
தோல் கட்ட	தோல் கட்டை	அச்சு மரத்தின் பெட்டிப் பலகை யினுள் உள்ள கருவி. இதனுள் நாடாவின் முனை சென்று திரும்பும்,
நடு கவுறு	நடுக்கயிறு	ஊணியின் மத்தியிலுள்ள கயிறு.
நாலெலை பருட்டம்	நாலிலைப் பரிவட்டம்	நான்கு நீட்டிலைகள் உடைய பரிவட்டம்; இதில் சிறியது, பெரியது என இருவகை உண்டு.
நீட்டு பாவு	நீட்டுப்பாவு	நூல் சேலைக்கும் வேட்டிக்கும் உரிய தோய்ச்சல் பாவு.
நுமுட்டு ஒதுக்கல்	நிமிட்டு ஒதுக்கல்	பாவு பிணைத்தல்.
நூல் கொழலு	நூல் குழல்	நூல் சுற்றுவதற்குரிய குழல்; மரம் அல்லது பிளாஸ்டிக்கால் ஆனது.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
நூல் டப்பா	நூல் டப்பா	நூல் சுற்றுவதற்குரிய தகர டப்பாக்கள்.
நூல் தறி	நூல் தறி	நூல் நெசவுத் தொழிலுக்குரிய தறிவகை.
நூல் பருட்டம்	நூல் பரிவட்டம்	நாலிலைப் பரிவட்டம். நீட்டிலைகள் சிறிது தடிப்பாக இருக்கும்.
நூ லெழைத் தல்	நூ லிழைத்தல்	பொந்தாக உள்ள நூலைப் பூட்டுத்தலையில் மாட்டிப் பரிவட்டத்தில் சுற்றுதல் அல்லது இழைத்தல்.
நூ லெழைக் கிற ராட்னம்	நூ லிழைக்கும் இராட்டினம்	நூல் இழைப்பதற்குரிய இராட்டினம்.
நெசவாளர்	நெசவாளர்	நெசவுத் தொழில் செய்பவர்.
நெசவுத் தொழில்	நெசவுத் தொழில்	துணி உற்பததிச் செய்யும் தொழில்.
பட்ட போடுதல்	பட்டை போடுதல்	எட்டு அல்லது ஆறு பெந்தணிக்கு ஒரு பட்டை போடுதல். 100 ஆம் எண்ணுள்ள நூலுக்கு 8 உம், 60 ஆம் எண்ணுள்ள நூலுக்கு 6 பட்டையும் போடப்படுதல்.
பட்டி மார்க்	பட்டி மார்க்கு	36 அங்குலத்திற்குள் உள்ள லுங்கி வேட்டிகள்.
பட அளகு	படை அளகு	சிம்பல்.
பத்த ஒதுக்கல்	பத்தை ஒதுக்கல்	திண்டடித்தல்.
பத்தகர	பத்தை கரை	சேலைகள், வேட்டிகள் அறுத்தலுக்குரிய இடம்.

பேசசு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பத்தசரடு	பத்தைச்சரடு	அச்சுப் பிணைத்தலில் பயன் படுத்தப்படும் மெல்லிய கயிறு.
பத்தவாட்டு	பத்தைவாட்டு	ஓசை வாட்டு.
பல்லு சக்கரம்	பல் சக்கரம்	பாவு உருளையினின்று கயிற்றை இழுத்துக் கட்டப் பயன்படுத்தும் பற்களை உடைய உருளை.
பல்லு சக்கரகாலு	பல்சக்கரக்கால்	பல் சக்கரம் பொருத்தப்படும் கால்கள்.
சாதா கால்		துளை மட்டும் உடைய கால்.
கிளி மூக்குக்கால்		கிளி மூக்கு அமைப்புடைய கால்.
பல்லு சக்கர கொக்கி	பல் சக்கரக் கொக்கி	நூல் நெசவில் உருளை சுழல்வதற்குரியது.
பாசுகம்பி	பாசுக் கம்பி	பொரப்பாவில் குதில் கயிற்றில் நுழைக்கும் கம்பி.
பாசுருட்டி, பாவு சுருட்டி, பா(வு) சுருட்டும் தடி	பாவுச் சுருட்டி	பாவைச் சுற்ற உதவும் மூங்கில் கழி.
பா(வு) தோய்தல்	பாவு தோய்தல்	நீட்டுப்பாவில் கஞ்சி போட்டு இழைகளைச் செம்மை செய்தல்.
பில்லு, பில்லூரு	பில்லு	நூல் நெசவில் கஞ்சி போட்ட பின் இழைகள் ஒன்றோடொன்று சேர்ந்து கொள்ளாமல் தீற்றுவதற்குரிய கருவி.
பில்லுவர தடி, பில்லூர் தடி	பில்லூர்தடி	பில்லூரை ஊன்றி வருவதற்குரிய தடி.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பீஸ்	பீஸ்	பொரப்பா வில் 8 மீட்டர் அளவு துணி.
புல்லூர்சு	புல்லூர்சு	சீர்வண்டிச்சக்கரம்.
புள்ளயார் பலக	பிள்ளையார் பலகை	நாடா, பெட்டிப் பலகையி னின்றும் வெளிச்செல்லாது தடுக்கும் பலகை.
பூட்டாங் கவுறு	பூட்டாங் கயிறு	குதில் கயிறு.
பெட கோல்	பெடல் கோல்	இழைகள் நீட்டிக் கட்டும் கரணைக் கோல் கீழே உருளும் தன்மையுடையதாய் அமைக்கப் பட்டது,
பெந்த் } பெந்து }	பெந்து	பொரப்பாவில் பயன்படுத்தப் படும் கம்பி முள்ளுள்ள சட்டம். பாவைப் பரவலாக்கும் கருவி.
பெந்த்குள்ள	பெந்துகுளிகை	15 குளிகை நூல்கள்.
பெந்த்பட்டி	பெந்துபட்டி	பெந்தணி.
பெந்தணி	பெந்தணி	பொரப்பாவில் பயன்படுத்தும் பெந்தினுள் இரு முட்களுக் கிடையே விழும் நூல்களின் அளவு.
பொச பொசன்னு	பொச பொசன்னு	நீட்டுப்பாவில் வேண்டிய பசையில்லையானால் பாவு பொசபொசன்னு இருக்கும்.
பொட்டி கவுறு	பொட்டிக்கயிறு	நூல் பெட்டி கட்டி வரும் கயிறு.
பொட் நாட்டி	பொட்டி நாட்டி	உருண்டைக் கட்டி.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பொட் நாட்டிகட்ட	பொட்டிநாட்டிக் கட்டை.	உருண்டைக் கட்டிக் கொம்பு.
பொட் நாட்டி கம்பி	பொட்டி நாட்டிக் கம்பி	உருண்டைக் கட்டிக் கம்பி.
பொட்டி நூல்	பெட்டி நூல்	நூல் கட்டுகளாகப் பெட்டியில் வரவழைக்கப்படும் நூல்.
பொட்டி பலவ	பெட்டிப் பலகை	நாடா தங்கும் பகுதி.
பொந்து	பொந்து	400 இழைகள் உடையது. முன்பெல்லாம் 10 சிலுப்பை களும் இப்பொழுது 5 சிலுப்பை களும் உடையது.
பொந்து வண்டி	பொந்து வெண்டு	கஞ்சி தோய்ந்த பாவு நூல்.
பொம்ம கட்ட	பொம்மைக் கட்டை	பிள்ளையார்ப் பலகை.
பொரப் பாவு	பொரப்பாவு	லுங்கிக்குரிய பாவு. இதில் நெசவாளரிடம் பாவு வருவதற்கு முன்னதாகவே கஞ்சி போடப் படுகிறது.
பொரப் பாவு ஆல	பொரப்பாவு ஆலை.	லுங்கிப் பாவு ஓடுவதற்குரிய ஆலை
மடக்கு பாவு	மடக்குப் பாவு	லுங்கிப் பாவு.
மடி	மடி	எட்டு முழம் வேட்டிகள் 2 கொண்டது.
மாட கவுறு	மாடக் கயிறு	அச்சு மரத்தில் மாடம் போன்று கட்டப்பட்டு கைப்பிடியுடன் கட்டப்பட்ட கயிறுகள்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
முட்டு கட்ட	முட்டுக் கட்டை	அச்சு முட்டும் பத்தை.
மெட்டு வைத்தல்	முட்டு வைத்தல்	முட்டு வைத்தல்.
மோட்டா ரகம்	மோட்டா ரகம்	மிகவும் குறைந்த எண்ணுள்ள இழைகளால் நெசவு செய்யப்பட்ட துணி வகை.
ரோல்	ரோல்	உருளை.
ரோல்காடி	ரோல்காடி	உருளையில் உள்ள சிறுபள்ளம்.
ரோல் காலு	ரோல் கால்	ரோல் பதிவதற்குரிய கால்கள்.
ரோலில் சுத்துதல்	ரோலில் சுற்றுதல்	அணுவாக்கபபட்டபாவு உருளையில் சுற்றப்படுதல்.
ரோல் தறி	ரோல் தறி	இடச்சிக்கனத்தின் பொருட்டு உருளையில் பாவினைச் சுற்றிக்கொண்டு நெசவு செய்யப்படும் தறிஅமைப்பு.
லுங்கி	லுங்கி	வேட்டியில் ஒரு வகை.
வில்லு	வில்	டப்பா நுழைக்கும் ஊசி.
வினாடி	வினாடி	பூட்டுத்தலை கீழ்நோக்கிச் சுற்றும் தன்மை உடையது.
றெக்ககவுறு	இறக்கைக் கயிறு	மாடக் கயிறு.
ஜம்புலு	ஜம்புல்	விசைமுள் குத்தும் கரைப் பகுதி.
காக்காடு	ஜாக்கார்டு	வடிவம் அமைப்பதற்குரிய கருவி.
ஜான கவுறு	ஜாலக் கயிறு	டுவைன்; முறுக்குக் கயிறு. மேல் நோக்கித் தூக்கி மட்டும் இழுக்கும் விழுது.
ஜட் நூல்	கட் நூல்(ஆ.+த)	துக்கு
குட்ட தோணி(தெ.)	துணியுருளை	படமரம்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
செட்லு தறி	செட்டில் தறி (ஆ.+த.)	தறிவகையுள் ஒன்று.
டைமன்	டைமன்(ஆ.)	முறுக்கு நூல்.
பாவு தோணி(தெ)	பாவு உருளை	நூல் உருளை.
மல்லீஸ்(ஆ.)	மல்லீஸ் [ஆ.]	40 எண் × 26 எண் நூல் கொண்டு 3 பீஸ் (அ) 24 கஜம் நீளத்திற்கு காக்காய்ச் சரிகை யுடன் பூவேலைப்பாடு செய்து நெய்யப்படுவது.
மெட்டீரி யல்ஸ் [ஆ.]	மெட்டீரியல்ஸ் [ஆ.]	ஊடையிலோ பாவிலோ பேட்டு உடைய நெசவு. 22 மீட்டர் நீளம் உனடயது. [4 சேலை நீளம்].

3. இருவகை நெசவுக்கும் பொதுவானவை

பட்டு நெசவு, நூல் நெசவு ஆகிய இருவகை நெசவுக்கும் பயன்படும் கருவிகள்பற்றி இத்தலைப்பில் விளக்கப்படுகின்றன.

அச்சு மரம்

இது, நெசவு செய்வதற்குரிய கருவி; அச்சுப் பலகை, தறித்தண்டவாளம், பெட்டிப்பலகை, குறுக்குச் சட்டம், சிராடிச்சட்டம் ஆகியவைகள் சேர்ந்த அமைப்பு உடையது. இதனைத் 'தறிமரம்' என்றும் கூறுவர்.

பரி வட்டம்:

இதனைப் பருட்டம் அல்லது பெருட்டம் என்பர். இக்கருவி ஏட்டில் பரிவட்டம் எனப்படுகிறது. இதனால் பரிவட்டம் என்னும் சொல்,

பரிவட்டம் > பருவட்டம் > பருட்டம் > பெருட்டம்

ஆகத் திரிந்து வழங்கப்படலாம் எனத்தெரிகிறது. இப்பரி வட்டம் மூங்கில் பத்தையால் செய்யப்பட்டது. இங்குப் பரி[1] என்னும் சொல்லுக்குப் பல பொருள்களிருப்பினும் அவற்றுள் செலவு என்னும் பொருளில் செலவு, செல்லுதல், சுற்றுதல் ஆகிக் கையாலோ கருவிகளின் துணையாலோ வட்டமாக இக்கருவி சுற்றப்படுதலால் இப்பெயர் பெற்றுள்ளது எனலாம். பரி[2] என்னும் சொல்லுக்குக் குதிரைக் கதி, வேகம் ஆகிய பொருள்களும் உண்டு பரிவட்டமானது கொட்டாங்கச் சியிலோ கொட்டாங்கச்சி பொருத்தப்பட்ட மண் உரக்குழி அல்லது கல் உரக்குழியிலோ வைத்துச் சுற்றப்படும்பொழுது எழும் ஓசையானது குதிரைக்கதியினது ஓசையைப் போல் மாறி மாறி எழுந்து வேகமாக வட்டமாகச் சுற்றப்படுதலால் மேலும் இப்பெயர் பெற்றது எனலாம்.

இதில் நாலிலை, ஆறிலைப் பரிவட்டங்கள் என்று இரு வகை உண்டு. இவ்விரு வகைப் பரிவட்டங்களிலும் சிறியது, பெரியது எனவும் உண்டு. இப்பொழுது அதிகமாகச் சிறிய நாலிலைப் பரிவட்டங்கள் பயன்படுத்தப்படுவதில்லை. பெரிய நாலிலைப் பரிவட்டம் நூலிழைப்போர் பயன்படுத்துகின்றனர். பெரிய ஆறிலைப் பரிவட்டம் கோரா இழைப்பவர்களும், சிறிய ஆறிலைப் பரிவட்டம் பட்டு இழைப்பவர்களும் பயன்படுத்து கின்றனர். காஞ்சிபுரம் தவிர்த்த பெரும்பான்மையான வட்டங் களில் நூலிழைப்பவர்கள் பரிவட்டத்திற்குப் பதில் தகர டப்பாக்களையோ பேல் தகட்டால் செய்யப்பட்ட டப்பாக் களையோ பயன்படுத்துகின்றனர்.

பூட்டுத்தலை

இது மூங்கிலின் சிறும்பற்களால் செய்யப்பட்டது. சிறும் பற்களின் தலைப்பகுதி பூட்டுபோல்கட்டி கட்டி வைத்துள்ளமை யால் பூட்டுத்தலை எனப்படுகிறது. இது குச்சிராட்டினம் என்றும் திருவட்டம் என்றும் வழங்கப்படுகிறது. இஃது ஒரு கொம்பில் அல்லது கம்பியில் சுற்றப்படும் தன்மையுடை யதனால் சொழல் [சுழல்] என்றும் சக்கரம் போன்றுள்ளதால்

1. நாராயணசாமி ஐயர். அ , நற்றிணை, (மு. கா. நூ.), ப.26
2. தமிழ்ப்பேரகராதி, தொ. 4, (மு. கா. நூ.) ப. 2508.

சக்கரம் என்றும் சொல்லப்படுகின்றது. இதனை, ஆலையைப போல் மேலும் கீழுமாகச் சுற்றப் பயன்படுத்தும் சிலர் ஆலை எனவும் வழங்குகின்றனர். தமிழ்ப் பேரகராதி, பூட்டுத் தலையைப், 'பூட்டை' என்கிறது.

தாபரக் கட்டை

தாபரம் [1] என்னும் சொல்லுக்குப் பற்றுக்கோடு என்பது பொருள். கோரா, பட்டு இழைத்தலில் இரு மூங்கிற் கட்டைகள் பயன்படுத்தப்படும். இவை அவற்றில் சிலுப்பைகளுக்குப் பற்றுக்கோடாக விளங்கி அதனைத் தாங்கியிருக்க இக்கட்டைகள் உதவுகின்றமையினால் தாபரக்கட்டை என்னும் சொல் மருவி தாப்பாக்கட்டை என வழங்கப்படுகின்றது எனலாம்.

இராட்டினம் :

இராட்டினத்தில் நூல் இழைக்கும் இராட்டினம் தார் திரிக்கும் இராட்டினம் என இருவகை உண்டு. இவ்விராட்டினங்களில் மரச்சட்டங்கள் சக்கரமாக இணைக்கப்பட்டிருப்பின் அதனை 'இலைச் சக்கரம்' என்பர். தற்பொழுது பெரும்பாலும் மிதிவண்டிச் சக்கரங்களையும் இராட்டினத்தின் சக்கரமாகப் பயன்படுத்துகின்றனர். குழலில் நூல் அல்லது பட்டு சுற்ற உதவும் இராட்டினம், தார் திரிக்கும் இராட்டினம் எனப்படும். பரிவட்டத்திற்குப் பதில் டப்பாவில் நூல் சுற்றுபவர்களுக்கு நூலிழைக்கும் இராட்டினம் தேவைப்படுகிறது. இந்த டப்பா நுழைக்க உதவும் கருவியைக் 'கதிர்' என்பர். டப்பா என்னும் சொல் 'dibba என்னும் இந்துஸ்தானி மொழியிலிருந்து உருவாகியுள்ளது. [2] ஊசியில் நூலிழைக்கும் இராட்டினத்தின் ஊசி, தார் திரிக்கும் இராட்டினத்தின் ஊசியைவிடப் பெரியதாயிருக்கும். இராட்டினத்தில் நூல் இழைக்கும் இராட்டினத்தைவிடத் தார் திரிக்கும் இராட்டினம் பெரியதாயிருக்கும்.

நாடா

இழைகளைப் பாவின் குறுக்கே - ஊடே செலுத்த உதவும் கருவி நாடா. முற்காலத்தில் நாடா செம்மரத்தால் செய்யப்பட்டது. தற்காலத்தில் பிளாஸ்டிக், அலுமினியம், மூங்கில்

1. தமிழ்ப் பேரகராதி, தொ. 3. [மு. கா. நூ.] ப, 1833.
2. தமிழ்ப் பேரகராதி. தொ. 3 மேற்படி. ப 1694.

ஆகியவற்றால் ஆன நாடா, பட்டு, நெசவிற்கும் மரத்தாலான நாடா, நூல் நெசவிற்கும் பயன்படுத்தப்படுகின்றன. பிளாஸ்டிக், அலுமினிய நாடாக்கள் நீண்ட காலம் உழைப்பதில்லை. நூல்தறி நாடாவில் மணி, கம்பம், வில் உண்டு. பட்டுத்தறி நாடாவில் மணி, கம்பம் மட்டும் உண்டு. நாடாவின் முனைப் பகுதி குமுள் [குமிழ்) எனப்படுகிறது. இஃது 'ஊக்கை' [1] எனப் பிற மாவட்டங்களில் வழங்கப்படுகிறது.

குழல் :

குழலில் நூல் அல்லது பட்டு சுற்றப்பட்டால் அது நார் எனப்படுகிறது. மூங்கிலால் செய்யப்பட்ட குழல், பட்டு நெசவிலும் பிளாஸ்டிக் அல்லது மரத்தால் செய்யப்பட்ட குழல், நூல் நெசவிலும் பயன்படுத்தப்படுகின்றன. நெசவில், குழல் நாடாவிற்குள்ளிருக்கும். பாவினிடையே நாடா செல்லும் பொழுது குழல் வெளியில் தெரியாது. இக் கருத்து,

'பாவிடை யாடு குழல்போல் கரந்து' [2]

என்ற மாணிக்கவாசகர் வாக்காலும் அறியத்தக்கது. குழலில் நூல் இல்லையானால் குழல் பாவின் ஒரு புறத்திலிருந்து இன்னொரு புறம் செல்ல இயலாது. அஃதாவது குழலில் நூல் இருந்தால்தான் குழல் பாவினூடே செல்ல இயலும்; நெசவு செய்ய முடியும். இக்கருத்து, இராம இலக்குவனர்களின் இணை பிரியாமையினை விளக்க வந்த கம்பரின்,

'நெய்குழல் உறும் இழை' [3] என்ற அடியாலும், குருவை விட்டுப் பிரியாத சீடர்களை விளக்க வந்த எச். ஏ. கிருட்டினப் பிள்ளையின் இரட்சணிய யாத்திரிகத்தில் வந்துள்ள, 'குழனூலிற் பிரியாத' [4] என்ற அடியாலும் புலனாகிறது.

---

9. கார்த்திகேயன். ஆ. நெசவுத் தொழிற் சொற்கள் - மொழியியல் ஆய்வு, மொழியியல், தொகுதி. 9, [மு. கா. நூல்.]

10. மாணிக்கவாசகர், திருவாசகம், [திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் வெளியீடு 23. 11. 69] பா. 24: 8, ப. 122.

11. கம்பர், கம்பராமாயணம், (சென்னை, கம்பன்கழகம், மறு பதிப்பு , 1977) பா. 1: 5: 127, ப. 52

12, கிருட்டினப்பிள்ளை, எ. ஆ., இரட்சணிய யாத்திரிகம் (சுருக்கம்), சென்னை - 3, கிறித்துவ இலக்கிய சங்கம், 1977) ப. 70.

விசமுள்:

நாடா ஒரு முறை பாவுக்கிடையில் செலுத்தப்பட்டதும் பன்னையினை அழுத்திக் தட்டுவார். புணியினை மாற்றி மேலும் நாடாவினைச் செலுத்துவர். இவ்வாறு தொடர்ந்து செய்து கொண்டிருப்பர். இரு பக்கங்களிலும் நெசவு தளர்ந்து விடாமலிருக்க ஒவ்வொரு பக்கத்திற்கும் பித்தளையாலான ஊசி போன்ற முட்கள் ஏழு முதல் பதினைந்து பயன்படுத்துவர். இதனை 'வெசமுள்' (விசை முள்) அல்லது 'சேடு முள்' என்பர். இவை ஒரு கோலுடன் பிணைக்கப்பட்ட கயிற்றினுள் செருகப்பட்டிருக்கும். இக்கயிற்றினை 'விசைக் கயிறு' அல்லது 'சேட்டுக் கயிறு' என்பர். நூல் தறியில் இதனைத் 'தும்பு விசை' என்பர். இவ்விசைமுள் குத்தும் முறை பட்டுத் தறியிலும் பயன்படுத்தப்படுகிறது. தும்பு விசை நெசவில் துணியைக் கீழ்நோக்கி அழுத்திப் பிடிக்கும் இதனால் நெசவு அழுத்தம் உடையதாக இருக்கும்.

நீட்டுப்பாவில் தும்பு விசைக்குப் பதில் அம்பு விசை பயன்படுத்தப்படுகிறது. அம்பு விசை துணியை மேல்நோக்கி இழுத்துப் பிடிக்கும் இவ்வம்பு மூங்கில் பத்தையாலானது. நீட்டுப்பாவில் நெசவு அதிக அழுத்தம் இல்லையாதலால் இதில் அம்பு விசை பயன்படுத்தப்படுகிறது என்பர்.

கால்குழி

நாடாவைப் புணி மாற்றிப் போட காலின் கீழுள்ள இரு கட்டைகளை மிதிப்பர். அதனைப் 'புணி மெரித்தல்' (புணி மிதித்தல்) என்பர். மிதிக்கட்டைகளுக்குள் இரு கம்பிகள் இக் கட்டைகள் இயங்குவதற்காக உள்ளன. காலினால் மிதிக் கட்டைகள் மிதிப்பதற்கு உள்ள பகுதி குழியாக இருக்கும். இதனைக் 'காக்குழி' [கால்குழி] என்பர். தென் தமிழ்நாட்டுப் பகுதிகளில் இதனைத் 'தறிக்குழி' என்பர். இச்சொல், 'தறிக் கிடங்கு' என்றும் வழங்கப்படுகிறது.

கட்டப்பாரை

பொதுவாக மக்களிடையே கடப்பாரை என்று வழங்கப் படும் கருவி நிலத்தைக் குத்த உதவுவது. இக்கருவி நெசவுத் தொழிலில் நிலத்தில் குத்தப்பட்டு ஊடுதியைக் கயிற்றின் உதவியினால் தாங்கிப் பிடிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

நெசவாளர் பெரும்பாலும் இதனை, 'இருப்பாணி' என்றே வழங்குகின்றனர். கட்டைப் பார் என்னும் சொல் கட்டப் பாரையாகிப் பின்னர் கடப்பாரை ஆயிற்று எனலாம்.

இனி, பட்டு நெசவு, நூல் நெசவு ஆகிய இரண்டிற்கும் பொதுவான சொற்களின் பொருள் விளக்கம் காணலாம்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
அச்சி பொணித்தல்	அச்சுப் பிணைத்தல்	நெசவு செய்ய வேண்டிய பாவினை பன்னையிலுள்ள இழைகளுடன் தறிக்கு வெளியே பன்னையைக் கொண்டு வந்து இணைத்தல் அல்லது பிணைத்தல்.
அச்சி மரம்	அச்சுமரம்	அச்சு இணைந்த ஆளுயர நீள் சதுரவடிவமான கருவி,
அச்சி மரக்கவுறு	அக்சு மரக் கயிறு	மாடக் கயிறு.
அச்சி மரக்குண்டு	அச்சு மரக் குண்டு	கைக்குண்டு.
அச்சிமுட்ற பத்த	அச்சுமுட்டும் பத்தை	அச்சை முட்டித் தாங்கும் மூங்கில் பத்தை.
அச்சி முட்டி	அச்சுமுட்டு	அக்சு முட்டும் பத்தை.
அடகல்லு	அடைக்கல்	சோமாஸ் கல்லு.
அணி அளகு	அணியளவு	புணையல் அளவு.
அணிகோலு	அணிக்கோல்	அணி தெரிவதற்காக இழைகள் அணி மாறி வரும் இடங்களில் பயன்படுத்தும் கோல்.
அணிமாறு தல்	அணிமாறுதல்	இழை தன் அணியில் செல்லாமல் வேறொரு அணியுடன் சேர்ந்திருத்தல்.
அரக்கு	அரக்கு	நாடாவின் உறுப்புகளைப் பிடிப்புக்குப் பற்ற வைத்தலுக்கு உதவுவது.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
அரம்	அரம்	தேய்ந்த மரப்பகுதியை நயப்படுத்த உதவும் புரிகளை உடைய பட்டையான இரும்புக் கருவி.
அருவு	அருவு	பாவின் கரைப்பகுதி.
அள்ளு கவுறு	அள்ளுக் கயிறு	பன்னையில் கோல்களை மேலும் கீழும் இருபக்கத்திலும் இழுத்துப் பிடித்திருக்கும் கயிறு.
அள்ளு புடித்தல்	அள்ளு பிடித்தல்	பாவு அணுவாக்கல்.
ஆடு கரலு	ஆடுகரக்கோல்	மிதிக்கரணைக் கோல்.
ஆணெழ	ஆணிழை	தறியில் பன்னைக்கு முன்னால் புணியில் உள்ள மேல் இழை.
ஆல	ஆலை	நூலைப் பாவாக்கும் கருவி.
ஆலகுச்சி	ஆலைக்குச்சி	பூட்டுத்தலை சுழல அதன் மத்தியிலுள்ள குச்சி.
ஆலயில ஓட்டுதல்	ஆலையில் ஓட்டுதல்	பாவாக்குதலுக்குரிய செயல்.
இராட்னம்	இராட்டினம்	நூற்க உதவும் கருவி.
இராட்ன குத்து காலு	இராட்டினக் குத்துக்கால்	சக்கரம் சுழல உதவும் கால்கள்
இராட்ன தண்ட வாளம்	இராட்டினத் தண்டவாளம்.	இராட்டின மணை.
இராட்ன தரப்பணக் காலு	இராட்டினத் துரப்பணக்கால்	இராட்டினத்தில் ஊசி நுழைக்கும் மரக்கால்கள்.
இராட்ன மண	இராட்டின மணை	இராட்டினத்தில் துரப்பணக் காலையும் குத்துக்காலையும் இணைக்கும் கீழுள்ள கட்டை.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
இருப் பாணி இழுப் சாணி	இருப்பாணி	கட்டப்பாரை. இரும்பினால் ஆணிபோல் நீளமாக உறுதியாகச் செய்யப்பட்ட கருவி. ஊடுதியைக் கயிற்றால் தாங்குவது.
உண்ட கட்டி	உருண்டைக் கட்டி	நூல் இழைத்தலில் பயன்படுத்தப்படும் கருவி.
உண்ட கட்டிகட்ட	உருண்டைக் கட்டிக் கட்டை	உருண்டைக் கட்டியில் மரத்தாலான அடிப்பாகம்.
உண்டகட்டி கம்பி /காம்பு	உருண்டைக் கட்டிக் கம்பி / கொம்பு	உருண்டைக் கட்டியில் உள்ள கம்பி அல்லது கொம்பு.
உண்டகட்டி தொள	உருண்டைக் கட்டிக் கொம்புத் துளை	உருண்டைக் கட்டிக் கொம்பில் உள்ள துளை. பூட்டுத்தலை சுழல்வதற்குரியது.
உண்ட ரகம்	ஊடை ரகம்	ஆடையில் குறுக்கிழையாகப் பயன்படுத்தப்படும் வகையைச் சார்ந்தவை.
ஊசி	ஊசி	இராட்டினத்தில், குழல் சொருகப்பட்டு குழலில் நூல் சுற்றுவதற்குரிய கருவி.
ஊன்த்தி கவுறு	ஊன்றிக் கயிறு	ஊன்றியை இருப்பாணியுடன் இணைத்துத் தாங்கிப் பிடிக்கும் கயிறு. தேங்காய் நாரினாலோ பத்தைக்கரையினாலோ உருவாக்கப்பட்டது.
எதிர் குறி	எதிர்க்குறி	பன்னைக்கும் நெசவு செய்யப்பட்ட பகுதிக்குமிடையே உள்ள அடையாளக் குறி.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
எதிர் பலக	எதிர்ப் பலகை	படமரத்தின் நான்கு பக்கங்களுள் நெசவாளர் திருப்பப் போகும் பக்கம் படமரத்தின் சுணைவாய் உடையதாயிருத்தல்.
எயட்டு கட்டுதல்	இழைகள் நீட்டிக் கட்டுதல்	பாவு இழைகளை நீட்டிக் கட்டுதல்.
எயட்டு தறி	எயட்டுத்தறி	பாவு சுருட்டியினின்றும் இழைகளை நீட்டிக் கட்டி நெசவு செய்யப்படும் தறி அமைப்பு. இதற்கு ரோல் தறியைவிட இருமடங்கு கூடுதல் இடம் தேவை.
எலசக்கரம்	இலைச்சக்கரம்	பலமரச்சட்டங்கள் இணைத்துச் செய்யப்படும் இராட்டினச் சக்கரம்.
எழ, எழெ	இழை	பட்டிழை, நூலிழை
எழ அத்தி போச்சி	இழை அற்றுப் போயிற்று	இழை அறுந்து போயிற்று
எழபோக்கு	இழைப்போக்கு	பாவில் இழை அறுந்து நெய்யப்பட்டுள்ள இடங்கள்.
எழய ஏறவுடுதல்	இழையை ஏற விடுதல்	இழைகளை துடைப்பச் சுப்பலால் சரி செய்தல். நெசவில் அறுபட்ட இழைகளைப் பன்னையில் கோத்தல்.
எழய நுமுட்டு	இழையை நிமிட்டு	இழைகளை ஒன்று சேர்த்து நெருடுதலைக் கூறுதல்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
எழய நுருண்டு	இழையை நுருண்டு	இழையை நிமிட்டு
ஏர்தண்டு	ஏர்த்தண்டு	குதிரையில் குறுக்காக உள்ள இரு கொம்புகளையும் இணைக்கும் மேல் கொம்பு,
ஓடு கவுறு	ஓடு கயிறு	வலிக்கயிறு.
கக்கு	கக்கு	பட்டில் இழைப் போக்கைக் குறிப்பது.
கச்சல்	கச்சல்	நூலில் இழைப் போக்கைக் குறிப்பது.
கட்டபார	கட்டைப்பார்	இருப்பாணி.
கட்டு போடுதல்	கட்டுப்போடுதல்	நாடாவின் குமிழ் விட்டுப் போனால் ஒட்ட வைத்தல்.
கம்பி சுத்துதல்	கம்பி சுற்றுதல்	பரிவட்டம், பூட்டுத்தலை ஆகிய வற்றின் முனைப் பகுதிகளில் கம்பி சுற்றுதல்.
கர	கரை	பாவின் ஓரப்பகுதி,
கவுறு	கயிறு	கயிறு
கன்னாக் கோலு	கரணைக்கோல்	கரணைக்கோல்
காக்குழி	கால்குழி	நெசவுசெய்பவர் தம்கால்களால் மிதிக்கட்டையினை மிதிக்கும் குழியுடைய பகுதி.
கிட்டி போனதறி	கிட்டிப் போன தறி	நெய்து முடிக்கப்பட்ட தறி.
குத்து காலு	குத்துக்கால்	முன்தண்டுக்கால்
குழிதறி	குழித்தறி	கால்குழி அமைக்கப்பட்டு நெய்யப்படும் தறி.
குறிகெட	குறிக்கெடை	குறி அளவுகோல்

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
குறி கொட்டாங்கச்சி	குறிக் கொட்டாங்கச்சி	குறி வைத்தலுக்குரிய பொருள் உள்ள தேங்காய் ஓடு.
குறிகோலு	குறிக்கோல்	குறிவைத்தலுக்குரிய அளவு கோல்.
குறிவைத் தல்	குறிவைத்தல்	நெய்யப்படும் ஆடையின் அளவுக்காக பாவினிடையே அடையாளம் வைத்தல். இதற்காக செம்மண், கரி, நாமக் கட்டி முதலியன பயன்படுத்தப் படும்
குறுக்கு சட்டம்	குறுக்குச் சட்டம்	குறுக்குவிட்டம்.
குறுக்கு விட்டம்	குறுக்கு விட்டம்	அச்சுமரத்தின் மேற் பகுதிக்குக் கீழுள்ள சட்டம்.
கெண்டி	கண்ணி	கண்ணி
கெண்ணி	கண்ணி	பாவின் சிறு பகுதி.
கெயட்டு	கிழட்டு	ஊடை நூலின் சிறு பகுதி.
கைகாட்டி மரம்	கைக்காட்டி மரம்	தறியைத் தாங்கும் மரம்.
கைகுண்டு	கைக்குண்டு	அச்சுமரத்தில், நெய்த பாவைத் தட்டுவதற்காக கைப்பிடியாக அமைக்கப்பட்ட பகுதி.
கைத்தறி நாடா	கைத்தறி நாடா	கைத்தறியில் பயன்படுத்தப் படும் நாடா.
கொம்ம கட்டி	கொம்மைக்கட்டி	உருண்டைக் கட்டியின் பீடம் மண்ணாலானதைக் குறிப்பது.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கொம்ம கோலு	கொம்மைக்கோல்	கொம்மைக் கட்டியில் பொருத்தப்பட்டுள்ள கோல்.
கொழலு கொயலு குயலு	குழல்	பட்டு, கோரா, நூல் சுற்றப் படும் கருவி. மரத்தாலோ மூங்கி லாலோ பிளாஸ்டிக் காலோ செய்யப்படுவது.
கொழ சட்டி	குழல் சட்டி	குழல் வைக்கும் பாத்திரம்.
கொழ மடக்கு	குழல் மடக்கு	குழல் சட்டி
கோலடித்தல்	கோலடித்தல்	பாவு நீட்டும் பொழுதுஅவற் றில் இழை பிணிப்பில்லாமல் இருக்கக் கோலால் கட்டுதல்.
சக்கரம்	சக்கரம்	பூட்டுத்தலை.
சங்கம் சங்ஙம்	சங்கம்	பட்டு, நூல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.
சந்துவா	சந்துவாய்	வேட்டி, சேலை ஆகியவற்றில் ஒவ்வொன்றையும் தனித்தனியே அறுத்து எடுப்பதற்கு விடப் படும் இடைவெளி.
சிகர் அணி	சீர் அணி	சீரிழை.
சிக்கு	சிக்கு	இழைகள் தாறுமாறாகி விடல்.
சிம்பலு	சிம்பல்	சற்று உருளை வடிவில் தட்டை யாகவும் மெல்லியதாகவும் உள்ள மூங்கில் பத்தை.
சீர்எழ	சீர் இழை	சீராகச் செல்லாத இழை; குளிகை மாறிவரும் இழை.
சீர்கவுறு	சீர்க்கயிறு	அள்ளுக் கயிறு.
சீர்வண்டி சக்ககம்	சீர் வண்டிச் சக்கரம்	சீராகப் புணி மாறி வருவதற்குப் பயன்படுத்தப்படும் மரத்தாலோ இரும்பாலோவான சக்கரம்.


பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
சீராடி உரள	நீராடியுருளை	சீருருளை
சீராடி சட்டம்	சீராடிச்சட்டம்	அச்சு மரத்தின் மேற் பகுதியில் உள்ள சட்டங்களுள் ஒன்று. இதன் இரு புறங்களிலும் நாடா வின் குமிழோ பேட்டுத் தகடோ பொருத்தப்பட்டிருக்கும்; தறி சீராக இயங்குதலுக்கு உரிய சட்டம்.
சீருரள	சீருருளை	சீர்வண்டிச் சக்கரம்
சுங்குகர	சுங்குக் கரை	வேட்டி, சேலைகளுக்கிடையில் திண்டடித்து நீக்கப்பட்ட கழிவு நூல்.
சுண்ணாம்பு குறி	சுண்ணாம்புக் குறி	பாவில் சுண்ணாம்பினால் குறிக்கப்பட்ட அடையாளம்.
செம்மண் குறி	செம்மண் குறி	பாவில் செம்மண்ணால் குறிக்கப் பட்ட அடையாளம்.
சேட்டுகவுறு	சேட்டுக் கயிறு	விசைக் கயிறு.
சேடு முள்ளு	சேடு முள்	விசை முள்
சேல	சேலை	சேலை
சொணவா	சுணைவாய்	படமரத்தில் பள்ளம் உள்ள பகுதி.
சொயட்டி	சுழற்றி	நெசவாளி படமரத்தை எதிர்ப்பக்கமாகச் சுழற்றி முட்டும் குச்சி.
சோமாஸ் கல்லு	சோமாஸ் கல்	முன்தண்டுக் கம்பி அல்லது கோல் பன்னைக்கு அருகில் வாராமலிருக்க முன்தண்டுப் பகுதியில் அதனைத் தாங்கிப் பிடிக்க உதவும் கல் அல்லது மணல் மூட்டை.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
டோர போதல்	டோரை போதல்	இழைப்போக்கு
தட்டளவு தத்து அளவு	தத்தளவு	பாவில் ஒட்டு நீக்குவதற்கும் தெளிவு எளிதில் உண்டாக்கவும் உபயோகப்படுத்தும் எட்டு கோல்கள்.
தர் நாக்கு	துளை நாக்கு	படமரக்குச்சி; நெசவாளி படமரத்தைத் தன் பக்கமாகச் சுழற்றி முட்டும் குச்சி.
தரப்பண காலு	துரப்பணக்கால்	படமரக்கால்
தறிகுத்து காலு	தறிக்குத்துக்கால்	தறியை எல்லா அளவிலும் தாங்கி நிற்கும் இரு கால்கள்.
தறிகுழி	தறிக்குழி	கால்குழி.
தறி கெடங்கு	தறிக்கிடங்கு	கால்குழி.
தறி தண்ட வாளம்	தறித்தண்ட வாளம்	அச்சுமரத்தின் கீழ்ப்பகுதி; நாடா சென்று வரும் பகுதி.
தறிப்பட அளவு	தறிப்படை அளவு	புணையல் அளவு.
தறிமரம்	தறிமரம்	அச்சுமரம்
தறிகாரன்	தறிக்காரன்	தறிமுதலாளி.
தாணு	தாணு	நெய்யப்பட்ட சேலை அல்லது பாவின் ஒரு பிரிவு.
தாப்பா கட்ட	தாபரக்கட்டை	நூலிழைத்தலில் நூலைப்பற்றிக் கொள்ள உதவும் மூங்கிலால் ஆன கருவி.
தார் ஊசி	தார் ஊசி	குழலில் நூல் சுற்றப் பயன்படுத்தும் ஊசி.


பேச்சுவழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
தார் சிப்பி	தார்ச் சிப்பி	தார்மடக்கு
தார் சுத்துதல்	தார் சுற்றுதல்	தார் திரித்தல்.
தார் திரித்தல்	தார் திரித்தல்	குழலில் பட்டோ நூலோ சுற்றுதல்.
தார் திரிக்கும் ராட்னம்	தார் திரிக்கும் இராட்டின்ம்	குழலில் நூல் சுற்ற உதவும் இராட்டினம்.
தார் மடக்கு	தார் மடக்கு	தார் வைக்கப்படும் பாத்திரம்.
தாரு	தார்	பட்டோ நூலோ சுற்றப்பட்ட குழல்.
திண்டடித் தல்	திண்டடித்தல்	ஒவ்வொரு சேலை, வேட்டிக்கும் இடையே இடைவெளி விட்டு நெய்தலைக் குறிப்பது.
திண்டறுத் தல்	திண்டறுத்தல்	திண்டடித்த இடத்தில் துணியை அறுத்தல்.
திரட்டம்	திருகுவட்டம் | திருவட்டம் |	பூட்டுத்தலை.
திருக்குச்சி	திருகுக்குச்சி	பூட்டுத்தலை சுழல உதவும் குச்சி.
திருவாணி	திருகாணி	திருகுக்குச்சி.
தும்புவெச	தும்புவிசை	பட்டுப்பாவிலும் பொரபப் பர்விலும் விசைமுள் கீழ்நோக்கி அழுத்திப் பிடித்து நெசவு அழுத்தமுடைய தாயிருக்கப் பயன்படுத்தும் அமைப்பு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
தோமாஸ் கல்லு	தோமாஸ் கல்	சோமாஸ் கல்லு.
நாடா	நாடா	வாட்டு போடுவதற்குரிய கருவி. இதில் பட்டுத்தறி நாடா, நூல் தறி நாடா என இருவகை உண்டு.
நாடா ஆணி	நாடா ஆணி	நாடாக் கம்பம்
நாடா எகுறுதல்	நாடா எக்குதல்	நாடா பாவினிடையே தாண்டிச் செல்லல்.
நாடா கம்பம்	நாடாக் கம்பம்	நாடாவில் தார் சொருகுவதற்குரிய இரும்புக் கம்பி.
நாடா குமுளு	நாடாக் குமிழ்	நூல்தறி நாடாவின் இரு முனையிலும் இரும்பால் செய்யப்பட்ட கூம்பு.
நாடா தந்தம்	நாடாத் தந்தம்	தந்தத்தாலான பட்டுத்தறி நாடாவின் குமிழ்.
நாடா நைஸ் வைத்தல்	நாடாநைச்சியம் பண்ணுதல்	நாடாவை நயம் செய்தல்— மிருதுவாக்குதல்
நாடாமணி	நாடாமணி	நாடாவிலிருந்து இழைவெளி வருவதற்குரிய துளையில் பொருத்தப்பட்டுள்ள பிளாஸ்டிக் மணி.
நாடா ராவுதல்	நாடா அராவுதல்	அரத்தால் நாடாவின் தேய்ந்த பகுதியை நயப்படுத்துதல்.
நாடாவளயம்	நாடா வளையம்	பட்டுத்தறி நாடாவிலுள்ள தாரிலிருந்து இழை மடங்கி வருவதற்கான கம்பி வளையம்
நாடா வில்லு	நாடாவில்	நூல்தறி நாடாவில் உள்ள வில் போன்ற தகடு.


272 1



1	பூட்டுத்தலை	275
2	உருண்டைக் கட்டிக் கட்டை	264
3	மோதிர உருண்டைக் கட்டிக் கட்டை	279
4	பெரிய நாலிலைப் பரிவட்டம்	273



குழல் 1 பட்டுத்தறிக் குழல் பக். 268
2 நூல்தறிக் குழல், 3விசைத்தறிக் குழல்



நாடா 1 பட்டுத்தறிநாடா பக். 272
2 நூல்தறி நாடா, 3விசைத்தறி நாடா

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
நின்னச்சி கொம்பு	நின்றச்சுக் கொம்பு	மாதறிக்கால்.
நுமுட்டு கர	நிமிட்டுக் கரை	அச்சிலுள்ள இழைகளுடன் புதிய பாவினை இணைத்து நெய்த பின் நிமிட்டுப் பகுதியினை அறுத்து நீக்கிய நூல்.
நுமுட்டு பொன்சி இசுக்கவும்	நிமிட்டி இழுத்தல்	இழைகளை இணைத்துப் பன்னைக்குள் நுழைத்து இழுத்தல்.
நெய்யகாரன்	நெய்யக்காரன்	கூலிக்கு நெசவு செய்யும் தொழிலாளி.
பட்ட சீல / பட்ர சீல	பட்டைச் சீலை	உப்புக் காகிதம்.
படமரம்	படமரம்	நெய்யப்பட்ட துணி சுற்றுவதற்குப் பயன்படும் நான்கு பட்டையுடைய மரம்.
படமர கம்பி	படமரக் கம்பி	படமரத்தைச் சுழற்றுவதற்குரிய கம்பி.
படமர காடி	படமரக் காடி	படமரத்தினுளுள்ள சிறியநீண்ட பள்ளம்.
படமர காலு	படமரக்கால்	படமரத்தைத் தாங்கும் கால்கள்.
படமர குச்சி	படமரக்குச்சு	படமரத்தைச் சுழற்றுவதற்குரிய சிறிய கொம்பு.
படமர தொள	படமரத் துளை	படமரத்தில் படமரக்குச்சு சொருகப்படும் துளை.
பணிக்கர்	பணிக்கர்	முதலாளி. நெசவாளியைக் கூலிக்கு நெசவு செய்பவர் குறிக்கும் சொல்.
பருட்டம் / பெருட்டம்	பரிவட்டம்	பட்டு, கோரா, நூல் இழைகளைச் சுற்ற உதவும் கருவி.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பலவ திருப்புதல்	பலகை திருப்புதல்	படமரத்தைச் சுழற்றித் திருப்புதல்.
பன்னய அய்த்தட்டு	பன்னையை அழுத்தித் தட்டு	நெசவு அழுத்தமாக வருதலுக்குப் பன்னையை அழுத்தித் தட்டுதல்.
பாசற கம்பி	பாசறக் கம்பி	படமரச் சுணைவாயிலிருந்து நெய்யப்பட்ட ஆடையைத் தாங்கும் கம்பி.
பார்வபக்கம்	பார்வைப் பக்கம்	தறியின் இடப்பக்க நெசவு.
பாவு	பாவு	பரவலாக நீட்டப்படும் பட்டு (அ) நூல் இழைகள்.
பாவு அணுவாக்கல்	பாவு அணுவாக்கல்	பாவில் எக்குறையும் இல்லாமல் செம்மை செய்தல்.
பாவு அறுத்தல்	பாவறுத்தல்	நெய்யப்பட்ட துணியைப் பாவினின்று அறுத்தெடுத்தல்.
பாவு கீறல்	பாவு கீறல்	கஞ்சி போட்ட பாவின் ஈரம் நீங்க மூங்கிற் குச்சிகளால் கீறுதல்.
பாவு சுத்துதல்	பாவு சுற்றுதல்	பாவினைத் தடியிலோ உருளையிலோ சுற்றுதல்.
பாவு தட்டுதல்	பாவு தட்டுதல்	கோலடித்தல்.
பாவு நீட்டுதல்	பாவு நீட்டுதல்	திறந்தவெளியில் பாவினைச் செம்மை செய்ய நீட்டுதல்.
பாவு பொணித்தல்	பாவு பிணைத் தல்	அச்சிலுள்ள இழைகளுடன் பாவினைத் தறியிலேயே பிணைத்தல்.
பாவு போணம்	பாவு போடணும்	பாவு நீட்டுதலைச் சொல்வது.
பாவு ரகம்	பாவு ரகம்	ஆடையில் நீட்டிழையாகப் பயன்படுத்தும் வகையைச் சார்ந்தவை.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பாழும் பல்லு	பாழும் பல்	அச்சுப் பற்களுள் இழைகள் இல்லாமல் வரும் பற்களைக் குறிப்பது.
புணி	புணி	அணி மாறி வரும் இடம்.
புணிகட்டு	புணிக்கட்டு	புணியில் கட்டப்பட்டுள்ள கட்டு.
புணி கட்டியிருத் தல்	புணி கட்டியிருத்தல்	அணிமாறி வரும் இடத்தில் இழைகளில் சிக்கு ஏற்பட்டிருத் தல்.
புணிமெரித் தல்	புணிமிதித்தல்	பாவில் அணி மாற மிதிக் கட்டையினை மிதித்தல்.
புணயல்	புணையல்	புணி யுள்ள இடங்கள். நீட்டுப் பாவில் 225 இடங்களிலும் பட்டுப்பாவில் 7 இடங்களிலும் புணியிருத்தல்.
புணயல் அளவு	புணையல் அளவு	புணிநீங்காமலிருக்கப் பயன் படுத்தப்படும் அளவு. அளவு கீழே உருவி விழுந்து விடாமலிருக்க அளவின் இருபுறமும் கயிற்றால் கட்டியிருத்தலும் உண்டு.
புரு	புரு	பரிவட்டத்தில் சுற்றப்படும் ஒரு சிறு பிரிவு.
பூட்டு கவுறு	பூட்டுக் கயிறு	பூட்டாங் கயிறு.
பூட்தல	பூட்டுத்தலை	ஊடை நூலை மாட்டி நூல் இழைப்பதற்குரிய கருவி.
பூட்தல அடிசிம்பலு	பூட்டுத் தலை அடிசிம்பல்	பூட்டுத்தலையின் அடிப்பக்கத் திலுள்ள சிறிய மூங்கில் பத்தைகள்.
பூட்தல மேல் சிம்பலு	பூட்டுத்தலை மேல்சிம்பல்	பூட்டுத் தலையின் மேல் பக்கத் பக்கத்திலுள்ள சிறிய மூங்கில் பத்தைகள்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பூட்தல	பூட்டுத்தலை	பூட்டுத்தலையின் மேல்
சுத்துசிம்பலு	சுற்றுச் சிம்பல்	சிம்பலையும் கீழ்ச் சிம்பலையும் சாய்வாக இணைக்கும் சுற்றுச் சிம்பல்கள்.
பெண்ணெழ	பெண்ணிழை	தறியில் பன்னைக்கு முன்னால் உள்ள புணியின் கீழ் இழை.
பெரள	புரளை	சீருருளை. பன்னையை மத்தியில் மேல்நோக்கித் தாங்கிப் பிடித்துக் கீழும் மேலும் புரளச் செய்வது.
பெரம்பு பத்த	பிரம்புப் பத்தை	சிம்பல்
பெருட்ட காம்பு	பரிவட்டக் காம்பு	பரிவட்டத்திலுள்ள நீண்ட காம்பு.
பெருட்ட கீழெல	பரிவட்டக் கீழிலை	பரிவட்டத்தின் கீழ்ப்பக்கம் உள்ள சிறிய மூங்கில் பத்தைகள்
பெருட்ட மேலெல	பரிவட்ட மேலிலை	பரிவட்டத்தின் மேல்பக்கம் உள்ள சிறிய மூங்கில் பத்தைகள்.
பெருட்ட நீட்டெல	பரிவட்ட நீட்டிலை	பரிவட்டத்தில் நீளமாக உள்ள மூங்கில் பத்தைகள்.
பெருட்ட முன்னெல	பரிவட்ட முன்னிலை	பரிவட்டத்தின் கீழ் இலையிலும் மேலிலையிலும் முன்னால் உள்ள இலைகள்.
பெருட்ட பின்னெல	பரிவட்டப் பின்னிலை	பரிவட்டத்தின் கீழ் இலையிலும் மேல் இலையிலும் அடிப் பக்கத்தில் பின்னால் உள்ள இலைகள்.
பெருட்ட கீழ்கட்டு	பரிவட்டக் கீழ்க்கட்டு	பரிவட்டத்தின் கீழ் இலைகளை நீட்டிலைகளுடன் சேர்த்துக் கட்டும் கட்டு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பெருட்ட மேல்கட்டு	பரிவட்ட மேல்கட்டு	பரிவட்டத்தின் நீட்டிலைகளின் மேல் முனையை பரிவட்டக் காம்புடன் சேர்த்துக் கட்டும் கட்டு.
பெருட்ட அண்ணா கவுறுகட்டு	பரிவட்ட அரைஞாண் கயிறு கட்டு.	பருவட்டத்தில் கட்டப்படும் கீழ்க்கட்டு.
பெருட்ட சுத்து கம்பி	பரிவட்டச் சுற்றுக்கம்பி	பரிவட்டத்தில் கயிற்றுக்குப் பதில் கம்பி சுற்றுதல்.
பெருட்டம் கட்றவர்	பரிவட்டம் கட்டுபவர்	புதிய பரிவட்டம் கட்டுபவர்: பழுதுட்ட பரிவட்டத்தைச் செம்மை செய்பவர்.
பேரக்காரர்	பேரக்காரர்	தறி கொடுத்து வாங்கி ஆடை விற்பனை செய்பவர்.
பொம்பரம்	பம்பரம் 	திருகுக் குச்சி
பொம்பர கட்ட	பம்பரக் கட்டை	
பொம்ம கட்ட	பொம்மைக் கட்டை	இராட்டினத்தில் ஊசி மாட்ட உதவும் துரப்பணக்கால்.
பொரயெடுத் தல்	புரையெடுத்தல்	பாவிலுள்ள குறைகளை நீக்கு தல்.
பொர வாட்டு	புரைவாட்டு	பாவில் சில இழைகளை விட்டு நாடா ஊடுருவிச் செல்லுதல்.
பொறுக்கு அளவு	பொறுக்கு அளவு	தத்து அளவு.
மடி ஒட்ற கம்பி	மடிஒட்டும் கம்பி	பாசறக் கம்பி.
மடிகோலு	மடிக்கோல்	நெய்யப்பட்ட ஆடைகளை மடிப்பதற்குரிய கோல்.
மர நாடா	மர நாடா	மரத்தால் செய்யப்பட்ட நூல் தறிக்குரிய நாடா.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
மலர அடித்தல்	மலரவடித்தல்	பாவை மென்மையாக்குதல் பொருட்டுத் தட்டுதல்.
மளிக	மளிகை	தனியாள் ஒருவர் நெசவாளர் களுக்கு நூலோ பட்டோ கொடுத்து நெய்து வாங்க வைத் துள்ள கடை.
மாதறாங் கால் / மாதறாண	மாதறிக்கால்	தறிக்கு முன்னால் எதிரில் நடப் பட்டுள்ள நீண்ட கொம்பு. இதில் வலிக்கயிறு சுற்றி வரும்,
மால் சரடு	மால்சரடு	தார் திரிக்கும் இராட்டினத்தில் பயன்படுத்தும் கயிறு.
மின்தண்டு கம்பி| கோலு	முன் தண்டுக் கம்பி | கோல்	முன் தண்டுப் பகுதியில் அணி தெரிவதற்காகப் பயன் படுத்தப் படும் கம்பி | கோல்.
மொதலாளி	முதலாளி	கூலிநெசவு செய்பவர் நெசவாளி யைக் கூறும் கூற்று.
முந்துண்டு	முந்தண்டு	தறிக்கு முன்னால் பாவைத் தாங்கும் மரம்.
முந்துண்டு காலு	முந்தண்டுக் கால்	முந்தண்டைத் தாங்கும் கால்கள்.
முட்டு கொம்பு	முட்டுக் கொம்பு	மோக்குத்தடி,
மூங்க நாடா / முங்ங நாடா	மூங்கில் நாடா	மூங்கிலால் செய்யப்பட்ட பட்டுத்தறிக்குரிய நாடா.
மூட்டு கவுறு	மூட்டுக் கயிறு	பூட்டுக் கயிறு.
மூட்டெழ	மூட்டிழை	சீரிழை
மெரிஉழல் கோலு	மிதியுழல் கோல்	இரு மிதிக்கட்டைகளையும் இணைத்து இயங்க உதவும் இரும்பலான கோல்

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
மெரிகட்ட	மிதிக்கட்டை	கால்குழியில் புணிமாற்றுவதற்காக மிதிக்கப்படும் கட்டை.
மெரிகர்ண கோலு	மிதிக்கரணைக் கோல்	தறியில் பன்னைக்குக் கீழ் மிதிக் கட்டையை மிதிக்கும்தருணத்தில் புணி மாறி வரப் பயன்படுத்தப் படும் நீளத்தில் குறைந்த இரு கோல்கள்.
மெரிகட்லு	மிதிக்கட்டில்	மிதிக்கட்டையைத் தாங்கும் மரம்,
மெரிகட்லு காலு	மிதிக் கட்டில் கால்	மிதிக் கட்டையைத் தாங்கும் கால்கள்.
மெரிகுச்சி	மிதி முளைக்குச்சி	மிதிக் கட்டையில் உள்ள சிறு குச்சிகள்.
மெரிடி	மிதிக்கட்டை	மிதிக்கட்டை
மேத்தார	மேல்தரை	மேல்தறிக்காக நிலப் பகுதிக்கு மேல் நடுப் பகுதியில் பள்ளமாக வும் இரு பக்கமும் மேடாகவும் அமைக்கப்பட்ட தறிமேடை.
மேமரம்	மேல்மரம்	சீர்வண்டி தாங்கும் மரம்.
மேருபலக	மேரு பலகை	சீராடிச் சட்டம்.
மோக் கவுறு	முறுக்குக் கயிறு	ஊடுதியையும் இருப்பாணியை யும் இணைக்கும் கயிறு.
மோக்குதடி	முறுக்குத் தடி	முறுக்குக் கயிற்றை முறுக்க உதவும் தடி.
மோதர உண்டகட்ட	மோதிர உருண்டைக் கட்டை	கால் மோதிரம் அல்லது சிறு வளையல் கட்டப்பட்ட உருண் டைக் கட்டிக் கட்டை.
மோப்பு கவுறு	மோப்புக் கயிறு	முறுக்குக் கயிறு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
மோப்புதடி	மோப்புத் தடி	முறுக்குத்தடி
ராட்னம்	இராட்டினம்	நூல் நூற்க உதவும் கருவி.
வடும்பு	வடும்பு	மூங்கில் கழி (அ) கெடை.
வலிகவுறு	வலிக்கயிறு	இழை நீட்டிக் கட்டும் கரணைக் கோலில் கட்டப்பட்ட கயிறு, மாதறிக் காலைச் சுற்றி வந்து வலிமுளைக் கொம்பில் இழுத்துக் கட்டப்படும் கயிறு.
வாட்டு	வாட்டு	தறியில் பாவினிடையே ஒரு முறை நாடாவினைச் செலுத்துதல்.
விட்டம்	விட்டம்	அச்சமரத்தின் மேல் துண்டு.
வீது	விழுது	பன்னையிலும் அடைகளிலும் உள்ள கயிறு,
வெச கவுறு	விசைக் கயிறு	விசைமுள்ளைத் தாங்கிப் பிடிக்கும் கயிறு.
வெச குச்சி	விசைக் குச்சி	அம்புவுசை.
வெசதடி	விசைத்தடி	விசைமுள் கயிறுகள் கட்டப்பட்ட தடி.
வெச முள்ளு	விசைமுள்	தும்பு விசையில் பயன்படுத்தப்படும் முட்கள்.
வெட்டு	வாட்டு	வாட்டு
வெள்ளி கவுறு	வலிக் கயிறு	வலிக் கயிறு
வெள்ளி மல கொம்பு	வலிமுளைக் கொம்பு	வலிமுளைக் கொம்பு
வென்னிமல குச்சி	வலிமுளைக்குச்சி	வலிக்கயிற்றை இழுத்துக் கட்டப்படும் கொம்பு.
வென்னிமல கொம்பு	வலிமுளைக் கொம்பு	வலிமுளைக் கொம்பு

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
சொசைட்டி	சொசைட்டி (ஆ.)	பட்டு அல்லது நூல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.
நாடா ரிப்பேர்	நாடா ரிப்பேர் (த.+ஆ.)	நாடா பழுது பார்த்தல்
பிட்டு அடித்தல்	பிட்டடித்தல் (ஆ.+த.)	திண்டடித்தல்
பிட்டு அறுத்தல்	பிட்டறுத்தல் (ஆ.+த.)	திண்டறுத்தல்
பிளாஸ்டிக் நாடா	பிளாஸ்டிக் நாடா [ஆ.+த.]	நூல்தறியிலும் பட்டுத்தறியிலும் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் காலான நாடா.

4. கோரா ஆலைத் தொடர்பானவை

கோரா என்பது பட்டுப்பூச்சிக்கூட்டினின்றும் எடுக்கப் படும் இழை ஆகும். கோரா[1] என்னும் சொல் மராத்திய மொழியிலிருந்து வந்துள்ளது. இது நிறம் தோய்க்கப்படாத பட்டு ஆகும் இதனைப் பாவாக்குதலில் கைவடுக்கு, எந்திர வடுக்கு என்று இருமுறை உண்டு. பத்தாண்டுகளுக்கு முன்பு கைவடுக்கு அதிகமாக இருந்தது. இப்பொழுது கைவடுக்கே இல்லை என்று சொல்லும் அளவுக்கு எந்திர வடுக்கு அதிகமா யுள்ளது. கைவேலையால் கோராவைப் பாவாக்குதல் கைவடுக்கு' என்றும், மின் இயந்திரங்களின் உதவியால் கோராவைப் பாவாக்குதல் 'எந்திர வடுக்கு' என்றும் கூறுவர். வடுக்குதல் என்பது கோராவை ஆலையில் பாவாக்க ஏற்றி எடுத்தலைச் சொல்வதாம்.

கைவடுக்கு

பட்டாடை உற்பத்தியாளரிடமிருந்து கோராவினை ஆலை யில் ஓடுபவர்கள் வாங்கி வருவர். ஐந்நூறு கிராம் கொண்டது ஒரு தட (தடை) என்பர். ஆயிரம் கிராம் கொண்டது ஒரு

1. தமிழ்ப் பேரகராதி, தொ. 1 (மு. கா. நூ) ப. 1193.

கட்டு என்பர். ஒரு தடையில் ஏழு முதல் பத்து சிலுப்பைகள் இருக்கும். ஒவ்வொரு கிலுப்பையையும் இரு தாபரக் கட்டைக் குள் மாட்டி இழைகளைப் பரிவட்டத்தில் இழைப்பர். இழை களின் தடிப்புக்கேற்ப ஓரிழைக்கு இரு தாபரக் கட்டைகள் வீதம் தாபரக் கட்டைகளைப் பயன்படுத்திப் பரிவட்டத்தில் ஈரிழையாகவோ மூவிழையாகவோ இழைப்பர். பரிவட்டத்தில் இழைக்கப்பட்ட இழைகளை இராட்டினம் கொண்டு குழலில் சுற்றுவர். இதனைத் தார் என்பர். இத்தார்களைப் பக்கத்திற் குப் பதினாறு வீதம் இரு பக்கங்களுக்கும் சேர்த்து முப்பத்தி ரண்டு தார்கள் வைத்து 'நூற்கப்படும் கருவிக்கு 'டோலா' என்று பெயர். டோலாவில் ஈரிழைகளும் மூவிழைகளும் ஓரிழையாக முறுக்கேற்றப்படுகின்றன. டோலாவில் சுற்றப் படும் நூலின் ஒரு பிரிவுக்குச் சடை என்று பெயர். மொத்தம் முப்பத்திரண்டு சடைகள் டோலாவில் சுற்றப்படுகின்றன.

டோல்[1] என்பது வங்கமொழிச் சொல். அச்சொல் ஊசலைக் குறிப்பதாகத் தமிழில் காணப்படுகிறது. டோலா என்று சொல்லக்கூடிய இக்கருவியும் டோலா கால்களால் தாங்கப்பட்டு முன்னும் பின்னும் ஊசல் போல் நிலையாக ஓரிடத்தில் சுற்ற இயலுதலால் அப்பெயர் பெற்றது போலும்.

ஒருவரே பரிவட்டத்திலிருந்து தார் திரித்து டோலாவில் ஏற்றுதலுக்கு ஒரு தடைக்கு ஒரு நாள் ஆகும். தார் திரிப்பது ஒருவரும் டோலாவில் ஏற்றுவது ஒருவருமாக இருந்து நாள் முழுவதும் செயற்பட்டால் நாள் ஒன்றிற்கு இரு தடைகள் வீதம் வடுக்கப்படும். சப்புரி தடையாயின் இவ்வாறு செய்தலுடன் நிறுத்தப்படும். பாவு தடையாயின் இவ்வாறாகச் செய்தலுடன் டோலாவில் வடுக்கப்பட்ட இழைகளை இடம், வலம் என்று இரு பக்கங்களிலும் உள்ள சடைகளை நான்கு சடைகளுக்கு ஒரு பரிவட்டம் வீதம் பக்கத்திற்கு நான்காக எட்டுப் பரிவட்டங்களில் இழைப்பர்.

அவற்றைத் தனித்தனியே நான்காக வைத்து வேண்டிய நீளத்திற்குப் பாவாக ஆலையில் ஓட்டுவர் நான்கு நான்கு

---

1. தமிழ்ப்பேரகராதி. தொ. 3 [மு. கா. நூ.] ப. 1700. சீதாலட்சுமி. வே. ஊசல், சுப்பிரமணியன், ச. வே., (பதி) தமிழ் இலக்கியக் கொள்கை. 7, (சென்னை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், ஜூன் 1980) ப. 100.

இழைகளாக வருபவை ஏழு இடங்களில் அணிமாற்றம் செய்யப்படும் அணி மாறி வரும் இடம் பிணிப்பு உடையதாயிருக்கும். அதனையே, 'புணி' என்பர். இத்தொழில்களை மட்டும் செய்பவர் ஒரு சாரார். இவர்கள் இவ்வாறு வடுக்கிய கோராவினைத் தாங்கள் வாங்கி வந்தவரிடமே ஒப்படைப்பர்.

எந்திர வடுக்கு

எந்திர வடுக்கில் பயன்படுத்தப்படும் சொற்கள் பெரும்பாலும் பிறமொழிச் [ஆங்கிலம்] சொற்களாக உள்ளன. எனவே இவற்றின் விளக்கத்தில் எழுத்து வழக்கு, பேச்சு வழக்கு என்று தனித்தனியே கூறாமல் இத்தொழிலில் வழங்கும் சொற்களும் அவற்றின் பொருளும் கூறப்பட்டுள்ளன.

இனி, கோரா ஆலைத் தொடர்பான சொற்களின் பொருள் விளக்கம் காணலாம்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
(அ) கைவடுக்கு		
அணி	அணி	பாவில் இழைகள் பொருந்தி வருமிடம்; புணியுள்ள இடம்.
அணிகவுறு	அணிக்கயிறு	அணியில் கட்டப்பட்டுள்ள கயிறு.
ஆல ஒடுதல்	ஆலை ஒடுதல்	ஆலையை இயக்குதல்
ஆல காலு	ஆலைக்கால்	ஆலையைத் தாங்கும் கால்கள்.
ஆல கைப் புடி	ஆலைக் கைப் பிடி	ஆலையைச் சுழற்ற உதவும் கைப்பிடி
ஆலயில ஏத்துதல்	ஆலையில் ஏற்றுதல்	பரிவட்டங்களில் சுற்றப்பட்ட கோராவை ஆலையில் ஏற்றுதல்/ சுற்றுதல்.
ஈரெழ	ஈரிழை	இரண்டு இழைகளை ஓரிழையாக்குதல்.
உண்ட தட	ஊடைத்தடை	ஊடை இழை, - குறுக்கிழைகளின் தொகுப்பு. டோலா அளவில் வடுக்கப்படும் தடை

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
ஒண்டி பிரிச்சலு	ஒண்டி பிரிச்சல்	இரண்டு இழைகளும் ஒன்றி வாராமை.
கசறா	கசறா	கோராவில் கசடு அறாம லிருத்தல்; இழைகளின் இடையே தடிப்புடன் பிசிருடன் காணப் படுவது.
கசறா	கசறா எடுத்தல்	கோராவினின்று கசறாவினை நீக்குதல்.
கட்டு	கட்டு	இரு தடைகள் சேர்ந்தது; 1000 கிராம் அளவு கொண்ட கோரா.
கருதலா புணி	கருதலாப் புணி	ஆலையில் தலாவைத் திருப்பித் தள்ளும் இடம்; இங்கு இழைகள் மொத்தமாக விழும்.
கைவடுக்கு	கைவடுக்கு	பட்டுப்பாவு உருவாக்கும் முறையுள் ஒன்று. கைவேலை யால் பாவினை உருவாக்குதல்.
கோண கம்பி கோணா விட்டக் கம்பி	கோணா வட்டக் கம்பி.	புணிக்கம்பி.
கோரா	கோரா	பட்டுக்குச் சாயம் போடும் முன் வழங்கப்படும் பெயர்; பட்டுப் பூச்சிக் கூட்டினின்றும் எடுத்த இழை; வெளிறிய மஞ்சள் நிறமுடையது.
கோரா ஆல	கோரா ஆலை	கோராவினைப் பாவாக்கு தலுக்கு உரிய கருவி.
கோரா எழைத்தல்	கோரா இழைத் தல்	கோரா சிலுப்பையை இரு தாபரக் கட்டைக்குள் போட்டு பரிவட்டத்தில் சுற்றுதல்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கோரா பெருட்டம்	கோரா பரிவட்டம்	இஃது ஆறிலைகள் உடையது. பட்டுப் பரிவட்டத்தைவிடச் சிறிது தடித்த மூங்கில் பத்தைகளை உடையது.
கோரா முறுக் கேர்ன நூத்து	கோரா முறுக்கேறிய நூற்று	சாயம் போடுவதற்குத் தயார் செய்யப்பட்ட நிலையில் முறுக் கேற்றப்பட்ட கோரா.
சப்புரி	சப்புரி	பாவுக்குள் ஊடுருவிச் செல்லும் இழைகள்.
சப்புரி கோரா	சப்புரிக் கோரா	ஊடை ரகம்.
சப்புரி தட சாத்து பிள்ள	சப்புரித் தடை சாத்துப்பிள்ளை	ஊடிழைகளின் தொகுப்பு டோலா ஊசி சொருகப்படும் இரு மரச் சட்டங்கள்; ஒன்றில் பதினாறு துளைகள் இருக்கும்.
சாத்து பிள்ள காது	சாத்துப் பிள்ளைக் காது.	சாத்துப் பிள்ளை, சாத்துப் பிள்ளைக் காலில் பொருத்து வதற்குரிய துளை.
சாத்து பிள்ள காலு	சாத்துப் பிள்ளைக் கால்	சாத்துப் பிள்ளையைத் தாங்கி யுள்ள இரு மரக் கால்கள்.
சிலுப்ப	சிலுப்பை	தடையில் ஒரு பிரிவு.
டோலா	டோலா	கோரா தார்களில் இருந்து வரும் இழை முறுக்கேற்றப்பட சுற்றப் படும் கருவி.
டோலா ஊசி	டோலா ஊசி	இரு பக்கமும் தார் சொருகும் வண்ணம் கூர்மையுடைய ஊசி.
டோலா கவுறு	டோலாக் கயிறு	டோலாவையும் டோலா இராட்டினத்தையும்இணைக்கும் கயிறு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
டோலா காலு	டோலாக் கால்	டோலாவைத் தாங்கும் இரு மரக்கால்கள்.
டோலா சட்டம்	டோலாச் சட்டம்	டோலாவில் உள்ள எட்டு மரச் சட்டங்கள்.
டோலா தண்டு	டோலாத்தண்டு	டோலாச் சட்டங்களை இணைக்கும் டோலாவின் மத்தியிலுள்ள பெரிய கட்டை.
டோலா மால்சரடு	டோலா மால் சரடு	டோலாவின் பதினாறு ஊசியினின்றும் செல்லும் பதினாறு கயிறுகள்.
டோலா ராட்னம்	டோலா இராட்டினம்	டோலாவைச் சுற்றுவதற்கென்றுள்ள தனியமைப்புடைய இராட்டினம்.
டோலா ராட்ன காலு	டோலா இராட்டினக் கால்	டோலா இராட்டினத்தைத் தாங்கும் கால்கள்.
டோலா ராட்ன சக்கரம்	டோலா இராட்டினச் சக்கரம்	டோலா இராட்டினத்தில் உள்ள சக்கரம்.
டோலா ராட்ன சொழட்டி	டோலா இராட்டினச் சுழற்றி	டோலா இராட்டினத்தைச் சுழற்றும் கைப்பிடி.
டோலா வளயல் சட்டம்	டோலா வளையல்சட்டம்	டோலாவின் கீழ் உள்ள முப்பத்திரண்டு வளையல்கள் கட்டப்பட்ட மரச்சட்டம்.
தட	தடை	ஐந்நூறுகிராம் அளவு கொண்ட கோரா.
தலாபுணி	தலைப்புப் புணி தலாப்புணி	புணி ஆரம்பமாகும் இடம்

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
தார் வளயல் சட்டம்	தார் வளையல் சட்டம்	தார்களுக்குப் பக்கத்தில் பக்கத்திற்குப் பதினாறு வளையல்கள் கட்டப்பட்ட இரு மரச் சட்டங்கள்
பாவு தட	பாவுத் தடை	பாவுக்குரிய இழைகளின் தொகுப்பு.
புணி கூண்டு	புணிக்கூண்டு	ஆலையில் இழைகள் அணியாக விழச் செய்யவுள்ள கூண்டு.
புள்ளயார் மண	பிள்ளையார் மணை	சாத்துப் பிள்ளைகள் இரண்டும் பின்னால் நகராமல் இருப்பதற்குத் தடுப்பாகப் புதைக்கப் பட்டுள்ள சிறுமரத்துண்டு.
பெருட்டம் ஸ்டேண்டு	பரிவட்டம் தாங்கி	வரிசைக்கு நான்காக எட்டுப் பரிவட்டங்களைத் தாங்கும் இரு தாங்கிகள்.
மூவெழ	மூவிழை	மூன்று இழைகளை ஓரிழையாக்குதல்.
ரெட்டெழைத்தல்	இரட்டையாக இழைத்தல்.	ஈரிழையாக இழைத்தல்.
வடுக்குதல்	வடுக்குதல்	ஆலையில் கோராவினை ஏற்றி எடுத்தலைக் கூறுவது.


[ஆ] எந்திர வடுக்கு

அணி விழும் சட்டம் — டோலா சட்டம்


அப்பு கட்டை (Hub) இது மரத்தாலும் பைபரினாலும் செய்யப்பட்டது; 2. 1'' அகலமும் 3. 3'' நீளமும் உடையது. இதன் மேல் 4 ஸ்பிரிங்கு, டப்பா (Tube) வின் பிடிப்புக்காக உள்ளது.

ஆலை — பாவு இழை ஓடுவதற்குரிய கருவி.

பேச்சு வழக்கு எழுத்து வழக்கு		பொருள்
ஆலையில் ஏற்றுதல் (Warp)	—	முறுக்கேற்றப்பட்ட டப்பாக்களில் உள்ள இழைகளை ஆலையில் 4200 இழைகள் உள்ளவாறு ஏற்றுதல். எடுத்துக்காட்டாக 60 டப்பாக்களிலிருந்து நூலேற்றினால் 70 சுற்று சுற்றப்படும். டப்பாக்களின் எண்ணிக்கை ஆலையின் தன்மைக்கேற்ப வைத்து அதற்கேற்ற சுற்று சுற்றி 4200 இழைகள் உள்ளவாறு செய்தல்.
ஈரிழையாக்குதல் (Doubling)	—	இரண்டு இழைகளை ஒன்றாக்குதல்.
கட்டு	—	டோக்
கதிர் - டப்ளிங் (Doubling)		ஈரிழையாக்குவதற்குரிய ஊசி.
- டுவிஸ்டிங் (Twisting)	—	முறுக்கேற்றுவதற்குரிய ஊசி.
- வைண்டிங் (Winding)	—	இழை இழைப்பதற்குரிய ஊசி: இம்மூன்று ஊசிகளிலும் பாபின் (Bobbin) சொருகப்படுகிறது.
காலிபாபின்	—	இழை இல்லாத வெறுமையான சக்கரம்.
கீர் பல் சக்கரம்	—	எந்திரங்களுக்கேற்ப பலவகை சக்கரங்கள் உண்டு.
ட்யூப்	—	டப்பா துத்தநாகத் தகட்டாலோ அலுமினியத் தகட்டாலோ ஆனது. ஆலையில் இழைகள் ஏற்றுவதன் பொருட்டு டப்பாவை அவிப்பதற்கு எளிதாக அலுமினியத் தகட்டில் துளைகளும் உள்ளன.



டோலா பக்க். 282



பொரப்பாவு ஆலை பக். 292

டப்பாவில் ஏற்றுதல் — முறுக்கேற்றப்பட்ட இழைகள் டப்பாவில் சுற்றப்படுதல்.

டப்ளிங் ஊக்கு — ஈரிழைகளை ஓரிழையாக்கலில் இடையில் பயன்படுத்தப்படும் பீங்கானால் ஆன கருவி.

டப்பா ஸ்டேண்டு — ஆலையில் பாவு ஏற்ற டப்பாக்கள் வைப்பதற்குரிய அமைப்பு.

டுவிஸ்டிங் ஊக்கு — முறுக்கேற்றப்படும் இழைகள் டப்பாவில் சுற்றப்படுதலுக்கு இடையில் பயன்படுத்தப்படும் இரும்பாலான கம்பிக்கருவி.

டோக் — 5 சப்புரி சிலுப்பைகள் கொண்டது.

டோலாவில் ஏற்றுதல் (Reeling) — 40 முதல் 120 கஜம் நீளம் சப்புரி ஓடுதல்.

பாபின் — லடியிலிருந்து கோராவை இழைப்பதற்குரிய கருவி.

பாபின் கதிர் — வைண்டிங் கதிர்

பிரேக் கம்பி — பிராக்கட்டில் உள்ள கம்பி.

பிராக்கட் — இழைகள் சீராகச் செல்லப் பயன்படுத்தும்இரும்பு ஆதாரம்.

பெல்ட் பட்டை — இயந்திரங்கள் சுழல உதவும் பட்டை.

மிஷின் வடுக்கு — மின் இயந்திரங்களின் மூலம் கோராவை பாவாகவோ சப்புரியாகவோ உருவாக்குதல்.

முறுக்கேற்றல் (Twisting) — இரட்டிப்பு இழையை ஓரிழையாக முறுக்கேற்றுதல்.

மோட்டார் — மின் இயந்திரம்.

ரோலர் — டப்பாவைச் சுழல வைக்கும நீண்ட இரும்புக் கம்பி.

ஜாக்புள்ளி — பெல்ட் பட்டை அசையாமல் இருக்க ஒழுங்குபடுத்தும் இரும்புக் கருவி.

5. நூல் ஆலைத் தொடர்பானவை

நூல் ஆலை நீட்டுப்பாவு ஆலை, பொரப்பாவு ஆலை என இருவகையாக உள்ளது. பொரப்பாவு ஆலையில் சிறிய ஆலை, பெரிய ஆலை என இருவகை உண்டு.

பொரப்பாவு ஆலை

நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அல்லது நூலாடை உற்பத்தியாளரிடமிருந்து நூலை ஆலைக்காரர் வாங்கி வருவார். இவர் நூலை டப்பாக்களிலோ பரிவட்டங்களிலோ இழைக்க நூல் இழைப்பவர்களிடம் கொடுத்து இழைத்து வாங்குவார். டப்பாக்களிலோ பரிவட்டத்திலோ சுற்றப்பட்ட நூலின் ஒரு பிரிவிற்குப் 'புரு' என்று பெயர். ஒரு பரிவட்டத்தில் ஒரு பொந்து நூல் சுற்றப்படும். 30 பரிவட்டங்கள் அல்லது 30 டப்பாக்களில் உள்ள நூல் ஆலையில் ஏற்றப்படும்.

டப்பாக்களிலிருந்து ஆலையில் நூலேற்ற படல் தேவையில்லை. அவை வரிசையாகத் தரையிலேயே வைக்கப்படும். பரிவட்டங்களிலிருந்து ஆலையில் நூலேற்ற பத்துப் பரிவட்டங்களுக்கு ஒரு படல் முறையில் மூன்று படல்கள் தேவை. ஒரு படலில் பத்துத் துளைகள் இருக்கும். இவற்றில் பரிவட்டக் காம்பு சொருகி வைக்கப்படும். பரிவட்டங்களினின்று செல்லும் இழைகள் வளையல் சட்டங்களில் உள்ள வளையல்கள் மூலம் செலுத்தித் தொகுக்கப்பட்டு முப்பது இழைகளும் ஒரு வரிசையாக ஆலையில் உள்ள நாகபாசத்தின் வழியாக ஆலையில் ஏற்றப்படும். இவ்வகை ஆலையில் 16மீ. நீளமுள்ள பாவு ஓடப்படும். 30 பொந்து நூல் ஆலையில் ஏற்றப்பட்டதை ஒரு

பொட்டி ஓடியாயிற்று என்பர். இம்முறையில் நாள் ஒன்றிற்கு 5 பொட்டி (15 பாவு = 150 பொந்து) நூல் ஓடலாம் என்பர்.

பொரப்பாவு ஆலையில், பெரிய ஆலைக்குக் குழி உண்டு. சிறிய ஆலைக்குக் குழி தேவையில்லை. இதன் பெரிய ஆலையில் கீழ்த்தலாச்சட்டம், மேல்தலாச் சட்டம் என இரு தலாச்சட்டங்கள் இரண்டு போக புணிச்சட்டங்கள் பதினெட்டு உண்டு. தலாச் சட்டங்கள் கொழ (குழை) சட்டம் என்றும் சொல்லப் படுவதுண்டு. பக்கக் கம்பிகள் ஒரு பக்கத்திற்கு 20ஆக இரு பக்கத்திற்கும் 40 கம்பிகளும் குறுக்குக் கம்பிகள் 8 ஆக மொத்தம் இழுப்புக் கம்பிகள் 48 இருக்கும். இவ்வாலை 5 அடி ஆழமும் 10 அடி நீளமும் 6 அடி அகலமும் உடையது. இதன் குழியில் 2 தடுப்புப் பள்ளங்கள், ஏற இறங்குவதற்காக உள்ளன. சிறிய ஆலையில் தலாச் சட்டங்கள் இரண்டும் புணி அல்லது அணிச்சட்டங்கள் எட்டும் இருக்கும். ஒரு தலாச் சட்டத்தில் முப்பது பெரிய கம்பிகளும் முப்பது சிறிய கம்பிகளும் ஆக மொத்தம் அறுபது கம்பிகள் பொருத்தப் பட்டிருக்கும். சிறிய கம்பிகளில் இழை மடங்கி வரும். பெரிய ஆலையின் தலாச் சட்டத்தில் முப்பது பெரிய கம்பிகள் மட்டும் உண்டு. பெரும் பாலும் பொரப்பாவு ஆலையை ஓட்ட ஒருவர் போதும்; இருவர் இருப்பின் ஒருவர் ஆலையை ஓட்டவும் இன்னொருவர் இழை அறுந்த நணத்தில் அதனை எடுத்துப் பிணைக்கவும் ஆக வேலை எளிது என்பர்.

நீட்டுப்பாவு ஆலை

நீட்டுப்பாவு ஆலையில் பாவு ஓட இருவர் தேவைப் படுகின்றனர். ஒருவர் ஆலையைச் சுழற்றுகின்றவர். இன்னொருவர் ஆலையின் முன் நின்று புணி மாற்றுபவர். இவரே ஆலைக்கு உரிமையாளராவர். ஆலையைச் சுழற்று கின்றவர் கூலியாளாகவும் இருப்பர். இப்பாவு ஆலைக்குக் குழி தேவையில்லை. இதில் 40 பரிவட்டங்களிலிருந்தோ டப்பாக்களில் இருந்தோ இழைகள் வளையல் சட்டங்கள் மூலம் ஆலைக் கூண்டினுள் உள்ள அறுபத்து நான்கு ஆசு கண்ணுகள் வழியாக ஆலையில் ஏற்றப்படுகின்றன. இதில் எட்டு அல்லது பத்து ஆலைச் சட்டங்கள் உள்ளன. ஆலைக் கூண்டு முன்பின் சென்று வரும் பகுதி ஆலைத் தண்டவாளம் எனப்படும். இதில் 100 மீட்டர் முதல் 110 மீட்டர் வரை நூல் ஓடப்படுகிறது என்பர்.

இனி, நூல் ஆலைத் தொடர்பான சொற்களின் பொருள் விளக்கம் காணலாம்.

பேச்சுவழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
அடையாள துணி சுத்து	அடையாளத் துணிச் சுற்று	ஆலையின் மேல் பக்கத்தில்3ஆம் சட்டத்திலும் கீழ்ப் பக்கத்தில் 2 ஆம் சட்டத்திலும் தலா மாற்றுவதற்கு அடையளத் துணிசுற்றப் பட்டிருத்தல்.
அரதல	அரைத்தலா	கருதலா.
ஆசு	ஆசு	ஆலைக்கூண்டு, தடுக்கை.
ஆசுகண்ணு	ஆசுக்கண்	ஆசுக்கூண்டில் உள்ள சந்துகள்.
ஆப்பு	ஆப்பு	ஆலையில் உள்ள உறுப்புகளில் ஒன்று.
ஆல ஏர்க்காலு	ஆலை ஏர்க்கால்	ஆலைக் கூண்டு முன்பின் சென்று வரும் மரச்சட்டம்.
ஆல ஓட்றவர்	ஆலை ஓட்டுபவர்	ஆலையைச் சுழற்றுகின்றவர்.
ஆலஓடுபவர்	ஆலை ஓடுபவர்	ஆலையின் முன்நின்று புணி மாற்றிக் கொண்டிருப்பவர். ஆலைக்கு உரியவர்,
ஆலகுழி	ஆலைக்குழி	பொரப்பாவில் பெரிய ஆலைக் குரிய குழி.
ஆலகொடம்	ஆலைக்குடம்	ஆலையின் மத்தியிலும் இரு கோடியிலும் ஆக உள்ள மூன்று குடங்கள்.
ஆல சட்டம்	ஆலைச்சட்டம்	நீட்டுப்பாவு ஆலையிலுள்ள சட்டம்.
ஆல சுத்துபவர்	ஆலை சுற்றுபவர்	ஆலை ஓட்டுபவர்.
ஆல தண்டவாளம்	ஆலைத் தண்டவாளம்	ஆலை ஏர்க்கால்.
ஆலபடுதா	ஆலைப்படுதா	ஆலைக்கூண்டு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
ஆலமுள்ளு	ஆலைமுள்	நீட்டுப்பாவு ஆலைச் சட்டத்தில் பொருத்தப் பட்டுள்ள கம்பிகள்.
இடுப்பால தள்ளு	இடுப்பால் தள்ளு	ஆலையின் தலாச் சட்டத்தின் கீழ்ப்பாகத்தை இடுப்பால் தள்ளுதல்.
இர்சு	இருசு	ஆலையின் நடுமையத்திலுள்ள இரும்புச் சட்டம்.
இரும்பு சட்டம்	இரும்புச் சட்டம்	ஆலையில் உள்ள இருசு.
இழுப்பு கம்பி	இழுப்புக்கம்பி	ஆலையில் உள்ள பக்கக் கம்பி களும் குறுக்குக் கம்பிகளும் இழுப்புக் கம் பிகளாம்.
எணப்பு கயிறு	இணைப்புக் கயிறு	மேல் தலாவையும் கீழ்த் தலாவையும் இணைக்கும் இணைப்புக் கயிறு.
எழ அறந்து போச்சு	இழை அறுந்து போயிற்று	இழை மென்மையாக இருத் தலாலோ விரைவாகச் சுற்று தலாலோ அறுதல்.
எழகட்டி ஏத்தல்	இழை கட்டி யேற்றல்	ஆலையில் இழைகளை ஏற்றும் பொழுது இடையில் அறுபட்ட இழைகளைப் பிணைத்து அல்லது நெருடி ஏற்றுதல்.
எழ கத்திர்ச்சி போதல்	இழை கத்தரித்துப் போதல்	இழைகள் துண்டித்து விடுதல். தலா சரியாக மாற்றாமை யினால் நேரிடுவது.
எழ நெகிழ்ச் சியாதல்	இழை நெகிழ்ச் சியாதல்	இழை தளர்த்தியாகச் சுற்று தலினால் நேரிடுவது.
எழ பார்த்து கட்றவர்	இழை பார்த்து கட்டுபவர்	ஆலை ஓடுபவர்

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
எழவிழுந்து போதல்	இழை விழுந்து போதல்	இழை சரியாக நெருடாமை யினால் விட்டுப் போதல்.
எழய கறந்து விடுதல்	இழையைக் கறந்து விடுதல்	தலா இழை அறுந்த போதும் பாவு ஓடி முடிந்த பிறகும் இழையைப் பிணைத்துவிட்ட பிறகு எஞ்சிய இழையைக் கறந்து விடுதல்.
எழய கோரு	இழையைக் கோத்தல்	ஆலைக் கூண்டுக்குள்/ வளையலுக்குள்/ நாகபாசத்துக் குள் இழையைக் கோத்தல்
கட்ட செவுரு	கட்டைச் சுவர்	ஆலையின் இருசுப் பகுதியைத் தாங்க சிறிதளவு உயரம் கட்டப் பட்ட சுவர்.
கம்பி சட்டம்	கம்பிச் சட்டம்	புணிச் சட்டம்.
கருதலா	கருதலா	ஆலையில் தலாவைத் திருப்பித் தள்ளும் இடம்.
கிள்ளி கட்டுதல்	கிள்ளிக் கட்டுதல்	ஆலையில் இழை ஒரே சீராக வருவதற்கு அறுந்து போன இழைகளைக் கிள்ளிக் கட்டுதல்.
கீழ்தலா	கீழ்த்தலா	பாவின் முடிவு. இணைப்புக் கயிற்றின் மேல்பக்கத்தில் உள்ளது.
கீழ்தலா சட்டம்	கீழ்த்தலாச் சட்டம்	மேல் பக்கத்தில் உள்ள சட்டத் தைக் கீழ்த்தள்ளுதலால் கீழ்த் தலாச்சட்டமாதல்.
குத்துகாலு	குத்துக்கால்	நாகபாசத்தைத் தாங்கும் மரக்கால்கள்.
குறுக்குகம்பி	குறுக்குக் கம்பி	இழுப்புக் கம்பியில் உள்ள எட்டுக்குறுக்குக் கம்பிகள்.
கூண்டு	கூண்டு	நீட்டுப்பாவு ஆலையில் இழை களைக் கோத்துப் புணியாக்கி விடும் பகுதிக்குரிய பெயர்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கைப்புடி	கைப்பிடி	ஆலையை இயக்க உதவுவது.
கையால தள்ளு	கையால் தள்ளு	தலாச் சட்டத்தின் மேல் பாகத்தைக் கையால் தள்ளுதல்.
கொத்து பாவு	கொத்துப்பாவு	ஆலையில் ஓடிய பாவு.
கொழ	குழை	ஆலையில் இழையை நுழைக்கும் பகுதி.
சிக்காபூட்து	சிக்காதல்	இழைகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து சரியாக இல்லாமை.
சோத்துகை பக்கம்	சோற்றுக் கைப்பக்கம்	வலக்கைப் பக்கம்; ஆலையை முதல்முறை சுற்றும் பக்கம்.
தடுக்கை	தடுக்கை	ஆலைக்கூண்டு.
தடுப் பள்ளம்	தடுப்புப் பள்ளம்	ஆலைக்குழியில் இறங்கவும் ஏறவும் உதவ அமைக்கப்படும் பள்ளம்.
தலா கம்பி	தலாக் கம்பி	பொரப்பாவு ஆலையில் தலாச் சட்டத்தில் உள்ள இரு நீண்ட கம்பிகள்.
தலா சட்டம்	தலாச் சட்டம்	தலாக் கம்பியுள்ள இரு சட்டங்கள்.
தலா சட்டம் தள்ளு.	தலாச்சட்டம் தள்ளு.	தலாச்சட்டத்தை நகர்த்துதல்
தலா திருப்பு	தலா திருப்பு	புணியைத் திருப்புதல்.
தலா மாத்து	தலா மாற்று	புணியை மாற்றுதல்.
தலா மாத்ற கவுறு	தலா மாற்றும் கயிறு	புணிக்கயிறு.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
தலா மாத்ற சட்டம்	தலா மாற்றும் சட்டம்	கீழ்த்தலா சட்டம். புணி மாற்ற அவசியமானது.
தலாவ முறிச்சி தள்ளு	தலாவை முறித்துத் தள்ளு.	தலாவைத் திருப்பித் தள்ளு
தொடப்ப சுப்புலு	துடைப்பச் சுப்பல்	ஆலை ஓடுபவர்கள் இழைகளைப் பிரித்தெடுக்கக் காதில் எப்பொழுதும் சொருகியிருக்கும் துடைப்பக் குச்சி.
தொத்தெழ	தொற்றிழை	தொற்றி வரும் இழை.
நடுமையம்	நடுமையம்	இருசு உள்ள பகுதி.
நாகபாசம்	நாகபாசம்	கயிலி ஆலையில் முப்பது இழைகள் செல்லும் பகுதி.
நாகபாச கம்பி	நாக பாசக்கம்பி	நாக பாசத்திலுள்ள கம்பிகள்.
நீட்டு ஆலபள்ளம்	நீட்டு ஆலைப் பள்ளம்	எட்டு ஆலைச் சட்டங்கள் உடையனவற்றிற்குப் பள்ளம் கிடையாது; பத்து ஆலைச் சட்டங்கள் உடையனவற்றிற்கு எட்டு விரற்கிடை ஆழம் பள்ளம் உண்டு.
நீட்டு பாவு ஆல	நீட்டுப்பாவு ஆலை	நூல் சேலை, வேட்டி ஆகியன நெசவு செய்வதற்குரிய பாவு ஓடும் ஆலை.
பக்க கம்பி	பக்கக் கம்பி	இழுப்புக் கம்பியில் ஒரு பக்கத்திற்கு இருபதாக இருபக்கத்திற்குமுள்ள நாற்பது கம்பிகள்.
பக்க சட்டம்	பக்கச் சட்டம்	ஆலையில் பக்கச் சட்டங்கள் பக்கத்திற்கு இருபதாக இருபக்கத்திற்கும் உள்ள நாற்பது, ஐந்தடி நீளமுள்ள சட்டங்கள்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
படல் கட்ட	படல் கட்டை	படலைத் தாங்கும் கட்டைகள்.
பாவு ஓடுதல்	பாவு ஓடுதல்	ஆலையில் பாவு இழைகளை ஓட்டுதல்.
பீசகை பக்கம்	பீசக்கைப்பக்கம்	இடக்கைப்பக்கம். ஆலையை இரண்டாம் முறையாகச்சுற்றும் பக்கம்.
புணி ஆணி	புணி ஆணி	புணி விழுவதற்குப் புணிச் சட்டங்களுள் உள்ள ஆணி.
புணி கவுறு	புணிக்கயிறு	புணி தெரிவதற்காகப் பயன் படுத்தும் கயிறு.
புணிசட்டம்	புணிச் சட்டம்	புணி ஆணி உடைய பதினெட்டுச் சட்டங்கள்.
புணி மாத்துதல்	புணி மாற்றுதல்	தலாவை மாற்றுதல்.
புணி கழட்டுதல்	புணியைக் கழற்றுதல்	ஆலையில் பாவு ஓடிய பிறகு புணிகளிலிருந்து இழைகளைக் கழற்றுதல்.
பெருட்டம் படலு	பரிவட்டப் படல்	பரிவட்டம் சொருகுவதற்கென ஆலைக்கருகிலுள்ள துளைக ளுள்ள சட்டங்கள்.
பெல் சக்கரம்	பல் சக்கரம்	6 பற்கள் 20 பற்கள் எனச் சிறியது, பெரியது ஆக உள்ள இரு இரும்பாலான பல் சக்கரங்கள். கூண்டின் மறு பக்கத்திலிருப்பது,
பொட்டி	பொட்டி	30 பரிவட்டங்களில் உள்ள நூல்கள்.
பொண தலா	பிணை தலா	மேல்தலா; தலா ஆரம்பமாகும் இடம்; புணி பெரியதாயிருக்கும்
பொரப் பாவு ஆல	பொரப்பாவு ஆலை	கயிலி ஆலை

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
மடங்கில விழுந்து போதல்	மடங்கில் விழுந்து போதல்	தலாச் சட்டத்தில் மாற வேண்டிய கம்பியில் விழாமல் வேறு கம்பியில் இழை விழுதல்.
முட்டு கவுறு	முட்டுக் கயிறு	ஆலையில் பாவு கீழே விழாமல் இருக்கக் கட்டியுள்ள கயிறு.
முள்ளு சட்டம்	முள் சட்டம்	நீட்டுப்பாவு ஆலையில் கம்பிகள் முள்ளமைப்பில் உள்ள பத்துச் சட்டங்கள்.
மேல்தலா	மேல்தலா	இணைப்புக் கயிற்றின் கீழ்ப் பக்கத்தில் உள்ள புணி.
தேல்தலா சட்டம்	மேல்தலாச் சட்டம்	ஆலையில் கீழுள்ள சட்டத்தை மேல் தள்ளுதலால் மேல்தலாச் சட்டமாதல்.
வளயல்	வளையல்	ஆலையில் இழைகள் அடுத்தடுத்து வரிசையாகச் செல்லப் பயன்படுத்தும் சிறு வளையல்கள்.
வளயல் கொம்பு	வளையல் கொம்பு	வளையல்கள் கட்டப்பட்ட நான்கு கொம்புகள். முதல் கொம்பு 30 வளையல்கள் இரண்டாம் கொம்பு 30 வளையல்கள். மூன்றாம் கொம்பு 10 வளையல்கள். நான்காம் கொம்பு 10 வளையல்கள் ஆக எண்பது வளையல்கள் கட்டப்பட்ட கொம்புகள்.
வாரெழ	வாரிழை	அடையாள இழை.
வீசமுள்ளு	விசைமுள்	நாகபாசத்தில் உள்ள வளைந்த கம்பிகள்.
ஆல என்ஜின்	ஆலை என்ஜின் (த + ஆ.)	ஆலைக் கூண்டு

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
ஆலை செயின்	ஆலைச் செயின் (த+ஆ.)	ஆலைக் கூண்டு இயங்கப் பயன் படுத்தும் செயின், கயிறு இருந் தால் நீண்ட காலம் பயன்படுவ தில்லை.
கிளிப்	கிளிப் (ஆ)	பிடிப்பான்.
சைடு சட்டம்	சைடுச்சட்டம் (ஆ. + த.)	பக்கச் சட்டம்
பால் பேரிங்	பால் பேரிங் (ஆ.)	ஆலையில் இரும்பாலான பகுதி.

6. விசைத்தறித் தொடர்பானவை

விசைத்தறி மின்விசை மூலம் நெசவு செய்யப்படும் அமைப் பினை உடையது. இதில் நெசவு அதிக அழுத்தமாக இருக்கும். அஃதாவது ஓர் அங்குலத்தில் நாற்பது இழைகள் முதல் இரு நூற்று நாற்பது இழைகள் வரை அழுத்தி நெய்ய முடியும். இத்தறியில் குறைந்தது ஒரு முறையில் மூந்நூறு மீட்டர் முதல் ஐந்நூறு மீட்டர் நீளமுள்ள பாவு மாட்டி நெசவு செய்ய இயலும்.

இவ்வகைத்தறி இங்கிலாந்தில் உள்ள இலங்காஷயரில் முதன்முதலில் பதினெட்டாம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப் பட்டது. தமிழகத்தில் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்புதான் வந்தது என்பர்.

விசைத்தறியில் ஒரு பெட்டிப் பலகை, (Single box) பல பெட்டிப் பலகைகள் உள்ள வீழ்வைப் பெட்டிப் பலகை (drop box)என இருவகை உண்டு. ஒருபெட்டிப்பலகை உடைய தறியில் பெட்டிப் பலகை, தறியின் இடப்பக்கத்தில் இருக்கும். இங்கிருந்து நாடாபாவினிடையே செல்லும். இத்தறியமைப்பில்

நெய்யப்படும் ஆடை சவுத் அல்லது கோடு உடையதாயின் நாடா கையால் மாற்றிப் போடப்படும்.

வீழ்வைப் பெட்டிப் பலகை என்பது நாடா வந்து தங்கு குவற்கென பல பெட்டிப் பலகைகள் உடையது. நெய்யப்பட வேண்டிய ஊடிழைக்கேற்ப நாடா தானே மாறி மாறிச் செல்லும் அமைப்புடையது. நாடா மாறி மாறிச் செல்ல உதவும் கருவிக்குப் பட்டை அல்லது கார்டு (Cord) என்பது பெயர். இதனுள் இத்தனை இழைக்கு ஒரு முறை நாடா மாறிச் செலுத்தப்பட வேண்டும் என்பதற்குரிய துளைகள் செய்யப்பட்டிருக்கும்.

இத்தறியில், நூல் சுற்றப்பட்ட டப்பாவிலிருந்து பாவு உருளையில் நூல் சுற்றப்பட இடையில் பந்தல் என்ற அமைப்பு பயன்படுத்தப்படுகிறது. இதன் குழலும் நாடாவும் கைத்தறிக் குழல் நாடாவைக் காட்டிலும் இருமடங்கு பெரியனவாக இருக்கும். குழல் நீளமாக உள்ளதால் இழைகள் சரிந்து போகாமலிருக்க மற்ற தறிக் குழல்கள் போல் சமமாக வழவழப்பாக இல்லாமல் மேடும் பள்ளமும் உடையதாய் உள்ளது. இக்குழல் பாலகொம்பால் ஆனது. இதன் அச்சும் விழுதும் இரும்பாலானவை; சக்கரங்கள் இரும்பு வார்ப்படத் தாலானவை. இதில் சட்டை, கயிலி, வேட்டி ஆகிய இரகங்கள் நெய்ய இயலும்.

பெடல் தறி என்பது விசைத்தறி அமைப்புடையது, இதில் கைத்தறியை விட நெசவு அழுத்தமாகவும் விசைத்தறியை விடக் குறைவாகவும் இருக்கும். இவ்வகைத்தறி இந்தியச் சுதந்திரத்திற்குப் பின் இந்தியாவின் வட எல்லையில் உளள நேப்பாளத்தில் கண்டு பிடிக்கப்பட்டது என்பர்.

விசைத்தறி நெய்பவர்கள் எல்லாம் பெரும்பாலும் பிற மொழிச் சொற்களைத்தான் தம் வழக்காற்றில் அதிகம் பயன்படுத்துகின்றனர். இவ்வகைத் தறியமைப்பில் நெசவு செய்யும் முறை வெளிநாட்டிலிருந்து நம் நாட்டிற்கு வந்த புதிய வகையமைப்பு உடையதாதலால் தோன்றிய நாட்டில் வழங்கிய சொற்களே பெரும்பாலும் வழங்கப்படுகின்றன.

எனவே, இத்தலைப்பில் சொற்களின் எழுத்து வழக்கும் பேச்சு வழக்கும் தந்து பொருள் விளக்கம் கூறப்படாமல்

விசைத்தறி சார்ந்த சொற்களைத் தமிழ்மொழிச் சொற்கள், பிறமொழிச் சொற்கள் எனப் பிரித்துப் பொருள் விளக்கம் கூறப்படுகின்றன. அச்சொற்களின் பொருள் விளக்கம் இனிக் காண்போம்.

தமிழ் வழக்குச் சொற்கள்

இரும்பு அச்சு — பட்டுத்தறி, பொரப்பாவு நெய்ப வர்கள் தவிர மற்றவர்கள் சோளத்தட்டு அச்சுக்குப் பதில் பயன்படுத்தும் இரும்பாலான அச்சு.

இரும்பு விழுது — இரும்பு அச்சு பயன்படுத்தும் பன்னையில் இரும்பு விழுது (மெல்லிய இரும்புக் கம்பிகள்) பயன்படுத்தல்.

கைக்கட்டை — தறியின் இயக்கத்தை நிறுத்துவ தற்குப்பயன்படும் இரும்பாலான கைப்பிடி அமைப்பு.

கையடி — நாடாவைத் தடுத்துச்செலுத்தும் சிறிய மரத்துண்டு.

கையடிவார் — கையடியுடன் சேர்த்துக்கட்டப் படும் சிறிய தோள்பட்டை.

டப்பா — நூலிழைக்கப் பயன்படுத்தப் படும் தகட்டினாலான உருளை.

டப்பா ஊசி — நூல் இழைக்கப் பயன்படுத்தும் ஊசி. பள்ளை ஊசியை விடச் சற்று சிறியது.

துணி உருளை — நெசவு செய்யப்பட்ட துணி சுற்றிக் கொள்வதற்குரிய உருளை.

பட்டை — நெய்யப்பட வேண்டிய ஊடி ழைக்கேற்ப நாடா தானே மாறி மாறி இயங்கச் செய்ய உதவும் இரும்புப்பட்டை. இதனுள்

இத்தனை இழைக்கு ஒரு முறை நாடா மாறிச் செலுத்தப்பட வேண்டும் என்பதற்குரிய துளைகள் செய்யப்பட்டிருக்கும்.

பத்தல்	—	டப்பாவிலிருந்து இழைகள் பாவு உருளைக்கு மேற்புறமாக வரச் செய்துள்ள அமைப்பு.
பந்தல்கால்	—	கைக்காட்டி மரம்.
பம்பாய் விழுது	—	இரும்பு விழுது.
பாவு உருளை	—	நெசவு செய்யப்பட வேண்டிய பாவு சுற்றப்பட்ட உருளை.
முள்ளுருளை	—	துணி விரைப்பாகச் சென்று துணி உருளையில் சுற்றப் பயன்படும் முள்ளமைப்புடைய உருளை.
விசைத்தறி	—	மின்விசை மூலம் நெசவு செய்யப்படும் தறியமைப்பு. நெசவு அழுத்தம் உடைய தறி. செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில் பத்தாண்டு களுக்கு முன் புகுத்தப்பட்டது.
விசைத்தறிக்குழல்	—	விசைத்தறியில் பயன்படுத்தப் படும் குழல். கைத்தறியில் பயன் படுத்தும் குழலை விட இரு மடங்கு நீளமானது. குழலில் இழை சரியாமலிருக்கச் சரிவான மேடு பள்ளம் உடையதாயிருக் கும். இக் குழல் பாலகொம்பால் ஆனது.
விசைத்தறி நாடா	—	விசைத்தறியில் பயன்படுத்தப் படும் நாடா. கைத்தறி நாடாவை விட மிகப் பெரியது.

பிறமொழி வழக்குச் சொற்கள்

அச்சு ஸ்டேண்டு — பந்தலிலிருந்து நூல் பாவுஉருளை யில்சுற்றப்பட இடையில் அமைக்கப்பட்டுள்ள இரும்பச்சுஅமைப்பு.

ஈப் (Heap) — தார்

கார்டு (Cord) — பட்டை

சிங்கல் பாக்ஸ் [Single Box] — ஒரு பெட்டிப் பலகை உடைய விசைத்தறி.

சிலே மரம் (Slay) — அச்சுமரம்—தறித்தண்டவாளம்.

சைசிங் ஆலை — பாவு ஆலை.

சைடுவார் — பிக்கர் கம்பியில் கட்டப் பட்டுள்ள சிறிய தோல்பட்டை.

டப்பா மிஷின் — நான்கு குச்சிராட்டினத்திற்கு ஒருவராக இருந்து டப்பாவில் நூல் நூற்கப் பயன்படுத்தப் படும் மின் அமைப்பு.

டிராப் பாக்ஸ் (DroP box) வீழ்வைப் பெட்டி.
— பற்பெட்டிப் பலகை. — நாடா வந்து தங்குவதற்கென அமைந்த பல பெட்டிகள் அடங்கிய அமைப்பு.


டெம்ப்பர் — விசைமுள் அமைப்பு.

தார் ஸ்டேண்டு — விசைத்தறிக் குழலில் நூல் சுற்றப்படும் அமைப்பு.


பப்பர் (pepper) — பிக்கர் கட்டை உடையாம லிருக்க பெடலைத் தடுத்து நாடாவின் ஓட்ட வேகத்தை அதிகரிப்பது. தோல் அல்லது பிளாஸ்டிக்கால் ஆனது.

பள்ளை — நூல் இழைக்கப் பேல்தகட்டால் செய்யப்பட்ட பரிவட்டம்,

பள்ளை ஊசி	— பள்ளையில் நூல் சுற்றப் பயன் படுத்தும் ஊசி. தார் ஊசியை விடப் பெரியது.
பள்ளை இராட்டினம்	— நூல் இழைக்க உதவும் இராட்டினம்.
பள்ளை இராட்டினக் கயிறு	— பள்ளை இராட்டினத்தில் பள்ளையில் நூலிழைக்கப் பயன்படுத்தும் கயிறு.
பவர் லூம் (Power loom)	— விசைத்தறி
பாபின் ஸ்டேண்டு	— நூல் சக்கரத்தைத் தாங்கி நிற்பன. இந்த அமைப்பில் பந்தல் தேவையில்லை.
பாமிஷின்	— டப்பாவிலிருந்து நூல் உருளையில் சுற்றப்படும் அமைப்பு.
பால் சக்கர செட்டு	— விசைத்தறியில் உள்ள மிதியடி.
பாளை	— நூல் இழை போகும் வழி.
பிக்கர் கட்டை (Picker)	— பெட்டிப் பலகையினுள் பயன் படுத்தப்படும் தோல் கட்டை.
பிரேக் (ஆ)	— தறியை நிறுத்த உதவும் அமைப்பு.
பிளாஞ் (ஆ)	— பீமின் அண்டைச் சக்கரம்.
பீம் (ஆ)	— பாவு சுற்றப்படும் உருளை
பெடல்தறி (pedal loom)	— விசைத்தறி அமைப்புடையது. இதில் கைத்தறியை விட நெசவு சற்று அழுத்தம் அதிகமாகவும் விசைத் தறியை விடக் குறைவாகவும் இருக்கும்.
பெடல்தறி நாடா	— பெடல் தறியில் பயன்படுத்தப் படும் மர நாடா. கைத்தறி நாடாவை விடச் சற்றுபெரியது.



ஒரு பெட்டிப் பலகை (Single Box)



பலபெட்டிப் பலகை (Drop Box)

முள்ரோல்	— முள்ளுருளை
ரீடு (Reed)	— அச்சு
ரீடு மரம்	— அச்சு மரம்.
ரீடு வாங்கற ஊசி	— இரும்புப் பன்னையினுள் இழை நுழைத்து வாங்கப் பயன் படுத்தும் ஊசி.
ரீடு ஸ்டேண்டு	— அச்சு ஸ்டேண்டு.
ஷைனிங் ரோல் (Shining roll)	— முள்ளுருளைக்கும் துணி உருளைக்கும் இடையேயுள்ள சிறிய இரும்பு உருளை. மோட்டா ரகத் துணிகள் நெய்யப்படுவதில் சற்று அதிக விரைப்புடன் துணி உருளையில் சுற்றப் பயன்படுவது

இயல் - 5

நெசவுத்தொழில் சார்புடைய சொற்கள் – பொருள்வழிப் பாகுபாடு-2

நெசவுத்தொழில் சார்ந்த சொற்களுக்கு நான்காம் இயலில் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளன. அச்சொற்கள் யாவும் நெசவுத்தொழில் செய்பவரிடையே வழங்கப் படுவனவாம் நெசவுத்தொழில் செய்வதற்கு முந்தியனவாகவும் அத்தொழிலின் துணைத் தொழில்களாகவும் சில தொழில்கள் உள்ளன. அத்தொழில்கள் சார்ந்த சொற்கள் யாவும் அந்தந்த தொழில் வல்லுநரிடையே மட்டும் வழங்கப்படுவனவாம். எனவே, அத்தொழில்களைச் சார்ந்து தொகுக்கப்பட்ட சொற்கள் இவ்வைந்தாம் இயலில் தரப்படுகின்றன. அவை,

1. கோரா உற்பத்தித் தொடர்பானவை
2. சாயம் போடுதல் தொடர்பானவை
   (அ) பட்டுச்சாயம் (ஆ) நூல் சாயம்
3. அச்சுக் கட்டுதல் தொடர்பானவை
4. விழுது கட்டுதல் தொடர்பானவை
5. அடைகட்டுதல் தொடர்பானவை
6. தோய்ச்சடி அல்லது பாவடித் தொடர்பானவை
7. அளவைப் பெயர்கள்

ஆகிய ஏழு தலைப்புகளுள் பொருள் வழிப் பாகுபாட்டின் அடிப்படையில் பிரித்துப் பொருள் விளக்கம் காணப்படு கின்றன.

பட்டு நெசவுக்கு மூலகாரணமான பட்டிழை (கோரா) உற்பத்தித் தொடர்பான சொற்கள் இவ்வியலில் முதலில் விளக்கப்படுகின்றன.

1. கோரா உற்பத்தித் தொடர்பானவை

கோரா என்பது பட்டுப் பூச்சிக் கூட்டினின்றும் எடுக்கப் பட்ட இழை பட்டுப்பூச்சிகளை வளர்ப்பதற்குரிய போதுமான தட்ப வெட்ப நிலை செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டம் பெற்றில்லையாயினும் பட்டிழை உற்பத்தியினைப் பெருக்குவான் வேண்டி காஞ்சிபுரத்திலுள்ள பட்டுப்பூச்சி வளர்ப்புத்திட்ட அலுவலர்களின் முயற்சியால் காஞ்சிபுரம் வட்டத்திலும் அதற்கு அண்மையிலுள்ள வட்டங்களிலும் பட்டுப்பூச்சி வளர்க்கப்படுகிறது.

பட்டுப்புழுவிற்கு உணவாக இடவேண்டிய முசுக்கட்டைத் தழையைப் பயிரிட்டு நாளும் அதனைப் பறித்து வர வேண்டுமாதலால் சொந்தமாக நிலம் வைத்துக் கொண்டு பயிரிடும் விவசாயிகளாலேயே பட்டுப்பூச்சி வளர்க்கப்படுகிறது.

பட்டுப்பூச்சி முட்டை கசகசா போன்று சிறியதாய் வெண்மை நிறமுடையதாயிருக்கும். ஓர் அட்டையில் ஒரு வட்டத்திற்குள் உள்ள முட்டைகள் எல்லாம் சேர்ந்து ஒரு முட்டை எனக் கருதப்படும். ஓர் அட்டையில் இவ்வாறு முப்பது முதல் முப்பத்தைந்து முட்டைகளிருக்கும். 100 முட்டைகளின் விலைரூ.95.100முட்டைகள் வளர்ப்பதற்கு 25 செண்ட்டு நிலத்தில், முசுக்கட்டைச் செடி பயிரிடப்பட வேண்டியுள்ளது.

இம்முட்டையை ஈரத்துணி சுற்றி ஈரப்பதத்தோடு பாதுகாத்து வந்தால் ஏழாம்நாள் முட்டையிலிருந்து புழு வெளிவரும். இப்புழுவினை மிகச் சிறுக நறுக்கிய முசுக்கட்டைத் தழை பரப்பிய தட்டில் கோழி இறகால் மெல்ல தள்ள வேண்டும். ஒரு நாளைக்கு நான்கு வேளை வீதம் முதல் ஆறு நாள்கள் சிறுக நறுக்கிய தழைகளை இடல் வேண்டும். ஏழாம் நாள் தோலுரிப்புக்காகத் தழையின் அடிப்பக்கத்தில் சென்று மறையும். அப்பொழுது அவை உணவு உண்பதில்லை, தோலுரிப்புக்குச் செல்வதை மௌல்டு (Moult) என்பர்.

எட்டாம் நாள், புழு மேல் வருமாதலால் உணவாக மீண்டும், நறுக்கிய தழைகள் இடல்வேண்டும். புழுக்களின் வளர்ச்சிக் கேற்பத் தட்டுகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டே செல்ல வேண்டும், பன்னிரண்டாம் நாள் மீண்டும் அவை தோலுரிப்புக்குச் செல்லும்.

இம்முறையில் மூன்றாம் நான்காம் தோலுரிப்புக் காலத் திற்குப்பின் தட்டைக் கூட்டும் பொழுது புழுக்களுக்கு நோய் வாராமல் காக்க — பால் புழுக்களைக் கட்டுப்படுத்த நெல் உமி வறுத்துப் ஃபார்மலின் (Formaline) என்னும் மருந்து கலந்து தெளித்துத் தட்டைச் சுத்தம் செய்ய வேண்டும். இலை களில் பூஞ்சைக் காளான் உண்டாகாமல் தடுக்க சுண்ணாம்பு நீருடன் டைத்தேன் (Dithane)என்னும் பூச்சிக்கொல்லி மருந்து இரண்டு விழுக்காடு கலந்து தெளித்தல் நல்லது.

இருபத்தோராம் நாள்புழுக்கள் நான்காம் தோலுரிப்புக்குச் செல்லும் பொழுது ஒரு தட்டில் இருபத்தைந்து முட்டைகள் இருந்த நிலைமை மாறி, வளர்ந்து பத்துத் தட்டாகக் கூடி யிருக்கும். புழுக்கள் வெளிவர முழு இலைகள் போடலாம். முசுக்கட்டைத் தழைகளை எளிதில் வெட்டுவதற்கென பாக்கு வெட்டி வடிவத்தில் மரத்தால் செய்யப்பட்ட பெரியகத்தி யொன்றும் சொடுவாள் வடிவத்தில் தலைப்பக்கத்தில் கூர்மை யான சிறிய கத்தியொன்றும் உள்ளன.

இருபத்தாறாம் நாள், புழுக்கள் உணவு உட்கொள்ளாமல் இருக்கும்; முதலில் உடலிலும் இறுதியாகத் தலையிலும் இலே சான மஞ்சள் நிறமாய் மாறும். நிறம் மாறியபின், புழுக்கள் அங்கும் இங்கும் நகர்ந்து கொண்டேயிருக்கும். இந்தநிலை புழுக்கள் கூடுகட்டத் தொடங்கும் பக்குவ நிலையாம். இந் நிலையில் புழுக்களைச் சந்திரிகா என்றபெயருள்ள ஒருவகைத் தட்டில் ஓர் அங்குலம் இடைவெளியில் ஒவ்வொருபுழுவினையும் தனித்தனியாக எடுத்துவிடவேண்டும். சந்திரிகாவில் புழுக்களை யிட்ட நான்காம் நாள் பட்டுப் பூச்சிக் கூட்டை எடுத்துச் சுத்தப்படுத்தி, பட்டுக்கூட்டின் தரத்திற்கேற்ப அங்காடியில் விற்பனை செய்யப்படும்.

மேலும் ஓரிரு நாள்களில் பூச்சி, பட்டுக்கூட்டை உடைத்துக் கொண்டு வெளிவந்து விடுமாதலால் அதற்கு முன்னதாக அக்கூடுகளை ஆவியில் வேகவைத்து கூட்டுக்குள்

இருக்கும் புழுக்களைக் கொல்வர் அடுத்த சில நாட்களில் அக்கூட்டை மீண்டும் கொதிநீரில் இட்டு அதிலிருந்து இழை களை எடுத்து முதலில் சக்கரத்திலும், அடுத்து இராட்டை யிலும் சுற்றி நீண்ட இழையாக்கிக் கொள்கிறனர்.

கொதிநீரில் இடாத பட்டுக்கூட்டினின்று வெளிவரும் பட்டுப் பூச்சி பறக்கும் தன்மையற்று இனவிருத்திக்காக முட்டையிட்டபின் உடன்மடிகிறது. இதனால் அதன் கூட்டினின்றும் கிடைக்கும் பட்டிழைகள்வீணாகாமல் காத்து மக்கள் தாங்கள் அணியும் பகட்டாடைக்காக அவற்றைப் பயன்படுத்துகின்றனர் எனலாம்.

கோரா உற்பத்தி சார்ந்த சொற்கள், கள ஆய்வில் இத்தொழிலில் ஈடுபட்டிருந்த மக்களிடம் கேட்டுத் தொகுத்து எழுதப்பட்டவை. எனவே, இவற்றிற்குப் பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என்ற பிரிவுகள் குறிப்பிடப்படவில்லை. அச்சொற்களின் பொருள்விளக்கம், சொற்களுக்குப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இனி, அவற்றைக் காண்போம்.

இராட்டையில் சுற்றல் — சிறு சக்கரத்தில் சுற்றப்பட்ட இழைகள் இராட்டினத்தில் சுற்றப்படுதல்.

இழை எடுத்தல் — புதிய பட்டுக்கூடு அல்லது வேகவைத்த பட்டுக்கூட்டி லிருந்து பட்டிழை எடுத்தல்.

கூட்டைச் சுத்தப்படுத்தல் — புழுக்களைச் சந்திரிகாவில் இட்ட நான்காம் நாள் பட்டுக் கூட்டை எடுத்துத் தூய்மை செய்தல்.

கூடு கட்டும் பக்குவம் — நிறம் மாறிய புழுக்கள் அங்கும் இங்கும் அலைதலே கூடு கட்டத் தொடங்கும் பக்குவமாம்.

சக்கரத்தில் சுற்றல் — பட்டுக் கூட்டிலிருந்து எடுக்கப் படும் எட்டுச் சிறு இழைகள் சேர்ந்து ஓர் இழையாக மரத் தாலான சிறு சக்கரத்தில் சுற்றப் படுதல்.

சந்திரிகா (சந்திரிகம்) — இது மூங்கிலால் செய்த வட்டத் தட்டு. கூடு கட்டும் பக்குவம் அடைந்த புழுக்ககளைத் தனித் தனியாக ஓரங்குலம் இடைவெளியில் இடுத்தலுக்குரியது.

சுண்ணாம்பு நீர் தெளித்தல்— இலைகளில் பஞ்சைக் காளான் உண்டாகாமலிருக்க 2% டைத்தேன் என்னும் பூச்சிக் கொல்லி மருந்து கலந்த சுண்ணாம்பு நீர் தெளித்தல்.

தட்டு கூட்டுதல் — 25 முட்டைக்கு ஒரு தட்டாக இருந்த நிலைமை முதல் தோலுரிப்புக்குப்பின் புழுக்களின் வளர்ச்சிக்கேற்ப நாளும் தட்டினை அதிகரித்துக் கொண்டேவர 21 ஆம் நாளில் 10 தட்டாகக் கூடியிருத்தல்.

தட்டு மாற்றுதல் — தோலுரிப்புக்குப் பின் தழைமேல் வரும் பூச்சி வளர்ச்சி கண்டிருத்தலால் தட்டினை அதிகப் படுத்தப் பழைய தட்டைத் தூய்மை செய்து மாற்றுதல்.

தழை நறுக்குதல — முட்டையிலிருந்து வெளிவந்த புழுக்களுக்கு இடப்படும் உணவை அவை எளிதில் உட்கொள்ளுதல் பொருட்டு இலையை நறுக்குதல்.

தழை பரப்புதல் — சிறுக நறுக்கப்பட்ட முசுக்கட்டை இலைகளைப் பெரிய மூங்கில் தட்டில் பரப்புதல்.

தழை போடுதல் — நறுக்கப்பட்ட இலைகளை ஒரு நாளைக்கு நான்கு வேளைகள் இடுதல்.

தழை போடாமை — பட்டுப்புழுக்கள் தோலுரிப்புக்கு இலையின் அடிப்பகுதிக்குள் சென்றிருக்குங்கால் தழை போடாதிருத்தல்.

தழை வெட்டும் கத்தி — இதில் இருவகை உண்டு

பெரியது — பாக்குவெட்டி வடிவில் மரத்தில் பொருத்தப்பட்ட கத்தி; தழைகளை எளிதில் துண்டிக்க உதவுவது.

சிறியது — !தழை நறுக்கும் கத்தி. இது கொடுவாள் கத்தி வடிவில் அமைந்தது. வளைவின் மேல் பக்கத்தில் தழையைச் சிறுக நறுக்குவதற்கு எளிதான முறையில் கூர்மை செய்யப் பட்டது.

தீனி தின்னாமை — தோலுரிப்புக்காகப் புழு இலைக்குள் சென்றிருக்குங்கால் உணவு உட்கொள்ளாதிருத்தல்.

தோலுரிப்பு — பட்டுப்புழு பூச்சியாவதற்குள் நான்கு முறை இலையின் அடிப் பக்கத்தில் சென்று மறைந்து தோலுரித்தல்.முதல் தோலுரிப்பு முட்டையிலிருந்து புழு வந்த ஏழாம் நாளிலும் இரண்டாம் தோலுரிப்பு பன்னிரண்டாம் நாளிலும் மூன்றாம் தோலுரிப்பு பதினேழாம் நாளிலும்நான்காம் தோலுரிப்பு இருபத்தோராம் நாளிலும் நடைபெறுதல்.

நறுக்கிப் போடுதல் — நான்கு தோலுரிப்பு வரையில் முதலில் மிகச் சிறியதாயும் அடுத்து சிறியதாகவும் இலைகளை நறுக்கிப் போடுதல்.

நிறம் மாறுதல் — புழுவின் வளர்ச்சியில் 25 அல்லது 26 ஆம் நாளில் இளம் மஞ்சள் நிறமாக மாறும். உடற் பகுதி முழுமையும் மாறியபின் தலைப்பகுதி இறுதியாக மாறுதல்.

பட்டுக்கூடு — பட்டுப்புழு தன்னைச் சுற்றி அமைத்துக் கொண்ட கூடு.

பட்டுக்கூட்டை அவித்தல் — பட்டுக் கூட்டிலிருந்து உடன் பட்டிழை எடுக்க இயலாத நிலையில் புழுவைக் கொல்ல பட்டுக்கூட்டை அவித்தல்.

பட்டுக்கூட்டின் விலை — பட்டுக்கூட்டின் தரத்திற்கேற்ப விலை அங்காடியில் நிர்ணயிக்கப் படுதல்.

பட்டுக்கூட்டை வேகவைத்தல்-அவிக்கப்பட்ட/புதிய பட்டுக் கூட்டிலிருந்து எளிதில் இழை எடுக்க அதனை வேகவைத்தல்.


பட்டுப்பூச்சி இலை — முசுக்கட்டை இலை.

பட்டுப்பூச்சி முட்டை — பட்டிழை தயாரிப்பதற்குரிய பட்டுப் பூச்சியினுடைய முட்டை கசகசா போன்று சிறியதாய் வெண்மைநிறமுடை யதாயிருக்கும். ஒரு சிறு வட்டத்தில் உள்ள முட்டைகள் ஒரு முட்டை எனப்படும்.


பால்புழு — உடலில் நோய் உண்டான புழு. மூன்றாம் நான்காம் தோலுரிப்புக்குபின் ஏற்படுவது. உடன் அப்புறப்படுத்தப்பட வேண்டியது.



சந்திரிகம் பக். 310



தழை வெட்டும் கத்தி 311



தழை நறுக்கும் கத்தி 311

புழுக்களைத் தள்ளல் — முட்டையிலிருந்த புழுக்களை நறுக்கிய தழை பரப்பப்பட்ட தட்டில் கோழி இறகால் தள்ளுதல்.

புழு கறுப்பாக மாறுதல் — இலையில் உள்ள மண் தின்னுதலால் புழு கறுப்பாக மாறிநோய் உண்டான நிலையைக் குறிக்கும். இஃது உடன் அப்புறப்படுத்தப் பட வேண்டியது.

பூசாணநோய் (பூஞ்சண நோய்) — இலையில் பூஞ்சைக் காளான் உண்டாதலின் மூலம் புழுவிற்கு உண்டாகும் நோய்.

முசுக்கட்டைத் தழை — பட்டுப்பூச்சி வளர்த்தலுக்கு உணவாக இடப்படும் இலை.

முட்டை பாதுகாத்தல் — பட்டுப்பூச்சியின் முட்டைகளை ஈரப்பதத்தோடு ஈரத்துணியில் சுற்றிவைத்திருத்தல்.

முட்டை பொரித்தல் — முட்டையிட்ட ஏழாம் நாளில் முட்டையிலிருந்து புழு வெளி வருதல்

முழு இலை போடல் — நான்காம் தோலுரிப்புக்குப்பின் முழு இலைகளைத் தின்னும் நிலைமை பெற்றுள்ளதால் நறுக்காமல் இலைகளைப் போடுதல்.

டைத்தேன் (Dithane) — முசுக்கட்டைத் தழையில் பூஞ்சைக் காளான் உண்டாகாமல் தடுக்க உதவும் பூச்சிக் கொல்லி மருந்து.

ஃபார்மலின் (Formaline) — தட்டு மாற்றும் பொழுது, தட்டு சுத்தம் செய்ய வறுத்த நெல்உமி கலந்து தூவும் மருந்து. நோய் வாராமல் காக்கவும் பால் புழுக் களைக் கட்டுப்படுத்தவும் உதவுவது.

தட்டு வைக்கும் ஸ்டேண்டு	தட்டோ சந்திரிகாவோ ஒன்றின் மேல் ஒன்று அடுக்கடுக்காக வைப்பதற்குரிய தாங்கி.
மௌல்டு (Moult)	தோலுரிப்பு.

2. சாயம் போடுதல் தொடர்பானவை

நெசவு செய்யப்படும் முன் நூலோ பட்டோ சாயம் போடப்படுதலினால் கோரா உற்பத்திக்குப் பின் சாயம் போடுதல் தொடர்பான சொற்கள் விளக்கப்படுகின்றன.

சாயம் போடும் முன் செய்யப்படும் செயல்கள்

பஞ்சிலிருந்து உண்டாக்கப்படும் நூல் காரிகநூல் எனப் படும். நூல் இழையின் எண்ணிற் கேற்ப 4 லடி அல்லது 5 லடிகளாகச் சேர்த்து கொத்துப் போட்டு நூல்களைக் கொதி நீரில் வேகவைப்பர். இரண்டு பொந்துகள் சேர்ந்தது ஒரு லடி என்பர். கொதிநீரில் சலவைத்தூள் சேர்த்து வெண்மையாக நூலை மாற்றுதலைச் சலவை செய்தல் என்றும் அந்நூலைச் சலவை நூல் என்றும் கூறுவர். கோரா எனப்படும் பட்டின் கச்சாச்சரக்கை நூலைப்போல் நிறம் வெளுக்கச் செய்தலை உஷ்ணா எடுத்தல் அல்லது பிளீச்சிங் செய்தல் என்பர். கோரா வைக் கொதிநீரில் வேகவைக்கும் பொழுது 25 விழுக்காடு பசைத்தன்மை குறைகிறது. இவ்வாறு நிறம் வெளுத்தும் வெளுக்காமலும் பட்டிழைக்கும் நூலிலைக்கும் நிறம் ஏற்றப் படுகின்றன.

சாயம் போடும் முறைகள்

சாயம் போடுதலில் மூன்று முறைகள் உண்டு அவை 1. கைச்சாயம், 2. வேட் (Vat), 3. டைரக்ட் (Direct) என்பன இவற்றில் கைச்சாயம் இரண்டாம் தரம் உடையது. இச்சாய முறையில் சிறிதளவு சாயம் போகும். இம்முறையில் நூல், சலவை செய்யப்படாமல் நேரடியாக ஹைட்ரோஸ் என்று சொல்லும்படியான ஹைட்ரோ சல்பேட் (Hydro Sulphate) என்னும் இரசாயனப் பொருளைக் கலந்து நிறம் ஏற்றப்படும்.

சாயம் போடுதலில் முதல் தரமானது வேட் முறையாகும். இம்முறையில் வேதியியல் பொருட்களை உபயோகப்படுத்திச் சலவை செய்து மீண்டும் வேதியியல் பொருட்களையும் குறிப்பிட்ட நிறங்களையுடைய பொடிகளையும் கலந்து வண்ணம் ஏற்றப்படும். இவ்வாறு வண்ணம் ஏற்றப்பட்ட நூலில் சாயம் போகாது.

நேரடியாக நிறம் ஏற்றுதலை 'டாப்பிங் கலர்' என்பர். இம்முறையில், சாயம் போடுதல் மூன்றாம் தரமாகும்; நூலைச் சலவை செய்யாமல் நேரடியாக வண்ணம் எற்றப்படும்; சாயம் போகும்.

ஒரு நிறமுடைய நூலை இன்னொரு நிறமுடைய நூலாக மாற்றுதலைக் 'கலர் (நிறம்) மாற்றுதல்' என்பர். இதில் வேட் போட்டு நெப்தால் போடுதல், நெப்தால் போட்டு வேட் போடுதல் என இரு முறைகளிலும் நிறமாற்றம் செய்யப்படுகிறது.

சாயம் போடுதலில் பட்டுக்குச் சாயம் போடுதலும் நூலுக்குச் சாயம் போடுதலும் ஒன்று போல் பெரும்பான்மையாக இருந்தாலும் இவற்றில் தனித்தனியே கை தேர்ந்தவர் சிலர் உண்டு. பட்டுக்குச் சாயம் போடுதலில் பளபளப்பு உண்டாக்குதல் பொருட்டு எலுமிச்சம் பழச்சாறு சேர்க்கப்படுகிறது. சாயம் கெட்டிப்படுதலின் பொருட்டு கடுக்காய்ப் பொடிச்சாரமும் கலக்கப்படுகிறது சாயம் போடப்பட்ட பட்டு பெரும்பாலும் நிழலில் உலர்த்தப்படுகிறது. நூலுக்குச் சாயம் போட்டபின் வெயிலில் உலர்த்தப்படுகிறது. பட்டு, தடை (500 கிராம் அளவு) கணக்கில் சாயம் போடப்படுகிறது. நூல், பொட்டிக் (நூலிழையின் எண்ணிற்கேற்ப குறிப்பிட்ட பொந்துகளின் அளவு) கணக்கில் சாயம் போடப்படுகிறது.

பட்டு, நூல் இழைகளுக்குச் சாயம் போடுபவர்கள் 'சாயக்காரர்' எனப்படுவர்.

இத்தொழில் சார்ந்த சொற்கள் இத்தொழில் செய்பவரிடையே தொழில் செய்யும் முறையைக் கேட்டறிந்து அவற்றினின்றும் சொற்கள் தொகுத்துக் கூறப்படுகின்றமையால் இத்தலைப்பிலும் எழுத்து வழக்கு, பேச்சு வழக்கு என்றும் குறிப்பிடப்படாமல் சொற்களுக்குப் பொருள் விளக்கம் கூறப்படு

கின்றன. அச்சொற்களின் பொருள் விளக்கம் இனிக் காண்போம்.

அ. பட்டுச்சாயம்

உஷ்ணா	— சலவைத்தூள் சேர்ந்தகொதிநீர்.
உஷ்ணா எடுத்தல்	— கோராவினை உஷ்ணாவில் தோய்த்தெடுத்து நிறம் வெளுத்தல்.
உஷ்ணா எடுக்காத கலர்	— கோராவின் நிறம் வெளுக்காது நிறம் ஏற்றும் வண்ணங்கள்.
உஷ்ணா குண்டா	— கோரா நிறம் வெளுத்தலில் பயன் படுத்தப்படும் செப்புப் பாத்திரம்.
எடைபோட்டுக்கொடுத்தல்	— கோராவினைச் சாயம் போடுபவருக்கு எடை போட்டுக்கொடுத்தல்.
எடைபோட்டு வாங்குதல்	— சாயம் போட்ட பட்டினைச் சாயம் போட்டவரிடமிருந்து எடைபோட்டு வாங்குதல்.
எலுமிச்சம் பழச்சாறு	— சாயம் கெட்டிப்படுதலுக்காகவும் பளபளப்பாகவும் கரகரப்பாகவும் பட்டு காணப்பட சாயம் போடும் பொழுது எலுமிச்சம் பழச்சாறு கலத்தல்.
எலுமிச்சம் பழம் பிழிந்து வடிகட்டல்	— எலுமிச்சம் பழம் பிழிந்து சாற்றை வடிகட்டிப் பயன் படுத்துதல்.
கச்சாச் சரக்கு	— பட்டு நெசவுக்கு மூல காரண நிலையில் உள்ள கோரா; முறுக்கேற்றப்படாதது.
கப்புச்சட்டி	— உஷ்ணா குண்டா.
கடுக்காய்ப்பொடிச்சாரம்	— பட்டுக்குச் சாயம் போடுதலில் பயன்படுத்தப்படுவது.

கலர் குறித்தல்	— ஒரு குறிப்பிட்ட அளவு கோரா வுக்குக் குறிப்பிட்ட நிறம் ஏற்றக் குறிப்பிடுதல்.
கலர் கொதிக்க வைத்தல்	— குறிப்பிட்ட நிறத்தை நீரில் கலந்து 10 நிமிடம் கொதிக்க வைத்தல்.
கலர் சாயம் போடுதல்	— கோராவிற்கு நிறம் ஏற்றுதல்.
கலர் தெளிவு வருதல்	— நிறமேற்றப்பட்ட பட்டினை இருமுறை தண்ணீரில் அலைச்ச நிறம் தெளிவு வருதல்.
கோரா வேகவைத்தல்	— கோராவிலுள்ள பசையின் அளவைக் குறைக்க அதைக் கொதிநீரில் வேகவைத்தல்.
சாயக்குண்டா	— சாயம் போடப்பயன்படுத்தும் செப்புப் பாத்திரம்.
சாயக்கோல்	— சாயம் போடுதலில் பயன் படுத்தும் மரக்கோல்.
சாயச்சால்	— சாயகுண்டா.
சாயம் கெட்டிப்பிடித்தல்	— நிறம் மாறாமலிருக்க நிறத்தை உறுதிப்படுத்தும் செயல்.
சாயம் போடுதல்	— நிறம் ஏற்றுதல்.
சாயம் போதல்	— ஏற்றிய நிறம் நீங்குதல்.
சோப்பு போடுதல்	— சாயம்போடுதலில் சோப்பு கலந்த நீரைப்பயன்படுத்துதல்.
சோப்பு போடாது எடுத்தல்	— சோப்பு சேர்க்காமல் சாயம் போடுதல்.
நீர் கொதிக்க வைத்தல்	— சோப்பு, தேங்காய் எண்ணெய், சலவை சோடா ஆகியவை கலந்த நீர் 10 நிமிடம் கொதிக்க வைத்தல்.
நெழல் ஒணர்த்தலா ஒணத்தல் (நிழல் உணக்கலாய் உணக்கல்)	— சாயம் போட்ட பட்டினை நிழலில் உலர்த்துதல்.

பச்சை வைத்தல்	— உஷ்ணா எடுக்காது நிறமேற்று தலைக் குறிப்பது.
பட்டை ஊற வைத்தல்	— சாயம் நன்றாகப் பட்டில் படிய பட்டைச் சாயத்தில் ஊறவைத்தல்.
பட்டை ஒழட்டி (உழற்றி) எடுத்தல்	— பட்டின் எல்லாப் பகுதிகளும் நிறம் பிடிக்க பட்டைச் சாய நீரில் உழற்றி எடுத்தல்.
பட்டு காயவைக்கும் கோல்	— சாயம் போட்ட பட்டினை உலர வைக்க உதவும் கோல்,
பட்டில் டார்க் கலர்	— அரக்கு, மஜண்டா, நாகப்பழம் 'டி' ரெட், ஆனந்தா, சாமன், பிங்க், 'வி' பாக்கு, பச்சை, புளூ, வைலட், காஞ்சனா, சஃபேர், மீனாட்சி முதலிய நிறங்கள்.
பட்டில் லைட் கலர்	— குமரன், மாம்பழம், லைட் ஆனந்தா, ரெக்சோனா, சில்வர் கிரீன், சாந்தி, சிவந்தமண். ட்ரெஷர், மஸ்டேட் முதலிய நிறங்கள்.
பாத்	— நிறம் கலந்த கொதிநீர்.
பாயில் பண்ணுதல்	— உஷ்ணா எடுத்தலில் செய்யும் செயல்.
ப்ளீச்சிங் பண்ணுதல்	— கோராவின் நிறம் வெளுத்தல்; கோராவின் பசைத் தன்மையைக் குறைத்தல்.

ஆ. நூல் சாயம்

அக்னி திராகம் அக்கினித் திராவகம்	— சல்ப்பர். முழு சலவை செய்வதற்கு உரிய வேதியியல் பொருட்களில் ஒன்று.

அண்டா	— இரும்புத் தகட்டினால் செய்யப்பட்ட பாத்திரம்.
அரை கொத்தாகப் பிரித்தல்	— சலவை செய்யப்பட்ட நூலை அரைக் கொத்துகளாகப் (மும்மூன்று லடிகளாக) பிரித்தல்
அலுமினியக்கல்	— சாயம் போட உதவும் வெள்ளை நிறமுடைய இரசாயனப் பொருள்.
அஜந்தா புளு	— நிறமேற்றுதலில் கடினமான நிறம்.
ஆறப்போடுதல்	— உலரவைத்தல்.
ஈரம் இழுக்காமல் நீரில் வைத்தல்	— காரிக நூல்களைக் கொத்துப் போட்டு நீரில் வேகவைக்கும் பொழுது நூல் ஈரத்தை இழுத்துக் கொள்ளும். இழுக்கா வண்ணம் ஒருவிரற்கிடை நீர் நூலுக்கு மேல் இருந்து கொண்டே இருக்கச் செய்தல்.
ஒவ்வொரு கொத்தையும் மீண்டும் அலைச்சுதல்	— நீரில் வேகவைத்த நூல் கொத்துகளை இரண்டாம் முறையாக இரண்டாம் நாள் அலைச்சுதல்.
கலாய்த்தகடு	— அண்டா செய்வதற்குரிய தகடு.
காஞ்சி (காய்ந்து) போதல்	— நூல் வேகவைக்கும் பொழுது போதிய நீரில்லாமையினால் நூல் காய்ந்து போதல்.
காயப்போடுதல்	— உலரப் போடுதல்.
கார அடுப்பு	— சாயத்தூள் காய்ச்சும் அடுப்பு.
காரம் பிழியும் தொட்டி	— சாயப்பொடி கலந்த வெந்நீரில் நூலைத் தோய்த்துப் பிழியும் மரத்தொட்டி.

காரிக நூல்	— சலவை செய்யப்படாத நூல்; பழுப்பு நிறத்திலிருக்கும் நூல்.
கிட்டிக்கோல்	— நூல் பிழியப்பயன்படுத்தும் கோல். மச்சுத்தடியை விடச் சற்று சிறியதாய் கெட்டியாய் இருக்கும்.
கிட்டிமரம்	— நூல் பிழிவதற்குரிய மரம்.
கிட்டிமரத்தில் மாட்டுதல்	— நூல் பிழிதலுக்குப் பயன்படுத்தும் கிட்டி மரத்தில் தொங்க விடுதல்.
கிட்டிபோட்டுப் பிழிதல்	— நூலில் ஈரம் நீங்கி விரைவில் உலர நூலைக் கிட்டிமரத்திலிட்டு கிட்டிக்கோலால் பிழிதல்.
கூச்சு	— நூல் கெடையைத் தாங்குவன.
கொதிநிலை	— நூலை வேகவைக்க 200 °F அளவுக்கு நீரை வெப்பப்படுத்துதல்.
கொதிநீர் அளவுகுறைத்தல்	— சாயநீரில் நூல் தோய்த்தெடுத்த பின் நிறம் திரும்ப 170 °F இல் நிறுத்திவிடுதல்.
கொத்தாக்குதல்	— சாயம்போட்டு உலரவைக்கப் பட்ட நூல்களை மச்சுத்தடியிலிருந்து கழற்றி முடித்து வைத்தல்.
கொத்தை அலைச்சுதல்	— வேகவைக்கப்பட்ட காரிகநூலை இருமுறை அலைச்சுதல். முதல் அலைச்சு -அழுக்கு இறங்க; இரண்டாம் அலைச்சு—சுத்தம் செய்ய.
கொத்துகளை இணைத்தல்	வேகவைக்கப்பட்ட நூலை அலைச்ச மூம்மூன்று லடிகளாக உள்ள கொத்துகளை ஆறுஆறு லடிகள்உள்ளவாறு இணைத்தல்.

கொத்துகளை ஒயட்டல் (உழற்றுதல்)	— சாயம் நன்றாக நூலில் படிவதற்குச் சாய நீரில் தோய்த்தெடுக்கப்பட்ட நூல்களைக் குளிர்ந்த நீரில் கையால் உழற்றுதல்.
கொத்துகளைப் பிரித்தல்	— வேகவைக்கப்பட்ட நூல் கொத்துகளைப் பிரித்தல்.
கொத்துப்போடுதல்	— கொதிநீரில் நூலை வேகவைக்க நூலின் எண்ணிற்கு ஏற்ப ஐந்து அல்லது ஆறு லடிகள் சேர்த்து கொத்தாக்குதல்.
கைச்சாயம்	— நேரடியாக நிறமேற்றப்படும் நெப்தால் நிறங்களைக் கொண்டு சாயம் போடும் முறை.
கோல்	— மச்சுத்தடி.
சலவை நூல்	— சலவைத்தூள் கலந்த கொதிநீரில் தோய்த்து வெண்மையாக்கப் பட்ட நூல்.
சல்லடை	— சாயஅடுப்புக்குரிய இரும்புத்தகடு
சாயஅடுப்பு	— சாயம் போடுவதற்குரிய அடுப்பு.
சாய அண்டா	— சாயம் போடப் பயன்படுத்தும் பாத்திரம்.
சாய அண்டாவில் தோய்த்தல்	— நூலுக்கு நிற மேற்றுதலுக்காகச் சாயப்பொடி கலந்து கொதிக்க வைத்த நீரில் தோய்த்தெடுத்தல்.
சாயம் போடுவபர்	— நிறமேற்றுபவர். சாயக்காரர்.
சாயடி	சாயம் போடுமிடம்.
சாரல்	— நிறம் இலேசாகக் குறைதல்.
சிலுப்பைக்கட்டு	— சிலுப்பையில் கட்டப்பட்டுள்ள கட்டு.

சுற்றுக்கோல் — சாயஅண்டாவில் நூல்களைச் சுற்றி எடுப்பதற்குரிய கோல்.

சுற்றுப்போடுதல் — சுற்றுக்கோலால் நூலை ஏழுமுறை புரட்டியெடுத்தல்.

தண்ணீர் கட்டுதல் — நூல் சலவை செய்யும் பொழுதும் சாயம் போட்டு அலைச்சும் பொழுதும் நீர் குறைந்துவிடாமல் நீர் நிரப்பிக் கொண்டேயிருத்தல்.

தண்ணீர் சுண்டிப் போதல்— நூல் வேகவைக்கும்பொழுது நீர் வற்றிவிடுதல்.

தராசு — நூல் சாயம் போடுதலில் வேதியியல் பொருட்களை நிறுக்க உதவும் கருவி.

தலைச்சன் புளு — அஜந்தா புளு நிறம்போடு—வதற்கு உரிய பச்சை நிறப் பொடி.

தீ போடுதல் — நூல்சாயம் போடும் முன் நூலை வெளுக்க, நீர் கொதிநிலையில் இருக்க தீ போட்டுக் கொண்டே இருத்தல்.

நூல் அழுத்துதல் — நீர் குறிப்பிட்ட கொதிநிலைக்கு வந்ததும் கொத்துப் போட்ட நூல்களைக் கொதிநீரில் அழுத்துதல்.

நூல் உதறுதல் — கிட்டிமரத்தில் போட்டுப் பிழிந்து நூலில் இழைகளுக் கிடையே பிணிப்பு ஏற்படாமல் இருக்க நூலை உதறுதல்.

நூலைத் தட்டுதல் — நூலை உதறுதல்.

நூலைத் தரையில் போடுதல்	— நிறம் திரும்ப உலர்த்தப்பட்டு கொத்தாக்கப்பட்ட நூல்களை மீண்டும் நீரில் அலைத்துத் தரையில் போடுதல்.
நூலை மடித்து வைத்தல்	— சாய அண்டாவிலிருந்து எடுக்கப்பட்ட நூலைத் தண்ணீரில் ஊறத் திருக்கச் செய்தல்.
நூல்களை மீண்டும் கிட்டி மரத்தில் மாட்டுதல்	— சாயம் போட்டபின் நீரில் அலைத்து நூலை மீண்டும் உலர்த்துதலின் பொருட்டுக் கிட்டிமரத்தில் தொங்க விடுதல்.
நூல் கெடை	— சாயம் போடப்பட்ட நூல்கள் காயவைக்கப்படும் மூங்கில் கழி.
நூல் வேகவைத்தல்	— காரிக நூலைச் சலவை செய்ய கொதிநீரில் வேகவைத்தல்.
நெத்தால்	— சிவப்பு
பாசுக்கோல் (பாய்ச்சுக்கோல்)	— சாயம் போடுதலில் நூலைத திருப்பி விடப் பயன்படுத்தும் ஒரு பக்கம் கூர்மையான மரக் கோல்.
பாவுகுத்திப் போடுதல்	— பாவைத் தோய்த்தெடுத்தல்.
பார்மரம்	— கிட்டிமரம்.
பெரட்டி (புரட்டி) விடுதல்	— நூலுக்கு நிறமேற்றும்பொழுது சுற்றுக்கோலால் நூலை 7 முறை கீழ்மேலாக வருமாறு புரட்டி விடுதல்.
பொந்து கட்டு	— பொந்துக்குக் கட்டப்பட்ட கட்டு.
பொந்துகளாகக் கட்டுதல்	— நிறமேற்றிய நூலைப் பழைய படி பொந்துகளாகக் கட்டுதல்.
மச்சுத்தடி மஸ்த்தடி	— நூல்களை உலரப்போட உதவும் மரக்கோல்கள்.

மச்சுத்தடியிலிருந்து நூலைக் கழற்றுதல்	— நூலைச் சாயம் போடவோ பொந்துகளாக்கவோ உலர்த்தப் பட்ட பின் மச்சுத்தடியிலிருந்து கழற்றுதல்.
மரத்தொட்டி	— தண்ணீர் நிரப்பி நூலை அலைச்சுதலுக் குதவுவது.
மருந்து கலக்குதல்	— சாயம் போடுதலுக்குரிய சாயத் தூள், வேதியியல் பொருட்கள் ஆகியவற்றைக் கலக்குதல்.
மருந்து கரைத்தல்	— மருந்து கலக்குதல்.
முதல் அலைச்சு	— சாயம்போடப்பட்ட நாளே அலைச்சிய அலைச்சு.
லடி	— இருநூல் பொந்துகள் சேர்ந்தது.
லடிகட்டி	— லடிக்குக் கட்டப்பட்ட கட்டு
வாரை	— மச்சுத்தடிகளைத் தாங்கும் மூங்கில் கழிகள் — நூல் கெடை.
வாளி	— நீர் நிரப்புவதற்குரிய கருவி.
வேக்காடு	— நூல் வேகவைக்கும் பக்குவம். (3 மணி நேரம் வேகவைத்தல்)

பிறமொழிச் சொற்கள் :

கலர் திரும்புதல் (ஆ.+த.)	— சாயம் போடப்பட்ட நூல்கள் ஆரப்போடப்படும் பொழுது நிறம் மாறுதல்.
கலர் நூல் (ஆ. + த.)	— சாயம் போடப்பட்ட நூல்.
கலர் மாற்றுதல் (ஆ. +த)	— ஒரேநிறமுடைய நூலை இன்னொரு நிறமுடைய நூலாக மாற்றுதல், அதற்கு உதவும் நிறங்கள் அல்லி, காமதேனு, 'எ' சம்பங்கி, 'பி' சம்பங்கி.
காஸ்டிக் (ஆ)	— நூலைச்சலவை செய்வதற்குப் பயன்படுத்தப்படும் வேதியியல் பொருட்களில் ஒன்று.

கிரேடு (ஆ.) — சல்லடை.

கெமிகல்ஸ் (ஆ.) — சாயம் போடப் பயன்படுத்தப் படும் வேதியியல் பொருட்கள்,

சாயப்பவுடர் (த. + ஆ.) — பட்டுக்கும் நூலுக்கும் எனத் தனித்தனியே சாயம் போடு வதற்கு உரிய தூள்கள்.

சொலிக்ஷன்(சொல்யூஷன்)— பொருள்கள் (ஆ. + த.) — கரைபொருள்; காஸ்டிக், ஹைட்ரோ சல்பேட், நீர் ஆகியன.

சொலிக்ஷன் திரவம் — கரைசல்; சாயம்போட, சாயப் பொடி அல்லாமல் 12 லிட்டர் நீரில்சிறிது சிறிதாக காஸ்டிக்கும் ஹைட்ரோஸும் கொட்டிக் கரைத்துக் கொண்ட திரவம்.

சொலிக்ஷன் திரவத்தை மீண்டும் ஊற்றுதல் — கலர் திரும்பிய நூலின் அரைக் கொத்துகளை அலைச்ச தண்ணீ ரில் சிறிதளவு மீண்டும் சொலிக் ஷன் திரவத்தைக் கொட்டுதல்.

சோடாஷ் (Soda ash) — நூல் சலவை செய்யப்படும் வேதியியல் பொருட்கள். 55 பொட்டி நூல் கொதிக்க வைக்க 3 கிலோ சோடாஆஷ் தேவை.

சோடியம் நைட்ரேட் — நூலுக்கு நிறமேற்றலில் உதவும் வேதியியல் பொருள்.

சோப்பு [ஆ.] — நூல் சலவை செய்வதற்குரிய பொருள்களில் ஒன்று. (எ. கா.) நாய்சன்ஜிஸ். 55 பொட்டிக்கு 1 கிலோ சோப்பு தேவை.

டாப்பிங் கலர் (ஆ. + ஆ.) — வேதியியல் பொருட்களை உபயோகப் படுத்தாமல் நேரடியாக நிறம் ஏற்றப் — படுபவை.

டார்க் கலர் (ஆ. + ஆ.) — ஒரு நிறத்திற்குரிய மருந்தைச் சிறிது அதிகமாகச் சேர்த்தால் அந்நிறத்திற்குரிய அடர்நிறம் உண்டாதல்.

டையர் (ஆ.) (Dyer) — சாயம் போடுதலில் மருந்து கூட்டிக் கொடுப்பவர்.

டைரக்ட் [ஆ.] சாயம் போடுதலில் மூன்றாம் தரமுடையது; நேரடியாக நிறமேற்றுதல்; சாயம் போகும்.

நூல் கலர் (த. + ஆ.) — சலவை, பச்சை, புளூ, மேக வண்ணம் (பொடிகலர்), சிட்னி, தேனருவி, கறுப்பு அஜந்தா, தாரா, ரோஸ், மஞ்சள் கோல்டன், குரோட்டன், 'எல்' கிரே டார்க், 'பி' கிரே லைட், நேவிபுளூ முதலியன.

நெப்தால் கலர் — சலவை செய்தும் செய்யாமலும் நிறத்திற்கேற்ப நேரடியாக நிறம் ஏற்றும் வண்ணங்கள். (எ. கா.) நெப்தால், கெம்பு, சாக்லேட், ஆரஞ்சு, பிரௌன், டார்க் பிரௌன்:

மிளகாய்ப்பழம், பாக்கு கலர், ரோஸ், செவ்வாழை, மஞ்சள், கோல்டன், நேவிபுளூ.

பவுடரைக் கரைத்தல் — சாயப்பொடியை 170^0 வெப்ப நிலையுள்ள நீரில் கொட்டிக் கரைத்தல்.

பவுடரைக் கலக்குதல் — கரைக்கப்பட்ட சாயப் பொடியை மூங்கில் கழியினால் கலக்குதல்.

பாய்லர் அடுப்பு (ஆ. + த.) / பாயில் அடுப்பு [ஆ. + த.] — நூலை வேகவைக்கப் பயன் படுத்தப்படும் அடுப்பு.

பாய்லரில் நூல் போடுதல்	— கொதிநீரில் நூலை அழுத்துதல்.
பாயில் அண்டா (ஆ. + த.)	— நூலை வேகவைக்க உதவும் அண்டா.
பாயில் அடிப்பட்டுப் போதல்	— நூல் வேகவைக்கும் பொழுது நீரில்லாமல் நூல் காய்ந்து போதல்.
பிரெந்தால்	— நெப்தால் கலர்.
புரோசின் கலர்	— கொதிநீர் இல்லாமல் நிறமேற்றப்படும் நிறம்.
பேல்தகடு (ஆ. + த.)	— நூல்கட்டுகளின் மேல் அழுத்திக் கட்டப்பட்ட இரும்புத் தகடு.
பேல்சட்டம் (ஆ. + த.)	— நூல் பொட்டிகளை அழுத்திக் கட்ட உதவும் மூங்கில் பத்தை.
பேஸ் பிழியும் தொட்டி	— வேதியியல் பொருள் கலந்த கொதிநீரில் நூல் தோய்த்துப் பிழியும் மரத்தொட்டி.
பொட்டி மிஷின் [த.+ஆ.]	— சாயம் போட்ட பின் பெட்டியாகக் கட்டுதலுக்குரிய எந்திரம்
மராட்டி	— ஹைட்ரோ குளோரிக் அமிலத்தைக் குறிக்கும் பெயர்.
(லாட் ஆ.)	— 5 பெட்டி நூல் சேர்ந்தது. ஒரு முறை சாயம் போடுவதற்குரிய நூல்களின் தொகுப்பு.
லாட்தட்டுதல்	— ஒரே நேரத்தில் எல்லா நூல்களையும் தட்டுதல்.
லாட்முறையில் கலர் போடுதல்	— ஒருமுறையில் 5 பெட்டிகள் என்ற முறையில் நிறமேற்றுதல்
லாட் ரெடி பண்ணுதல்	— அடுத்த லாட்டைச் சாயம் போடத் தயார் நிலையில் வைத்திருத்தல்.

லைட் கலர் [ஆ] — சாயப்பொடி சிறிது குறைவாகக் கலந்தால் கிடைக்கும் வெளிறிய நிறம்.

வேட் [ஆ.] — சாயம் போடுதலில் முதல் தரம்; சாயம் போகாது; வேதியியல் பொருட்கள் கலந்து நிறமேற்றும் முறை.

வேட் கலர் [ஆ.] — வேதியியல் பொருட்கள் உபயோகப்படுத்தி நிறமேற்றும் நிறங்கள். [எ. கா.] பச்சை, புழு, அல்லி, வைலட்[1] மெஜண்டா, லைட்புளு, குரோட்டன்.

வேட்கலர் போட்டு நெய்தால் கலர் மாற்றுதல் — நிறம் வேறுபடுத்தச் செயல்படுத்தும் முறை.

ஷேட் மாற்றுதல் — நிறம் மாற்றுதல்.

ஷைட்ரோஸ் — ஹைட்ரோ சல்பேட், நிறமேற்ற உதவும் இரசாயனப் பொருள்

ஜாடித்து அடித்தல் — நூலைத் தடியில் மாட்டி நீரில் அலைச்சும் பொழுது அசைத்து அசைத்து அலைச்சுதலைக் குறிப்பது.

3 அச்சுக்கட்டுதல் தொடர்பானவை.

இத்தலைப்பில் நெசவுத்தொழிலுக்கு வேண்டிய அச்சினைக் கட்டித் தருபவர்களிடையே அத்தொழில் பற்றி வழங்கும் சொற்களின் பொருள் விளக்கப்படுகின்றன.

நெசவுக்கு வேண்டிய அச்சினைக் கட்டித் தருபவர்கள் அச்சுக்கட்டிக்காரர் அல்லது அச்சுக்கட்டி ஆவர். இவர்கள் வாழ்விடத்தைக் குறிக்கக் காஞ்சிபுரத்தில் அச்சுக் கட்டித் தெரு என்று ஒரு தெருவும் உள்ளது.

அச்சுக்கட்டும் தொழில் பெரும்பான்மையாக எல்லா வட்டங்களிலும் உருதுமொழி பேசும் முகம்மதிய மதத்தைச் சார்ந்தவர்களால் செய்யப்படுகிறது. அச்சுக் கட்டுபவர்கள் தமிழ்மொழி பேசும் நெசவாளர்களுக்குரிய அச்சைக் கட்டித் தருதலால் அவர்களுடன் பேசும்பொழுது மட்டும் தமிழில் சில சொற்களைச் சொல்லுகிறார்கள் தங்களுக்குள் உருது மொழியி லேயே இத்தொழில் சார்ந்தவற்றைப் பேசிக் கொள்கிறார்கள். எனவே, அச்சுக்கட்டுதல் சார்ந்து அவர்கள்,நெசவாளர்களிடம் உரையாடலில் வழங்கும் சொற்களின் பொருளே இங்குக் கூறப் பட்டுள்ளன.

சோளத்தட்டின் ஒரு கட்டை, 'ஜுடு' என்பர். அதன்விலை ரூ. 100. சோளத்தட்டை ஈனையாக்கி இவர்கள் அச்சுக் கட்டு கின்றனர். அச்சுப்பல்லே ஈனையென்பது. ஒரு குஞ்சத்திற்கு 60 பல் தேவைப்படுகிறது. ஐம்பது அங்குல நீளத்தில் நாற்பது குஞ்சம் கட்டப்படும். இந்நீளமுள்ள அச்சினைக் கட்ட இரண் டாயிரத்து நானூறு பற்கள் தேவைப்படும். அச்சின் கரைப் பகுதியினை 'ஜம்முலு' எனபா். இப்பகுதி இரட்டைப்பல் லுடையதாயிருக்கும். அச்சுக்கட்டி முடிந்த பின் அச்சில் மேடு, பள்ளம் இல்லாமல் இருக்கச் செங்கல்லால் (வீடு கட்டுதலில் இல்லாதிருக்க வேண்டும் எனச் சொல்லப்படும் சிட்டக்கல்) தேய்த்துச் சமப்படுத்துவர். அச்சுக் கட்டி செம்மைப் படுத்தப் பட்டு வேலை முடிந்ததென்று சொல்வதைத் 'தீர்மானம் செய்யப்பட்டது' என்பர்.

விசைத்தறி நெய்பவர்களும் மற்றும் செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தின் வடக்கு,வடமேற்கு வட்டங்களில் உள்ளவர்களில் சிலரும் இரும்பாலான அச்சும் விழுதும் பயன் படுத்துகின்றனர். அச்சுக்கட்டுதலைப் 'பன்னை கட்டுதல்' என்றும் கூறுவர்.

அச்சு — சோளத்தட்டின் ஈனையினால் உருவாக்கப்பட்ட நெய்தற் கருவி. இழைகளை அடுத்தடுத்து வரிசையாக அமைக்க உதவுவது. ஓர் அச்சில் 2400 பற்கள் இருக்கும்.

அச்சுக்கட்டி — அச்சுக்கட்டுபவர்.

அச்சுக்கட்டுதல்	—	சோளத்தட்டை ஈனையாக்கி இரு மூங்கில் சிம்பல்களுக்கிடையில் வரிசையாகக் கட்டுதல்.
அச்சு கட்டும் கத்தி	—	அச்சுக் கட்ட உதவும் கத்தி; எஃகினால் ஆனது.
அச்சுக்கட்டுபவர்	—	அச்சுக்கட்டும் தொழில் செய்பவர்.
அச்சு திருத்துதல்	—	ஒத்து வெலித்திப் பார்த்தல்.
அச்சு தீட்டுதல் [தீற்றுதல்]	—	அச்சின் ஈனைகளைச் சமப்படுத்துதல்.
அச்சு பார்த்தல்	—	ஆடையின் வகை வரையறுத்தலுக்காக அச்சைப் பார்வை இடுதல்-
அறுபது பல்	...	1 குஞ்சம்.
இரும்பச்சு	...	இரும்புப்பற்களால் கட்டப்பட்ட அச்சு.
ஈக்க (ஈக்கை)	...	சோளத்தட்டின் மிகச் சிறிய பகுதி.
ஈன (ஈனை)	...	சோளத்தட்டுப்பல்.
ஈனை கட்டல்	...	அச்சு பழுது படுங்கால் சோளத்தட்டுப் பல் அச்சில் பாய்த்துக் கட்டுதல்.
ஈனை பாய்ச்சுதல்	...	பழுதுபட்ட அச்சில் ஈனையைச் சொருகுதல்.
ஒத்து பார்த்தல்		ஈனைகள் சமமாக உள்ளனவா எனப் பார்த்தல்.
ஒத்து வெல்த்தி வெலித்தி)ப் பார்த்தல்	...	ஈனைகள் சமஇடைவெளி உடன் உள்ளதாவெனப் பார்த்தல்

கறுப்புக்கல் ... கத்தி தீட்ட உதவும் கருமை நிற முடைய ஒருவகைக் கல்.

கரைகட்டுதல் ... அதிகமாக விரைவில் பழுதுபடும் அச்சின் கரைப்பகுதியிலுள்ள பற்களைக் கட்டுதல்.

கீழ்க்கட்டு ... அச்சுப்பல்லின் கீழ்ப்பக்கம் கட்டப்படும் கட்டு.

கூர்க்கத்தி ... அச்சுப்பல்லைத் தீட்டிச் சமப் படுத்த உதவும் கத்தி.

கோந்து போடுதல் ... அச்சுக்கட்டுப் பகுதிகளில் கோந்து தேய்த்தல்.

சந்தனக்கல் ... கத்தி தீட்ட உதவும் கல்.

சாமான் டப்பா ... கைவேலைப் பொருட்கள் போட்டு வைத்துக் கொள்ள உதவும் சிறிய தகரப் பாத்திரம்.

சிட்டக்கல் ... செங்கல் சூளையில் அதிகமாக வெந்துசிட்டங்கட்டி விட்டதால் வீடு கட்டலில் பயன்படுத்தப் படாதகல். அச்சின் ஓரப்பகுதி மேடு, பள்ளம் இல்லாமல் தேய்க்க உதவுவது.

சிம்பல் செய்தல் ... மூங்கிலில் இருந்து வேண்டிய அளவு மெல்லிய நீண்ட பத்தை சீவி எடுத்துக் கொள்ளல்

சின்ன [சிறிய] பல் ... நீட்டளவு குறைந்துவிட்ட பல்.

சோளத்தட்டு ... சோளப் பயிரின் உலர்ந்த தண்டுப்பகுதி.

சோளத்தட்டுப் பல் ... ஈனை

சோளத்தட்டு அச்சு ... சோளத்தட்டின் ஈனகளால் கட்டப்பட்ட அச்சு.

சோறுவடித்த கஞ்சி ... அச்சுக்கட்டுபவர் பயன்படுத்தும் கஞ்சி.

தக்ளி	... கயிறு முறுக்க உதவும் கருவி.
தீட்டுக்கல் [தீற்றுக்கல்]	... பல் சீவும் கத்தி, தீட்ட உதவும் கல்.
தீர்மானம் செய்தல்	... முழுமையாக வேலை செய்து முடித்தல்.
நடுப்புற சமஒத்தி கட்டல்	... அச்சின் மத்தியில் சற்று நெருக்க மாகக் கட்டுதல்.
நாடா தங்கி	... அச்சின் கடைசிப் பத்தைக் கட்டையின் பக்கத்திலிருக்கும் ஈனைப் பகுதிகள்.
நீங்கல் பார்த்தல்	... ஒத்து வெலித்திப் பார்த்தல்; நெருக்கமாக உள்ளதா, நெருக் கம் குறைவாக உள்ளதா எனப் பார்த்தல்.
நீட்டுப்பல்	... அச்சுக் கட்ட உதவும் பல்லை விட நீளமானது.
பட்டை அடிக்கும்	... ஒத்து வெலித்திப் பார்க்க வில்லை யானால் நெசவில் பட்டையாக இடைவெளியோ நெசவு நெருக்கமாகவோ அமையும்.
பத்தை உடைத்தல்	... சோளத்தட்டைப் பிளத்தல்.
பத்தை சீவுதல்	... மூங்கில் பத்தை சீவுதல்.
பன்னை	... அச்சும் விழுதும் சேர்ந்தது.
பில்லார் குஞ்சி [குச்சி]	... பில்லு. அச்சின் கசடு நீக்க உதவுவது.
பூறா	... ஈனையின் கழிவு.
பேட்டுக்கு வெலித்தியா கட்டல்	... நெசவின் கரைப்பகுதியில் பல்லைச் சிறிது இடைவெளி விட்டுக் கட்டல்.

மேல்கட்டு	—	அச்சுப்பல்லின் மேற்பகுதியில் கட்டப்படும் கட்டு.
மொக்கத்தி (மொக்கைக் கத்தி)	—	அச்சில் ஒத்து வெலித்திப் பார்க்க உதவும் கத்தி.
மோட்டா (இ.)	—	உரப்பு
ரெட்டுபல்லு (இரட்டைப்பல்)	—	அச்சின் ஓரப்பகுதி இரட்டைப் பல்லுடைய தாயிருத்தல்.
ஜம்முலு	—	கரைப்பகுதி, ஒரு பக்க 24 பற்கள் வீதம் இருபக்கத்திலும் சேர்ந்து 48 பற்கள் இருக்கும்.
ஜூடு (சூடு) (த)	—	சோளத்தட்டின் ஒரு கட்டு.
டேப் [ஆ.]	—	நீட்டல் அளவு குறிக்கும் நாடா அச்சின் நீளம் அளப்பதற்குரியது
ஐம்பது இஞ்ச் அச்சு	—	40 குஞ்சம் உள்ள பட்டு, லுங்கிக் குரிய அச்சு.
ஐம்பத்திரண்டு இஞ்ச் அச்சு	—	42 குஞ்சம் உள்ள சேலை, துணி நெய்வதற்குரிய அச்சு.

4. விழுது கட்டுதல் தொடர்பானவை

இத்தலைப்பில் அச்சில் விழுது கட்டுபவர்களிடையே வழங்கும் சொற்களின் பொருள் விளக்கப்படுகின்றன.

தறியில் அச்சுடன் சேர்ந்து கோல்களில் விழுது கட்டித் தருபவரை விழுது கட்டுபவர் என்பர்.

செங்கற்பட்டு எம். ஜி. ஆர் மாவட்டத்தில் பட்டு, நூல் நெசவுகளில் நூல் விழுது கட்டுதலே அதிகமாக வழக்கில் உள்ளது. இரும்பு அச்சும் விழுதும் பிற மாவட்டப் பகுதி களுக்குச் சென்று வாங்கி வருகின்றனர்.


விழுது கட்டுதலில் இழை பொறுக்கல் அல்லது அணி பொறுக்கல் அல்லது புணி எடுத்தல், இழை வாங்கல், பட்டறையில் போடுதல், இழை சரி பார்த்தல், விழுது கட்டுதல் அல்லது இழை மலுக்கு போடுதல் ஆகிய ஐந்து செயற்பாடுகள் முதனில் உள்ளன. பின்னர் விழுதுகளுக்கிடையே நெகிழ்ச்சி இல்லாமல் பார்த்தலை ஈசைந்து இல்லாமல் பார்த்தல் என்பர். பொதுவாக விழுது கட்டுதலில் சாதா அச்சில் நான்கு கோலும் பனாரஸ் அச்சில் எட்டுக் கோலும் தேவைப்படுகின்றன. ஓர் அச்சுக்கு விழுது கட்ட நான்கு பேர் தேவை. இரண்டு நாட்களில் ஓர் அச்சுக்கு விழுதுகட்டி முடிக்கப்படும். தனிநபர் ஒருவரே எல்லா வேலைகளையும் செய்து முடித்தலும் உண்டு. சிலர் நூல் விழுதிற்குப் பதில் நைலான் விழுதும் பயன்படுத்துகின்றனர். பட்டு நெசவிற்கும் நூல் நெசவிற்கும் எனத் தனித் தனி எண் உடைய விழுதுகள் விழுது கட்டுதலில் பயன்படுத்தப் படுகின்றன.

அச்சு கட்டும் முகம்மதியர்களே சில வட்டங்களில் விழுது கட்டுதலிலும் தேர்ச்சி பெற்றவர்களாய் இரண்டு தொழில்களையும் ஒருங்கே செய்து வருகின்றனர். இனி, விழுது கட்டுதல் சார்ந்து அத்தொழில் செய்பவரிடையே வழங்கும் சொற்களின் பொருள் விளக்கம் காணலாம்.


அச்சுக்குழை போடும் ஊசி அச்சு வாங்கும் ஊசி	}	அச்சில் குழை போட உதவும் ஊசி. இதில் காது இருக்கும்.
அச்சு விழுதுகோல்	—	விழுது கட்டப் பயன்படுத்தும் கோல்.
அணி பொறுக்குதல்	—	புணி எடுத்தல்.
அறப்பு போடுதல்	—	விழுது கோலில் மலுக்கு இழுத்து வாராமலிருக்கச் செய்யும் செயல்.
அலுமினியக்கோல்	—	விழுதுகட்டுதலில் பயன்படுத்தப் படும் அலுமினியத்தாலான கோல்.
இசுவு (இசுப்பு)	—	விரைப்பு.

அசைந்து இல்லாமல் பார்த்துக் கொடுத்தல்	—	விழுதுகட்டப் படுவதில் உண்டாகும் பிகுவு, நெகிழ்ச்சி ஆகியன இல்லாமல் பார்த்துக் கொடுத்தல்
எழ [இழை] சரிப் படுத்துதல்	—	பாவு இழை, தளர்த்தி, இசுப்பு இல்லாமல் பார்த்தல்.
எழ [இழை] பொறுக்குதல்	—	இழையை மாற்றி முறுக்கிக் கொள்ளுதல்.
எழ [இழை] வாங்கல்	—	பொறுக்கிய இழைகளை அச்சில் விழுதில் கோத்து வாங்குதல்.
எழ [இழை]வாங்கும் ஊசி	—	பன்னையில் விழுதுக்குள் இழை நூலைத்து வாங்கப் பயன்படுத் தப்படும் ஊசி. இதில் காது இருக்காது.
கஞ்சி தீற்றுதல்	—	விழுதுகட்டி முடிந்தபின் கையாலோ துணியினாலோ விழுதுகளுக்குக் கஞ்சி தடவுதல்.
கன்னிமுறுக்கு	—	விழுதுகட்டலில் புணி பொறுக் கலுக்குச் செய்யப்படும் முதல் முறுக்கு.
காகூறு [கால்கூறு]	...	தத்திக்கயிறு போட அச்சைச் சம பங்காகப் பிரிக்கப்படும் பிரிவு.
கொல்சு [கொலுசு]	...	கோலில் விழுதை ஒரு சுற்று சுற்றுதலைக் குறிப்பது.
கோல்	...	உருளை வடிவமான நீண்ட கோல்.
கோல் உழற்றுதல்	...	இழைகள் சமநிலைக்கு வரக் கோலை உழற்றுதல்.
சாதா அச்சு	...	4 கோல் விழுது உடையவை.
சிம்பல்	—	விழுது கட்டுதலில் பயன்படுத்தப் படும் 3 மூங்கில் பத்தைகள்.


சுத்தம் செய்தல்	— விழுதுகளைச் செப்பனிடுதல்.
சுற்றுக் கொலுசு	— கால்கூறு அடையாளத்திற்கு இரட்டை விழுதுகட்டிச் சுற்றுக் கொலுசு போடுதல்.
தீட்ற (தீற்றும்) கம்பி	— தீற்றுதலுக்கு விழுது கட்டுபவர் பயன்படுத்தும் கம்பி.
தீற்றும் புல்லு	— அச்சைத் தீற்ற உதவும் மரக் கட்டை.
தேக்கோல்	— விழுதுகட்டுதலில் பயன்படுத்தப் படும் தேக்கு மரத்தாலான கோல்.
நூல் விழுது	— நூல் நெசவுக்கு 40 அல்லது 60 ஆம் எண்ணுள்ள விழுது பயன்படுத்துதல்.
நெரவுதல் [நிரவுதல்]	— விழுதுகளைச் சமப்படுத்துதல்.
பட்டறை	— விழுது கட்டுதலில் பயன்படுத் தப்படும் சாதனம்.
பட்டறையில் போடுதல்	— விழுதுகட்ட வேண்டியவற்றைப் பட்டறையில் இடுதல்.
பட்டறையைத் திருப்புதல்	— மேல்பகுதியில் விழுது கட்டிய பின்பு கீழ்ப்பகுதியைக் கட்ட பட்டறையை அல்லது பன்னை யைத் திருப்புதல்.
பன்னையைத் திருப்புதல்	— பட்டறையைத் திருப்புதல்.
பட்டு விழுது	— பட்டு நெசவில் உடலுக்கு 30 ஆம் எண்ணுள்ள விழுதும் கரைக்கு 10ஆம் எண்ணுள்ள விழுதும் பயன்படுத்துதல்.
பனங்கோல்	— விழுது கட்டுதலில் பயன்படுத்தப் படும் பனைமரக்கோல்.
பனாரஸ் அச்சு	— 8 கோல் விழுது உடையவை.
பன்ன (பன்னை) கட்டுதல்	— விழுது கட்டுதல்.




அச்சுக் கட்டுதல் பக். 330




விழுது கட்டுதல் பக். 337



அடை கட்டுதல் பக். 339



வரைதாளில் புள்ளி வைத்தல் பக். 341



அடை கட்டுதல் டுவைன் மாட்டுதல் பக். 340



அடை கட்டுதலில் துடிப்பு போடுதல் பக். 340

பன்னை	— விழுது கட்டிய அச்சு.
பலகை பாகை	— விழுது கட்ட உதவும் பலகை.
புணி எடுத்தல்	— இழை பொறுக்குதல்.
மலுக்கு போடுதல்	— குழைமுடிச்சு போடுதல்.
மான்கொம்பு	... விழுதுகட்டப்பட்ட பகுதியில் தேய்க்க உதவும் கருவிகளுள் ஒன்று.
முறுக்கு அச்சு ஓரம் தள்ளுதல்	... முறுக்குடைய விழுதுப் பகுதியினை பன்னையின் மத்தியில் இல்லாமல் அச்சோரம் தள்ளி விடுதல்.
லைலான் [நைலான்] விழுது	... விழுது கட்டுதலில் நூல் விழுதிற்குப் பதில் நைலான் விழுது பயன்படுத்தப்படுதல்.
வியுது [விழுது]	... முறுக்கேற்றப்பட்ட மெல்லிய நூல்.
விழுது கட்டுதல்	... பன்னையில் உள்ள நான்கு கோல்களுக்கும் விழுது கட்டுதல்.
விழுது கட்டும் ஊசி	... அச்சு வாங்கும் ஊசி.
விழுது கட்டி விழுது கட்டுபவர்	... விழுதுகட்டும் தொழில் செய்பவர்.
விழுது கம்பி	... விழுதுகள் மாட்டியுள்ள கம்பிகள்.
விழுது சட்டம்	... விழுதினைத் தாங்கியுள்ளச் சட்டங்கள்.
பன்னை ஸ்டேண்டு [த. + ஆ.]	... பன்னை கட்டப் பயன்படுத்தப்படும் தாங்கி,

5. அடைகட்டுதல் தொடர்பானவை

இத்தலைப்பில் ஆடைகளில் வடிவம் உண்டாக்கும் அடைகளைக் கட்டித் தருபவர்கள் அத்தொழில் சார்பாக வழங்கும் சொற்கள் விளக்கப்படுகின்றன.

பட்டு, நூல் ஆடைகளில் வடிவம்(Design) அமைக்கச் செய்யப்படும் செயலே அடைகட்டுதல் ஆகும். அடைகட்டுதல் தனித்திறன் பயிற்சி உடையவர்களால் செய்யப்படுகிறது. வடிவம் அமைத்தலில் ஜாக்கார்டு(Jacquard), டிராபாய் டாபி (Draw-boy doby), பேரல் டாபி (Barrel dobby), லேட்டிஸ் டாபி (Latticedobby), நூல் டாபி(Threaddobby) என்னும் ஐந்து முறைகள் உள்ளன. இவற்றில் ஜாக்கார்டு என்பது அவ்வமைப்புக் கருவியைக் கண்டுபிடித்தவரின் பெயராலும் மற்ற நான்கு முறைகளும் அவ்வடிவமைப்புக் கருவிகளின் பெயராலும் வழங்கப்படுகின்றன. இவ்வடிவம் அமைக்கும் முறைகள் ஓர் ஊரில் வாழும் மக்களின் தொழில் முறை, அவர்கள் விரும்பும் வடிவம் ஆகியவற்றிற்கேற்ப மாறுகிறது. செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில் பட்டு, நூல் நெசவுகளில் அடைகட்டுதல் சுமார் ஐம்பது வருடங்களாக இருந்து வருகிறது. ஜாக்கார்டு முறை 1958 இல் வழக்கிற்கு வந்தது என்பர். இம்முறையில் வடிவம் அமைத்தலே இம்மாவட்டத்தில் பெரும்பான்மையாக உள்ளது.

அடை கட்டுதலில் பேட்டு, புட்டா, செலுப்பு என மூன்று வகை உண்டு. இம்மூன்றும் நெசவில் சேர்க்கப்படும் தனி இழைகள் ஆகும். பேட்டு, பாவின் நீட்டிலும்(Extra warp healds) புட்டா, செலுப்பு ஆகிய இரண்டும் பாவின்(Extra weft healds)வடிவம் அமைக்கச் செய்யப்படும் செயல்களாம்.

ஆடையில் எவ்வடிவம் அமைக்க வேண்டுமோ அவ்வடிவத்தை முதலில் தாளில் அல்லது அட்டையில் வரைந்து கொண்டு பின்னர் உருவம் அமைப்பர். இரண்டாவதாக வரைதாளில் புள்ளி வைத்து உருவம் உண்டாக்குவர். மூன்றாவதாக வடிவத்திற்கேற்ப அடை கட்டத் தொடங்குவர். அடைகட்டப் பயன்படுத்தும் அட்டையில் மூன்று விதமான துளைகள் உண்டு. அவை 1. அட்டைகளை வரிசைப்படுத்தும் துளை,

2. பதிய வைக்கும் துளை, 3. வடிவம் உண்டாக்கும் துளை என்பன. இதில் வடிவ அட்டை பின்னும் ஏணி ஒன்றும் பயன் படுத்தப்படுகிறது. பேட்டு, புட்டா, செலுப்பு ஆகிய மூன்று வகைகளுக்கும் அடைகட்டத் தனித்தனியே மூன்று அடை கட்டும் பலகை, கோல் உண்டு. அடை கட்டுபவர் ஓர் அங்குலத் திற்கு எண்பது இழைகள் [40 குளிகை] வருமாறு வடிவம் அமைப்பர். இவர்கள் வடிவமைத்துக் கொடுக்கும் வடிவங்களே ஆடைகளில் உண்டாக்கப்படுகின்றன.

செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத்தில், பட்டாடை யில் வடிவம் அமைத்தல் காஞ்சிபுரம் வட்டத்திலும், நூலாடை யில் வடிவம் அமைத்தல் பொன்னேரி வட்டத்திலும் சிறப்பாக நடைபெறுகின்றன.

இனி, அடை கட்டுதல் தொடர்பான சொற்களின் பொருள் விளக்கம் காணலாம்.

அட [அடை] கட்டுதல்	... ஆடைகளில் பூவேலைப்பாடு செய்வதற்குரிய முறையில் விழுதுகளைக் கட்டுதல்.
அடை கட்டுபவர்	... வடிவ அமைப்புக்கேற்ப விழுது களைத் தொகுத்துக் கட்டித் தருபவர்.
அடை கட்டும் ஏணி	... அடை கட்டுதலுக்குப் பயன் படுத்தப்படும் ஏணி.
அடை கட்டும் பலகை	... பேட்டு, புட்டா, செலுப்பு ஆகிய மூன்றும் கட்டுவதற்கென தனித் தனியே அமைந்த பலகைகள்.
அடைக்கயிறு	... ஆடையில் பூவேலைப்பாடு செய்ய உதவும் அமைப்புக்கு உரிய கயிறு.
அடைக்கு உருவம் வரைதல்	... அடை கட்ட வேண்டிய உருவத்தை அளவுக்கேற்ப தாளில் வரைந்து கொள்ளுதல்.

ஊடையில் தனி இழைகள் ... மொக்கு, ரேக்கு ஆகிய உருவங்கள் உண்டாக ஊடையில் பயன்படுத்தும் தனி இழைகள்.

செல்ப்படை [செலுப்படை] கட்டுதல் ... முன்தானையில் பூவேலைப்பாடு அமைக்க அடை கட்டுதல்.

செலுப்பு ஆசு ... செலுப்பு விழுதினுள் பூவேலைப்பாடு அமைவதற்காகக் கட்டப்படும் கயிறுகள்.

டுவைன் மாட்டுதல் ... அடை விழுதுகளுடன் முறுக்கிழை [டுவைன்] சேர்த்துக் கட்டுதல்.

துடுப்பு போடுதல் — அடை கட்டும் செயல்களில் ஒன்று.

பாவில் தனி இழைகள் — வளையல், பேல்தாரி, வங்கி, பனாரஸ் முதலியன உண்டாக்க பாவில் பயன்படுத்தும் தனி இழைகள்.

புட்டாட [புட்டா அடை] கட்டுதல் — பாவின் உடலில் பூவேலைப்பாடு செய்ய அடை கட்டுதல்.

பேட்டட [பேட்டடை] கட்டுதல் — கரையில் பூவேலைப்பாடு செய்ய அடை கட்டுதல்.

வடிவ அட்டை — வடிவம் அமைக்கப் பயன்படுத்தப்படும் அட்டை.

வடிவ அட்டையிலுள்ள துளைகள் — வடிவம் உண்டாக்கும் துளை, அட்டைகளைப் பதிய வைக்கும் துளை, அட்டைகளை வரிசைப்படுத்தும் துளை ஆகிய மூன்று துளைகள்.

வடிவ அட்டை பின்னும் ஏணி — வடிவ அட்டைகளைத் தொடர்ச்சியாக அமைப்பதற்குப் பயன்படுத்தும் ஏணி.

வடிவம் அமைக்க உதவும் கயிறு — வடிவம் அமைத்தலில் பயன்படும் நாடா, குச்சிக்கயிறு, நைலான் விழுது, பச்சைக் கயிறு 30 ஆம் எண்ணுள்ள விழுது, வெண் முறுக்கிழை முதலிய கயிறுகள்.

வடிவம் உண்டாக்கஉதவும் கருவிகள் — வடிவம் உண்டாக்க அட்டைத் துளைப்பான், வடிவம் அமைப்பதற்குரிய சிறிய, பெரிய ஆணிகள், சுத்தி முதலிய கருவிகள்.

வரைதாளில் புள்ளி வைத்தல் — அடைகட்டும் உருவத்தை வரைதாளில் புள்ளிவைத்துக்குறித்துக் கொள்ளல்.

டாபி ... பாவின் உடலில் பூவேலைப்பாடு செய்யப் பயன்படுத்தும் சிறு கருவி அல்லது சாதனம்.

டிராபாய் டாபி ... வடிவம் அமைக்கப்படும் ஐந்து முறைகளுள் ஒன்று.

திரட்டாபி ... வடிவம் அமைக்கப்படும் ஐந்து முறைகளுள் ஒன்று.

பேரல் டாபி ... வடிவம் அமைக்கப்படும் ஐந்து முறைகளுள் ஒன்று.

லேட்டிஸ் டாபி ... வடிவம் அமைக்கப்படும் ஐந்து முறைகளுள் ஒன்று.

ஜாக்கார்டு ... வடிவம் அமைக்கப்படும் ஐந்து முறைகளுள் ஒன்று; இம்முறையில் வடிவம் அமைத்துக் கொடுத்தவரின் பெயரால் வழங்கப்படுவது.

6. தோய்ச்சடி அல்லது பாவடித் தொடர்பானவை

இத்தலைப்பில் நூல் நெசவில் பொரப்பாவுக்குக் கஞ்சி போட்டுத் தரும் தோய்ச்சடிக்காரரிடையே வழங்கும் சொற்கள் விளக்கப்படுகின்றன.

தோய்ச்சடி என்பது பொரப்பாவுக்குக் கஞ்சி போட்டுத் தோயும் இடம் ஆகும். வழக்கில் தோய்ச்சடியைத் 'தோச்சடி' என்பர். தோய்ச்சடியைப் 'பாவடி' என்றும் வழங்குவர். தோய்ச்சடியில் பணிபுரிகின்றவர்கள் 'தோய்ச்சடிக்காரர்' ஆவர். இவர்கள் பாவுக்குக் கஞ்சி போட்டுத் தருதலில், மழைக்காலத்தில் ஈரம் எளிதில் உலரவில்லை என்றும் வெயிற் காலத்தில் இழைகள் அதிகமாகத் துண்டித்துப் போகிற தென்றும் கூறுகின்றனர்; மிதமான வெப்ப நிலையில் தங்களுக்கு வேலை எளிதாக நடைபெறுகிறதென்றும் இயம்புகின்றனர்.

தோய்ச்சடிக்காரர்கள் பாவுக்குக் கஞ்சி போட்டுக் கொடுத்தலின் பொருட்டு ஆலையில் ஓடப்பட்ட கொத்துப்பாவு நூலை ஆடை உற்பத்தியாளர்களிடமிருந்து பெறுகின்னர். இவர்கள் இத்தொழிலை தலைமுறை தலைமுறை வழியாகச் செய்து வருகின்றனர். தோய்ச்சடியில் ஊடுதியின் கயிறு மாட்ட நிரந்தரமாக அடிக்கப்பட்டுள்ள மரக்கொம்பைக் கூசு [கூச்சு] என்பர்.

பாவுக்குக் கஞ்சி போடுதலில் வலிக்கிற பில், கஞ்சா றபில் என்று இருவகையான பில்லுகளையும் அளுகுஞ்சு என்ற சிறு தூரிகையினையும் பயன்படுத்துகின்றனர். பாவிற்குக் கஞ்சியடிப்பவர் இவ்வேலை செய்பவர்களில் பெரியாள் என்றும், பில் ஏந்தி வருபவர் சிற்றாள் என்றும் வழங்கப்படுகின்றனர். ஒரு தோய்ச்சடியில் ஒரு பாவுக்குக் கஞ்சி போடப்படும். ஒரு தோய்ச்சடிக்கு ஐந்து ஆள் தேவை. இவர்களில் பெரியாள் இருவரும் சிற்றாள். மூவரும் ஆவர். பெரியாள் ஆணாகவும் சிற்றாள் பெண் அல்லது சிறுவர் ஆகவும் இருப்பர். ஒரு பாவுக்கு மூன்றுபேர் தேவை. இடைப்பட்ட இருவர் இரு பாவிற்கும் மாறிமாறிச் சென்று தம் கடமையைச் செய்கின்றனர். இவர்கள் இப்பாவினை 'ஓடல் பாவு' என்பர். பத்துப்பத்து

பொந்துகளாகக் கஞ்சிபோட்டு முடித்தபின் நூல்களை முறுக்கி வெண்டு போட்டு [பாவைச் சுற்றும் முறை]த் தாம் வாங்கி வந்த கம்பெனிக்காரர்களிடத்தில் ஒப்படைக்கின்றனர்.

இனி தோய்ச்சடிக்காரரிடையே வழங்கும் சொற்களின் பொருள் விளக்கம் காணலாம்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
அச்சி அறப்பு கோலு	அச்சு அறுப்புக் கோல்.	வாரிழை இருக்குமிடம் உள்ள கோல். அச்சில் பிணைப்பதற்காக இழை அறுக்கப்படும் இடம்.
ஏணிகட்டு	அணிக்கட்டு	புணிக்கட்டு. பாவடியில் பாவு தோய்ந்து முடியும் பொழுதுள்ள அணிக்கட்டு.
அளுகுஞ்சு	அளுகுஞ்சு	தோய்ச்சடியில் பயன்படுத்த பூந்துடைப்பத்தின் வேரினால் செய்யப்பட்ட தூரிகை.
அளுவு உருவுதல்	அளவு உருவுதல்	பாவில் கஞ்சி போட்டு உலர்ந்த பின் அளவு உருவுதல் / எடுத்து விடுதல்.
அளுவு ஒயட்டுதல்	அளவு உழற்றுதல்	கஞ்சி போட்டபின் அளவை இருக்குமிடத்திலேயே இழைகளின் பிணிப்பு நீங்க உழற்றுதல்
அளுவு தட்டுதல்	அளவு தட்டுதல்	பாவிடையே கஞ்சி போட்டபின் பிணிப்பு நீங்கி ஈரம் உலர அளவால் தட்டுதல்.
அளுவு பாசுதல்	அளவு பாய்ச்சுதல்	கொத்துப் பாவைப பிரித்து அதிலுள்ள 18 புணிகளில் 36 அளவு பாய்ச்சுதல்.
எண்ண போடுதல்	எண்ணெய் போடுதல்	இழைகள் தம்முள் ஒட்டிக் கொள்ளாமலிருக்கக் கஞ்சியுடன் எண்ணெய் சேர்த்தல்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
எழ துண்டித்தல்	இழை துண்டித்தல்	வெப்பக்காலத்தில் வேண்டிய எண்ணெய்ப் பசையுடன் கஞ்சி இல்லையானால் இழைகள் துண்டித்துப் போதல்.
ஓடல் பாபு	ஓடல் பாவு	உடல்பாவு அல்லது கொத்துப் பாவு.
கஞ்சியடிப் பவர்	கஞ்சியடிப்பவர்	கயிலி பாவுக்குக் கஞ்சி போடும் பெரியாள்.
கஞ்சி தீத்துதல்	கஞ்சி தீற்றுதல்	கஞ்சைத் தெளிவாக்கலின் பொருட்டுத் துணியில் ஊற்றித் தேய்த்து வடிகட்டுதல்.
கஞ்சாற பில்லு	கஞ்சிழையும்பில்	கஞ்சி இழையும் பில். மஞ்சம் புல் வேரினால் ஆனது.
கஞ்சி வெச்சி கொழ தூவுதல்	கஞ்சி வைத்துக் குழை தூவுதல்	கோல் பகுதியில் உள்ள நூல் குழைவாக இருப்பதால்அவ்விடம் தனியாகக் கஞ்சி வைத்துத் தூவுதல்,
கட்டு கட்டுதல்	கட்டு கட்டுதல்	பாவு தோய்ந்து முடிந்தபின் கட்டு கட்டுதல்.
காசல் தாங்காது	காய்ச்சல் தாங்காது	கோடைகாலத்தில் பாவிழைகள் அதிக வெப்பம் தாங்காமை.
காத்தாறு தல்	காத்தாற்றுதல்	அளவை கீழ்மேலாக நிமிர்த்தி பாவைக் காற்றிலாற்றுதல்.
கூசு	கூச்சு	தோய்ச்சடியில் கட்டப்பாரை போன்று பயன்படுத்தப்படும் நிலையான மரத்தாலான கட்டை.
கூட்டாண்	கூட்டாண்	கூச்சு.
கூலியாளு	கூலியாள்	தோய்ச்சடியில் வேலை செய்யும் கூலியாள்.

பேச்சுவழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
கெட்டி கஞ்சி	கெட்டிக் கஞ்சி	தீர்ப்புக் கஞ்சி.
கொழ தூவற கோலு	குழை தூவும் கோல்	பாவின் குழைப்பகுதியில் உள்ள கோல்.
கொழ தோய்தல்	குழை தோய்தல்	பாவின் குழைப் பகுதியைத் தோய்த்தல்.
கோடு வைத்தல்	கோடு வைத்தல்	அளுவை நிமிர்த்துதல்.
கோல் தீத்துதல்	கோல் தீற்றுதல்	கோலில் பசையில்லாமல் இருக்கக் கோலை ஏர்த்தண்டில் தீற்றுதல்.
சந்து	சந்து	அணி உள்ள பகுதி.
சித்தாளு	சிற்றாள்	தோய்ச்சடியில் பில் ஏந்தி வருபவர்.
செலவ நூல்	சலவை நூல்	சலவைப்பொடியினால் வெண்மையாக்கப்பட்ட நூல்.
தடி	தடி	தோய்ச்சடியில் கஞ்சி போடுபவர் பயன்படுத்தும் நீண்ட கோல்.
திறம் போற்றது	திறம் போடுதல்	திருப்பிப்போடுதல்.
தீர்ப்பு கஞ்சி	தீர்ப்புக் கஞ்சி	தோய்ச்சடியில் பாவிற்கு இடப்படும் இரண்டாம் கஞ்சி.
தூர் கோலு	தூர்க்கோல்	பாவு மடங்கி வரும் இடத்திலுள்ள கோல். குழை தூவும் கோல்.
தூர் பில்லு	தூர்ப்பில்	தெளிவு வரச்செய்ய பயன்படுத்தும் பில். மூன்றாவதாக ஓடும் - வலிக்கும் பில்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
தூவுதட்டு தல்	தூ வுதட்டுதல்	தெளிவு செய்தல்.
தெளிவா தட்டுதல்	தெளிவாத் தட்டுதல்	பாவின் இழைகளைத் தனிப் படுத்த முதலில் பில்லு வருதல்.
தேங்கா எண்ண கூட்டல்	தேங்காய் எண்ணெய கூட்டல்	பாவு மிருதுவாக - வழவழப்பாக இருக்கக் கஞ்சியுடன் தேங்காய் எண்ணெயைச் சேர்த்தல்.
தோச்சடி	தோய்ச்சடி	பாவடி.பொரப்பாவுக்குக் கஞ்சி போட்டுச் சீர் செய்யும் இடம்
பச	பசை	பச்சைஅரிசி மாவினால் செய்யப் பட்ட கூழ்.
பணிவூர்த கவுறு	பணிவூர்தக்கயிறு	தோயச்சடியில் நிரந்தரமாகக் கட்டப்பட்டுள்ள கயிறு.
பத்தகர	பத்தைக் கரை	பாவின் அடிப்பகுதியில் எஞ்சிய அறுத்தெடுக்கப்பட்ட நூல்.
பாவடி	பாவடி	பொரப்பாவுக்குக் கஞ்சி போடு மிடம்.
பாவு காயாது	பாவு காயாது	மழைக்காலத்தில் கஞ்சி போட்ட பாவு எளிதில் உலராமை.
பாவுதூவி தட்டுதல்	பாவு தூவி தட்டுதல்	பாவு தெளிவாக்கத் தட்டுதல்.
பாவு நைநைப்பா இருத்தல்	பாவு நயநயப் பாய் இருத்தல்	குறித்தளவு எண்ணெய் சேர்க்கப் பட்ட பசையுடன் தோய்ந்த பாவின் தன்மை; பாவு மிருது வாய் இருத்தலைக் குறித்தல்.
பிரிச்சி அளுவு போடுதல்	பிரித்து அளவு போடுதல்	கொத்துப்பாவைப் பிரித்து நீட்டி அளவு போடுதல்.
பில் ஏற்பவர்	பில் ஏற்பவர்	தோய்ச்சடியில் வேலை செய்யும் சிற்றாள்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
பில்லுதள்ளு	பில்லு தள்ளு	கஞ்சி போட்ட பாவின் மீது பில்லோட்டுதல்.
புருசல்	புருசல்	பத்தைக் கரையில் கஞ்சி தெளிக்க செய்யப்பட்ட கருவி.
புருசல	புருசீல்	புருசல்.
பெரியாளு	பெரியாள்	தோய்ச்சடியில் கஞ்சியடிப்பவர்.
முதல்பில்லு	முதல்பில்	பாவு தெளிவு செய்தலுக்கு ஓடப்படும் பில்.
முறுக் கேற்றுதல்	முறுக்கேற்றுதல்	தோய்ச்சடியில் பாவு தோய்ந்து முடிந்த பின் கட்டு கட்டி அளவு எடுத்த பின் பாவை முறுக்குதல்.
மூணாவது கஞ்சி	மூன்றாம் கஞ்சி	இழை தாங்குவதாய் இருந்தால் போடப்படும் கஞ்சி.
மெல்லீஸ் கோலு	மெல்லியகோல்	பாவைத் தெளிவாக்கத் தட்டப் பயன்படுத்தும் மெல்லிய மூங்கில் கோல்.
மொதகஞ்சி	முதல் கஞ்சி	தோய்ச்சடியில் பாவிற்கிடப் படும் முதல் கஞ்சி.
மோக் கட்டுதல்	முறுக்கிக் கட்டுதல்	கயிற்றை மூறுக்கிக் கட்டுதல்
மோக் தளர்த்தல்	முறுக்கைத் தளர்த்தல்	கயிற்றின் முறுக்கைத் தளர்த்து தல்.
மோக் பிகுவாய் இருத்தல்	முறுக்குபிகுவாய் இருத்தல்	முறுக்குண்ட கயிறு விரைப்பாக இருத்தல்.
மோக்கு தடி	முறுக்குத் தடி	கயிற்றை முறுக்க உதவும் சிறு கொம்பு.
மோக்கு போடுதல்	முறுக்குப்போடுதல்	கயிற்றை முறுக்குதல்.

பேச்சு வழக்கு	எழுத்து வழக்கு	பொருள்
மோக்குவை	முறுக்கு வை	கயிற்றை முறுக்கி, முறுக்குத் தளராமல் இருக்க ஒரு சிறு கொம்பைக்கயிற்றினுள் சொருகி நிலத்தில் ஊன்றுதல்.
வடி கட்டுதல்	வடிகட்டுதல்	கஞ்சியை வடிகட்டுதல்.
வலிக்கிற பில்லு	வலிக்கும் பில்	தோய்ச்சடியில் பயன்படுத்தும் இருவகைப் பில்லில் ஒன்று. பூந்துடைப்ப வேரினால் செய்யப்பட்டது; கனமாயிருக்கும்.
வடிச்சி கட்டுதல்	வலித்துக் கட்டுதல்	கயிற்றை இழுத்துக் கட்டுதல்.
விசிற்றது	விசிறுதல்	பாவை நிமிர்த்தி அளவைப் பிடித்துக் கொண்டு அசைத்தல்.
வெண்டி போடுதல்	வெண்டு போடுதல்	தோய்ந்து முறுக்கிய பாவை முன்கையில் சுற்றிச் சுற்றுதல்,
கம்பெனி	கம்பெனி (ஆ.)	தோய்ச்சடியில் வேலை செய்பவர்கள் கொத்துப் பாவினை வாங்கி வருமிடம்.
காசல் ஓவர்	காய்ச்சல் ஓவர் (த. + ஆ.)	வெயிற் காலத்தில் வெப்பம் அதிகமாக உள்ளதா பாவுல் அவ்வெப்பத்தைத் தாங்காமையைச் சொல்வது.

7. அளவைப் பெயர்கள்

இத்தலைப்பில் நெசவுத்தொழிலில் வழங்கும் அளவைப் பெயர்கள் குறித்த சொற்கள் விளக்கப்படுகின்றன.

20, 26, 30, 40, 60, 80, 100 முதலிய எண்ணுள்ள நூல்கள் உண்டு. இழைகள் எந்த எண்ணுள்ள நூல் எனச் சொல்லப் படுகிறதோ அந்த எண்ணுள்ள பொந்துகள் சேர்ந்தது ஒரு கட்டு ஆகும். இவற்றில் 20, 26, 30, 40 எண்ணுள்ள நூல்கள்

கட்டு அல்லது கண்டு என்ற அளவில் சொல்லப்படும். இவற்றில் பொட்டி [பெட்டி] அளவு கிடையாது; 1 கட்டு [bundle] நூலின் எடை 4. 54 கிலோகிராம். இவ்வெண்கள் கொண்ட நூல்களில் 40 கட்டுகள் சேர்ந்தது 1 பேல் ஆகும். 60, 80, 100 எண்ணுள்ள நூல்கள் ½ பேல் ஆகத்தான்வரும். 60 ஆம் எண் நூலில் 30 பொந்துகள் (15 லடிகள்) சேர்ந்தது 1 பொட்டி ஆகும். 80 ஆம் எண் நூலில் 40 பொந்துகள் (20 லடிகள்) சேர்ந்தது 1 பொட்டி ஆகும். 100 ஆம் எண் நூலில் 50 பொந்துகள் [25 லடிகள் அல்லது கண்டுகள்] சேர்ந்தது 1 பொட்டி ஆகும். 60, 80, 100 எண்கள் கொண்ட நூலில் 2 பொட்டிகள் சேர்ந்தது 1 கட்டு ஆகும். 40 பொட்டிகள் சேர்ந்தது ½ பேல் ஆகும். இவற்றில் 1 பொட்டி நூலின் எடை 2. 27 கிலோகிராம். நூல் அளவுகள், நூல் உற்பத்தி செய்யப் படும் பஞ்சாலையில் சொல்லப்படும் அளவுகள் இங்குக் குறிப் பிடப்படுகின்றன.

நூல் அளவு

7 குஞ்சம்	- 1 சிலுப்பை (Hank)
8 குஞ்சம்	- 160 இழை
	- 240 கஜம்
1 சிலுப்பை	- 1680 கஜம்
10 சிலுப்பை	- 1 பொந்து (Knot)
2 பொந்து	- 1 லடி
	- 1 சடை
2 சிலுப்பை	- 1 அணி
5 அணி	- 1 பொந்து
60 இழை	- 1 தலை
8 இழை	- 1 அடுக்கு அல்லது இடுக்கு
456 கதிர்கண்டு	- 1 டாப்
1 உருளை நூல் அளவு	- 19 கிலேகிராம்
1 பொறை	- 8 லுங்கி - 16 மீ.
	- 2 பீஸ்
	- 4 மடி
1 மடி	- 2 லுங்கி

1 பீஸ்	- 4 லுங்கி
1 துண்டு	- 1 லுங்கி

பட்டு அளவு:

1 பல்	- 2 இழை
1 குளிகை	- 2 இழை
4 பல்	- 1 அடுக்கு
15 அடுக்கு	- 1 குஞ்சம்
60 குளிகை	- 1 குஞ்சம்
36 குஞ்சம்	- 18கால்
5 சிலுப்பை	- 1 கட்டு
10 சிலுப்பை	- ½ கிலோ
1 மார்க்	- 4 சரிகைக்கட்டைகள்
	- 243 கிராம் (கட்டையின் எடை இல்லாமல்)
1 சரிகைக் கட்டை	- 72 கிராம்
1 காலி சரிகைக் கட்டை	- 11 கிராம் (ஏறக்குறைய)

இம்முறையில் மேற்கண்ட நான்கு, ஐந்தாம் இயல்களில் நெசவுத் தொழிலும் அதன் துணைத் தொழில்களும் சார்ந்து தொகுக்கப்பட்ட சொற்கள், பொருள் வழிப்பாகுபாட்டின் அடிப்படையில் பிரித்துப் பொருள் விளக்கம் காணப்பட்டன.

இயல்-6

உழவும் நெசவும்-சொல்வழிப் பாகுபாடு

பொருள்வழிப் பாகுபாட்டின் அடிப்படையில் முந்தைய இயல்களில் உழவு, நெசவு பற்றிய சொற்களைத் தனித்தனியே கண்டோம். இவ்வாறாம் இயலில் உழவு, நெசவு பற்றிய சொற்களைச் சொல்வழிப் பாகுபாட்டின் அடிப்படையில்தனிச் சொல், தொகைச் சொல், கூட்டுச்சொல் ஆக வருவனவற்றை யும், சொல்லாக்க முறைகளையும் காண்போம்.

ஒரு தொழிலைச் செய்பவர்கள் தங்கள் தொழிலுக்கெனவே பயன்படுத்தும் கலைச்சொற்கள் சில உள்ளன. அச்சொற்கள் யாவும் அச்சொல் குறிக்கும் பொருளொடு இயற்கையாகவே தொடர் புடையனவாம், 'மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா'[1] என்கிறது தொல்காப்பியம். உலகில் காணப்படும் பொருட்களுக்கு வழங்கும் பெயரின் காரணம் இற்றை நாளில் நம்மால் அறிய இயலாமையினால் அச்சொற் களில் சில இடுகுறி எனக் கருதுதல் தவறென மொழி நூலறிஞர்[2] கருதுவர்.

தமிழ் தொன்மையான மொழி, எனவே இம்மொழியில் காணப்படும் தொழில் சார்புடைய சொற்களில் பெரும் பான்மையன தமிழ்ச் சொற்களாகவும் சிறுபான்மையன பிறமொழிச் சொற்களாகவும் உள்ளன. அவற்றுள் புதிய சொல்லாக்க முறையில் அமையும் சொற்கள், பிறமொழித் தொடர்பால் உருவாகும் சொற்கள் ஆகிய இவ்விருநிலையிலும்

---

1. சுந்தரமூர்த்தி.கு , (பதி.), தொல்காப்பியம், சொல்லதி காரம், (மு. கா. நூ.) நூ. 394. ப. 511.
2. மாகறல் கார்த்திகேய முதலியார், மொழிநூல், (சென்னை) ஆர். விவேகானந்தா அச்சுக்கூடம், அச்சுக்கூடம், 1913, ப. 1.

உண்டாகும் புதிய சொற்களில் பெயர்ச்சொற்களே ஒருமொழியில் மிகுதியாகக் காணப்படும்[1] என்பர்.

சொற்கள் ஒரு மொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூவகைப்படும். இவற்றை,

''ஒருமொழி ஒருபொரு ளனவாம் தொடர்மொழி
பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன''[2]

என்று விளக்குகிறது நன்னூல். இவற்றுள் ஒருமொழி என்பது தனிச்சொல். ஓர் எழுத்துத் தனித்து நின்றேனும் இரண்டு, மூன்று முதலிய எழுத்துகளாகத் தொடர்ந்து நின்றேனும் பொருள் உணர்த்துவது சொல் எனப்படும். அச்சொல் தனிச் சொல் ஆகும். ஆய்வில் தொகுக்கப்பட்ட தொழில் சார்புடைய சொற்களில் தனிச்சொல்லாக வழங்கும் சொற்களை இங்குக் காண்போம்.

தனிச்சொல் - பெயர்

கழனி, கரம்பு, களம், தார், குழல், கிணறு, தரிசு, தளை, நிலம், வாரம், வாய்தா, பயிர், அச்சு, ஆப்பு, உருளை. ஏற்றம், ஏரி, கவலை, சால், தோணி, தாங்கல், தொட்டி, தொண்டான், துலான், பணி, பளு, பார், மடை, மடல், மதகு, மடு, மோழை, ஏர், உரல், கலப்பை, கழு, காறு, கிட்டி, குதிர், கோணி, துறடு, படை, பலுகு, மேழி, உமி, கணு, கதிர், சோணை, கிடங்கு, கோரை, சக்கை, சருகு, தீனி, நாற்று, நெல், நொய், பதர், பரம்பு. போகம், மகசூல், மேடு, வயல், மனை, அள்ளு, கடும்பு, கவான், கோபு, சினை, கமலம், வைசூரி, பாளை, அந்து, ரோகம், கலங்கல், போலு, தும்பு, புழுதி, பட்டம், ஏடு,

---

1. அகத்தியலிங்கம். ச. மொழியியல், சொல்லியல், வினையியல், (அண்ணாமலை நகர், அனைத்திந்தியத் தமிழ்மொழியியற் கழகம். 1982) ப. 16..

2. நன்னுல் விருத்தியுரை, (சென்னை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 1956) நூ. 260, ப. 199.

ஓலை, நூக்கு, குழி, கூச்சு, சபா, முந்தி, கோல், கோரா, சடை, சிலுப்பை, துடுப்பு, டோலா, பட்டு, பேட்டு, ஆலை, பாவு, அளவு, லுங்கி, கயிலி, குஞ்சம், கொத்து, திண்டு, தோம்பு, பெந்து, கண்ணி, காடி. நாடா, துக்கு, தலா, சாயம், காரிகம், லடி, வாரை, நடுவு. விழுது, பன்னை, ஈனை, நாசி, குட்டி, பந்தல், டப்பா, கார்டு, பீம், ஊசி, பஞ்சா, நூல், தடி, சவுத், சிம்பல், மொக்கு, ஊணி, வினாடி, ஆசு, தீர்வை, தாள், தழை, பொலி, கோடரி, கூளம், குரும்பை, தொளிம்பை, வாதம், முசுப்பு, செலுப்பு, குளிகை, கசபு, சொழல், கரணை, பில்லு, இராட்டினம், சப்புரி, புள்ளு, வெம்பல், நெற்று, உறை, புரி, அம்பாரம், எரு, உரம், கடிசு முதலியன.

தனிச்சொல் - வினை

நடு, நிமிட்டு, நெருடு, பிழி, தூற்று, நோம்பு, பாய்ச்சு, இழு, பிணை, அறுத்தல், உழற்றல், ஊற்று, உதறு முதலியன.

தனிச்சொல் - பெயர், வினை

விதை, இழை, தட்டு, கட்டு, மடி, அரி, கொத்து, தறி, பார், சுழி, படி, தடை முதலிய சொற்கள் பெயராகவும் வினையாகவும் வருகின்றன.

தொகைச்சொல்

தொகைச் சொல் என்பது இரு தனிச்சொற்களின்கூட்டாம். இவை ஒரு சொல் தன்மையதாக அமையும்.

'வேற்றுமைத் தொகையே உவமத்தொகையே
வினையின் தொகையே பண்பின் தொகையே
உம்மைத் தொகையே அன்மொழித் தொகையென்[று]
அவ்வா றென்ப தொகைமொழி நிலையே'[1]

என்று தொகை மொழிகளாக வருவன இவையெனத் தொல்காப்பியம் கூறுகிறது. இதனையே நன்னூல்,

---

1. தொல்காப்பியம். சொல். (மு. கா. நூ.) நூ. 412. ப. 49.

'பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றின் உருபிடை
ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழிபோல் நடப்பன தொகைநிலைத்
தொடர்ச்சொல்'[1]

என்று தொகைச் சொல்லின் இலக்கணத்தையும்,

'வேற்றுமை வினைபண் புவமை உம்மை
அன்மொழி எனஅத் தொகை ஆறாகும்'[2]

என்று அதன் அறுவகைகளையும் கூறுகின்றது.

இவற்றின் அடிப்படையில் தொழில் சார்புடைய சொற்களில் சில, எத்தகு தொகைச் சொல் என்பதை இங்குக் காணலாம்.

வேற்றுமைத் தொகை:

'அவற்றுள்
வேற்றுமைத் தொகையே வேற்றுமை யியல்'[3]

என்று தொல்காப்பியமும்,

'இரண்டு முதலா இடையா றுருபும்
வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே'[4]

என்று நன்னூல் சற்று விரிவாகவும் வேற்றுமைத் தொகைக்கு விளக்கம் அளிக்கின்றன. அஃதாவது, முதலுக்கும் (எழுவாய் வேற்றுமைக்கும்) எட்டுக்கும் (விளி வேற்றுமைக்கும்) இடைப் பட்ட ஆறு வேற்றுமைகளின் உருபுகள் மறைந்து வரும் தொடர்மொழிகள், வேற்றுமைத் தொகைகளாம்.

இரண்டாம் வேற்றுமைத் தொகை :

(எ. கா.) முள்ளுருளை, மண்வெட்டி, பேல்தகடு, புல்லரி வாள், கோரா ஆலை, பட்டுப்பரிவட்டம்.

---

1. நன்னூல் விருத்தியுரை, (மு. கா. நூ.) நூ. 361. ப. 329.
2. மேற்படி, நூ. 362. ப. 530.
3. தொல்காப்பியம், சொல். [மு. கா. நூ.] நூ. 413. ப. 553
4. நன்னூல் விருத்தியுரை, [மு. கா. நூ.] நூ. 363 ப. 530.

மூன்றாம் வேற்றுமைத் தொகை:

[எ. கா.] கைச்சால், மண்ணுருண்டை, நாலிலைப் பரி வட்டம், மரநாடா.

நான்காம் வேற்றுமைக் தொகை :

[எ. கா.] கூலியேர், பூட்டுக் கயிறு, கீறு சுப்புல், சாய வடுப்பு, செலுப்பேணி.

ஐந்தாம் வேற்றுமைத் தொகை:

[எ. கா.] முதல் கஞ்சி.

ஆறாம் வேற்றுமைத் தொகை:

[எ. கா.] பரிவட்டக்காம்பு, முந்தண்டுக்கால்.

ஏழாம் வேற்றுமைத் தொகை

(எ. கா) மூலைக்கழனி, வயலெலி, கடைமடை, அடிமுந்தி, கா துக்கட்டு.

உவமைத் தொகை:

'உவமத் தொகையே உவம இயல' [1] என்று தொல்காப்பியமும்,

'உவம உருபில துவமத் தொகையே' [2]

என்று நன்னூலும் உவமைத் தொகைக்கு விளக்கம் நவில்கின்றன.

(எ கா.) மாடக்கயிறு, கிளிக்கால் காதுவளையம் பொன்னேர், பளிச்சு நடுவு, வால்மரக்கால், அம்புவிசை, பாம்புச்சுழி.

வினைத் தொகை

'வினையின் தொகுதி காலத்தியலும்' [3]

என்று தொல்காப்பியமும்,

'காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை' [4]

1. தொல்காப்பியம், சொல். (மு. கா. நூ.) நூ. 414 ப. 553.
2. நன்னூல் விருத்தியுரை, (மு. கா. நூ.) நூ. 366. ப. 334.
3. தொல்காப்பியம், சொல். [மு. கா. நூ.] நூ. 415 ப. 556.
4. நன்னூல் விருத்தியுரை, [மு. கா. நூ.] நூ. 364. ப. 331.

என்று நன்னூலும் வினைத்தொகைக்கு விளக்கம் தருகின்றன.

(எ. கா.) அரிவாள், விரிகுளம்பு, தொற்றிழை, பூட்டுகயிறு, குத்தாப்பு.

பண்புத்தொகை:

‘**வண்ண**த்தின் வடிவின் அளவின் சுவையினென் [று]
அன்ன பிறவும் அதன் குணம் நுதலி
இன்ன [து] இதுவென வருஉம் இயற்கை
என்ன கிளவியும் பண்பின் தொகையே’ [1]

என்று தொல்காப்பியமும்,

‘பண்பை விளக்கு மொழிதொக் கனவும்
ஒருபொருட் கிருபெயர் வந்தவும் குணத்தொகை’[2]

என்று நன்னூலும் பண்புத்தொகைக்கு இலக்கணம் இயம்புகின்றன.

(எ. கா.) புன்செய், நன்செய், காணிக்கல், தண்ணீர் வாரம், பட்டாநிலம், வண்டிப்பாதை, வரப்புமேடு, ஆடிப்பட்டம், அச்சுமரம், தலைச்சன்நாகு, சப்புரித்தடை, சாணிப்பால் கலப்புக்கதிர்.

உம்மைத்தொகை;

‘இருபெயர் பல்பெயர் அளவின் பெயரே
எண்ணியற் பெயரே நிறைபெயர்க் கிளவி
எண்ணின் பெயரோ[டு] அவ்வறு கிளவியும்
கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே’[3]

என்று தொல்காப்பியமும்,

‘எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்
எனுநான் களவையுள் உம்இல தத்தொகை’[4]

என்று நன்னூலும் உம்மைத் தொகைக்கு விளக்கம் கூறுகின்றன.

---

1. தொல்காப்பியம், சொல். [மு. கா. நூ.] நூ. 416. ப. 558.
2. நன்னூல் விருத்தியுரை, (மு. கா. நூ.) நூ. 365. ப. 332.
3. தொல்காப்பியம், சொல். (மு. கா. நூ.) நூ. 571. ப. 566.
4. நன்னூல் விருத்தியுரை, (மு. கா. நூ.) நூ. 368. ப. 336.

(எ. கா.) முப்பத்தாறு முழம், ஐம்பத்து நான்கு அங்குலம் ஒன்றரை, கரிசெரளி ஆடு, கரிவெங்கால ஆடு.

அன்மொழித் தொகை :

"பண்புதொக வரூஉங் கிளவி யானும்
உம்மை தொக்க பெயர்வயி னானும்
வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்
ஈற்றுநின் றியலும் அன்மொழித் தொகையே" 1

என்று தொல்காப்பியமும்,

'ஐந்தொகை மொழிமேற் பிறதொகல் அன்மொழி" 2

என்று நன்னூலும் அன்மொழித் தொகைக்கு விளக்கம் அளிக்கின்றன.

[எ. கா.] கூடுகொம்பன் காணோம்.

கூடுகொம்புடைய மாட்டைக் காணோம் என்னும் முறையில் இத்தொடர் பொருள் தருதலால், இத்தொடர் வினைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக்கு எடுத்துக் காட்டாகிறது.

இவ்வாறு அறுவகைத் தொகைக்கும் தொழில் சார்புடைய சொற்களினின்றும் எடுத்துக் காட்டுகள் பல காணலாம்.

கூட்டுச் சொற்கள்

கூட்டுச் சொற்கள் பல்வகைப் பெயர்களின் சேர்க்கையால் அமைவன. அவை தொகை நிலைத் தொடராகவும் தொகா நிலைத் தொடராகவும் அமையும். தொகைநிலைத் தொடராவது ஒரு தொடர் மொழியில் இருசொற்களுக்கிடையில் எச் சொல்லும் மறையாது வருதலால். தொகாநிலைத் தொடர் வரும் இடங்களைப் பற்றி நன்னூல்,

---

1. தொல்காப்பியம்,சொல். [மு, கா நூ.] நூ.418. ப.570.
2. நன்னூல் விருத்தியுரை, [மு. கா. நூ.] 369. ப. 337.

'முற்றி ரெச்சம் எழுவாய் விளிப்பொருள்
ஆறுரு பிடையுரி அடுக்கிவை தொகாநிலை'[1]

என்றியம்புகிறது.

ஆய்வில் எடுத்துக் கொள்ளப்பட்ட தொழில் சார்புடைய சொற்களில் வரும் கூட்டுச் சொற்கள் கீழ்க்கண்டாங்கு பெயரும் [பெயரெச்சம்] வினையுமாய் [வினையெச்சம்] அமைந்திருத்தலைக் காணலாம்.

அரி முந்தி அடிக்கிற கயிறு

இத்தொடர், பெயர் + வினைஅடை + வினை + பெயர் ஆக் அமைந்துள்ளது,

பட்டு கீறும் கரணைக் கோல்

இத்தொடர், பெயர் + வினை + பெயர் + பெயர் ஆக அமைந்துள்ளது.

கோரா முறுக்கேறிய நூற்று

இத்தொடர், பெயர் + வினை + வினை + பெயர் ஆக அமைந்துள்ளது.

அணி விழும் சட்டம்

இத்தொடர், பெயர் + வினை + பெயர் ஆக அமைந்துள்ளது.

ஓரம் பிடித்து ஓட்டுதல்
பல்லு பட்டுப் போதல்
இழை கரைந்து போதல்
தண்ணீர் சுண்டிப் போதல்

இத்தொடர்கள், பெயர் + வினை + வினை ஆக அமைந்துள்ளன.

கிட்டிப் போன தறி

இத்தொடர், வினை அடை + வினை + பெயர் ஆக அமைந்துள்ளது.

---

1. மேற்படி. நூ. 374. ப. 343.

அளவு தட்டுதல்
அன்னுப் பிடித்தல்

இத்தொடர்கள், பெயர் + வினை ஆக அமைந்துள்ளன.

மண்ணைக் கசக்குதல்
வரப்பைக் கழித்தல்

இத்தொடர்கள் பெயர் + வேற்றுமை உருபு + வினை ஆக அமைந்துள்ளன.

ஒட்டித் தள்ளுதல்
கோலி விடுதல்
மலர அடித்தல்
ஊற வைத்தல்

இத்தொடர்கள், வினை + வினை ஆக அமைந்துள்ளன.

பாய்ச்சல் மாடு
பாய்ச்சுக் கோல்

இத்தொடர்கள், வினை + பெயர் ஆக அமைந்துள்ளன.

நிலுவை மணை
பால் புழு

இத்தொடர்கள் பெயர் + பெயர் ஆக அமைந்துள்ளன.

எலும்பு மாட்டு நிலம்
மோதிர உருண்டைக் கட்டை

இத்தொடர்கள், பெய்யர் + பெயர் + பெயர் என்னும் முறையில் பல பெயர்களின் சேர்க்கையால் அமைந்துள்ளன.

இவ்வாறு பல்வகையில் சொற்சேர்க்கை அமைந்து தொழில் சார்புடைய சொற்கள் மொழியின் வளப்பத்தைக் காட்டுகின்றன.

சொல்லாக்கம்

ஒரு காலத்தில் ஒரு மொழியில் கண்ட அத்தனைச் சொற்களையும் அடுத்த காலத்தில் காண முடிவதில்லை. இன்றையத் தமிழ் மொழியில் காணப்படும் சொற்கள் அனைத்துமே தமிழ் மொழியின் ஆரம்பகால முதல் இருந்தன எனக்கூற முடியாது.

மூவாயிரம் ஆண்டுக்கால வளர்ச்சியில் எத்தனையோ சொற்கள் உருவாவதும் இதைப் போன்றே பல சொற்கள் வழக்கறுவதும் இயற்கை[1] என்பர்.

ஒரு மொழியில் புதிய சொல்லாக்கத்தின் காரணங்களை,[2] 1. புதிய எண்ணங்களின் வளர்ச்சி, 2. உணர்ச்சி ஓட்டம், 3. நுண்ணிய வேறுபாடுகள், 4. வழக்கு அறுதல், 5. பல பொருள்-ஒரு சொல் எனப் பாகுபடுத்தி விளக்கம் கூறுகிறார் ச. அகத்தியலிங்கனார். இப்பாகுபாட்டுக் கூறுகளின் அடிப் படையில் தொழில் சார்புடைய சொற்களில் காணப்படும் புதிய சொல்லாக்கங்களைக் காண்போம்.

புதிய எண்ணங்களின் வளர்ச்சி

இறைப்புப் பட்டறை, பதியம், மானாவாரி நிலம், பேட்டு முதலிய சொற்கள் உழவு, நெசவுத் தொழில்களில் பயன்படுத் தப்பட்டு வந்திருப்பினும் புதிய எண்ணங்களின் வளர்சியால் மானாவாரிப்பயிர், மானாவாரிச் சாகுபடி, பதியங்கன்று, பதியந் நாற்று, பதியந் நாற்றங்கால், இறைப்புப் பயிர், இறைவை நன்செய், இறைப்புக்காய், பேட்டு ஊடை, பேட்டடை, பேட்டிழுத்தல், பேட்டு கட்டுதல், பேட்டுக் கம்பி, கேட்டுக்கயிறு, பேட்டுக்குச்சி, பேட்டுச் சட்டம் பேட்டுத் தகடு, பேட்டுத்தடி. பேட்டுப் பெட்டி, பேட்டு மூட்டை, பேட்டேணி, ஈவனிங் மார்னிங் பேட்டு முதலிய சொற்கள் உருவாகியுள்ளன.

உணர்ச்சி ஓட்டம்

உள்ளத்தில் உன்னிய கருத்தினை எளிதில் வெளியிட பிற மொழிச் சொற்களைக் கலந்த அளவில் டார்க் கலர் (Dark Colour) டாப்பிங் கலர் (Topping colour), பாயில் (Boil) பண்ணுதல், பிளீச்சிங் (Bleaching) பண்ணுதல், பாய்லர் (Boilor) அடுப்பு, கிராஸ் (Cross) மாடு என்றும், சேற்றடிக் கட்டையைச் சேறடி என்றும், இழைகள் நீட்டிக்

---

1. அகத்தியலிங்கம். ச. மொழியியல், சொல்லியல், வினை யியல் (மு. கா. நூ.) ப. 15.
2. மேற்படி. பக். 18 முதல் 24 வரை.

கட்டுதலை எயட்டு கட்டுதல் என்று கூறுதலும் உணர்ச்சி ஒட்டத்தின் விளைவேயாம்.

நுண்ணிய வேறுபாடுகள்

நிலத்தில் பயிரிடும் உரிமையை விளக்க இயல்பாக இருக்கும் இரு சொற்களை இணைத்து அனாதை நிலம், கட்டளை நிலம், பட்டா நிலம், புறம்போக்கு நிலம் என்றும், புறம் போக்கு நிலத்தில் ஏரிப்புறம்போக்கு, கிணற்றுப் புறம்போக்கு, களத்துப் புறம்போக்கு, குளத்துப் புறம்போக்கு, கோயில் புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு, மேய்க்கால் புறம்போக்கு, வாய்க்கால் புறம் போக்கு என்று குறிப்பிடப்படுவதும், வரப்பின் தன்மையை ஒட்டி, சூனா வரப்பு, சாத்து வரப்பு, ஒட்டு வரப்பு கோணல் வரப்பு என்பனவும் குறிக்கோல், குறிவைத்தல், செம் மண்குறி, சுண்ணாம்புக்குறி என்பனவும் சொற்களிடையே நுண்ணிய வேறுபாடு உணர்த்தும் முறையில் உருவாக்கப்பட்ட புதிய சொற்றொடர்களாம்.

வழக்கு அறுதல்

மடக்கு அல்லது கப்பரை என்ற மண்ணாலான பாண்டத்தை நெசவாளர் தாரோ குழலோ வைக்கப்பயன் படுத்துவர். இம்மட்பாண்டம் தற்காலத்தில் அதிகம் பயன் படுத்தப்படாமையால் இச்சொல் வழக்கழிந்த நிலையில் உள்ளது. இப்பாண்டத்திற்குப் பதில் அலுமினியக் கிண்ணம், அலுமினியத்தட்டு, பிளாஸ்டிக் கிண்ணம் முதலிய பாத்திரங் களின் பெயர்கள் உபயோகத்தில் வழங்கப்படுகின்றன.

சூடு என்ற சொல் இலக்கியத்தில் அரிக்கட்டினைக்குறிக்கும். அஃதாவது சூடு என்பது நெல்லரித் தொகுதியைச் சுட்டுவதாய தொரு பெயர்ச் சொல்[1]. இச்சொல் இப்பொழுது பெரும் பான்மையாக வழக்கிழந்து அரிக்கட்டு என்ற பெயரே வழங்கு கிறது.

கொழு[2] என்பது நிலத்தை உழுவதற்குப் பயன்படுத்துப் படியான ஏரில் பொருத்தப்படும் ஓர் இரும்புக் கருவி இச்

23. சிவராஜப் பிள்ளை, கே.என். சில தமிழ்ச்சொல் ஆராய்ச்சி (சென்னை, பேராசிரியர் சிவராஜப் பிள்ளை வெளியீடு, 1968) ப. 9

24. 'மன்னவர் தம் குடைவளமுங் கொழுவளமே' -ஏர்எழுபது. (மு. கா. நூ.) பா. 11. ப. 5.

சொல் இம்மாவட்டத்தில் வழக்கிழந்து அச்சொல் குறிக்கும் வேறு பெயரான காறு என்ற சொல்லால் வழங்கப்படுகிறது.

பல பொருள்-ஒருசொல்

கத்தி என்பது ஒரு பொருளை அரிவதற்கோ வெட்டுவதற்கோ பயன்படக் கூடிய கருவி. அக்கருவி ஒரு குறிப்பிட்ட பயன் பாட்டிற்குப் பயன்படும் வகையில், அக்கத்தியின் உருவத்திற்கும் பயன்பாட்டிற்கும் அமைப்புக்கும் ஏற்றவாறு ஈச்சங்கத்தி, கெடைக்கத்தி, ஆக்கரிவாள் கத்தி, பாசரிவாள் கத்தி, கொடு வாள் கத்தி, பேனாக்கத்தி எனப் புதுச் சொற்கள் பல தோன்று வதற்குக் காரணமாய் அமைந்தது.

இம்முறையிலேயே நிலம் உழு கருவியான கலப்பையை அதன் அமைப்புக்கும் வடிவுக்கும் ஏற்ப வழங்கவே காறுக் கலப்பை, போசுக்கலப்பை, மட்டக் கலப்பை, கட்டைக் கலப்பை, இரும்புக் கலப்பை, மரக்கலப்பை, கடிசுக் கலப்பை எனப் புதிய சொற்றொடர்கள் பல உருவாயின எனலாம்.

பிறமொழித் தொடர்பால் உண்டாகும் சொற்கள்

பிறமொழி பேசுபவர்களுடன் கொண்ட சமுதாய வாழ்க் கைத் தொடர்பினால் நிலவரியைக் கிஸ்தி என்றும் குத்தகையை மகுத்தா என்றும் மோழையை பொகட என்றும் உருளையை ரோலர் என்றும் சொல்லும் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

ஒரு மொழியினர், பிறமொழிச் சொற்களைத் திரித்தும் திரிக்காமலும் ஆளுவர். பிறமொழிச் சொற்களைத், திரித்து ஆளுதலில், தமிழாக்கம், ஒப்பொலியாக்கம் என இருவகை உண்டு; திரிக்காமல் ஆளுதலில் ஒலிபெயர்ப்பு, வேற்றொலிக் கலப்பு என இருவகை உண்டு. [1]

பிறமொழிச் சொற்களை, அச்சொற்களுக்கு ஒத்த ஒலி யுடைய தமிழ்ச் சொற்களாகக் கூறுவது ஒப்பொலியாக்கம் ஆகும்.

என்டிரின், கம்பெனி, சாக்குப்பை, சோப்பு, பவுடர் என்பன ஒப்பொலியாக்கத்திற்கு எடுத்துக்காட்டுகளாம்.

---

1. கோதண்டராமன். பொன்., இலக்கண உலகில் புதிய பார்வை, தொகுதி 2. (சென்னை 18. தமிழ் நூலகம், 1981) ப. 86.

பிறமொழி ஒலிகட்கு நெருக்கமான தமிழொலிகளையோ தேவையானால் வேற்றொலிகளையோ சேர்த்து வழங்குவது ஒலிபெயர்ப்பு ஆகும்.

டிசைன், காம்ப்ளக்ஸ், காஸ்டிக், கெமிகல்ஸ், சொலிக்ஷன், டிஷ்யூ, ஸ்டேண்டு முதலியன ஒலி பெயர்ப்புக்கு எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம்.

தொழில்களை இயந்திரமயமாக்கல் மூலம் நிலம் உழு எந்திரத்தை 'டிரேக்டர்' என்றும் அச்சை, 'ரீடு' என்றும், இழைகள் சுற்றப்படுதலை 'வைண்டிங்' என்றும், ஈரிழைகளை ஓரிழைபாக்கலை 'டப்ளிங்' என்றும், இழைகள் முறுக்கேற்றப் படுதலை, 'டுவிஸ்டிங்' என்றும் வழங்கும் நிலை உருவாகி யுள்ளது.

மேலும், பிறமொழிச் சொற்களுடன் தமிழ்ச் சொற்களும் சேர்த்து வழங்கும் நிலை பிறமொழித் தொடர்பால் ஏற் பட்டுள்ளது. இதற்கு, ரீடுமரம், வைண்டிங் கதிர், மிஷின் வடுக்கு, பேல் சட்டம், போர்க்கிணறு, பாய்லர் அடுப்பு, செல்ஃப் நாற்று, பொட்டி மிஷின், காய்ச்சல் ஓவர் என்பனவும் பீடு நிலம், புட்ட வரப்பு, உத்தி கட்டல், பொடப் பயிர் முதலியனவும் எடுத்துக் காட்டுகள் ஆகும்.

இவற்றுடன், கடன் வாங்கல், கலப்பு, உருமாற்றம், வருவிப்பு, விரிவிப்பு, சுருக்கம், குறைப்பு உருவாக்கம் ஆகிய வற்றின் காரணமாக உண்டாகிய சொற்களும் ஒரு மொழியில் பலரால் பேசும் நிலையுடையனவானால் அச்சொற்கள் அம் மொழியைச் சார்ந்தனவாகவே அமைந்து அம்மொழி பேசு பவரின் வழக்கில் இருந்து வருவதைக் காணலாம்[1]. இந்நிலை தமிழுக்கும் உண்டெனலாம்.

மேற்கண்ட முறையில் இத்தலைப்பில் உழவு, நெசவு சார்ந்த சில சொற்களையும் சொற்றொடர்களையும் சொல் வழிப் பாகுபாட்டின் அடிப்படையில் பிரித்து விளக்கம் கண்ட நாம் அடுத்து அச்சொற்கள் தரும் பொருள் நுட்பங்களை வகைப்படுத்திக் காண்போம்.

---

1. 'If enough people use a new word, it is part of the language whether it originated through borrowing, compounding, inflection, derivation, extension narrowing shortening or coining'.- Julia S. Falk, Linguistics and Language, 2nd (edition. New york, John wiley&sons, 1978) P. 61.

இயல்—7

சொற்பொருள் ஆய்வு

ஆறாம் இயலில் சொல்லின் வகைகள் பற்றியும் சொல்லாக்க முறையில் உருவாகி வழங்கும் சொற்களையும் கண்டோம். இவ்வேழாம் இயலில், ஒரு சொல் பெயராகவும் வினையாகவும் அமைந்து பொருள் வேறுபடுதல், இடத்திற்கேற்பச் சொல்லின் பொருள் மாறுபடுதல் சொற்களின் பொருண்மை நிலை, கிளைமொழிகளை வகைப்படுத்திக் காணுதல் பற்றிய விளக்கம், மங்கல வழக்கு ஆகியவற்றுடன் தமிழ்ப் பேரகாரதியில் உள்ள சில சொற்களுக்கு ஆய்வுச் சொற்களின் அடிப்படையில் கூறும் புதுப்பொருளும் காண்போம்.

மொழியின் கூறுகள்

மொழி இரண்டு கூறுகளை உடையது. ஒன்று சொன்மை வெளிப்பாடு. மற்றொன்று பொருண்மை வெளிப்பாடு. சொன்மை வெளிப்பாடு என்பது ஒலி, சொல், தொடர் என்ற அமைப்புகளைப் பெற்றியங்குவது. இவற்றுள் சொல், தொடர் அமைப்புகள் சொல்வழிப் பாகுபாட்டுல் ஓரளவு விளக்கப் பட்டுள்ளன. ஒலியமைப்பினைப் பற்றி இவ்வியலில் சிறிதளவும், 'இலக்கியத் தமிழும் பேச்சுத் தமிழும்' என்ற தலைப்பில் விளக்கமாகவும் விளக்கப்படுகிறது. இங்குப் பொருண்மை வெளிப்பாட்டைப் பற்றிக் காண்போம். பொருண்மை வெளிப் படாவது சொற்களும் தொடர்களும் பொருளை உணர்த்துதலாம். தொல்காப்பியனார்.

> ''பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
> சொல்லி னாகும் என்மனார் புலவர்''[1]

என்று கூறுவதிலிருந்து மொழியின் இருவகைக் கூறுபாட்டை நன்கறியலாம்.

---

1. தொல்காப்பியம், சொல். (மு. கா. நூ.) நூ. 156. ப. 319.

ஒரு சொல் பெயராகவும் வினையாகவும் அமைதல்

எல்லாச் சொற்களும் பொருள் குறிப்பன வாயினும் அச்சொற்கள் வழங்கும் சூழ்நிலைக்கேற்ப பொருள் மாற்றம் தருவதாக அமையும். ஒரேசொல் பெயராகவும் வினையாகவும் அமையுங்கால் தரும் பொருண்மை விளக்கங்களை இங்குக் காணலாம்.

மடி

பெயர்: நெசவுத்தொழிலில் மடி என்னும் சொல் 2 லுங்கி ஆடைகளையும், 4, நான்கு முழம் வேட்டிகளையும், 2 எட்டு முழம் வேட்டிகளையும் குறிக்கும்.

மாடு பால் தரும் பகுதி மடி எனப்படும்.
பேச்சுவழக்கில் கட்டிக் கொண்டுள்ள ஆடையின் முந்தானைப் பகுதியை மடி என்பர்.
இலக்கியத்தில் மடி என்பது சோம்பலைக் குறிக்கும்.

வினை: எல்லாத் தொழில்களிலும் மடித்தல், வளைத்தல் ஆகிய பொருள்களில் வரும்,

தடை

பெயர்: நெசவுத் தொழிலில் ஐந்நூறு கிராம் கொண்ட கோரா, ஒரு தடை எனப்படும்

வினை: தடுத்தல், இடையூறு என்ற பொருள்களில் வரும்.

படி

பெயர்: உழவுத் தொழிலில் படி என்பது முகத்தல் அளவையைக் குறிக்கும்.

1 படி	8 ஆழாக்கு
1 படி	4 உழக்கு
4 படி	1 மரக்கால்
64 படி	1 மூட்டை

என்ற முறையில் படியின் அளவு வழங்கப்படுகிறது.

இலக்கியத்தில் படி[1] என்னும் சொல் நிலத்தைக் குறிக்கும்.

1. திருக்குறள், (மு. கா. நூ.), குறள். 606. ப. 254.

வினை: படி என்பது படித்தல் என்ற தொழிலைக் குறிக்கும் கட்டளைச் சொல்லாகிறது.

கட்டு

பெயர்: பட்டு நெசவுத் தொழிலில் 2 தடைகள் சேர்ந்தது ஒரு கட்டு. (ஆயிரம் கிராம்நிறை).

நூல் நெசவில் 40 ஆம் எண்ணுள்ள நூலில் 40 பொந்துகள் சேர்ந்தது ஒரு கட்டு.

உழவுத் தொழிலில் அரிகெடைகளைத் தலையில் தூக்கும் அளவுக்குக் கட்டாகக் கட்டப்பட்டுள்ள ஒரு சுமையைக் குறிக்கும்

வினை: கட்டு என்னும் சொல் எல்லாத் தொழில்களிலும் பொதுவாகக் கட்டுதல், பிணித்தல் என்ற பொருள் களில் வரும்.

அரி

பெயர்: உழவுத் தொழிலில் ஒரு முறை அரிவாளால் அரிந் தெடுக்கப்பட்ட நெல்தாள்களின் தொகுப்பைக் குறிக்கும்.

வினை: பிறதொழில்களில் அரி என்னும் சொல் அரிதல் என்னும் பொருளைத் தரும்.

சுழி

பெயர்: மாட்டின் உடலில் உள்ள மயிர்க்கால்கள் சுழன்று இருக்கும் சுழற்சி அல்லது மயிர்க் கால்களின் தன்மை யைக் குறிக்கும்
பொதுவாக உலக வழக்கில் மழையின் ஓரங்குல அளவைக் குறிப்பர்.

வினை: சுழி என்னும் சொல் சுழித்தல், சூழ்தல். வட்டமிடு தல் ஆகிய பொருள்களைக் குறிக்கும்.

தட்டு

பெயர்: கேழ்வரகு, கம்பு, சோளம் ஆகியவற்றின் கதிர்கள் நீக்கிய தாள் பகுதிகைக் குறிக்கும். மாட்டின் முதுகில் மார்பெலும்புக் கூட்டுக்குப்பின், பின்கால் சேரும் பகுதிக்கு முன்னுள்ள பாகத்தைக் குறிக்கும்.

வினை: தட்டுதல் என்ற தொழிலைக் குறிக்கும் கட்டளைப் பொருளில் வரும்.

இழை

பெயர்: பருத்தி அல்லது பட்டு நூலைக்குறிக்கும். இலக்கியங்களில் ஆபரணம் என்ற பொருளைக் குறிக்கும்.

வினை: இழைத்தல், இழைதல் ஆகிய பொருள்களில் வரும்.

கொத்து

பெயர்: நெசவுத் தொழிலில் ஆலையில் பாவாக்க ஓடிய பத்து பொந்து நூல்களையும், 2 எட்டு முழம் வேட்டிகளையும் குறிக்கும்.

வினை: கொத்துதல் என்ற பொருளைத் தரும்.

தறி

பெயர்: நெசவாளர் நெசவு செய்ய உபயோகப்படுத்தும் கருவிகளின் தொகுப்பு, 'தறி' எனப்படும்.

வினை: முன்னிலை ஒருமை ஏவலில்'வெட்டு' என்ற பொருளைக் குறிக்கும்.

பார்

பெயர்: நெல்லும்மற்ற பொருள்களும் ஏற்றிச் செல்லப் பயன்படுத்தும்! மாட்டு வண்டியில்வண்டியில் வண்டிச் சக்கரத்திற்கு அடுத்து கூச்சுத் துளைகள் உடையதுமான இரு மரத்திம்மைகளைக் குறிக்கும். இலக்கியத்தில் பூமியைக் குறிக்கும் சொல்லாக வழங்குவர்.

வினை: பார்த்தல் என்ற பொருளைத் தரும்

விதை

பெயர்: உழவுத்தொழிலில் தன் இனத்தைப் பெருக்கக்கூடிய பிறிதொரு சாதனமாகிறது.

வினை: வித்தினை விதைத்தல் என்ற தொழிலைக்குறிக்கிறது.

திரி

பெயர்: திரிக்கப்பட்ட பொருளைக் குறிக்கும்.

வினை: திரித்தல் என்ற தொழிலைக் குறிக்கும் கட்டளைச் சொல்லாகிறது.

புரி

பெயர்: உழவுத்தொழில் வைக்கோல் புரியினைக்குறிக்கிறது

வினை: கயிறு, வைக்கோல் தாள் முதலியவற்றை முறுக்கு தலைக் குறிக்கிறது.

இவ்வாறு சொற்கள் பெயராக அமையுங்கால் ஒரு பொருளையும் வினையாக அமையுங்கால் வேறு பொருளையும் தருவனவாக அமைகின்றன.

இடத்துக்கேற்ப சொற் பொருள் மாற்றம்

ஒரே சொல், பெயர்ச்சொல் அளவில் நின்றே தான் வழங்கும் தொழில். சூழ்நிலைகளுக்கேற்ப வெவ்வேறு பொருள் தருவனவாக அமையும். 'சொற்பொருளை ஆராயும் பொழுது, சொல் உணர்த்தும் பொருள் எவ்வெவ்வாறு வேறுபட்டுச் செல்கிறது என்று காணல் வேண்டும்' என்பார் மு. வரதராசனார்.[1] எனவே, ஒருசொல் வழங்குதல் இடத்திற்கேற்ப அதன் பொருளும் எவ்வாறு மாற்றம் பெற்று விளங்குகிறது என்பதை இங்குக் காணலாம்.

தாளடி:

தாளடி என்பது பொதுவாக நெல் தாளின் அடிப்பக்கத்தைக் குறிக்கும். அஃதாவது, நெல்தாள் அறுத்தெடுக்கப்பட்டு நிலத்தில் எஞ்சி நிற்கும் தாளின் அடிப்பக்கத்தை - தாள் மொக்கையைத் தாளடி என்பர்.

அத்தாளடி மக்கிப் போனதற்குமுன் உடனே நிலத்தில் நீர் பாயவைத்து உழுது பயிரிடப்படுதலையும் 'தாளடி' என்பர். அஃதாவது ஒரு முறை பயிர் விளைத்து அறுவடை செய்தபின் உடனே மீண்டும் பயிரிடப்படுதலைக் குறித்து வழங்கப்படுவதாகும்.

சால்:

சால் என்பது,

1. ஏற்றம், கவலையில் நீர் இறைக்கும் பாத்திரத்தைக் குறிக்கும்.
2. நிலத்தை ஏர் கொண்டு ஒரு முறை உழுதலைக் குறிக்கும்.

---

1. வரதராசன். மு , மொழிநூல் மறுபதிப்பு, (சென்னை, கழக வெளியீடு, செப்டம்பர் 1970), ப 303.

3. அரிசி, நெல், கேழ்வரகு முதலிய உணவுப் பொருட்களை ஒரு மூட்டை அளவுக்குச் சேமித்து வைக்கப் பயன் படுத்தும் மட்பாண்டத்தைக் குறிக்கும்.

வாரம் :

பொதுவாக வாரம் என்பது வழக்கில் கால அளவைக் குறிக்கும்; அஃதாவது ஏழு நாட்கள் கொண்டது ஒரு வாரம் ஆகும்.

உழவியலில் வாரம் என்பது பங்கு என்னும் பொருளைத் தரும். நிலச் செந்தக்காரர் தன் நிலத்தைப் பிற ஒருவரைப் பயிரிடச் செய்து அதற்காக நிலத்தின் விளைச்சலில் பாதிப்பங்கு அவருக்கு அளிப்பார். நிலத்திற்குரியவர் இம்முறையில் நிலத்தில் பயிர் விளைவித்தலினால் அவர் நிலத்தை, 'வாரத்திற்கு' விட்டிருக்கிறேன் என்பார். அந்நிலத்தைப் பயிரிடுபவர், வாரத்திற்கு'ப் பயிரிடுகிறேன் என்பார். நிலத்தில் பயிர், விளைத்து நிலத்து வாரம், பயிர் வாரம், தண்ணீர் வாரம், சத்துவ வாரம் என நான்கு வாரங்களாக விளைபொருள் களைப் பிரித்துப் பெறுகின்றனர். இவற்றில் இடத்திற்கேற்ப, பயிர் செய்யும் முறைக்கேற்ப வாரம் பெறுதலில் வேறுபாடும் உண்டு.

'வாரமுடன் முக்கூடல்'[1] என்னும் தொடரில் வாரம் என்னும் சொல் அன்பு என்ற பொருளைத் தருகிறது.

வினாடி

வினாடி என்று கால அளவில் மிகச் சிறு அளவைக் கூறுவர். அஃதாவது 3600 வினாடிகள் கொண்டது 1 மணி ஆகும.

நெசவுத் தொழிலில் வினாடி என்பது நூல் மாட்டி நூலை இழைப்பதற்குப் பயன்படுத்தும் மூங்கில் சிம்பல்களால் ஆன ஒரு கருவியாகும். அஃதாவது பூட்டுத்தலைக்குரிய பெயர்களுள் ஒன்றாம்.

கதிர் :

கதிர் என்று பொதுவாக ஒளிக்கற்றையைக் கூறுவர்.

நெசவுத் தொழிலில் நூல் சுற்ற உதவும் டப்பா நுழைக்க உதவும் ஊசிக்கண்டைக் கதிரென்பர்.

---

1. சேதுரகுநாதன் (உரை), முக்கூடற்பள்ளு, மறுபதிப்பு, (சென்னை, கழக வெளியீடு, 1973), பா. 97. ப. 128.

உழவுத் தொழிலில் பயிர்களின் கதிரைக் கூறுவர்.

துண்டு :

உழவுத் தொழிலில் பயிர் செய்யப்படும் சிறிய நிலப் பகுதியைக் குறிக்கும்.

நெசவுத் தொழிலில் சிறிய துணியைக் குறிக்கும்.

குட்டை :

வழக்கில் குட்டை என்பது தேங்கியுள்ள நீர் நிலையை (Pool) க் குறிக்கும்.

நெசவுத் தொழிலில் குட்டை என்பது சிறிய துணி (napkins) யைக் குறிக்கும்.

தொட்டி :

தொட்டி என்று தொட்டில், நீர்த்தொட்டி, குப்பைத் தொட்டி ஆகிய பொருள்களை வழங்குவர்.

உழவுத் தொழிலில் கால்வாயிலிருந்து மேட்டுப் பகுதிக்கு ஏற்றத்தின் உதவியால் நீர் பாய்ச்சுதலைக் குறிப்பர்.

பணி :

இச்சொல்லுக்குத் தொழில் என்பது பொருள்.

உழவுத் தொழிலின் கவலையேற்றத்தில் நீர் சாலிலிருந்து வாய்க்காலுக்குச் செல்ல இடைவழியில் பயன்படுத்தப்படும் காடி அல்லது பள்ளமுள்ள பனைமரத்தைக் குறிக்கும்.

படை :

படை என்னும் சொல், போர், ஆயுதம் ஆகிய பொருள்களைக் குறிக்கும்.

தோலில் உண்டாகும் நோய்களுள் ஒன்றாகவும் கூறுவர்.

உழவுக் கருவியான ஏரில் காறு பொருத்தப்படும் அடித் திண்டையும் இச்சொல் குறிக்கும்,

உறை :

இச்சொல்லுக்கு இடம் என்ற பொருள் உண்டு.

உழவர், தானியம் சேமிக்க மண்ணால் உருளை வடிவில் தட்டு தட்டாக உயரமாகக் கட்டப்பட்ட அமைப்பைக் கூறுவர்.

சக்கை :

சக்கை என்னும் சொல் கன்னியாகுமரி மாவட்டத்தில் பலாப்பழத்தையும், தென்னார்க்காடு மாவட்டத்தில் பலாப் பழத்தில் பலாச் சுளையைச் சுற்றியுள்ள நார்ப் பகுதியையும் குறிக்கும். செங்கை எம். ஜி. ஆர் மாவட்டத்தில் சாறு எடுக்கப் பட்ட கரும்பையும், கேழ்வரகு, கம்பு, சோளம் நீக்கப்பட்ட கதிரையும் குறிக்கும்.

நாசி :

நாசி என்னும் சொல் மூக்கைக் குறிக்கும்.

மாட்டுத்தரகர், இருக்கக் கூடாத சுழிகளை உடைய மாட்டினைத் தம் பேச்சு மொழியில் இச்சொல்லால் குறிப்பர்.

தாமம் :

தாமம் என்னும் சொல் மாலை என்னும் பொருளைக் குறிக்கும்.

மாட்டுத்தரகர், தம்பேச்சு மொழியில் இச்சொல்லை எட்டு, எண்பது, எண்ணூறு, எட்டாயிரம் உரூபாய்களைக் குறிக்க வழங்குவர்.

மூலம் :

மூலம் என்னும் சொல் ஆதி, வாயில், உரையில்லாப் பாடல் முதலிய பொருள்களைத் தரும்.

மாட்டுத்தரகர், தம்பேச்சு மொழியில் இச்சொல்லை ஐந்து, ஐம்பது, ஐயாயிரம் உரூபாய்களைக் குறிக்க வழங்குவர்.

வாய்தா :

இச்சொல்லுக்கு, வழக்கில் தவணை, நிலவரி முதலிய பொருள்கள் உண்டு.

மாட்டுத்தரகர், தம் பேச்சு மொழியில் ஒன்று, நூறு, ஆயிரம் உரூபாய்களைக் குறிக்க 'வாய்தா' என வழங்குவர்.

சடை :

உலக வழக்கில் சடை என்னும் சொல் அடர்ந்த தலை முடியைக் குறிக்கும்.

பட்டு நெசவுத் தொழிலில் சடை என்னும் சொல் ஒரு சிலுப்பையைக் குறிக்கும் சிலுப்பை என்பது பட்டிழைகளின் சிறு தொகுப்பு ஆகும்.

ஏர் :

ஏர் என்னும் சொல் இலக்கியத்தில், [1] அழகு, எருது, எழுச்சி, ஒப்பு, உவமஉருபு முதலிய பொருள்களில் வரும்.

உழவுத் தொழிலில் நிலம் உழுகருவியைக் குறிக்கும்.

கையேற்றம்:

வழக்கில், இச்சொல்லை செல்வப் பெருக்கான நிலையைக் குறிக்க வழங்குவர்.

உழவுத்தொழிலில் கைச்சாலால் நீர்இறைத்தலைக் கூறுவர்.

கோடி:

உலக வழக்கில் கோடி என்பது நூறு நூறாயிரத்தையும், புதிய ஆடையையும் கூறுவர்.

உழவுத்தொழிலில் இறுதி, கடை ஆகிய பொருள்களில் வழங்கப்படும்.

கமலம்:

இலக்கியத்தில் தாமரையைக் குறிக்க வரும் கமலம்என்னும் சொல், உலக வழக்கில் கன்றிழந்த பசுவைச் சுட்டும்.

தாள்:

இலக்கியத்தில் தாள் என்பது முயற்சி கால் முதலிய பொருள்களில் வரும்.

உலகவழக்கில் தாடை, ஒற்றைக் காகிதம் ஆகியவற்றைக் குறிக்கும்.

உழவுத் தொழிலில் நெற்பயிரின் தாளைக் குறிக்கும். இவ்வாறு, சொற்கள் இடத்திற்கேற்ப பொருள் மாறுபட்டுக்

---

1. ஆசிரியர் குழு, பாட்டும் தொகையும், இரண்டாம் பதிப்பு, [சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 1981], ப. 55.

காணப்படும் நிலையானது மொழியிலுள்ள சொற்களின் பொருள் வளப்பத்தினை உணர்த்துகிறது.

சொற்களின் பொருண்மை நிலை

சொல்லும் அதன் பொருளும், பொருள் குறிக்கும் சொல்லும் பற்றி இலக்கண ஆசிரியர்கள் தெளிவாகவிளக்கியுள்ளனர். ஒருசொல் பலபொருள் உணர்த்துவதும் பலசொல் ஒரு பொருட்கு உரிமையாகி வருவது பற்றியும் தொல்காப்பியரும் பவணந்தியாரும் தத்தம் நூல்களில் முறையே 297, 442 ஆம் நூற்பாக்களில் கூறியுள்ளனர்.

மேலும் இவற்றில், ''பெயரினும் வினையினும் மெய்தடுமாறி'' [1] என்று சொல்லின் தன்மையினையும்,

'பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்த மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்'[2]

என்று பொருள் உணர்தல் தன்மையையும் தொல்காப்பியம் இயம்புகிறது. நன்னூல், இவ்வாறு பொருள் உணர்வது செய்யுட்குரியது[3] என்கிறது.

இவற்றின் அடிப்படையில் இலக்கண ஆசிரியர்களும் மொழியியலாரும் ஒரு பொருள் பலசொல், பலபொருள் ஒரு சொல் என்று பொருண்மை நிலையினை இருவகையாகப் பிரித்துக் கூறுவர். இங்கு, பொன். கோதண்டராமன் இலக்கணக் கலைக்களஞ்சியத்தில் கூறியுள்ள கருத்தைத்[4] தழுவி பொருண்மை உறவுநிலை மூன்று வகையாகப் பிரித்து விளக்கப்படுகிறது. அவை,

---

1. தொல்காப்பியம், (மு. கா. நூ.) நூ. 297. ப. 486.
2. மேற்படி. ப. 486.
3. நன்னூல் விருத்தியுரை, (மு. கா. நூ.. 442. ப. 414.
4. கோதண்டராமன். பொன். இலக்கணக் கலைக் களஞ்சியம் (சென்னை - 18, தமிழ் நூலகம், 1985). ப. 73.

1. ஒருபொருள் பலசொல் (Synonyms)
2. பலபொருள் ஒருசொல்போலி (Polysomy)
3. பலபொருள் ஒருசொல் போலி Homonym)

என்பனவாம்.

ஒரு பொருள் பலசொல்

ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்களை 'ஒருபொருள் பலசொல்' என்பர்.

நெல்தாள் கட்டுகளை அடித்தலில் பயன்படுத்தும் கயிறு, 'கட்டடிக்குங் கயிறு' எனப்படும். இதனைத் தண்டுக் கயிறு, பழுதைக் கயிறு, கோட்டுக் கயிறு, அரியடிக்குங் கயிறு, அக்முந்தி அடிக்குங் கயிறு என்றெல்லாம் கூறுவது ஒரு பொருளைக் குறிக்க வழங்கும் பல சொற்களாகும்.

பல பொருள் ஒரு சொல்

பல பொருளைத் தருகின்ற ஒரு சொல்லினைப் 'பல பொருள் ஒருசொல்' என்பர். இதனைப் பற்றிய விளக்கம் இவ்வியலிலேயே முன்னர் சொல்லப்பட்டுள்ளது.

பலபொருள் ஒரு சொல் போலி

பலபொருள் ஒருசொல் போலி என்பது 'பலபொருள் ஒரு சொல்' என்பதினின்றும் சற்று வேறுபட்டது.

பலபொருள் ஒரு சொல்லில், குறிப்பிட்ட பொருள்கள் தம்முள் தொடர்புடையனவாயும் தொடர்பற்றனவாயும் இருக்கும்.

பலபொருள் ஒரு சொல்லில், குறிப்பிட்ட பொருள்கள் தம்முள் தொடர்பற்றன வாயிருப்பின் அவை பலபொருள் ஒருசொல் போலியாம்.[1]

தொடர்புடைய பலபொருள் ஒரு சொல்லுக்கும் பல பொருள் ஒருசொல் போலிக்கும் எடுத்துக் காட்டுகள் தொழில் சார்புடைய சொற்களினின்றே தரப்படுகின்றன.

1. மேற்படி. ப. 73.

தொடர்புடைய பல பொருள் ஒரு சொல்

வாரம்:

வாரம்

வாரம்	பங்கு	அன்பு
(காலத்தின் பங்கு)	(விளைவின் பங்கு)	(உள்ளத்தின் பங்கு)

இவ்வாறு வாரம் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் இருப்பினும் அவையாவும் தம்முள் பொருளால் தொடர் புடையனவாயிருத்தல் காணலாம்.

கதிர் என்னும் சொல்லுக்கு ஒளிக்கற்றை, ஊசிக்கண்டு. பயிர்களின் கதிர் ஆகிய பொருள்கள் உண்டு. இவை யாவும் தம்முள் வடிவத்தால் ஒன்றியுள்ளதைக் காணலாம்.

இவ்வாறே, இவ்வியலில், 'இடத்துக்கேற்ப சொற்பொருள் மாற்றம்' என்னும் தலைப்பில் வருவனவற்றுள் தாளடி, துண்டு, குட்டை, உறை, சக்கை, சடை ஆகிய சொற்கள் தொடர்புடைய பலபொருள் ஒரு சொல்லுக்கு எடுத்துக்காட்டு களாகும்.

தொடர்பற்ற பல பொருள் ஒருசொல்

சால்:

சால்

நீரிறைக்கும் கலம்	தானியசேமிப்பு மட்பாண்டம்	உழவுசால்

சால் என்னும் சொல்லுக்கு நீர் இறைக்கும் கலன், தானிய சேமிப்பு மட்பாண்டம், உழவுசால் ஆகிய பொருள்கள் உண்டு. இவையாவும் தம்முள் தொடர்பில்லாதனவையாக இருப்பதைக் காணலாம். இவ்வாறு பலபொருள்கள் தம்முள் தொடர் பில்லாமல் ஒரு சொல்லாக வழங்குவனவற்றையே பலபொருள் ஒருசொல் போலி என்பர்.

நாசி என்னும் சொல்லுக்கு மூக்கு, மாட்டிற்கு இருக்கக் கூடாத சுழி ஆகியபொருள்கள் உண்டு. இவை தம்முள் தொடர்பில்லாமல் இருத்தல் காணலாம்.

இவ்வாறே இவ்வியலில், 'இடத்துக்கேற்ப சொற்பொருள் மாற்றம்' என்னும் தலைப்பில் வருவனவற்றுள் வினாடி, பணி, படை, தாமம், மூலம், வாய்தா, ஏர் ஆகிய சொற்களின் பொருள்கள் தம்முள் தொடர்பில்லாமல் இருத்தல் காணலாம். ஆகவே, இச்சொற்கள்யாவும் பலபொருள் ஒருசொல்போலிக்கு எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றன.

கிளைமொழிகளை அறிதலும் வகைப்படுத்துதலும்

" கிளைமொழிகளைக் கண்டறிய மொழியியலார் கிளை மொழிப் பாகுபாடு (Isogloss) என்ற கருத்தினை வலியுறுத்து கின்றனர். மொழிக்கூறுகளின் அடிப்படையில் இப்பாகு பாட்டினை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.[1] அவை முறையே 1. ஒலிப்பாகுபாடு, 2. சொல் பாகுபாடு, 3. பொருள் பாகுபாடு ஆகும்.

ஒலிப்பாகுபாடு


வட்டார மொழிகளில் ஒலிகள், ஒலியன்கள் முதலியன வேறுபடும் முறையைப் பாகுபடுத்திக் காண்பது ஒலிப்பாகு பாடாம். தமிழ் மொழியில் ககரம் ஒரு சொல்லின் இரு உயிர் களுக்கிடையில் வரும்பொழுது வகரமாகவோ யகரமாகவோ வழங்குகிறது, சில இடங்களில் முகரமாகவும் மாறுகிறது.

க் > வ் { காஞ்சிபுரம், மதுராந்தகம் வட்டம்
க் > ய் { பள்ளிப்பட்டு வட்டம்.

நுகத்தடி	— நவுத்தடி	— காஞ்சிபுரம் வட்டம்
	— நுவத்தடி	— மதுராந்தகம் வட்டம்
	— நொயித்தடி	— பள்ளிப்பட்டு வட்டம்


ஜட்டகம்	> ஜட்டவம்
பலகை	> பலக > பலவ
பலுகு	> பலுவு
நாகு	> நாவு

1. சீனிவாச வர்மா. கோ., கிளைமொழியியல், (அண்ணா மலை நகர், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம் 1986) பக். 9&10.




பூட்டுத்தலை - நூலிழைக்கும் கருவி [பக். 377]

பூட்தல	- காஞ்சிபுரம், உத்தரமேரூர், செங்கற்பட்டு
ஆல	- மதுராந்தகம், செய்யூர்
சக்கரம்	- திருவள்ளூர், பொன்னேரி, கும்முடிப் பூண்டி, ஊத்துக்கோட்டை
குச்சிராட்னம்	- திருத்தணி, பள்ளிப்பட்டு
சொழல்	- திருப்பெரும்புதூர், சைதாப்பேட்டை
வினாடி	- ஈக்காடு (திருவள்ளூர்)



போகம் - காஞ்சிபுரம், மதுராந்தகம், செய்யூர், உத்தரமேரூர், ஊத்துக்கோட்டை, திருவள்ளூர், திருப்பெரும்புதூர், பொன்னேரி, கும்முடிப்பூண்டி, செங்கற்பட்டு, சைதாப்பேட்டை.

கந்தாயம் - திருத்தணி, பள்ளிப்பட்டு. (பக். 379)



உறுப்பு - மாடு கன்று ஈன்றவுடன் வெளிப்படும் குடற்பகுதி.

உறுப்பு	-	காஞ்சிபுரம், உத்தரமேரூர், மதுராந்தகம், செங்கற்பட்டு, திருப்பெரும்புதூர், சைதாப்பேட்டை.
உடுப்பு	-	பள்ளிப்படடு, திருத்தணி, செய்யூர்.
இடுப்பு	-	திருவள்ளூர், கும்முடிப்பூண்டி.
மாசி	-	பொன்னேரி.
மாபி	-	ஊத்துக்கோட்டை

(பக். 380)

புகைந்து போச்சு > பொகிந்து போச்சு —காஞ்சிபுரம் வட்டம்
> பொவிந்து போச்சு —மதுராந்தகம்வட்டம்
> பொழிஞ்கி போச்சு—செய்யூர் வட்டம்
> பொவிஞ்சி போச்சி
> பொயிஞ்சி போச்சி
குத்தகை > குத்தவை
மதகு > மதுவு

இரு உயிர்களுக்கிடையே வரும் ழகரம் யகரமாக ஒலிக்கப் படுகிறது.

குழல் > குயல்
கழனி > கயனி
விழுது > வியுது

இவ்வாறு இருவட்டக்கிளை மொழிகளுக்குள் உள்ள ஒலிகளை பாகுபடுத்திக் காண்பது ஒலிப்பாகுபாடாம்.

சொல் பாகுபாடு

ஒரே பொருளில் வழங்குகின்ற சொற்களின் வடிவம் ஓரளவு ஒற்றுமையுடையதாகவோ வேறு பட்டதாகவோ அமையும். எனினும் வட்டத்திற்கேற்ப அவை மாறி மாறி வழங்கப்படுவதை விளக்குவது சொல்பாகுபாடாம்.

எடுத்துக்காட்டாக, பரிவட்டத்தில் நூலிழைக்க நூல் பொந்தினை மாட்டும் கருவியைப் பூட்டுத்தலை, சொழல், குச்சிராட்டினம், ஆலை, சக்கரம், வினாடி என்றெல்லாம் வழங்குகின்றனர். காஞ்சிபுரம், உத்தரமேரூர் வட்டங்களில் பூட்டுத்தலை என்றும் மதுராந்தகம், செய்யூர் வட்டங்களில் ஆலை என்றும் செங்கல்பட்டு, திருப்பெரும்புதூர், சைதாப் பேட்டை வட்டங்களில் சொழல் என்றும் திருவள்ளூர், பொன் னேரி, கும்முடிப்பூண்டி வட்டங்களில் ச கரம் என்றும் திருத் தணி, பள்ளிப்பட்டு வட்டங்களில் குச்சிராட்டினம் என்றும் வழங்கப்படுகின்றன. வினாடி என்பது கீழ்மேலாகச் சுற்றும் தன்மையில் பயன்படுத்தப்படுகிறது. மற்ற இடங்களில்

இக்கருவி பக்கவாட்டில் சுழலும் தன்மையில் பயன்படுத்தப்படு கிறது. ஆனால் எல்லாம் ஒரே அமைப்புடையனவாய்க் காணப் படுகின்றன. வினாடி என்னும் சொல் திருவள்ளூர்-ஈக்காடு பகுதியில் வழங்கப்படுகிறது.

நூலிழைக்கும் பொழுது பூட்டுத்தலையைத் தாங்கும் கட்டை, உருண்டைக் கட்டிக் கட்டை எனப்படும் இதனை காஞ்சிபுரம், உத்தரமேரூர் வட்டங்களில் உண்டகட்டி கட்டை என்றும், திருத்தணி, பள்ளிப்பட்டு, செய்யூர் வட்டங்களில், கொம்மகோலு என்றும் திருப்பெரும்புதூர் சைதாப்பேட்டை வட்டங்களில் பொட்டிநாட்டிக் கட்டை என்றும் வழங்கு கின்றனர்.

இக்கட்டை அல்லது கொம்பு மண்ணாலான உருண்டை அல்லது திம்மையான (உறுதியான) கட்டையில் பொருத்தப் பட்டிருக்கும்; தற்காலத்தில் கல்லிலும் பொருத்தப்பட்டுள்ளது. இதனை மேற்கண்ட வட்டங்களில் முறையே உண்டைக்கட்டி, கொம்மைக் கட்டி பொட்டி நாட்டி என்றும் கூறுவர்.

பூட்டுத்தலையைச் சுழற்ற உதவும் குச்சியைப் பொம்பரம், பொம்பரக்குச்சி, திருகாணி, திருகுக்குச்சி என்றெல்லாம் வழங்குவர்.

உருண்டைக் கட்டிக் கட்டையில் கட்டைக்குப்பதில் இரும் புக்கம்பி பயன்படுத்தும் இடங்களில் பூட்டுத்தலையில் பொம் பரம், பொம்பரக்குச்சி முதலியனவாகச் சொல்லப்படும் குச்சிக்குப் பதில் கொட்டாங்கச்சியின் அடிப்பாகம் அல்லது குளிர்ப்பானப் புட்டிகளின் மூடி கட்டப்பட்டுச் சுழலவைக்கப் படுகின்றன.

பாவின் இடையில் புணியில் போடப்படும் கெட்டியான மூங்கில் பத்தையைக் காஞ்சிபுரம், உத்தரமேரூர் வட்டங்களில் அளுவு என்றும் மதுராந்தகம், செய்யூர் வட்டங்களில் அளவு என்றும் திருத்தணி, பள்ளிப்பட்டு வட்டங்களில் அளகு என்றும் வழங்கப்படுகின்றன.

நெசவுத்தறியில் பயன்படுத்தப்படும் வலிக்கயிறு செய்யூர் வட்டத்தில் ஓடுக்கயிறு என வழங்கப்படுகிறது. இக்கயிற்றைத் தறியின் எதிரில் தாங்கிப் பிடிக்கும் மாதறாங்காலை (மாதறிக்

கால்) செய்யூர் வட்டத்தில் நின்னச்சிக்கொம்பு என்றும் பள்ளிப்பட்டு வட்டத்தில் மாதறாணை எனவும் வழங்குகின்றனர்.

கரும்பின் தழையைச் சோணை, சோலை, சோகை என்று மூன்று சொற்களால் வழங்குவர். காஞ்சிபுரம், உத்தரமேரூர் வட்டங்களில் சோணை என்றும் ஊத்துக்கோட்டை, திருவள்ளூர், செங்கற்பட்டு, மதுராந்தகம், திருப்பெரும்புதூர் வட்டங்களில் சோலை என்றும் பள்ளிப்பட்டு, திருத்தணி வட்டங்களில் சோகை என்றும் வழங்கப்படுகின்றன.

உழவுத்தொழிலில் ஓர் ஆண்டின் ஒருமுறை நிலத்தில் பயிரிட்டு விளைவு செய்தலைப் போகம் என்றும் கந்தாயம் என்றும் கூறுவர். காஞ்சிபுரம், மதுராந்தகம், செய்யூர், உத்தரமேரூர், ஊத்துக்கோட்டை, திருவள்ளூர், திருப்பெரும்புதூர், பொன்னேரி, கும்முடிப்பூண்டி, செங்கற்பட்டு வட்டங்களில் போகம் என்றும் பள்ளிப்பட்டு, திருத்தணி வட்டங்களில் கந்தாயம் என்றும் வழங்குகின்றனர். இவற்றில் திருவள்ளூர், ஊத்துக் கோட்டை, திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம் வட்டத்தினருக்குப் போகம் என்பதைக் கந்தாயம் என்றும் சொல்வதுண்டு என்பது தெரியும். பொன்னேரி, கும்முடிப்பூண்டி வட்டத்தினருக்குக் கந்தாயம் தெரியாது. திருத்தணி, பள்ளிப்பட்டு மக்கள் போகம் தெரியாது என்றும் கூறுவர்.

மண்ணில் விளைந்து மண் இலாது காய்க்கும் புன்செய்ப் பயிர் ஆதலால் வேர்க்கடலைக்கு மணிலாக் கொட்டை என்ற பெயர் உண்டாகியது என்பர்.

இம்மணிலாக் கொட்டையைக் கள்ளக்கா, வேர்க்கல்ல, மள்ளாட்ட, மள்ளாகொட்ட என்றெல்லாம் கூறுகின்றனர். இவற்றில் மள்ளாட்ட, மள்ளாகொட்ட ஆகிய சொற்கள் செய்யூர், மதுராந்தகம் வட்டங்களிலும் மற்ற வட்டங்களில் கள்ளக்கா (கடலைக்காய், வேர்க்கல்ல வேர்க்கடலை) ஆகிய சொற்களும் வழங்குகின்றன.

விதைப்புக்கு முன் பாய்ச்சப்படும் நீரைச் சீர்த்தண்ணீர், தெளிவுத் தண்ணீர் என்றும் முளைப்புக்குப் பின் பாய்ச்சும் நீரை முளைத் தண்ணீர், செலத்தண்ணீர், பாலித் தண்ணீர், மூணாந் தண்ணீர் என்றும் கூறுவர்.

ஒரு நிலத்திலிருந்து இன்னொரு நிலத்திற்கு மோழை வழியாக நீர் அதிகமாகச் செல்வதை அடைக்க ஒரு மண்வெட்டி கெட்டி மண் வெட்டிப் போட்டுஅடைப்பர். இதற்காக வெட்டியெடுக்கப்பட்ட ஒரு மண்வெட்டி கெட்டி மண்ணைக் கழு, கழுவு, பில்லுப்பத்தை, கயிவு என்றெல்லாம் இயம்புவர்.

ஏற்றம் இறைத்தலில் துலானின் முன்னும் பின்னும் சென்று ஏற்றம் மிதிப்பவர் குத்துக்கல்லுடன் இணைக்கப்பட்டிருக்கும் கொம்பைப் பிடித்துக் கொள்வர். அதனைப் புட்சாணிக் கொம்பு, புள்சாட்டிக் கொம்பு, ஏத்தகெட (ஏற்றக்கெடை) என்றெல்லாம் வழங்குவர்.

உழவுத் தொழிலில் நிலத்தைக் குத்தவும் நெசவுத் தொழிலில் நிலத்தைக் குத்தி, பாவு நீட்டுதலில் ஊணிக் கயிற்றைத் தாங்கிப் பிடிக்கவும் உதவும் கருவி கட்டப்பாரை. இதனை எல்லாத் தொழில்களிலும் கட்டப்பாரை அல்லது கடப்பாரை என்று வழங்குவர். ஆனால் நெசவுத்தொழில் செய்பவர் பெரும்பாலும் இக்கருவியை இருப்பாணி என்றே இயம்புவர்.

காய்களை அறுக்கக் கொக்கி சொருகப்பட்ட மூங்கில் கழியைத் தொரடு, கொக்கித் தொரடு, சொரடு, கொரடு, டோட்டி (தோட்டி) என்றெல்லாம் வழங்குவர்.

தழைகளை வெட்ட கத்தி கட்டப்பட்ட மூங்கில் கழியைக் கத்தித் தொரடு, ஆக்கரிவாள், கெடைக்கத்தி, பாசரிவாள் கத்தி, ஈச்சங்கத்தி என்றெல்லாம் வழங்குகின்றனர்.

மாடு கன்று ஈன்றவுடன் வெளிப்படும் குடற்பகுதியை உடுப்பு, உறுப்பு, இடுப்பு, மாசி, மாயி, என்றெல்லாம் வழங்குகின்றனர். காஞ்சிபுரம், உத்தரமேரூர், மதுராந்தகம், செங்கல்பட்டு, திருப்பெரும்புதூர் ஆகிய வட்டங்களில் உறுப்பு என்றும், பள்ளிப்பட்டு, திருத்தணி, செய்யூர் வட்டங்களில் உடுப்பு என்றும், திருவள்ளூர், கும்முடிப்பூண்டி வட்டங்களில் இடுப்பு என்றும், பொன்னேரி வட்டத்தில் மாசி என்றும் ஊத்துக்கோட்டை வட்டத்தில் மாயி என்றும் வழங்குகின்றனர்.

கன்றை ஈன்றவுடன் தாய் மாட்டின் உடல் உறுப்புகளுள் ஒரு பகுதி வெளிப்படுதலின் அதனை உறுப்பு என்றும், கன்றின்

மேல் தோலாக இருந்தமையினால் உடுப்பு என்றும் வழங்கப் படுகின்றன. உடுப்பு என்பது இடுப்பாகவும் வழங்கப்படுகிறது எனலாம்.

கன்றைச் சூழ்ந்திருந்த உறுப்பு, கன்று மாட்டின் உடலி லிருந்து வெளிவந்தவுடன் வெளிப்பட வேண்டிய ஒன்று. அது தொடர்ந்து மாட்டின் உடலில் இருப்பது மாசுஆகும். அத னால் அதனை மாசி என்கின்றனர் போலும். அந்த மாசி' மாயி ஆகவும் வழங்கப்படுகிறது எனலாம்.

மாசு > மாசி > மாயி
உடுப்பு > இடுப்பு

பொருள் பாகுபாடு

ஒரே ஒலிவடிவமுள்ள ஒரு சொல்லுக்கு வெவ்வேறிடங் களில் வெவ்வேறு பொருள் வழங்குவதைப் பொருள் பாகுபாடு என்பர்.

'ஆல' [ஆலை] என்னும் சொல் மதுராந்தகம், செய்யூர் வட்டங்களில் பரிவட்டத்தில் நூலிழைக்க நூல் பொந்தினை மாட்டும் 'பூட்டுத்தலை' யைக் குறிக்கும். காஞ்சிபுரம், உத்தர மேரூர், திருப்பெரும்புதூர் வட்டங்களில் பரிவட்டத்தில் இழைக்கப்பட்ட நூலைப் பாவாக்க உதவும் கருவியைக் குறிக்கும்

'சக்கரம்' என்னும் சொல் :பொன்னேரி, கும்முடிப்பூண்டி, திருவள்ளூர் வட்டங்களில் நெசவுத் தொழிலில் பரிவட்டத்தில் நூலிழைக்க நூல் பொந்தினை மாட்டும் 'பூட்டுத்தலை' என்னும் கருவியைக் குறிக்கும். மற்ற வட்டங்களில் சக்கரம் என்பது வண்டிச்சக்கரம் போல் வட்டவடிவில் உள்ள வற்றைக் குறிக்கும்.

ஊத்துக்கோட்டை, திருவள்ளூர், செங்கற்பட்டு, மதுராந் தகம் வட்டங்களில் சோலை என்றால் கரும்பின் தாளைக் குறிக்கும். காஞ்சிபுரம், உத்தரமேரூர் வட்டங்களில் சோலை என்னும் சொல் பூங்காவனம், நந்தவனம் ஆகியவற்றைக் குறிக்கும்.

சோகை என்பது பள்ளிப்பட்டு, திருத்தணி வட்டங்களில் கரும்பின் தாளைக் குறிக்கும். காஞ்சிபுரம், உத்தரமேரூர் வட்டங்களில் இரத்தமின்றி முகம் வெளுத்திருப்பதைச் 'சோகை' என்னும் சொல் குறிக்கும்,

இவ்வாறு தொழில் சார்புடைய சொற்களில் பொருண்மை உறவு காண்பதற்கு மிகுந்த இடமுண்டு எனலாம்

இலக்கணம்

பேச்சு மொழியில் சில இலக்கண வகைக்கு உரிய எடுத்துக் காட்டுகள் கிடைக்குமாயின் இம்மொழியினையும் நம் ஆய்வுக் குக் கொள்ளலாம் என்பது தெ,பொ. மீனாட்சி சுந்தரனாரின்[1] கருத்து. இக்கூற்றுக் கிணங்க வழக்கில், மங்கல வழக்கிற்கு இங்கு எடுத்துக்காட்டு காணப்படுகின்றது.

வழக்கு

இலக்கணம் உடையது, இலக்கணப்போலி, மரூஉ ஆகிய மூன்றும் இயல்பு வழக்காகவும், இடக்கர் அடக்கல், மங்கலம், குழூஉக்குறிஆகிய மூன்றும் தகுதி வழக்காகவும் ஆக அறுவகை வழக்கை[2] நன்னூல் கூறுகின்றது.

தகுதி வழக்குள் ஒன்றெனப்படும் குழூஉக்குறி பற்றி மாட்டுத் தரகர் பேச்சு வழக்குள் சொல்லப்பட்டுள்ளது. இங்கு மங்கலம் பற்றிச் சில கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன.

இறந்தவரை, இறைவனடி சேர்ந்தார் என்றும் இயற்கை எய்தினார் என்றும், பாம்புகளுள் கொடிய பாம்பை 'நல்ல பாம்பு' என்றும் கூறுவதாக இலக்கண நூல்கள் கூறும். அம் மாதிரியே வறுமையை 'நல்குரவு' என்று கூறுவதும் வழக்கமாக உள்ளது.

தொழில் சார்புடைய சொற்களில் 'ஆடு' பற்றியும் ஆயப் பட்டுள்ளது. இதில் கருமை நிறமுடைய ஆட்டை,'வெள்ளாடு' என்பர். எந்த வெள்ளாடும் வெண்மைநிறம் மட்டும் உடைய

உஉ கில் 1. சுப்பிரமணியம். வி. ஐ. திராவிட இலக்கணக் கொள்கை. வ. ஜெயதேவன், பா. வீரப்பன் [தமிழாக்கம்], [சென்னை-5 , அன்பு நூலகம். 1978), ப 19.

ஒரு 2. நன்னூல் விருத்தியுரை, (மு. கா. நூ.) நூ. 267. ப. 208

தாயிராது. சில ஆடுகள் சற்று வெண்ணிறத்துடன் காணப் பட்டாலும் கருமை, செம்மை நிறத்தில்தான் மிகுதியான ஆடுகள் காணப்படுகின்றன. வெண்மை நிறம் கலந்திருக்கும் இடம், தன்மை ஒட்டி ஆட்டிற்குப் பல்வேறு பெயர்கள் வழங்கப்படுகின்றன என்ற நிலையினை ஆடுகள் பற்றி ஆய்ந்த தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது.

நெசவுத் தொழிலில் பொரப்பாவினை வீதியில் நீட்டி அணுவாக்கிய பின்பு வீதியிலேயே ஓசையின்றிக்கையால் பாவி னிடையே நாடாவைச் செலுத்திப் போடப்படும் வாட்டை ஓச வாட்டு (ஓசை வாட்டு) என்பர். ஓசை வாட்டு என்பது (இழைகளின்) இசைவு வாட்டைக் குறிக்கும்.

தறியில் பாவிலுள்ள இழைகள் சீராக வாராமல் குளிகை மாறி வரும் இழைகளைச் 'சீரிழை' என்பர்.

கீழ்த்தறிக்கு இடையூறில்லாமல் மேல் தறிக்காகப் பயன் படுத்தப்படும் மாதறிக்காலை அட்டதூலம் (அட்டிதூலம்) என்பர்.

அட்டி [1] என்ற சொல்லுக்குத் தடையென்பது பொருள்.

இவற்றால் வெள்ளாடு, ஓசைவாட்டு, சீரிழை, அட்டி தூலம் என்பன தகுதி வழக்குள் மங்கல வழக்கைச் சாரும் எனலாம்.

இவ்வாறு இலக்கணக் கூறுகள் காண்பதற்கும் தொழில் சார்புடைய சொற்கள் பயனளிக்கின்றன.

அடுத்து, 1982 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட தமிழ்ப் பேரகராதியில் உள்ள சில சொற்களுக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட தொழில்கள் சார்ந்த சொற் களின் அடிப்படையில் கூறப்படும் புதிய பொருள்களைக் காண்போம்.

---

1. *'அட்டிசெய நினையாதீர்'*
இராமலிங்க அடிகள், திருவருட்பா 6, ஊரன் அடிகள் (பதி.) (வடலூர், சமரசசன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், 1972) திருவருட் பேறு 2. ப. 695.

சொல்	அகராதியில் உள்ள பொருள்	புதிய பொருள்
அள்ளு	அள்ளிக்கொடுக்கும் தானியம்	மாட்டின் மார்புக் கூட்டுக்குப் பின் முதுகிலுள்ள குழிப்பாகம்.
அறை	அடி, உள்வீடு, துண்டம்,	மாட்டின் மலவாய்ப் பகுதி.
ஆடை	உடை, பாலேடு	கேழ்வரகின் மேலுள்ள மெல்லிய தோல்.
ஆரை	நீராரை, கோட்டைமதில் புற்பாய்.	அலைதாடி
ஆலை	கரும்பாலை, கள்.	பூட்டுத்தலை, நூலைப் பாவாக்க உதவும் கருவி.
ஆலைக்குழி	கரும்பாலையில் சாறேற்கும்அடிக் கலம்	பொரப்பாவில் பெரிய ஆலைக்கு உரிய குழி
ஆனையடி	சதுரங்க ஆட்டத்தில் யானை செல்லும் கதி.	கட்டுத்தளையில் அசைந்து கொண்டிருக்கும் மாடு.
இடுப்பு	அரை, மறை உறுப்பு,	கன்று ஈன்றவுடன் வெளியாகும் குடற்பகுதி
ஈத்து	பண்டிகை	கன்று ஈனுதல்.
உண்டைக் கட்டி	கோயில் வில்லை, பிரசாதம்.	நெசவாளர் உபயோகிக்கும் கருவிகளுள் ஒன்று
உடுப்பு	ஆடை, அங்கி	உறுப்பு, இடுப்பு
உறுப்பு	அவயம், அங்கம், மரக்கொம்பு,	உடுப்பு, இடுப்பு.
உறை	ஆயுதக்கூடு, உறைமோர் மருந்து.	தானிய சேமிப்புக் கலம்
கட்டு	பத்தல், காவல், ஆணை, வளைப்பு	400 வெற்றிலை.

கண்டி	கழுத்துதணிவகை, உருத்திராக்க மாலை.	தோய்ச்சடிக்காரர் தோய்ந்து கொடுக்கும் நூலுக்குரிய பெயர்
கண்ணி.	பூமாலை, பூங் கொத்து, ஒருவகை இசைப்பாட்டு.	பாவின் சிறு பகுதி.
கம்பம்	தூண், விளக்குத் தண்டு, நடுக்கம், அசைவு.	கயிலித்துணியில் நெய்யப் படும் நெசவு அமைப்பு.
கவான்	துடை,	அலைதாடியிலுள்ள சுழி
காம்பு	இலை, பூ முதலிய வற்றின் தாள்,கருவி களின் கைப்பிடி	ஆடு, மாடுகளின் மடியிலுள்ள சிறு உறுப்பு.
காற்று வாட்டம்.	காற்றுக்கு எதிர்முகம்.	காற்றடிக்கும் திசை
குச்சி	மரக்குச்சி, ஒருவகைச் செடி.	குழல்.
குத்துக் கொம்பு	விலங்கின் நேர்க்கொம்பு	ஏற்றத்தில்பயன்படுத்தும் புள்சாட்டிக் கொம்பு.
குதிரைவலி	பெண்களுக்குப் பிரசவ காலத்தில் உண்டாகும் பெருவலி.	ஆடு, மாடுகளுக்கு உண் டாகும் பெருநோய்
குளிகை	மந்திர சக்தியுள்ள மாத்திரை.	அணி மாறிவரும் இரு இழைகள் சேர்ந்தது.
கையடி	களத்தில் கையால் அடித்த தானியம்.	விசைத்தறியில் நாடா வைத் தடுத்துச் செலுத் தும் சிறிய மரத்துண்டு.
கையேற்றம்	செல்வப் பெருக்கான நிலை	நீர் நிலையினின்றுகையால் நீர் இறைக்கும் முறை.
கொலுசு	கை, கால்களில்அணியும் பொன்(அ)வெள்ளியா லான அணி, 22கஜ நீள முள்ள அளவுச்சங்கிலி.	கோலில் விழுதை ஒரு சுற்று சுற்றுதல்,

கோர்வை	கோவை, அன்ன வெட்டி என்னும் பாத்திரம்.	கரையும் உடலும் வெவ் வேறாயிருந்து நெசவு செய்தல்.
சத்துவம்	வலிமை, சாரம்.	உரம்.
சாரல்	கிட்டுகை, பக்கம், மலை, தூவானம்.	நிறம்இலேசாகக்குறைதல்
சாலகம்	சலதாரை	நீர் செல்லும் மூடியவழி.
சுள்ளாப்பு	பழிச்சொல், மழைக்குப் பின் அடிக்கும் கடும் வெயில்	ஏரில் மேழியை அடித் திண்டுடன் இணைக்கு மிடத்திலுள்ள ஆப்பு.
செம் போத்து	ஒருவகைப் பறவை	கருமையும் சிவப்பும் கலந்த நிறமுள்ள மாடு.
செலுப்பு	நீர்கோப்பு, சிறுதுண்டு, பாக்குச் சீவல்	சோலையின்முந்தாணியில் செய்யபடும் பூ வேலைப் பாடு.
தட்டு	தட்டுகை, அடி, இலாபம் தந்திரம், முறம், யந்திரம்	மாட்டின் முதுகில் அள்ளுக்குப் பின்னுள்ள பகுதி.
தலைக்கட்டு	முடிவு, குடும்பம், வீட்டின் முதற்கட்டு.	ஆட்டிற்கு உண்டாகும் நோய்களுள் ஒன்று.
தறிமரம்	நெசவுத்தறியில் அடை சுருட்டும் மரம்.	அச்சு மரம்.
தாணு,	நிலைபேறு, தாவரம், தூண், சிவன், பற்றுக் கோடு.	நெய்து முடிக்கப் பட்ட பாவின் ஒருபகுதி அல்லது சேலை.
தொம்பை	மூங்கிலாலான நெற்குதிர்.	எருமைக்குண்டாகும் நோய்களுள் ஒன்று.
தோட்டி	வெட்டியான்.	கம்முக்கட்டி.
தோம்பு	சிவப்பு, நிலவிவரக் கணக்கு.	ஊடையும், பாவும் ஒரே நிறமுடைய லுங்கித்துணி
தோலுரித் தல்	பாம்புசட்டை கழற்று தல்.	பட்டுப்பூச்சி மேல் தோல் உரித்தல்.

நாகபாசம்	போரில் பகைவரைப் பிணிக்கச் செலுத்தும் பாம்புருவமான	மாட்டின் இரு தொடைக்கும் மத்தியில் பட்டையாயிருக்கும் தீய சுழி.
	மந்திரக் கயிறு அல்லது கம்பி.	கயிலி ஆலையில் முப்பது இழைகள் செல்லஇரும்புக் கம்பிகள் உள்ள சட்டம்.
நாசி	மூக்கு, சலதாரையின் வாய், இசைக்குற்ற வகை	இருக்கக் கூடாத சுழியுடைய மாட்டைக் குறித்த தரகர் வழங்கும் சொல்.
நீர்க்குத்து	நீர்க்கடுப்பு, நீர் நிலைக்கு எதிராக வீட்டு வாயில் அமைந்திருக்கும் நிலை.	மாட்டின் தொப்புள்.
நூக்கு	உயரம், மரவகை	நெல்லின் முளைப்பகுதி.
பச்சைக் கட்டுதல்	சாந்து செய்யும்மருந்து, சிறு நன்கொடை.	பயிர் செழிப்பாக உள்ள நிலை.
பஞ்சகல் யாணி	குதிரையின் நெற்றியில் வெள்ளை, நான்கு கால்கள் வெள்ளை நிற முடையது.	மாட்டின் நெற்றியில் வெள்ளை, நான்கு கால்கள் வெள்ளை, வால் வெள்ளை நிறமுடையது.
பழு	ஏணியின் படிச்சட்டம்	வண்டியில் பார், படல் சட்டம், ஏர்க்கால் ஆகிய வற்றை இணைக்கும் நான்கு இரும்புப் பட்டைகள்.
பள்ளை	குள்ளம், பள்ளையாடு, வயிறு பருத்த பிராணி.	2 படி,
பன்னை	தறி	விழுது கட்டியுள்ள அச்சு.
பால்கட்டு தல்	அம்மைகுத்துதல்.	கதிர்கள் மணிகளைப் பிடிக்கத் தொடங்கிய நிலை.
பாவடி	அங்கவடி	பொரப்பாவுக்குக் கஞ்சி போடுமிடம்.

புணி	மயிர்முடி	பாவு நூல் அணி மாறி வருதல்.
புணையல்	பிணைப்பு	புணி மாறிவரும் இடம்.
புரு	மிகுதி, பருமை, ஓர் அசுரன், குழந்தை.	பரிவட்டத்தில் சுற்றிப் படும் ஒரு பிரிவு.
பொந்து	மரப்பொந்து, எலி முதலிய வற்றின் வளை,	முன்பு 10 சிலுப்பைகளும் தற்பொழுது 5 சிலுப்பை களும் கொண்ட நூலின் தொகுதி.
மனை	வீடு, மனைவி, குடும்பம்	நடுநர் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்ளும் நில அளவு.
முடிச்சு	சிறுமூட்டை, மயிர்முடி	நாற்று முடிச்சு
மைக்கண்	நெல் வகை	கண்சுற்றி கறுப்பு நிற முடைய மாடு.
வாட்டு	பொரியல், உபத்திரவம், அழகானது, தகுதி யானது, சார்பு, மலிவு.	தறியில் பாவினிடையே ஒருமுறை நாடா வைச் செலுத்துதல்.
வினாடி	ஒருகால நுட்பம்.	கீழ் நோக்கிச் சுற்றும் பூட்டுத் தலை.
வெங்கோல்	கொடுங்கோன்மை	எருமை இனத்துள் ஒன்று,

இவ்வாறு இவ்வியலில் உழவு, நெசவு சார்ந்த சொற்கள், காலத்திற்கு ஏற்ப வளர்ந்து வரும் பொருள் நுட்பங்களையும், பொருள் வேறுபாடுகளையும் அளித்தல் காணப்பட்டன. அடுத்து வரும் இயலில் இச்சொற்கள் இரட்டை வழக்கு நிலையில் இயம்பப் படுதலைப் பற்றிக் காண்போம்.

இயல் - 8

இலக்கியத் தமிழும் பேச்சுத் தமிழும்

ஏழாம் இயலில் சொற்களின் பொருண்மை உறவுகள் பற்றிய விளக்கம் காணப்பட்டது.

'இலக்கியத் தமிழும் பேச்சுத் தமிழும்' என்னும் இவ்வெட்டாம் இயலில், ஓர் ஒலி இன்னொரு ஒலியாக மாறுதல், பேச்சு வழக்குச் சொற்கள் எழுத்து வழக்குச் சொற்களினின்றும் மாறுபடுவதற்குரிய விதிகள், ஒரு சமுதாயத்தில் காணப்படும் இரட்டை வழக்கு, பேச்சு வழக்கில் மொழிக்கு முதலாக வரும் ஒலியன்கள் எழுத்து வழக்கினின்றும் மாறுபடுதல் காரணமாக ஒலியன் விளக்கம், மொழி முதல் ஒலியன்கள், மொழியிடையில் மெய்மயக்கம் ஆகியன பற்றியும் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதியில் இல்லாத தொழில் சார்புடைய சொற்களின் தொகுப்பும் தரப்படுகின்றன.

மொழியின் இருவகை

தமிழ் மொழியின் தொன்மை இலக்கணமாகிய தொல்காப்பியத்தின் சிறப்புப் பாயிரத்தில்,

> 'வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
> எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி'

மொழிக்கு இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இங்கு வழக்கு என்பது, பேச்சு வழக்கு மொழியென்று உரையாசிரியர்களின் உரைகளால் அறியப்படுகின்றது. 'மொழியாராய்ச்சிக்கு எழுத்து மொழி எவ்வளவு பயன்பட்ட போதிலும் பேச்சு மொழி இன்றியமையாததாக உள்ளது'[1].

---

1. வரதராசன், மு. , மொழி வரலாறு, மறுபதிப்பு (சென்னை, கழக வெளியீடு, 1961), ப. 7.

பேச்சு மொழி, ஒருவர் தன் உள்ளத்தில் எழுந்த கருத்தை உடனே பிறருக்கு எளிமையாக விளக்கும் முறையில் அமைகிறது. எழுத்துமொழி, உள்ளத்தில் நினைந்த கருத்தினை ஒருங்கு படுத்திச் செம்மையான மொழியில் யாவரும் எக்காலத்திலும் ஏற்கும் வண்ணம் இயம்புகிறது

பேச்சுமொழி, இடத்திற்கேற்ப காலத்திற்கேற்ப அமைகிறது. எழுத்துமொழி, பேச்சுமொழி வழங்கும் இடம், காலம் ஆகியவற்றைக் கடந்து நிலையான பேற்றினைப் பெறுகின்றது. பேச்சு மொழி ஒரு காலத்தில் எழுத்து மொழியாகின்றது. அதனால் அம்மொழில் வழங்கப்படும் சொற்களும் அவற்றின் பொருள்களும் காலந்தோறும் மாறுபட ஏதுவாகின்றது. அவ்வாறு மாறுவது மொழியின் இயல்பான வளர்ச்சியைக் குறிக்கும்.

ஒரு குறிப்பிட்ட வட்டம்,மாவட்டத்தின் சமுதாயப் பழக்க வழக்கங்கள், தொழில்கள், பண்பாடு முதலியவற்றைச் சிறப்பாகவும் உடனுக்குடனும் அறிய அந்தந்த வட்டம், மாவட்டத்தின் பேச்சு வழக்கினை அறிய வேண்டுவது இன்றியமையாததாகின்றது. எழுத்துமொழி, அம்மொழி பேசுவோரின் இயல்புகள் அனைத்தையும் பொதுவாகவும் காலங்கடந்தும் அறிய உதவி புரிகின்றது.

வழக்குச் சொற்களின் வேறுபாடு

மக்களால் பேசப்படுகின்ற மொழியில், 'நில அமைப்பு, இனம், மதம், சாதி என்பவை மாற்றங்களை ஏற்படுத்தும் வல்லமை வாய்ந்தன' என்பர்.[1] இப்பேச்சு வழக்கு மொழி, மாவட்டத்திற்கு மாவட்டம் அல்லாமல் வட்டத்திற்கு வட்டமும் வேறுபடுகின்றது. வட்டத்திற்குள்ளும் நகரத்தில் வாழ்பவர்களுக்கும் கிராமத்தில் வாழ்பவர்களுக்கிடையேயும் வேறுபாடு உள்ளது.

மாவட்டத்திற்குள்ளும் மாவட்டத்தின் மையத்தில் வாழ்பவர்களுக்கும் எல்லைப் புறங்களில் வாழ்பவர்களுக்கிடையேயும் பேச்சு வழக்கில் வேறுபாடு காணப்படுகிறது.

---

1. இராசாராம். சு., மொழியும் மொழியியலும், [நா.சு. இராசவேல் வெளியீடு, நவம்பர் 1973], ப. 92.

எல்லைப்புறங்களில் வாழ்கின்றவர்கள் அடுத்த மாவட்டத்திற்குரிய, மாநிலத்திற்குரிய சொற்களையும் தம் வழக்காற்றில் பயன்படுத்துகின்றனர்.

ஒரு மாவட்டத்தில் ஒரே தொழில் செய்பவரிடையேயும் அவர்கள் வாழும் இடத்தினையொட்டி பேச்சு வழக்கில் மாற்றம் காணப்படுகிறது. எனவே, தொழில் சார்ந்த சொற்களில் பேச்சு வழக்கில் காணப்படும் மாற்றங்களை அறிய முதலில் தமிழ் மொழியிலுள்ள ஒலிகளைப் பற்றிய விளக்கம் சிறிது காண்போம்.

மொழி ஒலிகள்

மூச்சுக்குழல் வழியாக வாயின் அறையில் நுழையும் காற்று தடையில்லாமல் வெளிப்பட்டால் உயிரொலி என்றும் வாயின் அறையில் தடையேற்பட்டு வெளிப்பட்டால் மெய்யொலி என்றும் பெயர் பெறுகின்றன.

வாயிலுள்ள நா, இதழ். பல், அண்ணம் ஆகியவற்றின் பல்வேறு முயற்சியால் அவை பொருந்தும் இடங்களினின்றும் தோன்றும் மெய்யொலிகளை, 1. பின்னண்ண ஒலி, 2. இடையண்ண ஒலி, 3. நாமடி ஒலி, 4. அண்பல் ஒலி, 5. பல்லின ஒலி, 6. பல்லிதழின ஒலி, 7. இதழொலி என ஏழாக மொழியியலார் வகைப்படுத்துவர். மேலும், அவ்வொலிக்கு அடிப்படையான காற்று வெளிப்படும் முறையை யொட்டித் தடையொலி, உரசொலி, மூக்கொலி, உரப்பொலி, பிரிவளி ஒலி, வருடொலி என ஆறாகவும் பிரிப்பர்.

குரல் வளையில் பிரியும் ஒலியின் தன்மையை யொட்டி ஒலிப்புடை ஒலி. ஒலிப்பிலா ஒலி எனவும் பிரிக்கப் படுகின்றது.

மொழியியலார், தமிழ் மொழியிலுள்ள மெய்யொலிகளை. ஒலியின் தன்மை, அமைப்பு, வகை ஆகிய மூன்று நிலைகளை யொட்டிப் பின்வருமாறு பிரித்துக் காட்டுகின்றனர்.

தன்மை	அமைப்பு	இதழ்	பல்லிதழ்	பல்லினம்	அண்பல்	நாமடி	இடை அண்ணம்	பின் அண்ணம்
ஒலிப்பிலா ஒலி	தடையொலி	ப(p)		த (t)		ட(t)	ச	க[k]
ஒலிப்புடை ஒலி		ப [b]		த[d]		ட[d]		க(g)
ஒலிப்பிடை ஒலி	உரசொலி							
	மூக்கொலி	ம		ந	ன	ண	ஞ	ங
	உரப்பொலி				ற			
	பிரிவளி ஒலி				ல	ழ,ள		
	வருடொலி				ர			

ய — உரசிலா இடையண்ணத் தொடரொலி

வ — உரசிலா இதழ்த் தொடரொலி

செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உழவு, நெசவு சார்ந்த தொழில் சார்புடைய சொற்களில் மேற்சொல்லப்பட்ட ஒலிகளின் மூவகை நிலையில் ஓர் ஒலி பிறிதொரு வகை ஒலியாக ஒலிக்கப்படும் முறைகளைக் காண்போம்

அண்பல் ஒலி		பல்லின ஒலியாதல்
சிற்றாள்	>	சித்தாள்
தொற்றிழை	>	தொத்தெழ
ஊற்று	>	ஊத்து
நாற்று	>	நாத்து
சேற்றுக்கழனி	>	சேத்துகழனி
ஏற்றம்	>	ஏத்தம்
கீற்று	>	கீத்து
நெற்று	>	நெத்து
தூற்று	,,	தூத்து
காற்று	,,	காத்து

இவற்றில் 'ற' கர அண்பல் ஒலியானது 'த' கரப் பல்லின ஒலியாக ஒலிக்கப்படுகிறது.

நாமடி ஒலி		அண்பல் ஒலியாதல்
இளங்காடு	>	இறங்காடு

இதில் 'ள' கர நாமடி ஒலியானது 'ற' கர அண்பல் ஒலியாக ஒலிக்கப்படுகிறது.

பல்லின ஒலி		நாமடி ஒலியாதல்
தோணி	>	டோணி

இதில் 'த' கர ஒலி, 'ட' கர ஒலியாக ஒலிக்கப்படுகிறது.

பல்லினஒலி		அண்பல் ஒலியாதல்
மிதிக்கட்டை	>	மெரிக்கட்ட

இதில் 'த' கர ஒலி, 'ர' கர ஒலியாக ஒலிக்கப்படுகிறது.

பல்லின ஒலி		இடையண்ண ஒலியாதல்
வைத்து	>	வெச்சி
இழைத்து	>	இழைச்சி
பிணைத்து	>	பொணச்சி
பிரித்து	>	பிரிச்சி
தைத்து	>	தச்சி
பிடித்து [ஓட்டு]	>	புடிச்சி [ஓட்டு]

இவற்றில் 'த' கரப் பல்லின ஒலி, 'ச' கர இடையண்ண ஒலியாக ஒலிக்கப்படுகிறது.

நாமடியொலி		அண்பல் ஒலியாதல்
வேர்க்கடலை	>	வேர்க்கல்ல

இதில் 'ட' கர வளைநா ஒலி, 'ல' கர அண்பல் ஒலியாக ஒலிக்கப்படுகிறது.

அண்பல் ஒலி		நாமடியொலியாதல்
சுழற்றி	>	சொழட்டி

இதில் 'ற' கர அண்பல் ஒலி, 'ட' கர நாமடி ஒலியாக ஒலிக்கப்படுகிறது.

இடையண்ணத் தொடரொலி		இதழ்த் தொடரொலியாதல்
கயிறு	>	கவுறு
நோய்	,,	நோவு

இவற்றில் 'ய' கர இடையண்ணத் தொடரொலி, 'வ' கர இதழ்த் தொடரொலியாக ஒலிக்கப்படுகிறது.

பின்னண்ணஒலி		இதழ்த்தொடரொலியாதல்
நாகடமண்	>	நாவடமண்
நுகத்தடி	,,	நவுத்தடி
பலுகு	,,	பலுவு
பலகை	,,	பலவ
நாகுகன்று	,,	நாவுகன்னு

இவற்றில் 'க' கரப் பின்ன்ண்ண ஒலி, 'வ' கர உரசிலா இதழ்த் தொடரொலியாக ஒலிக்கப்படுகிறது.

நாமடி ஒலி		உரசிலா இடையண்ணத் தொடரொலியாதல்
தொழிலாளி	>	தொயிலாளி
குழல்	,,	குயலு
விழுது	,,	வியுது
இழுத்து	,,	இயுத்து
கீழ்த்தறி	,,	கீய்த்தறி
கிழட்டு	,,	கெயட்டு
அழுத்தி	,,	அயுத்தி
கழனி	,,	கயனி
மோழ	,,	மோய
மேழி	,,	மோயி
கொழியலரிசி	,,	கொயிலரிசி

இவற்றில் தமிழ் மொழியின் சிறப்பு 'ழ' கர நாமடியொலி, 'ய'கர உரசிலா இடையண்ணத் தொடரொலியாக ஒலிக்கப் படுகிறது.

உரப்பொலி **பிரிவளி ஒலியாதல்**

செம்மறியாடு > செம்மலியாடு

இதில், 'ற' கர உரப்பொலி, 'ல' கரப் பிரிவளி ஒலியாக ஒலிக்கப்படுகிறது.

தடையொலி **பிரிவளி ஒலியாதல்**

கடலை > கல்ல

இதில் 'ட' கரத் தடையொலி, 'ல' கரப் பிரிவளி ஒலியாக ஒலிக்கப்படுகிறது.

உரப்பொலி **மூக்கொலியாதல்**

கன்று > கன்னு

இதில் 'ற' கர உரப்பொலி, 'ன' கர மூக்கொலியாகிறது.

தடையொலி **மூக்கினவொலியாதல்**

கஞ்சி	>	கஞ்ஞீ
மூங்கில்	,,	மூங்ஙிலு
சங்கம்	,,	சங்ஙம்
இடைஞ்சல்	,,	எடைஞ்ஞலு

இவற்றில் தடையொலிகளாகிய 'க' கரமும் 'ச' கரமும் முறையே தத்தம் இனமாகிய 'ங' கர, 'ஞ' கர மூக்கொலிகளாக ஒலிக்கப்படுகின்றன.

வருடொலி **பிரிவளி ஒலியாதல்**

கோடரி > கோடாலி

இதில் 'ர' கர வருடொலி, 'ல' கரப் பிரிவளி ஒலியாக ஒலிக்கப்படுகிறது.

அண்பல் ஒலி மறைந்து வல்லொற்று மிகுந்தொலித்தல்

கால் குழி	>	காக்குழி
மேல் தரை	,,	மேத்தார

இவற்றில் 'ல' கர ஒற்று மறைந்து வருமொழிக்கேற்ப வல்லொற்று மிகுந்து வந்துள்ளது. ஆனால் மேல் தரை என்னும் சொல்லில் உள்ள தரை, தாரை ஆன முறை விளங்க வில்லை.

இவ்வாறு தொழில் சார்புடைய பேச்சு வழக்குச் சொற்களில் ஒலி இன்னொரு ஒலியாக மாறுவதற்குச் சில விதிமுறைகள் உள்ளன.[1] தெய்வ சுந்தரம் (1981) கூறிய விதிகள் இங்குப் பின்பற்றப்பட்டுள்ளன. அவற்றை 1. விதிக்குட்பட்ட மாறுதல்கள், 2. விதிமுறைகளுடன் தொடர்புடையவை என்று இரு பிரிவாகப் பிரிக்கலாம. விதிக்குட்பட்ட மாறுதல்களை ஒலியனியல் விதி தழுவிய மாற்றம், உருபனியல் விதி தழுவிய மாற்றம் என இருவகையாகப் பிரிக்கலாம். அவ்விதிகளின் அடிப்படையில் சில சொற்கள் மாறும் முறைகளைக் காண்போம்.

விதிக்குட்பட்ட மாறுதல்கள்

அ. ஒலியனியல் விதி தழுவிய மாற்றம்
(Phonologically conditioned changes)

எழுத்து வழக்கில் உள்ள சில ஒலியன்கள் பேச்சுவழக்கில் வேற்றொலியன்களாக மாற்றம் பெறுகின்றன. அவ்வாறு ஓர் ஒலியன் பிறிதொரு ஒலியனாக மாற்றம் பெற்று வழங்குவதற்கு ஒரு நியதி உண்டு. அந்நியதியே அவ்வொலியன் பிறிதொரு ஒலியனாக மாறி வழங்கப்படுவதற்குரிய விதியாகும். அவ்வாறு ஒலியனியல் விதி தழுவிய மாற்றம் பெற்று வழங்கும் சொற்களைக் காண்போம்.

இகரம் எகரமாதல்

எழுத்து வழக்கு		பேச்சு வழக்கு
இளநீர்	>	எளநீர்
நிலவரி	,,	நெலவரி
இழை	,,	எழ
விசை	,,	வெச
நிழல்	,,	நெழல்
நிலம்	,,	நெலம்

1. Devia Sundaram N., Tamil Diglossia, Tirunel - veli, Nainar Pathippagam. 1981) pp. 46 to 49.

கிடங்கு	>	கெடங்கு
கிணறு	,,	கெணறு
விவசாயம்	,,	வெவசாயம்
விதை	,,	வெத

இச்சொற்களின் முதலில் உள்ள இ — எ ஆக மாற்றம் பெற்று ஒலிக்கப்படுகிறது. இவை

$$i \rightarrow e \;//\; - \;(c)\; a/ai$$

என்ற விதிப்படி மாற்றம் பெற்று வழங்குகின்றன

உகரம் ஒகரமாதல்

எழுத்து வழக்கு		பேச்சு வழக்கு
குழல்	>	கொழல்
முதலாளி	,,	மொதலாளி
குழை	,,	கொழ
நுழை	,,	நொழ
முனை	,,	மொன
புறம்போக்கு	,,	பொறம்போக்கு
முளை	,,	மொள
குடம்	,,	கொடம்
சுரப்பு	,,	சொரப்பு
குளம்பு	,,	கொளம்பு
துவரை	,,	தொவர
உலைக்கழனி	,,	ஒலக்கழனி
சுனைவாய்	,,	சொனவாய்

இச்சொற்களின் முதலில் உள்ள உ > ஒ ஆக மார்றம் பெற்று ஒலிக்கப்படுகிறது. இச்சொற்கள்,

$$u \rightarrow o \;//\; - \;(c)\; a/ai$$

என்ற விதிப்படி மாற்றம் பெற்று வழங்குகின்றன.

ஐகாரம் அகரமாதல்

'அகர இகரம் ஐகாரமாகும்' என்பது தொல்காப்பிய நூற்பா. [1] ஐகாரம் கூட்டொலியாகும். இக்கூட்டொலியில் உள்ள இகரம் ஒலி, சொல்லின் பேச்சு வழக்கில் கெடுகிறது. அதனால் அகரமே சொல்லின் ஈறாக நின்று ஒலிக்கப்படுகிறது.

---

1. சுந்தரமூர்த்தி, கு., (பதி.) தொல்காப்பியம், எழுத்து, (மு. கா. நூ.) நூ. 54., ப. 86.

எழுத்து வழக்கு		பேச்சு வழக்கு
உருளை	>	உருள
மனை	,,	மன
ஆடை	,,	ஆட
இழை	,,	எழ
கடை	,,	கட
பச்சை	,,	பச்ச
தடை	,,	தட
ஆலை	,,	ஆல
பலகை	,,	பலக
வெள்ளை	,,	வெள்ள
புஞ்சை	,,	புஞ்ச
கந்தை	,,	கந்த
விசை	,,	வெச
பத்தை	,,	பத்த
வெக்கை	,,	வெக்க
ஓலை	,,	ஓல
களை	,,	கள
இலை	,,	எல
முளை	,,	மொள
சேடை	,,	சேட
மோழை	,,	மோழ
குளிகை	,,	குளிக
ஓசை	,,	ஓச
சிலுப்பை	,,	சிலுப்ப
சேலை	,,	சேல
நஞ்சை	,,	நஞ்ச
துளை	,,	தொள
பன்னை	,,	பன்ன
பார்வை	,,	பார்வ
அண்டை	,,	அண்ட
கட்டை	,,	கட்ட
மந்தை	,,	மந்த

கவலை	>	கவல
கெடை	,,	கெட
பள்ளை	,,	பள்ள
துவரை	,,	தொவர

இவ்வாறே சொல்லின் இடையிலும் முதலிலும் வரும் 'ஐ' கார ஒலி 'அ'கர ஒலியாக ஒலிக்கப்படுகிறது.

தைத்து	>	தச்சி
ஐந்து	,,	அஞ்சி
பதினைந்து	,,	பதினஞ்சி
பிணைத்து	,,	பொணச்சி
வளையம்	,,	வளயம்
அடைமானம்	,,	அடமானம்

இச்சொற்கள் எல்லாவற்றிலும் ஐகாரம் அகரமாக (ai → a) மாற்றம் பெற்று ஒலிக்கப்படுகிறது.

ai → ay // முதலசையில்
e // இறுதியில்
a // வேறோரிடத்தில்

என்று ஐகாரம் மாற்றம் பெற்று வழங்குவதற்குரிய விதிமுறை சொல்லப்படுகின்றது.

சொல்லின் ஈற்றில் வரும் ஐகாரம், எகரமாகத் திரிதல் கன்னட மொழியிலும் அகரமாகத் திரிதல் மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் காணப்படுகின்றன.[1] மேலும், 'எ எனவருமுயிர் மெய்யீறாகாது' என்னும் தொல்காப்பிய நூற்பா [2] வும் இங்கு அறியத் தக்கது. எனவே, செங்கை - எம். ஜி. ஆர். மாவட்டத்தில் ஐகாரம் அகரமாக ஒலிக்கும் முறை பெரும்பான்மையாக உள்ளது எனலாம்.

---

1. இராமச்சந்திரன் . கோ., பிறமொழிகளில் தமிழ்ச் சொல் ஆட்சி, [சென்னை, வளவன் வெளியீடு, ஆகஸ்டு 1966]
(எ. கா.) தலை - தல [தெலுங்கு] - ப. 43
- தல (மலையாளம் - ப. 71
- தலெ [கன்னடம்] - ப. 56.

2. சுந்தரமூர்த்தி. கு., (பதி.) தொல்காப்பியம், எழுத்து, [மு. கா. நூ.] நூ. 71, ப. 100.

இரட்டித்த 'ற' கரம் இரட்டித்த 'த' கரமாதல்

ஊற்று	>	ஊத்து
நாற்று	,,	நாத்து
நெற்று	,,	நெத்து
தூற்று	,,	தூத்து
காற்று	,,	காத்து
கீற்று	,,	கீத்து
சிற்றாள்	,,	சித்தாள்
தொற்றிழை	,,	தொத்தெழ
ஏற்றம்	,,	ஏத்தம்
சேற்றுக் கழனி	,,	சேத்து கழனி

ஆகிய சொற்களில் - ற்ற - > - த்த் - ஆக மாற்றம் பெற்று வழங்கப்படுகின்றன.

இச்சொற்கள்,

-rr- → -tt- // வேறோரிடத்தில்

என்ற விதிப்படி மாற்றம் பெற்று வழங்கப்படுகின்றன.

உழற்றி	உழட்டி
சுழற்றி	சுழட்டி

என ஒலிக்கப்படுகின்றன. இவை

-rr- → -tt- // (C) V C V —

என்ற விதிப்படி மாற்றம் பெற்று வழங்கப்படுகின்றன.

ஒற்றெழுத்து உகரம் பெற்றொலித்தல்

தனி நெட்டெழுத்தைச் சார்ந்தோ பல எழுத்துகளைச் சார்ந்தோ சொல்லின் இறுதியில் வரும் ஒற்றெழுத்து உகரம் சேர்ந்து ஒலிக்கப்படுகின்றது,

நூல்	>	நூலு
கால்	>	காலு
கோல்	>	கோலு
நார்	>	நாரு

தார்	>	தாரு
சால்	,,	சாலு
ஏர்	,,	ஏரு
போல்	,,	போலு

இச்சொற்கள்,

(C) V:C → (C) V:CU

என்ற விதிப்படி மாற்றம் பெற்று வழங்கப்படுகின்றன.

கதிர்	>	கதிரு
பயிர்	,,	பயிரு
குழல்	,,	குழலு
குதிர்	,,	குதிரு
தாங்கல்	,,	தாங்கலு

ஆகிய சொற்கள்,

—(C) V C → —(C) VCU

என்ற விதிப்படி மாற்றம் பெற்று வழங்கப்படுகின்றன.

ஒற்று இரட்டித்து உகரம் பெறுதல்

தனிக்குறில் அடுத்து வரும் ஒற்றெழுத்து இரட்டித்து உகரம் பெற்று ஒலிக்கப்படுகிறது,

மண்	>	மண்ணு
கல்	,,	கல்லு
புல்	,,	புல்லு
நெல்	,,	நெல்லு

ஆகிய சொற்கள்,

(C) V C → [C] V C CU

என்ற விதிப்படி மாற்றம் பெற்று வழங்கப்படுகின்றன.

சொல்லின் இடையில் ஒற்று மறைதல்

பார்த்து	>	பாத்து
சேர்த்து	,,	சேத்து
காய்ச்சல்	,,	காச்சல்

இச்சொற்கள்,

$$C_1\ C_2\ C_3 \rightarrow C_2\ C_3$$

என்ற விதிப்படி மாற்றம் பெற்று வழங்கப்படுகின்றன.

ஆ. உருபனியல் விதி தழுவிய மாற்றம்

(Morphologically conditioned changes)

உருபன் என்பது ஒரு தனி ஒலியனாகவும் இருக்கலாம்; பல ஒலியன்களால் ஆன அசையாகவும் இருக்கலாம். இவ்வுருபன்களில் சில எழுத்து வழக்கினின்றும். பேச்சு வழக்கில் ஒரு குறிப்பிட்ட விதிமுறைக்கு உட்பட்டு மாற்றம் பெற்று வழங்கப் படுவதைக் காண்போம்.

தைத்து	>	தச்சி
பாய்த்து	,,	பாய்ச்சி
இழைத்து	,,	எழச்சி
பிணைத்து	,,	பொணச்சி
பிரித்து	,,	பிரிச்சி
பிடித்து	,,	புடிச்சி

ஆகிய சொற்களில் இறந்த காலத்தைக் காட்ட வரும் பின்னொட்டுக்களாகிய தகர ஒற்றுகள் சகர ஒற்றுகளாக மாற்றம் பெற்று ஒலிக்கப்படுகின்றன.

இவை.

Past-tense suffix -tt- → -CC- // y / i / ai-

என்ற விதிப்படி மாற்றம் பெற்று வழங்கப்படுகின்றன.

குவிந்து	>	குவிஞ்சி
தோய்ந்து	,,	தோய்ஞ்சி

ஆகிய சொற்கள்,

past- tense suffix -nt- → -ñc- // y / i / ai-

என்ற விதிப்படி மாற்றம் பெற்று வழங்கப்படுகின்றன.

2. விதிமுறைகளுடன் தொடர்புடையவை

லகர ஒற்று லகர மாதல்

மில்லில்	>	மில்லில
மளிகையில்	,,	மளிகையில
தெருவில்	,,	தெருவில
அச்சில்	,,	அச்சில
பரிவட்டத்தில்	,,	பெருட்தில

ஆகிய சொற்களின் ஈற்றில் உள்ள லகர ஒற்று அகரம் சேர்ந்து லகரமாக ஒலிக்கப்படுகின்றன. இவை,

-il (Locative Suffix) → -ila

என்ற விதிப்படி வழங்கப்படுகின்றன,

கையால் > கையால

என்னும் சொல்,

-al (Instrumental & Casual Suffix) → -ala

என்ற விதிப்படி வழங்கப்படுகிறது.

ஆலையில் பாவு ஓட வேண்டும்
தெருவில் பாவு போட வேண்டும்.

இத்தொடர்களில் ஓடவேண்டும், போட வேண்டும் என்னும் சொற்கள் முறையே ஓடணும், போடணும் என்று இடையின கெட வழங்கப்படுகின்றன.

ஓடவேண்டும்	>	ஓடணும்
போடவேண்டும்	,,	போடணும்

இச்சொற்கள்,

-vēntum (obligatory aux) → -ṇum

என்ற விதிப்படி வழங்கப்படுகின்றன.

இவற்றுள் ட,ண வும் நாமடியொலியாக இருப்பினும் டகரம் தடையொலியாகவும் ணகரம் மூக்கொலியாகவும் இருப்பதால் அடுத்து வரும் மூக்கொலிக்கேற்ப டகரம் தன்னின மூக்கொலியான ணகரமாக மாறி ஒலிக்கப்படுகிறது.

போடணும்	—	போண்ணம்
ஓடணும்	—	ஓண்ணம்

அஃதாவது, இச்சொற்கள், -ṭaṇum → ṇṇam- என்று வழங்கப்படுகின்றன எனலாம்-

மேற்கண்ட சொற்கள் யாவும் சில விதிமுறைக்கு உட்பட்டு எழுத்து வழக்கினின்றும் மாற்றம் பெற்று பேச்சு வழக்கில் வழங்கப்படுகின்றன. விதிமுறைகளுக்கு உட்படாமல் எழுத்து வழக்கினின்றும் மாற்றம் பெற்று வழங்கப்படும் பேச்சு வழக்குச் சொற்களும் உள்ளன. அவை எம் முறையில் மாற்றம் பெற்று வழங்கப்படுகின்றன என்பதை இனிக் காண்போம்.

பேச்சு வழக்குச் சொற்களில் காணப்படும் மாற்றங்கள்:

இகரம் உகரமாதல்

பிழி	>	புழி
பிடித்து	,,	புடிச்சி
பிண்ணாக்கு	,,	புண்ணாக்கு
இடு	,,	உடு

இச்சொற்களின் முதலில் உள்ள இ> உ— [i—u] ஆக மாற்றம் பெற்று வழங்கப்படுகின்றது.

உகரம் எகரமாதல்

சுமை	—	செம
புரட்டிவிடு	—	பெரட்டிவிடு

இச்சொற்களின் முதலில் உள்ள உகரம் எகரமாக மாற்றம் பெற்று ஒலிக்கப்படுகிறது. இச்சொற்களில் உள்ள உகரம் ஒகரமாக ஒலியனியல் விதிமுறைப்படி மாற்றம் பெற்று பின்னர் ஒகரம் பேச்சுத் தமிழில் எகரமாக ஒலிக்கப்படுகிறது.

சுமை	>	சொம	>	செம
புரட்டி	,,	பொரட்டி	,,	பெரட்டி

ஏகாரம் ஓகாரமாதல்

மேடு	>	மோடு
மேழி	,,	மோழி

இச்சொற்களில் ஏகாரம்ஓகாரமாக ē—ō ஒலிக்கப்படுகிறது.

அகரம் எகரமாதல்

கஜம்	>	கெஜம்
ரகம்	,,	ரெகம்
கண்ணி	,,	கண்ணி
பல்சக்கரம்	,,	பெல்சக்கரம்
படல்	,,	பெடல்
கழனி	,,	கெழனி
பன்னாடை	,,	பென்னாட
பரம்பு	,,	பெரம்பு
சலங்கு	,,	செலங்கு

இச்சொற்களில் முதலில் உள்ள அகரம் எகரமாக **(a — e)** மாற்றம் பெற்று வழங்கப்படுகிறது.

உகரம் இகரமாதல்

அச்சு	>	அச்சி
முடிச்சு	,,	முடிச்சி

இச்சொற்களின் ஈற்றில் உள்ள உகரம் இகரமாக **(u —i)** ஒலிக்கப்படுகிறது.

உகரம் ஓகாரமாதல்

சில சொற்களில் ஒலியன் அளவும் மாறி ஒலிக்கப் படுகிறது.

உடல் பாவு	>	ஓடல் பாவு
முழை	,,	மோழை

இவற்றில், உ க ர ம் ஓகாரமாக **(u —ō)** வழங்கப் படுகிறது.

கோலில்	>	கோல்ல
ரோலில்	,,	ரோல்ல

இவற்றின், ஈற்றில் உள்ள இல் — ல ஆக **(il — la)** மாற்றம் பெற்று ஒலிக்கப்படுகின்றது.

'கன்றுக்குட்டி' என்னும் சொல் 'கன்னுக்குட்டி' என்று வழங்கப்படுகிறது. இதில் **-nr-** என்பது **-nn-** ஆக மாற்றம் பெற்று வழங்கப்படுவது காணலாம்.

உயிர் கெடுதல்

சொல்லின் இடையில் இரு மெய்களுக்கு இடையில் வரும் உயிர் கெட வழங்கப்படுகிறது.

இருசு	>	இர்சு
தொரடு	,,	தொர்டு
இளநீர்	,,	எள்நீர்
தரிசு	,,	தர்சு
மானியம்	,,	மான்யம்
வாரணக் கயிறு	,,	வார்ண கவுறு
தோரணப் பலகை	,,	தோர்ண பலக
கொடுத்து	,,	கொட்த்து
எடுத்து	,,	எட்த்து
கொளுத்து	,,	கொள்த்து

மெய் தோன்றல்

மிளகாய்	—	மொளக்கா

இதில் ஈற்று அரை உயிர்மெய் கெட இடையில் ககரமெய் தோன்ற ஒலிக்கப்படுகிறது.

ஈற்றுமெய் கெட ஒலித்தல்

தண்ணீர்	>	தண்ணி
கொடிக்காய்	,,	கொடிக்கா
கொத்துக்காய்	,,	கொத்துக்கா
மிளகாய்	,,	மிளகா
முன்வாய்	,,	முன்வா
எள்ளுக்காய்	,,	எள்ளுக்கா

இவற்றின் ஈற்றிலுள்ள மெய் கெட ஒலிக்கப்படுகின்றன.

இடையில் மெய் கெடுதல்

கால்வாய்	>	காவாய்
வாய்மடை	,,	வாமடை
காச்சல்	,,	காசல்
பொள்ளுவாய்	,,	பொளுவாய்

இச்சொற்களின் இடையிலுள்ள ஒற்று கெட ஒலிக்கப்படுகின்றன.

இடையில் உயிர்மெய் கெடுதல்

தமிழின் எழுத்து வழக்கில் இணைப்பொலிகள் (Clusters) வருவதற்குச் சில நியதி உண்டு. ஆனால் பேச்சு வழக்கில் இணைப்பொலிகள் அந்நியதியில் மாறியும் வழங்கப்படுகின்றன. அஃதாவது இரட்டித்த மெய்யும் உயிரும் இழந்து ஒலிக்கப்படுதலால் அவ்வழக்கு உண்டாகிறது.

வெட்டியான்	>	வெட்யா(ன்)
இராட்டினம்	,,	இராட்ன(ம்)

'இழைகளை நீட்டிக் கட்டுதல்' என்ற தொடரில் 'இழைகளை நீட்டி' என்ற தொடர் 'எயட்டு' என்ற ஒரு சொல்லாகிக் 'கட்டுதல்' என்ற சொல்லுடன் சேர்ந்து 'எயட்டு கட்டுதல்' என்ற தொடராக வழங்கப்படுகிறது.

சொல்லை விரைவில் சொல்ல வேண்டும் என்ற உணர்வுடன் சொல்லின் இடையிலுள்ள உரசிலா இதழ்த் தொடரொலி :எழுத்தான வகரம் இன்றிப் பின்வரும் சொற்கள் வழங்கப்படுத்ன்றன.

பரிவட்டம்	>	பருட்டம்
திருவட்டம்	,,	திரட்டம்

இவ்வாறே வருடொலியான ரகரம் இன்றிச் சிலசொற்கள் வழங்கப்படுகின்றன.

உருண்டைக் கட்டி	>	உண்டகட்டி
உருப்படி	,,	ஒப்படி

சில சொற்கள் உச்சரிப்பவரின் மனவுணர்வுக் கேற்ப ஒலிக்கப்படுகின்றன. ஆறிலை, நாலிலை ஆகிய சொற்களில், 'இலை' என்னும் சொல் 'எலை' என்று மாறி அடுத்து 'எல' என்று மாறி ஒலிக்கப்படுகிறது.

இலை	>	எலை	>	எல
ஆறிலை	,,	ஆறெல		
நாலிலை	,,	நாலெல		

மேலும் 'எல' என்னும் சொல், 'ஆல' என்னும் சொல்லாக ஒலியன் அளவும் மாறி ஒலிக்கப்படுகிறது.

ஆறிலை	—	ஆறெல	—	ஆறால
நாலிலை	—	நாலெல	—	நாலால

கீழிலை, மேலிலை என்னும் சொற்கள் முறையே கீழெல, மேலெல என்று மட்டும் மாறி ஒலிக்கப்படுகின்றன.

ஒலி இடம் பெயரல் (Metathesis)

அறியாமையினால் பள்ளியில் பயிலும் சிறுவர் சிலர் நோட்ஸ் (notes) என்னும் சொல்லை நோஸ்ட் என்பர். அதுபோலவே உழவுத்தொழில் செய்பவரிலும் சிலர் 'ரோலர்' என்னும் தழைமிதி கருவியை 'லோரல்' என்றும் 'லோலர்' என்றும் ஒலி இடம்பெயர இயம்புவர்.

ஒலி இடம் பெயர்ந்து ஒலிக்கப்படடாலும் பொருள் மாறாமல் சில சொற்கள் உள்ளன.

வானமாரி > மானவாரி > மானாவாரி

வானம் என்ற சொல் பேச்சு வழக்கில் மானம் என்று சொல்லப்படுகிறது. இச்சொல்லே நிரந்தரமாகி வானத்தினின்றும் பெய்யும்மழை நீரை நம்பிப் பயிரிடும் பயிரை வானமாரிப் பயிர் என்பதிற்குப் பதிலாக ஒலி இடம் பெயர்ந்து ஒலிக்கும் முறைப்படி மானாவாரிப் பயிர் என்று வழங்கப்படுகிறது.

வானம்	>	மானம்
வானமாரி	,,	மானவாரி
	,,	மானாவாரி

இதழொலி உரசிலா இதழ்த்தொடரொலியாதல்

ஒருபத்து	>	ஒருபது
இருபத்து	,,	இருபது
முன்றுபத்து	,,	முப்பது

இச்சொற்களில் பத்து, 'பது' ஆகிறது. அஃதாவது, ஒருபத்து ஒருபது ஆகிறது. பேச்சு வழக்கில் ஒருபது, 'ஒருவது' என ஒலிக்கப்படுகிறது. இரு உயிர்களுக்கிடையில் வரும் பகரம் இவ்வெண்ணுப் பெயர்களில் வகரமாக ஒலிக்கப்படுகிறது. இவ்வாறு இதழொலியானது உரசிலா இதழ்த்தொடரொலியாக ஒலிக்கப்படுகிறது.

இவ்வாறு தமிழ் மொழியில் எழுத்து வழக்கு, பேச்சு வழக்கு என்னும் இரட்டை வழக்கு நிலைத்துக் காணப்படு கிறது. இவ்விரட்டை வழக்கு ஒரு சமுதாயத்தில் உருவாவ தற்குக் காரணத்தையும் அவற்றின் பாகுபாட்டினையும் இனிக் காண்போம். இங்கு, இரட்டை வழக்கில் எழுத்து வழக்கு உயர்நிலை வழக்காகவும் பேச்சு வழக்கு தாழ்நிலை வழக்காக வும் சொல்லப்படுகின்றன.

இரட்டை வழக்கு

ஒரு மொழியின் இரு வழக்குகள் ஒரு சமுதாயத்தில் நிரந்தர மாக ஒன்றுக்கொன்று துணையாகவும் தனித்தனி சமூகச் சூழ் நிலையில் பயன்படுமானால் அந்நிலையை இரட்டை வழக்கு (Diglossia) எனலாம். ஒரு சமுதாயத்தில் இவ்விரட்டை வழக்கு உருவாக ஏற்றச் சூழ்நிலைகளாக மூன்று காரணங் களைக் கூறுவர். அவை,[1]

1. நீண்ட காலமாக ஒரு சமுதாயத்தில் இலக்கியப் பாரம் பரியமும் மதச்சார்புடைய இலக்கியங்களும் மக்கள் பேசும் மொழியில் அல்லது தொடர்புடைய மொழியில் அமைந்திருக்க வேண்டும்.

2. சமுதாயத்தில் சிறுபான்மையினர் மட்டுமே கல்வியறிவு பெற்றவர்களாக அமைந்து, பெரும்பான்மை மக்களின் பேச்சு மொழி, இலக்கிய நடையினின்றும் ஓரளவு வேறுபட்டதாக அமைய வேண்டும்.

3. பின்னர் எழுத்து மொழிக்கும் பேச்சு மொழிக்கும் உள்ள வேறுபாடுகள் அதிகரிக்க, ஒவ்வொரு வகையிலும் தத்தமக்கென பயன்படும் காலமும் இடமும் வெவ்வேறாக அமையவேண்டும்.

ஒரு சமுதாயத்தில் இம்மூன்று கூறுகளும் இருக்குமானால் அங்கு இரட்டை வழக்கு உருவாகும் என்று கூறலாம் என்பர் மொழியியலறிஞர். இரட்டை வழக்கினைப் பற்றித் தம் நூலில் விரிவாக ஆய்ந்து விளக்கியுள்ளார் தெய்வசுந்தரம். அவர்

---

1. சீனிவாச வர்மா. கோ., கிளைமொழியியல், (மு. கா நூ.) பக் 39&40.

இரட்டை வழக்கினைப் பற்றித் தொகுத்துக் கூறுவன பின்வருமாறு[1].

1. இரட்டை வழக்கில் இருவகை உள்ளது.

2. இவ்விருவகை, தனிஒரு மொழி மரபைச் சார்ந்ததாகவோ தொடர்பில்லாத இருவேறு மொழிகளைச் சார்ந்ததாகவோ அமையும்

3. இவ்விருவகையுள் ஒன்று உயர் வழக்குடையதாகும். இவ்வுயர் வழக்குவகை முறையான கல்வியால் கற்கப் படுவது. பிறிதொரு வகையோ பிறப்பிடத்தின் பேச்சு வழக்காக அமைவது. அஃது தாய்மொழிக் கல்வியாகவும் இருக்கலாம்.

4. இவ்விருவகையின் செயற்பாட்டுப் பகிர்ந்தளிப்பு, சமுதாயத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. இவ்விருவகையும் வழங்கும் இடம் ஒன்றுக் கொன்று ஒன்றனிடத்தை மற்றொன்று நிரப்புவதாக அமையும்.

5. சமுதாய நோக்கில் இவ்விரு வகையும் வேறுபட்டனவாம். பொதுவாக உயர்வழக்கு வகையே மதிப் புடையதாகக் கருதப்படும், பிறப்பிடத்தின் பேச்சு வழக்கு தன்மதிப்பற்றதாகக் கருதப்படும். அத்துடன் சில நேரங்களில் உயர் வழக்கின் திரிபாகவும் அஃது கருதப்படும்.

6. இவ்விருவகையும் ஒரு மொழியின் வகைகளாக இருந்தால்,அவை, 1. உயர்வகை வழக்கு, சாதாரணப் பேச்சு வழக்கில் வழங்கப்படமாட்டா. 2. அவற்றிடையே நீண்ட இடைவெளி நிலவும். 3. உயர்வகை வழக்கின் இலக்கண விதிகள் ஒழுங்கு படுத்தப்பட்டதாகவும் முதிர்ந்த பண்டைய இலக்கியங்களை உடையதாகவும் இருக்கும்.

7. இரட்டை வழக்கு நிலை நிலையானதொன்று. ஒவ்வொரு வகையும் தத்தம் நிலையில் வழங்குமே தவிர

---

1. Deivasundaram .N., Tamil Diglossia, (op. cit), pp. 11&12.

ஒன்று மற்றொன்றைக் குறுக்கிடாது. எனவே இவற்றுள் ஒருவகை இன்னொரு வகையை வழக்கொழியச் செய்தல் இயலாது என்பனவாம்.

உயர்நிலை வழக்கு	தாழ்நிலை வழக்கு
அடைக்கயிறு	அடகவுறு.
உடைமை வாரம்.	ஒடவாரம்.
உருப்படி	ஒப்படி
உழவுக்கயிறு	ஒழக்கவுறு,
கடலைக்காய்	கள்ளக்கா
கம்முக்கட்டி	கம்புகட்டி, கம்புகுட்டி, கம்முட்டி, கம்முகுட்டி.
கரணைக்கோல்	கர்ணகோலு, கன்னக்கோலு
கிடைமடக்குதல்	கடமடக்குதல்
கேழ்வரகு	கெவுரு, கேவுரு.
சீம்பால்	சிவம்பால், சீழும்பால், சீழுப்பால்.
துடைப்பம்	தொடப்பம்.
துவரை	தொவர
பரிவட்டம்	பருட்டம், பெருட்டம்.
பழுதைக்கயிறு	பழுத்த கயிறு, பழுத கவுறு
பெட்டிக்கயிறு	பொட்டி கவுறு
மகசூல்	மாசூல், மாச்சல்.
மண்வெட்டி	மமுட்டி, மம்மட்டி, மம்ட்டி
மணிலாக்கொட்டை	மள்ளாக் கொட்ட, மள்ளாட்ட, மெள்ளாட்ட, மெல்லாட்ட
மிதிக்கட்டை	மெரிகட்ட
ரோலர்	லோரல், லோலர்.
விதைப்பாடு	வெரப்பாடு
வேர்க்கடலை	வேர்க்கல்ல
வைக்கோல்	வெக்கலு

எடுத்துக்காட்டுகளாக இரட்டை வழக்கிற்கு இங்குச் சொல்லப்பட்டுள்ள சொற்கள் உழவு, நெசவு சார்ந்த தொழில்களில் வழங்கப்படுவனவாம்.

இரட்டை வழக்குச் சொற்களைப் பெர்கூசன், செயல் மதிப்பு, இலக்கியப் பாரம்பரியம். கற்றுக் கொள்ளல், நிலைபேறாக்கம், நிலையான தன்மை, இலக்கணம், சொற்றொகுதி, ஒலியமைப்பு என ஒன்பது கூறுகளாகப் பாகுபடுத்திக் கூறியுள்ளார் எனவும் கூறுவர்.[1]

1. செயல் :

இரட்டை வழக்கின் மிகச் சிறந்த பண்பு, ஒவ்வொரு வழக்கும் தனக்கென ஓரிடத்தைப் பெற்றிருத்தலேயாம்.

(எ. கா.)

நெசவுத்தொழிலில் பரிவட்டம், அடைக்கயிறு பெட்டிக் கயிறு என்னும் உயர்நிலை வழக்குச் சொற்கள் முறையே பருட்டம் அல்லது பெருட்டம், அடகவுறு, பொட்டி கவுறு என்று வழங்கப்படுவனவாம்.

2. மதிப்பு:

உயர்நிலை வழக்கு, தாழ்நிலை வழக்கு என சமுதாயத்தில் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ள நிலை.

(எ. கா.)

உழவுத் தொழிலில் மண்வெட்டியை மமுட்டி, மம்மட்டி. மம்ட்டி என்றும், ரோலரை லோலர், லோரல் என்றும் வழங்கப்படுவன.

3. இலக்கியப் பாரம்பரியம்:

உயர்நிலை வழக்கில் இலக்கியங்கள் இருத்தலும் புதியதாகத் தோற்றுவித்தலும் வழக்கமாகக் கொள்ளுதல்.

---

1. மேற்படி. ப. 2.

(எ. கா.)

உழவுத் தொழிலில் பழுதைக் கயிறு என்பதைப் பழுத்த கயிறு அல்லது பழுதகவுறு என்று கூறுவதும் உருப்படி செய்தலை ஒப்படி செய்தல் என்று கூறுவதுமாம்.

4. கற்றுக் கொள்ளுதல்

தாழ்நிலை வழக்கு, சிறுவர்களால் தமக்குள்ளேயும் பெரியவர்கள் சிறுவர்களுடன் பேசும் பொழுதும் பயன்படுத்தப்படுதலால் அறிதல்.

(எ. கா.)

உழவில் விளை பொருள்களில் ஒன்றான மணிலாக் கொட்டையை மள்ளாட்ட, மள்ளா கொட்ட என்றும் வேர்க்கடலையை வேர்க்கல்ல என்றும் கடலைக்காயைக் கள்ளக்கா என்றும் கூறுவது மாம்.

5. நிலைபேறாக்கம்

உயர்நிலை வழக்கு, முறையாக எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ளும் பொழுது தான் ஆரம்பமாகிறது. இவ்வழக்கிற்கென ஒரு குறிப்பிட்ட இலக்கண இலக்கிய வரம்பு நீண்ட காலமாக இருந்து வருகிறது. அதிலிருந்து மாறுங்கால்தவறு திருத்தப் பட்டு உயர்நிலை பாதுகாக்கப்படுதல்.

[எ. கா.]

நெசவுத் தொழிலில் மெரிகட்ட எனப் பேச்சு வழக்கில் வழங்குதலை மிதிக்கட்டை எனக் கூறச் செய்தலும் உழவுத் தொழிலில் இம்முறையிலேயே வெரப்பாடு என்பதனை விதைப்பாடு எனவும் கெவுரு, கேவுரு என்று வழங்கப்படுவனவற்றைக் கேழ்வரகு எனத் திருத்தமாகக் கூறச் செய் தலுமாம்.

6. நிலையான தன்மை

பல நூற்றாண்டுகட்குக் கூட இரட்டை வழக்குத் தொடர்ந்து நீடிக்கும் நிலை.

[எ. கா.]

உழவுக்கயிற்றை ஒழக்கவுறு என்பதும் உடைமை வாரத்தை ஒடவாரம் என்பதும் கிடை மடக்கு தலைக் கடமடக்குதல் என்று கூறுதலுமாம்.

7. இலக்கணம்

இலக்கண வேறுபாடுகள் இரு வழக்கிற்கும் இடையே காணப்படுதல். இரண்டிற்கும் பொதுத் தன்மை கூடுதலாகவும்வேறுபாடுகள் ஆங்காங்குக் காணப்பட்டும் புரிந்து கொள்ளும் அளவு அதிக மாகக் காணப்படுவதுமாம்.

[எ. கா.]

துவரையைத் தொவர என்பதும்துடைப்பத்தைத் தொடப்பம் என்பதும் விளக்குமாற்றை வெளக்கு மாறு என்பதுமாம்.

8. சொற்றொகுதி

பெரும்பான்மைச் சொற்கள் பொதுவானவையா யும் சில சொற்கள் ஒலிப்பு முறையிலும் பொருளி லும் வழக்கிலும் வேறுபட்டுக் காணப்படுதல்.

எ. கா.]

கம்முக்கட்டியைக் கம்முகுட்டி, கம்புகுட்டி, கம்புகட்டி, கம்முட்டி என்றெல்லாம் கூறுவதும் கரணைக் கோலைக் கர்ணகோல் அல்லது கன்னக்கோல் என்று கூறுவதுமாம்.

9. ஒலியமைப்பு

ஒலியன் முறையில் தாழ்நிலை வழக்கின் ஒலியன் முறையே அடிப்படையானதாகும். உயர்நிலை வழக்கின் ஒலியன் முறை அதனைச் சார்ந்த துணை நிலை ஒலியன் முறையாக அமையும்.

[எ. கா.]

சீம்பால் என்பது உயர்நிலை வழக்கு, சீழும்பால், சீழுப்பால் என்று கூறப்படுவன தாழ்நிலை வழக்கு. இவற்றுள் தாழ்நிலை வழக்காகக் கூறப்படும் சீழுப்பால் என்பதே சிறப்புடையதாகக் கருதப்படுகிறது.

இவ்விருவகை வழக்கு நிலை சமுதாயத்தில் பல தலைமுறைகள் கூட நிலைத்து நிற்கும் என்று மொழியியலார் கூறுவர்.

இவ்வாறு இலக்கியத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கும் உள்ள ஒலிவேறுபாடுகளும் அவற்றிற்குரிய விதிமுறைகளும், பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் சமுதாயத்தில் நிலைபேறு கொண்டுள்ள முறைகளும் இவ்வியலில் விளக்கப்படுதலுடன் பேச்சு வழக்கில் மொழிக்கு முதலாக வரும் ஒலியன்களில் எழுத்து வழக்கினின்றும் மாறுபடுதல் காரணமாக ஒலியன்கள் பற்றியும் விளக்கப்படுகின்றன.

மொழியில் வழங்கும் அடிப்படை ஒலிகளை 'எழுத்தொலிகள்' அல்லது 'ஒலியன்கள்' (Phonemes) என்பர்.

பேச்சு மொழியில் பல்வேறு நுட்பங்களோடு வழங்கும் ஒலி வேறுபாடுகள் கொண்ட ஒலிகளுக்கு இடையில் மாறாததும் அடிப்படையானதுமான ஒலிகளை ஒலியின் என்பர். அஃதாவது, 'ஒலியன் என்பது ஒரு மொழியில் வழங்கும் தெளிவான ஒலியின் சிறு அளவு' [1] என்பர்.

ஒலியன்கள் - உயிர், மெய்

உயிர் ஒலியன்கள்

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ

தமிழ் மொழியில் வழங்கும் பன்னிரண்டு உயிர் எழுத்தொலிகளில் 'ஔ' என்னும் உயிரெழுத்தொலி தவிர மற்றப் பதினொன்று உயிர் எழுத்தொலிகளும் ஆய்வில் எடுத்துக் கொள்ளப்பட்ட உழவு, நெசவு சார்ந்த தொழிற்சார்புடைய சொற்களில் வழங்கும் ஒலியன்களாக உள்ளன.

---

1. சீனிவாசன், ரா. 'மொழியியல்' ஆறாம்பதிப்பு, [சென்னை அணியகம் 1977], ப. 41.

மெய்யொலியன்கள்

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.

தமிழ் மொழியிலுள்ள பதினெட்டு மெய்யெழுத்தொலிகளும் ஆய்வில் பயன்படுத்தப்படும் தொழிற்சார்புடைய சொற்களில் வரும் ஒலியன்களாக உள்ளன.

மொழி முதல் ஒலியன்கள்

மொழி முதல் உயிரொலியன்கள்

"பன்னீ ருயிரும் மொழிமுத லாகும்" [1]

என்று தொல்காப்பியமும்,

"பன்னீ ருயிரும்"............
.....................மொழிமுதல்" [2]

என்று நன்னூலும் மொழிக்கு முதலில் வரும் உயிர்ஒலியன்களாகக் கூறுகின்றன. ஆய்வில் எடுத்துக் கொள்ளப்பட்டத் தொழிற்சார்புடைய சொற்களில், அ, ஆ, இ. ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ.ஓ ஆகிய பதினொன்று உயிரொலியன்கள் மொழிக்கு முதலில் வழங்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டு

அனாதை நிலம், ஆலை, இலாபக்காய், ஈளைக்கழனி, உரம், ஊணி, எரு, ஏடு, ஐந்து விரல் பிடித்தல், ஒட்டியறு, ஓடல்பாவு.

மொழி முதல் மெய்யொலியன்கள்

"உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா" [3]

என்று தொல்காப்பியம் கூறுதலுடன் மற்ற நூற்பாக்களின் வாயிலாக மொழி முதலாக வரும் எழுத்தொலிகளாக கசதநபம வயஞ என்ற ஒன்பது மெய்யெழுத் தொலிகளைத் தருகிறது.

"............கசநத பமவய
ஞஙாஈரைந்துயிர் மெய்யும் மொழி முதல்" [4]

---

1. தொல்காப்பியம், எழுத்து, [மு. கா. நூ.] நூ. 59 ப.90
2. நன்னூல் விருத்தியுரை, (மு. கா. நூ,) நூ, 102. ப. 69.
3. தொல்காப்பியம், எழுத்து, (மு. கா. நூ.) நூ. 60. ப. 60.
4. நன்னூல் விருத்தியுரை, [மு. கா. நூ.] நூ. 14. ப. 69.

என்று நன்னூல், தொல்காப்பியம் கூறிய ஒன்பது மெய்யொலியன்களுடன் 'ங' கர ஒலியன் சேர்த்து பத்து மெய்யெழுத்தொலியங்கள் மொழிக்கு முதலாக வரும் எனக் கூறுகிறது.

தொல்காப்பியத்தின்படி ங, ட, ண, ர, ல, ழ, ள, ற, ன ஆகிய ஒன்பது மெய்யொலியன்கள் மொழிக்கு முதலில் வாராவாகின்றன.

ஆய்வில் எடுத்துக் கொள்ளப்பட்ட தொழிற்சார்புடைய சொற்களில் இலக்கண நூல்களால் மொழிமுதல் வரும் மெய்யெழுத்தொலிகளாகச் சொல்லப்பட்ட ங, ஞ, ய, ஆகிய மூன்று மெய்யொலியன்கள் மொழிமுதல் வரவில்லை. இலக்கண நூல்களில் மொழிமுதல் வாரா எனச் சொல்லப்பட்ட ட, ர, ல ஆகிய மூன்று மெய்யொலியன்கள் மொழி முதலாக வருகின்றன ஆக க், ச், ட், த், ந், ப், ம், ர், ல், வ், ஆகிய பத்து மெய்யொலியன்கள் மொழி முதல் வருவனவாக அமைகின்றன.

[எ. கா.]

கரணைக்கோல், சேறறி, டோலா, தார்,

நாற்று, பரிவட்டம், மோழை, ரோகம்,

லடி, வாய்தா.

மொழி இடையில் மெய்மயக்கம்

மொழிக்கு இடையில் மெய்யொலியன்கள் ஓர் ஒலியனுக்கு முன் இந்தந்த மெய்யொலியன்கள் தான் வரும்; இந்த இந்த மெய்யொலியன்கள்இந்த இந்தமெய்யொலியன்களுக்கு அடுத்து தான்வரும் என்ற நியமம் உண்டு. இம்முறையில் இரண்டு மெய்யொலியன்கள் இணைந்து வருவது மெய்மயக்கமாம்.

மெய்மயக்கம் தனிமொழிக்கு உரியனவா? புணர்மொழிக்கு உரியனவா? என்பதில் உரையாசிரியர்களுக்குள் கருத்து வேறுபாடுள்ளது. தொல்காப்பியர் தனிமொழி, இருமொழி என்ற பாகுபாடில்லாதது, புணர்ச்சியில் மாற்றமில்லாது இயல்பாய் நிற்கும் ஒற்றிணைகள் எல்லாவற்றையும் குறிப்பிடுகிறார் என்பது பேராசிரியர் இளையபெருமாளின் கருத்தாகக் கூறப்படுகின்றது. [1]

---

1. இராதாசெல்லப்பன், 'கலைச்சொல்லாக்கம்' டிசம்பர் 1985, ப. 34.

மெய்யெழுத்துக்கள் பதினெட்டனுள் க, ச, த, ப, என்ற நான்கும் தம்மொடு தாமே மயங்கும். ர, ழ என்னும் இரண்டும் தம்மொடு பிறவே மயங்கும். ஏனைய 12 மெய் யெழுத்துக்களும் தம்மொடு பிறவும் தாமும் மயங்கும். இதனை 23 முதல் 30 வரையுள்ள தொல்காப்பியத்தின் எழுத்ததிகார நூற்பாக்களால் [1] அறியலாம்.

'மேலும், இவற்றில் ட, ற என்பன க, ச, ப ஆகிய மூன்று டன் கூடிவரும். ல ள என்பன க, ச, ப, ய, வ ஐந்தெழுந்துக் களுடன் கூடி வரும். ஙகரம் ககரத்துடனும், ஞகரம் சகர யகரங்களுடனும் 'ந' கரம் தகர யகரங்களுடனும் கூடி வரும்.

'மகரம், பகர, யகர, வகரங்களுடன் கூடி வரும். ணகரம், ட, க, ச, ந, ப, ம, ய, வ ஆகிய எட்டெழுத்துக்களுடனும், னகரம் ற, க, ச, ஞ, ப, ம, ய, வ ஆகிய எழுத்துக்களுடனும் கூடி வரும்.

'வகரம் யகரத்துடன் கூடி வரும். ய என்பது மொழிக்கு முதலாக வருகின்ற க, த, ந, ப, ம, ச, வ, ஞ ஆகிய எட்டு எழுத்துக்களுடனும் கூடிவரும்' [2] என்றும் சொல்லப் பட்டுள்ளது.

இவற்றினடிப்படையில் மெய்மயக்கம், உடனிலை மெய் மயக்கம், வேற்றுநிலை மெய்யக்கம் என இரு பிரிவாகப் பிரிக் கப்பட்டுள்ளது எனலாம். வேற்று நிலை மெய்மயக்கத்தில் இனநிலை மெய்மயக்கம் என்ற ஒரு பிரிவும் உண்டு.

உடனிலை மெய்மயக்கம்:

ஒரு மெய்யொலி அதே மெய்யொலியோடு சேர்ந்து வருவது உடனிலை மெய்மயக்கமாகும். தொல்காப்பியம் 18 மெய்யொலிகளுள் ர, ழ நீங்கிய 16 மெய்யொலிகளும் தம்மொடு தாம் மயங்கி வருவதாகக் கூறுகிறது.

இவ்வாறே தொழிற்சார்புடைய சொற்களிலும் ர, ழ நீங்கிய 16 மெய்யொலிகளும் (ங, ஞ மெய்யொலிகள் பேச்சு வழக்கில் மட்டும்) தம்மொடு தாம் மயங்கி வருவது காணலாம்.

---

1. சுந்தரமூர்த்தி. கு., [பதி], தொல்காப்பியம், எழுத்து.
   [மு. கா. நூ.] பக். 50 & 51
2. மேற்படி. ப. 23

(எ. கா.) காணிக்கல், அரக்கு,
அச்சு, தலைச்சன் நாகு,
நுகத்தடி, கைத்தறி,
இருப்பாணி, பொரப்பாவு,
பரிவட்டம், அட்டி தூலம்,
குண்ணோய், கண்ணாடிக் கட்டை
சந்நியாசி வெள்ளாடு
செம்மறியாடு, பொம்மைக் கட்டை
நெய்யக்காரன்,
எல்லைக்கல், கல்லேரி,
வவ்வடிபடுதல்,
அள்ளு, முள்ளுருளை
ஏற்றம், சிற்றாள்
பொன்னேர், பன்னை

பேச்சு வழக்கில் மட்டும் வருவன. (ங, ஞ)

சங்ஙம் (சங்கம்), முங்ங நாடா (மூங்கில் நாடா) கொடிஞ்ஞில் (கொடிஞ்சில்)

இன நிலை மெய்மயக்கம்

வேற்றுநிலை மெய்மயக்கத்தின் ஒரு பிரிவே இனநிலை மெய்மயக்கமாம்.

வல்லொலி மெய்களாகிய [க், ச், ட், த், ப், ற் ஆகிய ஆறும் தம்மின மெல்லொலி மெய்களாகிய ங், ஞ், ண், ந், ம், ன் ஆகிய ஆறுடன் முறையே மயங்கி வருதல் இனநிலை மெய்மயக்கமாம்.

(எ. கா.) பசுங்காய், கொங்கை,
குஞ்சலம், கொடிஞ்சில்,
தொண்டான், ஒண்டிபாவு,
குந்தாணி, நாடா தந்தம்,
கரும்பு, பாழும்பல்
கன்றுக்குட்டி, மூன்றாங் கஞ்சி.

வேற்றுநிலை மெய்மயக்கம்

ஒரு மெய்யொலி பிறமெய்யொலியோடு மயங்கி வருவது வேற்றுநிலை மெய்மயக்கமாம். இனநிலை மெய்மயக்கம், வேற்றுநிலை மெய்மயக்கத்தின் ஒரு கூறேயாம்.

ஆய்வில் சொல்லப்பட்டுள்ள தொழிற் சார்புடைய சொற்களில் பின்வரும் வேற்றுநிலை மெய்மயக்கங்கள் காணப்படுகின்றன.

ட்ச்	-	பட்சி ஏற்றம்
ண்ம்	-	வேளாண்மை
ண்வ்	-	மண்வெட்டி
ய்க்	-	வாய்க்கால்
ய்ச்	-	காய்ச்சல்
ய்த	-	கலாய்த் தகடு
ய்ந்	-	காய்ந்த சோணை
ய்ப்	-	நன்செய்ப்பயிர்
ய்ம்	-	காக்காய்மிளகாய்
ய்வ்	-	காக்காய்வலி
ர்க்	-	ஏர்க்கால்
ர்ச்	-	வேர்ச்செதிள்
ர்ண்	-	சொர்ணவாரி
ர்த்	-	அர்த்தலை
ர்ந்	-	ஏர்நாழி
ர்ப்	-	கதிர்ப்பூச்சி
ர்ம்	-	எதிர்மணை
ர்வ்	-	பார்வை முந்தி
ல்க்	-	பந்தல்காரன்
ல்ச்	-	பல்சக்கரம்
ல்த்	-	அல்தூரி
ல்ந்	-	சுழல்நோய்
ல்ம்	-	மேல்மரம்
ல்ப்	-	பால்பல்
ல்ய்	-	பஞ்ச கல்யாணி
ல்வ்	-	சால்வடம்

ழ்க்	-	கீழ்க்கட்டு
ழ்ச்	-	கீழ்ச் சட்டம்
ழ்த்	-	கீழ்த்தலா
ள்க்	-	தாள்கத்தை
ள்ச்	-	புள்சாட்டிக் கொம்பு
ள்த்	-	தாள்தள்ளல்
ள்ப்	-	உள்பத்தை
ள்ம்	-	உள்மடி
ள்வ்	-	உள்வாய்
ன்ச்	-	புன்செய்
ன்ந்	-	தலைச்சன்நாகு
ன்ப்	-	தலைச்சன்புளு
ன்ம்	-	காரான்மாடு
ன்வ்	-	துலான்வடம்

ஆகியவை எழுத்து வழக்கில் மட்டும் வரும் வேற்றுநிலை மெய் மயக்கங்களாம்.

பிறமொழிச் சொற்களில் மெய்மயக்கம்

க, ச, த, ப ஆகிய நான்கு மெய்யொலிகள் உடனிலை மெய் மயக்கத்தையே பெறும் என்று தொல்காப்பியம் கூறுகிறது. இவற்றுள் க, த, ப ஆகிய மூன்று மெய்யொலிகள் தொழிற் சார்புடைய சொற்களில் வரும் பிறமொழி ஒலிபெயர்ப்புடைய சொற்களில் வேற்றுநிலை மெய் மயக்கத்தையும் பெறுவனவாக உள்ளன.

(எ. கா.)	க்ட்	-	டிரேக்டர், டைரக்ட்
	க்ச்	-	மிக்சர்
	க்ன்	-	துக்னி
	த்ர்	-	உத்ரம்
	த்ன்	-	இத்னா
	ப்த்	-	நெப்த்தால்
	ப்ர்	-	அப்ரைசர்
	ப்ள்	-	டப்ளிங்
	க்ப்	-	ஜாக்புள்ளி

ங: 'ங' கரம் 'ர' கத்துடன் மயங்கி வந்துள்ளது.

ங்ர் - ஷைனிங்ரோல்

ட: 'ட' கரம் ந, ர, ல ஆகிய மெய்யொலிகளுடன் மயங்கி வந்துள்ளது.

ட்ந் - கட்நூல்
ட்ர் - நைட்ரேட்
ட்ல் - பட்லர்

ம: 'ம' கரம் சகரத்துடன் மயங்கி வந்துள்ளது.

ம்ச் - கம்சா

ய: 'ய' கரம் லகரத்துடன் மயங்கி வந்துள்ளது

ய்ல் - பாய்லர்

ர: 'ர' கரம் டகர லகரங்களுடன் மயங்கி வந்தமை.

ர்ட் பார்டர்
ர்ல் - பவர்லூம்

ல: 'ல' கரம் ட, ன ஆகிய மெய்யொலிகளுடன் மயங்கி வந்துள்ளது.

ல்ட் - மௌல்டு
ல்ன் - சில்னா

ள: 'ள' கரம் ரகரத்துடன் மயங்கி வந்துள்ளது.
ள்ர் - முள்ரோல்

ற: 'ற' கரம் பகரத்துடன் மயங்கி வந்துள்ளது. ற்ப்-அற்பா

மும்மெய்மயக்கம்

வேற்றுநிலை மெய்மயக்கத்தில் இருமெய்மயக்கத்துடன் மூன்று மெய்மயக்கங்களும் உண்டு என்பதனை,

> 'யரழ என்னும் மூன்றுமுன் னொற்றக்
> கசதப ஙஞநம ஈரொற் றாகும்''[1]

என்னும் நூற்பாவால் அறியலாம்.

இந்நூற்பாவில் கூறியவாறு ய, ர, ழ ஆகிய மூன்று மெய்யொலிகளும் மும்மெய்மயக்கமாக வருதலைக் காண்போம்.

1. மேற்படி. நூ. 48. ப. 79

ய்க்க்	-	தாய்க்கிணறு
ய்ப்ப்	-	நன்செய்ப்பயிர்
ய்த்த்	-	கலாய்த்தகடு
ய்ச்ச்	-	ஆராய்ச்சியாள்
ய்ந்த்	-	காய்ந்த சோளை
ர்க்க்	-	நீர்க்கூத்து
ர்ச்ச்	-	தார்ச்சிப்பி
ர்த்த்	-	ஏர்த்தண்டு
ர்ப்ப்	-	கதிர்ப்பூச்சி
ழ்க்க்	-	கீழ்க்கட்டு
ழ்ச்ச்	-	இழை நெகிழ்ச்சியாதல்
ழ்த்த்	-	கீழ்த்தலாச்சட்டம்

இவற்றுடன்,

ம்ப்ள்	-	காம்ப்ளக்ஸ்
ம்ப்ச்	-	பம்ப்செட்டு
ங்க்ச்	-	சிங்க்சல்பேட்டு

முதலிய மும்மெய் மயக்கங்கள் பிறமொழிச் சொற்களிலும காணப்படுகின்றன.

இறுதியாக ஆய்வில் சொல்லப்பட்ட தொழிற்சார்புடைய சொற்களில், எந்த எந்த ஒலியன்கள் எந்த எந்த ஒலியன்களுக்கு அடுத்து வருகின்றன என்பதைப் பின்பக்கமுள்ள விளக்கப்படத்தின் வாயிலாக அறியலாம்.

இனி, இம்மாவட்டத்தில் உழவு, நெசவு சார்ந்த தொழிற்சார்புடைய சொற்களில் சென்னைப் பல்கலைக்கழக அகராதியில் இல்லாத சொற்களைப் பொருள்வழிப் பாகுபாட்டுத் தலைப்புகளின் கீழ்க் காண்போம்.

உழவு

1. மண்ணும் நிலப்பிரிவுகளும்

இளங்காடு கழனி, ஈளைக்கழனி, ஈளைப்பூமி, ஈளைப்புலம், எலும்பு மாட்டு நிலம், இறைவை நன்செய், ஒட்டு வரப்பு, ஓடைக்கழனி, உவைக்கழனி, கட்டளை நிலம், கட்டுத்தளை, காணிக்கல், குளிர்மைக் கொல்லை, கொல்லை மேடு, சாத்துவரப்பு, சூனா வரப்பு, நமட்டு மண், பட்டாநிலம், பதியம்நாற்றங்கால்.

	க்	ங்	ச்	ஞ்	ட்	ண்	த்	ந்	ப்	ம்	ய்	ர்	ல்	வ்	ழ்	ள்	ற்	ன்
க்	✓																	
ங்	✓	(✓)																
ச்			✓															
ஞ்			✓	(✓)														
ட்			✓		✓													
ண்					✓	✓				✓				✓				
த்							✓											
ந்							✓	✓										
ப்									✓									
ம்									✓	✓								
ய்	✓		✓				✓	✓	✓	✓	✓			✓				
ர்	✓		✓			✓	✓	✓	✓	✓				✓				
ல்	✓		✓				✓	✓	✓	✓	✓		✓	✓				
வ்														✓				
ழ்	✓		✓				✓							✓				
ள்	✓		✓				✓		✓	✓				✓		✓		
ற்																	✓	
ன்			✓					✓	✓	✓				✓			✓	✓

வட்டமிட்ட இரண்டும் பேச்சு வழக்கில் மட்டும் வருவன.

2. நீர்ப்பாசன முறைகளும் கருவிகளும்

அடிகால், ஊற்றுவாய், எதிரணை, இறைப்புநீர், ஏற்றச் சால், ஏற்றக்கெடை, கட்டைக்கால், கல்லேரி, கவலைச் சால், கவலைச்சால் பட்டம், காதுகட்டு, காது வளையம், குத்தாப்பு, கீரச்சால், கோடிமடை, சிற்றேரி, சால்கோல், சால்வடம், சால்வளையம், சீர்த்தண்ணீர், செலத் தண்ணீர், சேற்றடி, சேற்றடிக்கட்டை, தொண்டான், நீர்த்தொப்பை, நாவாய்ப்படி, பட்டறைக்கல், பணி, புட்சாட்டிக்கொம்பு, புள்சாட்டிக்கொம்பு, மூட்டுத் தண்ணீர், வடகயிறு.

3. உழவும் உழவுக் கருவிகளும்

இரும்புக் கலப்பை, உழவுச்கயிறு, எதிர்க்கட்டை, ஏர் நுகத்தடி, ஒட்டுத்தளை வைத்தல், ஓரங்கழித்தல், கட்டை இழுத்தல், கட்டைக் கலப்பை, கட்டிமரம், கருஞ்சேடை, கண்ணாடிக்கட்டை, குறுக்குச்சால், கிடங்கு மடித்தல், சதுரம் ஓட்டுதல், சக்கைமரம், சேற்றுமரம், தலைச்சால், தளர ஓட்டுதல், தெள்ளுப்புழுதி, தொடக்கயிறு, நிலுவை மணை, படைப்பாத்தி, பட்லர், பாணி இழுத்தல், பாரணைத்தல், பிடியாப்பு, வலப்பு, வாரணக்கயிறு, போசுக்கலப்பை, மரக் கலப்பை.

4. பயிர்ப் பருவங்களும் பயிரிடுதலும்

அணிக்கால், அமானிய நடுவு, அமிஞ்சி நடுவு, அவரக் காணி, அன்னம் பிடித்தல், இணுக்கு நடுவு. இரண்டாங் கோப்பு, எடையபோடு, ஏருங்காலில் போடுதல், ஒத்து நடுவு, கட்டைக்கால், கப்பாங்கு, கரும்பு பின்னுதல், கலப்புக் கதிர், கலப்பை நாற்று, கீறி நடுவு, கிள்ளி நடு, குண்டியோட்டல், கொருக்கலப்பை, சால்விதைப்பு, சித்திரைப்பட்டம், சிறுகப் பிடித்து நடு, சேரநடு, சொர்ணவாரிப்பட்டம், தண்ணீர்ப் பங்கு, தைப்பட்டம், தொளிம்பை, நவரைப்பட்டம், நாற் றெடுத்தல், நாற்று பறித்தல், நாற்று வளாவு, நாற்றைக் கரையேற்றுதல், நுண்ணுயிர் கலத்தல், நீக்கல் போடுதல், பட்டை நடுவு, பத்தி விதைப்பு, பளிச்சு நடுவு, பால் கட்டுதல், புல்லு வளாவுதல், பூவாசிப்பட்டம், பெருவிதை, பொறுக்கு விதை, முக்கோட்டான் நடுவு, சத்துவவாரம், தண்ணீர்வாரம்,

நிலத்து வாரம், பயிர் வாரம்,விட்டங்கட்டுதல், விதைஒதுங்கல், ஜட்டகம், ஜப்பான் நடுவு.

5. களையெடுத்தலும் கருவிகளும்

இரும்புப்பலுகு, கட்டை கொத்தல், களையெடுத்தல், களைகொத்தல், களை தள்ளல், களைவெட்டல், காறு மரம், குச்சிப் பலுகு, பாசு கலப்பை, பாவட்டம், புல்லரிவாள்.

6. உரமும் உரமிடுதலும்

அடியெரு, ஊட்டங்குறைவு, எரு கிளைத்தல், எருக்குழி, எருவடித்தல், தழைமிதி, தழையெரு, நாட்டெரு, நுண்ணூட்டச் சத்து, பூச்சி மருந்து, பேருட்டச்சத்து, புகைந்து போதல், மந்தைச்சாணம், மேலுரம், யூரியா, ரோலர்.

7. அறுவடையும் உருப்படி செய்தலும்

அடிகல், அரிக்கெடை, அரிபின்னல், அரிமுந்திநெல், அரியடிக்குங்கயிறு, அறுப்பரிவாள், எள்ளுக்காய் மூட்டம், ஒட்டியறு, ஒட்டித்தள்ளு, உருப்படிநெல், கட்டடித்தல், கட்டடிக்குங்கயிறு, கட்டு உதறுதல், கட்டுப்போர், கதிரறுத்தல், கதிர்காயவைத்தல், கருக்கரிவாள், கருக்கறுத்தல், கருக்கு பிடித்தல், களங்காடு, களங்கொட்டல், கடலைக்காயடித்தல், கடலைக் காயெடுத்தல், கடலைக்காய் பறித்தல், கடலைக்காய் பிடுங்குதல், குத்துப்போடு, கோட்டரி, சூடடித்தல், செத்தையடித்தல், சுமைக்கட்டு, கோட்டுக்கயிறு, கோட்டு மடிப்பு, தண்டுக் கயிறு, தண்டுவிடுதல், தலைமடிப்பு, தாரிபோதல், தாள் தள்ளுதல், தாள்படை, தாள்போர் நெல், துகையல் போடுதல், படியபிடி, பால்கருக்காய், வெட்டுக்கூலி, வைக்கோல் வாங்கு, ஜெலித்தல்.

8. உழவர் பயன்படுத்தும் பிறகருவிகள்

ஈச்சங்கத்தி, கதிர்க்கூடை, கெடைக்கத்தி, பாசரிவாள் கத்தி, தானியப்பெட்டி, புல்லாங்கூடை, முள்ளுக்கொம்பு, முள்ளுக்கோல், முறுக்கு வளையம், சட்டிமரக்கால், வால் மரக்கால், கசங்குச் சல்லடை, இரும்புச் சல்லடை.

9. விளைபொருள் பற்றிய பிறசொற்கள்

இலாபக்காய், இறைப்புக்காய், கடனக்காய், கப்பல் மிளகாய், கருஞ்சுருட்டு, குண்டுமிளகாய், கூராம்பாளை, கூராம் மட்டை, கேழ்வரகுத் தட்டு, கொடிக்காய், கொத்துக் காய், சம்பா மிளகாய, சவுக்கு நாற்று, சக்கை மட்டை, சோணையறுத்தல், தென்னை அலகு, தென்னை ஈர்க்கு, படவிட்டம், பறிக்காய், புதியரகம், மரக்கால்புரி, மழை மிளகாய், மறுதாம்புக்காய், மூனை, மோவு, வெள்ளைக் கேழ்வரகு, வெள்ளைச் சுருட்டை, ஜோட்டான்.

10. பயிரைத் தாக்கும் பூச்சிகளும் நோய்களும்

அக்கினிரோகம், அவறைச் சீடை, அன்னப்பூச்சி, இலை சுருட்டுப்புழு, ஊரப்பூச்சி, கொண்டைப்பூச்சி, தண்டுத்துளைப் பான், பாலுறிஞ்சி, மரக்காய், வேர்த்துளைப்பான்.

11. கிராமத்தொழிலாளர்கள்

ஆராய்ச்சியாள், கம்முக்கட்டி, நடவாள், பந்தல்காரன், பெருத்தனக்காரர், வெட்டாள்.

12. அளவைப் பெயர்கள்

தாக்கு, சேர்ப்படி.

13. வண்டியின் பாகங்கள்

அள்ளுக்கம்பி, குடக்கட்டு, குடப்பூண், தடைக்குச்சி, தொட்டில் பத்தை, தொப்பைக்கட்டு, நுகத்தடிப் பிள்ளையார், நுகத்தடிச்சங்கிலி, மையத்தாணி, வண்டியிலை, வண்டியேர்க் கால், வலிக்கயிறு, ஜல்லா.

14. மாட்டின் நிறம், சுழி, கொம்பு முதலியன.

ஐந்துகால் மாடு, அடிகண்ட மாடு. அரணவால்மாடு, அழுகண்மாடு, ஆட்டுக்காம்பு மாடு, ஆறுகட்டு, இடி கொம்பு, உள்மடி, இறங்குபுறச்சுழி, ஏழுகட்டு, ஏறுபுறஞ் சுழி, கடைமுளைப்பு, கடையாண்மாடு, கத்தரிச் சலங்கை, கல்மார்பு, களும்பு, கால்கோமாரி, காமடி, கார்லு, குண்டுக் கொம்பு, குண்ணோய், கூட்டாண்சுழி, கொக்கிப்பல், குடைமேல்குடை, கோட்டான்முகம், கோபு, கோபுரச் சுழி, சந்திரகிரியான்,

சலங்கை மணி, சிட்டிவாதம், சீதமடி, சீலத்தோல் மாடு, செங்கல் மட்டு, செங்குளம்பு, டமாரச் சுழி, தலைக்கயிறு, தள்ளுமாடு, தாச்சுழி, தாலி கொத்துச் சுழி, திருகுபத்தை, துண்டெலும்பு, துடைப்பக்கட்டைச் சுழி, தொலும்பு, துவரைப்பட்டை, தோல் கொம்பு, நடசிட்டி, நீர்க் குடம், நீர்க்குத்துச்சுழி, நீர் வெக்கை, நெற்றிக் கயிறு, நெற்றிச் சலங்கை, நிலைக் கொம்பான், நேர்க் கொம் பான், படுக்கைச் சிட்டி, பரப்பு குளம்பு, பாடைக் கொம்பு, பாப்பார வெள்ளை, பாம்புச்சுழி, பால் களும்பு, பால்பல், பிள்ளைப்பசு, புளியாம்பூத் துவரைமாடு பூரணியான் கொம்பு, போடக்கொம்பு, பொரமடி, மடிவிடுதல், மணிச் சலங்கை, மண்டைக்கயிறு, மண்ணையடித்தல், மண்ணை சீய்த்தல், மாட்டுச் சுரப்பு மருந்து, மயக்குண்ணோய், மீசைக் கொம்பு, முக்கண்சுழி, முட்டிச்சுழி, முள் நாவுரி, மூன்று தூலமாடு, ஜாரிப் பட்டை, ஜோடு அடித்தல், ஜெர்சிப்பசு, மூன்றுவீடு.

15. மாட்டுத் தரகர் பேச்சுமொழி

அசரா, அற்பா, ஆனா, இத்னா, உத்ரம், ஐந்து விரல் பிடித்தல், ஒரு விரல் பிடித்தல், கட்டை விரல் பிடித்தல், கம்சா, கால, கேவு, கோதும, கொல்சு, சபா, சபீன், சம்மூலம், சவராயம், சித்தா, தலாத, தாபி, தாமம், மூலம், தாமு, தீசம், நெசவு, ராயம் வரப்பு, வாச்சி, வாய்தா.

16. ஆட்டின் நிறங்களும் நோய்களும்

கட்டுமரை, கரிநெற்றி, கரிசெரளி, கரி வெங்கால ஆடு, கறிலி, கறியாடு, கன்னிவெள்ளாடு, காறுகுட்டி, கீறு நெற்றி, கொட்டாடு, கொப்பாடு, சந்நியாசி வெள்ளாடு, சாரை வெள்ளாடு, சிவப்பு நெற்றியாடு, கறுப்பு வெள்ளாடு, சிவப்பு வெள்ளாடு, சில்ல வெள்ளாடு, சில்லியாடு, செம்மறியாட்டுக் கடா, செரளி ஆடு, சிவப்பாடு, சினை மரக்கை, சோந்தர வெள்ளாடு, டப்பாகண் வெள்ளாடு, தொடை மரை, துவரை யாடு, துவரை நெற்றியாடு, நாய்பள்ளாடு, நாமாதரி, வெள் ளாடு, பக்கமரை, படுகடா, பட்டையாடு, பட்டைநெற்றி, பல்லியாடு, பழுப்பு வெள்ளாடு, பால செரளியாடு, பொலி மரக்கன்று, முசரை, மொட்டை வெள்ளாடு, மெச்சியாடு, வாண்டைக் கன்று, வெங்கால ஆடு, இரத்தப்பாளை. லிங்காலு ஆடு, ஜாரை வெள்ளாடு.

நெசவு

1. பட்டு நெசவுத் தொடர்பானவை

அடிமுந்தி, அடையார் முந்தி, அணிபொறுக்சுல், ஆசு குழல், ஆசுமணை, ஒண்டிப்பாவு, கரைப்பட்டு, கரணைக் கோல், சப்புரிப்பட்டு சவுத், சாதா நெசவு, சாதாவாட்டுப் போடுதல், சீர்முந்தி, சீராடி உருளை, செலுப்படை, செலுப்பு பாசுதல், செலுப்பேணி, செலுப்போடுதல், செலுப்படையில் கோத்தல், கீழ்த்தறி, குள்ளக்கட்டு, உஸ்னா ஏற்றல், தாணைப் பாவு, கெட்டிச்சீர், கோர்வை ரகம், செலுப்பு முந்தி. தகடு சேலை, தகதலை, தொப்பைக் கயிறு, நடுத்தறியாள், பட்டிழைத்தல், பட்டுத்தறி, பட்டுக்குழல், பட்டு சோத்தல், பட்டுப் பரிவட்டம், பலகை பாய்ச்சுதல், பனாரஸ்ரகம், பன்னையில் போதல், பார்வைநெசவு. பார்வை முந்தி, பாவு முரிந்து போதல், பிட்னி ஏற்றுதல். பில்லக்கம்பி, புட்டா வடை, புட்டாவேணி, புட்டாப் பலகை, புட்டா போடுதல், புட்டா வாங்குதல், பேட்டடை, பேட்டேணி, பேட்டு கட்டுதல், பேட்டுக் கம்பி, பேட்டுச் சட்டம், பேட்டுத் தகடு,பேட்டுத் தடி, பேட்டுப் பலகை, பேட்டுப் பெட்டி, பேட்டு மூட்டை, பேட்டு வாங்குதல், பேட்டுக்கயிறு, பேட்டுக்குச்சி, பேல்தாரி, முத்துக்கம்பி, முத்துக் கட்டம், முக்கி, முத்துச்சீர், முங்கில் திரி, மேல்தறி, இறக்கைப்பவகை, சரிகையாலை, சரிகைக்குழல், ஜரி கோரா, ஜரிபாவு, ஜரிகைமுக்கிக் கட்டம், ஜாக்கார்டு சேலை, ஜாக்கார்டுப் பலகை, ஜாக்கார்டுப் புள்ளி, ஜாக்கார்டுப் புள்ளியட்டை, ஜாக்கார்டு மிஷின், ஜாக்கார்டு ஜரிகை, ஜோடுபுரி.

2. நூல் நெசவுத் தொடர்பானவை

அம்புவிசை, ஊடுதி, ஊணி, ஓசைவாட்டு, கஞ்சிப்பை, கட்டாரிப் பாவு, கட்டிச் சரிகை சேலை, கதிராமணை, கத்தூரிப்பாவு, கீறுசுப்பல், குச்சிக்கயிறு, குச்சிராட்டினம், கண்ணாடிப்பில்லை, கண்ணிக்கயிறு, கஜகொத்து, காக்காய்ச் சரிகை, குதில் கயிறு, கைத்தறி, கைப்பில்லு, கொத்துப்பாவு, சமலங்கி, சிலுப்பை, டப்பா ராட்டினம், தத்திக்கயிறு, தார் திரிக்கும் இராட்டினம், திருஷ்டிக் குளிகை, தோய்ச்சல் பாவு, தோல் கட்டை, நீட்டுப்பாவு, பாவு தோய்தல், பாவு பிணைத்தல், பில்லுவர தடி, பீஸ், பெந்தணி, பெந்துகுள்ள, பெந்து

பட்டி, பெடல்கோல், பொட்டிக் கயிறு, பொட்டிநூல், பெட்டிப்பலகை, பொந்துவண்டி, மாடக்கயிறு, ரோல்.

3. இருவகை நெசவுக்கும் பொதுவானவை

அச்சு பிணைத்தல், அச்சுமரம், அச்சுமரக்கயிறு, அச்சு மரக்குண்டு, அச்சுமுட்டும் பத்தை, அருவு, அள்ளுக்கயிறு, ஆணிழை, ஆலை, ஆலைக்குச்சி, இராட்டினக் குத்துக்கால், இராட்டினத் தண்டவாளம், இராட்டின மணை, இராட்டினத் துரப்பணக்கால், உருண்டைக் கட்டிக் கட்டை, உருண்டைக் கட்டித் துளை, உருண்டைக் கட்டிக் கம்பி, ஊசிக்கண்டு, ஊன்த் திக்கயிறு, இழைப்போக்கு, எயட்டு கட்டுதல், எயட்டுத் தறி, இலைச் சக்கரம், ஏர்த்தண்டு, ஓடுகயிறு, கட்டுப்போடுதல், கச்சல், கதிர்மணை, கால்குழி, குத்துக்கால்,குறிக்கெடை, குறிக் கோல், குறிவைத்தல், கைக்காட்டிமரம், கைக்குண்டு, கைத்தறி நாடா, கொம்மைக்கட்டி, கொம்மைக்கோல், குழல் சட்டி, குழல் மடக்கு, சக்கரம், சீராடிச்சட்டம், சீருருளை, சீரிழை, சீர்க்கயிறு, சேடுமுள், சுழற்றி, டோரைபோதல், சோமாசுக்கல் தறித் தண்டவாளம், தத்தளவு, துரப்பணக்கால், துளைநாக்கு, தறிக் குத்துக் கால், தறிக்குழி, தாபரக் கட்டை, தறிப்படை அளவு, தார்ஊசி, தார்ச்சிப்பி, தார்திரித்தல், திண்டடித்தல். தோமாசுக் கல், நாடா ஆணி, நாடாக்கம்பம், நாடாக்குமிழ், நாடாத்தந்தம், நாடாமணி, நாடா அராவுதல், நாடா வளையம், நாடா வில், நின்றச்சுக் கொம்பு, நெய்யக்காரன், படமரக்கால், படமரக்கம்பி, படமரக்காடி, படமரக்குச்சி, பரிவட்டம் கட்டுதல், பார்வைப் பக்கம், பாவணுவாக்கல், பாவறுத்தல், பாவு கீறல், பாவு சுற்றுதல், பாவு தட்டுதல், பாவு நீட்டுதல், பாவு போடுதல், பாவு ரகம், பாழும்பல், பிளாஸ்டிக் நாடா, புணிக்கட்டு, புணிமிதித்தல், புணையல் அளகு, புரு, பூட்டுத்தலை, பெண்ணிழை, பிரம்புபத்தை, பேரக்காரர், புரை யெடுத்தல், புரைவாட்டு, மடிகோல், மரநாடா, மலரவடித்தல், மாதறிக்கால். மால்சரடு,முந்தண்டு, முந்தண்டுக்கால், முந்தண்டுக்கம்பி, முட்டுக்கொம்பு, முந் தண்டுக்கோல், மூங்கில்நாடா, மூட்டிழை, மிதிக்கட்டை, மிதி யுழல்கோல், மிதிக்கரணைக்கோல், மிதிக்கட்டில்கால், மிதிக் குச்சி, மேத்தாரை, மேல்மரம், மோப்புக் கயிறு, மோப்புத் தடி, வலிக்கயிறு, விசைக்கயிறு விசைக்குச்சி, விசைமுள், வலிமுளைக் கொம்பு, பீஸ்.

4. கோரா ஆலைத் தொடர்பானவை

அணிக்கயிறு ஆலையிலேற்றுதல், ஆலையில் ஓடுதல், ஆலைக்கால், ஆலைக்கைப்பிடி, ஊடைத் தடை, ஒண்டிப்பிரித் தல், கசறா, கருதலா, கைவடுக்கு, கோரா ஆலை, கோராப் பரிவட்டம், சப்புரி, சப்புரித்தடை, சாத்துப்பிள்ளை, சிலுப்பை, சாத்துப்பிள்ளைக்கால், சாத்துப் பிள்ளைக் காது, டோலா, டோலா ஊசி, டோலாக் கயிறு டோலாக் கால், டோலாச் சட்டம், டோலாத்தண்டு, டோலா மால்சரடு, டோலா ராட்டினம், தார் வளையல் கட்டு, புணிக் கூண்டு, பிள்ளையார் மணை, வடுக்குதல்.

5. நூல் ஆலைத் தொடர்பானவை

ஆசுக்கண், ஆலை ஏர்க்கால், ஆலைக்குடம், ஆலைக்குழி, ஆலைச்சட்டம், ஆலைத் தண்டவாளம், ஆலைமுள், இடுப்பால் தள்ளுதல், இழுப்புக் கம்பி, இணைப்புக்கயிறு இழை கட்டி யேற்றல், கிள்ளிக் கட்டுதல், கீழ்த்தலா, கீழ்த்தலாச்சட்டம், கொத்துப்பாவு, தடுக்கை, தடுப்புப்பள்ளம், தலாக் கம்பி, தலாமாற்று, பாவோடுதல், புணியாணி, புணிக்கயிறு, புணிச் சட்டம் புணிமாற்றுதல், பரிவட்டப்படல், பல்சக்கரம், பிணைதலா, பொரப்பாவு ஆலை, மடங்கல் விழுதல், மேல் தலா, மேல்தலாச் சட்டம், தலாச்சட்டம், வாரிழை, விசைமுள்.

6. விசைத்தறித் தொடர்பானவை

கைக்கட்டை, கையடிவார், பள்ளை, பள்ளை ராட்டினம், பள்ளை ஊசி, முள்ளுருளை , விசைத்தறி, விசைத்தறிக்குழல், விசைத்தறி நாடா.

7. கோரா உற்பத்தித் தொடர்பானவை

பட்டுக் கூடு, பால் புழு.

8. சாயம் போடுதல் தொடர்பானவை

உஷ்ணா, உஷ்ணா எடுத்தல், உஷ்ணாகுண்டா, சாயக் கோல், காரவடுப்பு, கிட்டிமரம், கைச்சாயம், சாயவடுப்பு, சாயடி, சுற்றுக்கோல், மச்சுத்தடி, சாடித்து அடித்தல்.

9. அச்சுக்கட்டுதல் தொடர்பானவை

ஈனை, ஈனைகட்டடல், ஈனை பாய்ச்சுதல், ஒத்து வெலித்திப் பார்த்தல், கறுப்புக்கல், சோளத்தட்டு அச்சு.

10. விழுது கட்டுதல் தொடர்பானவை

விழுது கட்டுதல், விழுது கோல், அச்சுக் குழைபோடும் ஊசி, அச்சு வாங்கும் ஊசி, இழை வாங்கும் ஊசி, இழை பொறுக்குதல், கன்னிமுறுக்கு, காால்கூறு, சாதா அச்சு, சுற்றுக் கொலுசு, தீற்றுக்கம்பி, தீற்றும் புல்லு தேக்கோல், நைலான் விழுது, பட்டறைத் திருப்புதல் பனங்கோல் பனாரஸ் அச்சு, விழுது கட்டும் ஊசி, விழுதுகட்டி, விழுது சட்டம்.

11 அடை கட்டுதல் தொடர்பானவை

அடைக்கயிறு அடை கட்டுதல், அடை கட்டுபவர், அடை கட்டும் ஏணி, அடை கட்டும் பலகை, செலுப்பு ஆசு, செலுப் படை கட்டுதல், பேட்டடை கட்டுதல், புட்டாடை கட்டுதல், வடிவ அட்டை, ஜாக்கார்டு டாபி, டிராபாய் டாபி, நூல்டாபி, பேரல்டாபி, லேட்டிஸ் டாபி.

12 தோய்ச்சடித் தொடர்பானவை

அச்சு அறுப்புக்கோல், அணிக்கட்டு, அளுகுஞ்சு, ஏர்த் தண்டு, ஓடல் பாவு, கஞ்சியடிப்பவர், கஞ்சாறபில், காற்றாற்று தல், கெட்டிக் கஞ்சி, குழைதூவும் கோல், குழைதோய்தல், கோடுவைத்தல், திறம் போடுதல், தீர்ப்புக்கஞ்சி, தூவுதட்டுதல், தூர்க்கோல், தூர்ப்பில், தோய்ச்சடி, பணிவூர்தக்கயிறு, பாவடி, பில்லேற்பவர், புருசல், பெரியாள், வலிக்கும் பில், வெண்டு போடுதல்.

உழவு, நெசவு கலைச் சொற்கள்

[செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டம்]

நிறைவுரை

ஆய்வுலகில் களப்பணி மிகவும் பயனுடையதாய் அமைகிறது. களப்பணியில் அந்தந்த வட்டத்தைச் சார்ந்தவர்கள் ஈடுபடுவது எளிது.

ஒருவர் தம் வட்டத்தைச் சார்ந்த தொழில் சார்புடைய சொற்களையே தொகுப்பாராயின் அவ்வட்டத்தில் மக்கள் இயல்பாகப் பேசிவரும் சொற்களை நுணுக்கமாக அறிந்திருக்க இயலும்; ஒரு சில அரிய சிறந்த சொற்களுக்கு தொழில் வல்லாரிடையே விளக்கம் கேட்டறிய இயலும்.

ஆய்வாளர், மாவட்ட அளவில் தொழில் சார்ந்த சொற்களைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டதால், செங்கற்பட்டு எம். ஜி. ஆர் மாவட்டத்திலுள்ள பதின்மூன்று வட்டங்களுக்கும் அவ்வட்டங்களில் அறிமுகமானவர்களுடன் தொடர்பு கொண்டு பலமுறை சென்று உழவு, நெசவு சார்ந்த சொற்களைத் தொகுத்துள்ளார்.

தொழில் சார்ந்த சொற்களில் செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் முழுவதும் பெரும்பான்மையான சொற்கள் ஒன்றாக வழங்கப்படினும் வட்டத்திற்கே உரிய, தத்தம் பகுதிக்கே உரிய, தொழிலுக்கே உரிய சொற்களையும் தொழிலாளர்கள் வழங்குகின்றனர். அவர்கள், அச்சொற்கள் அவ்வாறு வழங்குவதற்கு உரிய காரணம் தெரியாது என்று கூறினும் ஆய்வாளர், அவர்களுடைய தொழில் சூழ்நிலையை அறிந்தமையால் அச்சொற்கள் காரணப் பெயராக விளங்குவதையும் அறிய நேர்ந்தது.

தொழிலாளர்களில் பலர் பல்லாண்டுகளாக ஒரு தொழில் செய்பவராயினும் தாம் செய்யும் தொழிலில் கையாளும்

கருவிகள், தொழில் முறை சார்ந்த சொற்கள் ஆகியவற்றைப் பிறர்க்குச் சரியாகக் கூறும் திறனற்றவராயுள்ளனர். இதற்குக் காரணம் அவர்கள் மற்றவர்களுடன் அதிகத் தொடர்பு கொண்டிராமையே எனலாம்.

தொழிலாளர்கள் தங்களுக்குள் அடிக்கடி பயன்படுத்தும் சொற்கள், எளிமை கருதி வழங்குவதாலும் தவறான உச்சரிப்பைப் பிறர் சொல்லக்கேட்டு அப்படியே சொல்லுவதாலும் விரைவில் சொல்ல வேண்டும் என்ற உணர்வில் கூறுதலாலும் பேச்சு வழக்கில், அத்தொழிலுக்குரிய கலைச் சொற்களினின்றும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. எப்பொழுதோ ஒரு முறை பயன்படுத்தப்படும் சொற்கள் அதிக மாற்றம் பெறாமல் அவர்களிடையே வழங்குதலையும் காணலாம்.

சமுதாயத்தில் தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்களைக் கல்லாதவர்கள் (uneducated), படித்தவர்கள் (literate), கற்றவர்கள் (educated) என்று முப்பிரிவாகப் பிரித்தால், படித்தவர்களாகவோ கற்றவர்களாகவோ விளங்கி தொழில் துறையில் முழுமனதுடன் ஈடுபட்டுள்ளவர்களிடம் சரியான சொல்-பொருள் விளக்கம் கேட்டறிய இயலுகிறது. கல்லாதவர்களிடையே கொச்சை வழக்கு அதிகம் காணப்படுகிறது. பிறமொழி கற்றவர்களிடம் பிறமொழிச் சொற்கலப்பு அதிகம் காணப்படுகிறது.

உழவுத் தொழிலில் இயந்திரமயமாக்கல் மூலம் அறிமுகப் படுத்தப்பட்ட சொற்கள், பிறமொழிச் சொற்களின் ஒலி பெயர்ப்பாகவோ ஒப்பொலியாக்கமாகவோ வழங்கப்படுகின்றன. ஏனையவற்றுள் பெரும்பான்மையான சொற்கள் முதிர்ந்த தமிழ்ச் சொற்களாகவே உள்ளன.

நெசவுத் தொழில் தொன்மையான தொழிலாக இருப்பினும் அத்தொழில் செய்பவர்கள் பல்வேறு சாதியினராகப் பெருகுகலாலும், காலத்திற்கேற்ற தொழில்வளம் அத்தொழிலில் தேவைப்படுதலாலும் பிறமொழிச் சொற்கள் அத்தொழிலில் மிகுதியாகப் புகுந்திட நேரிடுகிறது. நூல்நெசவு, பட்டு நெசவு ஆகியவற்றுக்குப் பொதுவாக வழங்கும் சொற்கள், நூல் நெசவுக்கேயுரிய சொற்கள் ஆகியனதவிர பட்டு நெசவு, விசைத்

தறி, நெசவின் துணைத் தொழில்கள் ஆகியவற்றில் பிறமொழிச் சொற்கள் அதிக இடம் பெறுகின்றன.

'வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாகலான்'[1]

என்பது தொல்காப்பிய நூற்பா. இதில் உயர்ந்தோர் என்னும் சொல்லுக்குக் கற்றவர்களையும், தொழில் நுட்பத் துறையில் தேர்ந்தவர்களையும் உரியவராகக் கொண்டு அவர்கள் வழங்கும் சொற்களே அத்தொழிலுக்குரிய இலக்கிய வழக்குச் சொற்களாக இவ்வாய்வேட்டில் கொடுக்கப்பட்டுள்ளன.

உழவு, நெசவு ஆகிய இரு தொழில் சார்புடைய சொற்கள் பொருள் வழிப் பாகுபாட்டின் அடிப்படையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இத்தொழில் சார்புடைய சொற்களிலிருந்து இலக்கணக் கூறுகளுக்குச் சில எடுத்துக்காட்டுகள் சொல்வழிப் பாகுபாட்டிலும் சொற்பொருளாய்வுப் பகுதியிலும் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒருசொல் வெவ்வேறிடங்களில் வெவ்வேறு பொருள் குறித்து வழங்கப்படுவதும், ஒரே பொருள் தரத்தக்க சொல் வெவ்வேறிடங்களில் வெவ்வேறாக வழங்குவதனைப் பட விளக்கங்களுடனும் விளக்கப்பட்டுள்ளன. சொற்களின் பொருண்மை உறவு காணுதலில் பலபொருள் ஒருசொல்போலி என்பதை டாக்டர்பொன். கோதண்டராமன் கூறும்வழியில்இவ்வாய் வேட்டில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

பேச்சுவழக்குச் சொற்கள், இலக்கிய வழக்குச் சொற்களினின்றும் வேறுபட்டு ஒலிக்கும் முறைகளும் அவ்வாறு ஒலிக்கப் படுவதைக் கூறும் விதிகளுக்கு எடுத்துக்காட்டுகளும் தந்து விளக்கப்பட்டுள்ளன.

மேலும் இவ்வாய்வேட்டில் சென்னைப் பல்கலைக் கழகம் 1982ஆம் ஆண்டில் வெளியிட்ட தமிழ்ப் பேரகராதியில் உள்ள சில சொற்களுக்கு ஆய்வில் எடுத்துக் கொள்ளப்பட்ட


---

1. தொல்காப்பியம் - பொருளதிகாரம், பேராசிரியம், சென்னை-1, கழக வெளியீடு, 1951) மரபியல் 647 ப. 477

சொற்களின் அடிப்படையில் புதிய பொருளும், அவ்வகராதி யில் இல்லாதனவாக செங்கற்பட்டு எம். ஜி. ஆர். மாவட்டத் தில் உழவு, நெசவு சார்ந்து வழங்கும் சொற்களின தொகுப்பும் கொடுக்கப்பட்டுள்ளன.

இம்முறையில் குயவர், பொற்கொல்லர், தச்சர், கன்னார், கருமான், மீனவர், நிமந்தக்காரர், கூடை, முறம், பாய் முடை வோர் ஆகிய தொழில் வல்லுநரிடையே வழங்கும் சொற்களை மாவட்ட அளவில் தொகுப்பதற்கும், இவ்வாறு தமிழகத்தி லுள்ள எல்லா மாவட்டங்களிலும் தொழில்சார்ந்த சொற் களைத் தொகுத்து, தொழில் சார்ந்த சொற்களஞ்சியம் தயாரித்தலுக்கும் இவ்வாய்வேடு உறுதுணையாய் அமையும்.

ஒரு மாவட்டத்திலும் இன்னொரு மாவட்டத்திலும் வழங்கும் தொழில் சார்ந்த சொற்களுக்கிடையேயும், தென் தமிழகம், வடதமிழகம், கீழ்த்திசைத் தமிழக மாவட்டங்கள், மேற்றிசைத் தமிழக மாவட்டங்கள் என்ற முறையில் இவற்றுக் கிடையே வழங்கும் தொழில் சாந்த சொற்களின் ஒப்பீட்டு ஆய்விற்கும் இவ்வாய்வேடு முன்னோடியாக விளங்கும் எனலாம்.



பின்னிணைப்பு—1

(அ) உழவு பற்றிய பழமொழிகளும் நம்பிக்கைகளும்

1. அகல உழுவதிலும் ஆழ உழு.
2. அறுக்கமாட்டாதவள்இடுப்பில் அம்பத்தெட்டுகருக்கருவாள்
3. ஆடியில் அற காயணும்.
4. ஆடி விதை தேடியிடு.
5. ஆவணிக்கார் பூசணிப்பூ.
6. ஆணிக்கார் மூலதனம்.
7. இளைத்தவன் எள்ளு விதைத்தான்;கொழுத்தவன் கொள்ளு விதைத்தான்.
8. உத்திராடத்தில் ஒரு பிள்ளையும் ஊரண்டை ஒரு காணி நிலமும் இருந்தால் அந்த குடும்பம் வளமாக இருக்கும்.
0. உழுகின்ற காலத்தே ஊர்சுற்றி வந்துவிட்டால் அறுவடை காலத்தில் ஆள் பிடிக்கத் தேவையில்லை.
10. எள்ளுக்கு எள்ளம்மாத்திரம் தண்ணீர் போதும்.
11. எள்ளு பயிரிட்ட கழனி ஏழு வருடம் பயிராகாது.
12. ஏழுமலையான் வாய் திறந்தால் மழை பெய்யும்.
13. ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்.
14. ஐப்பசி விதைப்பாட்டில் ஆனைக்கொம்பு முளைக்கும்.
15. களையெடுக்காத பயிர் கால்பயிர்.
16. கார்த்திகைக்கு மிஞ்சின மழையும் இல்லை; கர்ணனுக்கு மிஞ்சின கொடையும்இல்லை.
17. காலத்துப் பயிர் கரம்பிலும் விளையும்.
18. குதித்து குதித்து குத்தினாலும் குந்தாணிக்குக் கொழுக்கட்டை கிடைக்குமா?
19. கொடிக்கால் மின்னல் வெடிக்கால் மழை.
20. சித்திரை எள்ளைச் சிதறி விதை.

21. சித்திரை மாதப் புழுதி பத்தரை மாற்றுத் தங்கம்,
22. சொம்பால் ஒரு நெல் ஆனாலும் சம்பாவாகாது.
23, நட்ட கேழ்வரகு நடு வீட்டிலே.
24. பங்குனி மழை பத்தெட்டு வகைக்கும் சேதம்.
25. பயிரைக் கொடுத்து பழஞ்சோற்றை வாங்கு.
26. புரட்டாசிச் சம்பா நடவு பொன்போல் விளையும்.
27. புரட்டாசியில் பொன்னுருகக் காயும்; மண்ணுருகப் பெய்யும்.
28. மாசிப் பனி மலையையும் உருட்டும்.
29. மார்கழி மாதக்குளிர் மாடு மக்களுக்குப் பீடை.
30. மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை.
31. முடிச்சு முடிச்சா நட்டால் கோட்டை கோட்டையாக் விளையுமோ?
82. வைகாசி எள்ளை வரப்பிலும் கொட்டு.

(ஆ) நெசவு பற்றிய பழமொழிகளும் நம்பிக்கைகளும்

1. ஆலை ஒடுகிறவளுக்கு அகமுடையான் தேவையில்லை; அம்பது இஞ்ச் நெய்யறவனுக்குப் பெண்டாட்டி தேவை யில்லை,
2. எட்டிப் பார்த்தால் எட்டிழை குறையும்,
3. எதிர் வீட்டில் இழவு இருந்தாலும் எதிர் குறியில் இறங் காதே.
4. எதிர் வீட்டில் இழவு இருத்தாலும் எதிர் பலகையில் இறங் காதே.
5, கஞ்சிக்கேத்த கஞ்சிப்பை.
6. கஞ்சிக்கு ஜாண் கறிக்கு முழம்.
7. காஞ்சிபுரம் போனால் காலாட்டிப் பிழைக்கலாம்,
8 கைக்கோளண் உறவு காக்குழி வரை.
9. செய்யுந் தொழிலைச் சீர் தூக்கிப் பார்க்கில் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை.
10. தாயைப் போலப் பிள்ளை; நூலைப் போலச் சேலை.
11. தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு.
12. நெய்து கொண்டிருக்கும் பொழுது நெய்யறதை விட்டு நினைத்துக் கொண்டானாம் சக்கலியன் [கைக்கோளன்]

பின்னிணைப்பு—2

1. உழவுத் தொழில் சார்ந்த தகவலாளிகள் பட்டியல்

பெயர்	வயது	ஊர்	வட்டம்	தொழில்
குப்புசாமி கிராமணியார்	65	சிலாம்பாக்கம்	உத்தரமேரூர்	விவசாயம்
சுப்பிரமணி	56	நாஞ்சிபுரம்	,,	,,
முருகன்	59	நெல்வாய்	,,	,,
கன்னியப்பன்	60	சாலவாக்கம்	,,	,,
கே. இராசாமி கவுண்டர்	54	மருத்துவான் பாடி	,,	மாட்டுத் தரகர்
சின்னக்கண்ணு	74	,,	,,	விவசாயம்
ஆவடியான்	64	,,	,,	,,
எம். எம். நரசிம்மன்	54	பாட்பாங்குளம்	,,	விவசாய ஆசிரியர்
அன்னப்பன்	59	,,	,,	ஆடு வளர்த்தல்
முனுசாமி பிள்ளை	79	ஆனைப்பள்ளம்	,,	விவசாயம்
சந்திரசேகர முதலியார்	69	மானாம்பதி	,,	,,
சத்திய மூர்த்தி	48	,,	,,	,,
ஏ. சம்பத்	44	வெங்கச்சேரி	,,	,,
டி. இராமச் சந்திரன்	39	,,	,,	,,
ஆறுமுகப் பிள்ளை	64	,,	,,	,,
ஏ. திருத்தணி ரெட்டி	63	ஊத்துக் கோட்டை	ஊத்துக் கோட்டை	,,

பெயர்	வயது	ஊர்	வட்டம்	தொழில்
ஏ. முனுசாமி	41	ஊத்துக் கோட்டை	ஊத்துக் கோட்டை	விவசாயம்
ஏ. அண்ணா மலை	42	,,	,,	எருமைத் தரகர்
வி. குப்பு ரெட்டி	50	போந்தவாக்கம்	,,	ஆடு வளர்த்தல்
பி. சாமுவேல்	63	பாலவாக்கம் காலனி	,,	விவசாயம்
யேசுதாஸ்	75	பாலவாக்கம் காலனி	,,	,,
வேணு	51	போந்தவாக்கம்	காஞ்சிபுரம்	,,
தனபால்	57	கொட்டவாக்கம்	,,	,,
நடேசநாயகர்	55	செவிலிமேடு	,,	,,
கே.கிளியப்பன்	59	காஞ்சிபுரம்	,,	மரட்டுத் தரகர்
ஜி.பச்சையப் பன்	49	,,	,,	ஆடு வளர்த்தல்
கன்னிப் பிள்ளை	69	,,	,,	ஆடு, மாடு மேய்த்தல்
எஸ்.ஜெயகிருஷ்ண முதலியார்	60	கீழ்க்கதிர்பூர்	,,	விவசாயம்
இ. கோபால் முதலியார்	62	,,	,,	,,
சி. கிருஷ்ணன்	49	கவரப்பேட்டை	கும்முடிப் பூண்டி	,,
கண்ணப்ப ரெட்டியார்	68	,,	,,	ஆடு வளர்த்தல்
முனிவேல் முதலியார்	51	கனகம்பாக்கம்	,,	விவசாயம்
ஏ. பலராமன்	74	ஆத்தூர்	செங்கற்பட்டு	,,
ஏ. சீத்தாபதி	56	,,	,,	,,

பெயர்	வயது	ஊர்	வட்டம்	தொழில்
க. சாமிநாத முதலியார்	73	தேசுமுகிப் பேட்டை	செங்கற் பட்டு	விவசாயம்
சந்நியாசி நாயகர்	53	திருக்கழுக்குன்றம்	''	''
ம. கதிர்வேல் நாயகர்	55	''	''	''
டி.எஸ்.வேதாசல உடையார்	75	''	''	''
அர்ஜுனன்	47	சித்தாமூர்	செய்யூர்	கம்முக்கட்டி
பீ. துரைசாமி	63	''	''	வெட்டியான்
சின்னசாமி	55	பொலம்பாக்கம்	''	விவசாயம்
வேணுபிள்ளை	68	சித்தாமூர்	''	ஆடு வளர்த்தல்
சுவாமிநாதன்	65	கன்னிமங்கலம்	''	விவசாயம் + தரகரர்
ஜெயராம் பிள்ளை	61	திருநீர்மலை	சைதாப் பேட்டை	விவசாயம்
கே. திருவேங்கடம்	55	வடகரை	''	''
சி. மூர்த்தி	63	''	''	''
இராமகிருஷ்ண ராஜ்	63	திருத்தணி	திருத்தணி	''
சின்னக் குழந்தை	68	ஆகூர்	''	விவசாயக்கூலி
மாரிமுத்து அம்மாள்	52	''	''	''
கன்னியம்மாள்	57	''	''	''
கணேசன்	39	''	''	''
வரதய்ய நாயுடு	55	திருத்தணி	''	விவசாயம்
எஸ். முனுசாமி	47	''	''	''
துரைசாமி ரெட்டியார்	73	எட்டுகுப்பம்	''	''
கே. சுப்பிரமணி	54	திருத்தணி	''	''
நாகப்ப ரெட்டியார்	45	சிவபுரம்	திருப்பெரும் புதூர்	''

பெயர்	வயது	ஊர்	வட்டம்	தொழில்
முனுசாமி	67	கீழ்ப்படப்பை	திரும்பெரும் புதூர்	விவசாயம்
எம், எல்லப்பன்	46	,,	,,	,,
எஸ்.இராமமூர்த்தி	46	குன்றத்தூர்	,,	நிலக்கிழார்
எஸ். செல்லையன்	42	ஈக்காடு	திருவள்ளுவர்	விவசாயம்
ஜி. சுப்பிரமணி	43	ஈக்காடு பெத்தானியல்	,,	ஆடு, மாடுத் தரகர்
எஸ், சிவா	45	,,	,,	மாட்டுத் தரகர்
ஏகாம்பர முதலியார்	63	பேரம்பாக்கம்	,,	விவசாயம்
மாணிக்கம்	45	நரசிங்கபுரம்	,,	ஆடு வளர்த்தல்
கோபால்	51	புதுப்பட்டு காலனி	பள்ளிப் பட்டு	விவசாயம்
கே. வெள்ளைப் பிள்ளை	85	சூரராஜுபட்டடை	,,	,,
சீனுகான்	105	ஈச்சம்பாடி	,,	,,
கோ.படவட்டய்யா	53	,,	,,	,,
மு. கன்னியப்பப் பிள்ளை	45	சூரராஜுபட்டடை	,,	ஆடு வளர்த்தல்
காந்தம்மா	48	புதுப்பட்டு காலனி	,,	விவசாயக் கூலி
நாகம்மாள்	59	,,	,,	,,
டி. இராம கிருஷ்ணன்	41	சூரராஜுபட்டடை	,,	விவசாயம், தரகர்
எம். சின்னசாமிப் பிள்ளை	42	,,	,,	,,
கோ. சண்முகம்	50	ஈச்சம்பாடி	,,	விவசாயக் கூலி
சி. கோவிந்த சாமிரெட்டி	64	இராமச்சந்திரா புரம்	,,	நிலக்கிழார்
சி. வேலு	56	சோழவரம்	பொன்னேரி	விவசாயம்

பெயர்	வயது	ஊர்	வட்டம்	தொழில்
ஏ. ஜி இராதா கிருஷ்ணன்	55	ஆளாடுகிராமம்	பொன்னேரி	விவசாயம்
ஆரியப்பநாயுடு	81	தடப்பெரும் பாக்கம்கிராமம்	,,	,,
வெ, கணேசன்	45	மதுராந் தகம்	மதுராந் தகம்	வெற்றிலை பயிரிடல்
ட்டி. வி. வரத ராஜுலு ரெட்டியார்	65	தண்டலம்	,,	விவசாயம்
டி. குப்புசாமி நாயுடு	66	,,	,,	,,
அயோத்தி கவுண்டர்	68	ஒரத்தி	,,	,,
கோவிந்தசாமி	45	,,	,,	,,
பொன்னுசாமி	40	காட்டுப்பிள்ளை—யார் கோவில்	,,	,,
கணேசன்	63	புத்திரங்கோட்டை	,,	,,



2. நெசவுத் தொழில் சார்ந்த தகவலாளிகள் பட்டியல்

பெயர்	வயது	ஊர்	வட்டம்	தொழில்
வே. சரவணன்	65	மானாம்பதி ,	உத்தர மேரூர்	தோய்ச்சல் பாவு
வே. பால கிருஷ்ணன்	55	,,	,,	ஆலை ஓடுதல்
சோமசுந்தரம்	43	,,	,,	தோய்ச்சல் பாவு
கு. கணபதி முதலியார்	75	மானாம்பதி	,,	நீட்டுப்பாவு ஆலை ஓட்டுநர்
வேதாசலம்	56	ஒரக்காட்டுப் பேட்டை	,,	பொரப்பாவு
சின்ராஜ்	54	நீர்வளூர்	,,	பட்டுப் பூச்சி வளர்த்தல்
பி. ஜீவய்யா	60	போந்த வாக்கம்	ஊத்துக் கோட்டை	பொரப்பாவு
ஆரணி கிஷ்டய்யா	55	பாலவாக்கம்	,,	,,
எம். சண்முகம்	67	காஞ்சிபுரம்	காஞ்சி புரம்	பட்டுநெசவு
எஸ். நாகவேலு	35	,,	,,	,,
என். சுப்பிர மணியன்	45	,,	,,	,, ,,
கே. நாகரத்தினம்	60	,,	,,	,,

பெயர்	வயது	ஊர்	வட்டம்	தொழில்
எல். தணிகாசலம்	39	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்	பட்டு நெசவு
என். கணேசன்	55	,,	,,	பட்டுச்சாயம் போடுதல்
கே சுப்பிர மணியன்	69	,,	,,	பட்டு நெசவு (ஓய்வு)
ட்டி. வையாபுரி	57	,,	,,	பொரப்பாவு
எஸ். சுப்பிர மணியன்	55			பட்டுநெசவு இரகமேற் பார்வை யாளர்
மு. தாண்ட வராயன்	78	,, ,,	,, ,,	நூல் நெசவு (ஓய்வு)
பெ. வே. ஆறுமுகம்	41	,, ,,	,, ,,	பொரப்பாவு ஆலை ஓட்டுநர்
கன்னியம்மாள்	57	,,	,,	ஆலை ஓட்டுநர்
கண்ணன்	69	,,	,,	தோய்ச்சடி
பி. சம்சுதீன்	51	,,	,,	அச்சுக்கட்டுதல்
அப்துல்காதர்	57	,,	,,	,,
ஆர். சீனுவாசன்	63	,,	,,	விழுதுகட்டுதல்
எஸ். சரவணன்	60	,,	,,	நூல்ஆடை உற்பத்தி யாளர்
மாபூப்கான்	60	,,	,,	அச்சு கட்டுதல்
வையாவூர்மில் ஆலை		,,	,,	
தமிழ்நாடுசரிகை லிமிடெட்		ஓரிக்கை	,,	
ஆர். லோக நாதன்	51	காஞ்சிபுரம்	,,	பெடல்தறி நெசவு

பெயர்	வயது	ஊர்	வட்டம்	தொழில்
வி. வள்ளியங்கிரி	37	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்	விசைத்தறி மெக்கானிகல்
சம்பத்	40	,,	,,	நாடாபழுது பார்த்தல்
ஸ்ரீநாராயணமூர்த்திசாய நூல் தொழிற்சாலை		முத்தியால் பேட்டை		
தனலட்சுமி பீளீச்சிங் தொழிற்சாலை		ஐயஃபேட்டை	காஞ்சிபுரம்	
ட்டி. பெருந்தேவி	65	,,	,,	பொரப்பாவு ஆலை
வி. திலகவதி	50	,,	,,	நீட்டுப்பாவு ஆலை
எம். பரமசிவம்	35	காஞ்சிபுரம்	,,	உமாடையிங் பாக்டரி
ஷேக்காதர்சாயபு	60	ஐயன்பேட்டை	,,	விழுதுகட்டுதல்
வஜ்ஜிரவேல்	55	காஞ்சிபுரம்	,,	பட்டுநெசவு
ப்பி. வி. மன்னார் செட்டி	67	,,	,,	அடைகட்டுதல்
சகுந்தலா	50	,,	,,	டோலா ஓட்டுதல்
விசாலாட்சி அம்மாள்	45	ஐயன்பேட்டை	,,	பொரப்பாவு
எம். நடராஜ முதலியார்	60	சீழ்க்கதிர்ப்பூர்	,,	பட்டுப்பூச்சி வளர்த்தல்
இராமச்சந்திரன்	38	பாதிர்வேடு	கும்முடிப் பூண்டி	விசைத்தறி மெக்கானி கல்
கிஷ்டப்ப ரெட்டி	55	மாதர்பாக்கம்	,,	நூல்நெசவு
நாராயணசாமி	60	புதுக்கும்முடிப் பூண்டி	,,	,,

பெயர்	வயது	ஊர்	வட்டம்	தொழில்
சீ. பொன்னம்மலம்	47	தேசுமுகிப் பேட்டை	செங்கற் பட்டு	பொரப்பாவு
கண்ணம்மாள்	50	,,	,,	ஆலைஓடுதல்
டி. மணி	42	,,	,,	தோய்ச்சகர்
ட்டி.ஆ. வெள்ளை வாரணன்	43	,,	,,	நூல் ஆடை உற்பத்தியாளர்
மஸ்த்தான்சாயூப்	42	,,	,,	விழுதுகட்டுதல்
பக்கிரிசாயப்	59	,,	,,	அச்சுக்கட்டு தல்
வி. லோகநாத முதலியார்	65	கூடுவாஞ்சேரி	,,	பொரப்பாவு உற்பத்தி யாளர்
கே. வேணுகோ பால் முதலியார்	68	,,	,,	பொரப்பாவு ஆலை
முத்துக்குமாரசாமி	50	பொலம்பாச்கம்	செய்யூர்	பொரப்பாவு
சண்முகமுதலியார்	62	,,	,,	,,
வி. சண்முக முதலியார்	51	கயப்பாக்கம்	,,	,,
வி.ஆர். வேதாசல முதலியார்	72	,,	,,	நீட்டுப்பாவு
அம்மணியம்மாள்	67	,,	,,	நீட்டுப்பாவு ஆலைஓட்டுநர்
கே. முனுசாமி	62	சைதாப் பேட்டை	சைதாப் பேட்டை	பொரப்பாவு
ஏ. கந்தசாமி	64	,,	,,	,,
கே. தட்சணா மூர்த்தி	62	அனகாபுத்தூர்	,,	பொரப்பாவு
எஸ். பெருமாள்	61	,,	,,	,,
ஷேக்ஆதம் சாயபு	57	,,	,,	விழுது,அச்சுக் கட்டுதல்.

பெயர்	வயது	ஊர்	வட்டம்	தொழில்
கோவிந்தசாமி	60	மத்தூர்	திருத்தணி	விசைத்தறி பன்னை கட்டுதல்
உருக்கம்மாள்	73	,,	,,	நூலிழைத்தல்
வி. சி. கே. சஞ்சீவீ முதலியார்	57	,,	,,	நூல்மளிகை வியாபாரம்
எம். ஜெயராமன்	56	,,	,,	விசைத்தறி உரிமை யாளர்
சந்திரன்	43	,,	,,	விசைத்தறி ஓட்டுநர்
ஆர்.எம்.வெங்கடாசலம்	52	,,	,,	சைசிங்ஆலை ஓட்டுநர்
கே.வி.கன்னியப்பன்	55	,,	,,	நூல்சாயம் போடுதல்
ந. நி. முனியப்ப முதலியார்	64	புச்சிரெட்டி பள்ளி	,,	தோய்ச்சல் பாவு
ப்பி. மாசிலாமணி	60	,,	,,	,,
கோவிந்தசாமி	65	,,	,,	,,
சி. போலன்	74	,,	,,	விசைத்தறி உரிமையாளர்
ப்பி. குப்பன்	72	,,	,,	,,
வி. தேசுகன்	45	மத்தூர்	,,	ஜனதாசேலை நெய்தல்
வள்ளியம்மாள்	66	,,	,,	நீட்டுபாவு ஆலை ஓட்டுநர்
ட்டி. எஸ்.ஆறுமுகம்	44	குன்றத்தூர்	திருப்பெரும் புதூர்	பொரபப் பாவு
சந்திரன்	46	,,	,,	தோய்ச்சடி
வி. இராமலிங்கம்	45	படப்பை	,,	பொரப்பாவு
சி. கே. தணிகாசல முதலியார்	70	படப்பை	,,	,,

பெயர்	வயது	ஊர்	வட்டம்	தொழில்
அரிதாஸ்	52	படப்பை	திருப்பெரும்புதூர்	பொரப்பாவு
கமலா	36	,,	,,	தாய்ச்சடியாள்
ஞானாம்பாள்	47	,,	,,	சிறியபொரப்பாவுஆலை
சுப்பராயலு	66	ஈக்காடு	திருவள்ளூர்	பொரப்பாவு
ஆர். ஜே.ஜேக்கப்	67	,,	,,	குடிசைத்தொழில்
எம். காளத்தி முதலியார்	70	நரசிங்கபுரம்	,,	பொரப்பாவு
சின்னம்மை	73	பொதட்டூர் பேட்டை	பள்ளிப்பட்டு	நூலிழைத்தல்
இ.என்.ஜெகந்நாதன்	42	,,	,,	தோய்ச்சல் பாவு
பி. ஜி. சண்முக முதலியார்	60	,,	,,	நூல்சாயத் தொழிற் சாலை
கே. என். தாமோதர ரெட்டி	55	கிளபூடி	,,	தோய்ச்சல் பாவு
கே. கே. கேசவன்	33	பொதட்டூர் பேட்டை	,,	சைசிங்ஆலை ஓட்டுநர்
வி. சண்முகம்	40	,,	,,	ஆலை ஓட்டுநர்
கிருஷ்ணா நூல் சைசிங்மில்		,,	,,	
சி. சிவய்யா	57	பள்ளிப்பட்டு	,,	கட்டிசரிகை சேலை
விமலா	33	,,	,,	,,

பெயர்	வயது	ஊர்	வட்டம்	தொழில்
வெங்கடேச செட்டி	35	பள்ளிப்பட்டு	பள்ளிப் பட்டு	பொரப்பாவு
சி. வரதய்ய செட்டி	55	வெங்கடராசலு குப்பம்	,,	லுங்கிவியா பாரம்
ப்பி. என். பால கிருஷ்ணன்	65	பொன்னேரி	பொன்னேரி	பொரப் பாவு
கே. சீனிவாசன்	52	கொசவன் பேட்டை	,,	நூல்நெசவு
நாகய்யா	70	,,	,,	,,
சந்திரம்மா	45	,,	,,	நூல் ஆலை
ப்பி.எஸ். கோ. பொன்னுசாமி செட்டி	63	ஆரணி	,,	அச்சுகட்டுதல்
ட்டி, வி. எஸ். டெக்ஸ்டைல்ஸ்		கொசவன்பேட்டை	,,	
சந்திரா	34	மேலவலம் பேட்டை	மதுராநதகம்	நூல்இழைத் தல்
சுப்பிரமணியன்	47	,,	,,	பொரப்பாவு
கோவிந்தராஜ முதலியார்	62	மலாலிப்பேட்டை	,,	,,
கணேசமுதலியார்	64	எலப்பாக்கம்	,,	நீட்டுப்பாவு
ஆதிமூலம்	66	எலப்பாக்கம்	,,	நீடடுப்பாவு ஆலை



3. தகவலாளிகளைச் சந்திக்க உடனிருந்து உதவியவர் பட்டியல்

பெயர்	தொழில்	தகவல் சேகரிக்க உதவியவட்டம்
ப்பி. எம். சுப்பிரமணி யம், பி.ஏ., பி. எட்.,	இடைநிலை ஆசிரியர்	திருத்தணி
ஏ. என். அப்துல் மாலிக் எம். ஏ., பி. எட்.,	முதுநிலைப்பட்டதாரி ஆசிரியர் (தமிழ்)	,,
ட்டி. பி. சஞ்சீவிராவ், பி.காம், , டி. டி. டி. ,	பட்டதாரி ஆசிரியர் (வணிகவியல்)	,,
வி. குப்புசாமி முதலியார், எம். காம்., எம். எட்.,	முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் (வணிகவியல்)	பள்ளிப் பட்டு
ஏ, கு. திருவேங்கடம், எம் ஏ., எம். எட்.,	பட்டதாரி ஆசிரியர்	,,
ஏழுமலை, எம். ஏ., பி.எட்.,	கைத்தொழிலாசிரியர் (நெசவு)	,,
கே. சண்முகம், பி.ஏ., பி. எட்.,	கைத்தொழில் ஆசிரியர்	செய்யூர், மதுராந்தகம்
ப்பி. எம். இராதாகிருஷ் ணன்	சத்துணவு அமைப்பாளர்	ஊத்துக் கோட்டை
க. குணசேகரன், பி.எஸ்ஸி., பி. எட்.,	பட்டதாரி ஆசிரியர்	திருவள்ளூர்
ஆ. கதிரவன், எம். ஏ., பி. எட்.,	முதனிலைத் தமிழாசிரியர்	பொன்னேரி, கும்முடிப் பூண்டி
ஹேமபூஷணம்	கைத்தொழிலாசிரியர் (நெசவு)	பொன்னேரி
புலவர். எஸ். தணிகா சலம்	முதனிலைத் தமிழாசிரியர்	உத்தர மேரூர்

எஸ். இராமலிங்கம்	இடைநிலை ஆசிரியர்	செங்கற்பட்டு
பி. இராமலிங்கம்	கைத்தொழில் ஆசிரியர் (விவசாயம்)	செங்கற்பட்டு
எம். சண்முகம்	விவசாயம்	காஞ்சிபுரம்
டி. கணேசன்	நெசவு	காஞ்சிபுரம்
பெ. குப்புசாமி, எம். ஏ., எம். எட்.,	முதுநிலைத்தமிழாசிரியர்	சைதாப்பேட்டை
டி. தணிகைவேல், பி.லிட்., பி. எட்.,	முதனிலைத் தமிழாசிரியர்	சைதாப்பேட்டை பொன்னேரி
டி. விநாயகம், எம். எஸ்ஸி, எம்.எட்.,	முதுநிலைப்பட்டதாரி ஆசிரியர் (இயற்பியல்)	திருப்பெரும்புதூர் சைதாப்பேட்டை

துணைநூற் பட்டியல்

மூலநூல்கள்

அகநானூறு

இரண்டாம் பதிப்பு, சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 1981-

இரட்சணிய யாத்திரிகம்

கிருஷ்ணபிள்ளை, எ. ஆ., சென்னை, கிறிஸ்துவர் இலக்கிய சங்கம், 1977.

ஏரெழுபது

காஞ்சிபுரம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகசுவாமிகள் ஆதின வெளியீடு, 1966

ஔவையார் பாடல்கள்

புலியூர்க்கேசிகன் உரை, இரண்டாம்பதிப்பு, சென்னை, மல்லிகைப் பதிப்பகம், ஜூன் 1965.

கம்பராமாயணம்

மறுபதிப்பு, சென்னை, கம்பன் கழகம், 1977.

கலித்தொகை

நச்சினார்க்கினியர் உரை, நான்காம்பதிப்பு சென்னை, கழக வெளியீடு, மே 1955.

கல்லாடம்

பொ. வே. சோமசுந்தரனார் (உரையாசிரியர். சென்னை-, கழக வெளியீடு, 1963.

குறுந்தொகை மூலமும் உரையும்

உ. வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை, ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, 1955,

சிலப்பதிகாரம்

உ. வே. சாமிநாதையர், (தொகுப்பாசிரியர்) பத்தாம் பதிப்பு (தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழகம்: நவம்பர் 1985.

தனிப்பாடல் திரட்டு

மறுபதிப்பு, சென்னை, கழக வெளியீடு, மே1969.

திருக்குறள்

பரிமேலழகர் உரை, திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு, 1968.

திருத்தொண்டர் புராணம்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு. 9. 6. 1982.

திருவாசகம்

எட்டாம் திருமுறை, ஸ்ரீ வைகுண்டம், ஸ்ரீ குமர குருபரன் சங்கம், 23. 11. 1969.

திருவிளையாடற் புராணம்

ப. கணேச முதலியார் மற்றும் அமிர்தம் சுந்தர நாதம் பிள்ளை அவர்கள் குறிப்புரை சென்னை-பூமகள் விலாச அச்சுக்கூடம், 1931.

தேவாரம்

முதல் திருமுறை, தருமபுர ஆதினம், 3. 6. 1953.

தொல்காப்பியம்

எழுத்ததிகாரம், இளம்பூரணம், கு. சுந்தரமூர்த்தி (பதிப்பாசிரியர்), அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1979.

தொல்காப்பியம்

சொல்லதிகாரம், சேனாவரையம், கு. சுந்தர மூர்த்தி [பதிப்பாசிரியர்], அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1981.

தொல்காப்பியம்

பொருளதிகாரம், மறுபதிப்பு, சென்னை, கழக வெளியீடு சனவரி, 1956.

தொல்காப்பியம்

இரண்டாம் பதிப்பு, சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் வெளியீடு, 1981.

நற்றிணை

அ. நாராயணசாமி ஐயர் உரை, மறுபதிப்பு. சென்னை, கழக வெளியீடு, ஆக்ஸ்டு, 1956.

நன்னூல்

விருத்தியுரை, சென்னை, கழக வெளியீடு, மார்ச் 1956.

பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும்

உ. வே. சாமிநாதையர் பதிப்பு, ஐந்தாம்பதிப்பு. சென்னை, கபீர் அச்சுக் கூடம், 1956.

புறநானூறு

உ. வே. சாமிநாதையர் பதிப்பு, ஐந்தாம் பதிப்பு சென்னை, கபீர் அச்சுக் கூடம், 1956.

மணிமேகலை மூலமும் அரும்பத உரையும்

உ. வே. சாமிநாதையர் பதிப்பு, ஐந்தாம் பதிப்பு சென்னை, கபீர் அச்சுக்கூடம், 1956.

முக்கூடற்பள்ளு

மறுபதிப்பு, சென்னை, கழக வெளியீடு, ஜுன் 1973.

துணை நூல்கள்

அகத்தியலிங்கம். ச.

தமிழகப் பழங்குடி மக்கள், அண்ணாமலை நகர். மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம். 1972.

,, மொழியியல் - சொல்லியல் - பெயரியல், அண்ணா மலை நகர், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், 1979.

,, மொழியியல் - சொல்லியல் - வினையியல், அண்ணாமலை நகர், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், 1982.

சங்கத் தமிழ் - 1 அண்ணாமலை நகர், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், 1983.

சங்கத் தமிம் - 11 அண்ணாமலை நகர், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், 1983.

அகத்தியலிங்கம். ச.,
பாலசுப்பிரமணியன். க.

(பதிப்பாசிரியர்கள்) இலக்கண ஆய்வுக் கட்டுரைகள் - 1, அண்ணாமலை நகர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1974.

அகத்தியலிங்கம். ச. ,
புஷ்பவல்லி. க. ,

மொழியியல் வாழ்வும் வரலாறும், அண்ணாமலை நகர், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், 1977.

அப்பாத்துரை. கா.,

தென்மொழி, சென்னை - 1, மலர் நிலையம், பிப்ரவரி, 1956.

அரங்கசாமி. இரா.,

தமிழ் மொழி வரலாறும் ஒப்பிலக்கணமும், வெளியிட்டவர் திருமதி கமலம் அரங்கசாமி, 1973.

அரங்கன். கி.,

மாற்றிலக்கண மொழியியல், சென்னை, தமிழ் நூலகம், 1975

அரவிந்தன். மு. வை.,

மொழியியல் சிந்தனைகள், சென்னை, மணிவாசகர் நூலகம், அக்டோபர் 1977.

அஜ்மல்கான். பி. மு.,

பிரமலைக் கள்ளர் சமுதாய மொழியியல், கம்பம், பாவலர் பதிப்பகம், சூலை 1977

ஆண்டியப்பன். தே.,

காப்பியர் நெறி - எழுத்தியல், மதுரை, வெற்றிவேல் பிரசுரம், சனவரி 1976

ஆரோக்கியநாதன். எஸ்.

மொழியியல் - கிளைமொழிகள், விழுப்புரம், முத்துப் பதிப்பகம், டிசம்பர் 1987.

ஆளவந்தார். ஆர்.,

இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், ஏப்ரல் 1984

இராசமாணிக்கனார். மா.

பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, 1970.

இராசாராம். சு.,

மொழியும் மொழியியலும், நா. சு. இராசவேல் வெளியீடு, நவம்பர் 1973

ஒலியியல், அண்ணாமலை நகர், அனைத்திந்தியத் தமிழ்மொழியியற் கழகம், 1980.

இராதா செல்லப்பன்.

கலைச்சொல்லாக்கம், டிசம்பர் 1985.

இராமச்சந்திரன் கோ.

பிறமொழிகளில் தமிழ்ச்சொல் ஆட்சி, சென்னை,-30 வளவன் வெளியீடு, ஆகஸ்டு 1966.

இலக்குவனார். சி.,

பழந்தமிழ், மூன்றாம் பதிப்பு, புதுக்கோட்டை, வள்ளுவர் பதிப்பகம், ஆகஸ்டு 1970.

இளங்குமரன். இரா.,

(தொகுப்பாசிரியர்), உரையாசிரியர்கள் கண்ட நுண்பொருள் விளக்கம், சென்னை - 1. திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், நவம்பர் 1971.

தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வுகள், மதுரை, பாவாணர் ஆராய்ச்சி நூலகம், 7. 2., 85.

இளவரசு. சோம.,

இலக்கண வரலாறு, சிதம்பரம், தொல்காப்பியர் நூலகம், 1963.

இன்னாசி. சூ.,

சொல்லியல், பாளையங்கோட்டை, தமிழரசன் பதிப்பகம், சனவரி 1974.

கந்தசாமி. இல. செ.,

இலக்கியத்தில் வேளாண்மை, கோயமுத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், 1978.

கருணாகரன். கி.,

மொழிவளர்ச்சி, சிதம்பரம், மணிவாசகர் நூலகம், டிசம்பர் 1981.

கலைச்செல்வன். மு.,

தமிழில் வழக்குகள், கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை வெளியீடு, 1975.

கால்டுவெல்.

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், கா. கோவிந்தன் மற்றும் க. ரத்னம் (தமிழாக்கம்), இரண்டாம் பதிப்பு, சென்னை, குறள் நிலையம், 1977.

கோதண்டராமன். பொன்.

இலக்கண உலகில் புதிய பார்வை, இரண்டாம் பதிப்பு, சென்னை, தமிழ் நூலகம், 1978.

இலக்கண உலகில் புதிய பார்வை, தொகுதி - 2 சென்னை, தமிழ் நூலகம் 1981.

இலக்கணக் கலைக் களஞ்சியம், சென்னை, தமிழ் நூலகம் 1985

சக்திவேல். சு.,

தமிழ் மொழி வரலாறு, சிதம்பரம், மணிவாசகர் நூலகம், ஏப்ரல் 1984

சஞ்சீவி. ந.,

ஆராய்ச்சிக் கட்டுரைகள், முதல் தொகுதி சென்னை - 1, பாரி நிலையம், 1970.

சண்முகம், செ. வை.

எழுத்துச் சீர் திருத்தம், அண்ணாமலை நகர், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழயிழ், 1978

எழுத்திலக்கணக் கோட்பாடு, அண்ணாமலை நகர், அனைத்திந்தியத தமிழ் மொழியியற் கழகம், 1980.

சபாபதி. தி.,

வேளாண்மை வளர்ச்சி, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், டிசம்பர் 1972.

சம்பந்தன். மா. சு.,

சென்னை மாநகர், இரண்டாம்பதிப்பு, சென்னை-தமிழர் பதிப்பகம், ஆகஸ்டு 1978.

சரஸ்வதிவேணுகோபால்

இராமசுவாமி. மு..

களஆய்வில் சில அனுபவங்கள், மார்ச் 1976, (ஏனைய செய்திகள் நூலில் இல்லை.)

சிவஞானம். ம. பொ.

தமிழகத்தில் பிற மொழியினர், சென்னை, பூங்கொடி பதிப்பகம், 1976.

சிவராஜப் பிள்ளை. கே. என்.

சிலதமிழ்ச்சொல் ஆராய்ச்சி, சென்னை - 33 பேராசிரியர் சிவராஜப்பிள்ளை நினைவு மன்ற வெளியீடு, 1968.

சிவலிங்கனார், ஆ.

(பதிப்பாசிரியர்), தொல்காப்பியம், எழுத்ததிகாரம், உரைவளம், நூன்மரபு, சென்னை - 113 - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டிசம்பர் 1980.

சீனிவாச வர்மா. கோ.

இருமொழியம், அண்ணாமலை நகர், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், 1980

கிளை மொழியியல், அண்ணாமலை நகர், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், 1985.

சீனிவாசன். ரா.

மொழியியல், சென்னை - 30, அணியகம், எட்டாம பதிப்பு 1980.

சுந்தர சண்முகனார்.

தமிழ் அகராதிக் கலை, கழக வெளியீடு, இரண்டாம்பதிப்பு. செப்டம்பர் 1971.

சுப்பிரமணிய பாரதி. சி.,

பாரதியார் கவிதைகள், இரண்டாம் பதிப்பு, சென்னை, வானதி பதிப்பகம், செப்டம்பர் 1975.

சுப்பிரமணியன், ச. வே.,

மொழிக் கட்டுரைகள், சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், நவம்பர் 1984.

(பதிப்பாசிரியர்), தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு, சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், செப்டம்பர் 1979.

தமிழ் இலக்கிய வகையும் வடிவும், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1984.

சுப்பிரமணியன். ச. வே.
மணவாளான். அ. அ.,

[பதிப்பாசிரியர்சள்], தமிழ் இலக்கியக் கொள்கை — 3 சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மார்ச் 1978.

சுப்பிரமணியன். ச. வே.
விஜயலட்சுமி. ர.

(பதிப்பாசிரியர்கள்), தமிழ் இலக்கியக்கொள்கை-7 சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், ஜுன் 1982.

பதிப்பாசிரியர்கள், எண்பதில் தமிழ், சென்னை113 உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1982,

சுப்பிரமணியன். வி. ஐ.,

பதிப்பாக்கம், திராவிட இலக்கணக் கொள்கை, வ. ஜெயதேவன் பா. வீரப்பன் [தமிழாக்கம்], சென்னை, அன்பு நூலகம் 1978.

செல்வம், வி. டி.

தமிழகம் வரலாறும் பண்பாடும், மதுரை, மதுரை பப்ளிஷிங் அவுஸ், 1976

சேதுப்பிள்ளை. ரா. பி.

தமிழ் விருந்து, எட்டாம் பதிப்பு, சென்னை—5, பழனியப்பா பிரதர்ஸ், 1976.

தமிழகம் அலையும் கலையும், மூன்றாம் பதிப்பு, சென்னை, பழனியப்பா பிரதர்ஸ், நவம்பர் 1961.

தமிழ் இன்பம், பன்னிரண்டாம் பதிப்பு, சென்னை பழனியப்பா பிரதர்ஸ், 1972

தமிழகம் ஊரும் பேரும், ஐந்தாம் பதிம்பு, சென்னை பழனியப்பா பிரதர்ஸ், 1976.

சோமலெ.

செங்கற்பட்டு மாவட்டம், சென்னை, பாரி நிலையம், மே 1963

செங்கற்பட்டு - பத்தாண்டு சாதனைகள்

தமிழ் நாடு அரசாங்க செய்தித்துறை வெளியீடு, டிசம்பர் 1961.

செங்கற்பட்டு மாவட்டம் - தொழில் வளர்ச்சி,

(ஏனைய செய்திகள் நூலில் இல்லை)

தமிழ்க்குடிமகன்.

பாவாணரும் தனித்தமிழும், சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சனவரி, 1985.

தமிழண்ணல்,

மொழிவழிச் சிந்தனைகள், இரண்டாம்பதிப்பு மதுரை, சோலை நூலகம், அக்டோபர் 1980

தமிழ்த்துறை ஆசிரியர்கள்

இலக்கணச் சிந்தனைகள். அண்ணாமலை நகர். அண்ணாமலைப் பல்கலைக் கழகம். நவம்பர் 1973.

திருமலை. சு மா.

(பதிப்பாசிரியர்) மொழிச் சிறுபான்மையினரின் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்கும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கான கையேடு, தமிழ் நாடு-சென்னை, த. க. ஆ. ப, நிறுவனம்,

திருமலை. மா. சு.

கருணாகரன். கி.,

மொழியியல்,(ஏனைய செய்திகள் நூலில் இல்லை)

தேவநேயன். ஞா.

திராவிடத்தாய், மறுபதிப்பு. சென்னை, கழக வெளியீடு, மே 1964

உயர்தரக் கட்டுரை இலக்கணம், மறுபதிப்பு, சென்னை, கழக வெளியீடு, ஜூன் 1964,

சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள், மறுபதிப்பு, சென்னை, கழக வெளியீடு, 1971.

நாகசாமி. இரா.,

(பதிப்பாசிரியர்), செங்கை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு, சென்னை— 2, வரலாற்றுப்பேரவை, டிசம்பர் 1978,

நாகராசன். கரு.,

செங்கை மாவட்ட ஊர்ப் பெயர்கள், சென்னை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், மார்ச் 1985-

நீலகண்ட சாஸ்திரி. கே. ஏ.

தென்னிந்திய வரலாறு பகுதி, 1. மு, ரா. பெருமாள்(தமிழாக்கம்) தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவன வெளியீடு.

பகவதி. கே.

தமிழர் ஆடைகள், சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டிசம்பர், 1980.

பாலகிருஷ்ணன். இரா.

நீலகிரி மொழிகள், அண்ணாமலை நகர், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம் 1984.

பாலசுப்பிரமணியன். சி.

தமிழ் இலக்கிய வரலாறு, எட்டாம் பதிப்பு, சென்னை, பாரி நிலையம், சூலை 1969.

காரும் தேரும், ஆறாம் பதிப்பு, சென்னை, நறுமலர்ப் பதிப்பகம், நவம்பர் 1984.

புலவர் குழந்தை.

யாப்பதிகாரம், சென்னை, பாரிநிலையம் 1957.

பூவண்ணன்.

மொழித்திறன், சென்னை, வர்த்தமானன் பதிப்பகம், 1986.

பெருமாள், தே. ப.

தமிழ் நாடு மாவட்டக் குறிப்புகள், (ஏனைய செய்திகள் நூலில் இல்லை)

மதிவாணன், இரா.,

சொல்லாய்வுக் கட்டுரைகள், சென்னை, சேகர் பதிப்பகம், ஏப்ரல் 1982,

மாகறல் கார்த்திகேய முதலியார்.

மொழிநூல், சென்னை, ஆர், விவேகானந்தா அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்டது, 1913.

மாயாண்டி. இரா.

சங்க இலக்கியத்தில் கற்பனை, சென்னை எழிலகம்— 4, இந்திராணிதெரு 1980.

மீனாட்சி சுந்தரனார். தெ. பொ.

தமிழ் மொழி வரலாறு, ச. செயப்பிரகாசம் [தமிழாக்கம்], மதுரை, சர்வோதய இலக்கியப் பண்ணை 1973.

முத்து கண்ணப்பர். தி.,

சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம், சென்னை, அதிபத்தர் பதிப்பகம், ஆகஸ்டு 1978.

முத்துச் சண்முகன்.

இக்கால மொழியியல், [முதற்பகுதி] மதுரை, மதுரைப் பல்கலைக் கழகம், 1971

இக்காலத் தமிழ், இரண்டாம் பதிப்பு, மதுரை, முத்தம்மாள் வெளியீடு, ஏப்ரல், 1973.

முருகரத்தினம். தி.,

தமிழ் எழுத்தியல் இன்றும் அன்றும், மதுரை நாவலர் புத்தக நிலையம், 1973.

மொழியாய்வுக் கட்டுரைகள், பல்கலை நகர், மதுரை, தமிழ்ச்சோலை வெளியீடு, 1978.

ரங்க நாயகி மஹாபாத்ரா.

இன்றைய தமிழ் இலக்கிய வழக்கும் பேச்சு வழக்கும், சென்னை, பாரிநிலையம், டிசம்பர் 1985.

வரதராசன். மு. வ.

மொழி வரலாறு, மறுபதிப்பு, சென்னை, கழக வெளியீடு, 1961.

மொழிநூல், மறுபதிப்பு, சென்னை, கழக வெளியீடு, செப்டம்பர் 1970.

மொழியியல் கட்டுரைகள், முதல் பகுதி, இரண்டாம் பதிப்பு, பாரி நிலையம், 1973.

விஜயலட்சுமி. ர.

தமிழகத்தில் ஆசிவகர்கள், சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், ஜூன் 1988.

ஜீவானந்தம்

மொழியைப் பற்றி, சென்னை, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 1973.

இதழ்களும் கட்டுரைகளும்

தமிழ்

ஆறாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், பாண்டிச்சேரி தாகூர் அரசினர் கலைக் கல்லூரி தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு, 1974.

இளவேனில்

திருவனந்தபுரம், இளங்கோ மன்ற வெளியீடு 1972.

ஒன்பதாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி -2

இந்தியப் பல்கலைத் கழகத் தமிழாசிரியர் மன்றம், மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியீடு, 1977

தினமணி நாளிதழ் நாள்: 8.11.88

நான்காவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை சார்ந்த வெளியீடு, 1972

பதினாறாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, தொகுதி-1

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம் அண்ணாமலை நகர் 1984.

பதின்மூன்றாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, தொகுதி-2

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு, 1981.

பத்தாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, தொகுதி-2

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு, கோயமுத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், 1978.

மொழியியல்

தொகுதி-7, ஜுலை & டிசம்பர் 1 & 2, அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகத்தின் காலாண்டு இதழ் 1983.

மொழியியல்,

தொகுதி-9, ஜுலை & டிசம்பர், 1 & 2, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின் காலாண்டு இதழ் 1985.

வளரும் வேளாண்மை,

மாத இதழ், ஏப்ரல் 1984

வையை

(1973 - 1974), தமிழ்த்துறை, பல்கலைநகர், மதுரை காமராசர் பல்கலைக் சழகம்.

வையை

வியாழ வட்டக் கருத்தரங்கு மலர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழக வெளியீடு, சூலை 1974.

வையை

மலர் ஐந்து, மதுரை, பல்கலைநகர், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், 1980.

ஆங்கிலம்

Journal of Tamil studies, Madras. International Institute of Tamil studies, June 1985

South Indian Inscriptions Volume-II Hultzsch.E. (Editor) Navrang, New Delhi 1984.

அகராதிகள்

தமிழ்

கலைக்களஞ்சியம்

தொகுதி I, IV
சென்னை, தமிழ் வளர்ச்சிக் கழகம், 1958.

கலைச்சொல் அகராதி.

சக்திவேல். சு., சிதம்பரம், மணிவாசகர் நூலகம், 1980.

தமிழ்ப் பேரகராதி

தொகுதி 1 முதல் 6 மற்றும் இணைப்பு, சென்னைப் பல்கலைக் கழகம், 1982.

மதுரைத் தமிழ்ப் பேரகராதி பாகம் 1, 2

சென்னை, இ.மா. கோபாலக்கிருஷ்ணக்கோன் வெளியிட்டது. 1956.

ஆங்கிலம்

A Dravidian Etymological Dictionary, Burrow. T. and Emeneau, oxford, Clarendon press 1961.

அச்சில் வாரா ஆய்வேடுகள்

இரத்தினம். சி.

தமிழிலக்கியத்தில் காஞ்சிமாநகர்-ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக் கழக எம் ஃபில் பட்டத்திற்காக அளிக்கப் பெற்ற ஆய்வேடு, அக்டோபர் 1983.

கருப்பாயி.ஆ.

நிலக்கோட்டை வட்டார தொழிற்களப் பாடல்கள், மதுரைக் காமராசர் பல்கலைக் கழக எம் ஃபில் பட்டத்திற்காக அளிக்கப் பெற்ற ஆய்வேடு, 1985.

சீதாராமன்.பா.

உழவியல் கலைச் சொற்கள்-ஒரு கள ஆய்வு, எம்ஃபில் பட்டத்திற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப் பெற்ற ஆய்வேடு, 1983.

மகாலட்சுமி.டி.

கோவை மாவட்டச் சொற்களஞ்சியம், பிஎச். டி., பட்டத்திற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப் பெற்ற ஆய்வேடு, ஏப்ரல் 1988.

பெருமாள் சா.

வடஆர்க்காடு-மாவட்ட மக்கள் இயக்கங்களும் தமிழ் வெளியீடுகளும் (1850-1950) பிஎச். டி., பட்டத்திற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப் பெற்ற ஆய்வே டு 1986.

விநாயகம் சி.

பாரதி, பாரதிதாசன் பாடல்களில் நாட்டுப்புற இலக்கியத் தாக்கம். சென்னைப் பல்கலைக் கழகத்திற்குப் பிஎச். டி, பட்டத்திற்காக அளிக்கப்பெற்ற ஆய்வேடு, செப்டம்பர் 1986.,

Englisn

Archibald. A Hill, Linguistics Today, London Basic Books, Inc, publishers, 1969.

Charles F. Hockelt, A course in Modern Linguistics, New york, The Macmillan Company, 1958.

Deivasundaram.N., Tamil Diglossia, Tirunelveli, Nainar pathippagam, 1981

Ilakkuvanar.S., Tamil Language, Kazhagam, 1961

John T. platl and Heidi K. platl, The Social Significance of speech, Oxford North, Holland publishing company, 1975

Julia S. Falk, Linguistics and Language, New york John wiley& Sons, Second Edition 1978

Kothandaraman.pon., Modern Studies in Tamil, Madras-18 Tamil Nulagam, 1976.

Linguistic Studies in Tamil, Madras-18 Tamil Nulagam, 1980.

Krishnamurti, Bh., A Telugu Dialect Dictionary of occupational Vocabularies, Volume -I Agriculture, Hyderabad, The Andhra Pradesh Sahitya Akademi, Second Edition 1974.

Mahalingam, T. V., Administration and Social Life under Vijaya-nagar, Second Edition, (Madras, University of Madras, 1969),

Manickam. V. T.,

Marutam - An aspect of Love in Tamil Literature, Karaikudi, 1982

Meenakshi Sundaram, T p.,

A History of Tamil Language, poona, Deccan College Linguistic Society of India, 1965.

papers on Linguistic and Literature, Annamalai Nagar, January 1965.

Neelakanda Sastri, K. A.,

Foreign notices of South India from Megasthenese to Ma Huan. University of Madras, 1939.

Neil Smith and Deirdre Wilson,

Modern Linguistics, The Results of Chomsky' s Revolution, penguin Books Company, First and Reprint 1979.

Phillip W. Davis,

Modern theories of Language, New Jersey, prentic Hall Inc. Englewood cliffs, 1973.

Rajaram. S.

Tamil phonetic Reader, Mysore-6 Central Institute of Indian Languages, Reprint, April 1980.

Sethupillai. R. P.

Words and their Significance., University of Madras - 1955.

Sherring M. A.,

The Tribes and Castes of the Madras presidency, Cosmo publications, London, 1909

Subramanian. S. V.,

Studies in Tamilologv, Madras-96. Tamil patippakam, September 1982.

Vijayalakshmy, R.

A Study of the Civakacintamani, Ahmedabad. L. D. Institute of Indology, May 1981.

ஆசிரியரின் படைப்புகள்

1. இலக்கிய இன்பம்
2. இலக்கியக் கட்டுரைகள்
3. சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் செல்வர் குறிப்பு (தொகுப்பு)
4. அறிவொளி விளக்கு என்னும் விவேகசிந்தாமணி (உரை)
5. பாரதிதாசனாரும் பைந்தமிழும்
6. உழவு, நெசவு கலைச்சொற்கள்

o

உழவுக்கும் நெசவுக்கும்
வந்தனை செய்வோம்!
